மூன்று பெண்கள் சேர்ந்து, ஒருவர்பின் ஒருவராக ஆடுவது வழக்கம். இப்படி அம்மானை ஆடும்போது பாட்டுப் பாடிக்கொண்டே இருப்பார்கள். அந்தப் பாட்டுக்கும் அம்மானை என்றே பெயர் வழங்கும்.

**அம்மானைக்காய்:** பெரும்பான்மையாக அம்மானைக் காய்கள் மரக் கட்டையால் ஆனவை; உருண்டையாய் இருக்கும்; வெவ்வேறு நிறம் தீட்டப்பெற்றவை. கனமில்லாத மரக்கட்டைகளால் அம்மானைக் காய்கள் செய்யப்படும். இலக்கியங்களில் வேறு வகையான அம்மானைக் காய்களைப் பற்றிய செய்திகள் வருகின்றன. முத்து, மாணிக்கம், மரகதம், நீலம், பவளம் ஆகிய மணிகளைப் பதித்த அம்மானைகளையும், பொன்னாலும் பளிங்கினாலும் செய்த அம்மானைகளையும் ஆடுவதாகப் பிள்ளைத்தமிழ்கள் கூறுகின்றன. அம்மானையை அம்மனையென்றும் சொல்வதுண்டு. உலாக்களிலும் அம்மானை விளையாட்டைப் பற்றிய செய்திகள் உள்ளன.

**அம்மானை வரி:** அம்மானை ஆடும்பொழுது மகளிர் பாடும் பாடல் அம்மானை வரி என்றும் வழங்கப்பெறும். தொழில் செய்வாரும், விளையாடுவாரும் பாடும் நாடோடிப் பாடல்களை வரிப் பாடல் என்று சொல்வார்கள். அந்த வகையில் அம்மானைப் பாட்டுக்கு அம்மானை வரி என்ற பெயர் வந்தது. பாடிக்கொண்டே விளையாடுவதையும் கூத்தின் வகையாகச் சேர்த்திருக்கிறார்கள். அவற்றைப் பல்வரிக்கூத்து என்று வகைப்படுத்தினர் புலவர். மகளிர் விளையாடும் விளையாடல்கள் பல இந்தப் பல்வரிக்கூத்தில் சேர்ந்தவை. அம்மானையும் பல்வரிக் கூத்து வகையில் ஒன்று. (சிலப். அரங்கேற்று காதை, 13, அடியார்க்கு நல்லார் உரை). நாடோடியாக வழங்கும் அம்மானைப் பாட்டே இயற்கையான அம்மானை வரி. அதன் அமைப்பைப் பின்பற்றிப் புலவர்கள் இலக்கியங்களிலும் அம்மானைப் பாடலை அமைத்தார்கள். அத்தகைய அம்மானைவரிகளில் இப்போது கிடைப்பவற்றுள் பழமையானது சிலப்பதிகாரத்தில் உள்ள அம்மானைவரி. அந்த நூலில் வாழ்த்துக் காதையில் பெண்கள் அம்மானை ஆடிச் சோழன் புகழைப் பாடுவதாக அம்மானை வரிப் பாடல்கள் நான்கு உள்ளன. மூன்று பெண்கள் சேர்ந்து அம்மானை ஆடும்போது, ஒரு பெண் ஒரு கேள்வி கேட்பதும், மற்றொருத்தி அதற்கு விடையிறுப்பதும், மூன்றாமவள் சோழன் புகார்நகரைப் பாடும்படி சொல்வதுமாக அந்தப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

தமிழ்ப் பிரபந்த வகையுள் ஒன்றாகிய கலம்பகத்தில் அம்மானை என்ற உறுப்பு ஒன்று உண்டு. அது மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்திருக்கும். முதற்பெண் ஒரு செய்தியைச் சொல்ல, இரண்டாமவள் ஒரு வினாவை எழுப்புவாள். மூன்றாமவள் அதற்குச் சமத்காரமாக விடை கூறுவாள். அவள் விடையிலே பெரும்பாலும் சிலேடை நயம் அமைந்திருக்கும்.

இந்த வகையில் சில புலவர்கள் தனித்தனியே பல அம்மானைப் பாடல்கள் பாடினார்கள். இரட்டையர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் முதலிய புலவர்கள் ஈற்றடியில் சிலேடை நயம் அமைய அம்மானைப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். அத்தகைய பாடல்களை யெல்லாம் தொகுத்தமைத்து, மூவர் அம்மானை என்ற பெயருடன் ஒரு திரட்டு நூல் வழங்குகிறது. மூன்று பெண்கள் பாடுவதாக இருப்பதனால், அதற்கு மூவர் அம்மானை என்ற பெயர் வந்தது. அதில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் தெய்வங்களைப்பற்றியனவே.

சிலப்பதிகாரத்தில் வரும் அம்மானை வரியும், கலம்பகங்களிலும் மூவரம்மானையிலும் வரும் பாடல்களும் கலித்தாழிசை என்னும் பாவினத்தால் அமைந்தவை; தரவு கொச்சகமாகவும் கொள்ளலாம். அம்மானை என்று முடியும் மூன்று வாக்கியங்கள் ஒவ்வொரு பாடலிலும் உள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தையும் ஒவ்வொரு பெண் சொல்வாள்.

அம்மனை என்பது தாய் என்ற பொருளை உடையது. பெண்களைப் பொதுவாக அம்மா என்று அழைப்பது போல, அம்மனை என்றும் அழைப்பது இலக்கிய மரபு. பாட்டில் வாக்கியத்தின் முடிவில் பெண்ணை விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைந்தது. இதுவே அம்மானாய் என்றும் வரும். இந்த முடிவையுடைய வாக்கியங்கள் பாட்டில் வருவதினால் இந்தப் பாட்டும் விளையாட்டும் அம்மானை என்ற பெயரைப் பெற்றன போலும்.


மூவர் ஆடாமல் ஒரு பெண்ணே ஆடுவதாகவும் அமைந்த பாடல்கள் உண்டு. திருவாசகத்தில் உள்ள திருவம்மானை என்ற பகுதியிலுள்ள இருபது செய்யுட்களும் இத்தகையனவே. அம்மானாய் என்ற முடிவையுடையது ஒவ்வொரு பாடலும். ஒவ்வொரு பாட்டும் ஆறு அடிகளையுடைய தரவு கொச்சகக் கலிப்பாவாகும்.

**அம்மானைப் பருவம்** பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்த வகையில் பெண்பாற் பிள்ளைத் தமிழ்களில் வரும் பருவங்களில் ஒன்று. இதனை எட்டாம் பருவமாக அமைப்பர். பாட்டுடைத் தலைவியைத் தாய்மாரும் செவிலியரும் அம்மானையாடும்படி சொல்லும் முறையில் இப்பருவப் பாடல்கள் அமைந்திருக்கும். பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களாக அவற்றைப் பாடுவர் புலவர்.

**அம்மானைப் பாட்டு:** இவற்றையன்றி நாடோடிப் பாடல்களில் கதையைத் தழுவி வரும் நெடும்பாடல்கள் பல அம்மானை என்ற பெயரோடு வழங்கி வருகின்றன. புகழேந்திப் புலவர் சோழனாற் சிறைப்பட்டிருந்தபோது அல்லியரசாணி மாலை முதலிய அம்மானைப் பாட்டுக்களைப் பாடி, அந்த வழியே செல்லும் மகளிருக்குக் கற்பித்துப் பாடச் செய்தார் என்று ஒரு கர்ண பரம்பரைச் செய்தி வழங்குகிறது. அது வெறும் புனைந்துரையானாலும், பெண்கள் பாடுவதற்குரியவை இந்த அம்மானைப் பாடல்கள் என்ற உண்மையைத் தெரிவிப்பதாகக் கொள்ளலாம். அடியளவின்றி வரும் இந்தப் பாடல்களின் அடிகள் முன்னே சொன்ன தரவு கொச்சகத்தின் அடிகளைப் போன்றவை. தரவு கொச்சகத்துக்கு அடிவரையறை உண்டு. இந்தப் பாடல்களுக்கு அடிவரையறை இல்லை. அடிகள் அம்மானைப் பாட்டில் வரும் தரவு கொச்சக அடியைப்போல நாற்சீராக இருப்பதனால், இத்தகைய பாடல்களை அம்மானைப்பாட்டென்று வகுத்தார்கள் எனத் தோன்றுகிறது. அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை என்பன போன்ற எல்லாக் கதைப் பாட்டுக்களும் அம்மானைப் பாட்டைச் சார்ந்தனவே. அவற்றிற் சில பாட்டுக்களுக்கு அம்மானை என்ற பெயரே அமைந்துள்ளது. கள்ளழகர் அம்மானை, வைகுந்த அம்மானை என்பன இதற்கு உதாரணங்கள். இத்தகைய பாடல்களில் நாடோடிப் பாடல்களின் இயல்புகள் யாவும் இருக்கும். கொச்சை மொழிகள், உலக வழக்குச் சொற்கள், யாவருக்கும் விளங்கும் உபமானங்கள், ஒரு செய்தியையே மீட்டும் மீட்டும் சொல்லுதல், சில வகையான வாக்கியங்கள் எல்லாப் பாடல்களிலும் வருதல் முதலியவற்றை இந்த அம்மானைப் பாடல்களில் காணலாம். கி. வா. ஜ.

**அம்மீட்டர் (Ammeter):** மின்னோட்டத்தையும் மின்மட்டத்தையும் அளவிட இக்கருவி பயன்படுகின்றது. இதுவும் வோல்ட் மீட்டரும் தத்துவத்திலும் அமைப்பிலும் மின்னோட்ட மானியை (த. க.) ஒத்தவை.


ஆனால் மின்னோட்டத்தை அளவிடச் சுற்றோடு தொடராக மானியை இணைக்கவேண்டும். இதனால் அளவிடப்படும் மின்னோட்டம் பாதிக்கப்படாமல் இருக்க, மானியின் மின் தடை குறைவாக இருக்க வேண்டும். ஆகையால் அம்மீட்டரின் மின்தடை குறைவாக இருக்குமாறு அமைக்கப்படுகிறது. மின்மட்டத்தை அளவிட, எந்த இரு இடங்களுக்கிடையே யுள்ள மின்மட்டத்தை அளவிட வேண்டுமோ, அவ்விரண்டிற்கும் இணையாக மானி இணைக்கப்படும். இதனால் சுற்றின் நிலை பாதிக்கப்படாதிருக்க, மானியில் மிகக் குறைந்த மின்னோட்டமே பாயவேண்டும். ஆகையால் அதன் மின்தடை அதிகமா யிருக்குமாறு அமைக்கப்படும். இக்காரணத்தால் வோல்ட் மீட்டரின் தடை அதிகமாக இருக்குமாறு அமைக்கப்படும்.



அம்மீட்டர்

உதவி : சென்கோ, சிகாகோ


**இயங்கு சுருள் கருவிகள்** (Moving coil instruments): இக்காலத்தில் இவ்வகைக் கருவிகளே அதிகமாக வழங்குகின்றன. சாதாரண மின்னோட்ட மானியின் அமைப்பையே இதுவும் உடையது. இதிலுள்ள சுருள் உறுதியான வச்சிர முனைகளில் பொருத்தப்பட்டு இயங்குகிறது. சுருளுடன் பொருத்தப்பட்ட முள்ளொன்று ஓர் அளவையின் மேல் நகர்ந்து, அதன் விலக்கத்தைக் காட்டும். இதன் அளவை ஆம்பியர்களிலோ வோல்ட்டுகளிலோ குறிக்கப்பட்டிருப்பதால், இதைக் கொண்டு நேரடியான அளவுகளைச் செய்ய முடிகிறது. சுருளின் விலக்கத்தைக் கட்டுப்படுத்த, மெல்லிய வில்லொன்று இருக்கும். மிக உறுதியாகவும் நுணுக்கமுள்ளதாகவும் இக்கருவியை அமைக்கலாம். ஆகையால் இது பல துறைகளில் பயன்படுகிறது. ஆனால் இவ்வகை மானியில் ஒரு குறையுண்டு. இது மாறு மின்னோட்ட அளவுகளிற் பயன்படாது.


இயங்கு சுருள் அம்மீட்டர்

**தேனிரும்புக் கருவிகள்**: மின்சாரம் பாயும் கம்பிச் சுருளின் அருகே ஒரு தேனிரும்புத் துண்டு வைக்கப்பட்டால், அதில் காந்தத்துவம் தூண்டப்பட்டு, அது சுருளால் விலக்கப்படுகிறது. இவ்வியக்கத்தைப் பெரிதாக்கி, அதிலிருந்து மின்னளவுகளைச் செய்யலாம். இதுவே தேனிரும்பு மானிகளின் தத்துவம்.

பொதுவாக வழங்கும் மானியில் இரு தேனிரும்புக் கருவிகள் இணையாக அருகருகே அமைந்திருக்கும். அவற்றுள் ஒன்று நிலையாகப் பொருத்தப்பட்டிருக்கும். இன்னொன்று இயங்கி, அத்துடனுள்ள ஒரு முள்ளையும் இயக்கவல்லது. இவ்விரு கம்பிகளும் சுருளின் அச்சிற்கு இணையாக இருக்கும். சுருளில் மின்சாரம் பாய்ந்தால் இரு கம்பிகளும் காந்தங்களாகின்றன. இதனால் அவற்றிடையே விலக்கம் தோன்றி, இயங்கும் கம்பி விலகுகிறது. இவ்விலக்கத்தைக் காட்டும் அளவை மின்னோட்டத்தை அளவிடுகிறது.

இக்கருவி மிக எளிய அமைப்புக் கொண்டது. இது மலிவானது. ஆனால் இதில் பல பிழைகள் நேர வழியுண்டு. ஆகையால் திருத்தமான அளவுக்கு இது பயன்படாமல் இருந்தது. ஆனால் தற்காலத்தில் வழங்கும் புதுவகைக் காந்தவியற் கலவைகளை இக்கருவியில் பயன்படுத்துவதால், இப்பிழைகளைத் தவிர்த்து, இதை மிகத் திருத்தமான கருவியாகச் செய்யலாம்.


தேனிரும்பு அம்மீட்டர்

**அம்மூவனார்** சங்கமருவிய புலவர்; சேரனாலும், பாண்டியனாலும், திருக்கோவலூர்க் காரியாலும் ஆதரிக்கப் பெற்றவர். மேலைக் கடற்கரையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடல்கள் நற்றிணையில் பத்தும் (4, 35, 76, 138, 275, 307, 315, 327, 395, 397), குறுந்தொகையில் பதினொன்றும் (49, 125, 163, 303, 306, 318, 327, 340, 351, 397, 401), ஐங்குறுநூற்றில் நெய்தல்பாட்டு நூறும், அகநானூற்றில் ஆறும் (10, 35, 140, 280, 370, 390) கிடைத்துள. இவர் பெயர் அம்மூவன் என்றும் குறுந்தொகையிற் காணப்படுகிறது.

**அம்மெய்யன் நாகனார்** இவர் இயற்பெயர் நாகன். அம்மெய்யன் என்பது இவர் தந்தை பெயர் போலும் (நற். 252).

**அம்மை** (Pox): தொற்று நோய்களில் அம்மை நோய்கள் ஒரு தனிப்பட்ட வகையைச் சேர்ந்தவை. தொற்று ஏற்பட்டுச் சில நாட்களுக்குப் பிறகு, அதாவது அவயக் காலத்திற்குப் (Incubation period) பிறகு, காய்ச்சலும், அதற்குச் சில நாட்களுக்குப் பின் உடம்பில் தோலின் மேலும், வாய், மூக்கு, கண் இவைகளின் சவ்வுகளின் மேலும், சிறு சிவப்புப் புள்ளிகள் தோன்றிப் பின் அவை நீர்க் கொப்புளங்களாகவோ சீழ்க் கொப்புளங்களாகவோ மாறிப் பிறகு சில நாட்களுக்குள் இந்தக் கொப்புளங்கள் அடங்கிக் காய்ந்து, பொருக்குகளாகி உதிர்ந்துவிடும். சிவப்புப் புள்ளிகளும், தடிப்புக்களும், படைகளும், கொப்புளங்களும் உண்டாகும். இந்த நோய்கள் மாரி அல்லது சீதளாதேவி என்னும் தெய்வத்தால் ஏற்படுபவை என்னும் நம்பிக்கையால், இவற்றிற்கு அம்மை என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

**அம்மை வகைகள்**: 1. சின்ன அம்மை (Chicken pox): இதை நீர்க் கொளுவான் என்பார்கள். இந்த அம்மை கடுமையானதன்று. கொப்புளங்கள் சாதாரணமாகச் சீழ் பிடிப்பதில்லை. ஆகையால் இதனால் மரணம் ஏற்படுவதில்லை. 2. பெரியம்மை (Small pox) மிகவும் கடுமையானது; உயிருக்கும் ஆபத்தை விளைவிப்பதுண்டு. இதில் காணும் கொப்புளங்கள் சீழ் பிடிப்பதால் அதிகக் காய்ச்சலும், அவை வாய், கண், மூக்குகளில் உண்டாவதால் ஆபத்தும் ஏற்படுகின்றன. நோயினின்று தப்பிப் பிழைத்தாலும், தழும்புகள் முக்கியமாக முகத்தில் உண்டாகி விடுவதால், விகார ரூபத்தைக் கொடுத்துவிடுகிறது. கண்ணில் கொப்புளம் புறப்பட்டால், புண்ணாகி, அது ஆறின பிறகு குருடாகிவிடுகிறது. இதைத்தான் பூ விழுந்துவிட்டது என்பார்கள். 3. தட்டம்மை

(Measles) பெரியம்மைபோலக்கொடியதன்று. ஆயினும் பெருவாரியாக அதிக தீவிரமாகத் தொற்றக்கூடியது.

அம்மைகள் பொதுவாகச் சிறுவர்களைத் தொற்றும் குணமுடையன. விளையாட்டு அம்மையும், பெரிய அம்மையும் சாதாரணமாக ஒரு தடவைக்கு மேல் வருவதில்லை. ஆனால், தட்ட அம்மையோ ஒரு தடவைக்கு மேலாகவும் அடிக்கடியும் வரலாம்.

இந்த அம்மைகளைப் பற்றிய தனிக் கட்டுரைகள் உண்டு. டி. எஸ். தி.

**அம்மை குத்தல்** (Vaccination) என்பது மாட்டு அம்மைப் பாலை மக்களுக்குக் குத்தி, அவர்களுக்குப் பெரியம்மை வாராமல் பாதுகாக்கும் முறையாகும். இவ்வாறு செய்தால் பொதுவாகப் பெரியம்மை போடுவதில்லை; ஒரு வேளை போட்டாலும் இலேசாக வார்த்துத் தீங்கு செய்யாமல் போய்விடும். இந்த முறை, இந்தியா, அரேபியா போன்ற கீழ் நாடுகளில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கையாளப்பட்டதாக வரலாற்று அறிஞர் கூறுகிறார்கள். அக்காலத்தில் மாட்டு அம்மைப் பாலைக்குத்தாமல், பெரியம்மைப் பாலையே குத்தினதாகத் தெரிகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேரி வார்ட்லி மான்டேகு அம்மையார் துருக்கிக்குச் சென்றிருந்தபோது, இந்த முறையை அங்கே கற்றுக்கொண்டு, பிறகு இங்கிலாந்துக்கு வந்தார். அம்மை குத்தும் பழக்கத்தைச் சட்டன் என்பவர் மிகுதியாகப் பரவுமாறு செய்தார்.

ஆனால் பெரியம்மைப் பாலுக்குப் பதிலாக, மாட்டம்மைப் பாலை விஞ்ஞான முறையில் பயன்படுத்தும் முறையை வகுத்தவர் ஆங்கில வைத்தியர் எட்வர்டு ஜென்னர் (1749-1823). மாட்டம்மை போட்டவர்களுக்குப் பெரியம்மை வருவதில்லை என்று அக்காலத்து மக்கள் நம்பி வந்தனர். இதன் உண்மையை ஜென்னர் சோதித்துப் பார்த்து, உண்மைதான் என்று 1796-ல் உறுதி செய்தார். மாட்டு அம்மை வார்த்திருந்த ஒரு பாற்காரப் பெண்ணின் அம்மைப் பாலை எடுத்து, ஒரு சிறு பையனுக்குக் குத்திப் பிறகு பல வாரங்கள் சென்ற பின்னர், பெரியம்மைப் பாலை எடுத்து, அவனுக்குக் குத்தியபொழுது, அவனுக்குப் பெரியம்மை வரவில்லை. தொடக்கத்தில் மற்ற வைத்தியர்கள் ஜென்னர் முறையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். பின்னர், ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் இம்முறை பரவலாயிற்று.

அப்போது மாட்டம்மை போட்ட மனிதனுடைய கையிலுள்ள புண்ணிலிருந்தே அம்மைப்பால் என்னும் வைரசை எடுத்து மற்றவர்களுக்குக் குத்திவந்தனர். ஆனால், இப்போது உடல் நலமாயுள்ள கன்றுகளினுடைய உடலில் மாட்டம்மை வைரசைக் குத்திப் புண் உண்டாக்கிப் பின்னர் அதனிடமிருந்து வைரசை எடுத்து மக்களுக்குக் குத்துகிறார்கள்.

முழங்கைக்கு மேல் தோலைக் கீறி, வைரஸ் குத்தப்படுகிறது. அந்த இடத்தில் நாலாவது நாள் சிவந்த கொப்புளம் உண்டாகும். அது பத்தாவது நாள் காய்ந்து வரும்போது, தோலை உரியாமலும் பிறாண்டாமலுமிருந்தால், காய்ந்த பொருக்குத் தானாக இரண்டு வாரங்களில் கீழே விழுந்துவிடும். பிறாண்டினால், அதன் காரணமாகத் தொற்று விஷம் உண்டாய்விடும். இருபத்தொரு நாள் சென்றதும், தோல் உரிந்து விழுந்த இடம் தழும்பாக இருக்கும். சிலர்க்கு எட்டு நாள் சுரமும், தலைவலியும், மயக்கமும் உண்டாவதுண்டு. சிலர்க்கு அக்குளில் நெறி கட்டும். ஆயினும் பெரும்பான்மையோர்க்கு எவ்வித அபாயமும் உண்டாவதில்லை.

இவ்வாறு குத்திவைக்கும் அம்மைப் பால் இரத்தத்தில் சேர்ந்ததும், பெரியம்மை விஷத்தை எதிர்க்கக்கூடிய மாற்றுப் பொருள்கள் (Antibodies) உண்டாகின்றன. இவை உடம்பில் இருந்துகொண்டு பெரியம்மை வாராமல் பாதுகாத்து வரும். ஆனால் இவற்றின் ஆற்றல், ஆண்டுகள் ஆக ஆகக் குறைந்துவிடுவதால், ஏழு ஆண்டுகட்கு ஒரு முறை அம்மை குத்திக் கொள்வது நல்லது.

அம்மை குத்துவது பயனுடையதாக இருக்கவேண்டுமானால், அம்மைப் பால் (வைரஸ்) மற்ற நோய்க் கிருமிகள் இல்லாமல் தூயதாக இருக்கவேண்டும்; அதை ஒழுங்காகச் சரியான முறையில் குத்தவேண்டும்; அரை அங்குலத் தூரத்துக்கு ஒன்றாக நான்கு இடங்களில் குத்த வேண்டும்; நான்கு இடங்களும் சேர்ந்து, அரைச் சதுர அங்குலப் பரப்புடையதாயிருத்தல் வேண்டும், குத்தும் போது ஊசியை நன்றாகக் காய்ச்சிக் கிருமி நீக்கம் (Asepsis) செய்துகொள்ளவேண்டும்; தழும்பு உண்டாகும்வரை தொற்று விஷம் உண்டாகாதவாறு பாதுகாக்க வேண்டும்.

அம்மை குத்தல், தீங்கு விளைவிக்கும் என்று, படித்தவர்களிலும்கூடச் சிலர் நம்புகிறார்கள். அவர்கள் அம்மை குத்துவதால், அக்கி, கிரந்தி, குஷ்டம், க்ஷயம் ஆகிய நோய் வருவதாகக் கூறுகிறார்கள். மாட்டு அம்மைப் பாலுடன் கிளிசிரின் சேர்த்துத் தூய்மை செய்யப்படுவதால், கிரந்தி, க்ஷயம், அக்கி ஆகியவை உண்டாவதில்லை. அத்துடன் குஷ்டமும் கிரந்தியும் மாடுகளுக்கு உண்டாவதில்லை. ஆயினும் சிலர்க்கு மூளை அழற்சி (Cerebro-spinal meningitis) உண்டாகி, மரணம் நேரிடுவதுண்டு. ஆனால் இப்படி உண்டாவது 50 ஆயிரம் பேரில் ஒருவர்க்கேயாம். அதுவும் பருவம் அடைந்தவர்க்கே. அதனால் சிசுவாயிருக்கும்போதே அம்மை குத்தத் தொடங்கி, அடிக்கடி குத்தி வருதல் நல்லது. அதாவது மூன்றாவது மாதத்திலும், பிறகு ஐந்தாவது வயதிலும், பிறகு பதினைந்தாவது வயதிலும் குத்தலாம்.

இவ்வாறு கவனித்துக் குத்திவந்தால், எவ்வித அபாயமும் உண்டாகாமல், நன்மையே தரும் என்று வைத்திய நிபுணர்கள் கருதுகிறார்கள்.


இங்கிலாந்து நாட்டில் அரசாங்கத்தார் 1840-ல் செய்த சட்டத்தின்படி, மக்களுக்கு அம்மைப்பால் தருவதாயும், அவர்கள் விரும்பினால் குத்திக் கொள்ளலாம் என்பதாயும் கூறினர். அதன்பின் 1853-ல் கட்டாயமாக அம்மை குத்திக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இயற்றினர். ஆயினும் 1898ஆம் ஆண்டுச் சட்டம் குழந்தைகளுக்குப் பிறந்து ஆறு திங்களாவதற்குள் அம்மை குத்தவேண்டும் என்றும், குழந்தைகளுக்கு அம்மை குத்தினால் தீங்கு உண்டாகும் என்று மனப்பூர்வமாக நம்புவதாகக் குழந்தை பிறந்து நான்கு திங்களாவதற்குள் மாஜிஸ்டிரேட்டுக்குத் திருப்தி உண்டாகுமாறு செய்துவிட்டால் அம்மை குத்த வேண்டியதில்லை என்றும் கூறிற்று. இப்போது ஆட்சியில் இருந்துவரும் 1948ஆம் ஆண்டுச் சட்டம் அம்மைகுத்தல் நல்லது என்று சிபாரிசு செய்தாலும், காட்டாயப் படுத்தவில்லை என்று கூறுகிறது.

சென்னை இராச்சியத்தில் அம்மை குத்தல் பற்றி ஆட்சியில் இருந்து வருவது 1919-ஆம் ஆண்டு நான்காவது சென்னைச் சட்டமும் அதுபற்றிய விதிகளும் ஆகும். அவற்றின் சாரம், குழந்தை பிறந்து ஆறு திங்களாவதற்குள், பெரியம்மை போட்டு, அதன் வாயிலாகப் பாதுகாப்பு ஏற்படாதிருந்தால், அம்மை குத்திக் கொள்ள வேண்டும். அம்மை குத்திக் கொள்வது ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெற வேண்டும். குத்த

வேண்டிய சமயத்தில் குழந்தையோ ஆளோ குத்துவதற்கு ஏற்ற உடல் நலமில்லாதிருந்தால், உடல் நலம் பெற்ற பின்னரே அம்மை குத்தப் பெறுவர். ஊரில் பெரியம்மைத் தொற்று நோய் பரவியிருப்பதாகக் கண்டால், நகராண்மைத் தலைவர் அம்மை குத்தி நான்கு ஆண்டுகளான மக்கள் அனைவரும் அம்மை குத்திக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுவர். அம்மை குத்துபவர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின் வந்து, அம்மை குத்திய இடத்தைக் காட்டும்படி கூறுவர். அப்படிக் காட்டும்போது அம்மை குத்தியது பயனுறவில்லை என்று கண்டால், மறுபடியும் அம்மை குத்துவர். இப்படி மூன்று முறை குத்தியும் பயனுறவில்லை என்று கண்டால், இவர்க்கு அம்மை குத்தல் ஏற்காது என்று கடிதம் எழுதிக் கொடுப்பர். அம்மை குத்திக் கொள்வதற்குக் கட்டணம் ஒன்றும் கிடையாது. கேட்டுக் கொண்டால், வீட்டில் வந்தும் அம்மை குத்தி வைப்பர். அம்மை குத்தல் பற்றிய விதிகளை மீறி நடந்தால் அபராத தண்டனை உண்டு.

**அம்மைச்சி** (17 ஆம் நூ.) வருணகுலாதித்தன் மடல் பாடிய அம்மையார். அந்தகக்கவி வீரராகவ முதலியார் சந்திரவாணன் கோவையை அரங்கேற்றும்போது ஒரு பாட்டுக்குத் தடை கூறியவர் என்பர்.

**அம்மொனைட்டுகள்** நாட்டிலஸ் போன்ற



அம்மொனைட்டுகள்
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிடைப்பவை

1. அக்கான்தோசிரஸ், பக்கத் தோற்றம், 2. அதன் ஓரத் தோற்றம், 3. சங்கின் பொருத்துக்கோடுகளிலுள்ள சித்திர வேலைப்பாடு வார்ப்புப்போன்ற பாசிலின்மேல் பதிந்திருப்பது, 4. லைட்டோசிரஸ், ஓரத் தோற்றம், 5. அதன் பக்கத் தோற்றம்.


உதவி : சென்னை மாகாணக் கல்லூரி-புவியியல் பகுதி

மெல்லுடற் பிராணிகள். இவை இப்போது இல்லை. பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தன. இடைப்பிராணியுகத்தில் (Mesozoic period) இவை எண்ணிக்கையிலும் வகையிலும் ஏராளமாக இருந்தன. இவற்றின் பாசில்களை அந்தக் காலத்துப் பாறைகளிலே பல தேசங்களிலே காணலாம். இவற்றின் கூடுகள் ஒரே மட்டத்திலிருக்கும் சுருளாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கூட்டிலும் அறையறையாகத் தடுத்திருக்கும். இவை பாசில்களாவதற்கு மிகவும் ஏற்றவையாக இருந்ததால், எண்ணிறந்த அளவில் இவை கிடைக்கின்றன. இடைப்பிராணியுகத்தின் திரையாசிக, ஜுராசிக, கிரிட்டேஷஸ் என்னும் மூன்று பிரிவுகளிலும் இவை வியாபித்திருந்தன. அந்தக் காலத்தைப் பல அடுக்குகளாகப் (Zones) பிரிப்பதற்கு இந்தப்பாசில்கள் பெரிதும் பயன்படுகின்றன. மானிட இயலார், மட்கலங்கள் உடைந்த ஓட்டைக்கொண்டு எவ்வாறு மனிதனுடைய நாகரிகக் காலப் பிரிவுகளை அறிந்து கொள்ளுகின்றனரோ, அவ்வாறு தொல்லுயிரியலார் அம்மொனைட்டுகளைக் கொண்டு இடைப்பிராணியுகத்தின் பிரிவுகளை அறிந்து கொள்ளுகின்றனர். இவை காலத்தைக் குறிக்கும் அடையாளங்களாக உதவுகின்றன. இந்தியாவிலும் அம்மொனைட்டுகள் அகப்படுகின்றன. திருச்சிராப்பள்ளிக் கருகில் கிரிட்டேஷஸ் காலத்துக் கற்களில் இவை அகப்படுகின்றன. கண்டகி நதிக்கரையில் அகப்படும் சாளக்கிராமம் என்னும் சிலையும் ஒரு அம்மொனைட்டுதான்.

**அமர்நீதி நாயனார்** அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்; சோழ நாட்டில் பழையாறையிலிருந்த வணிகர். சிவனடியார் தந்த கோவணத்துக்கு நிறையாகத் தம் மனைவியொடும் மகனொடும் துலை புக்கு அர்ப்பித்து முத்தி பெற்றவர்.

**அமரநாத்:** இது அம்பர்நாத் (வானத்தின் தலைவன்) என்பதன் சிதைவு. பம்பாய் இராச்சியத்தில் தானா மாவட்டத்தின் கல்யாண் தாலுகாவில் பம்பாயிலிருந்து 38 வது மைலிலுள்ள ஊர். சிவன் கோவில் பண்டைய சிற்பச் சிறப்புடையது. மேற்குப் பார்த்த வாயிலுடையது. இங்குள்ளவற்றிற்கு இணையான சிற்பங்கள் பம்பாய் இராச்சியத்தில் வேறு எங்கும் கிடையா.

**அமராந்தேசீ** கீரைத்தண்டுக் குடும்பம். இந்தக் குடும்பத்தில் பல செடிகள் இலைக்கறியாகப் பயன்படுகின்றன. சில மருந்துக்குதவும். மற்றுஞ் சில அழகிய பூக்கதிர்களுள்ளவை. இவற்றில் பெரும்பாலானவை சிறு செடிகள். சில குற்றுச் செடிகளும் சில கொடிகளும் உண்டு. இலைகள் மாறொழுங்கு அல்லது எதிரொழுங்குள்ள தனியிலைகள். இலையடிச் செதிலில்லை. பூக்கள் மிகச் சிறியவை. சாதாரணமாக இருபாலின. இவற்றோடு ஒருபாற் பூக்களும் கலந்திருக்கும். சில வகைகள் ஈரகச் (Dioecious) செடிகள். மஞ்சரி



முள்ளுக்கீரைத் தண்டு

கிளை, ஆண் பூ, பெண் பூ, கனி, வெடித்த கனியின் அடிப்பாகமும் விதையும், வெடித்த கனியின் மேற்பாகம்.

வளர் நுனிக் கதிர் அல்லது கூட்டுக் கதிர். வளரா நுனிக்கொத்துக்களும், கோழிக்கொண்டை போன்ற பலவித விசித்திர வடிவுக் கொத்துக்களும் உண்டு. பூக் காம்பிலையும்,பூக்காம்புச் சிற்றிலைகளும், மெல்லிய, வற்றி புலர்ந்த செதில் போன்றவை; உதிராமல் இருக்கும்; நிறமுள்ளவையாக இருக்கும்.

பூவிதழ் 5 கண்ணுடிபோல அல்லது உலர்ந்த செதில் போல இருக்கும். போலிக் கேசரங்கள் (Staminodes) சில இருக்கலாம். மகரந்தப்பை சில வகைகளில் ஒரே அறையுள்ளது; சிலவற்றில் இரண்டறையுள்ளது. சூல கம் இரண்டு சூலிலைகள் கூடியது. ஒரே அறையுள்ள சூலறையில் ஒரு சூல் அல்லது சில சூல்கள் இருக்கலாம். கனி உலர்கனி. மேற்பாகம் சிமிழின் மூடிபோலத் (Circumciss) திறக்கும். சிலவற்றில் அப்படி ஒழுங் காக வெடிக்காமல் தாறுமாறுகவும் வெடிக்கும். விதை ஒன்று அல்லது சில; வட்டமாகச் சப்பையாகப் பள பளப்பாக இருக்கும். மாவுபோன்ற முளைசூழ்தசை யில் கருச் (Embryo) சுருண்டு கிடக்கும். இந்தக் குடும்பத்தில் சுமார் 50 சாதிகளும் 500 க்கு மேற்பட்ட இனங்களும் உண்டு; அயன, உப அயன மண்டலங் களில் உள்ளவை. குப்பைக்கீரை, முள்ளுக்கீரை, பண் ணைக்கீரை, தொய்யாக்கீரை, பூளை, சிறுபூளை, பொன் னுங்கண்ணி, நாயுருவி இவையெல்லாம் சாமானியமாக வயல்களிலும் வழிப்பக்கங்களிலும் வளர்ந்திருப்பவை. கலவைக் கீரையில் இவை கலந்திருக்கும். கீரைத்தண்டு, அறுகீரை, சிறுகீரை தோட்டங்களில் பயிர் செய்யப் படுவன. சில தண்டுக்கீரை இனங்களின் விதையை வறுத்தும் மாவரைத்தும் உணவாகச் சில இடங்களில் உபயோகிக்கின்றனர். வாடாமல்லிகை, கோழிக் கொண்டை முதலியவை தோட்டங்களில் அழகுக்காக வளர்ப்பவை. வெளிநாடுகளிலிருந்து சில களைகளும் பூட்செடிகளும் நமது நாட்டுக்கு முதல் உலக யுத்த காலத்திலும் பிறகும் வந்திருக்கின்றன. அவற்றுள் பஸ்ராமுள் என்னும் முள்ளுப் பொன்னுங்கண்ணியும் (ஆல்டர்னுந்திரா எக்கைனேட்டா), வெள்ளைப் பூவுள்ள கீர்வாடாமல்லிகையும் (கோம்பிரினு டிகம்பன்ஸ்) அம ராந்தேசி குடும்பத்தைச் சேர்ந்தவை. இந்தக் குடும் பத்துச் செடிகளின் கனியும் விதையும் எளிதாகப் பரவு வதற்கு ஏற்றவை. பல குப்பைபோலக் காற்றில் அடித் துக்கொண்டு போகும். முள்ளுப் பொன்னுங்கண்ணி, பா தத்திலும், சைக்கில் முதலியவற்றிலும் குத்திக்கொண்டு நெடுந்தூரம் போகும். நாயுருவிக்கனி உலரும்போது பூக்கதிரில் கீழ்நோக்கித் திரும்புகிறது. ஆடு மாடுகளின் தோலிலும் நமது துணியிலும் காலிலும் வரிசையாக உருவினது போலக் குத்திக்கொள்ளும். கீரை விதை களை எறும்பு இழுத்துக்கொண்டு போகும்போது அவை வழியில் விழுந்து முளைக்கும். இவற்றின் பூங்கதிர்கள் வாடாமலும் நிறம் மாருமலும் இருப்பதால், இவை அமராந்தஸ் அதாவது அமரப் பூக்கள் எனப் பெயர்பெற் றன. மாருத அன்புக்கு இந்த அமராந்தஸ் ஒரு அடை யாளப் பூவாக மேனுட்டார் கருதுவர்.

கீரைத்தண்டு, நாயுருவி, பொன்னுங்கண்ணி, வாடா மல்லிகை முதலியவற்றைப் பற்றித் தனிக்கட்டுரைகள் உண்டு.

**அமராவதி** குண்டூர் மாவட்டத்தில் கிருஷ்ணு ஆற்றின் கரையிலுள்ளது. இது சாதவாகன அரசர் களின் கிழைத் தலைநகரமாயிருந்தது. சலவைக் கல்லால் செய்த மிகவும் முக்கியமான ஒரு பௌத்த ஸ்தூபம் கி. மு. மூன்றும் நூற்றுண்டு முதல் இங்கே இருந்து வந்தது. இங்குக் கி. மு. இரண்டாம் நூற்றுண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றுண்டுவரை பல சிற்பங்கள் பொறிக்கப்பட்டு வந்துள்ளன. அந்த ஸ்தூபம் புத்தருடைய நினைவுப் பொருள்கள்மீது நிறு வப்பட்டிருந்தது. இந்தியாவிலே இவ்வூருக்குத் தொலைவி லுள்ளவர்களும் இங்கு வந்து, பணம் செலவு செய்து,



ஸ்தூபத்தின் சிற்பம் — அமராவதி

உதவி : அரசாங்கப் பொருட் காட்சிச் சாலை, சென்னை.

சிற்பங்களைச் செய்வித்திருக்கின்றனர்கள். இந்த ஸ்தூபத் தைச் சுற்றியுள்ள அளியானது நாகார்ச்சுனரால் கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் இடையில் கட்டப்பட்ட தாகும். அமராவதிச் சிற்பங்கள் இந்தியாவில் காணப் பெறும் சிறந்த சிற்பங்களைச் சேர்ந்தவை. அவை புத்த ருடைய வாழ்க்கையையும் பௌத்த ஜாதகக் கதை களையும் சித்திரிக்கின்றன. இந்தச் சிற்பங்கள் மிகுதி யாகச் சேர்த்துவைக்கப்பட்டுள்ள இடங்கள் சென்னைப் பொருட்காட்சிச் சாலையும், பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையுமே யாம். அமராவதியிலுள்ள அமரேசுவர ருடைய கோயில் பௌத்தச் சிதைவுகளின்மீது கட்டப் பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. கல்வெட்டியற் (Epigraphical) சான்றுகள் 12 ஆம் நூற்றுண்டு வரையிலுங்கூட இந்தப் பௌத்த ஸ்தூபத்தில் வழி பாடு நடந்ததாகக் காட்டுகின்றன. அமராவதி ஆந்தி ரர்களுடைய ஐந்து ஆராமங்களுள் ஒன்றுகவும், பெரிய சிவஸ்தலமாகவும் இருந்து வருகிறது. சீ. சி.

**அமராவதி** கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை, தாராபுரம் வட்டங்களின் வழியாகச் சென்று, கரூரினருகே காவிரியில் சேரும் ஆறு.

**அமராவதி** தேவேந்திரனுடைய தலைநகர்; பூவுலகத்தில் புண்ணியம் செய்தோர் அடையும் உலகு என்று புராணங்கள் கூறும்.

**அமரில்லிடேசீ** (Amaryllidaceae) பெரிய ஒரு விதையிலைக் குடும்பம். இதில் இந்தியாவுக்கே உரிய இனங்கள் சிலவே. இது லில்லிக் குடும்பத் துக்கு மிக நெருங்கியது. லில்லியேசியில் சூற்பை மேல் தோன்றுவது (Superior ovary). இந்தக் குடும்பத்துப் பூக்களின் சூற்பை உள்ளடங்கியது (Inferior). விஷ மூங்கில், நில சம்பங்கி, நிலப்பனை,

நார்க் கற்றுழை முதலியவை இதைச் சேர்ந்தவை. யூகாரிஸ் லில்லி, டான்கிரேஷியம், செபிராந்தஸ், நார் சிஸ்ஸஸ் முதலிய பல பூச்செடிகளும் இந்தக் குடும்பத் தினவே. இதில் 80க்கு மேற்பட்ட சாதிகளும் 1000க்கு மேற்பட்ட இனங்களும் உண்டு. இவை பெரும்பாலும் சிறு பூண்டுகள்; நார் போன்ற சிம்பு வேருடையவை; நிலத்தின்கீழே பூண்டு, கந்தம், கிழங்கு, மட்டத்தண்டுக் கிழங்கு எனத் தண்டு பல வகையாக இருக்கும். இந்தத் தரைக்கீழ்த் தண்டுகளின் உதவியால் இச் செடிகள் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கும். இலை அடித் தண்டிலை. சிலவற்றில் ஒரு குறுகிய தண்டின் முனையில் அடர்ந்திருக்கும்; ஒருபோகு நரம்புள்ளது. பூக்கள் சில சேர்ந்து குடைமஞ்சரியாக இருக்கலாம். சில செடிகளில் ஒரே பூ உண்டாகும். சிலவற்றில் பல பூக்கள் கலப்பு மஞ்சரியாக இருக்கும்; சாதாரணமாக இருபாலின; ஒழுங்கான அமைப்புள்ளவை; சிலவற் றில் சற்று ஒருதளச்சமமாக இருக்கலாம். இதழ்கள் சூலகத்துக்குமேல் வளர்வன. ஆறு பிரிவுள்ளவை. சிலவற்றில் அவற்றின் வாயில் உப மகுடம் இருக்கும். மகரந்த கேசரங்கள் ஆறு சாதாரணமாக இதழ் களின் அடியில் ஒட்டியிருக்கும். சூலகம் உள்ளடங்கும் சூற்பையுள்ளது. இணைத்த சூலறை. மூன்று அறைக ளுள்ளது. சூல்கள் பல. சூல் தண்டின்மேல் சூல்முடி ஒன்றாக இருக்கும்; அல்லது மூன்றாகப் பிரிந்திருக்கும். கனி சாதாரணமாக அறைவெடிக்கும் உலர்கனி. சில வற்றில் சதைக்கனி யுண்டு. விதைகள் சில அல்லது பல. கருவைச் சுற்றி முளைசூழ்தசை யுண்டு. (மேற் குறித்த செடிகளைப் பற்றித் தனிக் கட்டுரைகளுண்டு.)

**அமிதசாகரர்** யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்களின் ஆசிரியர்; கி. பி. 12 ஆம் நூற்றாண்டினர்; வேளாளர்; தீபங் குடியில் இருந்த சமணர்; சமண சங்கப் பிரிவான அருங் கலான்வயம் என்னும் குழுவினைச் சார்ந்தவர்.

**அமிர்த கவிராயர்** (கி.பி. 1637—72) பாண்டி நாட்டிலே பொன்னுங்கால் என்னும் ஊரிலே தோன்றி யவர்; இராமநாதபுர மன்னர் இரகுநாத சேதுபதி அவைக்களப் புலவராயிருந்தவர். ஒரு நாள் சேதுபதி யவர்கள் அகப்பொருள் துறை ஒவ்வொன்றிற்கும் பல பாடல்கள் பாட இயலுமோ எனப் புலவர்கள் பலரை யும் வினவினர் எனவும், பிற புலவர்கள் ஒன்றுங் கூறா மல் இருக்க, அமிர்த கவிராயர் மட்டும், "நான் நூறு பாடுவேன்" என்றார் எனவும், பொறாமைகொண்ட புல வர்கள், "இவர் ஒவ்வொரு துறைக்கும் நானூறு பாடு வேன்" என்கிறார் என வுரைத்தனரெனவும், இவர் அவ்வாறே நாணிக்கண் புதைத்தல் என்னும் துறைக்கு நானூறு பாடி, ஒரு துறைக்கோவை என்னும் நூலா கத் தந்தார் எனவும் கூறுவர். இந்நூல் வெளியாகி யுள்ளது.

**அமிர்த கவிராயர்** தொண்டைமண்டலத்துப் பாலூரில் இருந்தவர்; கோகுல சதகம் பாடியவர்.

**அமிர்தசரஸ்** பஞ்சாபில் இரண்டாவது பெரிய நகரம். கிழக்குப் பஞ்சாபிலுள்ளது; சீக்கியர்க ளுடைய பொற்கோயிலுள்ள புண்ணியத் தலம்; ஆறு யிரம் புரோகிதர்கள் உடையது; 1919-ல் சத்தியாக் கிரக இயக்கம் தோன்றிய காலத்து, ஜெனரல் டயர் நிரபராதிகளைச் சுட்ட ஜாலியன்வாலாபாக் தோட்டம் உடையது; கைத்தொழிலும் வியாபாரமும் மிகுதி யாக உடையது. முக்கியமான கைத்தொழில் துணி நெய்தலாகும். மக்: 3,25,747 (1951). இதே பெயர் கொண்ட மாவட்டத்தின் மக்: 13,67,040 (1951).

**அமிர்தபஜார்** வங்காளத்தில் ஜெஸ்ஸூர் மாவட் டத்திலுள்ள கிராமம். பழைய வங்காளி தினசரியான அமிர்தபஜார் பத்திரிகை இங்கிருந்து தொடங்கப் பட்டது.

**அமிர்தலிங்க சுவாமிகள்** திருவண்ணாமலை ஆதீனத்தவர்; திருமயிலைப் புராணம் பாடியவர்.

**அமிலங்கள்** (Acids): ரசாயனத்தில் அமிலம் என்பது உலோகத்தினால் பிரதியீடு செய்யத்தக்க ஹைடிரஜனைக்கொண்ட கூட்டு. இந்த மாற்றத்தினால் ஒரு ரசாயன உப்புத் தோன்றும். நீரிற் கரைத்தால் ஹைடிரஜன் அயான்களைத் தரும் பொருள் எனவும் இதை வரையறுப்பதுண்டு. சாதாரணமாக அமிலங் கள் புளிப்பான சுவையை யுடையவை. இவை காரங் களையும், பல உலோகங்களையும் கரைக்க வல்லவை. லிட்மசைப் போன்ற பல தாவர நிறப்பொருள்களை இவை நீலம் அல்லது ஊதா நிறத்திலிருந்து செந்நிற மாக மாற்றும்.

மதுவைப் புளிக்கவைத்துப் பெறப்படும் காடி என்ற அசிட்டிக அமிலம் பழங்காலத்திலிருந்தே அறியப்பட் டுள்ளது. நைட்ரிக அமிலத்தையும், கந்தக அமிலத்தை யும் இந்திய நாட்டு ரசவாதிகள் அறிந்திருந்தனர். ராபர்ட் பாயில் என்ற ரசாயன அறிஞர் பல அமிலங் களை ஆராய்ந்து, அவற்றின் பொது இயல்புகளைக் கண்டு பிடித்தார். இதன் பின்னர்ப் பிரெஞ்சு அறிஞர் லவாய்சியர் எல்லாப் பொருள்களையும் அமிலங்கள், உப்பு மூலங்கள், உப்புக்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். ஆக்சிஜனே அமிலங்களைத் தோற்றுவிக் கிறது என அவர் கருதினார். ஹைடிரஜன் சல்பைடு, ஹைடிரோகுளோரிக அமிலம் போன்ற பல கூட்டுக் களில் ஆக்சிஜன் இல்லாவிட்டாலும், அவை அமிலங் களின் இயல்புகள் கொண்டிருப்பது அறியப்பட்டபின், இக்கருத்துத் தவறானது என்பது தெளிவாகியது. அமி லங்களில் ஹைடிரஜனே முக்கியமான உறுப்பு என்னும் கருத்துத் தோன்றியது. 1838-ல் லீபிக் என்ற ஜெர் மானிய அறிஞர் கரிம அமிலங்களை ஆராய்ந்து, உலோ கங்களால் பிரதியீடு செய்யத்தக்க ஹைடிரஜன் அணுக் களைக் கொண்ட கூட்டு என அமிலத்தை வரையறுத் தார். சில அமிலங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட ஹைடி ரஜன் அணுக்களை இவ்வாறு பிரதியீடு செய்யலாம். இதனால் ஒரே அமிலம் ஓர் உலோகத்துடன் வினைப் பட்டு, ஒன்றிற்கு மேற்பட்ட உப்புக்களைத் தரக்கூடும். மின்பகுப்பு (த. க.) என்னும் வினைவை விளக்க அரானி யூஸ் வெளியிட்ட கொள்கையின்படி ஓர் அமிலத்தை நீரிற் கரைத்தால் அது அயான்களாகப் (த. க.) பிரி கிறது. இப்பிரிவை அடிப்படையாகக் கொண்டு அமி லங்களின் சிறப்பியல்புகளை விளக்க முடிகிறது. தற் கால அணு அமைப்புக் கொள்கையும் அரானியூஸின் கருத்திற்கு ஆதரவு தருகிறது. ஓர் அமிலத்தை நீரிற் கரைத்த பின்னரே, அது தன் இயல்புகளை வெளிக் காட்டுகிறது. ஆகையால் ஹைடிரஜன் அயான் நீர் மூலக்கூற்றுடன் இணைந்து $H_3O$ என்னும் நேரயானுகி அமிலத்தின் பண்புகளைத் தோற்றுவிக்கிறது எனத் தற்கால ரசாயன அறிஞர் பலர் கருதுகிறார்கள்.

**கரிம அமிலங்கள்**: கரிம அமிலங்களிற் பெரும் பான்மையானவை COOH என்னும் கார்பாக்சிலிகத் தொகுதியைக் கொண்டிருக்கும். இவை அலிபாடிக அமிலங்கள் என்றும், அரோமாடிக அமிலங்கள் என் றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. கரிம அமிலங்கள் உப்புமூலங்களுடன் வினைப்பட்டு உப்புக் களை அளிக்கும்; ஆல்கஹால்களுடன் வினைப்பட்டு எஸ்

டர்களை அளிக்கும். பல பழங்களில் கரிம அமிலங்கள் உள்ளன. ஆரஞ்சுப் பழத்தில் சிட்ரிக அமிலமும், புளியிலும் திராட்சையிலும் டார்ட்டாரிக அமிலமும், ஆப்பிளில் மாலிக அமிலமும் உள்ளன.

முக்கியமான தாது அமிலங்களான கந்தகாமிலம், நைட்ரிக அமிலம், ஹைடிரோகுளோரிக அமிலம் ஆகியவை மிக அடிப்படையான மூலப்பொருள்கள். இவை பல தொழில்களில் பயனாகின்றன. பல அமிலங்களின் நீர்த்த கரைவுகள் மருந்துகளாகப் பயனாகின்றன.

**அமின்கள் (Amines) :** அம்மோனிய மூலக்கூற்றிலுள்ள ஹைடிரஜன் அணுக்களுக்குப் பதிலாக அல்கைல் தொகுதிகளையும், அரைல் தொகுதிகளையும் கொண்ட கூட்டுக்கள் அமின்கள் எனப்படும். இவ்வாறு ஒரு ஹைடிரஜன் அணுவை மாற்றி, முதலாம் அமினையும், இரண்டு ஹைடிரஜன் அணுக்களை மாற்றி இரண்டாம் அமினையும், மூன்று ஹைடிரஜன் அணுக்களை மாற்றி மூன்றும் அமினையும் பெறலாம்.

இவையனைத்தும் முக்கியமான கரிம மூலப் பொருள்கள்.

**அலிபாடிக அமின்கள் :** அம்மோனியாவை நீரிலோ, ஆல்கஹாலிலோ கரைத்து, ஒரு அல்கைல் ஹாலைடையோ, அல்கைல் நைட்ரேட்டையோ, டைஅல்கைல் சல்பேட்டையோ வினைப்படுத்தினால், மூவகை அலிபாடிக அமின்களையும் பெறலாம். இது ஹாப்மான் முறை எனப்படும். இதிற் கிடைக்கும் மூவகை அமின்களையும் தனியே பிரித்தல் அவ்வளவு எளிதல்ல. ஆகையால் இது அவ்வளவாகப் பயனாவதில்லை.

அலிபாடிக நைட்ரோ கூட்டுக்களைக் குறைத்து அமின்களைப் பெறலாம். இதற்குப் பலவகைப்பட்ட குறைக்கும் பொருள்களைப் பயனாக்கலாம்.

முதலிரண்டு அலிபாடிக அமின்கள் சாதாரண வெப்பநிலையில் வாயுக்கள். அதற்கடுத்த படியாக உள்ளவை திரவங்கள். கடைசியானவை திண்மங்கள். மூலக்கூற்று நிறை மிக மிக, இவற்றின் கரையுந்திறன் குறைகிறது. முதலாவதாக உள்ள அமின்கள் அம்மோனியாவை ஒத்த, ஆனால் அவ்வளவு காரமாக இல்லாத மணமுள்ளவை. திண்ம அமின்கள் மணமற்றவை. இவை அமிலங்களுடன் கூடிப் படிக வடிவான கூட்டுக்களை அளிக்கின்றன. அமின்களின் உப்புக்கள் பல உலோக உப்புக்களுடன்கூடி இரட்டை உப்புக்களை அளிக்கின்றன.

மூவகை அமின்களும் நைட்ரச அமிலத்துடன் வெவ்வேறு வகையில் வினைப்படுகின்றன. இந்த வினையைக் கொண்டு இவற்றை வேறாகப் பிரித்தறியலாம். முதலாம் அமின்கள் நைட்ரச அமிலத்துடன் வினைப்பட்டு, நைட்ரஜனை வெளிவிட்டு முதலாம் ஆல்கஹாலை அளிக்கின்றன. இரண்டாம் அமின்கள் மஞ்சள் நிறமான நைட்ரசோமின்களை அளிக்கின்றன. மூன்றும் அமின்கள் குளிர்ந்த நைட்ரச அமிலத்துடன் வினைப்படுவதில்லை; அவற்றைச் சூடேற்றினால் மிகச் சிக்கலான வினைகள் நிகழும்.

முதலாம் அமின்களைக் குளோரோபாரத்துடனும் ஆல்கஹாலில் கரைந்த காரத்துடனும் சூடேற்றினால் ஒருவகைக் கெட்ட நாற்றமுள்ள பொருள் தோன்றுகிறது. இப்பொருள் கார்பைலமின் எனப்படும். முதலாம் அமின்களைக் கண்டறிய இச்சோதனை பயனாகிறது. இது கார்பைலமின் வினை என வழங்கும்.

மெர்க்குரியாலிஸ் (Mercurialis) என்ற கள்ளிவகைத் தாவரத்திலிருந்து மெதிலமின் கிடைப்பதாகக் கூறுவர்கள். மீனை ஊறவைத்த உப்புநீரில் புரோட்டீன்களின் சிதைவால் மூவகை மெதிலமின்களும் கிடைக்கின்றன. அசிடமைடு என்ற பொருளுடன் புரோமினையும், பொட்டாஷ் காரத்தையும் கலந்து வினைப்படுத்தி மெதிலமினைத் தயாரிக்கலாம்.

**அரோமாடிக அமின்கள் :** நைட்ரோ கூட்டுக்களைக் குறைத்து இவற்றைப் பெறலாம். எளிய அமைப்புள்ள அமின்கள் திரவங்களாகவும், மற்றவை திண்மங்களாகவும் இருக்கும். இவை நீரில் சரிவரக் கரையா. திரவ வடிவிலுள்ள அமின்கள் இலேசான நறுமணமுள்ளவை.

அரோமாடிக அமின்கள் அலிபாடிக அமின்களைவிட வலுக்குறைவான உப்பு மூலங்கள். இவை நிலையான உப்புக்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வுப்புக்கள் நீரிற் கரைந்தால், ஓரளவு நீர் முறிவதால் அமிலத் தன்மையுள்ளனவாக இருக்கும். மற்ற இயல்புகளில் இவை அலிபாடிக அமின்களையே ஒத்தவை. நைட்ரச அமிலம் தாழ்ந்த வெப்பநிலையில் முதலாம் அமின்களுடன் வினைப்பட்டு, டையசோனிய உப்புக்களை அளிக்கும். இரண்டாம் அமின்கள் நைட்ரச அமிலத்துடன் அலிபாடிக இரண்டாம் அமின்களைப்போலவே வினைப்படுகின்றன. மூன்றும் அமின்கள் நைட்ரசோ கூட்டுக்களை அளிக்கும். பார்க்க: அனிலீன். எஸ். ர.

**டையமின்கள் :** டைஹைடிரிக ஆல்கஹால்களிலுள்ள ஹைடிராக்சில் தொகுதிகளை அமினோ தொகுதிகளாக மாற்றினால் கிடைக்கும் கூட்டுக்கள் டையமின்கள் எனப்படும். மானோ அமின்களைப் பெறக் கையாளும் முறைகளையே கையாண்டு இவற்றையும் தயாரிக்கலாம்.

எதிலீன் புரோமைடை ஆல்கஹாலில் கரைத்த அம்மோனியாவுடன் $100^\circ$ யில் சூடேற்றினால் எதிலீன் டையமின் $[C_2H_4(NH_2)_2]$ என்ற கூட்டைப் பெறலாம். இது நிறமற்ற திரவம். இது அம்மோனியாவை யொத்த மணமுள்ளது. டெட்ராமெதிலீன் டைநைட்ரைலை சோடியத்துடனும் ஆல்கஹாலுடனும் வினைப்படுத்தி, டெட்ராமெதிலீன் டையமினைப் $(NH_2 NH_2 CH_2 CH_2 CH_2 CH_2)$ பெறலாம். கடாவரைன் (Cadavarine) என்ற பெயரால் வழங்கும் பென்டாமெதிலீன் டையமின் $[NH_2(CH_2)_5NH_2]$ ஒரு பாகுபோன்ற திரவம். இது டிரைமெதிலீன் சயனைடைக் குறைத்துப் பெறப்படுகிறது.

இத்தகைய மூலங்களிற் பல, அழுகும் அல்புமினிலும் சவங்களிலும் காணப்படுகின்றன. இவை டோமைன்கள் (Ptomaines) என அழைக்கப்படும். பார்க்க: அழுகுதல்.

அரோமாடிக டையமின்கள், டிரையமின்கள் போன்ற பாலிஅமின்கள் பாலி - நைட்ரோ - ஹைடிரோகார்பன்களையும், நைட்ரோ அமினோ கூட்டுக்களையும் குறைத்துப் பெறப்படுகின்றன. இவை படிக வடிவான திண்மங்கள். காற்றுப்பட்டால் இவை பழுப்பாக மாறும். அயகக் குளோரைடுடன் இவை சிறப்பான நிறங்களை அளிக்கும். ஆர்தோ, பாரா, மெட்டா என்ற மூன்று சம உறுப்பிகளாக இவை இருக்கலாம்.

**அமினோ - அமிலங்கள் :** ஒரு கார்பாக்சில் தொகுதியையும், ஒரு அமினோ தொகுதியையும் கொண்ட கூட்டுக்கள் அமினோ - அமிலங்கள் எனப்படும். புரோட்டீன்களை அமிலங்களாலோ, காரங்களாலோ, என்சைம்களாலோ நீர் முறித்தால் அமினோ அமிலங்கள் தோன்றும். தாவரங்களின் உயிரணுக்கள் எளிய பொருள்களிலிருந்து இவற்றைத் தயாரிக்கின்றன. அமினோ அமிலங்களிலிருந்து புரோட்டீன்கள்

தோன்றுகின்றன. இதனால் இவை உயிர்ப்பொருள் ரசாயனத்தில் முக்கியமானவை. இதுவரை இருபத்து மூன்று அமினோ அமிலங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றைத் தொகுப்பு முறைகளாலும் தயாரிக்கலாம்.

அமினோ அமிலங்களைப் பின்வரும் வகைகளாகப் பகுக்கலாம்:

1. அலிபாடிக அமினோ அமிலங்கள்: கிளைசீன் (Glycine), அலனின் (Alanine), லைசின் (Lycine), குளுடமிக அமிலம் (Glutamic Acid), ஆர்கினைன் (Arginine) என்பவை இவ்வகையில் முக்கியமானவை.

2. அரோமாடிக அமினோ அமிலங்கள்: இவற்றுள் டைரோசின் (Tyrosine), தைராக்சின் (Thyroxin) என்பவை முக்கியமானவை.

3. பலவினச் சுற்று அமினோ அமிலங்கள்: இவற்றுள் டிரிப்டோபன் (Tryptophan), ஹிஸ்டிடின் (Histidine) என்பவை முக்கியமானவை.

4. கந்தகத்தைக் கொண்ட அமினோ அமிலங்கள்: இவற்றுள் சிஸ்டின் (Cystine) என்பது முக்கியமானது.

அமிலங்களில் உப்பினிகளை ஈடுசெய்து பெறப்படும் கூட்டுக்களை அம்மோனியாவுடன் வினைப்படுத்தி இவற்றைத் தயாரிக்கலாம். ஆல்டிஹைடுகளையும் கீடோன்களையும் ஹைடிரோசயனிக அமிலத்துடனும் அம்மோனியாவுடனும் வினைப்படுத்தி இவற்றைத் தயாரிப்பதுண்டு.

இயல்புகள்: இவை நீரிற் கரையும் படிகங்கள். இவை கரிமக் கரைப்பான்களிற் கரைவதில்லை. நைட்ரச அமிலத்துடன் இவை வினைப்பட்டு, நைட்ரஜனை வெளிவிட்டு ஆல்கஹாலைத் தோற்றுவிக்கும்.

இரு அமினோ அமிலங்களை ஒன்று சேர்த்து, முதலாவதன் கார்பாக்சிலிகத் தொகுதியும், இரண்டாவதன் அமினோ தொகுதியும் நீர் மூலக்கூற்றை அகற்றி ஒன்று கூடுமாறு செய்யலாம். இத் தொகுப்புவினை மிக முக்கியமானது. உதாரணமாக அலனின் என்ற அமிலமும், கிளைசீன் என்ற அமிலமும் பின்வருமாறு கூடி, அலனைல் கிளைசீன் (Alanyl Glycine) என்ற கூட்டை யளிக்கின்றன.

$$H_2N{\cdot}CH(CH_3)COOH + HHN\ CH_2COOH$$

அலனின் கிளைசீன்

$$H_2N.\ CH\ (CH_3){\cdot}\ CO.\ NH{\cdot}\ CH_2{\cdot}\ COOH$$

அலனைல்—கிளைசீன்


இவ்விரு பொருள்களின் கருக்களையும் CO-NH என்ற பெப்டைடு தொகுதி இணைக்கிறது. ஆகையால் இவ்வினை பெப்டைடு இணைப்பு எனப்படும். இவ்வகையில் பத்தொன்பது அமினோ அமிலங்கள் வரை இணைந்து நீண்ட சங்கிலிபோன்ற கூட்டுக்களை அளிக்கலாம். விலங்குகளிலும் தாவரங்களிலும் உள்ள புரோட்டீன்கள் சங்கிலிக் கூட்டுக்களேயாகும். தொகுப்பு முறையால் இத்தகைய இணைப்புகளைச் செய்து, பாலிபெப்டைடுகள் என்ற கூட்டுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை இயற்கைப் புரோட்டீன்களைப் பல பண்புகளில் ஒத்தவை. நீர்த்த தாது அமிலங்களுடன் இவற்றை நெடுநேரம் கொதிக்க வைத்தால், இவை மீண்டும் அமினோ அமிலங்களாக முறிகின்றன.

பாலிபெப்டைடுகளைத் தயாரிக்கப் பல முறைகள் வழங்குகின்றன. உப்பீனியேற்றிய கொழுப்பு எஸ்டரால் வினைப்படுத்தினால் தொகுப்பு விளைவு நிகழ்ந்து ஓர் எஸ்டர் தோன்றும். இதை நீர் முறித்து அம்மோனியாவுடன் வினைப்படுத்தினால் டைபெப்டைடு தோன்றும். இதை அமிலக் குளோரைடாக மாற்றி, மேற்கூறிய வகையிலேயே டிரைபெப்டைடு முதலிய பாலிபெப்டைடுகளாக மாற்றலாம். இவ்வகையில் பதினெட்டு அமினோ அமிலத் தொகுதிகள்வரை கொண்ட பாலிபெப்டைடுகளைத் தயாரிக்கலாம். பாலிபெப்டைடுகளின் தயாரிப்பை வெற்றிகரமாகச் செய்தவர்களில் எமில் பிஷர் என்ற அறிஞரும் ஒருவர். பாலிபெப்டைடு ஆராய்ச்சி, பிளாஸ்டிக்குகள், நைலான் போன்ற பல புதுப்பொருள்கள் தோன்ற உதவியுள்ளது.

நமது வயிற்றிலுள்ள என்சைம்கள் உணவிலுள்ள புரோட்டீன்களை இத்தகைய பெப்டைடுகளாக முறிக்கின்றன.

எஸ். ர.

**அமீபா** மிகவும் எளிமையான பிராணிகளில் ஒன்று. விலங்கு உலகத்தில் மிகத் தாழ்ந்த பிரிவாகிய புரோட்டோசோவா என்னும் ஓரணுப் பிராணித் தொகுதியைச் சேர்ந்தது. அமீபாவின் உடல் முழுவதும் ஓரே உயிரணுவால் ஆனது. அமீபாவை மைக்ராஸ்கோப்புக் கொண்டுதான் பார்க்க முடியும். வெறுங்




அமீபா

| | |
|---|---|
| 1. போலிக்கால் | 2. எக்டோபிளாசம் |
| 3. எண்டோபிளாசம் | 4. உட்கரு |
| 5. சுருங்கு குமிழி | 6. உணவுக் குமிழி |

கண்ணால் காணமுடியாது. ஆயினும் மிகப் பெரிய சாதி அமீபா நுண்ணிய தூசு போலத் தோன்றலாம். சாதாரண அமீபா ஓரங்குலத்தில் நூற்றில் ஒரு பங்கு குறுக்களவுடையது. அமீபாக்கள் நன்னீரிலும் கடலிலும் ஈர மண்ணிலும் வாழும். சில வகைகள் மனிதனுடைய உடலிலும் மற்றப் பிராணிகளுக்குள்ளும் வசிக்கின்றன. மனிதனுடைய குடலில் ஆறு ஏழு வகைகள் இருந்தாலும், அவை அங்குள்ள சிதைபொருள்களை யுண்டு வாழ்பவை. ஒரே ஒருவகைதான் ஒருவிதமான கொடிய சீதபேதி உண்டாவதற்குக் காரணமாக இருக்கிறது (பார்க்க: அமீபா சீதபேதி). அமீபாவின் உடலில் தலையோ, காலோ, கண்ணோ, வாயோ, வயிறோ, இப்படிப்பட்ட உறுப்பு ஒன்றுமே கிடையாது. ஒருவித

நிலையான வடிவமும் அதற்கில்லை. அதன் வடிவம் மெல்ல மெல்ல மாறிக்கொண்டேயிருக்கும். இவ்வளவு சிற்றுயிராயினும், பெரிய உயிர்களில் நிகழும் எல்லா உயிர்த் தொழில்களும் இதில் செவ்வனே நடைபெறுகின்றன. அமீபா, உயிர்ப்பொருளின் (Protoplasm) ஒரு நுண்ணிய துணுக்கு. இதன் மேற்பரப்பு தெளிவாகவும், உள்ளிருக்கும் பாகத்தைவிடச் சற்று உறுதியாகவும், மிக மெல்லிய சவ்வுபோலவும் இருக்கும். அது எக்டோபிளாசம் (Ectoplasm) எனப்படும். உள்ளிருப்பது சற்று நீர்த்தன்மை மிகுந்தும், மணல் மணலாகவும் தோன்றும். அது எண்டோபிளாசம் (Endoplasm) எனப்படும். மேற்பரப்பின் வழியாக அமீபா வாழும் நீரிலிருந்து பொருள்கள் உட்செல்லவும், உள்ளிருந்து பொருள்கள் வெளிவரவும் கூடும். ஆயினும் உயிர்ப்பொருள் மட்டும் இந்தச் சவ்வின் வழியாக வெளிவராது. இந்த உயிர்ப்பொருள்களுக்குள்ளே செரிமானமானவையும் ஆகின்றவையுமான உணவுப் பொருள்கள், எண்ணெய் நுண்துளிகள், படிகங்கள் எனப் பல நிறப்பட்ட வஸ்துக்கள் இருக்கும். எக்டோபிளாசமும் எண்டோபிளாசமும் சேர்ந்து சைட்டோபிளாசம் (Cytoplasm) எனப்படும். சைடோபிளாசத்தின் நடுவே சிறப்பான, உறுதியான, ஏறக்குறைய உருண்டையான, அடர்த்தி மிக்க ஒரு வஸ்து இருக்கிறது. அதுதான் உட்கரு (Nucleus). உட்கருவின்றி அமீபா உண்ணவோ, வளரவோ, இனம் பெருக்கவோ முடியாது. உயிருடனிருக்கும் அமீபாவில் தெளிவான, வட்டமான ஓரிடம் தெரியும். இதைக் கவனித்தால், இது சிறிதாகத் தோன்றி, மெல்லமெல்லப் பெரிதாகிப் பிறகு குமிழிபோல உடைந்துபோகும். திரும்பவும் அவ்வாறே தோன்றித்தோன்றி உடையும். இவ்வாறு தோன்றியும் உடைந்தும் வருவதைப் பார்த்தால், இருதயம் சுருங்கி விரிவதுபோலத் தோன்றும். இதற்குச் சுருங்கு குமிழி (Contractile vacuole) என்று பெயர். இவையன்றி அமீபாவின் எண்டோபிளாசத்தில், அது உணவாக உட்கொண்ட பொருள்களும், அவற்றைச் சுற்றிச் சிறிய நீர்த்துளியும் சேர்ந்து பெரியவும் சிறியவும் பல வடிவமுள்ளவுமான உணவுக் குமிழிகளைக் (Food vacuoles) காணலாம்.

அமீபாவுக்குக் காலில்லை. ஆயினும் அது நகர்ந்து செல்லும். அதன் உடலின் எந்த இடத்திலிருந்தாவது எக்டோபிளாசம் விரல்போன்ற ஒருபாகமாக முன்னுக்கு வரும். அப்படி நீட்டிக்கொண்டு வரும் பாகத்துக்குப் போலிக்கால் (Pseudopod) என்பது பெயர். இந்தப் போலிக்காலுக்குள்ளே எண்டோபிளாசம் நீரோடுவதுபோல ஓடுவதைக் காணலாம். போலிக்கால்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றுவதும், அவற்றினுள்ளே எண்டோபிளாசம் புகுவதுமாக அமீபா உருண்டுருண்டு முன் செல்லும். இதற்கு நிலையான முன், பின், மேல், கீழ், வலம், இடம் என்னும் பாகங்களில்லை. இப்படிப் போலிக்கால் நீள்வதினாலும், அதில் உட்பொருள் பாய்வதினாலும், உடலின் வடிவம் மாறிக்கொண்டே முன்செல்லும். இந்தவிதமான சலனத்திற்கு அமீபாயிடு இயக்கம் (Amoeboid movement) என்று பெயர். அப்படிப்பட்ட அமீபாயிடு இயக்கமுள்ள உயிரணுக்கள் நம்முடைய இரத்தத்தில் இருக்கும் வெள்ளணுக்களும், கட்டுத் திசுவிலுள்ள (Connective tissue) சில அணுக்களும் ஆகும்.

அமீபா தன் உணவை உட்கொள்ளுவதற்கும் போலிக்கால்களைப் பயன்படுத்துகிறது. உணவுப் பொருள்களைச் சுற்றிலும் போலிக்கால் பாய்ந்து, எல்லாப் பக்கங்களிலும் அதைச் சூழ்ந்து, அப்படியே உடலின் உள்ளே சேர்த்துக் கொள்ளுகிறது. உணவு அதன் தேகத்திற்குள் புகுகின்றது. அமீபாவின் உணவு நீரில் வாழும் டையாட்டம், பாக்டீரியா, வேறு புரோட்டோசோவா, தாவரத் துணுக்குகள், பிராணித் துணுக்குகள் முதலியனவாம். அமீபா ஒன்றையொன்று விழுங்கும் தன்னின முண்ணியென நினைக்கவும் இடமுண்டு. அமீபாவின் உணவிற் செரிமானமாகாத பகுதிகள், அது முன்னே நகர்ந்து செல்லும்போது பின்னால் விடப்படுகின்றன.




அமீபா
உணவுகொள் முறை

டயாட்டம் என்னும் ஓரணுப் பாசியை அமீபா தன் போலிக்கால்களாற் படிப்படியாக உட்கொள்வது.

அமீபா மூச்சு விடுவதற்கு வேண்டிய ஆக்சிஜனை உடம்பின் எந்தப் பாகத்தினாலும் உள்ளுக்கு எடுத்துக்கொள்ளும். அவ்வாறே எந்தப் பாகத்தினாலும் கார்பன்-டையாக்சைடும் மற்றக் கழிவுப் பொருள்களும் வெளிவரலாம். சுருங்கு குமிழி வழியாகவும் கழிவுப் பொருள்கள் வெளிப்படலாம். ஆயினும் அதன் முக்கிய தொழில், அமீபாவின் உடலில் சவ்வூடுபரவலால் (Osmosis) புகும் நீரை அளவுக்கு மிஞ்சாதபடி அப்புறப்படுத்திக் கொண்டே இருப்பதாம்.

அமீபா முழு வளர்ச்சியுற்றதும் இரண்டாகப் பிரிகிறது. முதலில் உட்கரு நீண்டு, நடுவிற் குறுகி இரண்டாகிறது. அதையொட்டி அதைச் சுற்றியிருக்கும் சைட்டோபிளாசமும் அவ்வாறே இடையில் குறுகி அவற்றோடு பிரிகிறது. ஓர் அமீபா இரண்டு குழந்தை அமீபாக்களாகிறது. அவை ஒவ்வொன்றும் முழு வளர்ச்சியுற்றுத் தாமும் அவ்வாறே பிரிகின்றன. இப்படி உணவு, வெப்பம், வானிலை முதலிய சூழ்நிலைகள் அனுகூலமாக இருக்கும்போது இந்த இரு பிளவு (Binary fission) முறையினாலே, அமீபா இனப்பெருக்கம் நடைபெறுகிறது. சூழ்நிலை ஏற்றதாக இல்லாதபோது, உதாரணமாக அது வாழும் நீர் வற்றிப் போகும்போது, அமீபா தன்னுடலைக் குறுக்கி உருண்டை வடிவாக்கிக் கொண்டு, அதன் மேலே ஒரு மொத்தமான தோல்போன்ற உறையை உண்டாக்கிக்கொள்ளுகிறது. அது அமீபாவின் கூடு (Cyst) எனப்படும். ஏற்ற சூழ்நிலை திரும்ப வரும்போது கூடு வெடித்து, அதனுள்ளிருந்து அமீபா வெளிவரும். சில சமயங்களில் அமீபா இரண்டாகப் பிளவுபடுவதற்குப் பதிலாகப் பலவாகப் பிளவு படுவதும் உண்டு. இங்குக் கவனிக்கத் தக்கது ஒரு சிறப்பான விஷயம். தாய் அமீபாவின் உடல் முழுவதும் இரண்டு குழந்தைகளாகப் பிரிந்துவிடுகிறது. ஒவ்வொரு குழந்தையும் வளர்ந்து, அப்படியே பிரிகிறது. இந்த அமீபா போன்ற உயிரிகளிலே தாயின் உடல் முழுவதுமே பிரிந்து குழந்தைகளாகி விடுவதால், இறந்து



அமீபா இனப்பெருக்கம்
(இரு பிளவு முறை)

ஓர் அமீபா படிப்படியாக இரண்டு மகவுகளாகப் பிரிவது. கரும்புள்ளி உட்கரு, வெண்மையான வட்டம் சுருங்கு குமிழி.

படக்கூடிய சாரம் ஒன்றும் இல்லை. இவற்றிற்கு ஆபத்துக்களால் சாவு ஏற்படுமே ஒழிய, இயற்கையான மரணம் என்பது இல்லை.

**அமீபா சீதபேதி** (Amoebiasis) அமீபா என்னும் ஒருவித ஓரணு வுயிரினத்தால் விளையும் நோய். இது உணவின் வழியாக மனித உடலுட் செல்லலாம். அல்லது அந்த நோயுள்ளவர்களின் மலத்திலுள்ள அமீபா மற்றவர்களுக்குப் பல வாயிலாக வந்து சேரலாம். சாதாரணமாக இந்த அமீபா, எச்சமயத்தில் அதற்குப் போதுமான அளவு, உணவு கிடைக்கவில்லையோ, அல்லது அதன் சூழ்நிலை அது உயிர்வாழ்வதற்கு ஏற்றதாக இல்லையோ, அச்சமயத்தில் ஒரு முட்டை வடிவமான உருவாகி, தன்னைச் சுற்றிலும் அழுத்தமான ஓடுபோன்ற உறையை உண்டாக்கி, அதற்குள் பொதிந்திருக்கும். இந்த விதமான உருவிற்குக் கூடு (Cyst) என்று பெயர். இந்தக் கூட்டின் மூலமாக நோய் எளிதாகப் பரவுகிறது. இது மலத்தோடு வெளிப்படும். அப்படி வெளிவந்திருக்கும்போது மலத்தில் ஈ உட்கார்ந்தால், கூடுகள் மலத்தோடு அதன் கால்களிலே ஒட்டிக்கொள்ளும். அந்த ஈ நமது உணவில் வந்து உட்காருமாயின், கூடுகள் அதில் சேரும். இத்தகைய உணவை உட்கொள்ளும் போது, அமீபாக்கூடும் நமது இரைப்பைக்குள் சென்றுவிடும். அங்கு அதன் மேலோடு கரைந்துவிடும். அதனுள்ளிருந்து நான்கு அமீபாக்கள் வெளியே வரும். வெளியே வந்ததும் குடலில் போய்ச் சேர்ந்து, அங்கே எளிதாகப் பெருகும். சாதாரணமாக இந்த அமீபா பெருங்குடல் வாயிலிலும் (Caecum), ஏறு குடலிலும் (Ascending colon) தங்கும். அப்படி அங்குத் தங்கிப் பெருகி, அதன் அருகில் இருக்கும் பாகங்களை அமீபா கரைத்துவிடுகின்றது. அப்படிக் கரைத்துவிட்டவுடன் குடலில் புண் ஏற்படுகிறது. புண் ஏற்படுவதால் இரத்தமும் சீதமும் மலத்தில் காணப்படுகிறது. பெருங்குடலின் தொடக்கத்தில் தோன்றிய நோய் பரவிச் சில சமயங்களில் குறுக்குக் குடலிலும் (Transverse colon), இறங்கு குடலிலும் (Descending colon) இந்தப் புண் காணும். ஆசனத்திற்கு அருகில் அமீபாவினால் புண் ஏற்பட்டிருந்தால் மலம் அடிக்கடி போகும். அதோடு வயிற்று வலியும் அதிகமாகும். குடலைப் பரிட்சை செய்தால், அதிலே குத்தினதுபோல் புண்கள் காணப்படும். ஒரு புண்ணிற்கும் மற்றொரு புண்ணிற்கும் நடுவில் இருக்கும் குடலில் வேக்காளம் காணப்படாது. ஆனால் புண்ணின் ஓரத்தில் குடைந்திருக்கும். அதாவது மேலே பார்ப்பதற்குப் புண் சிறியதாகக் காணப்பட்டாலும் அதன் ஓரமாகப் பார்த்தால் அடியில் குடைவாகக் கரைந்து போயிருக்கும் (Undermined edges). இந்தப் புண்களின் மத்தியில் கறுப்பு மயிர்களைப்போல் காணப்படலாம். இதையே டயாக் மயிர் உரி (Dyke hair sloughs) என்று சொல்வது. இந்தப் புண்களின் அடிப்பாகங்களில் அமீபா காணப்படும். பெருங் குடலின் ஆரம்பத்திலேயே புண்ணிருப்பதால், இந்த நோயில் மலம் அடிக்கடி போவதில்லை. ஒரு நாளைக்கு 4 அல்லது 5 முறைதான் மலப் பிரவிருத்தியாகும். இதில் மலம் அதிகமாகவும், சீதமும் இரத்தமும் குறைவாகவும் காணப்படும். சீதம் இருக்கும் பாகத்தை எடுத்துப் பரிட்சை செய்தால், அதிலே அமீபா காணப்படும்.

இந்த நோயுள்ளவர்களுக்குச் சில சமயங்களில் மலமே போகாமல் மலச்சிக்கலும் ஏற்படலாம். இந்த மலச் சிக்கல், குடலில் அமீபா இருப்பதால் உண்டானது என்று கண்டுபிடிப்பது கஷ்டம். தகுந்த முறையில் சிகிச்சை செய்யாவிட்டால், இந்த அமீபாவானது குடலின் சுவரைத் துளைத்துக்கொண்டு போய், அதற்கு வெளியே வந்துவிடலாம். அப்படி வருமாயின் குடலில் துவாரம் உண்டாவதால் அதிர்ச்சி (Shock) ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஆகலாம். அல்லது குடலின் சுவர்களிலே வெகுதூரம் போய் விடுவதால், எவ்வளவு சிகிச்சை செய்தும் வியாதி குணமாகாமல் இருந்துவரும். இந்த அமீபா குடலிலிருந்து இரத்தத்தின் வழியாக உடம்பின் பல பாகங்களுக்குச் சென்று, அந்தப் பாகங்களிலும் வியாதி ஏற்படக் காரணமாகிறது. சாதாரணமாகக் கள், சாராயம் முதலிய போதை வஸ்துக்கள் சாப்பிடுகிறவர்களுக்குக் கல்லீரலில் (Liver) பலம் குறைந்திருக்கும். அங்கே இந்த அமீபா வந்து சேருமாயின், ஈரலில் கட்டிகள் ஏற்படலாம். ஈரலினுடைய பலம் குறையாவிட்டால் கட்டிகள் ஏற்படுவதில்லை. ஆனால் ஈரலில் வேக்காளம் ஏற்பட்டுத் தானாகவே குணமடையும். இம்மாதிரியாகக் கட்டிகள், மண்ணீரல் (Spleen), நுரையீரல், மூளை, விதை ஆகியவற்றிலும் காணலாம். சில சமயங்களில் தோலிலேயும் உண்டாகும்.

நோய்க்குறி : மலம் நாலைந்து முறை ஒரு நாளைக்குப் போகிறது, அதோடு இரத்தமும் சீதமும் போகிறது, துர்நாற்றமும் அதிகமாகக் காணப்படுகிறது என்றால், அது அமீபாவினால் ஏற்பட்ட சீதபேதி என்று அறிய வேண்டும். மலத்தைப் பரிசோதித்து அமீபாவைக் கண்டுபிடிக்க வேண்டும். சாதாரணப் பரிட்சையில் மலத்திலே இது காணப்படாவிடினும், உப்புப் பேதிமருந்து கொடுத்துத் தண்ணீராகப் போகும் மலத்தைப் பரிட்சை செய்தால், அதிலே பெரும்பாலும் அகப்படும்.

சிகிச்சை : நோய் கண்டவுடன் நோயாளியைப் படுக்கையிலேயே வைத்திருக்க வேண்டும். எமெட்டின் (Emetine) என்னும் மருந்தை ஊசிபோடவேண்டும். ஆனால் இதில் சில அசௌகரியங்கள் உண்டு. நோயாளிக்குப் பலக்குறைவும் அசதியும் ஏற்படலாம். ஊசிபோட்ட இடத்தில் வலி அதிகமாக இருக்கலாம். நோயாளிக்குத் தாங்கக் கூடிய சக்தி இருந்தால் அயூரியோமைசின் அல்லது தெராமைசின் என்ற மருந்துகளை உபயோகப்படுத்தலாம். சிரத்தையுடன் சிகிச்சை செய்து, நோயைத் தொடக்கத்திலேயே கண்டிக்க வேண்டும். நோய் முழுவதும் செவ்வையாகும் வரையில் உணவில் காரம் இருக்கக் கூடாது. நோய் ஆரம்பத்தில் கஞ்சியை உணவாகக் கொடுப்பதே நல்லது.

ரெ. சு.


**அமீர் அலி** (1849-1928) பேர் பெற்ற இந்தியச் சட்டவியல் அறிஞர். பிரிவி கவுன்சில் நீதிபதியாக நியமனம் பெற்ற முதல் இந்தியர் (1909). முகம்மது நபி வமிசத்தினர் என்பர். பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். உயர் நீதிமன்றத்தின் முதல் முஸ்லிம் நீதிபதி. இஸ்லாம் குறித்து இவர் எழுதிய நூல்கள் சிறந்தவை. அவை ஆங்கில இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. இந்திய முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்காக உழைத்தவர். 1904லிருந்து இவர் இங்கிலாந்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

**அமீர் குஸ்ரு** (? — 1325) : இவர் அல்லாவுதீன் கில்ஜி, கியாசுதீன் துக்ளக் முதலிய முகம்மதிய மன்னர்கள் காலத்தில் டெல்லி சுல்தானுடைய அவைப்புலவராக இருந்த ஓர் அறிஞர். இவர் இயற்றியுள்ள துக்ளக் நாமா என்னும் நூலில் அக்காலத்திய மன்னர்களைப் பற்றிய வரலாறு காணப்படுகிறது. கியாசுதீனைப் பற்றி இந்நூல் புகழ்ந்து கூறுகின்றது. இவர் ஒரு முறை

மொகலாயர்களால் சிறைப்படுத்தப்பட் டிருந்தார்; அவர்களைப்பற்றி இவர் விவரித்துக் கூறியுள்ளது இவரது வருணனைத் திறனைக் காட்டுகிறது. இவர் ஏறத்தாழ 14 பாரசீகச் செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். இந்தியாவிலிருந்த பாரசீக மொழிப் புலவர்களில் இவரே தலைசிறந்தவர் எனலாம். தே. வெ. ம.

**அமீன் தீவுகள்** இலட்சத் தீவுகளில் வடக்குத் தொகுதியைச் சேர்ந்த ஐந்து தீவுகள். இவை கொங்கணக் கடற்கரையிலிருந்து மேற்கே சுமார் 200 மைல் தொலைவில் உள்ளன. இவை கடலின் கீழுள்ள பவளத்திட்டு ஒன்றன்மேல் அமைந்துள்ளன. இத் தீவுகளில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள். மிகப் பெரும்பான்மையோர் பேசும் மொழி மலையாளம். தென்னைச் சாகுபடியும், நார் உற்பத்தியும் இங்கு நடைபெறும் முக்கியமான தொழில்கள். இவை தென் கன்னட மாவட்டத்தின் நிருவாகத்தில் உள்ளன. பரப்பு: 3 சதுர மைல். மக்: 7,043 (1951).

**அமுக்கிரா** (அசுவகந்தி) சற்றுப் பெரிய சிறு செடி, புதர். அகன்று அண்டை வடிவமான இலையுள்ளது. கொத்துக் கொத்தாகப் பூ இருக்கும். சிறிய



1

2

அமுக்கிராச் செடி

1. பூவின் பாகங்கள், 2. கனியின் குறுக்கு வெட்டு (சூல் ஒட்டைச் சுற்றி விதைகள்).

உருண்டையான தக்காளிபோன்ற சிவப்புக் கனி விடும். புல்லி வட்டம் வளர்ந்து ஒரு கூடுபோலக் கனியைச் சுற்றி மூடியிருக்கும். வேர் தடித்துச் சதையுள்ளதாக இருக்கும். பயிரிடாத இடங்களிலும் பாழிடங்களிலும் வயல் வரம்புகளிலும் இது முளைத்திருக்கும். இலையும், விதையும் முக்கியமாக வேரும் மருந்துக்குதவும். அசுவகந்தி லேகியம் புகழ்பெற்ற உடல் வன்மை தரு மருந்து.

குடும்பம்: சோலனேசீ (Solanaceae). இனம்: வைத்தானியா சோம்னிபெரா (Withania somnifera).

**அமுதசுரபி** மணிமேகலை என்னும் தமிழ் நூலில் சொல்லப்படுகிறது. தென்மதுரையில் கலா நியமத்துள்ள சிந்தாதேவியால் ஆபுத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வத் தன்மையுள்ள பாத்திரம். எடுக்க எடுக்கக் குறையாத அன்னமுடையது. இதைக்கொண்டு ஆபுத்திரன் உயிர்களது பசிப்பிணியைப் போக்கி வந்தான். அவன், வாழ்வோர் யாருமில்லாத மணிபல்லவத் தீவில் சேர்ந்தபோது பிற உயிர்களைக் காக்கும் பாத்திரத்தைக் கொண்டு தன்னுயிரை மட்டும் காக்க விரும்பாதவனாய், அதைக் கோமுகி என்னும் பொய்கையில் விட்டு விட்டு உயிர் துறந்தான். அப்பால் அது அந்தத் தீவுக்கு வந்த மணிமேகலை கையில் சேர்ந்தது. அவள் காவிரிப்பூம்பட்டினம் வந்து, துறவுக்கோலம் பூண்டு, அதைக் கையிலேந்தி, ஆதிரை என்னும் கற்பிற் சிறந்தவளிடம் முதலிற் பிச்சை ஏற்றனள். அவள், 'உலகமெங்கும் பசிப்பிணி நீங்குக' என அதில் பிச்சை இட்டனள். அதிலிருந்து ஒரு பிடி சோறு வாங்கியுண்டு, காயசண்டிகை என்னும் விஞ்சையர் பெண்ணொருத்தி தனக்கிருந்த தீராப் பசி நோய் தீர்ந்தனள். பின்னர் மணிமேகலை, உலகவறவி யென்னும் ஊரம்பலம் சேர்ந்து, பலருக்கும் பசிப்பிணியைப் போக்கி வந்தாள்.

பாரதக் கதையில், வனவாச காலத்திலே பாண்டவர்கள் தங்களோடிருந்த பன்னீராயிரம் பிராமணர்களுக்கு உணவு கொடுக்கும்படி கதிரவனாற் கொடுக்கப்பட்ட அட்சய பாத்திரமும் இவ்வகையைச் சேர்ந்ததே.

**அமெரிக்க இயற்கை விஞ்ஞானப் பொருட்காட்சிச் சாலை** (American Museum of Natural History) நியூயார்க்கில் இருப்பது. உயிரியல் அறிவை வளர்த்தற்கென்று 1869-ல் நிறுவப் பெற்றது. பன்னிரண்டு விஞ்ஞானப் பகுதிகளுள்ளது. பெரிய நூல் நிலையமுண்டு. கல்விப் பகுதியும் வெளியீட்டுப் பகுதியும் உண்டு. ஹேடன் பிளானெட்டேரியம் (Hayden planetarium) என்னும் விண் பொருட் காட்சி நிலையமும் இதன் பார்வையில் நடைபெறுகிறது. இந்தச் சாலையில் பல அரிய பாசில்களும், பறவை, மீன் முதலியவைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை இயற்கையாக வாழும் சூழ்நிலைகளில் இருப்பதேபோல் அமைக்கப் பெற்றிருக்கும் காட்சிகள் மிகச் சிறந்தவை. மனிதனுடைய பழஞ்சரிதையை யுணர்த்தும் காட்சிப் பொருள்களும் இருக்கின்றன.

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்:** இருப்பிடமும் பரப்பும்: இது உலகிலேயே ஒரு மிகப் பெரிய இராச்சியம்; பரப்பு: 35,58,850 சதுர மைல்கள்; வட அமெரிக்காக் கண்டத்தின் மித சீதோஷ்ண மண்டலத்தில் அமைந்துள்ளது; வடக்கே கானடாவும்,



பிளாரிடா ஆறு

உதவி: அ. ஐ. நா. செய்தி இலாகா, சென்னை.

தெற்கே மெக்சிகோவும், லத்தீன் அமெரிக்காவும். கீழ்ப்புறம் அட்லான்டிக் சமுத்திரமும், மேல்புறம் பசிபிக் சமுத்திரமும் உள்ளன.

முக்கிய இயற்கை அமைப்புக்கள் மூன்று: (1) மேற்கு மலைத்தொடர்கள், (2) இடையே யுள்ள தாழ்நிலங்களோடு கூடிய சமவெளிகள், (3) அப்பலேச்சிய மலைகள். மேற்கு மலைத்தொடர்கள்: பசிபிக் மலைத் தொடர்களும், ராக்கிமலைத்தொடர்களும், இவற்றி னிடையே உள்ள மலையிடைப் பீடபூமிகளும் கூடியவை. அப்பலேச்சிய மலைத்தொடர்கள் அட்லான்டிக் கரையை யடுத்துச் செல்லும் மடிப்பு மலைகளாம். வடக்கே ஐக்கிய நாடுகளுக்கும் கானடாவிற்கும் இடையே பெரிய ஏரிகள் இருக்கின்றன. இடைப்பட்ட தாழ்நிலங்கள் வழியே மிசிசிப்பி-மிசௌரி ஆறு அதன் உபநதிகளோடு கலந்து,தெற்கு நோக்கிப் பாய்ந்து,மெக்சிகோ வளைகுடா வில் கலக்கின்றது. ராக்கி மலைத்தொடருக்கு மேல்புற மும், அப்பலேச்சியனுக்குக் கிழ்ப்புறமும் பல சிறு ஆறு கள் ஓடுகின்றன. செசபிக், டெலாவேர் விரிகுடாக்கள் சமீப காலத்தில் நிலம் மூழ்கி ஏற்பட்ட நீர்ப்பரப்புகள் என்று கருத இடம் உண்டு.

சீதோஷ்ண நிலை: அ. ஐ. நாடுகளில் பல சீதோஷ்ண வகைகள் உண்டு. 1. வடமேற்கில் மழை மிகுதியான குளிர்ந்த மித சீதோஷ்ணப் பகுதி. 2. காலிபோர்னியா வில் குளிர்கால மழையுடைய மத்தியதரைச் சீதோஷ்ண மண்டலம். 3. மலையிடை நிலங்களில் பாலைவனச் சீதோஷ்ணம். 4. இருபது அங்குலத்திற்குக் குறைந்த மழை பெய்யும் உள்நாட்டு மித சீதோஷ்ண நிலை. 5. தென்கிழக்குப் பகுதியில் 32° பா. க்குக் குறையாத வெப்பநிலையையுடைய வெப்பச் சீதோஷ்ண மண்டலம். 6. வட கிழக்கே, 20°க்கு மேற்பட்டு மழை பெய்யும் பகுதி. இப் பகுதியில் நாள்தோறும் சீதோஷ்ண நிலை மாறுபடுகிறது.

இயற்கைத் தாவரங்கள்: இங்குள்ள முக்கியமான காடுகளில் கிழக்குப் பகுதி அப்பலேச்சிய மலைகள்



நயாகரா நீர்வீழ்ச்சி

உதவி : அ. ஐ. நா. செய்தி நிலையம், சென்னை.

மீதும், மேற்குப் பகுதி ராக்கி மலைகள் மீதும் இருக் கின்றன. இவற்றிடையே யுள்ள சமவெளி மத்திய புல் வெளிப் பிரதேசம்; கிழைப் பிரதேசத்தில் இருந்த இலையுதிர்காடுகளைப் பெரும்பாலும் அழித்துவிட்டனர்



அமெரிக்க உச்ச நீதிமன்றம்—வாஷிங்டன்

உதவி : அ. ஐ. செய்தி நிலையம், சென்னை.

கள்; மேலைப்பிரதேசத்தில் உள்ள காடுகளை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. இவை டக்ளஸ் பெர் (Douglas Fir), ஹெம்லாக் (Hemlock), செம்புச் சிடார் (Red Cedar) முதலிய பயன்படும் பெருமரங்கள் அடர்ந்த

ஊசியிலைக் காடுகள். பிரேயரிகளில் நெடும்புல் வகைகளும் மேலைச் சமவெளிகளில் குறும்புல் வகைகளும் காணப்படும். பாலை நிலங்களில் வளர்ச்சி குறைந்த சேஜ் பிரஷ் (Sage Brush) போன்ற புதர்களே காணப்படுகின்றன.

### மக்கள் தொகை விவரம்

| ஆண்டு | மக்கள் தொகை (ஆயிரக் கணக்கில்) | | | |
|---|---|---|---|---|
| | வெள்ளையர் | நீக்ரோக்கள் | பிறர் | மொத்தம் |
| 1900 | 66,809 | 8,834 | 351 | 75,995 |
| 1910 | 81,732 | 9,828 | 413 | 91,972 |
| 1920 | 94,821 | 10,463 | 427 | 1,05,711 |
| 1930 | 1,10,287 | 11,891 | 597 | 1,22,775 |
| 1940 | 1,18,215 | 12,866 | 589 | 1,31,669 |

1950-ல் மதிப்பிட்டபோது மக்கள் தொகை சுமார் 1540 இலட்சம்; மக்கள் தொகைச் செறிவு சதுர மைலுக்கு 43 பேர். இந்நாட்டு மக்களில் 1880-ல் 28.6 % ம், 1910-ல் 45.8 % ம், 1920-ல் 51.4 % ம், 1940-ல் 56.5 % ம் நகரங்களில் வசித்தனர். மொத்த மக்கள் தொகையில் 4/5 பங்கு கிழக்குப் பாகத்தில் வசிக்கின்றனர். சதுர மைலுக்கு 120 பேர் அடங்கியுள்ள வட கிழக்குப் பிரதேசம் உலகிலேயே மிக அடர்த்தியான மக்கள் தொகையுள்ள பெரும் பாகங்களில் ஒன்று. நியூயார்க் (மக்: 78,35,000) மிகப் பெரிய பட்டணம். சிக்காகோ (மக்: 36,06,000) பல தொழிற்சாலைகளடங்கிய ஒரு பெரிய ரெயில்வே நிலையம். பிலடெல்பியா (மக்: 20,64,794); லாஸ் அஞ்ஜலிஸ் (மக்: 19,57,692); டெட்ராய்ட் (மக்: 18,38,517) முதலியவை பிற முக்கியமான நகரங்கள். தலைநகர் வாஷிங்டன்.

விவசாயம்: 20'' வருடாந்தர சமமாரிக்கோடு இந்நாடுகளை இரண்டாகப் பிரிக்கிறது. விளைநிலங்களில் 9/10 பங்கு மழை மிகுந்த கிழக்குப் பகுதியில் அடங்கி யிருக்கிறது. கிழக்குப்புறத்தில் தெற்கே கடற்கரையை அடுத்துக் கரும்பும் நெல்லும் விளையும் நிலங்களும், வடக்கே பருத்தி, சோளம், கோதுமை விளையும் நிலங்களும் முறையே காணப்படும். மேல் புறத்தில் மலைச்சரிவுகளில் மேய்ச்சல் நிலங்களும், பழ வகை பயிரிடப்படும் பசிபிக் கரையோரப் பிரதேசங்களும் அமைந்துள்ளன.

உலகின் மக்காச் சோளப் பயிரில் 3/4 பங்கு அமெரிக்காவிலேயே விளைகிறது. பெரிய ஏரிகளுக்குத் தெற்கிலும் தென்மேற்கிலும் உள்ள பிரதேசம் முழுவதிலும் இச் சோளம் விளைகிறது. விளைவில் 80—90 % கோழி, பன்றி, பசுக்களின் உணவாகப் பயன்படுவதால் இப் பிரதேசத்தில் அவைகள் மிகுந்திருக்கின்றன. மக்காச் சோளம் பயிராகும் பிரதேசத்திற்கும் பருத்தி பயிராகும் பிரதேசத்திற்கும் இடையே கோதுமை பயிராகிறது. பருத்தி விளைச்சல் அமெரிக்காவில் மிகுந்ததற்குக் காரணம், அங்குள்ள நீக்ரோக் கூலியாட்கள் மலிவாகக் கிடைப்பது தான். அ. ஐக்கிய நாடுகளில் 155 இலட்சம் பேல் பருத்தி (உலக உற்பத்தியில் 60%) உற்பத்தி செய்யப்படுகிறது.

1949-50-ல் அ. ஐ. நாடுகளின்
உணவு தானியங்களின் நிலை

| உணவு தானிய வகை | 1949-ல் | 1950-ல் |
|---|---|---|
| | விளை நிலப் பரப்பு (மில்லியன் ஏக்கர்கள்) | விளைவின் மதிப்பு (மில்லியன் புஷல்கள்) |
| மக்காச் சோளம் | 86·7 | 3131 |
| கோதுமை | 76·8 | 1027 |
| ஓட்ஸ் | 40·6 | 1465 |
| ரை | 1·6 | 23 |
| பார்லி | 9·9 | 301 |
| சோயா அவரை | 9·9 | 287 |

அ. ஐக்கிய நாடுகளில் 610 இலட்சம் மாடுகள் இருக்கின்றன. ரோமத்திற்காக 500 இலட்சம் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இவையன்றி, 370 இலட்சம் பன்றிகளும், 40 கோடி கோழிகளும் உண்டு (1950).

மீன் பண்ணைகள்: அ. ஐ. நாடுகளில் உள்ள மீன் பண்ணைகள் உலகிலேயே மிக முக்கியமானவை. 1. அட்லாண்டிக் மீன் பண்ணைகளில் காட், ஹாடக், ஹாலிபட் முதலிய வகை மீன்கள் கிடைக்கின்றன. 2. பெரிய ஏரி மீன் பண்ணைகளும் 3. சாமன் (Salmon) மீன் விசேடமாகக் கிடைக்கும் பசிபிக் மீன் பண்ணைகளும் குறிப்பிடத்தக்கவை.

தாதுப் பொருள்கள்: அ. ஐ. நாடுகளில் உலகிலேயே மிக அதிகமாக நிலக்கரி உற்பத்தியாகிறது. அப்பலேச்சிய நிலக்கரிக் கனிகளில் நாட்டு உற்பத்தியில் 75% கிடைக்கிறது. உலகப் பெட்ரோலிய உற்பத்தியில் 60% இந்நாடுகளில் கிடைக்கிறது. இந்நாடுகளில் உள்ள எண்ணெய்க் கிணறுகள் விரைவில் வற்றிப்போவதால் அமெரிக்கா இப்பொழுது எண்ணெய் இறக்குமதி செய்யவும் தொடங்கியுள்ளது. அமெரிக்க எண்ணெய்க் கிணறுகளின் சராசரி வயது 7 ஆண்டுகளே. சுபீரியர் ஏரியை யடுத்த பிரதேசங்களில், நாட்டில் எடுக்கும் இரும்பில் 80% கிடைக்கிறது. சிலி, சுவீடன் நாடுகளிலிருந்தும் இரும்புத் தாது இறக்குமதி யாகிறது. அலுமினியம், வெள்ளி, காரீயம், துத்தநாகம், செம்பு முதலானவையும் அ. ஐ. நாடுகளிலேயே மிக அதிகமாகக் கிடைக்கின்றன.

அ. ஐக்கிய நாடுகளில் 110 இலட்ச கிலோவாட் நீர் மின்சாரசக்தி உருவாக்கப்படுகிறது. இது உலக உற்பத்தியில் 1/3 பங்கு.

செய் தொழில்கள்: இரும்பு, எஃகு உற்பத்தி இங்கு மிகவும் முக்கியமானது. உலக எஃகு உற்பத்தியில் 40% இங்கு உண்டாகிறது; அடுத்தபடியாக, நெசவுத் தொழில் மிக முக்கியமாக நடைபெறுகிறது.

போக்குவரத்து: 2,43,000 மைல் நீளமுள்ள ரெயில்வேக்கள் (உலக ரெயில்வேக்களின் நீளத்தில் 45%) அ. ஐ. நாடுகளில் இருக்கின்றன. இவற்றுள் கண்டங் கடக்கும் ரெயில்வேக்கள் சிறப்பானவை. ஏராளமான கான்கிரீட் சாலைகள் இருக்கின்றன. பெரிய ஏரிகளும், மிசிசிப்பி-மிசௌரியும் உள்நாட்டுப் போக்குவரத்திற்கு மிகவும் பயன்படுகின்றன. எல்லா முக்கியப் பட்டணங்களுக்கும், கானடாவிற்கும், தென் அமெரிக்காவிற்கும், அட்லான்டிக் பசிபிக் சமுத்திரங்களைக் கடப்பதற்கும்

விமானப் போக்குவரத்து ஏற்பட்டுள்ளது. அ. ஐ. நாடுகளுக்குப் பட்டு (ஜப்பான், சீனா), தேயிலை (ஜப்பான், இந்தியா), சணல், தோல் (இந்தியா), ரப்பர், வெள்ளீயம் (மலேயா), கம்பளியிழை (ஆஸ்திரேலியா), காகிதம் (கானடா), சுகபோகப் பொருள்கள் (ஐரோப்பா) முதலியவை இறக்குமதி யாகின்றன. பருத்தி, புகையிலை, கார்கள், எஃகு செய் பொருள்கள் முதலியவை விசேடமாக ஏற்றுமதியாகின்றன. ஏ. சீ.

**வரலாறு :** 17ஆம் நூற்றாண்டில் வட அமெரிக்காவில் பிரெஞ்சு, ஸ்பானிய, ஆங்கிலேய, சுவீடிஷ், டச்சு மக்கள் ஏற்படுத்திய குடியேற்றங்களிற் சில பிற்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளாகப் பரிணமித்தன. சுவீடிஷ், டச்சுக் குடியேற்றங்கள் 17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலேயர்கள் வசமாயின. I-ம் எலிசபெத் அரசியின் காலத்தில் முதல் முதல் ஆங்கிலக் குடியேற்றங்கள் அமெரிக்காவில் தோன்றலாயின. சர் ஹம்பிரி கில்பர்ட் என்பவர் 1583-ல் நியூபவுண்டுலாந்தில் ஒரு குடியேற்றம் நிறுவ முயன்றது பயனின்றிப் போயிற்று. கில்பர்ட்டின் சகோதரரான சர் வால்ட்டர் ராலி 1584-ல் நியூபவுண்டுலாந்திற்குத் தெற்கே ஏற்படுத்திய குடியேற்றத்தை யொட்டி, 1585-ல் வர்ஜீனியா என்னும் குடியேற்றத்தை நிறுவினர். அமெரிக்கக் குடியேற்றக்காரர்கள் தொடக்கக் காலங்களில் அமெரிக்க ஆதிக்குடிகளான செவ்விந்தியர்களோடு போர்புரிந்து, தங்கள் குடியேற்றங்களைக் காத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

I-ம் எலிசபெத் காலத்தில் நிரந்தரமான குடியேற்றம் ஒன்றும் நிறுவப் படவில்லையாயினும், I-ம் ஜேம்ஸ் காலத்தில் அரசனுடைய சாசனம் பெற்று, வர்ஜீனியா கம்பெனி என்று ஒன்று 1606-ல் ஏற்பட்டது. 1609-ல் அக் கம்பெனிக்கு மிகுதியாக அதிகாரம் அளிக்கப்பட்டது. புகையிலை பயிரிடுவதும், கூலிக்கு அடிமைகளை ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதும், அப்பொழுது ஏற்பட்ட பழக்கங்கள். 1619-ல் வர்ஜீனியக் குடியேற்றத்தில் பிரதிநிதி சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. 1623 லிருந்து அக் கம்பெனியின் சாசனம் மாற்றியமைக்கப்பட்டுக் கவர்னரை நியமிக்கும் அதிகாரத்தை ஆங்கில அரசாங்கமே மேற்கொண்டது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் இருந்த அரசியல் முறை இங்கிலாந்தில் இருந்ததைவிட முற்போக்காயிருந்தது. ஏனெனில் 19ஆம் நூற்றாண்டு வரையில் இங்கிலாந்தில் வாக்குரிமை நிலை திருந்தவில்லை. ஆயினும் குடியேற்றங்களில் முதலிலிருந்தே பெரும்பாலோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு வந்தது.

I-ம் சார்லஸ் காலத்தில் அவன் மனைவி ஹென்ரிட்டா மேரியா பெயரால் மேரிலாந்து குடியேற்றம் தாபிக்கப்பட்டது. அக்குடியேற்றத்தின் உரிமைகளைச் சர் ஜார்ஜ் கால்வர்ட் என்னும் தனி மனிதருக்கு இங்கிலாந்து மன்னர் அளித்தார்.

17 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இங்கிலாந்தில் பியூரிட்டன் சமயப் பற்றுள்ளவர்களுக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. அவர்களிற் பலர் தங்கள் தாய்நாட்டை விட்டுச் சென்று குடியேறுவதென்று தீர்மானித்தனர். 1620-ல் யாத்திரைப் பெரியார்கள் (The Pilgrim Fathers) மே பிளவர் (May-flower) என்னும் கப்பலிற் புறப்பட்டு, வட அமெரிக்காவை யடைந்து, பிளிமத்தில் குடியேறினர். இந்தக் குடியேற்றம் பிறகு மசசூசிட்ஸ் இராச்சியத்தில் அடங்கிவிட்டது.

குடியேறியவர்கள், காடு செறிந்த வட அமெரிக்கப் பிரதேசத்தில் மிகவும் உழைத்துக் காடழித்து நாடாக்கி வேளாண்மைக்குத் தக்கதாக நிலத்தைப் பண்படுத்தி, நிலத்தினால் வரும் வளங்களைப் பெற வேண்டிய நிலையில் இருந்தனர்.

மசசூசிட்ஸ் இராச்சியத்திற்குக் கவர்னரைத் தானே நியமித்துக்கொள்ளும் உரிமையும் பிரதிநிதிசபை ஒன்றும் ஏற்பட்டன. இந்த இராச்சியத்திலிருந்து சிலர் கனெக்டிகட் ஆற்றின் வழியே சென்று, கனெக்டிகட் குடியேற்றத்தை நிறுவினர். மசசூசிட்ஸ் ஆட்சி முறையில் அதிருப்தியடைந்த ரோஜர் வில்லியம்ஸ் ரோடு தீவு (Rhode Island) குடியேற்றத்தை நிறுவினர். அக்குடியேற்றத்தில் பூரண சமயப் பொதுநோக்கு இருந்தது. நியூ ஹாம்ப்ஷயர், மெயின் ஆகிய இரு குடியேற்றங்களும் மசசூசிட்ஸிலிருந்து பிரிந்து ஏற்பட்டவை. மெயினிலிருந்து கனெக்டிகட்வரை இருந்த குடியேற்றங்களுக்கு நியூ இங்கிலாந்து குடியேற்றங்கள் என்று பெயர். இங்குக் குடியேறியவர்கள் கல்வியிலும் தொழில் ஆற்றலிலும் சிறந்தவர்கள். சரிவரப் பயன் படுத்தப்படாத நிலங்களைப் பயிரிட்டுப் பயன்படுத்த வேண்டியிருந்த நிலையில், சுதேசிகளுடைய பகைமையையும் அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. எல்லைப்புறங்களில் சுதேசிச் செவ்விந்தியர்களுக்கும் குடியேறிய வெள்ளையர்களுக்கும் நடந்த பல சண்டைகளில் சுதேசிகள் தோற்றுப் போனதால், அவர்கள் மேலும் மேலும் மேற்கு நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

நியூ இங்கிலாந்து குடியேற்றங்களில் இருந்த வாழ்க்கை முறையும் தென் குடியேற்றங்களில் இருந்த வாழ்க்கை முறையும் வேறுபட்டிருந்தன. நியூ இங்கிலாந்து குடியேற்றங்களுடைய சீதோஷ்ண நிலை ஏறத்தாழ இங்கிலாந்தைப் போலவே இருந்தது. ஆகையால் இங்கிலாந்தில் உற்பத்தியான பொருள்களைவிட அதிகமாக ஒன்றும் அங்கு உற்பத்தியாகவில்லை. ஆனால் வர்ஜீனியாவிலும் மேரிலாந்திலும் புகையிலை முதலிய வெப்பப் பிரதேசத்துப் பயிர்களும் விளைந்தமையாலும் அவ்விளைபொருள்கள் ஐரோப்பாவில் விலைபோயினமையாலும் தென் குடியேற்றங்கள் பொருளாதார முறையில் அதிக இலாபகரமானவையாகக் கருதப்பட்டன.

1641-ல் நியூ இங்கிலாந்து குடியேற்றங்கள் சேர்ந்து ஒரு நாட்டுக் கூட்டத்தை அமைத்துக்கொண்டன; இவ்வமைப்பு 1643-ல் நன்கு வளர்ச்சியுற்றது. மசசூசிட்ஸ், பிளிமத், கனெக்டிகட், நியூ ஹேவன் என்னும் நாடுகள் இதில் சேர்ந்துகொண்டன. ரோடு தீவும் மெயினும் நீக்கப்பட்டன. இக்கூட்டத்தில் மசசூசிட்ஸே முக்கியமாக இருந்தது. செவ்விந்திய, பிரெஞ்சுத் தாக்குதல்களை எதிர்க்கவும், இங்கிலாந்தின் ஆதிக்கத்தைக் குறைக்கவும் இந்தக் கூட்டம் ஏற்பட்டது. ஆயினும் 17ஆம் நூற்றாண்டிறுதியில் இது கலைந்துவிட்டது.

1621-ல் நிறுவப்பட்ட டச்சு மேற்கிந்தியக் கம்பெனி ஏற்படுத்திய குடியேற்றங்கள், நியூ ஆம்ஸ்டர்டாம், நியூ ஜர்சி, டெலவேர் என்பவை. இக்கம்பெனி முதலில் நிறுவிய குடியேற்றம் ஆரஞ்சுக்கோட்டை என்பது. 1626-ல் மான்ஹாட்டன் தீவு சுதேசிகளிடமிருந்து விலைக்கு வாங்கப் பெற்றது. ஆங்கிலக் குடியேற்றங்களும் டச்சுக் குடியேற்றங்களும் அடுத்தடுத்திருந்தமையால் அவைகளுக்குள் சண்டை மூண்டது. 1667-ல் ஏற்பட்ட பிரேடா (Breda) உடன்படிக்கைப்படி நியூ ஆம்ஸ்டர்டாம், நியூ ஜர்சி, டெலவேர் ஆகிய மூன்று குடியேற்றங்களும் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாயின. டச்சுக்காரர்களது நியூ ஆம்ஸ்டர்டாம் நியூயார்க் என்று பெயர் பெற்றது.

1681-ல் வில்லியம் பென் பென்சில்வேனியா குடியேற்றத்தை நிறுவினர். அதற்கு ஒரு கவர்னர் நிய

மிக்கப்பட்டு, நிருவாக சபையும், சட்ட சபையும் சண்டைகளைத் தவிர்க்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு நிறுவப்பட்டன. சுதேசிகளோடு போர்புரியக் கூடாது என்று அவர்கள் தீர்மானித்தனர். இங்கு வேளாண்மை, சுரங்கத் தொழில், சில கைத்தொழில்கள் முதலியவை முன்னேற்றமடைந்தன. 1663-ல் II-ம் சார்லஸ் தென் வர்ஜீனியா பிரதேசத்தில் ஒரு குடியேற்றம் நிறுவுவதற்காகச் சிலருக்கு அனுமதியளித்தார். அவர்கள் தென், வட கரோலினுக்களை நிறுவினர். வட கரோலினாவைவிடத் தென் கரோலினா மிக விரைவில் பல வகையிலும் முன்னேறிற்று. 1786-ல் சுதேசிகளுக்கும் தென் கரோலினக்காரர்களுக்கும் சண்டை மூண்டது. அதில் குடியேறியவர்கள் வெற்றி பெற்றனர். 1719-ல் சட்ட சபை கவர்னரை நீக்கி விட்டுத் தானே கிரௌன் குடியேற்றம் என்கிற முறையில் நிருவாகம் நடத்த விரும்பியதை லண்டன் அரசாங்கம் எதிர்க்கவில்லை. 1732-ல் ஜெனரல் ஒகல்தார்ப் (Oglethorpe) என்பவரால் ஜார்ஜியா நிறுவப்பட்டது. இங்கிலாந்தில் கடன்பட்டுப் பிழைக்க வழியற்றுப் போனவர்களுக்கு ஒரு வழி செய்ய விரும்பியே இக்குடியேற்றம் நிறுவப்பட்டது. ரம் என்னும் சாராய விற்பனையும், நீக்ரோ அடிமை வியாபாரமும் இங்குத் தடை செய்யப்பட்டன. ஆயினும் சிலகாலம் கழித்து இக் குறிக்கோள்கள் மறந்துபோகவே, அடிமைகளைக் கொண்டு வேளாண்மை நடத்தும் முறை பயிற்சியில் வந்துவிட்டது.

ஸ்பானியர்களும், போர்ச்சுகேசியர்களும் நிறுவிய அமெரிக்கக் குடியேற்றங்களைப்போலத் தாங்களும் நிறுவ வேண்டும் என்று விரும்பிய ஆங்கிலேயர்கள் பொன் முதலிய விலையுயர்ந்த உலோகங்கள் வட அமெரிக்காவில் மிகுதியாகக் கிடைக்கும் என்று கருதியே இத்துறையில் இறங்கினர். ஆயினும் செழிப்பு மிகுந்த ஒரு கண்டத்தின் ஒரு பகுதி தங்கள் கையில் அகப்பட்டுவிட்டதால், அதைக் கைவிட அவர்கள் விரும்பவில்லை. அட்லான்டிக் சமுத்திரத்தைக் கடந்து, குடியேற்ற நாடுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியிருந்ததால், கப்பல் வாணிபமும் நாவாய் கட்டும் கலையும் இங்கிலாந்தில் வளர்ச்சியடைந்தன.

மேற்கூறிய குடியேற்றங்கள் நிறுவப்பட்ட காலத்திலிருந்தே அவை இங்கிலாந்தின் ஆதரவையும் பாதுகாப்பையும் எதிர்பார்த்தே நின்றன. தாய்நாட்டுச் செல்வம் ஏராளமாகச் செலவழிக்கப்பட்டு, இக்குடியேற்றங்கள் நிறுவப்பட்டன; அன்றியும் தாய்நாட்டுத் துருப்புக்கள் இக்குடியேற்றங்களின் பாதுகாப்பிற்குத் தேவையாயிருந்தன. தூர நாடுகளில் குடியேற்றங்களை நிறுவுவதிற் செலவாகும் பணத்தை, அக்குடியேற்றங்களோடு செய்யும் வியாபார மூலம் இலாபமாகத் திரும்பப்பெறும் ஏகாதிபத்திய முறையில் தவறு ஒன்றுமில்லை என்று அக்காலத்தவர்கள் நினைத்தார்கள். ஆயினும் அமெரிக்கக் குடியேற்றங்கள் இங்கிலாந்திலிருந்து ஆயிரம் மைல் தொலைவில் இருந்ததால் சமாசாரப் போக்குவரத்திற்குச் சாதாரணமாகக் குறைந்தது மூன்று மாதம் பிடித்தது. ஒவ்வொரு விஷயத்திற்கும் இங்கிலாந்தைக் கேட்டே நடப்பது இயலாத காரியமாயிருந்தது. ஆகையால் குடியேற்றங்கள் பெரும்பாலும் தங்கள் விவகாரங்களைத் தாங்களே கவனித்துக்கொண்டு வந்தன. ஆயினும் வியாபாரமும் அரசியல் மேலதிகாரமும் தாய்நாட்டிற்கே இருந்துவந்தன.

தொடக்கத்தில் தனியாள் உரிமை வழங்கப்பட்டிருந்த பட்டயங்கள் மூலம் குடியேற்றங்கள் ஒவ்வொரு தனி மனிதருக்கோ, அன்றிக் கம்பெனிகளுக்கோ சொந்தமாயிருந்தன. 18ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குள் அவையெல்லாம் கவர்னர், சட்ட சபை முதலிய அரசாங்க அங்கங்களைப் பெற்றுவிட்டன. அரசியல் அதிகாரமும் லண்டனிலிருந்து செலுத்தப்பட்டு, அவை கிரௌன் குடியேற்றங்களாயின. II-ம் சார்லஸ் காலத்தில் 'வியாபார, வெளிநாட்டுத் தோட்டக் கவுன்சில்' (Council of trade and foreign plantations) என்று ஒரு கவுன்சில் நியமிக்கப்பட்டு, அது குடியேற்ற நாட்டு விவகாரங்களைக் கவனித்து வந்தது. அது ஆங்கிலேயப் பிரிவி கவுன்சிலின் ஒரு கமிட்டியே யாகும். கவுன்சில் உத்தரவுகள் மூலம் அது தன் அதிகாரத்தைச் செலுத்தி வந்தது. இங்கிலாந்திலும் குடியேற்றங்களிலும் ஒரே வகையான சட்டமுறையே அமலிலிருந்தது. பிரிட்டிஷ் பார்லிமெண்டு, குடியேற்ற நாடுகள் சம்பந்தமாகவும் சட்டம் இயற்ற முடியும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1688க்குப் பிறகு, செலாவணி, தபால், கப்பல் வியாபாரம் முதலிய விஷயங்களைப்பற்றி இங்கிலாந்தே சட்டமியற்றியது. 1660-ல் இயற்றப்பட்ட ஒரு குடியேற்றச் சட்டப்படி குடியேற்ற நாட்டு வியாபாரம் முழுவதும் பிரிட்டிஷ் கப்பல்கள் வாயிலாகவே நடைபெறவேண்டும் என்று ஏற்பட்டது; 1664-ல் செய்த ஒரு சட்டப்படி, குடியேற்றங்கள் இங்கிலாந்தைத் தவிர வேறு நாடுகளோடு வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது. 1673-ல் மற்றொரு சட்டப்படி ஒரு குடியேற்றத்திற்கும் மற்றொரு குடியேற்றத்திற்கும் இடையே நடைபெறும் வியாபாரத்திலும் சில பொருள்களுக்கு வியாபார வரி விதிக்கப்பட்டது. இச்சட்டங்களால் ஆங்கிலேய வியாபாரமும் கப்பல் முதலாளிகளின் நலன்களும் முன்னேறின. வியாபார சம்பந்தமாகச் செய்யப்பட்டிருந்த விதிகளை வியாபாரிகள் அதிகமாகப் பொருட்படுத்தாமலிருந்தனர். சட்டங்களை மீறின வியாபார முறைகளை ஆங்கிலேயக் கப்பல் மாலுமிகள் கைக்கொண்டனர். வால்ப்போல் (Walpole 1676–1745) காலத்தில் இச்சீர்கேடு உச்சநிலையை அடைந்திருந்தது. இவ்வொழுங்கீனத்தால் குடியேற்ற நாடுகள் எவ்வித மனக்கசப்பையும் கொள்ளவில்லை. III-ம் ஜார்ஜ் (1738-1820) காலத்தில் வியாபார விஷயமாகப் புதுவிதிகள் ஏற்பட்டதே குடியேற்றங்கள் தாய்நாட்டை எதிர்த்துப் போரிட்டதற்கு முக்கிய காரணமாகும்.

செயின்ட் லாரன்ஸ் நதிக்குத் தெற்கே ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் ஏற்பட்டபோதே அவ்வாற்றின் கரையில் அக்காடி (Acadie 1604), குவிபெக் (1608) முதலிய குடியேற்றங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் நிறுவினர். அக்காடியில் ஸ்காட்லாந்துக்காரர்கள் சிலர் நோவாஸ்கோஷியா (Nova Scotia) என்னும் வேறொரு குடியேற்றத்தைப் பிறகு நிறுவினர். 1627-9-ல் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் நடந்த போரின் முடிவாக இங்கிலாந்து நோவாஸ்கோஷியாவை இழந்தது. 1697-ல் லூயிசியானாவும், 1718-ல் நியூ ஆர்லியன்சும் பிரெஞ்சுக்காரர்களால் நிறுவப்பட்டன. 1689–1713-ல் நடந்த ஆங்கில-பிரெஞ்சு யுத்தத்தில் எல்லைப்புறச் சண்டைகள் நடந்தன. நியூ இங்கிலாந்து குடியேற்றங்கள் ஹட்ஸன் வளைகுடாக் குடியேற்றங்களைத் தாக்கின. முடிவில் 1713-ல் யூட்ரெக்ட் உடன்படிக்கைப்படி நியூ பவுண்டுலாந்து இங்கிலாந்திற்குக் கிடைத்தது.

குவிபெக், மான்ட்ரியால், கிரௌன்பாயின்ட், நயாகரா கோட்டை முதலிய மதிலிட்ட நகரங்கள் பிரெஞ்சுக்காரர்களால் ராணுவ நிலையங்களாக நிறுவப்பட்டன. இக் கோட்டைகள் மூலம், பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் ஆதிக்கத்தை வட அமெரிக்காவில் நிலைநிறுத்திக் கொள்வதோடு, ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் வளரவிடா

மலும் தடுக்க வேண்டும் என்றும் விரும்பியிருக்கக் கூடும். அக் காலத்தில் பிரெஞ்சுக்காரர்களுடைய ராணுவ நிலைமை ஆங்கிலேயர்களுடையதைவிடச் சிறந்த தாயிருந்தது.

18ஆம் நூற்றுண்டின் இடையில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஓய்வின்றி வட அமெரிக்காவில் சண்டை நடந்துகொண்டிருந்தது. 1757-ல் வில்லியம் பிட் பிரிட்டிஷ் இராச்சிய செக்ரடரி (Secretary of State)யானபோது குடியேற்ற நாட்டுப் போரைத் திறம்பட நடத்தத் தொடங்கிப் பல வெற்றிகளையடைந்தார். அதன் விளைவாகப் பிரெஞ்சு ஆதிக்கம் குவிபெக், மான்ட்ரியால் ஆகிய இரு நாடுகளோடு நின்றது. 1759-ல் உல்ப், மான்ட்காம் என்னும் இரு பிரிட்டிஷ் ஜெனரல்கள் குவிபெக்கையும் தாக்கிக் கைப்பற்றினர். இப்போரில் அவ்விரு தளபதிகளும் கொல்லப்பட்டனராயினும், வட அமெரிக்காவில் பிரெஞ்சு ஆதிக்கம் ஒருவாறுக முடிவுற்றது. 1763-ல் பாரிஸ் உடன்படிக்கைப்படி மிசிசிபிக்குக் கிழக்கேயுள்ளஎல்லாப் பிரெஞ்சுக் குடியேற்ற உடைமை நாடுகளும் பிரிட்டனுக்கு மாற்றப்பட்டன. 1760-ல் ஸ்பெயினிடமிருந்து ப்ளாரிடா இங்கிலாந்திற்குக் கிடைத்தது.

1763-ல் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையால் வட அமெரிக்காவிலிருந்த இடங்களைப் பிரான்சு இழந்தது. தாய்நாட்டின் உதவியை மிகுதியும் எதிர்பார்த்திருந்த பிரிட்டிஷ் குடியேற்றங்களுக்கு அடுத்தாற்போலிருந்த பிரெஞ்சு அபாயம் நீங்கிவிட்டதால் அவை தங்கள்நாட்டு நிருவாகத்தைத் தாங்களே கவனித்துக்கொள்ள முடியும் என்று கருதலாயின. குடியேற்ற நாடுகளுக்கு இங்கிலாந்தின்மீது பலவகையிலும் பகைமை முற்றத்தொடங்கிற்று. கிரென்வில் (Grenville) என்னும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி நேர்முக வரி விதிக்க முயன்றபோது (1760-1766)முதன் முதல் மனக்கசப்புத் தோன்றிற்று. 1767-1774-ல் டவுன்ஷெண்டு தேயிலை வரி முதலிய மறைமுக வரிகளை விதிக்க முயன்றபோது இம் மனக்கசப்பு வலுத்தது. 1774லிருந்து 1776 வரையில் இக் குடியேற்றங்கள் ஒரு காங்கிரசைக் கூட்ட முயன்றபோது குடியேற்ற நாடுகளின் ஒருமித்த நடவடிக்கை சாத்தியமாயிற்று.

ஏழாண்டுப் போருக்குப் பிறகு இங்கிலாந்திற்குப் பெரிய தேசியக் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டபோது, அக் கடன் சுமையில் ஒரு பகுதியைக் குடியேற்ற நாடுகளும் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கிரென்வில் எண்ணினர். குடியேற்ற நாடுகள் இதை விரும்பவில்லையாயினும் தாம் எண்ணியவாறே கிரென்வில் வரி விதிக்க விரும்பினர். ஒரு இலட்சம் பவுன் வரி வசூல் செய்து, வட அமெரிக்கப் பாதுகாப்பிற்காக அங்கு ஒரு படையை நிறுவ வேண்டும் என்று அவர் கருதினர். இவ் வரியை முத்திரைப் பணம் மூலம் வசூல் செய்யவேண்டும் என்பது அவர் கருத்து. ஆனல் பிரிட்டிஷ் பார்லிமென்டுக்கு அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் மீது வரி விதிக்கும் உரிமை யில்லை என்று அமெரிக்கர் கருதினர். பிரிட்டிஷ் பார்லிமென்டில் அமெரிக்கக் குடியேற்றங்களிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பப்படாமையால் அப் பார்லிமென்டின் சட்டங்கள் தங்களைக் கட்டுப்படுத்தமாட்டா என்பது குடியேற்றங்களின் கொள்கை. பிரிட்டிஷ் பார்லிமென்டு முத்திரைச் சட்டத்தை 1765-ல் நிறைவேற்றிற்று. இவ் விஷயத்தைக் கேள்விப்பட்ட அமெரிக்கர் மிகுந்த கோபமடைந்தனர். போஸ்டன், நியூயார்க் முதலியஇடங்களில் கலவரம் நடந்தது. முத்திரைக் காகிதங்களைச் சேர்த்து நெருப்பு வைத்தனர். பிரிட்டிஷ் பொருள்களை அமெரிக்க வியாபாரிகள் வாங்க மறுத்தனர்; பிரிட்டிஷ் துணிகளை அவர்கள் ஏற்க மறுத்தனர். நெசவுக் கைத்தொழில் அமெரிக்காவில் ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷ் நெசவுத் தொழில் மிகவும் சீர்கெட்டது. 1766-ல் பிரிட்டனில் ராக்கிங்ஹாம் பிரதம மந்திரியானபின் முத்திரைச் சட்டம் ரத்தாயிற்று; ஆயினும் அமெரிக்கக் குடியேற்றங்கள் மீது வரி விதிக்கும் உரிமை இங்கிலாந்து பார்லிமென்டிற்கு உண்டு என்பது வற்புறுத்தப்பட்டது. பிரிட்டிஷ் பார்லிமென்டுக்கு இவ்வுரிமை உண்டு என்பதை அமெரிக்கர் ஒப்புக்கொள்ள மறுத்தனர். 1767-ல் புதுவிதமான மறைமுக வரிகள் விதிக்கப்பட்டன. இவற்றில் முக்கியமானவை இறக்குமதி வரிகள். இவற்றைச் செலுத்த முடியாது என்று மசசூசிட்ஸ், வர்ஜீனியா, வடகரோவினு முதலிய குடியேற்றங்கள் மறுத்தன. இவ்வகை வரி விதிப்புக்களைச் சாதம் (Chatham), பர்க் (Burke) முதலிய ஆங்கிலப் பெரியோர்களும் எதிர்த்தனர்.

நார்த் பிரபு 1770-ல் பிரிட்டிஷ் பிரதம மந்திரியானுர். அவர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு விதிக்கப்பட்ட வரிகளில், தேயிலை வரியைத் தவிர ஏனையவற்றையெல்லாம் நீக்கிவிட்டார். அமெரிக்கா மீது ஆங்கிலேயருக்கு வரி விதிக்கும் உரிமைகள் உண்டு என்று காட்டுவதற்காகத் தேயிலை மீது விதித்திருந்த வரியை நீக்காமல் வைத்திருந்தனர். இவ்வரியினல் ஆங்கிலேயருக்கு இலாபம் அதிகமாகக் கிடைக்கவில்லையாயினும், கொள்கையளவிற்கேனும் அவ்வரி இருக்கவேண்டும் என்று அவர்கள் கருதினுர்கள். அமெரிக்கரும் கொள்கையளவிலேயே அவ்வரியை எதிர்த்தனர். இதை ஒட்டி 1770-ல் போஸ்ட்டனில் நடந்த கலவரத்தை ஆங்கில அதிகாரிகள் பலாத்காரமாக அடக்கினர். கலவரம் செய்தவர்களில் சிலர் இறந்தனர். இதை 'போஸ்ட்டன் படுகொலை' என்று வருணித்தனர். 1772-ல் 'காஸ்பீ' (Gaspee) என்னும் பிரிட்டிஷ் போலீஸ் கப்பல் கரை தட்டிற்று. அதை அமெரிக்கர்கள் எரித்துவிட்டனர். இச் செயலில் கலந்து கொண்டவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் விரும்பியது பலிக்கவில்லை.

1773-ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலம் அமெரிக்காவிற்குப் பல கப்பல்கள் தேயிலைப் பெட்டிகளோடு வந்தன. அமெரிக்கர் தேயிலை வரி கட்டாமல் அப்பெட்டிகளைக் கப்பலைவிட்டிறக்க முடியாது. பில டெல்பியாவிலும் நியூயார்க்கிலும் வியாபாரிகள் அப் பெட்டிகளை எடுக்க மறுத்துவிட்டனர். சார்லஸ் டவுனில் கப்பலைவிட்டிறக்கின தேயிலை கிடங்குகளிலேயே கிடந்தது. போஸ்ட்டனில் சிலர் கப்பலில் ஏறி, 18,000 பவுன் பெறுமானமுள்ள தேயிலைப் பெட்டிகளை வாரிக் கடலில் வீசினர். இதைப் 'போஸ்ட்டன் தேநீர் விருந்து' என்பர். இச் செயல்களால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயர் போஸ்ட்டன் துறைமுகத்தை மூடிவிடவும், குடியேற்ற நாடுகளில் ஆங்கிலேயத் துருப்புக்களை வைக்கவும் சட்டமியற்றினர்.

தங்களுடைய சுதந்திரத்திற்கு அபாயம் ஏற்பட்டதையுணர்ந்த குடியேற்றங்கள் பிலடெல்பியாவில் கூடிய ஒரு காங்கிரசில் இங்கிலாந்தின் போக்கைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. 1775-ல் காங்கிரசு இத் தகராறை நல்ல முறையில் தீர்க்கும்படி பிரிட்டிஷ் மன்னருக்கு ராஜ விசுவாசத்தைக் கூறிக்கொண்டு ஒரு விண்ணப்பத்தை அனுப்பிற்று.

III-ம் ஜார்ஜ் இவ்விண்ணப்பத்தை ஏற்க மறுத்துவிட்டார். அதே ஆண்டில் காங்கிரசின் படைகள் கானடாவைத் தாக்கின. 1776-ல் தாய்நாட்டோடு

பெரும்பகை மூண்டது. கப்பல் வர்த்தகச் சட்டங்களை மீறி, எல்லா நாடுகளோடும் அமெரிக்கா வியாபாரம் செய்யத் தொடங்கிற்று. 1776 ஜூலை 4 ஆம் நாளில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சுதந்திரப் பிரகடனம் செய்தன.

1775-க்குப்பின் காங்கிரசு சபை இரண்டாவது முறையாகக் கூடி, அமெரிக்கப் போர்ப்படைகளை நன்கு அமைத்து, அவற்றிற்கு வர்ஜீனியாவைச் சார்ந்த ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரைத் தலைமைத் தளபதியாக நியமித்தது. மசசூசிட்சில் கவர்னராயிருந்த கேஜ் (Gage) குடியேற்றப் படைகளை அடக்க முயன்றது பலிக்கவில்லை. இங்கிலாந்திலிருந்து போதிய அளவு படை வரவில்லை; பிரிட்டிஷ் கப்பற்படையின் தரமும் குறைந்திருந்தது. 1775-ல் பங்கர் ஹில் என்னுமிடத்தில் நடந்த சிறு சண்டையில் பிரிட்டிஷ் படைகள் பெருத்த நஷ்டத்தோடு வெற்றியடைந்தன. 1775-ல் போஸ்ட்டனைக் கைவிட்டுவிட்டு,பிரிட்டிஷ் படைகள் நியூயார்க்கைத் தங்கள் ராணுவத் தலைமையிடமாகக் கொண்டன. காரன்வாலிஸ் என்னும் பிரிட்டிஷ் தளபதி நியூஜெர்சியைக் கைப்பற்றியதும், வாஷிங்டன் தாமே பிரிட்டிஷ் படைகளைத்தாக்கி நியூஜர்சியை மறுபடியும் கைப்பற்றினர். 1777-ல் ஹோவிற்குப் பதிலாகப் பர்காயன் (Burgoyne) பிரிட்டிஷ் தளபதியானர். ஆங்கிலப்படைத் தலைவர்களான கிளின்டன், ஹோ, காரன்வாலிஸ் ஆகிய மூவரும் 1777-ல் சேர்ந்து செய்த போரில், வாஷிங்டன் பிராண்டிவைன் முதலிய இடங்களில் தோற்கடிக்கப்பட்டார்; ஆயினும் பர்காயனுடைய படையொன்று சரடோகாவில் ஜெனரல் கேட்ஸ் (Gates) என்பவரிடம் தோற்றுச் சரண்புகுந்தது.

இக்காலத்தில்தான் பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் சண்டை மூண்டது. ஹோ, காரன்வாலிஸ் இருவரும் சார்லஸ் டவுனில் குடியேற்றப் படையைத் தோற்கடித்தனர். ஆயினும் பார்க் டவுனில் காரன்வாலிஸ் வாஷிங்டனுக்குத் தோற்று, அமெரிக்கரிடம் சரணடைந்துவிட்டார்.

1782 நவம்பரில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கும் இங்கிலாந்திற்கும் சமாதானம் ஏற்பட்டது. இங்கிலாந்து அமெரிக்க சாம்ராச்சியத்தில் முக்கியமான பகுதியை இழந்தது. ஒரு புதிய வலிய இராச்சியம் எழுந்தது. குடியேற்ற நாடுகளை வலக்கட்டாயத்தால் ஆள எண்ணுவது மடமை என்பது ஆங்கிலேயருக்கு விளங்கிற்று.

சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாடுகள் தத்தமக்கு வேண்டிய அரசியல் முறைகளை வகுத்துக் கொள்ளத் தொடங்கின. இவற்றில் மக்களின் அடிப்படை உரிமைகள் விவரிக்கப்பட்டன. பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், எல்லா இராச்சியங்களிலும் ஒரே மாதிரியான அரசியல் அமைப்பு ஏற்பட்டது என்று கூற முடியாது. இந்நாடுகள் எல்லாம் அமெரிக்க ஐக்கியம் என்னும் ஒரு பெரிய அரசியல் ஸ்பானத்திற்குட்பட்டவையாக இருக்கவில்லை. 1775 லிருந்து 1781 வரையில் 13 இராச்சியங்களே அமெரிக்க இராச்சியங்களாயிருந்தன. 1777-ல் இவ்விராச்சியங்கள் தமக்குள் ஒரு நாட்டுக் கூட்ட (Confederation) உடன்படிக்கை செய்து கொண்டன. இதன்படி காங்கிரசு ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை கூடவேண்டும்; அதற்கு இராச்சியங்கள் மீது அதிகாரம் உண்டேயன்றி, அவ்விராச்சிய மக்கள் மீது நேரடியாக அதிகாரம் இல்லை என்று ஏற்பட்டது.

1786 வெர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி, அல்லிகனி மலைகளுக்கும் மிசிசிபிக்கும் இடையே உள்ள பிரதேசம் அமெரிக்காவிற்குச் சொந்தமாயிற்று. 1787-ல் வடமேற்குப் பிரதேசச் சட்டம் ஒன்று ஏற்பட்டு, அப்பிரதேசமும் அமெரிக்க இராச்சியங்களுக்குச் சொந்தமாயிற்று. அப்பிரதேசத்தில் ஓஹியோ, இண்டியானு, இல்லினொய்ஸ், மிச்சிகன், விஸ்கான்சின் என்பவை அடங்கியிருந்தன; இந்த இராச்சியங்களில் வடக்கே இருந்தவற்றில் கைத்தொழில் முன்னேறியதால் அடிமை நிலை நடைமுறையில் இல்லை. தெற்கே யிருந்த விவசாய இராச்சியங்களில் குறைந்த செலவில் அதிக ஆட்கள் வேண்டி யிருந்ததால் அடிமை நிலை நடைமுறையில் இருந்தது.

அமெரிக்க இராச்சியங்களின் படைத் தலைவராயிருந்த ஜார்ஜ் வாஷிங்டன் விரும்பி யிருந்தால் படை வலிமை கொண்டு அந்நாட்டு மன்னராகி யிருக்கலாம். ஒரு சிறிதும் தற்பெருமையில் விருப்பமில்லாத அப்பெரியார் அரச பதவியை வெறுத்தார். முதலில் இராச்சியங்கள் தத்தம் சுதந்திரத்திலேயே கருத்தாக இருந்ததால், ஒற்றுமைப்பட வழியில்லாமலிருந்தது. ஆனுல் தனித்திருப்பதால் தங்கள் சுதந்திரத்திற்கு அபாயம் ஏற்படும் என்று உணர்ந்த அவ்விராச்சியங்கள் தங்களுக்குள் ஓர் ஒற்றுமையான அரசியல் திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்தன. அரசியல் சட்டக் கன்வென்ஷன் 1787-ல் நிறுவப்பட்டது. கூட்டாட்சிக் கட்சி, கூட்டாட்சி எதிர்க்கட்சி என்று இரண்டு அரசியல் கட்சிகள் தோன்றின. அறிஞர்களான பெஞ்சமின் பிராங்கிளின், ஜேம்ஸ் மாடிசன், அலெக்சாந்தர் ஹாமில்ட்டன், எட்மண்டு ராண்டால்ப், வில்லியம் பேட்டர்சன் போன்றவர்கள் அந்தக் கன்வென்ஷனில் உறுப்பினரா யிருந்தனர். அவர்களுடைய நன்முயற்சியால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் சட்டம் உருவாயிற்று. இதை ஒவ்வொன்ருக எல்லா இராச்சியங்களும் ஒப்புக்கொண்டன. ஒரு பெரிய நாட்டிற்கு மன்னனில்லாத குடியரசு முறைப்படி ஜனநாயக ஆட்சித் திட்டம் முதன் முதலாக வரலாற்றிலேயே அந்நாட்டில் ஏற்பட்டது. ஜனதிபதியாக யாரை நியமிப்பது என்பதைப் பற்றி யாருக்குமே ஐயமில்லை. அரசியல் அறிவிலும், தைரியத்திலும், பண்பாட்டிலும், பெருமையிலும் நிகரற்று விளங்கிய பெரியாராகிய வாஷிங்டன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் ஜனதிபதியாக ஒருமுகமாக 1789-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே அடுத்த முறையும் ஜனதிபதியானர். 1953 வரை (164) ஆண்டுகள், 33 ஜனதிபதிகள் அந்நாட்டில் ஆட்சித் தலைவராக இருந்தனர்.

ஜெபர்சன் ஜனதிபதியாக இருந்த காலத்தில் லூயிசியான பிரதேசம் பிரான்சிடமிருந்து 160 இலட்சம் டாலர்களுக்கு விலைக்கு வாங்கப்பட்டது. 1810-12-ல் பிளாரிடா பிரிட்டிஷாரிடமிருந்து அமெரிக்காவிற்குக் கிடைத்தது. ஐரோப்பாவில் நெப்போலிய யுத்தங்கள் நடந்துகொண்டிருந்த காலத்தில், அமெரிக்க வியாபாரத்திற்குக் கேடு விளைந்ததால், அமெரிக்கருக்கும் பிரிட்டிஷாருக்கும் போர் மூண்டது. 1814-ல் பிரிட்டிஷ் துருப்புக்கள் அமெரிக்காவின்மேற் படையெடுத்து வாஷிங்டன் என்னும் நகரைக் கைப்பற்றின. ஆயினும் ஆண்டிரூ ஜாக்சன் என்பவர் பிரிட்டிஷ் படைகளை முற்றிலும் தோற்கடித்தார். 1814-ல் கென்ட் (Ghent) உடன்படிக்கைப்படி ஆங்கிலோ-அமெரிக்க சமாதானம் ஏற்பட்டது. 1867-ல் ரஷ்யாவிடமிருந்து அலாஸ்கா 72 இலட்சம் டாலர்களுக்குப் பெறப்பட்டது. 1898-ல் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மேற்கிந்தியத் தீவுகளைப்பற்றி ஒரு போர் மூண்டது. அப்போரில் அமெரிக்காவே வெற்றிகண்டது. அதனுல்

கியூபா, போர்ட்டோ ரிகோ, ஹவாய், பிலிப்பைன் தீவுகள் ஆகியவை அமெரிக்காவுக்குச் சொந்தமாயின. போர்ட்டோ ரிகோவும், ஹவாயும் 1900-ல் அமெரிக்கப் பிரதேசத்தின் பகுதியாகிவிட்டன. கியூபா 1901-ல் சுதந்திரம் பெற்றது. பிலிப்பைன் தீவுகள் 1946-ல் சுதந்திரமடைந்தன.

1817-1825-ல் ஜனாதிபதியாயிருந்த ஜேம்ஸ் மன்ரோ காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பலவகையிலும் முன்னேற்றமடைந்தன. மிசிசிபி, இல்லினாய்ஸ், ஆலபாமா, மெயின், மிசௌரி ஆகிய இராச்சியங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. ''அமெரிக்கக் கண்டத்தின் விவகாரங்களில் ஐரோப்பிய நாடுகள் தலையிடக்கூடாது. ஐரோப்பாவின் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது'' என்னும் கொள்கையை மன்ரோ வெளியிட்டார். இக்கொள்கையே பெயர் பெற்ற 'மன்ரோக் கொள்கை' என்பது. ஜாக்சன் 1829-1837-ல் ஜனாதிபதியாயிருந்த காலத்தில் ஜனநாயகக் கட்சி உதயமாயிற்று.

1861-1865-ல் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லின்கன், வாஷிங்டனுக்கு நிகரான பெருமையுடையவர். தென்ராச்சியங்களிலிருந்த அடிமைநிலை ஆதரவாளர்களுக்கும், வடராச்சியங்களிலிருந்த அடிமைநிலை எதிர்ப்பாளர்களுக்குமிருந்த மனவேறுபாட்டால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒற்றுமைக்கே கேடு விளையக்கூடிய நிலைமை ஏற்பட்டது. எவ்வாறாயினும் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டி, அமெரிக்க ஐக்கியத்தைக் காத்து, அடிமைநிலையை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு ஜனாதிபதியாக வந்த லின்கனிடம் தென் இராச்சியங்களுக்குப் பகை உண்டாயிற்று. இக்காரணத்தால் (1861-1865-ல்) உண்டான உள்நாட்டுப் போர் இறுதியில் ஆபிரகாம் லின்கன் கட்சிக்கு வெற்றியில் முடிந்தது. அமெரிக்க ஐக்கியத்திற்கு ஏற்பட்ட பெரிய அபாயம் நீங்கி, அடிமைநிலையும் அகற்றப்பட்டது. ஆயினும் வெற்றி கிட்டிய சில நாட்களுக்குள்ளேயே ஆபிரகாம் லின்கன் ஒரு நாள் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

லின்கன் காலத்திற்குப் பிறகு அமெரிக்க ஐக்கியத்திற்கு எவ்வித அபாயமும் ஏற்படவில்லை. பொருளாதாரத் துறையிலும், அரசியல் அதிகாரத்திலும் உலகில் இணையற்று விளங்குவதற்குத் தேவையான வசதிகள் முழுவதும் அந்நாட்டுக்கு ஏற்பட்டன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே கைத்தொழில் முன்னேற்றம் விரைவில் ஏற்பட்டது. கச்சாப் பொருள்களில் ஒரு சிறிதும் குறைவில்லாத அமெரிக்க ஐக்கிய நாடுகள் கைத்தொழில் முன்னேற்றம் அடைந்ததில் வியப்பில்லை. ராக்பெல்லர் (Rockefeller), போர்டு (Ford), கார்னெகி (Carnegie) முதலிய பெரிய முதலாளிகளால் தொடங்கி நடத்தப்பட்ட மிகப் பெரிய கைத்தொழில் நிலையங்கள் அந்நாட்டில்தான் ஏற்பட்டிருக்கக்கூடும்.

20-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அமெரிக்க ஜனாதிபதிகளில் தியடோர் ரூஸ்வெல்ட்டும், வில்சனும், பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டும் முக்கியமானவர்கள். தியடோர் ரூஸ்வெல்ட் காலத்தில் அகில அமெரிக்க ஐக்கியக் கொள்கை ஏற்பட்டதால் அமெரிக்காக் கண்டத்து நாடுகள் ஒற்றுமையோடு செயலாற்றத் தொடங்கின. 1914-18-ல் உலக யுத்தத்தின்போது மன்ரோக் கொள்கையைக் கைவிட்டு, அமெரிக்கா ஐரோப்பிய விவகாரங்களில் தலையிட்டது. அந்த யுத்தத்தின் இறுதியில் அமெரிக்க-ஜனாதிபதி வில்சன் பதினான்கு அமிசங்கள் கொண்ட ஒரு நிரந்தர அமைதித் திட்டத்தை வெளியிட்டார். அவ்வடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா உறுப்பு நாடாக இருக்கவில்லை.

1931-ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தம் அமெரிக்காவை மிகுதியும் பாதித்தது. 1937-ல் ஜனாதிபதியாக வந்த பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் புகுத்திய புது முறை ஏற்பாட்டை (New Deal) அமெரிக்காவில் பலர் எதிர்த்தனராயினும், பொருளாதார நெருக்கடி ஓரளவு சமாளிக்கப்பட்டது. இவர் ஒருவரே மூன்று முறை (மொத்தம் 12 ஆண்டு காலம்) ஜனாதிபதியாக இருந்தவர். இரண்டாம் உலக யுத்தத்தில் அமெரிக்கா தலையிட்டு நேச நாடுகளைக் காப்பாற்ற முன்வந்தது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளோடும் அமெரிக்கா போர் தொடுத்தது. கம்யூனிஸ்ட் தலைவரான ஸ்டாலினும், முதலாளித்துவ நாடுகளின் தலைவர்களான சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும், ஒற்றுமையாகப் போரிட்டுச் சர்வாதிகாரத்தை எதிர்த்து வென்றனர். ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும் 1941-ல் அட்லான்டிக் சாசனம் என்னும் அறிக்கையை வெளியிட்டனர். ''உலகத்தினின்றும் சுதந்திரம் மறையக் கூடாது'' என்று ஆங்கிலோ-அமெரிக்கர்கள் தீர்மானித்துக் கொண்டதாக அச்சாசனம் கூறிற்று. அ. ஐ. நாடு அந்த யுத்தத்தின் இறுதியில் ஜெர்மனியை வெல்ல இரண்டாம் போர் முனையை நிறுவ உதவிற்று; ஜப்பான் மீது 1945-ல் அணுகுண்டுகளை வீசி, அணுகுண்டு சகாப்தத்தைத் தோற்றுவித்தது.

1945-ல் சான் பிரான்சிஸ்கோவில் கூடிய ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு முக்கியமான ஸ்தானம் வகித்தது. அன்றியும் அகில அமெரிக்க ஐக்கியம் (த. க.) உருவானதிலிருந்து அமெரிக்காக் கண்டத்தில் தலைமை ஸ்தானம் வகித்துவரும் அமெரிக்க ஐக்கிய நாடு, ஐ. நா. சங்கக் கூட்டங்களில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் நாடாகவும் இருந்து வருகிறது.

கச்சாப் பொருள்கள், கைத்தொழில், வேளாண்மை, ஆள்பலம், படைவலிமை, கல்வித்துறை முதலிய எல்லா வகைகளிலும் முன்னணியில் நின்றுவரும் அமெரிக்க ஐக்கிய நாடு, உலகத்தின் முன்னேற்றத்திற்கும் அமைதிக்கும் பெரிதும் பாடுபடும் என்று பலர் எதிர்பார்க்கின்றனர். அ. மு.

**பொருளாதார வரலாறு: தோற்றுவாய்:** அமெரிக்காவின் பொருளாதார வரலாறு வேறொரு நாட்டிலிருந்து செல்வம் மிகுந்த புதியதொரு நாட்டிற் குடி புகுந்த மக்களின் வரலாற்றைப் பற்றியதாதலின், அது பிறநாடுகளின் வரலாறுகளினின்றும் சிறிது வேறுபடுகின்றது. அமெரிக்கப் பொருளாதார வரலாறு கி. பி. 15ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து தொடங்குகிறது. அக்காலம் மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்தம், புதுநாடு காணல் முதலிய இயக்கங்கள் தழைத்த காலம். தூரக்கிழக்கு நாடுகளில் கிடைக்கும் இலவங்கம் முதலிய வாசனைப் பொருள்களைத் தேடிப் புறப்பட்ட மாலுமிகள் அமெரிக்காவை அடைந்தனர். ஸ்பெயினும் போர்ச்சுகலும் இக் கடற் பிரயாணங்களில் முன்னணியில் நின்ற நாடுகள். 1589-ல் ஸ்பானியர்கள் தோற்றுப்போய் அமெரிக்காவில் தங்களுக்கு இருந்த செல்வாக்கை இழந்தபோது, பிரிட்டனிலிருந்தும் ஹாலந்திலிருந்தும் மக்கள் ஸ்பானியர்களைப் பின்பற்றினர். இந்நாடுகளிலிருந்து வியாபாரிகளும், அரசியல் அகதிகளும், சமயவாதிகளும் மற்றோர்களும் சேர்ந்து அமெரிக்கக் கீழ்க் கரையில் குடியேறினர்.

தொடக்கக் காலப் பற்றிடங்கள்: முதன் முதலில் குடியேறியவர்கள் விவசாயத்தையே முக்கிய தொழி

லாகக் கொண்டிருந்தனர். வடக்கேயிருந்த குடியேற்றங்கள் சிறிய அளவில் சாகுபடி செய்து வந்தன; தென் குடியேற்றங்கள், புகையிலை, அவுரி, நெல் முதலியன சாகுபடி செய்வதற்கான பெரிய பண்ணைகளை ஏற்படுத்தி வந்தன. வடக்கே ஒரு பண்ணையின் பரப்பு சராசரி 100 ஏக்கர்; தெற்கே 5,000 ஏக்கர். நெய்தல், நூற்றல், செருப்புத் தைத்தல், இரும்பு உருக்குதல், மரம் வெட்டல், காகிதம் செய்தல், கண்ணாடி செய்தல் முதலிய அடிப்படைக் கைத்தொழில்கள் அக்காலத்தில் குடியேறியவர்கள் செய்துவந்த தொழில்கள். அவர்களின் எண்ணிக்கைக் குறைவால் தொழிலாளிப் பஞ்சம் இருந்து வந்தது. ஆகையால் அடிமைகளை இறக்குமதி செய்யும் பழக்கம் ஏற்பட்டது. இவ்வடிமை வியாபாரத்தில் ஸ்பானிய, போர்ச்சுகேசிய வியாபாரிகளோடு ஆங்கில நாட்டு டிரேக், ராலி முதலியவர்கள் போட்டியிட்டனர். போக்குவரத்துச் சாதனக் குறைவால் வியாபாரமும் பாதிக்கப்பட்டது. அமெரிக்காவிலிருந்த பெரிய ஆறுகளையும் ஏரிகளையுமே அவர்கள் போக்குவரத்துச் சாதனங்களாகக் கொள்ளவேண்டியிருந்தது. மீன், மரம், புகையிலை, அரிசி, மிருகங்களின் மென்மயிர் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன; கம்பளம், இரும்பு, சாராயம், பழம், மற்றும் பல செய்தொழிற் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பெரும்பான்மை வியாபாரம் இங்கிலாந்தோடுதான் நடைபெற்றது. ஆனால் இங்கிலாந்தின் காப்புவரிக் கொள்கைகள் குடியேற்ற நாடுகளுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே மனவருத்தத்தையுண்டாக்கின. 1624 லிருந்து குடியேற்ற நாடுகளுக்கு வியாபாரச் சுதந்திரம் இருந்தபோதிலும், பிற்காலத்தில் இங்கிலாந்து குடியேற்ற நாடுகளின் வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய பல சட்டங்களை யியற்றிற்று. 1624-ல் ஒரு சட்டம் குடியேற்ற நாட்டுப் புகையிலை முழுவதும் இங்கிலாந்திற்கே ஏற்றுமதி செய்யப்படவேண்டும் என்று விதித்தது. இன்னும் பல சட்டங்கள் குடியேற்ற நாட்டு வியாபாரத்தைப் பெரிதும் பாதித்தன. இங்கிலாந்தில் தொழிற் புரட்சிக்குப் பிறகு இங்கு இச்சட்டங்கள் மிகவும் வன்மையோடு அமல் செய்யப்பட்டன.

சுதந்திரப் போர்: குடியேறியவர்கள் இவ்வகையான இடையூறுகளைப் பொருட்படுத்தவில்லை. சுதந்திரத்தை விரும்பிக் கடல்கடந்து வந்து, புது நாடுகளிற் குடியேறியவர்களா யிருந்ததும், பல்லாயிரம் மைல்களுக் கப்பால் உண்டாகும் சட்டங்களை மீறுவதற்குப் போதிய வசதி இருந்தும், பிரெஞ்சு செவ்விந்தியப் போட்டிகளும் அவர்கள் அவ்விடையூறுகளைப் பொருட்படுத்தாததற்குக் காரணங்களாகும். ஆனால் ஏழாண்டுப் போரின் இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சி வடஅமெரிக்காவில் நன்கு ஊன்றிக்கொண்டு, குடியேற்ற மக்களிடமிருந்து நாட்டின் தற்காப்புச் செலவில் ஒரு பகுதியை வரியாக வசூல் செய்ய விரும்பியது அவர்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பியது. சில பொருள்கள் இங்கிலாந்திற்கே ஏற்றுமதி செய்யப்படவேண்டும் என்றும், பிரெஞ்சு மேற்கிந்திய நாடுகளோடு வியாபாரம் செய்யவே கூடாது என்றும் 1764-ல் சட்டம் ஏற்பட்டது; வரி வசூல் செய்வதற்காகவே முத்திரைச் சட்டம் ஒன்று 1765-ல் இயற்றப்பட்டது. 1766-ல் இச்சட்டம் மாற்றப்பட்டதாயினும், பிரிட்டிஷ் பார்லிமென்டிற்குக் குடியேற்ற நாடுகள் மீது வரி விதிக்கும் உரிமையுண்டு என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது. மக்களின் கிளர்ச்சியால் தேயிலை ஒன்றைத் தவிர மற்றப் பொருள்கள்மீது விதித்திருந்த வரிகள் நீக்கப்பட்டன. ஆயினும் பார்லிமென்டின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கெனவே தேயிலை வரி நீக்கப்படாமலிருந்தது. குடியேற்றக்காரர்களுடைய கோரிக்கை பூர்த்தி செய்ய இங்கிலாந்து விரும்பினும், அவர்கள் மேலும் மேலும் கிளர்ச்சி செய்யும் நிலைமை ஏற்பட்டது; அமெரிக்கப் பொருளாதார வாழ்க்கை நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வந்தது. அரசாங்கம் பலாத்காரத்தைக் கையாண்டபோது குடியேறியவர்கள் பிரிட்டிஷ் சரக்குகளைப் பகிஷ்காரம் செய்யத்தொடங்கினர். 'போஸ்டன் தேநீர் விருந்து' அமெரிக்க-பிரிட்டிஷ் யுத்தத்தை ஆரம்பித்து வைத்தது; போரின் முடிவில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தோன்றின.

சுதந்திரத்திற்குப் பின்: அரசியல் சுதந்திரம் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊக்கம் அளித்தது. மற்ற நாடுகளோடு நேச உறவு ஏற்பட்டதால் வியாபாரமும் வாணிபமும் தழைத்தன; விவசாயமும் கைத்தொழிலும் முன்னேறின. 1808க்குப் பிறகே அமெரிக்க ஐக்கிய நாடுகள் பொருளாதாரத் துறையில் பெரிதும் முன்னேறத் தொடங்கின. இதற்குப் பிரிட்டிஷ் யுத்தமும், நெப்போலியப் போர்களும் முக்கிய காரணங்கள் எனலாம். கைத்தொழிலில் சுயதேவைப் பூர்த்தி நிலையும், மக்கள் தொகை வளர்ச்சியும், நகரங்களின் பெருக்கமும், வரவரத் தோன்றலாயின. 1790-ல் 39 இலட்சமாயிருந்த மக்கள் தொகை 1810-ல் 72 இலட்சமாக வளர்ந்துவிட்டது.

1784க்கும் 1820க்கும் இடையே வரி வசூலுக்காகவும் பொதுக் கடனைத் தீர்ப்பதற்கும் நில விற்பனை மேற்கொள்ளப்பட்டது. 1820க்குப் பிறகு நாட்டு முன்னேற்றத்தைக் கருதிய விவசாயக் கொள்கை ஏற்பட்டது. வட குடியேற்றங்களில் விவசாயம் உயர்தரமான முறையில் நடைபெற்றது. சொந்தப் பண்ணைகளும் கூலிக்காரர்களைக்கொண்டு நடத்தப்பெறும் பண்ணைகளும் அங்கு அதிகம். தென் குடியேற்றங்களில் அடிமைகளைக்கொண்டு நடத்தப்படும் பெரிய பண்ணைகள் இருந்தன. இங்குக் கரும்பு, புகையிலை, பருத்தி, நெல் முதலியன பயிராக்கப்பட்டன. விவசாயக் கூட்டுறவு சங்கங்களும் எந்திரச் சாதனங்களும் அமெரிக்க வேளாண்மையில் பெருத்த மாறுதல்களை யுண்டாக்கின. கைத்தொழிலில் முன்னேற்றமடைந்த ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்து கச்சாப் பொருள்களையும் உணவுப்பொருள்களையும் மேலும் எதிர்நோக்கத் தொடங்கிற்று. அமெரிக்காவில் கைத்தொழிற் புரட்சி சுதந்திரப் போருக்குப் பிறகு ஆரம்பித்தது. அந்நாட்டின் அளவற்ற கச்சாப் பொருள் வசதி அமெரிக்காவைக் கைத்தொழில் நாடுகளின் முன்னணிக்குக் கொண்டுவந்து விட்டது. மிகை வரிகளும், தடைசெய்யும் பழக்க வழக்கங்களும் இல்லாமையோடு, வேறு கைத்தொழில் நாடுகளினுடைய போட்டியின்மையும் வாணிபக் காப்புக் கொள்கையும் சேர்ந்து, அமெரிக்காவின் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு உதவின. கைத்தொழில் முன்னேற்றமடைந்த வட இராச்சியங்கள் காப்பு வரிக் கொள்கைய விரும்பின; விவசாய முன்னேற்றமடைந்த தென்னுடுகள் காப்புக் கொள்கையை எதிர்த்தன. இக் கொள்கை வேறுபாடு உள்நாட்டு யுத்தம் முடியும்வரை இருந்து வந்தது.

சுதந்திரம் அடைந்த பிறகு கூட்டாட்சி அரசாங்கமும், இராச்சிய அரசாங்கங்களும், உள்நாட்டுப் போக்குவரத்துச் சாதனங்களை விருத்தி செய்தன. சாலைகள் கட்டப்பட்டன; கால்வாய்கள் வெட்டப்பட்டன. 1823-ல் ஈரி கால்வாய் கட்டி முடிந்தது. 1826-ல் முதல் ரெயில்வே அமைக்கப்பட்டது; 1860-ல் அ. ஐ. நாடுகளில் 30,626 மைல் ரெயில்வேயும் 25 இலட்சம் டன் நிறையுள்ள கப்பல்களும் இருந்தன.

மேற்கு நோக்கிய போக்கு: அமெரிக்காவின் சமூகப் பொருளாதார வரலாறு எப்போதும் மாறுபட்டுக் கொண்டேயிருந்த எல்லைப் புறத்தைப் பொறுத்தேயமைந்தது. குடியேற்றக்காரர்களின் விடா முயற்சியும், நிரம்ப நிலம் கிடைக்கும் என்னும் ஆசையும் மேற்குக் கடற்கரையை நோக்கி அவர்களை யீர்த்துச் சென்றன. போக்குவரத்துச் சாதனக் குறைவு, நோய், அபாயம் முதலியவற்றால் அவர்கள் மனம் தளரவில்லை. நாளடைவில் கிழக்குக்கரையிலிருந்து மேலைக்கரை வரையில் இடைப்பட்ட நாடு முழுவதிலும் அவர்கள் குடியேறினர். இம்மேற்றிசைப் போக்கு, அமைதியான மேற்செலவுக்கும், சாம்ராச்சிய வெற்றிக்கும் சிறந்த உதாரணமாக இருக்கிறது. ஒருவகையான பிரதேச வாரி விசேஷப் பயிற்சியும் வேலைப் பகிர்வும் தோன்றின; இவற்றால் பொருளாதார வளர்ச்சியும், வாழ்க்கைத்தர உயர்வும், வர்த்தக விரிவும் பொது நன்மையும் வளர்ச்சியடைந்தன.

உள்நாட்டுப் போர்: கைத்தொழிலில் மிக்க வட இராச்சியங்களுக்கும், விவசாயத்தில் மிக்க தென் இராச்சியங்களுக்கும் இடையே பல வேறுபாடுகள் இருந்தன. அடிமைகளை வைத்து வேலை வாங்கி வந்த தென்னாட்டு விவசாய முதலாளிக்கும், கைத்தொழில் செய்பவனுக்கும் தன் சொந்தப் பண்ணையில் வேளாண்மை செய்யும் குடியானவனுமான வடக்கத்திய வேலையாளுக்கும் மிக்க வேறுபாடிருந்தது. கைத்தொழில் முன்னேற்றமடைந்துவந்த வடநாட்டவரைக்கண்டு தென்னாட்டவர் பொறாமை கொண்டனர். ஆபிரகாம் லின்கனின் தலைமையில் நடந்த உள்நாட்டுப் போரில் வட இராச்சியங்கள் வெற்றியடைந்தன. அமெரிக்காவில் தனிமனிதச் சுதந்திர விருப்பமும், வாழ்க்கையில் நம்பிக்கையுணர்ச்சியும் கொண்ட நடுத்தர வகுப்புத் தோன்றியபோது தென்னாட்டுப் பெரும் பண்ணைகள் பகுக்கப்பட்டுச் சிறு பண்ணைகள் உண்டாயின. இதற்கு அடிமைகள் கிடையாதிருந்தது முக்கிய காரணம். அதே காரணம் எந்திர சாதன வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தது. மேலும் ஐரோப்பிய நெசவு நிலையங்களுக்கு அனுப்பப் பருத்தி ஏராளமாக இப்போது உற்பத்தி செய்யப்பட்டது. கைத்தொழிலும் ஊக்கமாக முன்னேறிற்று. உள்நாட்டுப் போருக்கப்புறம் வட நாட்டினரும் உழவுத் தொழிலில் ஊக்கம் காட்டத் தொடங்கினர். போர்களால் ஏற்பட்ட பணவீக்கம் மேலும் மேலும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தது. 1863 ஆம் ஆண்டுச் சட்டப்படி நல்லதொரு பாங்குத் தொழில் முறை ஏற்படுத்தப்பட்டது. காப்புவரித் தகராறு உள்நாட்டுப் போரோடு முடிவடைந்து விட்டது. அ. ஐ. நாடுகள் முழுக் காப்புக் கொள்கை நாடாக மாறிற்று. காப்பு வரித் தடைகளால் கைத்தொழில் வளர்ச்சி நன்கு தழைத்தது. அமெரிக்கா உலகத்தில் ஒரு முதன்மை வாய்ந்த நாடாவதற்கு வழிகொண்டது.

உள்நாட்டுப் போருக்குப் பின்: 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சி அமெரிக்கத் தற்காலப் பொருளாதார வரலாற்றிற்கு அடிப்படையாகும். அந்நாட்டு மக்கள் தொகை 1810-ல் 70 இலட்சமாயிருந்தது. 1860-ல் 310 இலட்சமாகி, 1930-ல் 13 கோடியாக மிகுந்தது. உள்நாட்டுப் போரைத் தொடர்ந்த அரை நூற்றாண்டில் 360 இலட்சம் மக்கள் அமெரிக்காவில் குடிபுகுந்தனர். இவர்களைச் சோதித்து உட்புக விடுவதற்குப் பல முறைகள் கையாளப்பட்டன.

விவசாய உற்பத்தியும் பலவகையிலும் மிகுந்தது. விவசாயிகள் 125 இலட்சம் பேரிருந்தனர். விசேஷ உழவு முறைகள், வாணிப விவசாயம், எந்திர சாதன உழவு முதலியவை வரவர மிகுதியாகக் கையாளப்பட்டன; டிராக்டர்களும், எந்திரக் கலப்பைகளும், உயர்த்திகளும் அதிகமாக உபயோகப்பட்டு வந்தன. அகப்படும் நிலத்தின் மிகுதியும் அரசாங்கத்தாரின் உதவியும் உழவுத் தொழிலைப் பலவகையும் பெருகிவளரச் செய்தன. இராச்சியங்களில் விவசாயக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு இராச்சியத்திலும் 30.000 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டது. காட்டியல், வானிலையியல், விவசாயம், ரசாயனம் முதலிய இயல்களைப் பற்றி ஆராயப் பல ஆராய்ச்சி நிலையங்கள் தோன்றின. இவற்றால் எந்திர விவசாயம் முன்னேற்றம் அடைந்தது.

உழைப்பைக் குறைக்கும் எந்திர சாதனங்களால் கைத்தொழில் முன்னேற்றம் அடைந்தது. உள்நாட்டுப் போரால் சரக்குகளின் தேவை அதிகப்பட்டது. காப்புக் கொள்கையினால் பிற நாட்டுப் போட்டி குறைந்தது. 1789 லிருந்து விதிக்கப்பட்டுவரும் காப்பு வரிகள் பழைய கைத்தொழில்களைக் காத்துப் புதுக் கைத்தொழில்களைத் தோற்றுவித்தன. இக்காப்புத் தடைகளுக்குப்பின் மிகப் பெரிய ஏக உரிமை நிலையங்கள் தோன்றின. அரசியல் யுக்திகளும் பொருளாதாரத் துறையில் நுகர்வோரைச் சுரண்டலும் மிகுந்தன.

அமெரிக்கப் பொருளாதாரத் துறையிலும் பல முக்கியமான முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. தொழிற்கூட்டுக்களும் டிரஸ்ட்டுகளும் தோன்ற ஆரம்பித்தன. தாது எண்ணெய், இரும்பு, மோட்டார் முதலிய உற்பத்திகள் பெரிய முதலாளிகள் கையில் சிக்கின. ஆயினும் தொழிலாளிகள் புரட்சி வேண்டாமலே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டனர்.

தலையிடாமைக் கொள்கை மங்குதல்: 19ஆம் நூற்றாண்டில் தனிமனிதனின் முயற்சியால் வெகுவாக அமெரிக்கா பெரிய கைத்தொழில் நாடாக வளர்ந்ததாயினும், அந் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில், அரசாங்கம் நாட்டுப் பொருளாதாரத்தில் மிகவும் தலையிடத் தொடங்கிற்று. வாணிபம், செலாவணி, பாங்குத் தொழில், தொழிலாளி வகுப்பு, வர்த்தகச் சங்கங்கள் முதலியனவெல்லாம் அரசாங்கத்தின் தலையிடுகைக்கு இடம் கொடுத்தன. முதல் உலக யுத்தத்திற்கு முன்பே அமெரிக்கா உலகிலேயே மிக்க செல்வம் நிறைந்த நாடாக விளங்கிற்று. டாலரைப் பிற நாடுகளில் முதலீடு செய்வதன் மூலம் வெளிநாட்டிலும் தன் பொருளாதாரச் செல்வாக்கை வளர்த்துக்கொண்டது. அமெரிக்காவின் தேசிய வருமானமும் வசதிகளும் அந்நாட்டை உலகத்திலேயே ஒரு பலமுள்ள நாடாக மாற்றின. முதல் உலக யுத்தம் அமெரிக்காவிற்கு மிகுந்த இலாபத்தை அளித்தது. உலக வியாபாரச் சந்தை அமெரிக்க வியாபாரத்திற்கு அடி பணிந்தது.

மந்தம்: முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு, முதலில் விலையேற்றங்கள் தோன்றின. நிலங்களின் விலை ஏறிற்று. சில கைத்தொழில்கள் மிகவும் சிறப்பெய்தின. பிற நாடுகள் கொடுக்கவேண்டிய யுத்தக் கடன்களால் அ. ஐ. நாடுகளுக்கு ஏற்பட்ட வரும்படியும் காப்புத் தடைகளால் உண்டான சாதகச் செலவு பாக்கிகளும், யுத்த ஈட்டுப் பணமும் ஆகிய மிகைப் பணம் பிற நாடுகளில் தாராளமாக முதலீடு செய்யப்பட்டுச் சரிக்கட்டப்பட்டது. ஆனால் போரில் தோற்ற ஜெர்மனியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஏராளமான யுத்த ஈட்டுப் பணம் பெரிய வியாபார மந்தத்தில் கொண்டுவந்துவிட்டு விட்டது.

ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்கா செய்த உதவிக்குப் பதிலாக 4,626 கோடி ரூபாய் தொகையை 20 ஐரோப்பிய நாடுகள் கொடுக்கவேண்டியதென்றும், 1987ற்குள் அத்தொகை கொடுபட வேண்டியதென்றும் ஏற்பட்டது. வட்டி கூட்டி, மொத்தத் தொகை 8,876 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டது. கிட்டத்தட்ட 1,200 கோடி ரூபாய் வரையில் கொடுபட்டது; அமெரிக்கா தங்கமும் வெள்ளியுமாகச் சேமித்தது. ஐரோப்பிய நாடுகளில் தங்க இருப்புக் குறைந்துபோய், பணவாட்டம் ஏற்பட்டது. பல நாடுகளின் வாணிபம் இம்முறையில் நடந்துவரவே மேற்போக்கான ஒரு சுபிட்சம் நாடெங்கும் காணப்பெற்றது. ஆயினும் திடீரென்று 1929-ல் பண உலகம் தன் உயர் நிலையிலிருந்து கீழிறங்கி விட்டது. ஒரே மாதத்தில் கையிருப்புக் கடன் பத்திரங்கள் நஷ்டமடைந்த தொகை, ஜெர்மனி 60 ஆண்டுகளில் தர வேண்டிய மொத்த யுத்த நஷ்ட ஈட்டுப் பணத்தைப் போல நான்கு மடங்காகும். கடன் பளு ஏறிற்று. நிலைமை சீர்கேடுற்றது. விலைவாசிகள் இறங்கின. பாங்குகள் மூழ்கின. சர்வதேசக் கடன்களைத் திருப்பித் தருவாரில்லை. இங்கிலாந்து தங்கப் பிரமாணத்தினின்றும் நழுவிற்று.

அப்போது அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ஹூவர், நிலைமை தானே சீர்திருந்தும் என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டார். உற்பத்தி குறையவில்லை; ஆனால் வாங்குவோரில்லை என்னும் நிலைமை ஏற்பட்டது. 1933 மார்ச்சில் பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் ஜனாதிபதியான போது, அமெரிக்க வரலாற்றிலேயே பெரிய பாங்கு நெருக்கடி தோன்றிற்று; அந்நாட்டிலிருந்த 18,000 பாங்குகளும் காலவரையறை யின்றி மூடப்பட்டன.

புதுமுறை ஏற்பாடு (New Deal): ரூஸ்வெல்ட் காங்கிரசைப் பிரத்தியேகமாகக் கூட்டிப் பொருளாதார நிபுணர்களுடைய ஆலோசனைகளை ஆராய்ந்தார். பல புதுத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொணரப்பட்டன. பாங்குச் சட்டம், புனரமைப்புப் பொருளாதார கார்ப்பரேஷன், விவசாயச் சரிக்கட்டு நிருவாகம், வேலைக்கு ஆட் குறைத்தல், வேலையில்லாதோருக்குப் பெரும்பான்மை உதவி, பொது வேலைகளைப் பற்றிய கொள்கை முதலியன பொருளாதார மந்தத்தை ஒழிக்க மேற்கொள்ளப்பட்டன. "நியாயமான இலாபத்தை யாரும் எதிர்க்கமாட்டார்கள்; ஆனால் பொதுமக்களில் பெரும்பான்மையோர் பெருந் துயரடைந்திருக்கும்போது, இலாபமா, காருண்யமா என்பதில் ஐயமிருக்க முடியாது" என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் புதுமுறை ஏற்பாட்டை விளக்கினார்.

புதுமுறை ஏற்பாடு தங்கப் பிரமாணத்தை நிராகரித்தது; 60 சென்ட் டாலரைத் தோற்றுவித்தது. ஆயினும் அ. ஐ. நாடுகளுக்கு 33,200 இலட்சம் டாலர் பெறுமான தங்கம் சொந்தமாயிருந்தது. வேண்டுமென்றே டாலரின் மதிப்பைக் குறைத்ததால் மற்ற நாட்டுச் செலாவணிகளும் போட்டிக்காக மதிப்பைக் குறைக்கத் தொடங்கின. சர்வதேச வாணிபம் இதனால் பாதகம் அடைந்தது. புதுமுறை ஏற்பாட்டின் உள்நாட்டுக் கொள்கை ஓரளவு வெற்றிகண்டது. வேலையில்லா நிலைமை ஓராண்டிற்குள் சீர்திருந்தி, 35 இலட்சம் பேர் வேலை பெற்றனர். பொதுமக்களுடைய பணத்தின் கொள்முதல் சக்தி மிகுந்தது. புரட்சிகளையும் இரத்தஞ் சிந்துதலையும் தவிர்ப்பதற்காகப் பொதுநல அரசு கொள்கையொன்று புதிதாகத் தோன்றிற்று.

புதுமுறை ஏற்பாட்டிற்கு எதிர்ப்பு: 1934 ஆம் ஆண்டு இறுதிக்குள் புதுமுறை ஏற்பாடு ஒருவிதமான மேற்போக்கான வெற்றியடைந்தது. வியாபாரத்தில் இலாபம் தோன்ற ஆரம்பித்தது; பாங்குத் தொழில் திருத்தியமைக்கப்பட்டது. புதுமுறை ஏற்பாடு போட்டியைக் குறைத்தது; உற்பத்தியையும் குறைத்தது; விலைவாசிகளை ஏற்றிவிட்டது. சுங்கவரி உயர்த்தப்படவில்லையாயினும், டாலரின் செலாவணி மதிப்புக் குறைக்கப்பட்டதால், சுங்கவரி 60% ஏறி நின்றது. இவற்றிற்கெல்லாம் உதவியாகப் பொதுச் செலவுகள் ஏராளமாக மேற்கொள்ளப்பட்டன. தன் நிருவாகத்தின் முதல் 4 ஆண்டுகளில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ரூ. 6,000 கோடி வரையில் நிவாரண வேலைக்காகவும் பொதுநலச் செயல்களுக்காகவும் செலவிட்டார். வியாபாரத்தை ஊக்கும் நோக்கத்தோடு இச்செலவை அவர் மேற்கொண்டாராயினும், அவர் எண்ணம் முழுவதும் ஈடேறியதாகச் சொல்ல முடியாது. சிலர் புதுமுறை ஏற்பாட்டை இடசாரி ஏற்பாடு என்றனர்; தொழிற் சங்கங்களை நிறுவித் தொழிலாளர்களின் கூலியை உயர்த்த அவர் முயன்றது முதலாளிகளின் பகைமையை யுண்டாக்கிற்று. பெரிய பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்களைப் பண்டைய பொருளாதாரக் கருத்துக்களையே பற்றியிருந்தவர்கள் விரும்பவில்லை. புதுமுறை ஏற்பாட்டின்படி செலவிடப்பட்ட பெருந்தொகைகள், பெரிய வியாபாரங்களை இயக்குவோரிடம் சென்று, அவர்களிடமிருந்து திரும்பவும் தேசியக் கடனாக அரசாங்கத்திற்கே வந்து சேர்ந்தன. டென்னசி பள்ளத்தாக்குத் திட்டத்திற்கு அவர் செலவிட்டது, கனக் கைத்தொழில்களுக்கும் நுகர்வோருக்கும் நன்மை பயந்ததாயினும், தனி முதலாளிகளின் நலன்களைப் பாதித்ததாகக் குறை கூறப்பட்டது. ஆயினும் புதுமுறை ஏற்பாட்டின் துணிகரமான முயற்சிகள் பொருளாதார வாழ்க்கையைப் பெரிதும் மாற்றிவிட்டன. அவ்வேற்பாடு முடிவுற்ற பின்னும், அதன் ஆதிக்கம் பல பொருளாதாரத் துறைகளிலும் காணப்பெற்றது. ஜனநாயக ஆட்சிகளில்கூடப் பொருளாதாரத் திட்டம் வகுத்தல் அதிகமாகக் கையாளப்பட்டது. சோஷலிசப் புரட்சியின்றியே பொதுநல ஆட்சிக்கு வழி கோலப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தமும் அதன் பிறகும்: உலக முழுவதும் ஈடுபட்டிருந்த தளவாட உற்பத்திப் போட்டியும், இரண்டாம் உலக யுத்தமும் அமெரிக்காவிற்கு மற்றொரு வாய்ப்பை அளித்தன. சமீப கால நிகழ்ச்சிகளில் பல ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் வறுமையெய்தின; அந்நாடுகளின் கைத்தொழில்கள் சிதைந்தன; கப்பல்கள் பல அழிந்துவிட்டன. போரின் இறுதியில் அமெரிக்கா உலகிற்கே கடன் கொடுத்த நாடாகவும், பெரிய உற்பத்தி நிலையமாகவும் விளங்கிற்று. 1947-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகின் பிற பகுதிகளுக்கு ரூ. 10,000 கோடி அளவிற்குச் சரக்குகளும் சேவைகளும் அளித்துள்ளன; மற்ற நாடுகள் எல்லாம் சேர்ந்து அ. ஐ. நாடுகளுக்கு இவற்றிற்குப் பிரதியாக ரூ. 4,500 கோடி பெறுமானமுள்ள ஏற்றுமதிமட்டும் செய்யக் கூடிய நிலையிலேயிருந்தன. ஆகையால் மற்ற நாடுகள் ரூ. 5,500 கோடி டாலர் மதிப்பு எவ்வாறேனும் பெற்று, வர்த்தகச் சமநிலை எய்தவேண்டியிருந்தது; போர்க் காலத்தில் இரவல் குத்தகை முறையை அமெரிக்கா ஆரம்பித்து வைத்தது.

போர் முடிவுற்றதும் இரவல் குத்தகையும் முடிவுறவே, டாலர் பற்றுக்குறையை உலகம் சமாளிக்க வேண்டியதாயிற்று. இப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு அமெரிக்கா பிரிட்டனுக்கு ரூ. 1,500 கோடி கடன் கொடுத்தது. 1948-ல் நிலைமையின் கடுமையை உணர்ந்த அமெரிக்க வெளிநாட்டுக் காரிய

தரிசி ஜார்ஜ் மார்ஷல் என்பவர், மார்ஷல் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். இத் திட்டப்படி 16 ஐரோப்பிய நாடுகளுக்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் 15 மாதங்களுக்கு மட்டும் ரூ. 2,500 கோடி அளிக்கப்பட்டது. மொத்தத்தில் இத் திட்டத்தின்படி அமெரிக்கா சுமார் ரூ. 11,000 கோடி செலவு செய்யவேண்டி வரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத் தொகையில் 80% இனமாகக் கொடுக்கப்படும். இவற்றைத் தவிர, அ.ஐ. நாடுகள் ராணுவ உதவிக்காகப் பல முன்னேற்றமடையாத நாடுகளுக்குக் கோடிக்கணக்காகச் செலவு செய்து வருகின்றன. அன்றியும் ஐ.நா.ஸ்தாபனங்களின் பல கிளைகளின்மூலம் உலகப் பொருளாதார அமைதிக்கு ஏற்பன செய்ய அ. ஐ. நாடுகள் பெரிதும் முயல்கின்றன.

இன்று அ. ஐ. நாடுகள் உலகில் பெரிய வன்மையுள்ள நாடாக விளங்குகின்றன. சமுதாய நலன்களைக் கருதித் தனித்துவம் பின்னடைந்து வருகிறது. தனித்து நிற்கும் கொள்கை போய், உலகத் தலைமையை ஏற்று நடத்தும் நிலை வந்துள்ளது. செல்வமும் வறுமைபோலத் தனித்தியங்க முடியாது என்பது விளங்கிற்று. உலகப் பொருளாதார முன்னேற்றமும், அரசியல் குழப்பமின்மையும், உலக அமைதியும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுயநலத்திற்கும் தேவையாயிருக்கின்றன. மூன்று நூற்றாண்டுகளின் முயற்சியால் ஒரு செல்வமுள்ள நாடு உலகத் தலைமை பூண்டு நடத்தும் நிலைமை எய்தியுள்ளது. அமைதிக்கும் சுபிட்சத்திற்கும் இன்னும் அதிகமாக உதவக்கூடிய பெரிய திறமை அந்நாட்டில் அமைந்து கிடக்கின்றது. கே. ஏ. ஜோ.

**அரசியல் அமைப்பு:** ஆரம்பமும் வளர்ச்சியும்: இந்நாடுகள் செய்து கொண்ட அரசியல் சட்டங்களே உலகில் முதன் முதலாக எழுதப்பெற்ற அரசியல் அமைப்புக்கள். இவைகளே முதன் முதலாக அரசியலை அமைப்பதற்கெனத் தனியே மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் செய்தவையாகும். ஒரு பொதுத் தேர்தலில் மக்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற பின்னர் இவை அமலுக்கு வந்தன.

கூட்டாட்சி நிர்ணய சபை (Federal Convention) கூடிக் குடியேற்ற நாட்டுப் பிரமுகர்கள் அனைவரும் அதில் அங்கத்தினர்களாய்ச் சேவை செய்தார்கள். வாஷிங்டன், பிராங்க்ளின், ஹாமில்ட்டன், மாடிசன் முதலியோர் இச்சபையில் அங்கம் வகித்தனர். இச் சபை பிலடெல்பியாவில் 1787-ல் கூடி, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி அரசியல் அமைப்பைத் தயார் செய்தது. இராச்சியச் சட்ட சபைகளின் அங்கீகாரம் பெற்றதும் இவ்வமைப்பு 1789-ல் அமலுக்கு வந்தது.

இந்த அமைப்பே இன்றும் அமெரிக்கக் கூட்டாட்சி அரசாங்கத்தின் அடிப்படை. இவ்வமைப்பு இதுவரை 22 முறை திருத்தப்பட்டிருக்கிறது. எனினும், இவற்றுள் முக்கிய அமிசங்கள் எவைகளும் மாறவில்லை.

கூட்டாட்சி அரசாங்கம் (Federal Government): ஐக்கிய நாடுகளே உலகில் முதன் முதலில் தோன்றிய கூட்டாட்சி இராச்சியம். ஒரு கூட்டாட்சி இராச்சியத்தில் அதன் பொது சர்க்காரும் அதன் பல பகுதிகளில் தனித்தனி சர்க்கார்களும் உண்டு. அரசியல் அதிகாரங்களை இரண்டு சர்க்கார்களும் பகிர்ந்து கொள்ளும். இராச்சிய சர்க்கார்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களையே செலுத்தலாம். அரசியல் அதிகாரங்களை இருவிதமான சர்க்கார்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமாகையால் அரசியல் அமைப்பு, எழுத்து மூலமாயும், எளிதில் மாற்றக்கூடாததாகவும் இருப்பது அவசியம். மேலும், இராச்சியங்களுக்கு இடையே எழும் வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஓர் உச்ச நீதி மன்றமும் கூட்டாட்சி இராச்சியங்களுக்கு அவசியம். இம்மூன்று கூட்டாட்சி அமிசங்களையும் ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பில் காணலாம்.

அரசியல் அதிகாரப் பங்கீடு (Division of Powers): கூட்டாட்சி சர்க்கார் ஈடுபட்டிருக்கும் பல அலுவல்களில் முக்கியமானவை வெளிநாட்டு விவகாரங்கள், போர்க்கால அமைதிக்கால சம்பந்தமான விஷயங்கள், நாணய சம்பந்தமான பிரச்சினைகள், அயல் நாட்டு வியாபாரம், கூட்டாட்சியில் அடங்கியுள்ள இராச்சியங்களிடையே வியாபாரம் வாணிபம் தொழில் முதலியவற்றை ஒழுங்கு செய்தல், தபால் தந்திகள், அளவைகள், குடிமை உரிமைகளை அளித்தல் முதலியன.

அரசியல் அமைப்பில் காணப்படும் பதினேழு அதிகாரங்களே கூட்டாட்சி சர்க்கார் இன்று செய்துவரும் எல்லா வேலைகளுக்கும் ஆதாரம். கூட்டாட்சியின் அதிகாரங்கள் விரிவாகப் பெருகியுள்ளன. முக்கியமாக வியாபாரம், போலீஸ், பிற நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்யும் அதிகாரம் முதலிய துறைகளில் கூட்டாட்சி இராச்சியத்தின் அதிகாரம் வளர்ந்துள்ளது.

அரசியல் அமைப்பால் கூட்டாட்சி சர்க்காருக்கு அளிக்கப்படாத பிற அதிகாரங்கள் எல்லாம் இராச்சியச் சட்ட சபைகளைச் சேர்ந்தவை. இது பொதுவிதி. ஆனால் இதற்கு விலக்குகள் பல உள்ளன. சில காரியங்களை இராச்சிய சர்க்கார்கள் செய்யக் கூடாதென்று அரசியல் அமைப்பு நிருணயித்துள்ளது. இவற்றுள் முக்கியமானவை:—பிற தேசங்களுடன் உறவு வைத்துக் கொள்ளுதல், உடன்படிக்கைகள் செய்தல், தளவாடங்களை வைத்துக்கொள்ளுதல், நாணயம் அச்சடித்தல், ஏற்றுமதிகள் இறக்குமதிகளின் பேரில் வரிகள் விதித்தல், உண்டியல்கள் கொடுத்தல் முதலியன. இக்கட்டுப்பாடுகளின் நோக்கம் கூட்டாட்சி சர்க்காரின் அதிகாரத்திற்குக் கேடு ஏற்படாமல் காப்பதேயாகும்.

குடிமை உரிமைகளைக் காப்பாற்றும் நிமித்தம் கூட்டாட்சி சர்க்காரும் இராச்சிய சர்க்கார்களும் மக்களின் உரிமைகள் சம்பந்தமான பல வகையான சட்டங்களைச் செய்யக்கூடாதென அரசியல் அமைப்பு விதித்துள்ளது. சட்ட சபைகள் ஆட்கொணர் சட்ட உரிமையைத் தாற்காலிகமாக ரத்துச் செய்யவும், மக்களுக்குச் சமமான சட்டப் பாதுகாப்பை அளிக்க மறுக்கவும், சட்ட ரீதியான வழியிலன்றி மக்களுடைய உயிர், பொருள் முதலிய உரிமைகளை நீக்கவும், அவர்களுடைய வேறு பல உரிமைகளைக் குறைக்கவும் கூடாதென அரசியல் திட்டம் வரையறை செய்துள்ளது. கூட்டாட்சி சர்க்காரும், இராச்சிய சர்க்கார்களும் இக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கின்றன.

கூட்டாட்சி சர்க்காருக்கும், இராச்சிய சர்க்கார்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள தனி அதிகாரங்கள் (Exclusive powers) தவிர, அவை இரண்டிற்கும் கூட்டு அதிகாரங்கள் (Concurrent powers) பல உண்டு. வரிகள் விதித்தல், கடன் வாங்குதல், கம்பெனிகள், பாங்குகள் முதலிய ஸ்தாபனங்களைப் பதிவுசெய்தல், வாணிபம், தொழில் சம்பந்தமான விதிகள் செய்தல், சமூகப் பாதுகாவலுக்கு (Social security) வேண்டியன செய்தல் முதலியன இவ்வகுப்பைச் சேர்ந்தவையாகும்.

கூட்டாட்சி சர்க்காரின் அமைப்பு: நீதிப் பகுதி, நிருவாகப் பகுதி, சட்ட சபைப் பகுதி என்னும் அரசியலின் மூன்று உறுப்புக்களைப் பிரித்து, வெவ்வேறு அதிகாரிகள் வசம் ஒப்படைப்பது அமெரிக்க அரசியல் அமைப்பின் அடிப்படையான கொள்கை. இவை ஒன்றோடொன்று தொடர்பின்றிச் சுயேச்சையுடன் வேலை

செய்யும். ஒவ்வோர் உறுப்பையும் மற்ற இரண்டும் கண்காணிப்பில் வைத்திருந்து, அதன் வரம்பு கடவாமல் காக்கும். குடி உரிமைகளைப் பாதுகாக்க இவ்வித அதிகாரப் பிரிவினை அவசியம் என்பது அமெரிக்க அரசியல் சட்டத்தை அமைத்தவர்களின் நம்பிக்கை.

ஜனாதிபதி (President): ஜனாதிபதி நிருவாகத் தலைவர். இவர் நான்கு ஆண்டு பதவி வகிக்கிறார். இவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை 21 வயதுவந்த எல்லாக் குடிகளுக்கும் உண்டு. வாக்காளர்கள் ஒரு தேர்தல் சபையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அச்சபை ஜனாதிபதியை நியமிக்கும். 35 வயதுக்கு மேற்பட்ட அமெரிக்கக் குடிகளே ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் மிகவும் விரிவானவை. நாட்டுச் சைனியங்களுக்கு இவர் பிரதானத் தலைவர். அமெரிக்கத் தூதர்கள், மந்திரிகள், உச்சநீதி மன்ற நீதிபதிகள் முதலிய உயர் உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் இவர் நியமிக்கிறார். செனெட் சபை இவர் செய்யும் நியமனங்களை ஆமோதிக்க வேண்டும். உச்சநீதி மன்ற நீதிபதிகளைத் தவிரப் பிற உத்தியோகஸ்தர்களை வேலையிலிருந்து இவர் நீக்கலாம். குற்றவாளிகளை மன்னிக்கும் சிறப்புரிமை இவருக்கு உண்டு.

கூட்டாட்சி நிருவாகம் இராச்சிய இலாகா (Department of State), பாதுகாப்பு, உள்நாடு, வியாபாரம், தொழில், விவசாயம் முதலிய பத்து இலாகாக்களை உடையது. இவற்றின் தலைவர்கள் ஜனாதிபதிக்கு ஒரு மந்திரி சபையாக இருந்து வருகின்றனர். 'காபினெட்' என்று இச்சபையைக் குறிப்பது வழக்கம். ஆனால் பிரிட்டன், பிரான்சு போன்ற பார்லிமெண்டு அரசாங்க முறையைப் பின்பற்றும் நாடுகளில் மந்திரி சபைகளுக்குள்ள நிருவாக அதிகாரங்கள் இச்சபைக்கில்லை. ஜனாதிபதி இச் சபையாரின் ஆலோசனைப்படி நடந்துகொள்ள வேண்டும் என்னும் விதி கிடையாது. அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கவேண்டும் என்றுகூட நிபந்தனை இல்லை. நிருவாகத் தனிப்பொறுப்பு ஜனாதிபதியைச் சேர்ந்தது. அவருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய ஆலோசனையாளர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

சென்ற நூற்றைம்பது ஆண்டுகளில் ஜனாதிபதியின் அதிகாரம் வளர்ச்சியடைந்துள்ளது. யுத்த காலங்களில் ஜனாதிபதி சர்வாதிகாரியாக விளங்குகிறார். அமெரிக்க உள்நாட்டு யுத்தம் நடந்த காலத்தில் ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம் லின்கனும், முதல் உலக யுத்த காலத்தில் ஜனாதிபதியாயிருந்த வில்சனும், இரண்டாவது உலக யுத்தகாலத்தில் ஜனாதிபதியாயிருந்த பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டும் யுத்த காலத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு ஒரு வரம்பில்லை என்பதை நிரூபித்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடியிலும் அவருடைய அதிகாரம் வேண்டிய அளவுக்குப் பெருகுவதை ரூஸ்வெல்ட்டின் ஜனாதிபத்திய காலத்தில் காணலாம். மற்றைக் காலங்களில் நிருவாகம் தவிரச் சட்டங்கள் செய்வதிலும் ஜனாதிபதி முக்கியமான பாகத்தை வகிக்கிறார். ஜனாதிபதியைச் சர்வாதிகாரி என்று கூற முடியாது. எனினும் காங்கிரசின் ஒத்துழைப்பும், உச்சநீதி மன்றத்தின் ஆமோதிப்பும் இல்லாமல் நீண்டகாலம் அவர் எவ்விதமான அதிகாரத்தையும் செலுத்த இயலாது.

காங்கிரசு கூட்டாட்சியின் சட்டசபை. இது செனெட், பிரதிநிதிகள் சபை என்னும் இரண்டு சபை கொண்டது.

செனெட் (Senate) உயர்சபை. இராச்சியங்களுக்கு இதில் சமமான பிரதிநிதித்துவம் உண்டு. பெரிதாயினும், சிறிதாயினும் ஒவ்வொரு இராச்சியமும் இச்சபைக்கு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளது. இச்சபையின் மொத்த அங்கத்தினர்கள் 96 பேர். இவர்களுள் மூன்றில் ஒரு பங்கினரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். இராச்சியமெல்லாம் ஒரே தொகுதி. ஒவ்வோர் அங்கத்தினரும் ஆறு ஆண்டுகள் பதவி வகிக்கிறார்.

அமெரிக்க அரசியல் சட்டத்தில் செனெட் மிக முக்கியமான நிலைமை வகிக்கிறது. நிதி சம்பந்தமான மசோதாக்கள் தவிர, மற்ற எல்லா மசோதாக்களையும் நிறைவேற்றுவதில் கீழ்ச்சபையோடு சமமான அதிகாரம் இதற்கு உண்டு. நிதி சம்பந்தமான மசோதாக்களையும் திருத்தும் உரிமையை இச்சபை பெற்றிருக்கிறது. நிருவாகத்திலும் இச்சபைக்கு ஓரளவு பங்குண்டு. ஜனாதிபதி பிற தேசங்களுடன் செய்யும் உடன்படிக்கைகளையும், பல உத்தியோகங்களுக்குச் செய்யும் நியமனங்களையும் இச்சபை மூன்றில் இரு பங்கு வாக்குக்களுடன் ஆமோதிக்க வேண்டும். மேலும் ஜனாதிபதியையும் பிற உயர்ந்த உத்தியோகஸ்தர்களையும் விசாரிக்கும் ஓர் உயர்நீதி சபையாகவும் இருந்து வருகிறது.

பிரதிநிதிகள் சபை (House of Representatives): இது 435 அங்கத்தினர்களைக் கொண்டது. சனத்தொகைக்குத் தக்கவாறு இராச்சியங்களுக்கு இதில் ஸ்தானங்கள் உண்டு. ஒவ்வோர் அங்கத்தினரையும் தேர்ந்தெடுக்கும் தேர்தல் தொகுதிகளாக நாடு முழுவதும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இராச்சியச் சட்ட சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ள வாக்காளர்கள் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள். சாதி, நிறம், பண்டைய அடிமை நிலை முதலிய எக்காரணம் பற்றியும் யாருக்கும் வாக்குரிமையை மறுக்கக் கூடாது என்று அரசியல் சட்டத்தில் கண்டுள்ளது. எனினும் தெற்கு இராச்சியங்களில் பல சாக்குகளை வைத்துக்கொண்டு ஒரு கோடி நீக்ரோ சாதியினருக்கு வாக்குரிமை இல்லாமல் செய்திருக்கின்றனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாக்குரிமையுண்டு. பிரதிநிதிகளாக விரும்புவோர் 25 வயதிற்கு மேற்பட்ட அமெரிக்கக் குடிகளாக இருக்கவேண்டும். மேலும் தங்கள் தேர்தல் தொகுதிகளில் வாழ்பவர்களாயும் இருக்கவேண்டும். பிரதிநிதிகள் சபைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும்.

அரசியல் அமைப்பின்படி காங்கிரசு ஆண்டிற்கு ஒரு முறையாவது கூடவேண்டும். சட்டசபைகள், ஆண்டில் ஒன்பது மாதங்கள்வரை நீடித்திருப்பது வழக்கம். மேல் சபைத் தலைவர் உபஜனாதிபதி; கீழ்ச்சபையின் தலைவர் அச்சபையார் தேர்ந்தெடுக்கும் ஒரு சபாநாயகர் (Speaker). இரு சபைகளிலும் பிரேரேபிக்கப்படும் மசோதாக்களைப் பரிசீலனை செய்யப் பல கமிட்டிகள் உண்டு. கமிட்டிகள் பரிசீலனை செய்து சிபார்சுகளோடு அனுப்பும் மசோதாக்களையே சட்ட சபைகள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும். ஒவ்வொரு மசோதாவும் மும்முறை ஆலோசிக்கப்படும். இரண்டு சபைகளும் ஏற்றுக்கொண்ட மசோதாக்கள் ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்பெற்றபின் சட்டங்களாகும். ஜனாதிபதி இவ்வாறு நிறைவேறிய மசோதாவிற்குத் தம் சம்மதத்தை மறுத்தால், சட்ட சபைகள் மூன்றில் இரண்டு பங்கு வாக்குக்களால் மறுபடியும் அம்மசோதாவை நிறைவேற்றினால் ஜனாதிபதியின் சம்மதமின்றியே அது சட்டமாகும். ஜனாதிபதியின் சம்மதத்தை மீறிக் காங்கிரசு இவ்வாறு சட்டங்களைச் செய்வது அசாதாரணம். காங்கிரசில் அங்கத்தினர்களுக்கும் முழு வாக்குரிமை

யும், பேச்சுரிமையும் உண்டு. காங்கிரசின் நடைமுறை பொதுவாக உலகில் உள்ள வேறு இராச்சிய சட்ட சபைகளின் நடைமுறையைப் பின்பற்றியதே யாகும்.

ஜனாதிபதியும் காங்கிரசும் : நிருவாகத்திற்கு அவசியமான சட்டங்களைச் சட்டசபை நிறைவேற்ற வேண்டும். சட்டசபையின் கருத்தைத் தழுவி நிருவாகப்பகுதி நடந்துகொள்ளவேண்டும். நிருவாகப் பகுதியின் நடவடிக்கைகளைச் சட்டசபையார் நாள்தோறும் பரிசீலனை செய்து, தவறுகளைக் கண்டித்தும், பொதுமக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும்படி செய்தும் வந்தால் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படும். அமெரிக்க சர்க்காரில் நிருவாகப் பகுதியும் சட்டசபையும் ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாமல் அமைக்கப்பட்டுள்ளதால் அவை இரண்டும் ஒத்துழைப்பது கடினமான காரியம். அரசியல் அமைப்பின்படி அவை இரண்டிற்கும் உள்ள தொடர்புகள் சிலவே. ஜனாதிபதி ஒவ்வோர் ஆண்டும் காங்கிரசுக்கு நாட்டு நிலைமையைப் பற்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். வேண்டும்போது காங்கிரசுக்கு அவர் நிருபம் (Messages) அனுப்பலாம் ; காங்கிரசை விசேஷமாகக் கூடும்படியும், குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி ஆலோசிக்குமாறும், சட்டங்கள் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளலாம். காங்கிரசில் நேரில் வந்திருந்து தாமும் பேசலாம். இத்தொடர்புகள் அரசியல் அமைப்பில் அனுமதிக்கப்பட்டவை. நிருவாகத் தலைவரும் அவர் மந்திரிகளும் சட்டசபைகளில் அங்கம் வகிக்கக்கூடாது. அங்கு மசோதாக்களைப் பிரேரணை செய்யவும், அவற்றைப்பற்றிய விவாதங்களில் கலந்துகொள்ளவும், நிருவாகத்தைக் குறைகூறுவோருக்குச் சமாதானம் அளிக்கவும் நிருவாகிகளுக்கு உரிமையில்லை. காங்கிரசு நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஜனாதிபதி தம் சம்மதத்தை அளிக்க மறுக்கலாம். காங்கிரசு கமிட்டிகளின் முன்பு தோன்றி, நிருவாக அதிகாரிகள் சாட்சியம் அளிக்கலாம்.

இவை தவிர, நிருவாகப்பகுதிக்கும் காங்கிரசுக்கும் பழக்கத்தில் பல தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது அரசியல் கட்சிகளால் ஏற்பட்டுள்ள தொடர்பு. ஜனாதிபதி ஓர் அரசியல் கட்சியின் தலைவர். அவருக்கும் அவர் கட்சியைச் சேர்ந்த காங்கிரசு அங்கத்தினர்களுக்கும் நெருங்கிய உறவு எப்போதும் இருந்து வருகிறது. தமது கட்சியின் திட்டங்களை நிறைவேற்றுவதில் நிருவாகப்பகுதியும் சட்டசபையும் ஒத்துழைப்பது இந்த உறவினால் சாத்தியமாகிறது. மேலும் காங்கிரசில் பல கமிட்டித் தலைவர்களுடன் ஜனாதிபதி தம் திட்டங்களைக் குறித்துக் கலந்து ஆலோசிப்பதும் உண்டு. சட்டங்களுக்குத் தம் சம்மதத்தை மறுத்தல், சட்டசபை அங்கத்தினர்கள் விரும்பிய காரியங்களைச் செய்தல், பொது மக்களின் கருத்தை அறிதல் முதலிய பல வேறு வழிகளில் ஜனாதிபதி காங்கிரசை நிருவாகத்தோடு ஒத்துழைக்குமாறு செய்கிறார்.

நிருவாகப்பகுதியும் சட்டசபையும் தனி அதிகாரம் பெற்றிருப்பதால், இரண்டும் ஒன்றிற்கொன்று முரணாக நடப்பதும் உண்டு. ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், காங்கிரசில் பெரும்பாலோர் வேறு கட்சியினராகவும் இருந்தால், நிருவாகப்பகுதியும் சட்டசபையும் ஒன்றிற்கொன்று முட்டுக்கட்டை போட்டு, வேலை செய்யாமல் தடுக்கும். அத்தகைய நிலையில் நிருவாகப்பகுதி செய்ய நினைத்துள்ள திட்டங்களை நிறைவேற்ற இயலாமல் போகின்றது. சட்ட நிருமாண வேலை சீர்குலைகின்றது. இதேமாதிரியான சமயத்தில் பார்லிமெண்டு முறையில் மந்திரி சபை ராஜிநாமா செய்யும் ; அல்லது புதிய தேர்தல்கள் நடக்கும். ஆனால் அமெரிக்காவில் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்கச் சட்டசபையால் முடியாது ; சட்டசபையை அவரால் கலைக்கவும் முடியாது. அரசாங்கம் ஸ்தம்பித்து நிற்கும். அமெரிக்க அரசியலமைப்பில் இது ஒரு பெருங்குறை என்று எல்லா அரசியல் வாதிகளும், நிபுணர்களும் ஒப்புக்கொள்கின்றனர். இக்குறையை நீக்குவது எப்படி என்பதுபற்றி மாத்திரம் அவர்களிடையே ஒருமித்த கருத்தைக் காணோம்.

கூட்டாட்சி நீதி மன்றங்கள் (The Federal Judiciary) : கூட்டாட்சி நீதி மன்றங்கள் மூன்று படிகளில் அமைந்துள்ளன. அடிப்படையில் 94 கூட்டாட்சி ஜில்லா நீதி மன்றங்களும், இடையே 13 கூட்டாட்சி அப்பில் நீதி மன்றங்களும், தலைமையில் ஓர் உச்சநீதி மன்றமும் (Federal Supreme Court) உள்ளன. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை கூட்டாட்சிச் சட்ட திட்டங்கள், உடன்படிக்கைகள், கூட்டாட்சி அரசியல் திட்டம் முதலிய எல்லா விவகாரங்களையும் கூட்டாட்சி நீதி மன்றங்களே விசாரிக்கின்றன. இராச்சியங்களில் உள்ள இராச்சிய நீதி மன்றங்களுக்கும் இவற்றிற்கும் யாதொருவிதமான தொடர்பும் இல்லை. உச்சநீதி மன்றம் வாஷிங்டன் நகரிலும், மற்றவை ஐக்கிய நாடுகளில் பல வேறு நகரங்களிலும் உள்ளன.

கூட்டாட்சி உச்சநீதி மன்றம் 1791-ல் நிறுவப்பட்டது. இது ஒரு பிரதம நீதிபதியையும், எட்டு உப நீதிபதிகளையும் கொண்டது. இவர்களை ஜனாதிபதி செனெட் சபையின் அங்கீகாரம் பெற்று நியமிக்கிறார். நீதிபதிகள் தங்கள் வாழ்நாட்கள் முடிவுவரை பதவி வகிக்கிறார்கள். 70 வயதை அடைந்தவர்கள் முழுச் சம்பளத்துடன் வேலையைவிட்டு விலகலாம். காங்கிரசில் துரோகக் குற்றச்சாட்டு முறைப்படியே (Impeachment) அன்றி நீதிபதிகளைப் பதவியிலிருந்தும் விலக்க முடியாது ; நியமனம் ஆனபின் அவர்கள் ஊதியத்தைக் குறைக்கவும் கூடாது. நீதிபதிகளின் சுதந்திரம் இவ்வாறு முழுவதும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

உச்சநீதி மன்றத்தின் அதிகாரங்களில் முக்கியமானது காங்கிரசும் இராச்சியச் சட்டசபைகளும் செய்யும் சட்டங்களை, அவை அரசியல் அமைப்பை அனுசரித்துள்ளனவா என்று நிருணயிப்பதே. காங்கிரசும், இராச்சியச் சட்டசபைகளும், செய்த பல சட்டங்கள் அரசியல் திட்டத்திற்கு முரணானவை என்று உச்சநீதி மன்றம் தீர்மானித்ததால் ரத்தாகியுள்ளன. அரசியல் அமைப்பு மிகவும் சுருக்கமானதாகையால் நீதிபதிகள் அதற்குத் தங்கள் மனம்போன வழிகளில் பொருள் செய்து, பல சட்டங்களை நிராகரித்திருக்கிறார்கள். ஐக்கிய நாடுகளில் எந்த இராச்சிய அரசாங்கமும் உச்சநீதி மன்றத்தார் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டங்களைத்தான் செய்ய இயலும். இக்காரணத்தால் அரசாங்கம் மக்கள் விரும்பும் பல காரியங்களைச் செய்ய இயலாமல் போகலாம். உச்சநீதி மன்றம், அதன் முன்வந்த வழக்குகளுக்குத் தொடர்புடைய சட்டங்களை மாத்திரமே இவ்வாறு பரிசீலனை செய்யும் ; எனினும் உச்சநீதி மன்றத்திற்கு மக்களின் பிரதிநிதிகள் செய்யும் சட்டங்களை ரத்துச் செய்யும் அதிகாரத்தை விட்டுவைப்பது உசிதமானதல்ல என்பது ஒரு கருத்து. அடிப்படையான மக்கள் உரிமைகளை அவ்வப்போது சட்டசபைகளில் பெரும்பாலோர் இயற்றும் சட்டங்கள் தகர்த்துவிடாமல் காக்க, நாட்டின் உச்சநீதி மன்றத்துக்கு அதிகாரம் அரசியலமைப்புப் படியே இருத்தல் அவசியம் என்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

உச்சநீதி மன்றம் கூட்டாட்சியைப் பலப்படுத்துவதில் அரிய சேவை செய்துள்ளது. இராச்சியங்களிடையே ஏற்பட்ட விவகாரங்களைத் தீர்த்து, அவற்

றைக் கூட்டாட்சியோடு இணைத்து, நாட்டு மக்களிடையே ஐக்கிய உணர்ச்சியையும் தேசியத்தையும் வளர்த்துள்ளது. அமெரிக்க மக்கள் உச்சநீதி மன்றத்திற்குப் பெருமதிப்பு அளிக்கின்றார்கள்.

இராச்சியங்களின் அரசியல் அமைப்பு: 1789-ல் கூட்டாட்சியை ஏற்படுத்திய உறுப்பு இராச்சியங்கள் 13. இன்று அமெரிக்கக் கூட்டாட்சியில் உறுப்பாக உள்ள இராச்சியங்கள் 48. புதிய இராச்சியங்கள் 35-ம் கூட்டாட்சியால் தோற்றுவிக்கப் பட்டவை. இராச்சியங்களின் அரசியல் முறை கூட்டாட்சி அமைப்பிற்கு முரணாக இருக்கக் கூடாது. குடியரசு முறையைப் பின்பற்றி இருக்கவேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளுக் குட்பட்டுத் தங்கள் அரசியல் சட்டங்களை உறுப்பு இராச்சியங்கள் எவ்விதமாகவேனும் அமைத்துக் கொள்ளவும், மாற்றிக் கொள்ளவும் உரிமை பெற்றிருக்கின்றன.

தங்களுடைய அரசியல் சட்டங்களை வகுக்கவும், மாற்றி அமைக்கவும் இராச்சியங்கள் மூன்று முறைகளைக் கையாளுகின்றன. சிலவற்றில் சட்டசபைகளே அரசியல் சட்டத்தையும் திருத்தும் உரிமை பெற்றிருக்கின்றன. சட்டசபைகள் பிரேரணை செய்யும் திருத்தங்களை ஒரு குடியொப்பத்தின் மூலம் வாக்காளர்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் அவை அமலுக்கு வரும். பெரும்பாலான இராச்சியங்களில் அரசியல் சட்டத்தைச் செய்யவும் மாற்றவும் அரசியல் நிருணய சபைக் கூட்டங்கள் (Constitutional Conventions) தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஒரு சில இராச்சியங்களில் அரசியல் சட்டத்தில் மாறுதல்களைப் பிரேரேபிக்கும் உரிமையை வாக்காளர்கள் பெற்றுள்ளார்கள். திருத்தப் பிரேரணைகளைத் தயார் செய்து வாக்காளர்கள் இராச்சியச் சட்டசபைக்கு மனுச் செய்து கொள்கிறார்கள். இத்தகைய மனுக்களில் 5,000 முதல் 10,000 வரை வாக்காளர்கள் கையொப்பமிட வேண்டும் என்று நிபந்தனை செய்துள்ளார்கள். இத்திருத்தப் பிரேரணைகளை வாக்காளர்கள் ஒரு குடியொப்பத்தில் (Referendum) ஏற்றால் பிறகு அவை அமலுக்கு வரும்.

இராச்சிய அரசியல் சட்டங்கள் பொதுவாக நீண்டவை. அரசாங்க அமைப்பைத் தவிர, வேறு பல விஷயங்களைப் பற்றிய விவரமான விதிகளையும் நிபந்தனைகளையும் அவற்றுள் சேர்த்திருக்கிறார்கள். இதனால் அரசியல் சட்டத்திற்கும் சாதாரணச் சட்டங்களுக்கும் வேறுபாடு தெரிவது கடினம். அரசியல் சட்டங்களை அடிக்கடி மாற்றவேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. இராச்சிய சர்க்கார்கள் கூட்டாட்சி சர்க்காரைப் பின்பற்றியுள்ளன. நிருவாகப் பகுதியும், சட்டசபையும், நீதிமன்றமும் முற்றிலும் பிரிக்கப்பட்டுள்ளன. அவை ஒன்றை ஒன்று கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டும் என்பது இதன் நோக்கம்.

இராச்சிய அரசாங்க நிருவாகத் தலைவர் ஒரு கவர்னர். சில இராச்சியங்களில் அவருக்கு உதவியாக ஓர் உப கவர்னரும் உண்டு. இவர்களையும் வேறு சில முக்கியமான இராச்சிய உத்தியோகஸ்தர்களையும் மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். 27 இராச்சியங்களில் நான்கு ஆண்டுகளும், மிகுந்த 21 இராச்சியங்களில் இரண்டு ஆண்டுகளும் கவர்னர்கள் பதவி வகிக்கிறார்கள். கூட்டாட்சியில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் யாவையும் இராச்சிய சர்க்கார்களில் கவர்னர்களுக்கு உண்டு.

நெப்ராஸ்கா என்னும் ஓர் இராச்சியத்தில் தவிர, மற்றெல்லா இராச்சியங்களிலும் சட்டசபைகள் இரண்டு சபைகளையுடையன. மேல் சபைகள் 17 முதல் 56 உறுப்பினரையும், கீழ்ச் சபைகள் 150 முதல் 400 உறுப்பினரையும் கொண்டுள்ளன. சட்டசபைகளின் உறுப்பினர்கள் எல்லோரையும் மக்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கின்றனர். வாக்குரிமை 21 வயது வந்த அமெரிக்க மக்கள் எல்லோருக்கும் உண்டு. கல்வி, ஆள்வரி, பதிவு, தலக்குடிமை ஆகிய பலவிதமான தகுதிகளை வைத்துத் தெற்கு இராச்சியங்களில் நீக்ரோ சாதியினருக்கு வாக்குரிமை இல்லாமல் செய்துள்ளனர்.

கீழ்ச் சபைகளின் காலம் பெரும்பாலான இராச்சியங்களில் நான்கு ஆண்டுகள்; மிகுந்தவற்றில் இரண்டு ஆண்டுகள். மேல் சபைகள் நிரந்தரமானவை. சாதாரணமாக மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இரு சபைகளுக்கும் நிதி விஷயங்கள் தவிர, மற்ற எல்லாவற்றிலும் கீழ்ச்சபைகளோடு சமமான அதிகாரம் உண்டு.

சட்டசபைகளின் உள் அமைப்பும் நடைமுறையும் காங்கிரசைப் பின்பற்றியவை. மேல் சபைகளில் உப கவர்னரும், கீழ்ச் சபைகளில் அவற்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் தலைமை வகிக்கிறார்கள். மசோதாக்களைப் பரிசீலனை செய்ய, இரு சபைகளிலும் பல கமிட்டிகள் உண்டு. ஒவ்வொரு மசோதாவையும் ஒவ்வொரு சபையும் மும்முறை ஆலோசனை செய்யும். இரு சபைகளும் நிறைவேற்றிய மசோதாக்கள் கவர்னர் அங்கீகாரம் பெற்றபின் சட்டங்களாகும். சட்டசபைத் தலைவர்களும், பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களும் சட்டசபையின் வேலையை நிருணயிக்கிறார்கள்.

நிருவாகத் தலைவருக்கும் சட்டசபைக்கும் உள்ள தொடர்பு கூட்டாட்சியில் ஜனாதிபதிக்கும் காங்கிரசுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. இராச்சியச் சட்டசபைகளுக்குக் கவர்னர்கள் ஆண்டறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் அப்போதைக்கப்போது இராச்சியச் சட்டசபையில் வந்திருந்து சொற்பொழிவு நிகழ்த்தலாம்; நிருபம் அனுப்பலாம்; சட்டசபையை விசேஷமாகக் கூடும்படி கேட்கலாம். சட்டசபை நிறைவேற்றிய மசோதாக்களில் திருத்தங்கள் செய்யும்படி கேட்கலாம்; வரவு செலவுத் திட்டங்களில் தனி விவரங்களை (Items) நிராகரிக்கலாம். சட்டங்களுக்குத் தம் அங்கீகாரத்தை முற்றிலும் மறுக்கலாம். இவ்வாறு பல வழிகளில் சட்டமியற்றும் வேலையில் கவர்னர்கள் கலந்துகொள்கிறார்கள்.

இராச்சிய நீதி மன்றங்கள்: இவை மூன்று படிகளில் அமைந்துள்ளன; தலைமையில் இராச்சிய அப்பீல் நீதி மன்றமும், இடையில் ஜில்லா நீதி மன்றங்களும் உள்ளன. அடிப்படையில் நகரங்களில் நகராண்மை நியாய மன்றங்களும், சிவில் நியாய மன்றங்களும் போலீஸ் நியாய மன்றங்களும் உள்ளன. நாட்டுப்புறத்தில் கவுன்டி நியாய மன்றங்களும், கௌரவ நீதிபதிகளும் (Justices of the peace) உண்டு. உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளைக் கவர்னர்கள் மேல் சபைகளின் அங்கீகாரம் பெற்று நியமிக்கிறார்கள். ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் இவர்கள் பதவி வகிக்கிறார்கள். மற்ற நியாய மன்றங்களில் நீதிபதிகள் ஓரிரண்டு ஆண்டுகள் மட்டும் பதவி வகிக்கிறார்கள். பெரும்பாலான இராச்சியங்களில் மக்கள் நேரில் இவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இராச்சிய நீதி மன்றங்கள், இராச்சியச் சட்டசபைகள் செய்யும் சட்டங்களையும், இராச்சிய அரசியல் சட்டங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களையும் விசாரணை செய்கின்றன. கூட்டாட்சிச் சட்டங்களும், அரசியல் அமைப்பும் தொடர்புற்ற விவகாரங்களில் இராச்சிய உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புக்களைக் கூட்டாட்சி உச்சநீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

தல சுயாட்சி: அமெரிக்க நகரங்கள் பெரும்பாலானவற்றை மக்கள் நேரில் தேர்ந்தெடுக்கும் ஒரு நகரசபையும் மேயரும் பரிபாலனம் செய்கின்றனர். பெரிய நகரங்கள் எல்லாவற்றிலும் அநேகமாக இம்முறையே நடைபெறுவது. இதுவே பண்டைய முறை.

நகரசபைகள் கவனிக்கும் விஷயங்களில் முக்கியமானவை அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாப்பது, போலீஸ் நிருவாகம், நகர வரவு செலவுத் திட்டத்தை ஆமோதிப்பது, வரிகள் விதிப்பது, நிருவாகத்தை மேற்பார்வையிடுவது என்பவை. நகர நிருவாகத் தலைவர் மேயர். மக்கள் இவரை நேரில் தேர்ந்தெடுக்கிறார்கள். இரண்டு முதல் ஆறு ஆண்டுகள்வரை மேயர்கள் பதவி வகிக்கிறார்கள். பல ஊர்களில் மேயர்களுக்குச் சம்பளம் உண்டு.

அமெரிக்காவில் புதிதாகத் தோன்றிய நகரபரிபாலன முறைகள் இரண்டு. கமிஷன் திட்டம் என்பது ஒன்று; நகர மானேஜர் திட்டம் என்பது மற்றொன்று. முதல் முறைப்படி நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கமிஷனர்கள் நகர நிருவாகத்தை மேற்கொள்வர். நகர மானேஜர் திட்டப்படி நகர மக்கள் சில அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பர். அவர்கள் ஒரு மானேஜரை நியமித்து, நிருவாகத்தை நடத்த ஏற்பாடு செய்வர். அந்த மானேஜரே ஏனைய நகரசபை உத்தியோகஸ்தர்களை நியமிப்பார்.

நிருவாகப் பயிற்சியும் அனுபவமும் உள்ளவர்களையே நகர சபைகள் மானேஜர்களாக நியமிக்கின்றன. நகராட்சியில், கவுன்டி சபைகளும் சிறிது ஈடுபடுகின்றன. இவை செய்யும் வேலைகள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. மிக முக்கியமான சேவைகள் சிலவற்றைச் செய்ய 'விசேஷ ஜில்லாக்கள்' (Special districts) அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பல நகர்கள் அடங்கி யிருக்கின்றன.

நாட்டுப்புறங்களில் தல சுயாட்சி: அமெரிக்காவில் நகரங்களில் உள்ள பொது வசதிகள் பலவும் நாட்டுப்புறங்களிலும் உண்டு. நாட்டுப்புறங்களில் தல சுயாட்சி இரண்டு படிகளில் அமைந்துள்ளது. நாடு முழுவதும் கவுன்டிகளாகப் (ஜில்லா) பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கவுன்டியும் டவுன்ஷிப் (Township), கிராமம் (Village), பரோ (Borough) என்னும் சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கவுன்டி சபைகளும், கிராம சபைகளும் தல சுயாட்சி ஸ்தர்பனங்கள். ஐக்கிய நாடுகளின் சில பாகங்களில் கவுன்டி சபைகள் பெரும்பாலான தல விஷயங்களைக் கவனித்துக்கொள்கின்றன. வேறு சில பகுதிகளில் கிராம சபைகள் முக்கிய ஸ்தாபனங்களாக இருக்கின்றன. இன்னும் சில பாகங்களில் இருவகை ஸ்தாபனங்களும் முக்கியமான சேவைகளைச் செய்து வருகின்றன.

கவுன்டி நிருவாகம் (County administration): ஒவ்வொரு கவுன்டியிலும் நிருவாகத்தை நடத்த மூன்று முதல் ஐந்து பேர்களைக்கொண்ட ஒரு போர்டு உண்டு. இதற்குக் கவுன்டி போர்டு, கோர்ட்டு, கமிஷன், மேற்பார்வைக்குழு என்று பல பெயர்கள் வழங்குகின்றன. இதன் அங்கத்தினர்களை மக்கள் நேரில் தேர்ந்தெடுக்கிறார்கள்.

கவுன்டி நிருவாகம் செய்யும் முக்கிய உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள். கவுன்டி போர்டுகள் கவனிக்கும் வேலைகளில் முக்கியமானவை பின்வருவன: பொது உதவி அதாவது ஏழைகள், கிழவர்கள், வேலை செய்யச் சக்தியில்லாதவர்கள், குருடர், செவிடர், ஊமை முதலியோருக்கு உதவி செய்தல், சாலைகளை அமைத்து, அவற்றிற்கு மராமத்துச் செய்தல்; சுகாதாரம், மருத்துவ நிலையங்கள். ஜனன மரணப்பதிவு, கல்யாண அனுமதிப் பத்திரங்கள், போலீஸ், அமைதி, ஒழுங்கு, சிறைகள் முதலியவற்றைக் கவனித்தல்.

கிராம சுயாட்சி (Townships, villages, boroughs): நியூ இங்கிலாந்து என்னும் ஐக்கிய நாடுகளின் வடகிழக்குப் பகுதியிலுள்ள இராச்சியத்தில் நாடு முழுவதும் டவுன்ஷிப்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு டவுன்ஷிப்பும் 20 முதல் 40 சதுர மைல் வரை பரப்பு உடையது. சாதாரணமாக ஒரு கிராமமும் சுற்றுப்புறங்களில் உள்ள தனிப் பண்ணைகளும் அதில் அடங்கியிருக்கும்.

நேர்முகமான ஜனநாயக ஆட்சியை இங்கு நாம் காணலாம். இத்தகைய ஜனநாயகம் உலகில் ஐக்கிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்தில் சில கான்டன்களிலும் மட்டுமே உண்டு.

ஐக்கிய நாடுகளின் மற்றப் பாகங்களில் கவுன்டி போர்டுகளும், விசேஷ போர்டுகளும், கிராம சபைகளும், டவுன்ஷிப் செய்யும் வேலைகளைச் செய்கின்றன. கிராம சபைகளை இந்தியப் பஞ்சாயத்துக்களோடு ஒப்பிடலாம். ஆனால் இப்பஞ்சாயத்துக்களைவிடக் கிராம சபைகளுக்குள்ள அதிகாரங்கள் அதிகம்.

அரசியல் கட்சிகள்: அமெரிக்காவில் நாடெங்கும் பரவியுள்ள இருபெரும் கட்சிகளும் பல சிறு கட்சிகளும் உள்ளன. கூட்டாட்சி அரசியல் தொடங்கிய காலத்தில் பெரிய கட்சிகள் இரண்டும் தோன்றின. முதலில் குடியரசு கட்சி கூட்டாட்சிக் கட்சி என்ற பெயரோடு ஆரம்பித்தது. பின்னர் சிலகாலம் விக் கட்சி (Whigs) என்னும் பெயருடன் விளங்கியது. ஹாமில்டன், லின்கன், தியடோர் ரூஸ்வெல்ட் ஆகியோர் இக்கட்சிக்குத் தலைமை வகித்திருக்கிறார்கள். ஜனநாயகக் கட்சிக்கு ஆரம்பத்தில் குடியரசு கட்சி என்னும் பெயர் இருந்தது. ஜெபர்சன், ஜாக்சன், பிரையன், வில்சன், பிராங்களின் ரூஸ்வெல்ட் ஆகியோர் இக்கட்சியின் தலைவர்களாய் இருந்திருக்கின்றனர்.

கொள்கைகளில் இவ்விரண்டு கட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு மிகக் குறைவு. இவ்விரண்டு கட்சிகளும் தங்களை ஆதரிக்கும் மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்தை நாடுகின்றன. குடியரசு கட்சியைப் பெரும் பணக்காரர்களும், ஆலை முதலாளிகளும் ஆதரிக்கின்றனர்; ஜனநாயகக் கட்சியை விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர வருக்கத்தார் ஆதரிக்கின்றனர். வியாபாரமும் தொழிலும் மிகுந்துள்ள நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் குடியரசு கட்சிக்குப் பலம் அதிகம். தெற்கில் ஜனநாயகக் கட்சிக்குப் பலம் அதிகம்.

சிறுபான்மைக் கட்சிகள் பல அமெரிக்காவில் அப்போதைக்கப்போது தோன்றி மறைந்துள்ளன. சோஷலிஸ்டுக் கட்சி, முன்னேற்றக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவை இன்று சிறுபான்மைக் கட்சிகள். சிறுபான்மைக் கட்சிகள் பலமடைய அமெரிக்கச் சமுதாயத்திலும், அரசியலிலும் இடமில்லை. சென்ற நூற்றாண்டில் தோன்றிய சிறு கட்சிகள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டு, ஓரிரண்டு தேர்தல்களில் கலந்துகொண்ட பின்னர்ப் பழைய கட்சிகளோடு சேர்ந்து விட்டன. இப்போதுள்ள மூன்றும் கட்சிகள் சமீபகாலத்தில் தோன்றியனவே.

அமெரிக்காவில் கட்சி வேலையில் ஈடுபட்டவர்கள் பத்து லட்சத்திற்கு மேலுள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் ஊதியமின்றி வேலை செய்கிறார்கள்.

கட்சித் தலைவரை அமெரிக்கர்கள் 'பாஸ்' (Boss) என்பர். கட்சிகளால் விளையும் தீமைகளைத் தவிர்க்கச்

சென்ற ஐம்பது ஆண்டுகளில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பல இராச்சியங்களில் கட்சிகளுடைய அமைப்பு, நடைமுறை, சட்டசபைக்கும் பல உத்தியோகங்களுக்கும் கட்சியின் சார்பாகப் போட்டியிடுவோரைத் தேர்ந்தெடுக்கும் முறை முதலியவற்றைப் பற்றி இராச்சியச் சட்டசபைகள் பல சட்டங்களை இயற்றி, நிபந்தனைகளையும் விதிகளையும் செய்துள்ளன. தேர்தல் செலவுகள், கட்சி நிதிகளுக்குப் பணம் சேர்த்தல், தேர்தல்களை ஒழுங்காக நடத்துதல் முதலியவை குறித்தும் சட்டங்கள் செய்துள்ளன. இவ்வகைச் சீர்திருத்தங்களின் பயனாக, அரசியல் கட்சிகளை ஒரு சிலர் கைப்பற்றி ஆள்வது கடினமான காரியமாகியுள்ளது. அரசியல் கட்சிகளை அவற்றின் அங்கத்தினர்கள் ஜனநாயக வழிகளில் நடத்துவது சாத்தியமாகியுள்ளது. நா. ஸ்ரீ.

**கல்வி :** கல்வி தருவது அறிவு வளர்ப்பதற்காக மட்டுமன்று, சமுதாய நலம் தேடுவதற்காகவுமாகும் என்பதே அமெரிக்கர்களுடைய குறிக்கோள். அத்தகைய நோக்கத்துடன் தரும் கல்வியே சுதந்திரத்தைப் பாதுகாக்கவல்லது என்று அமெரிக்கச் சுதந்திர சமுதாயத்தை அமைத்தவர்களுள் ஒருவரான ஜெபர்சன் கூறினார்.

ஆயினும் அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டத்தில் கல்வி பற்றிய குறிப்பே கிடையாது. அதற்குக் காரணம் பாடசாலைகளை ஏற்படுத்துவதும், நிருவகிப்பதும் அமெரிக்க ஐக்கியத்தில் சேர்ந்துள்ள நாடுகளின் பொறுப்பாக எண்ணப்படுவதேயாகும். ஆகவே 48 இராச்சியங்களும் தனித்தனியே கட்டாயக் கல்விச் சட்டம் இயற்றிக்கொண்டு, பாடசாலைகளை அமைத்து, நிறம், மதம், பால் முதலிய வேறுபாடு எதுவுமின்றி ஆரம்பக் கல்வி அளித்து வருகின்றன. இந்தப் பாடசாலைகளுக்கான செலவை நாட்டு அரசாங்கமோ அல்லது தலத் தாபனங்களோ செய்து வருகின்றன.

ஆதியில் கிழக்குக்கரையில் மட்டுமே குடியேற்ற நாடுகள் அமைந்திருந்தன. பின்னரே மேற்குக்கரை வரையிலும் நாடுகள் உண்டாயின. இந்த நாடுகளில் குடியேறிய மக்கள் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலிருந்து வந்தவர்கள். அத்துடன் இவர்களுள் கிழக்குக்கரை மக்கள் கைத்தொழிலிலும் தென்பகுதிமக்கள் வேளாண்மையிலும் ஈடுபட்டவர்கள். இவ்வாறு பல்வேறு நாட்டவராகவும், பல்வேறு தொழிலுடையவராகவுமிருந்த போதிலும் இவர்களை ஒரே சமுதாயத்தினராகச் செய்தது கல்வியே யாகும்.

இப்பொழுது அமெரிக்காவிலுள்ள வயது வந்தவர் 820 இலட்சம் பேரில் 16 இலட்சம் பேரே எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். மற்றவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் ஆரம்பக் கல்வியும், மற்றொரு மூன்றில் ஒரு பகுதியினர் உயர்நிலைக் கல்வியும் பெற்றவர். ஒரு கோடிப் பேர் கல்லூரிக் கல்வி பெற்றவராவர்.

அமெரிக்காவிலுள்ள பாடசாலைகள் பலதிறப்பட்டன. அவை அனைத்தும் ஒரேவிதமான முறையில் அமைந்துள்ளனவல்ல. சில அரசாங்கம் நடத்தும் இலவசப் பள்ளிகள் ; சில தலத் தாபனப் பாடசாலைகள் ; சில பொது மக்கள் நிறுவியுள்ளவை.

ஆயினும் அமெரிக்கா தரும் கல்வியில் ஆரம்பக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி என நான்கு நிலைகள் காணப்படுகின்றன. அமெரிக்கக் குழந்தைகள் ஆறாவது வயதில் படிக்கத் தொடங்கி, ஆரம்பப் பாடசாலையிலும், உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றபின், கல்லூரிக் கல்வி பயில்கின்றனர். கல்லூரிக் கல்வி முடிந்தபின், ஆசிரியர், மருத்துவர், வழக்கறிஞர் போன்ற தொழில்களுக்கு வேண்டிய கல்வியைக் கற்கின்றனர்.

இத்தகைய பள்ளிகள் தவிர, குழந்தைகளுக்காகக் குழந்தைப் பள்ளிகளும், தொழிற் பள்ளிகள் போன்ற பலவகையான பள்ளிகளும் உள. மக்களிடம் பெற்ற வரியைக் கொண்டு நடைபெறும் பாடசாலைகளில் மத போதனை கூடாது என்று எல்லா நாடுகளும் சட்டம் இயற்றி யிருக்கின்றன.

அமெரிக்கக் கல்வி முறையில் அறிஞர்களிடையே இரண்டுவிதமான அடிநிலைக் கருத்துக்கள் காணப்படுகின்றன. மக்கள் தம் வாழ்வின் புதுப் புதுத் துறைகளில் ஈடுபட வேண்டியிருப்பதால் புதுப் புதுப் பாடத் திட்டங்கள் அமைத்தல் அவசியம் என்று ஒரு பகுதியினர் கருதுகின்றனர். விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதைவிட, விஷயங்களை ஆராய்ந்து முடிவு செய்யக் கூடிய சிந்தனை சக்திப் பயிற்சி அளித்தலே முக்கியம் என்று மற்ற அறிஞர்கள் கருதுகிறார்கள். இவர்கள் முன்னேற்ற வாதிகள் என்று அழைக்கப்படுவர். இந்த இரண்டு கருத்துக்களும் முரண்பட்டனவாக இருப்பினும், அவை இரண்டும் அமெரிக்கக் கல்வி முறையில் ஒருவாறு இணைந்தே காணப்படுகின்றன.

அமெரிக்காவில் எங்குப் பார்த்தாலும் பொதுப் பாடசாலைகள் உள. சிறுவர்கள் கட்டாயமாகப் பதினறு வயது வரையில் பாடசாலைகளில் படித்தாக வேண்டும். கல்வி இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது. அதனால் அங்கு எழுத்தறிவின்மை என்பது பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம்.

அமெரிக்காவில் குழந்தைகள் மூன்று வயதளவில் குழந்தைப் பள்ளிகளில் பலர் ஒன்று சேர்ந்தும், ஒரே விளையாட்டுப் பொருளைப் பலர் பொதுவாக வைத்துக் கொண்டும் விளையாடக் கற்கிறார்கள். ஐந்து வயதில் குழந்தைத் தோட்டப் பள்ளியில் சேர்கிறார்கள். அங்கும் விளையாட்டே பிரதானம். அடுத்த ஆண்டில் ஆரம்பக் கல்வி பெறத் தொடங்குகிறார்கள்.

குழந்தைகள் செயல் மூலமே கல்வி பெறுகிறார்கள். இதுவே முன்னேற்ற முறைக் கல்வி எனப்பெறும். எல்லாப் பாடசாலைகளிலும் இந்த அமிசம் காணப்படினும், எழுதப் படிக்கவும் கற்றுக் கொடுக்கிறார்கள். அத்துடன் பிறர் உரிமைகளை மதித்து நடக்கவும், பொறுப்பு ஏற்றுக்கொள்ளவும், மற்ற மாணவர்களுடன் ஒத்துழைக்கவும் மாணவர் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களுக்காகத் தயார் செய்யப்பெறும் பத்திரிகைகள் வாயிலாக அமெரிக்காவிலும் அதற்கு வெளியிலும் நடைபெறும் செய்திகளையெல்லாம் அறிந்துகொள்கிறார்கள். சுயாட்சி முறையிலும் பயிற்சி பெறுகின்றனர்.

அமெரிக்கக் கல்வி நிபுணர்களின் குறிக்கோள் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெறவேண்டும் என்பதேயாகும். சிறுவர்கள் ஆறு ஆண்டுகள் ஆரம்பக் கல்விபெற்ற பின்னர், மூன்று ஆண்டுகள் நடுநிலைப் பள்ளியிலும், மூன்று ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயிலுகின்றனர்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடிந்த பின்னர், சிலர் கலைகளோ தொழிலோ கற்பிக்கும் ஆரம்பக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் படித்துத் தங்கள் கல்வியை முடித்துக்கொள்கிறார்கள். மிகுந்த திறமையுடைய மாணவர்கள் உயர்நிலைக் கல்லூரியிலோ, அல்லது பல்கலைக் கழகத்திலோ சேர்கின்றனர். பெரும்பாலும் கல்லூரிகள் அனைத்திலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே கல்வி பெறுகின்றனர். நான்கு ஆண்டுகள் படித்தபின் பட்டம் பெறுகிறார்கள்.

உயர்தரக் கல்வி தரக்கூடிய நிலையங்கள் 1,800 உள. அவற்றுள் மூன்றில் ஒரு பங்கு ஸ்தாபனங்களே பொது வரிப் பணத்தால் நிறுவப்பட்டு நடைபெறுவன.

அரசாங்கம் நடத்தும் கல்லூரிகளில் அவைகளை நிறுவிய இராச்சியத்தில் வாழும் மக்கள் சம்பளம் தர வேண்டியதில்லை. பல ஏழை மாணவர்கள் ஓய்வு நேரத்தில் வேறு தொழில்கள் செய்து, கல்விக்கு வேண்டிய பணத்தைத் தேடிக்கொள்கிறார்கள். மாணவர்கள் உணவு விடுதிகளில் பரிமாறும் வேலை செய்தாலும் அதை யாரும் இழிவாகக் கருதுவதில்லை.

வியாபார அலுவலகங்களில் வேலை பார்க்க விரும்புகிறவர்களுக்கு வேண்டிய கல்வியைத் தரும் பாடசாலைகள் இரண்டாயிரத்துக்குமேல் இருக்கின்றன. அதுபோலவே அமெரிக்கச் சிறுவர்களும் சிறுமிகளும் கல்வி கற்பதற்கு வேண்டிய வசதிகள் அனந்தம். ஓஹியோ இராச்சியக் கல்லூரிகளில் எண்ணூறு விதமான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

வயதுவந்தோர் கல்வி கற்பதற்கும் ஏராளமான வசதிகளை அமைத்திருக்கிறார்கள். அவற்றை மூன்று கோடிப் பேர் பயன்படுத்தி வருகிறார்கள். அத்துடன் நாற்பத்திரண்டு பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் வயதுவந்தோர்க்குத் தபால் மூலம் கல்வி கற்பித்து வருகின்றன. இவை தவிர, இத்தகைய தபால்வாயிலாகக் கல்வி போதிப்பதற்காகவே ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்கள் 350 ஆகும்.

அயல் நாடுகளிலிருந்து வந்து குடியேறுபவர்க்கு ஆங்கில மொழியை மிக விரைவில் கற்றுக்கொடுத்து, அவர்களை அமெரிக்கக் குடிகளாகச் செய்வதற்காகவும் கல்வி ஸ்தாபனங்கள் உண்டு.

**கலைகள் :** அமெரிக்காவில் ஓவியக்கலையானது 17ஆம் நூற்றாண்டில்தான் உதயமாயிற்று. தொடக்கத்திலிருந்த ஓவியர்கள் தொழில் நுட்பம் அதிகமாகத் தெரியாதவர்கள். சிறந்த ஓவியர்களைப் பார்க்க முடியாத நிலைமைதான் இதற்கு முக்கிய காரணம். அதனால் அமெரிக்க ஓவியர்களுள் பலர் ஐரோப்பாவுக்குச் சென்று, சிறந்த ஓவியர்களிடம் பயின்று வந்தனர். அவர்கள் ஐரோப்பிய ஓவியங்களைத் தழுவியே வரைந்து வந்தனர்.

ஆரம்ப அமெரிக்கா ஓவியங்களுள் முக்கியமானது 1729-ல் ஜான் ஸ்மிபெர்ட் என்பவர் வரைந்த உரு ஓவியமாகும் (Portrait). அவர் ஐரோப்பிய ஓவியங்களைத் தமது கடையில் தொகுத்து வைத்தார். அமெரிக்க ஓவியர்கள் அவைகளைப் பார்த்துப் பயன் அடைந்தனர்.

அமெரிக்க ஓவிய முறை என்பதை 18ஆம் நூற்றாண்டில் காப்ளி (1738-1815) என்பவரும், பெஞ்சமின் வெஸ்ட் (1738-1820) என்பவரும் தொடங்கி வைத்தனர். அவர்கள் உள்ளதை உள்ளவாறு வரையும் தன்மை நவிற்சிக் கொள்கையினர் (Realists). அக்காலத்திலிருந்த கில்பெர்ட் ஸ்டுவர்ட் என்பவர் ஜார்ஜ் வாஷிங்டனுடைய படங்களிற் பல வரைந்தனர். அவை புகழ்பெற்றவை.

19ஆம் நூற்றாண்டில் அமெரிக்க ஓவியக்கலை ஒரு புதிய எழுச்சி பெற்றது. வால்ட் விட்மன் போன்ற கவிஞர்கள் அமெரிக்காவிலுள்ள இயற்கைக் காட்சிகளின் எழிலை எடுத்து ஓதினர். ஆடபான் (Audubon), ஜார்ஜ் இன்ஸ் போன்றவர்கள் அவற்றைப் பிழையின்றி அழகாக வரைந்தனர்.

தன்மை நவிற்சிக் கொள்கைதான் அமெரிக்க ஓவியக் கலையின் சிறப்பியல்பாகும். அதை ஈக்கின்ஸ், ஹோமர், பிக்கெட் என்னும் மூவருடைய ஓவியங்களில் காணலாம். ஹோமருடைய ஓவியங்களைப் பார்த்தால், அவை ஓவியம் என்ற எண்ணமே தோன்றாதவாறு அவ்வளவு இயற்கையாகக் காணப்பெறும்.

அயல் நாட்டிலிருந்துகொண்டு வரைந்த அமெரிக்க ஓவியர்களுள் சார்ஜென்ட் என்பவருடைய ஓவியங்கள் அமெரிக்க ஓவியத் தொழில்நுட்பத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க ஓவியக்கலையில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. காசெட், விஸ்லர், சேஸ் போன்ற ஓவியர்கள் ஜெர்மனி, பிரான்சு முதலிய இடங்களில் பயின்று வந்ததன் பயனாக, அமெரிக்க ஓவியங்களில் அதிகமான விவரங்கள் காணப்படுவது மறைந்துபோயிற்று; உணர்ச்சியைக் காட்டுவதே சிறப்பியல்பாக ஆயிற்று.

ஜார்ஜ் பெல்லோஸ் என்பவர் தம்மைச் சூழ்ந்து காணும் வாழ்க்கையைச் சித்திரிப்பதிலேயே கவனத்தை ஈடுபடுத்தினர். மிகவும் சாதாரணமான பொருள்களில் கூட அழகிருப்பதைக் கண்டார்.

ஐரோப்பாவில் பதிவுநவிற்சி, கனவடிவநவிற்சி, அடிமனநவிற்சி (Impressionism, cubism, surrealism) போன்ற பல ஓவியக்கலை முறைகள் தோன்றியபோதிலும், அவை அமெரிக்காவில் அதிகமாக இடம் பெறவில்லை. இக்காலத்து ஓவியர்களுள் சிறந்தவர்கள் கிராண்ட் வுட் (1892-1942) என்பவரும், எட்வர்டு ஹாப்பர் என்பவருமாவர்.

இக்காலத்து அமெரிக்க ஓவியக்கலையானது தனி அமெரிக்க இயல்புடன் அமெரிக்காவையும் அங்குள்ள மக்களையும் சித்திரித்து வருகின்றது. அந்த இயல்பை வேறு எந்த நாட்டிலும் காண இயலாது.

அமெரிக்கச் சிற்பக்கலை 19 ஆம் நூற்றாண்டில்தான் தோன்றியது. அதுவரை செதுக்குவேலை மட்டுமே நடந்து வந்தது. அந்தச் சிற்பிகளுடைய வேலை, கலை மதிப்புடையதாக இருந்தபோதிலும், அவர்கள் அதை உணரவில்லை.

சிற்பக்கலை, தொடக்கத்தில் ஐரோப்பிய முறைகளையே தழுவி வந்தது. அவ்வாறு செய்தவர்களுள் பங்கர் குன்று நினைவுச் சின்னம் அமைத்த ஹொரேஷியோ கிரீனோ என்பவர் ஒருவர். அவரே வாஷிங்டன் நகரத்திலுள்ள வாஷிங்டனுடைய பிரமாண்டமான சிலையைச் செய்தவர். பிரடெரிக் ரெமிங்டன் (1861-1909) என்பவர் அமெரிக்காவின் மேற்குப்பகுதி மக்களுடைய வாழ்வைச் சித்திரிக்கும் அழகான வெண்கலச் சிற்பங்கள் பல செய்தனர்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்கச் சிற்பிகள் ஐரோப்பாவுக்குச் சென்று வரவே அங்குள்ள முறையையே தழுவலாயினர். அவர்களுடைய சிற்பங்கள் தொழில்நுட்பத்தில் சிறந்திருப்பினும், கற்பனா சக்தித் திறன் மிகவும் குறைந்தனவாகும். அக்காலத்துச் சிற்பங்கள் சிறந்தனவாக இல்லாதிருந்தமைக்கு ஒரு காரணம் அவற்றை வாங்கியவர்களுக்குக் கலைப் பண்பு தெரியாதிருந்ததும், உள்ளது உள்ளபடியே எழுதுவதே சிறப்புத் தரும் என்று அவர்கள் எண்ணியதுமாகும்.

இக்காலத்துச் சிற்பிகள் புதுப்பொருள், புது விஷயங்கள், புது முறைகள் ஆகியவற்றைக்கொண்டு சோதனைகள் செய்துள்ளனர். அவர்களுடைய சிறந்த வேலைகளுள் ஒன்று சிற்பக்கலையைக் கட்டடக் கலைக்குத் துணையாகக்கொண்டதாகும். இக்காலத்து அமெரிக்கச் சிற்பிகளுள் சிறந்தவர்கள் டேவிட்ஸனும், மான்ஷிப்புமாவர். வில்லியம் ஜோரக் என்பவருடைய 'தாயும் குழந்தையும்' என்னும் சிற்பம் சிறந்ததாகும். ராபர்ட் லாரன்ட் என்பவர் பல உலோகங்களிற் சிலைகளை வார்க்கின்றார். அவருடைய 'முத்து' என்னும் சிலை அலுமினியத்தில் வார்த்ததாகும்.

ஜேக்கப் எப்ஸ்டைன் இப்போது இங்கிலாந்தில் இருக்கிறார். அவருடைய சிலைகள் ஆற்றல் வாய்ந்தன என்பர். மால்வினா ஹாப்மன் என்னும் பெண் சிற்பியின் தலையாய சிலை, சிக்காகோ பொருட்காட்சிச் சாலையிலுள்ள 'மனித இனங்கள்' என்பதாகும்.

**அமெரிக்கத் தத்துவ சாஸ்திரம் :** தத்துவசாஸ்திரமானது அமெரிக்காவில் சமூக, அரசியல் நிகழ்ச்சிகளுடன் மிக நெருங்கிய தொடர்புடன் வளர்ந்து வந்திருப்பதால், அமெரிக்க வரலாற்றுடன் சேர்த்துப்பாராவிடின், அதன் தொடக்க வளர்ச்சியை அறிந்து கொள்ள இயலாது.

அமெரிக்கத் தத்துவ சாஸ்திரம் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நியூ இங்கிலாந்தில் பியூரிட்டன்கள் குடியேறியது முதலாகத் தொடங்குகிறது. அவர்களுள் அறிஞர்களாயிருந்தவர்கள் பெரும்பாலும் பிராட்டஸ்டென்ட் கிறிஸ்தவப் பாதிரியார்களா யிருந்தனர். அவர்கள் ஐரோப்பாவில் தோன்றிய கால்வினியக் கொள்கை (Calvinism)வயப்பட்டவராயினும் அக்கொள்கையை வேறுவிதமாகக் கையாண்டனர். ஐரோப்பியக் கால்வினியக் கொள்கை மனிதன் தன்னால் அறியமுடியாத கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று கூறிற்று. ஆனால் கடவுளுடைய கருத்தை அறிய முடியும் என்றும், கிறிஸ்தவ பிளேட்டானிக் கொள்கையைப் பின்பற்றிக் கடவுள் மனிதனுடன் நியாயமான முறையிலேயே நடந்துகொள்வார் என்றும் அமெரிக்கக் கால்வினியர் வற்புறுத்தினர்.

இந்த முரண்பாட்டை ஜானதன் எட்வர்ட்ஸ் (1703-58) என்பவரிடம் காணலாம். அவர் கடவுளை அரசன் என்னும் வைதிகக் கால்வின் கொள்கையையும், உளவாகும் தன்மையின் (Being) மேன்மையை அறிவிக்கும் அனுபூதி அனுபவத்திலும், கடவுள் பக்தியிலும் விசேஷ நம்பிக்கையையும் உடையவராயிருந்தார். சாமுவேல் ஜான்சன் (1696-1772) என்பவர் பல மாறுதல்களுடன் பார்க்ளேயின் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்தார். காட்வலீடெர் கால்டென் (Cadwaleader Colden 1688-1776) நியூட்டனுடைய பௌதிக இயலில் கருத்துடையவராயும், இயற்கையே ஆதாரச் செயல் தத்துவமாக உளது என்ற கருத்துடையவராயும் இருந்தபடியால், இயற்கையியலை வைத்தே இறையியலை விளக்கவேண்டும் என்ற கொள்கைக்கு அடிகோலினார்.

இறையியல் இவ்வாறு வளர்ந்து வந்தபோதிலும், அது சமூக, பொருளாதார விஷயங்களைப் புறக்கணிக்க முடியாத நிலைமை ஏற்படலாயிற்று. இதனால் அமெரிக்கத் தத்துவ சாஸ்திரம் பெரும்பாலும் அறநூல் விஷயங்களிலேயே மிகுந்த கருத்தைச் செலுத்தத் தொடங்கிற்று. அவ்விஷயங்கள் சில வேளைகளில் இறையறிவையும், சில வேளைகளில் மனித அறிவையும் ஆதாரமாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டன. நன்மை செய்வதே கடவுள் அறநெறி என்று காட்டன் மாதெர் (1663-1728) கூறினார். பெஞ்சமின் பிரான்கிளின் (1706-90) உலகில் இன்பமாக வாழ்வதற்கான அறநெறியை மட்டும் கவனித்தால் போதும் என்று கூறினார்.

இவ்வாறு அறநூல் விஷயங்கள் வாதிக்கப்பட்ட போதிலும், அதே வேளையில் கடவுளின் தன்மை யாது? மனிதன் சுதந்திரமுடையவனா? அவன் இன்பம் அடைவதெப்படி? என்ற பொருள்கள் குறித்துத் தத்துவ விசாரணை நடைபெற்று வந்தது. தாமஸ் பெயின் (Thomas Paine 1737-1809) என்பவருடைய நூல்கள் உணர்வே பிரதானம் என்னும் கொள்கையைப் பரவச் செய்தன. நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட கடவுளுண்மைக் கொள்கையானது, அறிவு ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்ட கடவுளுண்மைக் கொள்கையாக மாறிவந்தது. பிரெஞ்சுப் புரட்சியானது உலோகாயதக் கொள்கைக்கு அடிகோலியது. அறிவை ஆதாரமாகக் கொண்டு எழுந்த இயக்கத்தினருடைய ஐரோப்பிய நூல்கள் மிகுதியாகப் படிக்கப்பட்டதால், புதிய அமெரிக்கக் குடியரசின் மக்களிடையே அரசியல் உணர்ச்சியும் எழுவதாயிற்று. ஜான் ஆடம்ஸ் (1735-1826), ஜேம்ஸ் மாடிசன் (1751-1836), தாமஸ் ஜெபர்சன் (1743-1826) ஆகியோர் பெரிய அமெரிக்க அரசியல் தத்துவ அறிஞர்கள். ஜெபர்சனுடைய கல்லறையில் அவர் அமெரிக்காவின் மூன்றாம் ஜனாதிபதியாக இருந்ததைக் குறிப்பிடாது, "அமெரிக்கச் சுதந்திர சாசன கர்த்தா, வர்ஜீனியாவின் சமய சுதந்திர சட்ட கர்த்தா, வர்ஜீனியா பல்கலைக் கழகத்தின் தந்தை" என்று எழுதியிருப்பது அமெரிக்கச் சமூக, அரசியல், சமயக் கொள்கையின் போக்கைத் தெரிவிக்கும்.

இவ்வாறு கடவுள் விஷயமாகத் தாம் விசாரணை செய்வதை விட்டுவிட்டுச் சமூகத்தில் மக்கள் சேர்ந்து இன்பமாக வாழ்வது எப்படி என்ற விஷயமாக ஆராயத் தொடங்கினர். சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் என்ற பொருள்களே மிகுதியாகக் கவனத்தைக் கவர்ந்தன. ஆயினும் தத்துவ விசாரணை அறவே நின்று போய்விடவில்லை. உளவியல் பற்றிய விசாரணை மிகுதியாகச் செய்யப்பட்டது. ஆனால் இவை அனைத்தும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் குறைந்துபோயின.

இதற்கிடையில் ஜெர்மானியக் கருத்துக்கொள்கையும் (Idealism), கற்பனைநவிற்சிக் கொள்கையும் (Romanticism) அமெரிக்கத் தத்துவ விசாரணையில் இடம் பெறலாயின. தியோடர் பார்க்கர் (1810-60) ஜெர்மன் அறிஞர் கான்டினுடைய பல கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர். ஆனால் ஜெர்மானியத் தத்துவ அறிஞர் ஹேகலுடைய கொள்கை அமெரிக்காவில் வேரூன்றவும், தத்துவ விசாரணையை ஊக்கப்படுத்தவும் செய்தது. வில்லியம் டாலி ஹாகில் (1835-1909) என்பவருடைய தத்துவ விசாரணை இதற்கு முக்கிய காரணமாகும்.

19 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக அறியொணாமைக் கொள்கை எழுந்தபோது, ஜான் பிஸ்க் (1842-1901), சார்ல்ஸ் சாண்டெர்ஸ் பர்ஸ் (1839-1914) போன்ற அறிஞர்கள் தத்துவ விசாரணை செய்து வந்தனர். ஜான் டூயி, ஜார்ஜ் ஹெர்பர்ட் மீடு போன்றவர்கள் சமூகத் தத்துவ விசாரணை செய்தனர்.

இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் வில்லியம் ஜேம்ஸ் (1842-1910) ஆதரவில் புறவழி உண்மைக் கொள்கை (Pragmatism) விரைவாக வளர்ந்து வந்தது. டூயியினுடைய கருவிக் கொள்கை (Instrumentalism) உலக முழுவதிலும் கல்வித் துறையில் மிகுந்த பயன் தந்துவருகிறது. பொதுவாக அமெரிக்க மனப்பான்மை புறவழி உண்மைக்கொள்கையையே பெரிதும் ஏற்றுக்கொண்டதா யிருப்பினும், வேறு விதமான கொள்கைகளும் காணப்படவே செய்தன. ஆனால், உளவாகும் தன்மையைப் (Being) பற்றிமட்டும் தத்துவ விசாரணை செய்யும் மனப்பான்மையை அமெரிக்க மக்களிடம் காண்பது அரிது. ஆயினும் உலகில் வழங்கும் தத்துவ விசாரணை வகைகள் அனைத்தையும் அமெரிக்காவில் காணலாம்.

ஆதியில் இருந்ததைப்போல் அமெரிக்கத் தத்துவ விசாரணை இப்போது ஐரோப்பியக் கருத்துக்களால் அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லை. ஐரோப்பிய அறிஞர்களான ஆல்பிரட் நார்த் ஓயிட்ஹெட் (1861-1947), ருடால்ப் பி. கார்னப் (1891-) போன்றவர்களுக்கு

அமெரிக்காவிலேயே சீடர்கள் இருக்கின்றனர். இப்போது மக்கள் நலக்கொள்கை (Humanism), ஜனநாயகம் (Democracy) ஆகியவற்றையே அறிஞர்கள் மிகுதியாக வற்புறுத்துகிறார்கள். பொருளாதாரமும் தத்துவ அடிநிலை பெறவேண்டும் என்று எண்ணிய போதிலும், மார்க்சியத் தத்துவக் கொள்கையை ஆதரிக்கவில்லை. கீழ்நாட்டுத் தத்துவ சாஸ்திரத்தை ஆராய வேண்டும் என்ற ஆவல் மிகுந்து வருகிறது. கல்வித் துறையும் தத்துவ அடிநிலை பெறுமாறு செய்யும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக அமெரிக்கரிடையே வேறுன்றியுள்ள புறவழியுண்மைக் கொள்கை தளர்ச்சி பெற்று வருகின்றது.

அமெரிக்காவில் சங்கரர், கான்ட் போன்ற தத்துவப் பேரறிஞர்கள் தோன்றவில்லை. ஆனால் இத் துறையில் இத்தகைய பெருமையைப் பெறாத நாடு அமெரிக்கா மட்டும் அன்று என்பதையும் குறிப்பிட வேண்டும். கு. எப். லே.

**அமெரிக்கஸ் வெஸ்பூசியஸ்** (ஆமெரிகோ வெஸ்பூச்சி) (Amerigo Vespucci 1452-1512) இத்தாலிய நாட்டைச் சேர்ந்த ஒரு கப்பலோட்டி. 1497 க்கும் 1504 க்கும் இடையே இவன் நான்குமுறை கடல் கடந்து கப்பற் பயணம் செய்தவன்; இருமுறை ஸ்பெயினிற்காகவும், இருமுறை போர்ச்சுகலுக்காகவும் சென்றான். இவன் தன் வாழ்க்கைக் குறிப்புக்களையும் எழுதி வைத்துள்ளான். கொலம்பஸ் 1492லேயே அமெரிக்காவை அடைந்தானாயினும், அவனுக்கு 5 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கண்டத்தைக் கண்டுபிடித்த வெஸ்பூசியஸ்தான் அது ஒரு புதிய கண்டம் என்றும், கொலம்பஸ் நினைத்தபடி அது இந்தியா அன்று என்றும் கூறியவன். ஆதலால் இவன் பெயரே அக்கண்டத்திற்கும் இடப்பட்டு, அமெரிக்கா என்று அழைக்கப்பட்டு வருகிறது.

**அமெரிக்கா :** மேற்கு அர்த்தகோளத்தின் நிலப்பரப்பின் பெரும் பகுதி இப் பொதுப்பெயரால் வழங்குகிறது. இந் நிலப்பரப்பிற்கு 16 ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பெயர் வழங்கி வந்துள்ளது. இது ஏறக்குறைய முக்கோண வடிவுள்ள இரு நிலப்பரப்புக்களை உடையது. இவ் விரு நிலப்பரப்புக்களையும் பானமா பூசந்தி இணைக்கிறது. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, இவற்றை அடுத்துள்ள தீவுகள் ஆகியவற்றின் மொத்தப் பரப்பு ச. 1,60,00,000 ச. மைல்.

புவியியல் அமைப்பில் இவ் விரு கண்டங்களும் பல வகைகளில் ஒத்துள்ளன. இரு கண்டங்களிலும் வடகிழக்கில் பழங்கால அடிப்படைப் பாறைகள் காணப்படுகின்றன. தென்கிழக்கிலுள்ள மேட்டு நிலங்கள் இரு கண்டங்களிலும் நிலப்பரப்பு அண்மையில் உயர்ந்தெழுந்ததால் தோன்றியவை. இவற்றில் கடற்கரையோரமாகப் படிகப் பாறைகளும், உட்புறத்தில் விகாரமடைந்த பழம்பிராணியுகப் பாறைகளும் காணப்படுகின்றன. புவியின் மேற்பொருக்கில் நிகழ்ந்த மடிப்புக்களும் எரிமலை இயக்கமும் தோற்றுவித்திருக்கும் உயரிய மலைகள் இக்கண்டங்களின் மேற்கே உள்ளன. மேடுகளின் இடையில் மையத்தில் ஒன்றுசேரும் தாழ் நிலங்கள் இரு கண்டங்களிலும் உள்ளன. இவ்விரு கண்டங்களும் ஒரேவகையான புவியியல் மாறுதல்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும் என்பதை இவ்வொற்றுமைகள் தெளிவாக்குகின்றன. கிழக்கு அர்த்தகோளத்தின் மேற்கு விளிம்பும், அமெரிக்கக் கண்டங்களின் கிழக்கு விளிம்பும் வடிவத்திலும் புவியியல் அமைப்பிலும் ஒத்திருப்பது, ஒரே நிலப்பரப்பாக இருந்த பெருங் கண்டத்திலிருந்து ஒரு பகுதி பிரிந்து, மேற்கு நோக்கிச் சென்று இக்கண்டங்களாகியது என்ற கொள்கைக்கு இடந் தருகிறது.

வட அமெரிக்காவில் பிரிட்டனுக்குச் சொந்தமான கானடா பிரிட்டிஷ் வட அமெரிக்கா என்றும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தெற்கே, 19 ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் வென்று, இக்காலத்தில் பல இராச்சியங்களாகப் பிரிந்துள்ள பிரதேசம் லத்தீன் அமெரிக்கா என்றும், மெக்சிகோவிற்கும், தென் அமெரிக்காவிற்கும் இடையிலுள்ள நாடுகள் மத்திய அமெரிக்கா என்றும் அழைக்கப் பெறுகின்றன.

(வட அமெரிக்காவைப் பற்றியும், தென் அமெரிக்காவைப் பற்றியும் தனிக் கட்டுரைகள் பார்க்க. முக்கியமான அமெரிக்க நாடுகளுக்கும் தனிக் குறிப்புக்கள் பார்க்க.) ★

**அமெரிக்க ஆதிவரலாறு:** 'புதிய உலகம்' என்று சொல்லப்படும் மேற்கு அர்த்தகோளம், வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்ற இரு கண்டங்கள் கொண்டது. 1492 ஆம் ஆண்டு, கொலம்பஸ் அட்லான்டிக் சமுத்திரத்திலுள்ள சில தீவுகளைக் கண்டுபிடித்தபோது, அவற்றை இந்தியாவின் ஒரு பாகமெனக் கருதினான்; ஆகவே, தான் கண்ட மக்களை இந்தியர் என்று அழைத்தான். ஆனால் ஆமெரிகோ வெஸ்பூச்சி என்ற இத்தாலிய மாலுமிதான் கொலம்பஸ் கண்டுபிடித்தது ஒரு புதிய உலகமென்று கூறினான். ஆகவே அவ்வுலகம் 'அமெரிக்கா' என்று அவன் பேரால் அழைக்கப்பட்டது. இவ்வாறு பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அமெரிக்கா என்று அக்கண்டம் பெயர் பெற்றது.

அமெரிக்காக் கண்டங்களின் பழங்கால மக்கள் ஆசியாக் கண்டத்து மக்களென்றும், அந்தக் கண்டத்தின் வட கிழக்குப் பாகத்திலிருந்து பேரிங் ஜலசந்தி வழியாக வட அமெரிக்காவில் குடிபுகுந்தனரென்றும், இவர்கள் மஞ்சளும் பழுப்பும் கலந்த நிறமுடைய மக்களாக இருந்தனரென்றும் பழங்கால வரலாற்றுச் சின்னங்களிலிருந்து தெரிகிறது. ஆதியில் மனித குலமே அமெரிக்காக் கண்டங்களில் தோன்றவில்லையென்று அறிகிறோம். அக்கண்டங்களில் பழங்காலத்தில் காணப்பட்ட மக்கள் வெளிநாடுகளிலிருந்து வந்தனரென்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால், எங்கிருந்து எவ்வழியாக அமெரிக்காவில் குடிபுகுந்தனர் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அட்லான்டிக் கடலின் வடபாகத்திலுள்ள ஐஸ்லாந்து, கிரீன்லாந்து, லாப்ரடார் வழியாக ஆசியாக் கண்டத்து மக்கள் அமெரிக்காவின் வடபாகத்தில் குடியேறியிருக்கலாமென்று சிலர் கருதுகின்றனர். ஏனெனில் அவ்வழியாகத்தான் லீப் எரிக்சன் (Leif Ericson) என்பவன் கி. பி. பத்தாவது நூற்றாண்டில் ஐரோப்பாவின் வடபாகத்திலிருந்து புறப்பட்டு, அமெரிக்காவின் வடபாகத்தை அடைந்தான். ஆனால், அது பனி உறைந்து கிடக்கும் கடினமான வழியாக இருந்தபடியால், பழங்கால மனிதர் அப்பாதை வழியாக ஆசியாவிலிருந்து அமெரிக்காவில் குடிபுகுந்திருக்க முடியாது.

இப்பொழுது அட்லான்டிக் சமுத்திரமாக இருக்கும் கடல், பழைய காலத்தில் அட்லான்டிஸ் (Atlantis) என்ற ஒரு நிலப்பரப்பாக இருந்ததெனப் பிளேட்டோ என்னும் கிரேக்க அறிஞர் கூறுவதால், ஆசிய மக்கள் ஆப்பிரிக்காவுக்கு வந்து, இந்த அட்லான்டிஸ் நிலப்பரப்பின் வழியாகத் தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் குடியேறியிருக்கலாமென்று சிலர்

கருதுகின்றனர். ஆனால், அட்லான்டிஸ் என்ற நிலப் பரப்பு ஒன்று இருந்ததென வரலாற்று ஆராய்ச்சியாளர் நம்பவில்லை. பிளேட்டோ சில சமயங்களில் தம்முடைய கற்பனா சக்தியினால் கதைகள் புனைவதுண்டு. அட்லான்டிஸ் நிலப்பரப்பு, அந்தக் கதைகளுள் ஒன்றெனக் கொள்வாரும் உண்டு. மேலும் அட்லான்டிஸ் நிலப் பரப்பு இருந்ததென்று பிளேட்டோவுக்கு முன்னர் வாழ்ந்த ஹோமர், ஹெசியடு, எகிப்து வரையிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்த ஹெரடோட்டஸ் முதலிய கிரேக்க அறிஞர் எவரும் சொல்லவில்லை. ஆகவே, ஆசிய மக்கள் அமெரிக்காவில் குடிபுகுந்தது நாற்பது மைல் அகலமுள்ள பேரிங் ஜலசந்தி வழியாகவே இருந்திருக்க வேண்டுமென்று கொள்வதுதான் சிறப்புடைய தெனத் தோன்றுகிறது.

அமெரிக்கப் பழங்கால மக்களின் நாகரிகம், அவர்கள் வசித்துவந்த பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கிரீன்லாந்திலிருந்து அலாஸ்கா வரையிலுள்ள பிரதேசத்தில் வசித்த மக்கள் கோடைக்காலத்தில் வேட்டையாடி வாழ்ந்தனர். அவர்களுடைய உடைகள் தோலினால் செய்யப்பட்டவை. அவர்கள் கல்லால் செய்த கருவிகளைக் கையாண்டனர். சக்கரமில்லாமல் மட்பாண்டஞ் செய்யவும், விலங்கினங்களின் கொம்புகளில் ஓவியந் தீட்டவும் அவர்கள் அறிந்திருந்தனர்.

வட அமெரிக்காவின் மத்தியபாகத்தில் ஆறுகள் இருப்பதால், அந்தப் பாகத்திலும், கடற்கரையோரங்களிலும் மீன் பிடித்தலை முக்கியமான தொழிலாக மக்கள் கொண்டனர். இப்பிரதேசம் காடடர்ந்தது. ஆகவே, மரத்தால் வீடுகள் கட்டப்பட்டன; படகுகள் செய்யப் பட்டன; அழகிய சிற்பப் பொருள்களும் செதுக்கப் பட்டன. இப்பிரதேசத்து மக்கள் கூடை முடைவதில் கைதேர்ந்தவர்கள். களிமண் வைத்துக் கூடையிலிருக்கும் இடைவெளிகளை அடைத்ததனால், கூடைகளைத் தண்ணீர் வைத்துக்கொள்ளும் பாத்திரங்களாகப் பயன்படுத்த முடிந்தது. இந்தப் பிரதேசத்தின் ஆற்றங் கரைகளில் சோளம் பயிரிடப்பட்டது. மண் வீடுகள் அழகாகக் கட்டப்பட்டு, மக்கள் கிராமங்களில் வசித்தனர்.

அமெரிக்கப் பழங்கால மக்கள் உபயோகித்து வந்த கருவிகள், கட்டின மண்மேடுகள், பிரமிடுகள், பல அறைகள் அடங்கிய கட்டடங்கள் அமைந்த கிராமங்கள் முதலியவற்றிலிருந்து இவர்கள் நாகரிகம் நமக்குத் தெரியவருகின்றது. எம். வீ. சு.

**வட அமெரிக்க இந்தியர்:** அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில் இவர்களுடைய தொகை ஏறக்குறைய 45 இலட்சமாகும். இவர்களுள் 10 இலட்சம் பேர் இப்போது கானடா, ஐக்கிய நாடுகள் என்று வழங்கும் பகுதிகளிலும், பெரும்பாலோர் இப்போது மெக்சிகோ, மத்திய அமெரிக்கா என்று வழங்கும் பகுதிகளிலும் வாழ்ந்திருந்தார்கள். இப்போதும் பெரும்பாலோர் தென் பகுதிகளிலேயே காணப்படுகிறார்கள். இப்போது கானடாவிலும் ஐக்கிய நாடுகளிலும் உள்ளவர்கள் 5 இலட்சம் பேரே. ஆனால் மெக்சிகோவில் 80 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

மக்கள் அமெரிக்காவில் ஏறக்குறைய 20 ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருப்பதாகவும், இவர்கள் பேரிங் ஜலசந்தி வழியாக வட அமெரிக்காவுக்கு வந்த ஆசிய மக்களே என்பதாகவும் அறிஞர்கள் கருதுகிறார்



அமெரிக்க இந்தியர்—நாட்டியம்

உதவி: அ. ஐ. நா. செய்தி இலாகா, சென்னை.

கள். அமெரிக்க இந்தியர்கள் கறுத்த நீண்ட மயிரும், கறுத்த கண்களும், பரந்த முகமும், தலையும், உடம்பில் குறைந்த மயிரும் உடைய மங்கோலாயிடு இனத்தவ ராக இருப்பது இக்கருத்துக்கு ஆதாரமாக இருக்கிறது.

வட அமெரிக்க ஆதிக் குடிகளிடையே இரு நூறு மொழிகளுக்குக் குறையாமல் காணப்படுகின்றன. இவை 54 மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவை என்று அறி ஞர் கூறுகின்றனர்.

பண்பாட்டு வேறுபாட்டை வைத்து, வட அமெரிக்க இந்தியர்களை ஏழு பிரிவினராகப் பிரித்துளர். தென் கோடியிலிருந்தவர்கள் கரீப் மக்களும் ஆராவக் மக்களு மாவர். அதையடுத்து வடக்கே குவாட்டெமாலா, ஹாண்டுராஸ், யுக்கட்டான் ஆகிய பகுதிகளிலிருந்தவர் கள் மாயர்கள் (Mayans). மெக்சிகோவில் ஆஸ்டெக் மக்கள் வசித்தனர். இந்தப் பகுதியிலேயே ஆதி இந்திய மக்களுள் மிகுந்த நாகரிகம் படைத்த மக்கள் காணப் பட்டனர். இவர்கள் விவசாயம், பட்டணங்கள், உலோகத் தொழில், கோவில்கள், புரோகிதம், லிபி, வானவியல், கணிதவியல் ஆகியவற்றை உடையவர்களா யிருந்தார்கள்.

இதைவிடக் குறைந்த நாகரிகம் உடையவர்கள் தென் மேற்குப் பகுதியில் இருந்தார்கள். ஹொஹோக்காம் மக்கள் நீண்ட பாசனக் கால்வாய்கள் அமைத்திருந்த னர். பீடபூமியிலிருந்த புவெப்லோ இந்தியர்கள் கிரா மங்கள் அமைத்தனர். அழகான சித்திரங்களுடைய மட்கலங்கள் செய்தனர். உயரிய சமூக அமைப்பும் நிறுவினர்.



வட அமெரிக்க இந்திய மாதும் குழந்தையும்

உதவி : அ. ஐ. நா. செய்தி இலாகா, சென்னை.

மிசிசிப்பிக்குக் கிழக்கே நாசிஸ் என்னும் மக்கள், வகுப்புக்களையுடைய சமூக அமைப்பு உடையவராயிருந் தனர். வடமேற்கே இருந்த இரோகோயர் பல குழுவின ரைச் சேர்த்து, இரோகோயி சங்கம் அமைத்துக்கொண் டிருந்தனர். இந்தச் சங்கத்தாரே பிரெஞ்சுக்காரர்க ளுடனும் பிரிட்டிஷாருடனும் தொடக்கத்தில் போர் புரிந்தவர்களுள் தலையாயவர்.

வடமேற்குக் கடற்கரையில் பிரிட்டிஷ் கொலம்பியா வில் வாழ்ந்தவர்கள் குவாக்கியூட்டல், ஹெய்டா, டிலிங்கிட் என்போராவர். இவர்கள் மரத்தில் செதுக் குச் சித்திரம் செய்வதில் சிறந்தவர்கள். காலிபோர்னியா, நெவாடா, யூட்டா சமவெளிகள் ஆகியவற்றில் இருந்த வர்கள் வேடர்களாகவும் உணவு சேகரிப்போராகவு மிருந்தார்கள்.

வடகோடியில் ஆர்க்டிக் சமுத்திரக் கரையிலிருந்த எஸ்கிமோக்கள் தொழில் நுட்பமறிந்த வேடர்களா யிருந்தபடியால் கஷ்டமான சூழ்நிலையிலும் நிலைத்து நிற்பவர்களாயிருந்து வருகிறார்கள். ஜா. அ.

**தென் அமெரிக்க இந்தியர் :** இவர்களைப் பற்றி அறியக்கூடிய சாசனங்களுள் பெரும்பாலானவை ஸ்பா னியர் 1532-ல் பெரு நாட்டைவென்ற காலத்தன வாகும். அப்போது கரிபியன் தீவுகள் உட்படத் தென் அமெரிக்கா முழுவதும் ஏறக்குறைய தொண்ணூறு இலட்சம் மக்களே இருந்தார்கள். இவர்களுள் பெரும் பாலோர் சிலி, பொலிவியா, பெரு, ஈக்வடார், கொலம் பியா ஆகியவற்றிலும் கரிபியன் தீவுகளிலுமே காணப்பட்டனர்; ஆமெசான் பள்ளத்தாக்குக் காடு களிலும், தென் ஆர்ஜென்டீனச் சமவெளியிலும் மிகவும் குறைவாக இருந்தார்கள். இப்போது பொலி வியா, பெரு, ஈக்வடார் ஆகிய ஆண்டீஸ் மலையிலுள்ள குடியரசு நாடுகளிலேயே இந்தியர் நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். ஆமெசான் நதி தீரத்தின் எளிதில் எட் டாத பகுதிகளில் தவிர, ஏனைய பகுதிகளிலெல்லாம் இந்தியர்கள் குறைவாகக் காண்பதால் அவர்கள் அருகி யிருக்கவேண்டும்; அல்லது மற்ற இனங்களுடன் கலந்து போயிருக்கவேண்டும்.

தென் அமெரிக்காவில் மனிதன் நீண்ட காலத்துக்கு முன்பே இருந்தானென்று கூறுவதற்குரிய தொல் பொரு ளியல் சான்று மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது. ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் பெரு நாட்டில் விவசாய நாகரிகம் இருந்ததாகத் தெரிந்தபோதிலும், இதுவரை கண்டுபிடித்துள்ள சான்றுகள் ஐயாயிரம் ஆண்டுத் தொன்மைக்கே ஆதாரமாக இருக்கின்றன. தென் அமெரிக்க ஆதிக்குடிகள் வடஅமெரிக்காவிலிருந்து வந்த வர்கள் என்பதே இப்போது பெரும்பான்மையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கருத்தாகும். ஆயினும் வரலாற்றுக் காலத்துக்கு முன் மக்கள் ஓஷியானியாவி லிருந்து மேற்குத் தென் அமெரிக்காவுக்கு வந்திருக்கலாம் என்று கூறுவதற்குரிய சான்றுகள் பல அண்மையில் சேகரிக்கப்பட்டுள்ளன.

தென் அமெரிக்க இந்தியர்களிடையே எண்பது மொழிக் குழுக்களுக்கு மிகுதியாகக் காணப்படுகின்றன. அவர்களிடையே பூஜியர்கள் போன்ற வேடர்களின் பண்பாடுமுதல் இன்கா மக்கள் போன்ற விவசாயிகளின் பண்பாடுவரை பலதிறப்பட்ட பண்பாடுகள் காணப் படுகின்றன. ஆயினும் பொதுவாகப் பார்க்குமிடத்துத் தென்பகுதியில் நாடோடிகளும், ஆமெசான் வடிநிலத் தில் அரை நாடோடிகளும், ஆண்டீஸ் பகுதிகளிலும் கரிபியன் பகுதிகளிலும் ஊர்கள் அமைத்துக்கொண் டுள்ள விவசாயிகளும் வாழ்ந்து வருகிறார்கள்.

தென் அமெரிக்காவிலிருந்த ஆதிக்குடிகளின் நாகரிகங் களுள் சிறந்தது இன்கா நாகரிகமாகும். பார்க்க : இன்கா நாகரிகம். ஆ. ஆர். ஹோ.

**அமெரிக்கக் கடற்கரைத் தீவுகள் :** வட அமெ ரிக்க, தென் அமெரிக்கக் கடற்கரையோரங்களில் பல தீவுகள் அமைந்துள்ளன. இவற்றை இக்கண்டங்களின் கிழக்குக் கடற்கரையோரமுள்ள தீவுகள் என்றும், மேற்குக் கடற்கரைப் பக்கத்திலுள்ள தீவுகள் என்றும்

பகுக்கலாம். ஆயினும் கிழக்குப் பாகத்தில் உள்ள அட்லான்டிக் சமுத்திரத்தில்தான் முக்கியமான தீவுகள் உள்ளன. இவற்றில் பல கரிபியன் கடலில் அமைந்துள்ளன. இவைகளுள் பெரிய தீவுகளுக்குப் பெரிய ஆன்டிலீஸ் தீவுகள் என்றும், சிறிய தீவுகளுக்குச் சிறிய ஆன்டிலீஸ் தீவுக்கூட்டங்கள் என்றும் பெயர். இத்தீவுகளில் பல ஆங்கிலேய சாம்ராச்சியத்திலும், சில பிரெஞ்சு, டச்சு ஆட்சியிலும், மற்றும் சில சுதந்திரக் குடியரசு நாடுகளாகவும் இருக்கின்றன. இவைகளுக்கு மேற்கு இந்தியத் தீவுகள் என்ற பொதுப் பெயரும் உண்டு. இவற்றில் ஆங்கில சாம்ராச்சியத்தைச் சேர்ந்த தீவுகள் பெர்முடா, பகாமா, பார்படோஸ் (Barbados), ஜமெய்க்கா, லீவர்டு (Leeward) தீவுகள், விண்டுவர்டு (Windward) தீவுகள், டிரினிடாடு (Trinidad), டோபாகோ முதலியவை.

**பெர்முடாத்தீவைப்** பதினாறும் நூற்றாண்டில் ஜுவான் பெர்முடாஸ் என்பவன் கண்டுபிடித்தான். இத்தீவைச் சார்ந்து, சுமார் 360 மிகச் சிறிய தீவுகள் உள்ளன. இத்தீவுகள் இயற்கைக் காட்சிகளும், வசிப்பதற்கு ஏற்ற தட்ப வெப்ப நிலைகளும் உள்ளவை. அமெரிக்கர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் குளிர்கால உறைவிடங்களாக விளங்குகின்றன; பிரிட்டனுக்கு அடங்கிய குடியேற்ற நாடாக இருந்தபோதிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குரிய கடற்படைத் தளங்களும் ஆகாயவிமானத் தளங்களும் இங்கே உண்டு.

**பகாமாத் தீவுகள்:** இங்கு ஒரு கவர்னர் உண்டு. இவருக்கு உதவி செய்ய ஒன்பதுபேர் அடங்கிய நிருவாக சபையும், 29 பேர் அடங்கிய சட்ட சபையும் இருக்கின்றன.

**பார்படோஸ் தீவு** 1627-ல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

**ஜமெய்க்காத் தீவு** 1494-ல் கொலம்பஸால் கண்டுபிடிக்கப்பட்டு, ஸ்பானிய சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1665-ல் ஆலிவர் கிராம்வெல் காலத்தில் ஸ்பெயின் அரசனிடமிருந்து ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. 1944-ல் ஏற்பட்ட புதிய அரசியல் திட்டத்தின்படி அரசாளப்படுகிறது. இந்தத் தீவில் ஒரு கவர்னர் மூலமாகப் பிரிட்டன் ஆட்சி செலுத்துகிறது. கவர்னருக்கு உதவி செய்ய 32 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு சட்டசபை யுண்டு. 1941-ல் பிரிட்டன், ஜமெய்க்கா தீவில் விமானத் தளங்களை அமைப்பதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுமதி கொடுத்து, 50 யுத்தக் கப்பல்களைப் பெற்றது. ஜமெய்க்காவிற்கு வடகிழக்கிலுள்ள கேயன் தீவுகளும் குவானோ தீவுகளும் ஜமெய்க்காவோடு சேர்க்கப்பட்டுள்ளன.

**விண்டுவர்டு, லீவர்டு தீவுகள்:** இவை அட்லான்டிக் சமுத்திரத்தில் தெற்கு வடக்காக வியாபித்துள்ளன. இவைகளுள் சில தீவுகளுக்குத் தனித்தனி அரசியல் அமைப்பு உண்டு. வேறுபட்ட சட்டசபைகளும், சட்டங்களும், வியாபார வரிகளும் நிலைபெற்றுள்ளன. இத்தீவுகளுக்குப் பொதுவான நீதிமன்றம் ஒன்றுண்டு. ஆங்கில நாணயமாகிய பவுண்டு ஸ்டர்லிங் இங்கே வழங்குகிறது.

**டிரினிடாடு தீவு** தென் அமெரிக்காவிலுள்ள ஆரினக்கோ நதியின் முகத்துவாரத்தருகில் உள்ளது. 15ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டு, 16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர்களால் குடியேறப்பெற்றது. பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் குடியேறினர். 1797-ல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டு, 1802-ல் ஆமியன்ஸ் உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று. டொபாகோ தீவும் டிரினிடாடு தீவோடு சேர்த்து ஆளப்படுகிறது.

**அமெரிக்காவிற்குச் சொந்தமான தீவுகள்** போர்ட்டோரிகோவும் வர்ஜின் தீவுகளுமாகும். போர்ட்டோரிகோவை ஸ்பெயின் நாட்டிடமிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் கைப்பற்றின. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அடங்கியிருந்தபோதிலும் நாட்டின் பிரதிநிதிகளால் ஆளப்படுகிறது. இந்நாட்டில் கட்டாயக் கல்வி அமலில் உள்ளது. வர்ஜின் தீவுகளுக்கு டேனிஷ் மேற்கிந்தியத் தீவுகள் என்ற பெயர் வழங்கி வந்தது. இவை டென்மார்க் தேசத்திடமிருந்து அமெரிக்கர்களால் விலைக்கு வாங்கப் பெற்றவை.

**பிரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகள்:** குவாடலூப் (Guadaloupe), மார்ட்டினிக் (Martinique) இரண்டும் பிரெஞ்சு ஆட்சியில் அடங்கியுள்ளன.

**கியூபாத் தீவு:** இதை 1492-ல் கொலம்பஸ் கண்டுபிடித்தான். 1898ஆம் ஆண்டு வரையில் ஸ்பானிய ஆட்சியில் அடங்கி, ஒரு குடியேற்ற நாடாக இருந்தது. அ. ஐ. நாடுகளின் உதவியால் சுதந்திரமடைந்தது. 1900-ல் ஏற்பட்ட அரசியல் திட்டத்தின்படி ஒரு குடியரசு அரசியல் இங்கு நடைபெறுகிறது. பிரதிநிதிகள் சபையொன்றும், செனெட் சபையொன்றும் இருக்கின்றன. தலைவரும் உபதலைவரும் உண்டு.

**ஹேட்டி:** இக்குடியரசு ஹிஸ்பானியோலாத் தீவின் மேற்குப் பகுதியில் உள்ளது. 1677ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சுக் குடியேற்ற நாடாக இருந்தது. டெஸ்ஸாலின்ஸ் என்ற தலைவருடைய உதவியால் 1804-ல் சுதந்திரம் அடைந்தது. அவர் இரண்டு ஆண்டுகள் அரசாட்சி செலுத்தினர். பிறகு இத்தீவு ஒரு குடியரசாயிற்று.

**டாமினிகன் குடியரசு:** ஹிஸ்பானியோலா தீவின் பெரும்பாலான மேற்குப் பகுதிக்கு டாமினிகன் குடியரசெனப் பெயர். இப்பகுதியிலும் பிரெஞ்சுக்காரர் குடியேறியிருந்தனர். 1808-ல் ஆங்கிலச் சேனையின் உதவியால் டாமினிகன் மக்கள் பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றினர். மறுபடியும் இப்பகுதி ஸ்பானிய ஆட்சியின் கீழ் வந்து, பிறகு 1821-ல் சுதந்திரம் பெற்றது. ஹேட்டி நாட்டு மக்கள் 1822 முதல் 1844 வரை இந்நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். ஆனால் அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. பின்னர் இந்நாடு ஒரு குடியரசாகி, 1947-ல் ஏற்பட்ட அரசியல் திட்டத்தின்படி அரசாளப்படுகிறது.

மேற்கூறிய தீவுகளன்றியும் இன்னும் பல தீவுகள் அமெரிக்கக் கடற்கரை யோரமாக இருக்கின்றன. அவற்றில் தென் அமெரிக்காவின் தெற்குப் பக்கத்தில் அட்லான்டிக் சமுத்திரத்தில் உள்ள பாக்லண்டு தீவுகள், தெற்கு ஜியார்ஜியாத் தீவு, தெற்கு ஆர்க்னீத் தீவு முதலியன பிரிட்டிஷ் ஆட்சியில் அடங்கியுள்ளன. தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் உள்ள வெல்லிங்டன் தீவு, சிலோ தீவு, ஜுவான் பர்னாண்டஸ் தீவுகள், செயின்ட்பெலிஸ் தீவு முதலியவை சிலி நாட்டைச் சேர்ந்தவையாகும். சின்சு தீவுகள் பெரு என்ற நாட்டுடன் இணைக்கப்பட்டு உள்ளன. கலாப்பகாஸ் என்ற தீவு ஈக்வடார் நாட்டைச் சேர்ந்தது. வட அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் பெவில்லா கிக்டஸ், குவாடலூப், வான்கூவர், சார்லட் முதலிய தீவுகள் உள்ளன. (முக்கியமான தீவுகளைப் பற்றிய மற்ற விபரங்களுக்குத் தனிக் கட்டுரைகள் பார்க்க.)

ஏ. கி.

**அமேசான்:** பார்க்க: ஆமெசான்.

**அமைதி** (Peace) என்பது போர், சண்டை அல்லது சச்சரவு இல்லாத நிலைமையைக் குறிக்கும். போரும் இன்றி, அமைதியும் இன்றி இருக்கக்கூடிய நிலையும் உண்டாகையால், உலகில் எப்போது அமைதி நிலவுகிறதென்று தெளிவாகச் சொல்ல முடியாது. உலகம் அறிய இராச்சிய உறவு முறியாமல் இருக்கும்வரை இரண்டு நாடுகளுக்கிடையே அமைதி நிலவுவதாகக் கொள்ளலாம். இரண்டு நாடுகளின் படைகளும் ஒன்றோடொன்று போரில் ஈடுபட்டிருக்கும்போது அந்நாடுகளுக்கிடையே அமைதியில்லையென்றும் கூறலாம். இவ்வாறின்றி, வியாபாரப் போட்டியையும் ஒருவகைப் போராகக் கொள்வாருமுண்டு. பிரசாரமும் எதிர்ப் பிரசாரமும் ஒருவகையான போர்ச் சூழ்நிலையை உண்டாக்குகின்றனவாயினும், அமைதி குலைந்து போர் தொடங்கிவிட்டதாகக் கருதுவதற்கு இருநாட்டுப் படைகளுக்கிடையே கைகலப்பு நிகழவேண்டும். போர் நிகழாமல் அமைதி நிலவுவதற்குப் பல முறைகள் ஆராயப்பட்டு வந்துள்ளன. வல்லரசுகளுக்கிடையே ஒரு சமநிலை இருந்தால் ஒன்றையொன்று விஞ்ச முயலாதாகையால் இச்சமநிலை கெடாமல் பார்த்து வரவேண்டும் என்பது ஒரு பழைய முறை. சர்வதேச சங்கம், ஐ. நா. ஸ்தாபனம் முதலிய சங்கங்கள் வாயிலாகப் பல நாடுகள் சேர்ந்து போரைத் தடுக்க முற்படுவது ஒரு முறை. ஆயினும் அம்முறை இதுவரை பயனளிக்கவில்லை. ஐ. நா. ஸ்தாபனத்தில் காணப்படும் கருத்து வேறுபாடு அரசியல் உலகை இரண்டாகப் பிரித்துக் காட்டுகிறது.

அமைதியை நிலைநாட்டுவதற்கே போரை மேற்கொள்வதாகச் சொல்பவர்களும், அமைதிக்காகப் பிற ஆதார உரிமைகளை விட்டுக்கொடுத்தல் கோழைத்தனமும் கடமை தவறுதலுமாகும் என்று கருதுபவர்களும் உண்டு. ஆகையால் அமைதி பலமுறை குலைகிறது. 'எவ்வாறாயினும் அமைதி' என்பதைச் சிலர் 'வல்லரசுகளின் பேராசைக்கு இடங் கொடுப்பதற்குச் சமம்' என்று கருதுவதால் அவர்கள் அமைதியைவிட வேறு குறிக்கோள்களை முக்கியமாகக் கருதுகிறார்கள் என்பது தெளிவு. அன்றியும் தேசிய ஆதிபத்தியக் கொள்கை என்பது தன்னாட்டைத் தன் கருத்துப்படி ஆளப் பூரண உரிமை ஒவ்வொரு நாட்டிற்கும் அளிப்பதேயாகையாலும், நாட்டிற்கு நாடு ஆட்சிக் கருத்துக்கள் மாறுவதாலும் இக்கருத்து வேறுபாடு போருக்கு அடிகோலுகிறது. 1899 லும், 1907 லும் ஹேகில் நடந்த அமைதி மாநாடுகள் போரையொழித்து அமைதியை நிலைநாட்ட முயன்றன. ஆயினும் இன்னும் உலகில் போர்கள் நடந்து வருவதால், நிரந்தர அமைதிக்கான வழியொன்றும் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது தெளிவு.

**அமைதி :** பூமியிது வாயுமண்டல அழுத்தம் மிகுதியாயுள்ள சில இடங்களில் உயரத்தில் உள்ள காற்றுக் கீழிறங்கி நாற்புறமும் பரவுவதால் அவ்விடங்களில் அதிகக் காற்றின்றி அமைதியாக இருக்கும். இதைப் பூகோளவியலில் 'அமைதி' என்னும் சொல்லால் குறிப்பர். அமைதி கடக அமைதி, மகர அமைதி என இருவகைப்படும். கடகரேகைப் பிரதேசத்துக்கு மேலுள்ள காற்றுக் கீழே இறங்கி வடக்கேயும் தெற்கேயும் பரவுவதால் அங்கு உண்டாகும் அமைதி கடக அமைதி எனப்படும். இவ்வாறே மகரரேகைப் பிரதேசத்தில் உண்டாகும் அமைதி மகர அமைதி எனப்படும்.

**அமைப்பிற்குட்பட்ட அரசாங்கம்** (Constitutional Government): கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில், அரசாங்க முறைகளைப் பற்றித் தாமியற்றிய அரசியல் என்னும் நூலில், 'பாலிடி' என்று அவர் அழைக்கும் சட்ட வரம்புக் குட்பட்ட மக்கள் ஆட்சியை மிகச் சிறந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ''மக்களாட்சி என்பது பலராட்சி; அதாவது கும்பலாட்சி; இதை ஆட்சியேயில்லாத நிலை என்று கூறலாம்; இக்குழப்பத்தினின்று அமைதியை நிலைநாட்டக்கூடிய வல்லான் ஒருவன் வந்து தனியாட்சியை நிறுவுவான்; இவ்வாறாக மாறிமாறி வந்து கொண்டிருக்கும் அரசியல் ஏற்பாட்டை நிலைப்படுத்த, அமைப்பிற்குட்பட்ட அரசாங்கமே சிறந்தது'' என்று அவர் கருதினர். எதிலும் தீவிரக் கொள்கைகளை மறுத்து, நடுநிலையையே போற்றிய அவ்வறிஞர் 'இவ்வரசாங்கம் நடுத்தர வகுப்பினர் ஆட்சியாகுமாதலின் அதுவே விரும்பத் தக்கது' என்றும் கூறுகிறார்.

அமைப்பிற்குட்பட்ட அரசாங்கம் எனின், சட்டத்திற்கு அடங்கி நடத்தப்படும் ஆட்சி என்பதே பொருள்; அதாவது அரசாங்கம், குடிமக்கள் ஆகிய இருபாலரும் ஒருநாளும் புறக்கணிக்காமல் மதித்து, அதற்கு அடங்கி ஒழுக வேண்டிய மேலான சட்டமோ, சம்பிரதாயமோ உண்டு. அதற்குட்பட்டு நிகழும் ஆட்சியே மிக உயர்ந்தது என்பது கருத்து. தனியொருவர் அல்லது சிலர் அல்லது பலர் என்னும் யாருடைய தனி இச்சைப்படியும் நடத்தப்படாமல் சமூகத்தின் பொது மரபான சட்டத்தின் எல்லைக்குள் நடத்தப்படும் ஆட்சியே சிறந்தது. வரம்பிற்கும் சட்டத்திற்கும் கட்டுப்படாத எதேச்சாதிகாரம் பொதுமக்களால் நடத்தப்பெறின், அது மற்ற எந்த ஆட்சிமுறையைக் காட்டிலும் இழிந்தது என்பதில் ஐயமில்லை.

அமைப்பிற்கு அடங்கிய முடியாட்சி என்னும் கருத்தை விட, அமைப்பிற்கடங்கிய ஆட்சி ஓரளவு விரிவானது. முடியாட்சியைச் சில வரம்புகளுக்குட்படுத்த வேண்டும் என்னும் விருப்பம் ஒரு மன்னனிடம் ஏற்படும் அவநம்பிக்கையினால் தோன்றலாம்; எவ்வகை யாட்சியிலும் யாரும் வரம்புமீறி நடக்க இயலாதவாறு சம்பிரதாயங்கள் வளர்ந்து, சட்டங்கள் இயற்றப்படுவதால் இக்கோட்பாடு அதனினும் உயர்ந்ததொன்றும். ஜனநாயகம் வரம்பு கடத்தலால் பெருந்தீமை விளையும் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல உண்டு.

படைமானிய ஸ்தாபனங்கள் நிலவிவந்த இடைக்கால முறைகளைப் பின்பற்றியே அமைப்பிற்குட்பட்ட ஆட்சி மேற்கு ஐரோப்பாவில் வளர்ந்து வந்தது. இங்கிலாந்தில் இடையீடு இல்லாமல் அரசியல் அமைப்பு உறுதியுடன் சட்டத்தை ஒட்டியும் தாங்கியும் வளர்ந்து வந்துள்ளது. இதற்கும் பிரான்சில் புரட்சிவாயிலாக ஏற்பட்ட ஜனநாயக ஆட்சியின் பரிணமத்திற்குமுள்ள வேறுபாடுகள் காணத்தக்கவை.

அமைப்பிற்குட்பட்ட அரசாங்கம் சம்பிரதாயங்களை அடியோடு தகர்க்கும் எந்த மாறுதல்களையும் மேற்கொள்ளாது; அவ்வப்போது பதவியில் இருப்பவர்களுடைய எண்ணத்தின்படி இயங்காமல், எல்லாவற்றிற்கும் மேம்பட்ட சட்டத்தையே பின்பற்றும். இதனால் அமைப்பாட்சி, தீவிர ஜனநாயகத்தினின்றும் வேறுபட்டது என்பது புலனாகும்.

சுதந்திரத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்துள்ள மக்களின் ஒருவகை நிலையான அரசியல் ஏற்பாடுகளைச் சட்டபூர்வமாக நிலைநாட்டி, அவ்வப்போது தேவையான மாறுதல்களைச் சட்டப்படியே செய்து கொள்வதற்கு வேண்டிய பொறுமையை யூட்டுவதே அமைப்பிற்குட்பட்ட அரசாங்கத்தின் தனிப் பண்பு.

ரா. பா.

**அயக்காந்தத் தன்மை** (Ferro-magnetism): பார்க்க: காந்தத்துவக் கொள்கைகள்.

**அயக் கான்கிரீட்டு** (Ferro-concrete): இது வலுவாக்கிய கான்கிரீட்டு என்றும் கூறப்படுகிறது. கான்கிரீட்டிற்குள் எஃகு கம்பிகளை வைத்துக் கட்டட வேலைக்கு உபயோகிக்கும் முறை இவ்வாறு அழைக்கப்படுகிறது. அதிகமான தகவினாலும் (Stress) கான்கிரீட்டு நசுங்கியோ அழுந்தியோ போவதில்லை. ஆனால் அதன் இழுவலிமை மிகக் குறைவு. எஃகின் இழுவலிமை அதிகம். ஆகையால் இவ்விரு பொருள்களையும் தக்க விகிதத்தில் பயனுக்கிப் பலவேறு வகையான தகவுகளையும், பலவேறு அளவுள்ள பாரங்களையும் தாங்க ஏற்றவாறு கட்டடங்களை அமைக்கலாம். இவ்வாறு கான்கிரீட்டை வலுப்படுத்தும் முறையை மானியர் என்ற தோட்டக்காரர் 1860-ல் கண்டுபிடித்தார் எனக் கருதுகிறார்கள்.


அயக் கான்கிரீட்டினால் கட்டடம் கட்ட, முதலில் மரத்தினாலோ, உலோகத் தகடுகளாலோ, அதே வடிவுள்ள சட்டம் அமைக்கப்படுகிறது. பின்னால் ஊற்றப்படும் கான்கிரீட்டிற்கு இது வார்ப்படமாக அமைகிறது. இதற்குள்ளேயும் இதன் மேலும் எஃகு கம்பிகள் பொருத்தப்படுகின்றன. இதன்பின் புதிதாகத் தயாரிக்கப்பட்ட கான்கிரீட்டு வார்ப்பிற்குள் ஊற்றப்படுகிறது. அது இறுகியபின் எஃகு கம்பிகள் அதில் பதிந்து அத்துடன் இணைந்துவிடுகின்றன. முன்னர் மரமும், எஃகும் பயனாகி வந்த பல கட்டட வேலைகளுக்குத் தற்காலத்தில் அயக் கான்கிரீட்டுப் பயனாகிறது. இது மரத்தை விட அதிகமான வலுவும் உறுதியும் கொண்டது. இதன் தீ யெதிர்க்கும் திறன் மரம், எஃகு இவற்றின் திறனை விட அதிகம். பார்க்க: கான்கிரீட்டு.

**அயர்லாந்து:** பரப்பு: 26,600 ச. மைல். மக்: 29·6 இலட்சம் (1951). அட்லான்டிக் சமுத்திரத்தில் பிரிட்டனுக்குச் சிறிது மேற்கே அமைந்துள்ள ஒரு தீவு. பிரிட்டனுக்கும் இதற்கும் இடையே செயின்ட் ஜார்ஜ் கால்வாய், ஐரிஷ் கடல், வடகால்வாய் முதலியன இருக்கின்றன. இத்தீவின் கிழக்குக்கரை நேராகவே யமைந்துள்ளதாயினும், மேற்குக்கரையில் பல கடற்குடைவுகள் இருக்கின்றன. இத்தீவில் உள்ள மிக உயர்ந்த மலைகள் 3,400 அடி உயரம்; அவை வடபகுதியிலும் மேலைக்கரையோரமாகவும் இருக்கின்றன. தீவின் மேற்குப் பகுதியில் மக்கள் தொகை குறைவு. வடக்கேயும், தெற்கேயும் உள்ள மலைப் பிரதேசங்களுக்கிடையே சமநிலம் அமைந்திருப்பதால் இத்தீவு ஒரு கிண்ணம் போல் தோன்றுகிறது. இத்தீவிலுள்ள மிக நீண்ட ஆறு ஷானன் என்பது. இந்த ஆறு அட்லான்டிக் கடலோடு கலக்கிறது. இத்தீவில் மழை மிகுதியாக உண்டு. வட அட்லான்டிக் வெப்ப நீரோட்டம் இத்தீவின் மேற்குப் புறமாக ஓடுவதால், குளிர்காலத்திலும் இங்குக் குளிர் அதிகமாக இல்லை. கோடையில் சராசரி வெப்பநிலை 60° பா; குளிர்காலத்தில் 40° பா. இத்தீவு பசுமையான புல்வெளிகள் நிறைந்துள்ளதால், மரகதத் தீவு என்னும் பெயர் பெற்றுள்ளது. மீன் பிடிப்பது இங்குள்ள மக்களின் பலருக்குத் தொழில். ஷானன் ஆற்றில் லிமெரிக் என்னுமிடத்திற்கருகே ஒரு நீர்த் தேக்கம் கட்டப்பட்டுள்ளது.

ஓட்ஸ், பார்லி, பீட்கிழங்கு, உருளைக்கிழங்கு முதலியவை விளைகின்றன; பன்றிகள், குதிரைகள், ஆடுகள் மிகுதியாக உள்ளன; பீட் சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகிறது. பால் பண்ணைத் தொழில் இங்கு முக்கியமானது.

இத்தீவில் ஆதியில் வசித்துவந்த மக்கள் கெல்ட் இனத்தவர். பிற்காலத்தில் டேனர்களும் ஆங்கிலேயரும் கெல்ட்களோடு கலந்தனர்; பிராடஸ்டென்ட் மதத்தவராகிய ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் வடகிழக்கே அதிகமாக வசிக்கின்றனர். பெரும்பான்மை அயர்லாந்து மக்கள் கத்தோலிக்கர்கள்.

இங்குள்ள மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள். கம்பள நெசவு, தட்டுமுட்டுச் சாமான்கள், சவர்க்காரம் முதலியவை செய்தல் இங்கு நடக்கும் கைத்தொழில்கள். வெண்ணெய் முதலிய பொருள்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கரி முதலிய தாதுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.




அயர்லாந்து

முற்காலத்தில் அயர்லாந்து மக்களின் மொழி கேலிக் (Gaelic) என்பது; ஆங்கில ஆட்சியில் ஆங்கிலம் பயிற்சி மொழியாயிற்று. தென் அயர்லாந்து சுதந்திரம் எய்தியபின் மறுபடியும் கேலிக் மொழியே அந்நாட்டு மொழியாயிற்று. அதற்கேற்ப அந்நாட்டின் பெயரும் ஏரே (Eire) என்று மாற்றப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் உள்ள வட அயர்லாந்தில் ஆங்கிலமே நாட்டு மொழியாயுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடிய காலத்தில் ஏரே மக்கள் தம் நாட்டின் முன்னேற்றத்தைக் கவனிக்க முடியவில்லை. ஆட்சி புரிந்த ஆங்கிலேயர்களும் அவர்களுடைய நன்மையைக் கருதியவர்களாக இருக்கவில்லை. சுதந்திரம் அடைந்த பின் ஏரே மக்கள் தம் நாட்டை முன்னேற்றமடைவிக்க முயல்கின்றனர். முக்கியமான நகரங்கள்: டப்ளின் (சுதந்திர அயர்லாந்தின் தலைநகரம்); மக்: 5,21,322 (1951); பெல்பாஸ்ட் (வட அயர்லாந்தின் தலைநகரம்); மக்: 4,43,670 (1951).

வரலாறு: இந்நாட்டின் தொடக்க வரலாற்றைப் பற்றி நமக்கு அதிகமான விவரங்கள் தெரியவில்லை. இங்கு முதலில் வாழ்ந்துவந்த மக்கள் 'கெல்ட்' இனத்தைச் சேர்ந்தவர்கள். 5 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதம் அவர்களிடைப் பரவியது. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கிலாந்தைக் கடல் வழியாகப் பலமுறை தாக்கிவந்த டேனர்கள் அயர்லாந்தையும் தாக்கி, அங்கிருந்த அரசர்களுடன் சண்டையிட்டார்கள். 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அவ்வரசர்கள் ஒன்று சேர்ந்து, கிளோன்டார்ப் (Clontarf) போரில் டேனர்களை முறியடித்தனர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் இடையில் அயர்லாந்து அரசர்களுக்குள் தகராறு ஏற்படவே, அச்சமயம் இங்கிலாந்தை ஆண்டுவந்த II-ம் ஹென்ரியின் உதவியை அவர்களில் சிலர் நாடினர். ஹென்ரி தமது பிரபுக்களில் விரும்பியவர் போய் உதவி செய்யட்டுமென்று கூறிவிட்டார். அவர்களில் முக்கியமானவர் ரிச்சர்டு டீ கிளேர் என்பவர். அயர்லாந்தில் அவ அதிகாரம் பரவவே, II-ம் ஹென்ரி அந்நாட்டில் தம் பிரபுக்களே சுயேச்சை பெற்றுவிடுவார்களோ என்று அஞ்சி, அயர்லாந்துக்கு ஒருமுறை சென்று, தம்மையே அயர்லாந்தின் தலைவராக அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தார்.

பல நூற்றாண்டுகளுக்கு ஆங்கிலேயப் பிரபுக்கள் ஆதிக்கம் அயர்லாந்தின் கிழக்கு இடைப்பகுதியில் சில சதுர மைல்களுக்கே பரவியிருந்தது. அப்பிரதேசத்தை 'எல்லை' (The pale) எனக் குறிப்பிட்டு வந்தார்கள். டியூடர் அரசர் VII-ம் ஹென்ரி அயர்லாந்துக்கு அனுப்பிய பிரதிநிதியான சர் எட்வர்டு பாய்னிங்க்ஸ் என்பவர் அயர்லாந்து பார்லிமென்டைக் கூட்டினார்; சில சட்டங்கள் மூலம் அது தானாகவே இங்கிலீஷ் பார்லிமென்டின் தலைமைக்குப் பணிந்தது. VIII-ம் ஹென்ரி கட்டுக்கடங்காத 'கில்டேர்' என்ற ஒரு ஐரிஷ் பிரபு வமிசத்தவர்களைப் பிடித்துவரச் செய்து, அவர்களைத் தூக்கிலிட்டார். இங்கிலாந்தின் சமயச் சீர்திருத்த மாறுதல்களையும் அயர்லாந்தில் புகுத்தினார். எலிசபெத் ஆட்சியின்போது அயர்லாந்து மக்களும் அவர்கள் தலைவர்களும் மூன்று முறை கலகம் செய்தனர். கடைசிக் கலகம் டைரோன் பிரபுவின் தலைமையில் நடைபெற்றது. அயர்லாந்து மக்களின் கத்தோலிக்க சமயப் பற்றையும், தேசிய உணர்ச்சியையும் வெளிக்காட்டிய இக்கலகம் 1603-ல் ஆங்கிலப் படை வலிமையால் அடக்கப்பட்டது.

1641-ல் பெரியதோர் ஐரிஷ் கலகம் தோன்றி ஆங்கிலேய அரசர் I-ம் சார்லஸுக்கும் அவருடைய பார்லிமென்டுக்கும் ஏற்கனவே இருந்த மனக்கசப்பை அதிகமாக்கியது. சார்லஸின் இராணி கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவள். அயர்லாந்து மக்களும் கத்தோலிக்க சமயப் பற்றுடையவர்களாகையால் சார்லஸுக்கும் இக்கலகத்துக்கும் சம்பந்தமிருக்க வேண்டுமென்று பார்லிமென்டு தலைவர்கள் முடிவு கட்டினார்கள். இது இங்கிலாந்தின் உள்நாட்டுப் போருக்கு ஓரளவு வழிகோலிய நிகழ்ச்சி. I-ம் சார்லஸின் வீழ்ச்சிக்குப் பின் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட புது அரசாங்கத்தை அயர்லாந்து மக்கள் எதிர்த்ததால் ராணுவத் தலைவர் கிராம்வெல் 1649-50-ல் அயர்லாந்துக்குத் தமது படைகளுடன் சென்று, வெக்ஸ்போர்ட், டிராயிடா (Wexford, Drogheda) முதலிய இடங்களில் பல அயர்லாந்து வீரர்களைக் கொன்று, அயர்லாந்து மக்கள் நிலங்களையும் பெருவாரியாகப் பறிமுதல் செய்து ஆங்கிலேய அரசின் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். பொதுவாக, அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் பகை நீடித்ததற்குக் காரணங்கள் சமய வேறுபாடு, நிலப்பறிமுதலால் விளைந்த அநீதி, ஆங்கிலேய சாதியினரின் அதிகாரச் செருக்கு முதலியவையாம்.

1688 ஆம் ஆண்டின் ஆங்கிலப் புரட்சிக்குப்பின் முடி துறந்த II-ம் ஜேம்ஸ் தீவிர கத்தோலிக்கரானபடியால் அவருக்கு அயர்லாந்தில் ஆதரவு கிடைத்தது. இங்கிலாந்தின் புதிய அரசர் III-ஆம் வில்லியம் ஒரு படையுடன் அயர்லாந்துக்குப் போய் பாயின் போரில் (Battle of the Boyne 1690) ஜேம்ஸை முறியடித்தார். சில மாதங்களில் அயர்லாந்து மக்கள் எதிர்ப்பும் ஓய்ந்தது. அயர்லாந்து மக்களிடம் பொறுமை காட்டப்படுமென்று ஆங்கிலேய அரசாங்கம் உறுதி கூறியிருந்தது. ஆயினும் 18ஆம் நூற்றாண்டில் அயர்லாந்தில் வசித்துவந்த பெரும்பாலோரான கத்தோலிக்கர்கள் பல வழிகளில் ஒடுக்கப்பட்டனர். அவர்களுக்கு வோட்டுரிமை இல்லை; உயர்தரக் கல்வி அளிக்கக் கூடாது. அவர்கள் நிலச்சுவான்தார்களாக இருக்க முடியாது. அயர்லாந்தின் தொழில் வளர்ச்சிக்கும் எவ்வளவோ தடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கில் அயர்லாந்து மக்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறி, ஐரோப்பாவில் பல இடங்களுக்குச் சென்று பிழைத்தனர்.

அமெரிக்கச் சுதந்திரப் போர் நிகழ்ந்தபோது ஆங்கிலேய அரசாங்கம் அயர்லாந்து மக்களுக்குச் சில சலுகைகளைக் காட்டியது. ஆயினும் பிரெஞ்சுப் புரட்சியினால் அயர்லாந்திலும் தீவிர அரசியல் கொள்கைகள் பரவவே, பிரிட்டன் அடக்குமுறையைக் கையாண்டது. 1798-ல் அயர்லாந்தில் பெருந் தேசியக் கலகம் ஏற்பட்டது. ஈவு இரக்கமின்றி, அது ஆங்கிலேயர் படைபலத்தால் நசுக்கப்பட்டது. இச்சமயம் திரட்டப்பட்டிருந்த படைகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிரிட்டன் அயர்லாந்து பார்லிமென்டை 1801-ல் ஒரு ஐக்கியச் சட்டம் இயற்றச் செய்தது. அதன்படி பிரிட்டிஷ் பார்லிமென்டில் பிரபுக்கள் சபைக்கு 4 பிஷப்புக்களையும், 28 மற்றப் பிரபுக்களையும், காமன்ஸ் சபைக்கு 100 அங்கத்தினர்களையும் அயர்லாந்து அனுப்ப வேண்டியது. அயர்லாந்துக்குத் தனிப் பார்லிமென்டு இல்லை. இரு நாடுகளுக்குமிடையே தடையிலா வாணிபம் அனுமதிக்கப்பட்டது. கத்தோலிக்கர்களுக்கு 'விடுதலை' அளிப்போமென்று பிரிட்டன் வாக்களித்தது; ஆனால் அதை நிறைவேற்றவில்லை, தொடக்கத்திலிருந்தே அயர்லாந்து மக்கள் இந்தக் கட்டாய ஐக்கியத்தை வெறுத்தனர்.

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் டானியல் ஓகானெல் என்ற அயர்லாந்து தலைவர் தம் நாட்டு மக்களின் விடுதலைக்காக மிகவும் பாடுபட்டார். பார்லிமென்டுக்கு அயர்லாந்தின் அங்கத்தினர்களிலொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் கத்தோலிக்கர் என்ற காரணத்தால் அவர் அச்சபையில் உட்கார முடியவில்லை. கத்தோலிக்கர்களுக்குக் குடி உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஆங்கிலத் திருச்சபை அயர்லாந்துக்கு அதிகாரத்தோடுகூடிய திருச்சபையாயிருப்பது நியாயமில்லையென்றும், 1801 ஆம் ஆண்டின் ஐக்கியச் சட்டத்தை நீக்க வேண்டுமென்றும் அவர் பல கிளர்ச்சிகள் செய்தார். முதல் கிளர்ச்சி 1829-ல் வெற்றியடைந்தது; கத்தோலிக்கர் பிராட்டெஸ்டென்டுகளுடன் சமஉரிமை பெற்றார்கள். ஆனால் அவருடைய மற்ற நோக்கங்கள் நிறைவேறவில்லை. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் கிளாட்ஸ்டன் பலமுறை பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்தார். அப்பொழுது அயர்லாந்து தலைவர் பார்னெல் ஒரு நிலச்சங்கத்தை ஏற்படுத்தி, அயர்லாந்து விவசாயி

களின் குறைகளை நீக்க முயன்றார். ஆனால் துன்புறுத்து முறைகளைக் கையாள அவர் தயங்கவில்லை. கிளாட்ஸ்டன் சட்ட விரோதமான நடவடிக்கைகளை அடக்கும்படி நேர்ந்தது. ஆயினும் அயர்லாந்து மக்களின் நன்மைக்காகவும் பல சட்டங்களை இயற்றினார். அயர்லாந்தில் பிராட்டெஸ்டென்டு திருச்சபைக்கு அரசாங்கச் சலுகை நின்றது (1867). விவசாயிகள் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகைகளை நிதானித்து நிருணயிக்க நிலநீதிமன்றங்களை அவர் ஏற்படுத்தினார் (1881). மற்றும் சில சட்டங்கள் நிலப்பிரச்சினையை இறுதியாகத் தீர்க்கும் நோக்கத்துடன் இயற்றப்பட்டன. மிராசுதார்கள் நிலங்களை விற்க விரும்பினால் அங்கு வேலை செய்யும் அயர்லாந்துக் குடியானவர்கள் அவைகளை வாங்கிக்கொள்ளலாம் என்பதும் அதற்கென அரசாங்கமே குறைந்த வட்டியில் குடியானவர்களுக்குக் கடன் கொடுத்துதவும் என்பதுமே அவற்றின் சாரம். 1886-ல் அயர்லாந்துக்குச் சுயாட்சி அளித்துவிட கிளாட்ஸ்டன் நிச்சயித்தார். பார்லிமென்டு அவர் மசோதாவை மறுத்தது. அவர் கட்சி இதனால் பிளவுபட்டது. 1893-ல் மீண்டும் ஒரு 'ஐரிஷ் சுயாட்சி மசோதாவைப்' பார்லிமென்டுக்குக் கொணர்ந்தார். அதுவும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அயர்லாந்து தலைவர்கள் சின்பேன் (Sinfein) எனும் தேசியத் தாபனத்தை நிறுவி, நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பல்வேறு துறைகளில் சீர்ப்படுத்தி உய்ப்பிக்க உழைத்தனர். 1911-ல் இங்கிலாந்து பிரதமர் ஆஸ்க்வித் மற்றொரு "சுயாட்சி மசோதாவை"ப் பார்லிமென்டுக்குச் சமர்ப்பித்தும் பயனில்லை. அயர்லாந்திலும் புரட்சி மனப்பான்மை வளர்ந்தது. பிரிட்டனின் தொடர்பை நீக்கிக் கொள்ளப் பலர் ஆயத்தம் செய்தனர். அயர்லாந்தின் வடபகுதியில் பிரிட்டிஷார் சந்ததியில் தோன்றிய பிராட்டெஸ்டென்டு வகுப்பினர் பிரிட்டனுடனுள்ள தொடர்பு போகக்கூடாதென்று கருதினர்கள். உள்நாட்டுப் போர் மூண்டுவிடும் போலிருக்கையில் முதல் உலக யுத்தம் தொடங்கிவிட்டது.

யுத்தத்தின்போது அயர்லாந்தில் குடியரசு குறிக்கோளை விரும்பியவர்கள் பெருங்கிளர்ச்சி செய்து, பிரிட்டனுக்கு நெருக்கடியை மிகுவித்தனர். இவர்களில் முக்கியமான தலைவர் ஈமன் டெவலேரா. 1918 லிருந்து 1920 வரை பிரிட்டன் அடக்குமுறைகள் அனுசரித்தது. கடைசியாக, சமரச வழியைப் பின்பற்றி, பேச்சு வார்த்தைகள் நடத்தி, 1921 டிசம்பர் மாதத்தில் அயர்லாந்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி வடபகுதி தனது பார்லிமென்டை வைத்துக்கொண்டு பிரிட்டனுடன் இணைந்திருந்தது. அயர்லாந்தின் மற்றப் பிரதேசங்கள் ஐரிஷ் சுதந்திர அரசாங்கம் என்ற பெயருடன் குடியேற்ற அந்தஸ்து பெற்றன. இதுவும் ஐரிஷ் தீவிரவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. சில ஆண்டுகளுக்கு அவர்கள் உள்நாட்டுப் போர் நடத்தி வந்து, கடைசியில் 1932-ல் புதுத் திட்டத்தை ஒப்புக்கொண்டார்கள். அவ்வாண்டு டெவலேரா அயர்லாந்தின் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டு, பிரிட்டனுடன் சச்சரவுகளைத் தொடர்ந்து நடத்தினார். அவர் கட்சியின் நோக்கம் பிரிட்டனுடன் சம்பந்தமே கூடாது, அயர்லாந்து ஒரு குடியரசாகத் திகழ வேண்டுமென்பது. 1932-ல் ஆங்கில அரசருக்கு அயர்லாந்து பார்லிமென்டு அங்கத்தினர்கள் விசுவாசப் பிரமாணம் செய்வதை நிறுத்திக்கொண்டார்கள். 1932-ல் பிரிவி கவுன்சிலுக்கு அயர்லாந்து அப்பீல்கள் போவது நின்றது. 1936-ல் கவர்னர்ஜெனரல் பதவி மறைந்தது. 1937-ல் அயர்லாந்தின் பார்லிமென்டு ஒரு புது அரசியல் திட்டத்தை வகுத்து, அயர்லாந்து இனிப் பூரண சுதந்திரம் பெற்ற ஜனநாயக அரசாங்கம் என்று சட்டபூர்வமாகக் கூறிக்கொண்டது.

1932 முதல் 1948 தொடக்கம் வரை டெவலேரா பிரதம மந்திரியாக இருந்தார். இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளெல்லாம் பிரிட்டன் கட்சியில் சேர்ந்து சண்டையிட்டன. ஆனால் அயர்லாந்து சுதந்திர அரசாங்கம் மாத்திரம் நடுநிலைமை வகித்துத் தனிப்பட்டு நின்றது. ஜூன் 1946-ல் டெவலேரா அயர்லாந்து பார்லிமென்டில் அதிகார முறையில் தமது நாட்டின் அந்தஸ்தைப் பின்வருமாறு விளக்கினார்: "ஏரே (அயர்லாந்து) பூரண சுதந்திரக் குடியரசு. அது பிரிட்டனுடனும் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டுத் தொகுதியுடனும் பிற அயல்நாடுகளுடன் உள்ள தொடர்பே போன்ற தொடர்புடையது." ஸ்ரீ. தோ.

**அரசியலமைப்பு:** 1921-ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவாக இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி தென் அயர்லாந்து, ஐரிஷ் சுதந்திர இராச்சியம் என்ற முழுச் சுதந்திரமுள்ள நாடாயிற்று. 1937-ல் பொதுமக்களால் குடியொப்பத்தில் (Referendum) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த அரசியல் திட்டமே சிற்சில மாறுதல்களுடன் தற்போதைய ஐரிஷ் அரசியலுக்கு அடிப்படை. இதன்படி தென் அயர்லாந்து சுதந்திர இராச்சிய அந்தஸ்துடன் கூடிய ஜனநாயகக் குடியரசாயிற்று. இந்த அரசியல் திட்டம் நிருவாகத் தொகுதி, சட்டமியற்றும் தொகுதி, நீதித்தொகுதி என்ற மூன்று உறுப்புக்கள் அடங்கியது.

நிருவாக முறை பிரிட்டிஷ் காமன்வெல்த் தேசங்களில் வழங்கும் பார்லிமென்ட் மந்திரிசபை முறையைப் பின்பற்றியதே. நிருவாகத் தலைவருக்கு ஜனாதிபதி என்று பெயர். இவர் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் மக்கள் அனைவரும் வாக்குரிமை அளிப்பதன் மூலம் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் ஏழு ஆண்டு பதவியிலிருப்பார். அரசியலமைப்பின்படி எல்லா நிருவாக சம்பந்தமான நடவடிக்கைகளும் ஜனாதிபதியின் பேரால்தான் நடைபெறவேண்டியிருந்தாலும், உண்மையில் நிருவாக அதிகாரம் முழுவதையும் மந்திரிசபையே செலுத்துகிறது. ஜனாதிபதிக்கு இரண்டொரு தனி அதிகாரங்கள் உண்டு. பார்லிமென்டில் இயற்றப்பட்ட எந்தச் சட்டமாவது அரசியல் திட்டத்து ஷரத்துகளுக்கு முரணாக இருக்கிறதென்று அவருக்குத் தோன்றினால், அவர் அந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைக்கு அனுப்பி, அம்மன்றத்தின் கருத்தைத் தெரிந்துகொள்ளலாம். மேற்சபையின் பெரும்பான்மையோரும், கீழ்ச்சபையின் மூன்றில் ஒரு பாகம் அங்கத்தினரும் பொது முதன்மை வாய்ந்த ஒரு மசோதாவைச் சட்டமாக இயற்ற மறுத்தால், ஜனாதிபதி அப்பிரச்சினையைக் குடியொப்பத்திற்கு அனுப்பலாம். ஜனாதிபதிக்கு அவரது அலுவல்களில் உதவவும், ஆலோசனை கூறவும் பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட ஒரு மந்திரிசபை உண்டு. பிரதம மந்திரி சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியின் பிரதிநிதி. மந்திரிசபையின் தீர்மானத்தை ஜனாதிபதி சாதாரணமாகப் புறக்கணிக்கக் கூடாது. மந்திரிசபைதான் உண்மையில் எல்லா நிருவாக அதிகாரத்தையும் செலுத்துகிறது. ஜனாதிபதி சில குறிப்பிட்ட விஷயங்

களில் பிரதம மந்திரியும், ஜனதிபதியால் நியமிக்கப்பட்ட ஆறு பேர்களும் ஆகிய ஏழு அங்கத்தினர்கள் அடங்கிய 'கவுன்சில் ஆப் ஸ்டேட்' என்ற ஒரு சபையையும் ஆலோசனை கேட்கலாம். இந்தச் சபையின் ஆலோசனைப்படி ஜனதிபதி நடந்துகொள்ள வேண்டுமென்ற நிபந்தனை கிடையாது. சட்டமியற்ற செனெட் என்ற மேற்சபை, டேல் என்ற கீழ்ச்சபை ஆகியவையடங்கிய ஒரு பார்லிமென்டு நிறுவப்பட்டிருக்கிறது. செனெட் சபை 60 அங்கத்தினர்களடங்கியது. இவர்களில் பதினேரங்கத்தினர் ஜனதிபதியால் நியமிக்கப்படுபவர்; ஆறு அங்கத்தினர் இரண்டு பல்கலைக் கழகங்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்; மற்ற 43 அங்கத்தினர் இலக்கியம், விஞ்ஞானம், கலை, கல்வி, சமூகத்தொண்டு, வாணிபம், விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களும் என்னும் இவைபோன்ற விஷயங்களில் விசேஷ அறிவுள்ளவராகவோ, அனுபவமுள்ளவராகவோ இருப்பவர்களை 5 பட்டியலாகப்(Panels) பிரித்து, அந்தந்த வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனல், ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஐந்துக்குக் குறையாமல் பதினென்றுக்கு மேற்படாமல் அங்கத்தினர் எடுக்கப்படவேண்டும். கீழ்ச்சபை அங்கத்தினர் சர்வஜன வோட்டு முறைப்படி விகிதப் பிரதிநிதித்துவ ஏற்பாட்டை யொட்டித் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மந்திரிசபை கீழ்ச்சபைக்குக் கூட்டுமுறையில் பொறுப்பாளியா யிருக்கவேண்டும். செலவு நிதி மசோதா இங்குத்தான் சமர்ப்பிக்கப்படலாம். மற்ற மசோதாக்கள் மேற்சபையிலோ கீழ்ச்சபையிலோ சமர்ப்பிக்கப்படலாம். கீழ்ச்சபையிலிருந்து மேற்சபைக்கு அனுப்பப்படும் மசோதாக்களுக்கு மேற்சபை 90 நாட்கள் வரை தடை (Suspension veto) செய்து வரலாம். நிதி மசோதாக்களைத் தடைசெய்யவே முடியாது. ஆகையால் கீழ்ச்சபைக்குத்தான் முழு அதிகாரமும் என்பது நன்கு விளங்கும். நீதி வழங்குவதற்கு ஓர் உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்டிருக்கிறது. அரசியல் திட்டத்தில் கண்ட ஷரத்துக்கள் விவாதிக்கப்பட்டால் அந்தத் தகராறுகளை விசாரணை செய்ய உச்ச நீதிமன்றத்துக்கு அசல் அதிகாரம் உண்டு.

1940-1950 முடியப் பத்து ஆண்டுகளில் நிருவாக அதிகாரிகளும் சட்டசபையும் பொது மக்களுக்கு அரசியல் திட்டத்தில் உறுதியான பாதுகாப்பு அளித்திருந்த சில அடிப்படை உரிமைகளைப் பறித்துவிட்டார்களென்று வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டன. சில வழக்குகளில் ஆக்கிரமிப்பு இல்லையென்றும், மற்றும் சிலவற்றில் ஆக்கிரமிப்பு இருந்திருப்பதால் அந்த நடவடிக்கைகளெல்லாம் ரத்து செய்யப்பட வேண்டியவை யென்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்திய அரசியல் திட்டத்தில் நாலாவது பாகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அரசியல் வேலை முறையில் அனுசரிக்கவேண்டிய கொள்கைகள் அயர்லாந்து அரசியல் திட்டத்திலிருந்துதான் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**வட அயர்லாந்து அரசியலமைப்பு**: 1920, 1922 அரசியல் அமைப்புச் சட்டப்படி வட அயர்லாந்து மக்கள் தமக்கெனத் தனி நிருவாகமும் சட்டசபையும் பெற்றனர். நிருவாக அதிகாரம் இங்கிலாந்து மன்னரின் சார்பாக ஒரு கவர்னரால் வகிக்கப்படுகிறது. இவர் ஆறுண்டு காலத்திற்குப் பதவியிலிருப்பார். இவருக்கு ஆலோசனை கூறப் பார்லிமென்டுக்குப் பொறுப்பான ஒரு மந்திரிசபை யுண்டு; பார்லிமென்டு 26 அங்கத்தினர்கள் கொண்ட செனெட்டும், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 52 அங்கத்தினர்களடங்கிய காமன்ஸ் சபையும் என இரண்டு சபைகளடங்கியது. செனெட்டு அங்கத்தினர்கள் எட்டாண்டு காலத்திற்குக் காமன்ஸ் சபை அங்கத்தினர்களால் ஒற்றை மாற்று வோட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். காமன்ஸ் சபையின் காலவரையறை 5 ஆண்டுகள். 1929 முதல் இச் சபையின் பெரும்பாலான அங்கத்தினர்கள் ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். இங்கிலாந்தின் காமன்ஸ் சபைக்கு வட அயர்லாந்து இன்றைக்கும் 13 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அயர்லாந்து பார்லிமென்டுக்குச் சாம்ராச்சியத்தைச் சார்ந்த விஷயங்கள், போர்ப் பிரகடனம் செய்தல், சமாதானப் பேச்சு நடவடிக்கை எடுத்தல், உடன்படிக்கை செய்தல், பட்டம் முதலிய கௌரவங்கள் அளித்தல் என்பவற்றைத் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் சட்டமியற்றவோ நிருவாகம் நடத்தவோ அதிகாரமுண்டு. வட அயர்லாந்து அரசியலமைப்பில் மேற்சபையைக் கீழ்ச்சபை தேர்ந்தெடுப்பது ஒரு சிறப்பான அமிசம். வீ. வெ.

**அயவா** (Iowa) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்று. காலிபோர்னியாவுக்கும் மசசூசிட்ஸுக்கும் இடையிலுள்ளது. பரப்பு: 56,045 ச. மைல். முக்கிய ஆறுகள் டமாய்ன், அயவா. முக்கிய ஏரிகள் கிளியர், ஸ்பிரிட், ஸ்டார்ம். மரங்களைத் தொடர்ந்து வெட்டி வருவதால் காடுகள் அழிந்து வருகின்றன. தானியமும் கால்நடையும் மிகுதி. தேன் உண்டாக்குவதில் நான்காவது மாகாணமா யிருக்கிறது. இந்த இராச்சியத்தில் விவசாயமே முக்கியமானது. இராச்சியத்தின் பரப்பில் சுமார் மூன்றிலொரு பங்கில் தரையடியில் நிலக்கரி உள்ளது. ஒரு காலத்தில் காரீயச் சுரங்கங்கள் முக்கியமாக இருந்தன. மக்: 2,621,073 (1950). தலைநகரம் டமாய்ன். இந்த இராச்சியத்தின் முக்கிய கைத்தொழில் இறைச்சியை டப்பிகளில் அடைத்தல். உணவுச் செய்முறைத் தொழிலும் முக்கியமானது.

**அயனம்**: பூமி சூரியனைச் சுற்றி ஓர் ஆண்டில் ஒருமுறை வருவதால், பூமியிலுள்ளவர்க்குச் சூரியன் நட்சத்திர மண்டலங்களிடை நகர்ந்து செல்வதுபோல் தோன்றுகிறது. சூரியனின் இப்படிப்பட்ட ஆண்டுச் சஞ்சாரத்தில் தை மாதம் முதல் 6 மாதங்கள் வட துருவத்தை நோக்கி நகர்வதும், ஆடி முதல் 6 மாதங்கள் தெற்கே நோக்கிச் செல்வதும், பூமியின் சீதோஷ்ண நிலை வருடாந்தர மாறுதல்களடைவதும் பலரும் கண்டறிந்தவை. கடக ரேகையிலிருந்து தெற்கே திரும்பும் காலம் தட்சிணயனம் என்றும், மகர ரேகையிலிருந்து வடக்கே திரும்பும் காலம் உத்தராயனம் என்றும் கூறுவர். அயன தினங்கள் சூரியன் வட, தென் சஞ்சாரத்தில் திசை மாறும் காலங்களாகும். மேனட்டுப் பஞ்சாங்கப்படி தட்சிணயன தினம் ஜூன் 21உம், உத்தராயன தினம் டிசம்பர் 22உம் ஏற்படுகின்றன. உத்தராயன தினத்தன்று பூமியின் வடபாகத்திலுள்ளவர்க்கு ஓர் ஆண்டில் மிக நீண்ட பகற்பொழுதும் தென்பாகத்திலுள்ளவர்க்கு மிகக்குறைந்த பகற்பொழுதும் இருக்கும். தட்சிணயன தினத்தன்று பகற்பொழுது இதற்கு நேர்மாறாக இருக்கும்.

**அயாச்சோ** (Ajaccio) கார்சிக்காத் தீவின் தலைநகரம். நெப்போலியன் பிறப்பிடம். அவர் பிறந்த வீடு பாதுகாக்கப்பட்டு வருகிறது. முத்துக் குளித்தல் முக்கியமான தொழில். அழகான மாதாகோயிலும் நல்ல துறைமுகமும் உள. மக்: சு. 37,000.


**அயான்** (Ion): மின்னேற்றங் கொண்ட அணுவோ, அணுத்தொகுதியோ அயான் என்று அழைக்

கப்படுகிறது. அணுக்கள் எதிரான ஏற்றங்கொண்ட இரு பகுதிகளால் ஆனவை. இவ்விரு ஏற்றங்களும் சமமாக இருப்பதால் அணுவில் நிகர மின்னேற்றம் எதுவும் இருப்பதில்லை. ஆனால் ஓர் அணுவானது எலெக்ட்ரான்களை ஏற்றாலோ, இழந்தாலோ, மின்னேற்றங்கொண்டதாகிறது. இவ்வாறு அது அயானாகிறது. சாதாரணமாக எல்லா உலோகங்களும், ஹைடிரஜனும் எலெக்ட்ரான்களை இழந்து நேரயான்கள் ஆகும். அலோகங்களும், படிமூலங்கள் என்ற அணுத்தொகுதிகளும் பொதுவாக எலெக்ட்ரான்களை ஏற்று எதிரயான்கள் ஆகும்.

சில திரவங்களிலும், கரைவுகளிலும்,நேரயான்களும், எதிரயான்களும் வெவ்வேறாகப் பிரிகின்றன. இவ்வினைவு அயானாதல் எனப்படும். இத்தகைய திரவங்கள் மின்சாரத்தைக் கடத்தி, மின்பகுப்பு (த. க.) என்ற வினைவைத் தோற்றுவிக்கும்.

வாயு மூலக்கூறுகளிலுள்ள சில எலெக்ட்ரான்களை விடுவித்தல், வாயுக்களை அயானாக்கல் எனப்படும். சுடரிலுள்ள வாயுக்களில் இவ்வினைவு நேரலாம். அல்லது எலெக்ட்ரான்களாலோ, புறவூதாக்கதிர்கள், எக்ஸ்-கதிர்களைப்போன்ற சக்தி வாய்ந்த கதிர்ப்புக்களாலோ மூலக்கூறுகளைத் தாக்கி இவ்வினைவை நிகழ்த்தலாம். சாதாரணமாக மின்சாரத்தைக் கடத்தாத வாயுவும் அயானானபின் அதைக் கடத்தும்.

**அயான்தைனா** (Ianthina) கடலில் வாழும் நத்தைச் சாதிகளில் சாமானியமானதொன்று. இது கடலின் மேற்பாகங்களில் மிதந்து சஞ்சரிப்பதற்கேற்றவாறு அமைந்திருக்கிறது. இதன் காலிலிருந்து ஊன் தசைபோன்ற பிசின் உண்டாகிறது. இதில் காற்றுக் குமிழிகள் புகுந்து கொள்ளுவதனால் நுரைபோல் ஆகிறது. இது முழுவதும் ஒரு தெப்பம்போன்ற



அயான்தைனா

தெப்பத்திற்கு அடியில் முட்டைப் பைகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன.

மிதவையாகப் பயன்படுகிறது. இந்த இனம் பெருகுகின்ற பருவத்திலே பெண் அயான்தைனா தன் முட்டைப் பைகளை இதன் அடியில் ஒட்டித் தொங்கவைக்கும். இதன் கிளிஞ்சில் ஊதாநிறமாக இருக்கும். கடற்கரையிலே இந்தக் கிளிஞ்சில்கள் உள்ளிருக்கும் சதையோடும் மிதவையோடும் வந்து ஒதுங்குவதுண்டு. உதாரணம்: அயான்தைனா ரோசியோலோ. கே. வீ.

**அயிரை** ஓர் ஆறு (சிலப். 28 : 145); ஒரு மலை (பதிற். 21) ; ஒருவகை மீன் (புறம். 67; ஐங். 164).

**அயிரை** (அசரை) (Lepidocephalichthys thermalis) மிகச் சிறிய மீன். 1–2 அங்குல மிருக்கும். குளங்களிலும் மணற்பாங்கான படுகையுள்ள ஆறுகளிலும் சாதாரணமாக மிகுதியாகவே காணலாம். இது சேற்றில் அல்லது மணலில் பகலில் புதைந்து கிடந்து, இரவில் இரை தேட வெளி வந்து நீந்தும். முகமும் வாலும் மட்டும் மணலுக்கு மேலே தெரியும்படியும், மற்றப் பாகமெல்லாம் மறைந்திருக்கும்படியும் படுத்திருப்பது இதற்கு வழக்கம். செவுளால் மூச்சுவிடுவதோடு அமையாமல், இது அடிக்கடி நீரின் மட்டத்திற்கு வந்து காற்றை உட்கொள்ளுகிறது. இதை நீரிலிருந்து எடுத்தாலும் வெகுநேரம் உயிரோடிருக்கக் கூடும். அக்டோபர் முதல் ஜனவரி வரையில் இது முட்டையிடும் காலம். மழைத் தண்ணீர்க் குட்டைகளில்கூட இதன் குஞ்சுகளை அக்காலங்களில் பார்க்கலாம். இது சிறிய மீனானாலும் நிரம்பச் சத்தான உணவு என்று கருதுகின்றனர்.

**அயினி அக்பரி** அக்பர் அவையிலிருந்த அபுல் பசல் (த. க.) என்னும் அறிஞரால் இயற்றப்பட்ட ஒரு நூல். அவர் இயற்றிய அக்பர்நாமா (த. க.) என்னும் நூல் அக்பருடைய குடும்பத்தைப் பற்றியும், பண்புகளைப் பற்றியும் விவரித்துக் கூறுவதுபோல, இந்நூல் அக்பருடைய ஆட்சி முறையையும், அவ்வரசன் ஆட்சியில் நாடு இருந்த நிலையையும் பற்றி விரிவாகக் கூறுகிறது. இது மூன்று பாகங்கள் அடங்கியது. இந்நூலால் சுமார் 350 ஆண்டுகளுக்குமுன் வட இந்தியாவின் அரசியல், சமூக நிலைகளைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. வட இந்திய வரலாற்று ஆதார நூல்களில் ஒன்றாக இதைக் கருதலாம்.

**அயூதியா** (Ayuthia) கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் நடுவிலிருந்து நான்கு நூற்றாண்டுகளாகச் சயாமின் தலைநகரமாயிருந்த ஊராகும். பின்னர் அது அழிக்கப்படவே பாங்காக் தலைநகராயிற்று. அயூதியாக் கலை என்பது, கலைவேலைப்பாட்டைவிடக் கைத்தொழில் வேலைப்பாடே மிகுதியாகக் காணப்படும் ஒரு கலைமுறையாகும். அது பண்டைக் கலையாக இருந்தது; இப்போது நாடோடிக் கலையாகத் தாழ்ந்துளது. புத்தருடைய உருவச் சித்திரங்கள், ஜாதகக் கதைச் சித்திரங்கள் முதலியன சயாமிய ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. அரக்குப் பூசிய பொருள்களில் ஓவியம் வரையும் கலை இணையற்றதாக இருக்கின்றது. பிற்காலத்திய அயூதியாக் கலைஞர்கள் தீச்சுடரையும் புராண மிருகங்களையும் தேவதைகளையும் விரும்பித் தீட்டி வந்தனர். சீ. சி.

**அயோடின்** (Iodine) : [குறியீடு I; அணுவெண் 53 ; அணுநிறை 126·92]. இது உப்பீனிகளில் கடைசித் தனிமம். கடற்பாசிகளைச் சுட்டுச் சாம்பலாக்கி, அதிலுள்ள காரங்களைப் பிரிப்பதில் ஈடுபட்டிருந்த கோர்ட்வா (Courtois) என்ற அறிஞர் இதை முதலில் கண்டறிந்தார். இதைத் தனியே பிரித்து, இது ஒரு தனிமம் எனக் காட்டிய பெருமை கே-லூசாக் என்னும் ரசாயன அறிஞரைச் சாரும்.

தோற்றம் : தனிநிலையிற் கிடைக்காத இது கடற்பாசிகளில் ஓரளவு உள்ளது. காலிச்சே (Caliche) என்ற வெடியுப்புக் கனியத்தில் இது சிறிதளவு உள்ளது. இக்கனியத்திலிருந்து இது பிரித்தெடுக்கப்படுகிறது.

தயாரிப்பு : காலிச்சேயிலிருந்து வெடியுப்பைப் பிரித்த பின்னர், எஞ்சும் திரவத்தைப் பன்முறை கழுவினால் இதிலுள்ள அயோடினின் அடர்வு அதிகமாகிறது. அயோடேட்டு வடிவில் உள்ள இதைக் கார்பன் டைசல்பைடைக் கொண்டு குறைத்துத் தனி நிலையிற் பெறலாம். கடற்பாசியிலிருந்து இதைப் பிரிக்கப் பாசிகளைச் சேகரித்து, உலர்த்தி, எரித்துப் பெறும் சாம்பலை நீரிற் கழுவினால் அதிலுள்ள மற்ற உப்புக்களிற் பெரும்பான்மையானவை படிகமாகப் பிரியும். எஞ்சியுள்ள

திரவத்துடன் கந்தகாமிலத்தையும் மாங்கனிச டையாக்சைடையும் சேர்த்து வாலைவடித்தால் அயோடின் தனியே பிரியும்.

இயல்புகள் : கருநீல வடிவான படிகங்களில் இது கிடைக்கிறது. இதன் ஆவி நீல நிறமானது. இது நீரில் சிறிது கரையும். குளோரோபாரம், கார்பன் டைசல்பைடு, சாராயம் முதலிய கரைப்பான்களில் இது கரையும். இது பொட்டாசியம் அயோடைடு கரைவில் மிக அதிகமாகக் கரைகிறது.

அயோடின் நேரடியாக ஹைடிரஜனுடன் கூடுவதில்லை. ஆனால் பாஸ்வரம், குளோரின், புளோரின் முதலியவற்றுடன் கூடும். தனி நிலையிலுள்ள அயோடின் மாப்பொருளுடன் சிறப்பான ஒரு நீலநிறத்தைத் தரும். இம்மியளவே உள்ள அயோடின் அதைப்போல் 50,00,000 மடங்கு நீரிற் கரைந்திருந்தாலும் இச் சோதனையால் அதைக் கண்டறியலாம்.

பயன்கள் : இதில் பெரும்பகுதி மருத்துவத்திற்குப் பயன்படுகிறது. போட்டோத் தொழிலிலும், சாயங்களின் தயாரிப்பிலும், சில தொழில்களில் ஊக்கியாகவும் இது பயனாகிறது.

## கூட்டுக்கள்

**ஹைடிரஜன் அயோடைடு** (HI): அயோடைடுகளைக் கந்தகாமிலத்துடன் வினைப்படுத்தி இதைப் பெற இயலாது. ஏனெனில் அப்போது தோன்றும் ஹைடிரஜன் அயோடைடு ஆக்சிகரணிக்கப்பட்டுவிடும். அயோடின் கரைந்த நீருடன் பாஸ்வரத்தை வினைப்படுத்தி இதைப் பெறலாம். பல உலோகங்களின் உப்புக்களுடன் பொட்டாசியம் அயோடைடை வினைப்படுத்தி அவற்றின் அயோடைடுகளைப் பெறலாம். இவற்றுள் பல சூட்டினால் சிதையும் இயல்புள்ளவை. அம்மோனியம், பொட்டாசியம் அயோடைடுகள் மருத்துவத்திலும், வெள்ளி அயோடைடு போட்டோத் தொழிலிலும் பயனாகின்றன.

**ஆக்சைடுகளும் ஆக்சி அமிலங்களும்:** பின்வரும் ஆக்சைடுகளும் ஆக்சி அமிலங்களும் அயோடினுக்கு உண்டு என அறியப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| $IO_2$ | (அயோடின் டையாக்சைடு) | $HIO$ | (ஹைப்போ அயோடிக அமிலம்) |
| $I_4O_9$ | | இல்லை | |
| $I_2O_5$ | (அயோடின் பென்டாக்சைடு) | $HIO_3$ | (அயோடிக அமிலம்) |

இவற்றுள் அயோடின் பென்டாக்சைடு முக்கியமானது. இது வெண்மையான படிகம். நீரிற் கரைந்து இது அயோடிக அமிலத்தைத் தரும். கார்பன் மானாக்சைடுடன் இது வினைப்பட்டால், அயோடின் வெளியாகிறது. ஆகையால் இவ்வினையைப் பயனாக்கிக் கார்பன் மானாக்சைடைக் கண்டறிய இது பயன்படுகிறது.

அயோடினின் ஆக்சி அமிலங்களில் ஹைப்போ அயோடச அமிலம் என்று ஒன்று உள்ளதா என்பதே தெளிவாக அறியப்படவில்லை. ஆகையால் அயோடிக அமிலம் ஒன்றே முக்கியமானது. அயோடின் கரைந்த நீரின் வழியே குளோரினைச் செலுத்தி இதைப் பெறலாம். இது வெண்மையான படிகம். இது சிறந்த ஆக்சிகரண இயல்புள்ளது. இதன் உப்புக்களில் பொட்டாசியம் அயோடேட்டு ஒரு வெண்மையான படிகம். இதன் கரைவு வாயைக் கொப்பளிக்கும் மருந்தாகப் பயனாகிறது. சோடியம் அயோடேட்டு முடக்கு வாதத்திற்கு மருந்தாகப் பயன்படுகிறது. எஸ். ரா.

**அயோடோபாரம்** (Iodoform): [குறியீடு $CHI_3$] செருல்லாஸ் என்ற அறிஞர் 1822-ல் இதைக் கண்டுபிடித்தார். காரங்களையோ, காரக் கார்பனேட்டுக்களையோ ஆல்கஹாலுடன் கலந்து, அயோடினுடன் வினைப்படுத்தி அயோடோபாரத்தைப் பெறலாம். வாணிபத்திற்காகப் பெரும் அளவில் தயாரிப்பதற்கும் இதே முறை கையாளப்படுகிறது. பொட்டாசியம் அயோடைடுக் கரைவில் தேவையான அளவு ஆல்கஹாலையோ அசிட்டோனையோ கலந்து மின்பகுப்பால் இதைப் பெறுவது மற்றொரு முறை.

இது சிறப்பான மணமுள்ள மஞ்சள்நிறத் திண்மம். இதன் உருகுநிலை 119°. இது நீரில் கரையாது. ஆனால் ஆல்கஹாலிலும் ஈதரிலும் கரையும். வெளிச்சத்தில் இது காற்றுடன் வினைப்பட்டுச் சிதைகிறது.

காயங்களுக்கு இது நச்சுநீக்கியாகப் பயனாகிறது. உயிர்ப் பொருள்களில் இது பட்டால் அயோடின் வெளிப்படுகிறது. அயோடின் பாக்டீரியாவை அழிக்கிறது. அயோடோபாரம் கெட்ட நாற்றமும், நச்சுத் தன்மையும் உள்ளதாகையால், இதற்குப் பதிலாக வேறு பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீ. பா.

**அயோத்தி** இராமன் பிறந்த நகரம் என்றும், ஏழு முத்தித்தலங்களுள் ஒன்று என்றும் கூறுவர். இது கோக்ரா நதியின் கரையில் பைஜாபாத்துக்கு அருகில் இருக்கிறது. ஆண்டுதோறும் நடக்கும் இராம நவமி விழாவுக்கு ஐந்திலட்சம் மக்கள் வருவர். அயோத்தி மாகாணமாக இருந்தது; இப்போது உத்தரப் பிரதேச இராச்சியத்தில் சேர்ந்துளது. இங்கு ஜைனக் கோவில்களும் பாபர் மசூதியும் உள்ளன.

**அயோத்தியாசிங் உபாத்தியாயா** (1865-1948) இந்தி எழுத்தாளர். இவர் உத்தரப் பிரதேசத்திலுள்ள நிஜாமாபாத் என்னும் ஊரிற் பிறந்தார். பள்ளிப்படிப்பு முடிந்தபின் இவர் சொந்த ஊரிலேயே பள்ளி ஆசிரியரானார். அப்போது இவருக்குச் சுமர்சிங் என்ற சாதுவிடம் தொடர்பு ஏற்பட்டது. இதனால் இவருக்கு இந்தி இலக்கியத்தில் ஆர்வம் பிறந்தது. ஆங்கிலத்திலிருந்தும் உருதுவிலிருந்தும் இவர் பல நூல்களை மொழிபெயர்த்தார். பின்னர்ச் சட்டக்கல்வி பெற்று நீதிபதியாக வேலை பார்த்தார். வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் இவர் 1923-ல் காசிப் பல்கலைக் கழகத்தில் இந்திப் பேராசிரியரானார். அகில இந்திய இந்திக் கழகம் இவருக்குப் பரிசளித்துப் பாராட்டிற்று. சமூகச் சீர்திருத்தத்திலும் இவர் ஆர்வங்கொண்டிருந்தார். உருது, பாரசீகம், வடமொழி ஆகிய மூன்றிலும் இவர் புலமை பெற்றிருந்தார். பி. வெ. ச.

**அயோனியக் கடல்** இத்தாலிக்கும் கிரீசின் தென்பகுதிக்கும் இடையேயுள்ள மத்தியதரைக் கடற்பகுதி; ஆட்ரான்ட்டோ ஜலசந்தி இக்கடலுக்கும் ஏட்ரியாடிக் கடலுக்கும் இடையே உள்ளது. கிரீசின் மேலைக் கடற்கரையில் இக்கடல் குடைந்துள்ள பெரிய உள்வாய்தான் காரிந்த் வளைகுடா என்பது. சிசிலிக்கும் கிரீசின் தென்பகுதியான மாட்டபான் முனைக்கும் இடையே 420 மைல் தூரம் இருக்கிறது. புராதன கிரேக்கக் கதைகளில் சொல்லப்பட்டுள்ள அயோ என்பவள் பெயரால் இக்கடல் பெயரிடப் பெற்றது. அயோவை ஜூபிட்டர் ஓர் எருமையாக மாற்றிவிட்டான். தன்னைக் கடிக்க வந்த ஓர் உண்ணியின் தொந்தரவைத் தாங்கமாட்டாமல் அயோ இக்கடலைக் கடந்து நீந்திச் செல்ல முயன்றதால் இக்கடல் இப்பெயர் பெற்றது என்பது கிரேக்கக் கதை.

**அயோனியத் தீவுகள்** ஆல்பேனியா நாடுகளின் மேலைக் கடற்கரையை அடுத்துள்ள பல தீவுகள். இவற்றில் செரிகோ, கார்ப்பூ, பேக்சாஸ், லெவ்காசி, இதக்கா, செபலோனியா, சான்டே என ஏழு பெருந் தீவுகளும், பல சிறு தீவுகளும் உள்ளன. மொத்தப் பரப்பு : 752 ச. மைல்; மக் : 2,28,119 (1951). இத் தீவுகளில் பல மலைகள் உண்டு.

ஆதியில் ரோமானிய சாம்ராச்சியத்தின் பகுதியா யிருந்த இத்தீவுகள் பிற்காலத்தில் பலவேறு இராச்சி யங்களின் உடைமையாயிருந்து, 1797-ல் நெப்போலிய னுல் கைப்பற்றப்பட்டன. 1815லிருந்து 1862 வரை யில் பிரிட்டனுக்குச் சொந்தமாயிருந்த இவை பிறகு கிரீசோடு சேர்ந்துவிட்டன.

**அயோனியா** ஆசியாமைனரின் மேல்கரையோர மாயுள்ள ஒரு பழைய பகுதி; இங்நாட்டில் 30 நூற் ருண்டுகளுக்குமுன் அயோனியர் என்னும் கிரேக்கர் சிலர் வந்து குடியேறியதால் இப்பெயர் பெற்றது. அயோனியர் 12 சுதந்திர நகரங்களைப் பிணைத்து, ஒரு நாட்டுக் கூட்டத்தை ஸ்தாபித்தனர். கிரேக்கருடைய இலக்கியம், கலை, தத்துவம் முதலியவற்றிற்குப் பிறப் பிடமா யிருந்திருக்கிறது. மைலீடஸ், எபிசஸ், மாக் னீஷியா முதலிய இடங்களில் பண்டைய நகரங்களின் சிதைவுகள் பல காணக்கிடைக்கின்றன.

**அர்ச்சுனன் :** பாரத வீரர்களிற் சிறந்தவன்; பாண்டுவின் மகன்; கிருஷ்ணனின் தோழன்; பகவத் கீதை கேட்டவன்; சிறந்த சிவபக்தன், வில் வீரரிற் சிறந்தவன் (பாரதம்).

**அர்ட்டிகேசீ** (Urticaceae) பெரும்பாலும் சிறு செடிகள். பலவற்றின் சுணை (Stinging hair). பட்டால் கடுக்கும். புறத்தோல் அறைகளுக்குள் சிஸ்டோலித் (Cystolith) என்னும் அணுக்கற்கள் உண்டு. தண்டு பெரும்பாலும் நாருள்ளது. இலை மாறுபட்ட அல்லது எதிர் ஒழுங்குள்ளது. தனியிலை. இடையடிச்செதில் சாதாரணமாக உண்டு. பூக்கள் மிகச் சிறியவை. அநேகமாக ஒருபாலின. பூங்கொத்துச் சாதாரணமாக வளராநுனி மஞ்சரி. சிலவற்றில் மஞ்சரித்தண்டு பெரி தாகி, அதன்மேல் பூக்களெல்லாம் நெருங்கியிருக்கும். ஆண் பூவில் இதழ் 4–5. கேசரம் அதே எண்ணிக்கை; இதழ்களுக்கு எதிரிலிருக்கும். மொக்கில் அவை உள் ளுக்கு வளைந்திருக்கும். பிறகு வெளியே வேகமாக வில்போலத் திரும்பி வெடிக்கும். பெண் பூவின் இதழ் ஆண் பூவின் இதழ் அத்தனையே இருக்கும். சூலறை ஓரறையுள்ளது. ஒரே சூல்முடி. ஒரே விதை; நிமிர்ந் திருப்பது. கனி அக்கீன் அல்லது உள்ளோட்டுச் சதைக் கனி. விதையில் முளைசூழ்தசை யுண்டு. இந்தக் குடும் பம் அயனமண்டலத்திலும் சமசீதோஷ்ண மண்டலத் தின் வெப்பமான பாகங்களிலும் உண்டு. தென்னிந்திய மலைகளில் இதைச் சேர்ந்த பல செடிகள் உண்டு :—

1. கைரார்டினியா (Girardinia) நீலகிரிக் காஞ் சொரி.

2. லப்போர்ட்டியா (Laportea) யானைக்காஞ் சொரி, ஒட்டுப்பலா, யானைச்சொரியன். (சாதாரணப் பூனைக்காஞ்சொரி டிராஜியா (Tragia) சாதி. யூபோர்பி யேசி என்னும் ஆமணக்குக் குடும்பத்தைச் சேர்ந்தது).

3. இலாட்டோஸ்டெம்மா (Elastostemma).

4. பைலியா மைக்ரோபில்லா (Pilea microphylla) துப்பாக்கிச் செடி. இந்தச் செடி, தோட்டங் களிலே பாதையோரங்களில் நடுவது. இதன் கேசரங்கள் முதிர்ந்திருக்கும்போது செடியை அசைத்தால் மகரந்தத் தூள் புகைபோல வெளியில் எறியப்படும்.

இந்தக் குடும்பம் அல்மேசி (எல்ம்), மோரேசி (முசுக் கட்டைச் செடி அத்தி, பலா), கன்னபேசி (கஞ்சா) குடும்பங்களுக்கு மிக்க இயைபுடையது. இதில் சுமார் 40 சாதிகளும் 480 இனங்களும் உண்டு. சில இனங்க ளில் உட்பட்டையிலுள்ள நார் மிகவும் பயன்படுவது. ராமீ என்னும் நார் பேமெரியா நிவியா (Boehmeria nivea) செடியில் உண்டாவது. மயோஷியா (Maoutia) அர்ட்டிகா செடிகளிலும் நார் எடுக்கிறார்கள்.

**அர்த்தகோளம் :** பூமியை நேர் குறுக்கே வெட்டினுல் இரு சமபாதிகளாகு மல்லவா? அவ்வொவ் வொரு பகுதியும் ஓர் அர்த்தகோளம் ஆகும். பூமத்திய ரேகையை ஒட்டி வெட்டினுல் 'வட அர்த்தகோளம்' என்றும், 'தென் அர்த்தகோளம்' என்றும் இருபகுதிக ளாகப் பிரியும். வட அர்த்தகோளத்தில் வட அமெ ரிக்கா, வட ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா முதலிய பகுதிகளும், தென் அர்த்தகோளத்தில் தென் அமெ ரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய பகுதிகளும் அடங்கி யிருக்கும். துருவத்திற்குத் துரு வம் குறுக்கே (மேற்குத் தீர்க்கரேகை 20° பக்கமாக) வெட்டினுல் கிழக்கு அர்த்தகோளம் என்றும் மேற்கு அர்த்தகோளம் என்றும் இரண்டாகப் பிரியும்; மேற்கு அர்த்தகோளத்தில் பெரும்பாலும் இரு அமெரிக்காக் கண்டங்களும், கிழக்கு அர்த்தகோளத்தில் அட்லான் டிக் சமுத்திரத்துக்குக் கிழக்கேயும் பசிபிக் சமுத்திரத் திற்கு மேற்கேயும் உள்ள நில நீர்ப்பகுதிகளும் அடங் கினவாகக் கொள்ளப்படும். இவ்வாறு பிரித்துக் கூறு வது பூகோள மரபு.

**அர்த்தசாஸ்திரம்:** இந்தச் சாஸ்திரத்தின் முக் கியக் கருத்து, குடிகளின் நலமே அரசனின் பொறுப்பு என்பதாம். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரசனுக்கு அதிகாரம் இருக்கவேண்டும், அவனுடைய அதிகாரத்திற்கு மேன்மை கொடுக்கவேண்டும். அவ னுடைய ஆணையைச் செலுத்த விரிவான அதிகார வர்க் கம் இருக்கவேண்டும். கௌடிலீயர் எழுதியுள்ள அர்த்தசாஸ்திரத்திலிருந்து தெரிபவை : அரசன் ஒரு சாம்ராட். அரசாங்கம் ஒரு மண்டலி. இந்த மண்டலி யைச் சுற்றியுள்ள ஏனைய இராச்சியங்களை அரசாங்கம் போர்செய்து வென்றோ, வஞ்சனையாகவோ அடிப்படுத்த வேண்டும். அரசியலானது அரசன் உட்பட எட்டு உறுப்புக்கள் உள்ளது. மந்திரிசபை, நாடு, அரண், படை, பண்டாரம் (செல்வம்), நட்பு, பகை என்பவை மற்ற ஏழும் ஆகும். அரசாங்கமானது நிலவரி, சுங்கம், இலாகிரி வரி, மானியம், பயிர், நாணயசாலை முதலிய வற்றைக் கண்காணிக்கும் பல இலாகாக்களாக வகுக் கப்பட்டிருந்தது. இவற்றிற்கு வெவ்வேறு அதிகாரிகள் இருந்தனர். பரத்தையர் இல்லங்களைக் கவனிப்பதற் கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. படையில் தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நான்கு பிரிவுகள் இருந்தன. தொழிலாளிக் குழுக்கள் இருந்தன. அவற் றிற்குச் சிரேணிகள் என்று பெயர். அவை தத்தம் தொழில்கள் முன்னேற்ற மடைவதற்கேற்ற சட்டங் களை இயற்றும் உரிமை பெற்றிருந்தன. இந்தியாவுக் கும், மத்திய ஆசியா, சீனம் முதலிய நாடுகளுக்கும் வாணிபப் போக்குவரத்து இருந்தது. தென் இந்தியா வுக்கும் வட இந்தியாவுக்கும் வியாபாரம் வலுத் திருந்தது. கூ. ரா. வே.

## கௌடிலீயர் அர்த்தசாஸ்திரம்

பண்டைக் காலத்துப் பாரத மக்களிடையில் பல் வேறு அர்த்தசாஸ்திரங்கள் வடமொழியில் பயின்று

வந்தன. கௌடிலியர் அவை அனைத்தையும் சுருக்கி, உலக வழக்கையும் ஆராய்ந்து, தாம் ஓர் அர்த்தசாஸ்திரம் இயற்றியதாகக் கூறுகின்றார். ''பூமி நந்த அரசர் கைவசமானதைக் காணப் பொறுது படைக்கலம் எடுத்து விடுதலை செய்தவன்'' என்று நூலின் இறுதியில் அவர் தம்மைக் குறித்தலான், சந்திரகுப்த மௌரியனது (கி. மு. 325-297) சூழ்ச்சித் துணைவரான கௌடிலியரே அர்த்தசாஸ்திரம் இயற்றியவர் என்று கருதுகின்றார்கள். கௌடிலியர் பிறந்தது வடநாட்டின் வடகோடியிலிருந்த தட்சசீலம் என்று மகாவமிச உரையும், தமிழ்நாடு என்று நிகண்டுகளும் கூறுகின்றன. இவரது குடிப்பெயர் கௌடிலியர் என்றும், தந்தை இட்டபெயர் விஷ்ணுகுப்தர் என்றும், நாட்டைப்பற்றி வந்தது சாணக்கியர் என்றும் காமந்தக உரை கூறும். நூலை உற்று நோக்கின், அதை ஆக்கியவர் விரிந்த கல்வி அறிவும், ஆழ்ந்த அனுபவ அறிவும் பெற்ற ஓர் அரசியல் நிபுணர் என்று எளிதில் ஊகித்தல் கூடும்.

பாரத சமுதாயத்தில் தொன்றுதொட்டு வழங்கி வந்த வைதிகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அர்த்தசாஸ்திரம் இயற்றப்பெற்றது. இது தரும சூத்திரங்கள் போன்ற பழைய நூல்களில் தோன்றும் எளிமை, நேர்மை, ஆழம் முதலிய சிறப்பியல்புகள் நிரம்பியது; 15 அதிகரணங்கள் ஆகவும், 150 அத்தியாயங்கள் ஆகவும், 180 பிரகரணங்கள் ஆகவும் வகுக்கப்பட்டது. 32 எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு சுலோகம் என்ற வழக்கின்படி இதனுள் 6,000 சுலோகங்கள் உள்ளன. பொதுவாக அத்தியாயம் ஒவ்வொன்றும் சூத்திரம் எனப்படும் தலைப்பால் ஒரு பொருளைக் குறிப்பிட்டுப் பின்னர் அதை எடுத்து விளக்கிப் பொருளின் சிறப்பைக் கூறும் சுலோகத்தால் முடிவு பெறும். இவ்வாறு 180 தலைப்புக்களின்கீழ் அரசு, அமைச்சு, படை, பொக்கிஷம், நீதிமன்றம், ஒற்று, தூது, வாணிபம், சுங்கம், விவசாயம், கூட்டுறவு, சந்திசெய்தல், போர்புரிதல் போன்ற பல விஷயங்கள் விரிவாகக் கூறப்படுகின்றன; இக்காரணம் பற்றி அர்த்தசாஸ்திரம் ஓர் அறிவுரைக் களஞ்சியமாம் என்பர். முக்கியமான பொருள்களை ஆராயுங்கால், கௌடிலியர் தம் முன்னோர்களின் கொள்கைகளை எடுத்துக் காட்டித் தம் முடிவையும் கூறுவர்- அர்த்த சாஸ்திரத்திலுள்ள தத்துவங்களும், தொடர்களும், சொற்களும் இலக்கியங்கள் பலவற்றுள் எடுத்து ஆளப்பட்டு, அவற்றை வளஞ்செய்துள்ளன. இந்நூலுக்குப் பழைய உரைகள் பல வழங்கி வந்துள்ளன.

கௌடிலியர் தமக்கு முன் இருந்த பல தண்டநீதி நூல்களையும், அவற்றின் ஆசிரியர்களாகிய மனு, உசனஸ், பிருகஸ்பதி, பாரத்துவாசர், விசாலாட்சர், காத்தியாயனர், பராசரர் முதலியவர்களையும் பற்றித் தமது நூலில் குறித்துள்ளார். மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் தண்டநீதி விளக்கப்பட்டிருக்கின்றது. பஞ்சதந்திரமும் இதோபதேசமும் அரச குமாரருக்குத் தண்டநீதியை விளக்குவதற்காகச் சொல்லப்பட்ட கதைகளே. இவ்விரண்டும் கௌடிலியருடைய நூலுக்குப் பிற்பட்டவை.

இடைக்காலங்களில் பிரசாரம் குன்றி, யாருக்கும் தெரியாதிருந்த இந்நூல் 1909-ல் முதன் முதலாக வெளிவந்தது. இது சந்திரகுப்த மௌரியன் காலத்தது தானா என்ற ஐயம் அப்போது எழுந்தது. அர்த்த சாஸ்திரத்தில் சந்திரகுப்தனையும் அவனது அரசியலையும் பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை என்றும், பிற்கால வழக்குகள் காணப்படுகின்றன என்றும், அதனால் இது கி. பி. மூன்றும் நூற்றுண்டில் தோன்றியிருத்தல் வேண்டுமென்றும் சிலர் வாதித்தனர். இக்கட்சியாரது கொள்கையை முடிவுகட்டப் போதிய சான்றுகள் இன்னும் வெளி வரவில்லையாதலால் சந்திரகுப்த மௌரியனது காலத்தது என்ற கொள்கை வலியுற்றுப் பலராலும் அங்கீகரிக்கப்படுகின்றது.

## பிற ஆசிரியர்களும் நூல்களும்

**1. காமந்தகரது நீதிசாரம்:** கௌடிலியர் தமக்குமுன் ஆசிரியர்கள் பலர் அர்த்தசாஸ்திரங்கள் இயற்றியிருந்தனர் என்று கூறுகின்றார். அவர் காலத்திற்குப் பின்னர் அவை அனைத்தும் வழக்காறற்று இறந்துபட்டன. புதிய நூல்களும் இயற்றப்படவில்லை. வழிநூல்கள் ஒருசில தோன்றியவற்றுள் முக்கியமானது காமந்தகர் இயற்றிய நீதிசாரம் என்பது. இந்நூல் கௌடிலியரது அர்த்தசாஸ்திரத்திலுள்ள அமைச்சர் தொழில் (அதிகாரம் 2), நீதிமன்றம் (அதி. 3, 4), இரகசியவினை (அதி. 14), தந்திரவுத்தி (அதி. 15) ஆகியவற்றை ஒழித்து, எஞ்சிய பகுதிகளைச் சுருக்கமாகக் கூறுகின்றது. சந்திசெய்தல், போர்புரிதல் போன்ற வெளிநாட்டு விஷயங்கள் விரிவாகவும் உள்ளன. இதனுள் 20 சருக்கங்களும் 1,224 சுலோகங்களும் உள. நூல் காவிய வடிவத்தில் எளிய விருத்தங்களால் அமைந்தது.

காமந்தகரது காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை. அவர் கூறும் அரசியல் குப்தகாலத்து (கி. பி. 300-600) அரசியல் அமைப்பைக் குறிக்கும் என்பர். அவரது நீதிசாரம் பதினோராவது நூற்றுண்டிலிருந்த அபுசாலி என்பவரால் அரபு மொழியில் சுருக்கிப் பெயர்க்கப்பட்டது. இம் மொழிபெயர்ப்பு முதல் நூலாசிரியனை, 'சிபார்' அல்லது சிகரன் என்ற சொல்லால் வழங்குகின்றது. கி. பி. 375-415-ல் அரசு புரிந்த II-ம் சந்திரகுப்தனுக்குச் சிகரஸ்வாமி என்ருெரு மந்திரி இருந்தனன் என்பர். ஆகவே அபுசாலி, சிகரஸ்வாமி என்பவனையே சிகரன் என்ற சொல்லால் குறிக்கின்ருன் என்றும், காமந்தகர் என்பது நூலாசிரியரது குடிப்பெயர் ஆதல்வேண்டும் என்றும் கருத இடமுண்டு. சந்திரகுப்தனுக்குத் தேவகுப்தன் என்று வேறு பெயரும் உள்ளமையால் நீதிசாரத்தின் காப்புச் செய்யுளில் வரும் தேவன் என்ற சொல்லால் காமந்தகன் அல்லது சிகரஸ்வாமி தன் தலைவனை சந்திரகுப்தனைக் குறிக்கின்ருன் என ஊகித்தலும் தகும். எட்டாவது நூற்ருண்டின் முற்பகுதியில் இருந்த பவபூதி தமது மாலதி மாதவம் என்ற நாடகத்தில் நீதிநூற் பயிற்சி பெற்ற பௌத்த பிட்சுணிக்குக் காமந்தகி எனப் பெயர் சூட்டியிருத்தலால் காமந்தகர் பவபூதிக்கு முற்பட்டவர் என்பது திண்ணம். பவபூதிக்குப் பிற்பட்ட இலக்கியங்கள் காமந்தகரது நீதிசாரத்தை எடுத்தாளுகின்றன.

**2. நீதிவாக்கியாமிருதம்:** இந்நூல் நிச்சயமான கால தேச வரையறை யுடையது; சூத்திர வடிவான எளிய வாக்கியங்களால் ஆக்கப்பெற்றது; 32 அத்தியாயங்கள் கொண்டது. கௌடிலியரது அர்த்தசாஸ்திரத்திலுள்ள கருத்துக்களும் சொற்களும் இதன்கண் காணப்படுவதோடு, பிற நூல்களிலிருந்து அரிய நீதி மொழிகளும் தெரிந்தெடுத்துச் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்நூலை ஆக்கியவர் சோமதேவர். அவர் ஒரு சிறந்த கவிஞர்; ஜைன சமயத்தினர். அறத்தை அரசியலின் முக்கிய நோக்கமாகக் கொண்டவர். சாதியைத் தவிர்த்துக் குணங்களை ஆதரிப்பவர்; பரத்தை வாயினின்று வரினும் அறமொழி கொள்ளத்தக்கதே என்பர். ''அறம் பொருள் இன்பம் பயக்கும் நாட்டிற்கு வணக்

கம்'' என்று நூல் தொடங்குதல், அது புது வழியில் இயற்றப்பட்டுள்ளதைக் குறிக்கின்றது. சோமதேவர், யசஸ்திலகம் என்ற சம்பு காவியமும் இயற்றியுள்ளார். அந்நூலினின்று அவர் கி. பி. 947-ல் தக்கோலம் (தெக்குளம், வட ஆர்க்காடு) என்ற இடத்து நிகழ்ந்த போரில் வெற்றிபெற்ற மூன்றுவது கிருஷ்ணராஜ (கன்னர) தேவன் என்ற ராஷ்டிரகூட அரசனுக்குத் துணைவனுயிருந்த பத்திகன் அல்லது பூதிகன் என்ற சாளுக்கிய அரசனுல் ஆதரிக்கப் பெற்றவர் என்று தெரிகின்றது. அவர் காலத்து அரசியலைப் பற்றிய செய்திகள் சில நீதிவாக்கியாமிருதத்தால் அறியக் கிடக்கின்றன.


**3. சுக்கிரநீதி** அறத்தையும் பொருளையும் பற்றிய பல அரிய பொருள்களைக் கூறுவது. இந்நூல் சுக்கிராசாரியர் இயற்றிய புராதனப் பொருள் நூலின் சுருக்கம் என்றும், நாளடைவில் ஏற்பட்ட வேறுபாடுகளை உடையது என்றும் கூறுவர். இதனுள் 5 அத்தியாயங்களும் 2,500 சுலோகங்களும் உள்ளன. கௌடிலியரது அர்த்தசாஸ்திரத்திலும் பிற நூல்களிலும் சுக்கிராசாரியரைச் சார்ந்தனவாக வரும் கருத்துக்கள் இந்நூலில் காணப்படவில்லை. இங்குக் கூறப்படும் வெடிமருந்து செய்தல் போன்ற புதிய வழக்குக்கள் இடைச்செருகல் என்பர்.

**4. பார்கஸ்பத்திய சூத்திரம் :** இது ஓர் அறிவுரைத் திரட்டு. இது அத்துணைச் சிறப்புடையதன்று. சாஸ்திர நூல்கள் கூறும் பிருகஸ்பதியின் கொள்கைகளோடு எவ்வகைச் சார்பும் அற்றது. பிற்பட்ட காலங்களில் தென்னுட்டில் தோன்றிய வழக்குக்களைக் கூறுவது. இதனுள் 5 அத்தியாயங்களும் 430 சூத்திரங்களும் உள்ளன.

**5. சாணக்கிய சூத்திரம் :** இது கௌடிலியரது அர்த்தசாஸ்திரத்திலுள்ள சில நீதி மொழிகளையும், உலகவழக்கிலும் நூல்வழக்கிலும் பயின்று வந்த அறிவுரைகளையும் திரட்டி அமைக்கப் பெற்றது. இதனுள் 571 சூத்திரங்கள் உள்ளன.

பத்தாவது நூற்றுண்டுக்குப்பின் பொருளைப் பற்றித் தனியே கூறும் நூல் இயற்றப்படவில்லை. மனு முதலிய அறநூல்களிலுள்ள அரச தருமங்களைப் பெரும்பான்மையும் தழுவிய நீதிநூல்கள் சில தோன்றியுள்ளன. அவற்றுள் ஹேமசந்திரன் (1088-1172) இயற்றிய இலகு அருகந்நீதியும், சண்டேசுவரன் (1370) இயற்றிய ராஜநீதிரத்நுகரமும் முக்கியமானவை. கோ. ஹ.

**அர்த்வர்க்** (Aardvark) டச்சு மொழியில் நிலப்பன்றி எனப் பொருள்படும். இதற்கு எறும்புதின்னி என்றும் பெயர். தென்னுப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா வெளிகளில் மட்டும் இருப்பது. பார்ப்பதற்கு விசித்திரமாகவும் விகாரமாகவும் இருக்கும். உடம்பு பருத்துக் கனமாக இருக்கும். வால் உட்பட நான்கு ஐந்து அடி நீளம் உள்ளது. வால் நீண்டு தடித்திருக்கும். முதுகு வில்போல வளைந்திருக்கும். முகம் நீண்டுகுழாய் போல இருக்கும். காது கழுதைக் காது போல நீளமாக இருக்கும். அது மெல்லிய ஒலியையும் கேட்டு, ஆபத்தினின்றும் காப்பாற்றிக் கொள்ள உதவும். இப்பிராணிகளில் வெப்பமான இடங்களிலுள்ளவற்றிற்கு மயிர் இருப்பதில்லை. குளிரான இடங்களிலுள்ளவற்றிற்கு முரடான பழுப்பு நிறமுள்ள மயிர் இருக்கும். இதற்கு முன் பற்கள் இல்லை. மற்றப் பற்கள் மூளைபோலச் சாமானியமாக இருக்கும். இது ஆழமான குழி தோண்டும்; இடர் வந்தால் மிக விரைவாகத் தோண்டிப் புதைந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். அதற்கு ஏற்றபடி இதன் உகிர்கள் வலுத்திருக்கும். இது இருட்டுகிற வரையில் பதுங்கிக் கிடந்து, இரவில் வெளியே வந்து, புற்றுக்களைப் பறித்துத் தோண்டிக் கறையான், எறும்பு முதலிய பூச்சிகளைத் தின்னும். இவற்றைப் பற்றித் தின்பதற்கு ஏற்றவாறு இதன் நாக்கு நீண்டு பசையுள்ளதாக இருக்கும். இது வாழும் நாட்டு மக்கள் இதைக் குழியிலிருந்து தோண்டியெடுத்து உணவாகக் கொள்ளுவார்கள். அவர்களுக்கு இது மிகவும் விருப்பமான உணவு. இது குட்டி போட்டுப் பால் கொடுக்கும். சிங்கமும், காட்டுப் பன்றியும், மலைப்பாம்பும் இதைப் பிடித்துத் தின்னும். இது பாலூட்டி வகுப்பில் எறும்புதின்னிக் குடும்பத்தில் ஆரிக்டிரோபஸ் (Orycteropus) சாதியைச் சேர்ந்தது. இதில் இரண்டு இனங்கள் உண்டு. தென்னிந்தியக் காடுகளில் காணப்படும் அழுங்கு (Manis) இதே வரிசைப் பிராணி; இதைப் போன்ற உடல் அமைப்பும் உள்ளது.



அர்த்வர்க்

**அர்த்வுல்ப்** (Aardwolf) டச்சு மொழியில் நில ஓநாய் எனப் பொருள்படும். தென் ஆப்பிரிக்காவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் வாழ்வது. பார்வைக்குக் கழுதைப்புலியைப் போலத் தோன்றும். மயிர் பழுப்பு நிறம். அதில் ஐந்தாறு குறுக்குப் பட்டைகள் இருபுறமும் உண்டு. வாலில் மயிரடர்ந்திருக்கும். கழுத்தின் மேலும் முதுகு நெடுகவும், பிடரி மயிர் இருப்பது நன்றாகத் தெரியும். முன் காலில் ஐந்து விரல்களும், பின் காலில் நான்கு விரல்களும் உண்டு. நில ஓநாயின் தாடை வலிமை யில்லாதது. இதன் பல் சாமானியமாகப் புலால் உண்ணும் விலங்குகளுக்கு உள்ளதுபோல இல்லை. இதன் முக்கிய உணவு கறையான், வேறு பூச்சிகள், புழு, பழம் முதலியவை. இது குழி தோண்டி அதில் வசிக்கும். ஒரே குழியில் பல ஒன்றாக வாழும். சாதாரணமாகக் குழி தோண்டி வசிக்கும் விலங்குகள் கோழைத்தனமானவை. இதுவும் அத்தன்மையதே. இது இரவில்தான் இரை தேட வெளியில் வரும். இதன் இறைச்சி தின்ன நன்றாயிராது. இது கழுதைப்புலி, கீரி முதலியவற்றிற்கு நெருங்கிய உறவுள்ளது. இது பாலூட்டி வகுப்பில் புலாலுண் விலங்குக் (Carnivora) குடும்பத்தைச் சேர்ந்தது. புரொட்டிலிஸ் கிரிஸ்டேட்டஸ் (Proteles cristatus) என்பது இந்த இனத்தின் பெயர்.

**அர்பன் :** ரோமன் கத்தோலிக்கப் போப் ஆண்டவர்களில் எட்டுப் பேருக்கு இப்பெயருண்டு. அவர்களில் தலையானவர்கள் மூவருக்குத் தனிக் கட்டுரைகள் தரப்பட்டுள்ளன.

**அர்பன் II** பிரெஞ்சுக்காரர் ; 1088 முதல் 1099 வரை போப்பாக இருந்தவர். சிலுவைப் போர்களை இவர் ஆதரித்தார் ; ஆயினும் கிறிஸ்தவர்கள் எருசலேமைக் கைப்பற்றுவதைக் காணுமுன் இறந்து போனுர்.

**அர்பன் VI** 1379 முதல் 1389 வரை போப்பாக இருந்தார். இவர்காலத்தில் போப்பின் இருப்பிடம் அவிக்ஞனிலிருந்து ரோமிற்கு மாற்றப்பட்டதை எதிர்த்துப் பிரெஞ்சு பிஷப்புக்கள் VII-ம் கிளெமன்ட் என்பவரை அவிக்ஞனில் போப்பாக நியமித்துக் கொண்டார்கள்.

இப்பிளவு சுமார் 50 ஆண்டுகளுக்குத் தொடர்ந்திருந் தது. VII-ம் கிளமென்டை அர்பன் சமயவுரம்பினின்று நீக்கினர். 1381-ல் சார்லஸ் என்னும் துராசோ மன்ன னால் சிறையிடப்பட்ட VI-ம் அர்பன் ஜெனோவாவிற் குத் தப்பியோடினார். 1389-ல் ஒரு கோவேறு கழுதை மீதிருந்து கீழே விழுந்ததால் உண்டான காயங்களால் இறந்தார்.

**அர்பன் VIII** (1568-1644) 1623 முதல் 1644 வரை போப்பாக இருந்தார்; உற்றார் உறவினர்களுக்கு அதிகச் சலுகை காட்டியதாக இவர்மேல் புகார் ஏற் பட்டது. பிரெஞ்சு கார்டினலும், அரசியல் நிபுணருமான ரிஷலூ இவர் கொள்கைகளை எதிர்த்தார். முப்பது ஆண்டுப்போரில் இவர் பிரான்சை யாதரித்தார்.

**அர்ஜுனர்** (? – 1606) அமிருதசரசில் இருந்த சீக்கிய மதகுரு. இராமதாசர் என்னும் குருவின் குமா ரர். இவர் 1581-1606 வரை மதகுருவா யிருந்தார்; அமிருதசரசில் சீக்கியர்களுடைய பொற்கோவிலைக் கட்டி முடித்தார். 1604-ல் சீக்கியப் புண்ணிய நூலா கிய ஆதிகிரந்தம் எழுதிப் பூர்த்தி செய்யப்பட்டது. இவர் காலத்தில் சீக்கிய மதம் அதிகமாகப் பரவத் தொடங்கிற்று. இவர் பிற மதத்தவர்களை அவமதிப்ப தாகச் சிலர் அக்பரிடம் குறை கூறினர்; ஆயினும் அப்பேரரசன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஜகாங்கீ ருக்கும் அவன் மகன் குஸ்ருவிற்கும் நடந்த தகராற்றில் குஸ்ருவின் நிலைக்கு வருந்திய அர்ஜுனர் ரூபாய் 5,000 அவனுக்கு உதவியளித்தார் (1606). இதனால் சின மடைந்த ஜகாங்கீர் குஸ்ருவை யடக்கிய பிறகு அர்ஜுன ருக்கு 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்தான். அர் ஜுனரின் சீடர்கள் அத்தொகையை யளித்துவிட முன் வந்தார்களாயினும் குரு அதற்கு இணங்கவில்லை. ஆகை யால் ஜகாங்கீர் குரு அர்ஜுனரை லாகூரில் சித்திரவதை செய்து கொல்லுவித்தான். தே. வெ. ம.

**அரக்கர்:** இவர்கள் இராட்சதர் என்றும் கூறப் படுவர்; பதினெண் கணங்களில் ஒருவகையினர்; அசுரரின் வேறானவர். புலத்தியர் மரபினரென்று ஒரு சாராரும், காசிபர் மகன் ரட்சஸ் என்பவனுடைய மரபின ரென்று விஷ்ணு புராணத்தாரும், பிரமன் கடல்களைப் படைத்து, அவற்றை இரட்சிக்க இவர்களைப் படைத்தா னென்று வான்மீகியும் கூறுவர். இவர்கள் முனிவர்களுக் குத் துன்பமுண்டாக்கியும் வேள்விகளை யழித்தும் வந்தன ரென்றே புராணங் கூறும்.

**அரக்கான்** பர்மாவில் ஒரு மாகாணம்; வங்காளக் குடாக்கடலின் வடகிழக்கு ஓரத்தில் உள்ளது. இது அக்கியாபு, வட அரக்கான் மலைப்பிரதேசம், சாண் டோவே, கியாக்ப்யூ என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது. பரப்பு: ச. 16,000 மைல். 1826-ல் 1 இலட்சம் மக்கள் தொகையே யிருந்தது; 1941-ல் 11,86 738 ஆக மிகுந்துவிட்டது. இங்குள்ள யோமா மலைகள் முக்கியமானவை. நன்செய்ச் சாகுபடியே பெரும் பாலும் நடைபெறுகிறது. பழங்கள், மிளகாய், புகை யிலை முதலியவை சிறு அளவில் கிடைக்கின்றன. அரக்கான் மக்கள் தங்கள் நாட்டு வரலாறு மிகப் பண்டையது என்று கூறிக்கொள்கிறார்கள்; இதற்கு வேறு சான்று இல்லை. இப்பிரதேசம் முதலில் போர்ச்சு கேசியர்களுக்குச் சொந்தமாயிருந்தது; பிறகு 1826 லிருந்து ஆங்கிலேயர் வசமிருந்தது. இந்நாட்டு மக் களுக்குத் தனி மொழியும் பழக்கவழக்கங்களும் உண்டு. பெரும்பான்மையோர் பௌத்த மதத்தினர். அரக்கான் என்னும் நகரம் முதலில் தலைநகரமாயிருந்தது; பிற் காலத்தில் அக்யாபு முக்கிய நகரமாயிற்று.

**அரக்கு:** அரக்கு என்பது ஓர் இயற்கைப் பிசின் லாக்கிபெர் லாக்கா (Laccifer Lacca) என்ற ஒரு வகைச் சிறு பூச்சியின் உடலிலிருந்து கசியும் திரவம் உறைந்து அரக்காகிறது. அரக்குப் பூச்சிகள் இலட்சம் இலட்சமாகக் குடியேறுவதிலிருந்து இதன் வடமொழிப் பெயர் லட்சம் அல்லது லாஹ் என்று தோன்றியதாகக் கருதுகின்றனர்.

**அரக்குப் பூச்சி** (Lac insect): அரக்குப் பூச்சிகள் மூட்டைப் பூச்சி வரிசையில் காக்சிடீ குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை குஞ்சுகளா யிருக்கும்பொழுது சுமார் 1/50 அங்குலம் நீளமும், 1/150 அங்குலம் குறுக்களவும் உள்ளவையாக இருக்கும். நன்றாக முதிரும் பொழுது 1/8 அங்குலம் குறுக்களவுள்ள உருண்டை வடிவாகவோ, முட்டை வடிவாகவோ இருக்கும். இப்பூச்சிகள் சிலவகை மரங்களிலேயே குடியேறி உயிர்வாழ்கின்றன. இத் தாவரங்களுள் பூவன், இலந்தை, பலாசு, காசுக் கட்டி, ஜாலாரி, துவரை முதலியவை முக்கிய மானவை.

பயிரேற்றுதல்: அரக்குப் பூச்சிகள் இம்மரங்களில் இயற்கையாகவே குடியேறலாம். அல்லது செயற்கை யில் குடியேற்றப்படலாம். பர்மாவிலும் சயாமிலும் இயற்கையாகவே அரக்குப் பயிராகிறது. இம்முறை யில் அரக்குச் சேகரிப்பவர் தேவையானபொழுது பயிரை வெட்டி எடுப்பதைத் தவிர வேறு ஒருவித முயற்சியும் எடுத்துக்கொள்வதில்லை. இந்தியாவில் இரண்டு முறைகளும் கையாளப்படுகின்றன. அரக்குப் பூச்சிக் குஞ்சுகள் மிகச்சிறியவை யாகையாலும், தமது முயற்சி யாலேயே ஊர்ந்து செல்லவேண்டி இருப்பதாலும் வெகு தூரம் செல்ல இயலுவதில்லை. இதனால் இயற்கையாகக் குடியேறும்பொழுது ஏற்கனவே பயிரான மரக்கிளைகளி லேயேதான் மீண்டும் குடியேறுகின்றன. தக்க வசதி யுள்ள கிளைகள் கிடையாமல் பல பூச்சிகள் மடிந்தும் போகின்றன. இதைத் தவிர இப்பூச்சிகளின் பகைகள் இவற்றை அழிக்கலாம். மரங்களின்மேல் ஒட்டுண்ணி களாக வாழும் இப்பூச்சிகள் ஓரே இடத்தில் பொருந்தி யிருப்பதால் மரங்களுக்கு விரைவில் நாசம் விளைகிறது. இக்காரணங்களினால் இயற்கை முறையைவிடச் செயற் கைக் குடியேற்ற முறையே சிறந்தது. இம்முறையில் அரக்குப் பயிர் செய்வோர் குஞ்சுகள் வெளிவர நான் கைந்து நாட்களுக்குமுன் அரக்கைத் தாங்கி நிற்கும் கிளைகளை வெட்டி எடுத்து, இவற்றுள் நல்ல நிலையில் உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து, முன்கூட்டியே தயார் செய்திருக்கும் மரங்களின்மேல் தேவையான அளவுக்கு ஆங்காங்கே கட்டுவார்கள். குஞ்சுகள் வெளிவந்தவுடன் அருகிலுள்ள இளங்கிளைகளில் குடியேறும்.

அரக்குப் பூச்சிகளின் வாழ்க்கை: இப்படிக் குடி யேறும் குஞ்சுகளில் சராசரி 70% பெண்ணும், 30% ஆணுமாக இருக்கும். இவை ஊர்ந்து சென்று, இளங் கிளைகளின் மேல்தோலில் குழாய் போன்ற தமது வாயினால் குத்தி, அவ்விடங்களில் ஒட்டிக்கொண்டு, அக் கிளைகளின் வழியே வரும் மரச்சாற்றை உறிஞ்சி உயிர் வாழ்கின்றன. தமது பாதுகாப்பிற்காக இவை உடலி லிருந்து பிசின் போன்ற பொருளை வெளிவிட்டுத் தம் மைச் சுற்றிலும் கூடுபோல் கட்டிக்கொள்கின்றன. குடியேறிய சில மாதங்களில் ஆண் பூச்சிகள் மீண்டும் வெளிக்கிளம்பிப் பெண்பூச்சிகளைச் சினைப் படுத்திவிட்டு, மூன்று நான்கு நாட்களில் இறந்து போகின்றன. பெண் பூச்சிகள் முதலில் குடியேறிய இடங்களிலிருந்து நகருவதே இல்லை. ஆண் பூச்சிகள் மடிந்தபின் பெண் பூச்சிகளின் உடல்களிலிருந்து இன்

னும் அதிக அளவில் அரக்குக் கரியும். உற்பத்தியாகும் அரக்கில் பெரும்பாகமும் பெண் பூச்சிகளின் உடல்களி லிருந்துதான் கிடைக்கிறது. இவ்வாறு உண்டாகும் அரக் குக் கூடுகள் நாளடைவில் ஒன்றோடொன்று இணைந்து, ஒரே பொருக்காகவோ, அநேக சிறு சிறு பொருக்குக் களாகவோ மாறுகின்றன. பெண் பூச்சிகள் பருவமடைந் ததும் தங்களைச் சுற்றியுள்ள அரக்குக் கூண்டிலிருந்து தங்கள் பின் பாகங்களை முன்னுக்குச் சுருக்கிக் கொண்டு, அவ்விடம் உண்டாகும் இடத்தில் முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. இந்தத் தருணத்தில் ஒவ்வொரு கூடும் பாதி மஞ்சள் நிறமாகவும் பாதி சிவப்பு நிறமாகவும் தோன்றும். இந்தச் சமயத்திலேதான் இக் கிளைகளை வெட்டி எடுத்து, மறுபடி பயிர் செய்வதற்கு விதையாகப் பயன்படுத்தவேண்டும். தாய்ப்பூச்சிகள் தங்கள் குஞ்சுகளெல்லாம் வெளியேறும் வரை உயிருட னிருந்து பின்னர் இறக்கின்றன.

**அரக்குப் பயிர் :** இந்தியாவில் பிகார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, திருவிதாங்கூர், வங்காளம், பஞ் சாப், அஸ்ஸாம், மைசூர், சென்னை ஆகிய இடங்களில் அரக்குப் பயிராகிறது. உற்பத்தியில் சுமார் 60% பீகாரி லும், 15% மத்தியப் பிரதேசத்திலும் கிடைக்கிறது. பொதுவாக ஆண்டிற்கு இரண்டு விளைச்சல்களைப் பெற லாம். சென்னை, மைசூர் பகுதிகளில் மட்டும் 13 மாதங் களில் மூன்று விளைச்சல்களைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு வகை மரத்திலும் பயிராகும் பூச்சிக்குத் தனிப்பட்ட பண்புகள் உண்டு. மரத்திற்கேற்றவாறு அதில் பயிரா கும் அரக்கின் பண்பும் வேறுபடும். இத்தகைய அரக்கு வகைகளில் பூவன்மர (Schleichera trijuga) அரக்கு உயர்ந்தரகமானது.

**கொம்பரக்கு** (Stick lac) : அரக்குச் சேகரிப்போர் மேல் விவரித்தபடி அரக்கு வளர்ந்திருக்கும் கிளைகளை வெட்டி எடுத்து, அரக்கைக் குச்சிகளிலிருந்து கையினால் ஒடித்தோ, கத்தியால் சீவியோ எடுப்பார்கள். இவ்விதம் கிடைக்கும் அரக்கிற்குக் கொம்பரக்கு என்பது பெயர்.

**அரக்குச் சாயம் :** கொம்பரக்கை ஒன்றிரண்டாய்ப் பொடித்துச் சலித்துத் தண்ணீரில் கழுவினால் அரக்குச் சாயம் நீரிற் கரைந்து பிரியும். இச்சாயம் பிராணிக ளிடமுண்டாகும் பட்டு, கம்பளிபோன்ற இழைகளில் கெட்டியாக ஏறும் தன்மை வாய்ந்தது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்வரை இதுவே முக்கியச் சாயப் பொருளாக விற்கப்பட்டு வந்தது. செயற்கைச் சாயங் கள் வழக்கத்திற்கு வந்தபின், அரக்குச் சாயத்திற்குக் கிராக்கி அநேகமாக அற்றே போய்விட்டது.

**மணி அரக்கு** (Seed lac) : கொம்பரக்கைத் தண்ணீரால் கழுவிச் சாயத்தை அகற்றிய பின், சுத்தி செய்து கிடைப்பது மணி அரக்கு. வெள்ளை அரக்குச் செய்வதற்காக இது அயல்நாடுகளுக்குச் சிறிதளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அவல் அரக்கும் மணி அரக்கின் ஒருவகையே.

**தகடரக்கு** (Shellac) : மணி அரக்கை மேலும் தூய்மையாக்கி, 2 அங்குலம் அகலமும் 40 அடி வரை நீளமுமுள்ள துணிப்பைகளில் நிரப்பிப் பைகளைச் சூடாக்கி முறுக்கினால் அரக்கு இளகி வெளிவரும். இதை யும், அரக்கு மெழுகையும் நன்றாகக் கலந்து, வெந்நீர் நிறைத்த ஜாடிகளின்மேல் கொட்டிப்பரப்பி, ஜாடிகளின் மேலிருந்து அரக்கை உரித்தெடுத்து, அதை மெல்லிய படலங்களாக இழுப்பார்கள். இப்படலங்கள் குளிர்ந்த பின், இவற்றைச் சிறு தகடுகளாகப் பொடிக்கலாம். இது தகடரக்கு எனப்படும். இது அதிகமாக ஏற்று மதி செய்யப்படும் வாணிபப் பொருளாகும்.

**தட்டை அரக்கு** (Button lac) மேல் விவரித்தபடி இளக்கிப் பிழிந்தெடுத்த அரக்கைப் படலங்களாக இழுக்காமல், $3'' \times \frac{1}{4}''$ அளவுகொண்ட தகடுகளாகவும் தயாரிப்பதுண்டு. அதற்குத் தட்டை அரக்கு என்று பெயர். இவ்வுருவத்திலும் அரக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது.

தகடரக்கு, தட்டை அரக்கு இவைகளில் அரக்குப் பிசினுடன் சுமார் 5% அரக்கு மெழுகும் கலந்திருக்கும்.

அரக்குத் தொழிலின் உடன்விளைபொருள்கள் : மணி அரக்கிலிருந்து கிடைக்கும் மொலம்மா (Molamma) என்ற அரக்குத்தூளையும், அரக்கைப் பிழிந்த பைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் தூளையும் மணி அரக்குடன் கலந்து, மட்டரகத் தகடரக்கைச் செய்யப் பயன்படுத்துகிறார்கள். பையிலிருந்து வெளிவராமல் தங்கிவிடும் பொருளை ஆல்கஹாலில் கரைத்துக் கல்லரக்கு (Garnet lac) என்ற பொருளைத் தயாரிக் கிறார்கள்.

அரக்குஉற்பத்தி: உலகில்ஓராண்டில்உற்பத்தியாகும் அரக்கின் அளவு, விலையையும் கிராக்கியையும் பொறுத்து 25,000 டன்னிலிருந்து 40,000 டன்வரை வேறுபடும். இதில் சுமார் 90% இந்தியாவிலேயே உற்பத்தியாகிறது. இந்தியாவைத் தவிர, பர்மாவிலும் சயாமிலும் அரக்கு உற்பத்தி நடைபெறுகிறது. அங்கு உற்பத்தியாகும் அரக்கில் பெரும்பகுதி இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு, பண்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அரக்கின் தன்மைகளும் பயனும் : அரக்கு மிருது வாகும் சூடு 65–70°; உருகும் சூடு 80–85°. தூய அரக்கு பழுப்பு மஞ்சள் நிறமானது. இது ஆல்க ஹாலிலும் காரக்கரைவுகளிலும் கரையும்; நீரிலும், எண்ணெய்களிலும் கரைவதில்லை. இசைத் தட்டுக்கள் செய்வதில் இது மிக அதிகமாகப் பயனாகிறது; அடுத்த படி முக்கியமாக மின்சாரக் கருவிகளில் பயன்படுகிறது. மரம், ரப்பர், தோல், உலோகத் தகடுகள் முதலான வற்றில் பூசுவதற்கேற்ற மெருகெண்ணெய் செய்ய இது பயன்படுகிறது. உலக உற்பத்தியில் சுமார் 10% தொப்பிகளுக்கு விறைப்புக் கொடுக்க உபயோகிக்கப் படுகிறது. இவை தவிர வார்ப்புச் சாமான்கள், ரப்பர்ச் சாமான்கள், வர்ணக் குச்சிகள் (Lacquering sticks), விளையாட்டுச் சாமான்கள், முத்திரை அரக்கு (Sealing wax), சாணைக்கல் முதலான அநேக சாமான்கள் செய்யவும் பயனாகிறது. கொம்பரக்கும் மணி அரக்கும் மருந்தாகப் பயனாகின்றன. **யெ. ச.**

நூல்கள் : **P. M. Glover, *Lac Cultivation in India*; *Lac in India* (Booklet No. 9, Govt. of India).**

**அரக்கோணம்** வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜா வட்டத்திலுள்ள ஒரு பட்டணம்; முக்கிய மான ரெயில்வே சந்திப்பு. இதன் அருகிலுள்ள தக் கோலத்தில் நடைபெற்ற போரில் ராஜாதித்திய சோழன் கி.பி. 949-ல் இறந்தான் என்று கூறுவர்.

**அரங்கநாத முதலியார், பூண்டி** (1844-1893) தொண்டை நாட்டில் திருவள்ளூரையடுத்த பூண்டியிற் பிறந்தவர். தந்தையார் சுப்பராய முதலியார்; சைவ வேளாளர். சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி யிலும் அரசினர் கல்லூரியிலும் கற்றுக் கணிதத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர்; மிகச் சிறந்த மேதை யுள்ளவர்; வியக்கத்தக்க நினைவாற்றலுள்ளவர்; கும்ப கோணம் கல்லூரியிலும் சென்னை அரசாங்கக் கல்லூரி யிலும் பேராசிரியராக இருந்தார்; பல்கலை வல்லவர் எனப் பாராட்டப் பெற்றவர்; சிறந்த இனிய சொற் பொழிவாற்றுவதில் வல்லவர்; தொழுவூர் வேலாயுத

முதலியார், திருமணம் செல்வக்கேசவராய முதலியார வர்களின் தந்தையாரான சுப்பராய முதலியார் ஆகியோரிடம் தமிழ் கற்றுச் சிறந்தார்; கச்சிக்கலம்பகம் என்னும் நூலை யியற்றினர்.

கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக இருந்தாலும், எல்லாத் துறையிலும் சிறப்புற்று விளங்கினர். இவர் காலத்தில் உயர் நீதிமன்றத்திலே தலைவராக இருந்த திருவாரூர் முத்துசாமி ஐயரவர்களும் வியக்கும்படி சிக்கலான ஒரு வழக்கை ஒரு நள்ளிரவிலேயே படித்துவிட்டுத் தீர்ப்பெழுதிக் கொடுத்தார். சென்னை உயர் நீதி மன்றத்திலே முதன் முதல் ஷெரீப் ஆக நியமிக்கப்பட்ட இந்தியர் இவரே. கல்வி, சமூகச் சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், அரசியல் முதலியவற்றைப் பற்றி இவர் முக்கால் நூற்றுண்டுக்குமுன், கட்டுரைகளின் மூலமாகவும் சொற்பொழிவுகளின் மூலமாகவும் வெளியிட்ட அரிய கருத்துக்கள் இன்றும் சிறந்தனவாகவே இருக்கின்றன.



பூண்டி அரங்கநாத முதலியார்

உதவி : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**அரங்கம் :** பார்க்க: ஸ்ரீரங்கம்.

**அரங்கு, கொட்டகை அமைப்பு** (Stage and Theatre design) : அரங்கு என்பது நாடகமோ, நடனமோ நடைபெறும் மேடை. மக்கள் உட்கார வசதியையும், அரங்கையும் கொண்ட கட்டடம் கொட்டகை எனப்படும். திறந்த வெளியில் ஒரு சிறு மேடையை அமைத்துத் தெருக்கூத்து நடத்தும் இடத்திலிருந்து நியூயார்க், லண்டன் போன்ற நகரங்களிலுள்ள மிகப் பெரிய கொட்டகைகள் வரை பலவேறு வகையான அரங்குகளும், கொட்டகைகளும் உண்டு. சினிமா என்னும் பொழுதுபோக்கு வகை தோன்றியபின் இதற்காகவும் பல கொட்டகைகள் தோன்றியுள்ளன.

பழங்கால இந்தியா : பழங்காலத்தில் கிராமங்களில் திறந்த வெளியில் நாடகங்கள் நடத்தப்பட்டன. கோயில்களில் அபிநயத்திற்குரிய அரங்கு கூத்தம்பலம் என அழைக்கப்பட்டது. நாடகசாலை என வழங்கிய பழங்கால நாடகக் கொட்டகையின் அமைப்பு, அக்காலத்தவரது கருத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது என்பதற்குச் சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்களும், பரதருடைய நாட்டிய சாஸ்திரம் போன்ற வடமொழி நூல்களும் சான்ருகும். இந்நூல்களில் அரங்கிற்கும், நாடகசாலைக்கும் மிக விரிவான இலக்கணம் கூறப்பட்டுள்ளது. (பரதர் விவரிக்கும் மூன்றுவகை நாடகசாலைகளைப்பற்றி, நாடகம்–சமஸ்கிருத நாடகம் என்ற தலைப்பில் பார்க்க.)

நகரத்தின் மையமாகவும், பலர் வந்து கூட ஏற்றதாகவும், தேரோடும் வீதிகளுக்கு எதிராகவும் உள்ள இடத்தில் நாடகசாலை அமைக்கப்படவேண்டும். அது தக்க காவல் உள்ளதாக இருக்கவேண்டும். நாடகசாலையை அமைக்கும் நிலத்தின் தன்மையையும் பழங்கால நூல்கள் திட்டமாக வரையறுத்தன. நுண்ணியதும், உறுதியுடையதுமான மண்ணின் மேலேயே நாடகக் கொட்டகையை அமைக்கலாம். அம்மண் நறுமணமும், இன்சுவையும் உடையதாக இருக்கவேண்டும். நாடகசாலையின் தரை சமதளமாகச் சீராக இருக்க வேண்டும். நாடகசாலை தெய்வங்கள் கூடுமிடம், முனிவரது உறைவிடம், பறவைகளின் இருக்கை, பாம்புப்புற்று, யானைகளையும் குதிரைகளையும் கட்டும் கூடங்கள், போர்வீரர் யுத்தப் பயிற்சி செய்யும் இடங்கள் முதலியவற்றிற்கு அருகில் இருந்தால், அவை நாடகத்திற்கு இடையூருகவும், நாடகம் அவற்றிற்கு இடையூருகவும் அமையும்.

இவ்வளவையும் மனத்திற்கொண்டு அமைக்கப்பட்ட நாடகசாலையில் நேபத்தியம், அரங்கு, காணுநர் இருக்கை என்ற மூன்று பகுதிகள் இருக்கும். அவற்றுள் நேபத்தியம் என்பது நாடகத்திற்கு வேண்டிய இசைக் கருவிகளும், அவற்றை இசைப்போரும், வேடம் புனையத் தேவையான ஆடை, அணிகலன்களும் உள்ள இடம். அவையோர் அறியாது நடிகர்கள் வேடமணியவும், அரங்கை அடையும்வரை மறைந்திருக்கவும் அதில் வசதி இருக்கும்.


நாடகசாலையின் முகம்போல அதன் அரங்கு அமைந்திருக்கும். அது உயரமானதும் சமதளமானதுமான மேடை. ஆதியில் அரங்கில் வர்ணத்திரைகளும், மற்றக் கருவிகளும் இருக்கவில்லை. அழகிய பல திரைகளையும், எந்திர வசதிகளையும், சூரியவொளியையொத்த பிரகாசமான ஒளியமைப்பையும் உடைய அரங்கு பிற்காலத்தில் தோன்றியது. அரங்கில் தூண்களின் நிழல் விழாத வகையில் விளக்குக்களை அமைக்கவேண்டும். அரங்கானது கைப்பெருவிரல் இருபத்துநான்கு கொண்ட ஒரு முழு அளவு கோலால் ஏழு கோல்கள் அகலமும், எட்டுக் கோல்கள் நீளமும், ஒரு கோல் குறட்டின் உயரமும் கொண்டிருக்க வேண்டும். உத்தரத்திலுள்ள பலகைக்கும் அரங்கில் அகலவாட்டாக உள்ள பலகைக்கும் இடையே நான்கு கோல் உயரமிருக்கவேண்டும். அரங்கினுள் நுழையவும், வெளியே செல்லவும், அதில் இரு வாயில்கள் இருக்கவேண்டும். அரங்கின் இடப்புறத்திலுள்ள தூணிலிருந்து ஒருமுக எழினியும், வலப்புறமுள்ள இரு தூண்களிலிருந்து நெருங்கி வருமாறு அமைந்த பொருமுக எழினியும், மேலே மறைந்திருக்குமாறு அமைக்கப்பட்டுத் தேவையானபோது கிழிறக்கப்பட்ட கரந்துவரல் எழினியும் அமைக்கப்பட்டன.

காணுநரிருக்கை, அரங்கில் நிகழும் அனைத்தையும் வசதியாக இருந்து பார்க்க ஏற்றவாறு காண்போரது தரத்திற்குத் தக்கபடி அமைந்த ஆசனங்களைக் கொண்டிருக்கும். இதில் அரசரும், அரச குடும்பத்துப் பெண்களும் அமரும் அவையரங்கமும், அதைச் சுற்றிலும் பொதுமக்கள் அமரும் பகுதியும் இருக்கும். இப்பழங்கால அரங்கு அமைப்பு முறை அக்காலத்திய நாடகக் கலையின் மேம்பாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியது.

பழங்கால ஐரோப்பா : பழங்காலக் கிரேக்க நாடகங்கள் கோயில்களினருகே நடத்தப்பெற்றன. நாடகத்தில் இசையும் நடனமுமே பிரதானமாக இருந்ததால், அக்காலத்திய அரங்கு வட்ட வடிவும் சமதளமுமான நிலமாக இருந்தது. இந்த நடனமேடை ஆர்க்கெஸ்ட்ரா என அழைக்கப்பட்டது. இதிலிருந்து இசைக் கருவிகளைக்கொண்டு இசை கூட்டும் குழுவிற்கே இப்பெயர் இக்காலத்தில் வழங்குகிறது. அதனருகே இருந்த மேடு ஒன்றில் மக்கள் இருந்து நாடகம் பார்த்தனர். சாதாரணமாக ஒரு சிறு குன்றினருகே அரங்கை அமைப்பது வழக்கம். நாடகத்தைப் பார்க்க மக்கள் குன்றின்மேல் கூடினர். பிற்காலத்தில் இக்குன்றையே படிப்படியாக


வெட்டி ஆசனங்களை அமைத்தனர். நடிகர்கள் மறைந்திருக்கவும், வேடம் புனையவும் ஏற்றவாறு குடிசையொன்றும் போடப்பட்டது. இதுவே பின்னர்ப் பெரிதாக்கப்பட்டு அரங்காக மாறியது. அரங்கிற்குப் பின்னால் இருந்த திரை அலங்காரமாகவும் நடிகர்கள் மறைய ஏற்றதாகவும் இருந்தது. பழங்காலக் கிரேக்க இலக்கியத்தில் புகழுடன் விளங்கும் சாபக்ளீஸ், யுரிபிடீஸ் போன்ற ஆசிரியர்களது சோக நாடகங்கள் இத்தகைய அரங்குகளில் நடத்தப்பெற்றன.

இதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னரே, உயரமான மேடையொன்று தனியே அமைக்கப்பட்டு அரங்காகியது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே இந்த மாறுதல்கள் தோன்றின. நீளமாகவும் குறுகலாகவும் இருந்த இந்த மேடையின்மேல் ஓர் அரண்மனையின் முகப்பும், மையத்தில் பெரிய வாயிலும் இருந்தன. இந்த வாயிலின் வழியே உள்ளே நடைபெறும் காட்சிகளைக் காண முடிந்தது. அரங்கின் பின்புறத்தில் சில பட்டகங்கள் மூலைகளின்மேல் சுழலுமாறு அமைக்கப்பட்டிருந்தன. இவற்றின் முகங்கள் வெவ்வேறு நிறங்கள் கொண்டவை. நிகழ்ச்சியின் இட மாற்றங்களைக் குறிக்க, இப்பட்டகங்களைச் சுழற்றி, வேறு நிறங்களுள்ள முகங்கள் காண்போருக்கு எதிரே வருமாறு செய்வது வழக்கம்.



ஆர்க்கெஸ்ட்ராவைக் கொண்ட பழங்கால அரங்கு

பழங்கால ரோமானிய அரங்கு இதைவிட விரிவான அமைப்புக்கொண்டது. வட்டவடிவாக இருந்த நடன மேடை அரைவட்ட வடிவாக மாற்றப்பட்டுக் காண்போரது இடத்துடன் சேர்க்கப்பட்டது. அரங்கு இன்னும் பெரிதாக்கப்பட்டு அதன் பின்புறத்தில் சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்த சுவரையும் கொண்டிருந்தது. இதில் ஐந்து கதவுகள் இருந்தன. இவற்றுள் நடுவில் இருந்த கதவு அரண்மனை வாயிலாக அமைந்திருக்கும். ஒரு திரையின் உதவியால் தேவையானபோது அரங்கை மூடும் வழக்கமும் இப்போது தோன்றியது. விசேஷ விளைவுகளைக் காட்டப் பலவகையான எந்திர சாதனங்கள் வழக்கத்தில் இருந்தன. அரங்கிற்கும் காண்போரது இடத்திற்கும் மேல்கூரை அமைக்கப்பட்டது. பழங்கால ரோமானிய அரங்கின் அமைப்பே பிற்கால நாடகக் கொட்டகைக்கு வழிகாட்டியது எனலாம்.



ரோமானிய அரங்கு

இடைக்கால ஐரோப்பா : ரோமானிய சாம்ராச்சியத்தின் அழிவிற்குப்பின் ஐரோப்பாவில் நாடகக் கலையே அநேகமாக மறைந்துவிட்டது. விவிலிய நூலிலிருந்தும், கிறிஸ்துவின் வரலாற்றிலிருந்தும் சில சம்பவங்களை நாடகமாக நடித்துக்காட்டும் பழக்கம் பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது. இந்த நாடகங்கள் கோயிலுக்குள்ளும், அதையடுத்த திறந்த வெளியிலும் நடைபெற்றன. பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குப் பின்னரே நாடகக் கொட்டகைகள் கட்டப்பெற்றன. 1579ஆம் ஆண்டில் விசன்சா என்னும் இத்தாலிய நகரத்தில் ஒலிம்பிக் கொட்டகை என்ற நாடகக் கொட்டகையைக் கட்டத் தொடங்கினர்கள். இது 1,200 பேர் இருக்கத் தக்கவாறு படிப்படியான உயர்ந்த ஆசனங்களையும் சிறந்த சிற்பவேலைப்பாடுடைய அரங்கையும் கொண்டிருந்தது. அரங்கின் அமைப்பு ரோமானிய அரங்கமைப்பை யொத்திருந்தது. அரங்கின் பின்புறம் ஒரு பெரிய வளைவான வாயிலும், பக்கங்களில் நீள்சதுர வடிவான வாயில்களும் இருந்தன.

இதற்குச் சில ஆண்டுகளின் பின், பார்மா நகரில் கட்டப்பெற்ற கொட்டகையில் அரங்கின் மையத்திலிருந்த வாயில் பெரிதாக்கப்பட்டு, அதன் பின்புறத்தில் உள்ள பகுதியே அரங்காக மாற்றப்பட்டது. அங்குத் திரைச் சீலைகளைத் தொங்கவிட்டுத் தொலைவையும், மற்றக் காட்சிகளையும் காட்ட முயன்றார்கள். வாயிலின் இருபுறங்களிலும் இருந்த நீள்சதுர வாயில்களைப் பக்க வாட்டில் அடைத்து, நடிகர்கள் அரங்கில் நுழையவும் வெளியேறவும் இவை உதவுமாறு செய்தார்கள். இயக்கத்தக்க காட்சித் திரைகள் இக்காலத்தில் வழக்கத்திற்கு வந்தன.

இங்கிலாந்தில் எலிசபெத் அரசியின் காலத்தில் நாடகக்கலை வளம்பெற்றது. 1576 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் பர்பேஜ் (James Burbage) என்னும் நடிகர், 'தியேட்டர்' என்ற பெயருள்ள நாடகக் கொட்டகையை லண்டனில் அமைத்தார். இதன்பின் வேறுசில நாடகக் கொட்டகைகளும் தோன்றின. அக்காலத்திய நாடகக் கொட்டகை வட்டவடிவமாகக் கட்டப்பட்டது. இதன் நடுவில் சதுரமான அரங்கும், இதைச் சுற்றிலும் படிப்படியாக மூன்று உப்பரிகைகளும் அமைக்கப்பட்டன. இந்த உப்பரிகைகளில் செல்வர்கள் அமர, ஏற்ற இருக்கைகள் இருந்தன. அரங்கின் மூன்று பக்கங்களிலும் மற்றப் பொதுமக்கள் நின்றுகொண்டு நாடகம் பார்த்தனர். இப்பகுதி 'குழி' என அழைக்கப்பட்டது. அரங்கின்மேல் ஒரு விதானம் இருக்கும். இது வானத்தைக் குறிக்கும். பகல் நேரத்தில் நாடகங்கள் நடத்தப்பெற்றன. அரங்கின் பின்புறத்தில் நேபத்தியம் அமைக்கப் பட்டது. அரங்கின் பின்பக்கத்தில் இருந்த உப்பரிகை மிக முக்கியமான பகுதியாக இருந்தது. அரண்மனைக் காட்சிகளையொத்த நிகழ்ச்சிகள் இதிலிருந்து நடைபெற்றன. ஷேக்ஸ்பியர் எழுதிய ரோமியோவும் ஜூலியட்டும் என்ற நாடகத்தில் வரும் உப்பரிகைக் காட்சி அக்கால நாடக அரங்கின் உப்பரிகையின் அமைப்பை மனத்திற்கொண்டே எழுதப்பட்டது. பிற்காலத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளில் வழங்கிய முறைகள் இங்கிலாந்திற்கும் பரவின. அரங்கின் அமைப்புச் சீர்திருந்தியதோடு, இயலுருத் தோற்றமுள்ள திரைச்சீலைகளும், மூன்று பக்கங்கள் மூடிய அரங்கும் தோன்றின.


பதினெட்டாம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய அரங்கு அமைப்பு முறையே முதலில் பிரான்சிலும் அதன்பின் இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. மிக விரிவான காட்சிச் சீலைகளும், மற்ற அமைப்புக்களும் அரங்கில் அமைக்கப்பட்டன. படச் சட்டத்தையொத்த முகப்பையுடைய அரங்கிற்குள் நடிகர்கள் தோன்றி நடித்தார்கள். காட்சிகளை உள்ளவாறே காட்டும்பொருட்டு அரங்கைப் பெரிதாக்க நேர்ந்தது. காண்போரது ஆசனங்கள் அரைவட்ட வடிவுள்ள வரிசைகளில் அமைக்கப்பட்டன. இக்காலத்தில் தோன்றிய முறைகளிற் சில இன்னும் வழக்கத்தில் உள்ளன.

பழங்கால ஆசியா : பழங்காலத்திலிருந்தே சீனாவில் நாடகம் ஒரு சிறப்பான கலையாக மதிக்கப்பட்டு, அரசர்களது ஆதரவுடன் வளர்ந்து வந்துள்ளது. இக்காலத்

திலும் சீனவில் பழங்கால மரபுகள் கையாளப்பட்டு வருகின்றன. சீன நாடகக் கொட்டகை தனது அமைப்பில் எலிசபெத் காலத்திய ஆங்கிலக் கொட்டகையை ஒத்தது. ஆனால் கொட்டகை முழுதிற்கும் கூரை இருக்கும். அரங்கு எளிய அமைப்புள்ளதாகவே இருக்கும். அரங்கின் பின்புறத்தில் சித்திரத் தையலினால் அலங்கரித்த சீலையொன்று தொங்கவிடப்பட்டிருக்கும். நடிகர்கள் இதன் இடமாகவும் வலமாகவும் அரங்கிற்கு வருவார்கள். அரண்மனைக் கொட்டகைகளில் அரச குடும்பத்தார் அமரும் உப்பரிகைகளும், பொதுமக்கள் நிற்கும் குழியும் இருந்தன.

ஜப்பானில் நாடகங்கள் நடைபெறும் அரங்கு மரத்தினாலான மேடை. இதன் மேலுள்ள கூரையை நான்கு தூண்கள் தாங்கி நிற்கும். மூன்று பக்கங்களில் இது திறந்திருக்கும். இதன் பின்புறத்தில் மட்டும் தேவதாரு மரத்தின் சித்திரத்தையுடைய திரையொன்று இருக்கும். அரங்கின் வலப்புறத்தில் குறுகிய உப்பரிகையொன்று இருக்கும். இதை மூன்று தேவதாரு மரங்களின் சித்திரம் அலங்கரிக்கும். இம்மரங்கள் புவியையும், வானத்தையும், மக்களையும் குறிக்கும். இசைக் கருவிகளை வாசிப்பவர்கள் அரங்கின் பின்புறத்திலும், பின்னணிப் பாடகர்கள் அரங்கின் இடப்புறத்திலும் இருப்பது வழக்கம். காபூகி என்ற நாடகங்கள் விரிவான அமைப்புள்ள அரங்கில் நடைபெறும். இந்த அரங்கு ஐரோப்பிய அரங்கைவிடப் பெரிதாகவும், சுழலும் அரங்குகள் போன்ற எந்திரச் சாதனங்களைக் கொண்டதாகவும் இருக்கும். அரங்கிற்கு நீளவாட்டமாகப் பூஞ்செடிகளால் அலங்கரிக்கப்பட்ட பாதையொன்று உண்டு. இது ஊர்வலம் முதலிய நிகழ்ச்சிகளுக்கும், நடிகர்கள் அரங்கிற்கு வரவும் ஏற்றவாறு அமைந்திருந்தது.

**தற்காலக் கொட்டகை:** படச் சட்டத்தைப் போன்ற முகப்பையுடைய அரங்கும், குதிரை லாட வடிவான ஆசன வரிசைகளும் பல உப்பரிகைகளும் கொண்ட கொட்டகை தற்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டு விட்டது. பழங்கால அமைப்பில் உப்பரிகையில் உள்ளவர்களும், வரிசையின் கோடிகளில் இருப்பவர்களும் அரங்கு முழுவதையும் நன்கு பார்க்க முடியாமல் இருந்தது. இதற்குப் பதிலாக ஆசனங்களின் வரிசை படத்திலுள்ளதுபோல் அமைக்கப்படுகிறது. கொட்டகையின் தரை அரங்கிலிருந்து சாய்வாக இருப்பதால், முன் வரிசையிலுள்ளோர் பின் வரிசையிலுள்ளோர்க்கு அரங்கு சரிவரத் தெரியாமல் மறைப்பதில்லை. சமூகத்தில் ஜனநாயகக் கருத்துக்கள் பரவியபின் கொட்டகையின் அமைப்பும் மாறியது. செல்வர்கள் சிலருக்காகப் பிரத்தியேகமாக இருந்த தனி அறைகள் மறைந்தன. தற்காலக் கொட்டகையின் பின் புறத்தில் ஒரே ஒரு உப்பரிகை மட்டும் இருக்கும். இரும்பையும் கான்கிரீட்டையும் பயன்படுத்தும் கட்டட முறைகளால் தூண்களே இல்லாமல் கொட்டகையை அமைக்க முடிகிறது. அரங்கிற்குள் நடைபெறும் நாடகம் காண்போரது உள்ளங்களையும், நடிகர்களது உணர்ச்சிகளையும் ஒருமைப்படுத்தி, அங்கு நடைபெறுவது செயற்கை நிகழ்ச்சி என்ற எண்ணத்தையே மறக்கச் செய்யவேண்டும். ஆனால், படச் சட்டத்தையொத்த முகப்புள்ள அரங்கு உள்ளவரை இது இயலாது எனச் சிலர் கருதுகின்றனர். அத்தகைய அரங்கை அமைப்பதிலும் சிலர் வெற்றிபெற்றுள்ளனர். வேறு புதுவகை அமைப்புள்ள கொட்டகைகளை அமைக்கப் பல அறிஞர்கள் திட்டம் வகுத்துள்ளனர். அமெரிக்க நாடக அரங்கு அமைப்பில் பெரு மாறுதல்களுக்குக் காரணமாக இருந்த நார்மன் பெல் கெட்டெஸ் (Norman Bel Geddes) என்ற அறிஞரது திட்டத்தில் கொட்டகையின் ஒரு மூலையில் முக்கோண வடிவான அரங்கு இருக்கும். பெரிய கும்மட்ட வடிவான கூரையின் கீழ் அரங்கும், காண்போரது ஆசனங்களும் இருக்கும். காட்சி மாற்றத்தின்போது அரங்கு, தரைக்குக் கீழே தாழ்ந்து மீண்டும் மேலே வரும். ஆஸ்திரிய அறிஞர் ஆஸ்கர் ஸ்ட்ரினாடு (Osker Strinad) என்பவரது திட்டத்தில் கொட்டகை வட்டவடிவாக இருக்கும். காண்போரது ஆசனங்கள் அதன் மையத்தில் அமைந்திருக்கும். அரங்கு ஒரு பெரிய வளையம் போன்ற அமைப்புடன் சுழல ஏற்றவாறு இருக்கும். இந்த வளையம் சுழன்று, அதன் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு காட்சியைக் காண்போருக்கு முன் கொண்டுவரும். இத்தகைய பலமுயற்சிகளிலிருந்தே வருங்கால நாடகக் கொட்டகை தோன்றவேண்டும்.




தற்காலக் கொட்டகையும் அரங்கும்
அ—அரங்கு ஆ—ஆசனங்கள்

சினிமாக் கொட்டகை அங்குக் காட்டப் பெறும் காட்சிக்கு ஏற்பச் சில மாறுதல்களுடன் அமைந்திருக்கிறது. இதில் குறைவான இடத்தில் மிகப் பல ஆசனங்களை அமைக்க வேண்டியிருப்பதால் இதை மிக நீளமாக அமைக்கத் தொடங்கினார்கள். இதை மிக அகலமாகக் கட்டினால், இரு பக்கங்களிலும் கோடியில் இருப்பவர்களுக்குப் படக்காட்சி விகாரமாகத் தெரியும். இதனால் இக்கொட்டகைகளில் ஒன்றன்மேலொன்றாக உள்ள உப்பரிகைகள் ஏற்றவை. கொட்டகைக்குள் நுழையும் கூடத்திற்குமேல் உள்ள காலி இடத்தில் சிற்றுண்டிச்சாலையையும் தாவன அறைகளையும் (Water closets) அமைக்கிறார்கள். 1927-ல் பேசும் படம் தோன்றியபின் சினிமாக் கொட்டகையின் அமைப்பு மேலும் மாறியது. கொட்டகையிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒலியானது தெளிவாகக் கேட்கும் வகையில் கட்டடத்தின் அமைப்பும், ஒலிபெருக்கிகளின் அமைப்பும் இருக்கவேண்டும். கொட்டகை நல்ல மேளக் கட்டுடன் இருக்கவேண்டுமானால், அது ஏறக்குறைய மனித மண்டையோட்டின் வடிவமாக இருக்கவேண்டும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் சினிமாக் காட்சி குறிப்பிட்ட காலங்களில் மட்டுமல்லாமல் 12 மணி நேரமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஆகையால், மக்கள் கொட்டகைக்குள் எந்நேரத்திலும் சென்று, தேவையானபோது வெளியே செல்வார்கள். ஆகையால், ஒருவர் உள்ளே வரும்போதும், வெளியே போகும்

போதும், மற்றவர்கள் படம் பார்ப்பதைப் பாதிக்காத வகையில் ஆசனங்களை அமைக்க வேண்டியிருக்கும். கண்ணுக்கு நலந்தரும் வகையிலும் திரையின்மேல் விழாமலும் அதில் வெளிச்சம் இருக்கவேண்டும். மின்சார விளக்குக்களை மிக்க திறமையுடன் அமைத்து இதைச் செய்கிறார்கள். தட்ப வெப்ப நிலையால் கொட்டகையிலுள்ளோர் பாதிக்கப்படாதவாறு உள்




மெட்ரோ சினிமாக் கொட்டகை, பம்பாய்.

உதவி : மெட்ரோ சினிமா, பம்பாய்.

ளிருக்கும் காற்றைப் பதப்படுத்துவதும் அவசியமாகும். எல்லா வசதிகளும்கொண்டு, பல ஆயிர மக்களைக் கொள்ளும் மிகப் பெரிய கொட்டகைகள் அமெரிக்காவில் உள்ளன. டெலிவிஷன், இணைப்பார்வைக் காட்சி போன்ற புதுமைகள் பரவினால் சினிமாக் கொட்டகையின் அமைப்பு மேலும் மாறும் என எதிர்பார்க்கலாம்.

அரங்கு அமைப்பு : இந்நூற்றாண்டின் தொடக்கம் வரை மேல்நாடுகளில் நாடக அரங்கு மிக விரிவான காட்சித் திரைகளையும் மற்றச் சாதனங்களையும் கொண்டிருந்தது. நாடகக் காட்சிகளின் சிறப்பினாலேயே புகழ்பெற்ற நாடகங்கள் இருந்தன. ஆற்றையும், மலையையும், கோட்டை கொத்தளங்களையும், எரியும் நகரையும், உள்ளது உள்ளவாறே காட்ட அக்காலத்தில் அரும்பாடுபட்டார்கள்; நிறையச் செலவு செய்தார்கள். சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஹென்ரி இர்விங் என்ற புகழ் பெற்ற ஆங்கில நடிகர் ஷேக்ஸ்பியரது நாடகங்களை நடித்துக் காட்டியபோது இயற்கைத் தோற்றத்தைக் காட்டும் இம்முறை உச்ச நிலையை அடைந்தது எனலாம். அக்காலத்திய அரங்கு இதற்கேற்றவாறு அமைந்திருந்தது. நடிகர்கள் திடீரெனத் தோன்றவும், மறையவும், காட்சிகளை விரைவாக மாற்றவும் ஏற்றவாறு அரங்கில் பல கண்ணிகள் இருந்தன. காட்சித் திரைகளை மேலே இழுக்க ஏற்றவாறு உயரமான பரண் அமைக்கப்பட்டது. ஜப்பானில் பழங்காலத்திலிருந்து வழக்கத்திலுள்ள சுழலும் அரங்கு மேல்நாடுகளிலும் வழக்கத்திற்கு வந்தது. இதன் உதவியால் பல காட்சிகளை முன்னதாகவே தயாரித்து வைத்து, ஒன்றன்பின் ஒன்றாக விரைவில் மாற்றமுடிகிறது. வண்டியின்மேல் காட்சிகளைத் தயாரித்து, அவற்றை அரங்கிற்கு இழுத்துவரும் முறையும், அரங்கைக் கீழே தாழ்த்திக் காட்சியை மாற்றும் முறையும் வழக்கத்திற்கு வந்தன.

நாடகம் என்பது வெறும் பொழுதுபோக்கு எனக் கருதப்பட்ட அக்காலத்தில் இந்த உபகரணங்கள் அனைத்தும் தேவையாக இருந்தன. ஆனால் இப்சன், பெர்னார்டு ஷா, செகாவ் முதலிய தற்கால நாடகாசிரியர்கள் தோன்றி, இக்கருத்தை மாற்றி, உலகையும் மக்களையும், மனித உணர்ச்சிகளையும் அறிய முயலும் ஆராய்ச்சிக் கூடங்களில் நாடக அரங்கும் ஒன்று என்ற புதுமைக்



லிவர்ப்பூலிலுள்ள இசையரங்கு மண்டபம்

உதவி : பிரிட்டிஷ் கவுன்சில்


கருத்தைத் தோற்றுவித்தார்கள். ஓவியத்தில் கண்டு மகிழ்வது போன்ற காட்சிகளை நாடக அரங்கில் விரும்பும் காலம் மறைந்தது. கார்டன் கிரெயிக் (Gordon Craig) என்னும் அறிஞர் தோன்றி, ஆங்கில நாடக அரங்கின் அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்களை விளைவித்தார். நாடகக் காட்சிகளில் இயற்கையான தோற்றத்தைவிடக் கற்பனையே முக்கியமானது என இவர் முடிவு செய்து, திறமையான குறிப்புக்களால் நாடகம் காண்போரது கற்பனைக்கு வேலைகொடுத்தும், நடிகர்களை அரங்கில் அமைக்கும் வகையிலிருந்தும் ஒளியையும் நிழலையும் தக்கபடி மாற்றியமைத்தும், நாடக ஆசிரியனுடைய உள்ளக்கிடக்கைகளையும், நாடகத்தின் உணர்ச்சிகளையும் காண்போர் உணருமாறு செய்தார். பல்வேறு அளவுள்ள செங்கட்டிகள், படிகள், தூண்கள் போன்ற எளிய பொருள்களையும் அலங்காரம் எதுவும் இல்லாத திரைகளையும் கொண்டே இவர் தம்முடைய காட்சிகளை அமைத்தார். ஜெர்மனியில் இதே கருத்துகளை வெளியிட்ட அடால்பே அப்பியா (Adolphe Appia) என்னும் அறிஞரைத் தொடர்ந்து, மாக்ஸ் ரைன்ஹார்டு(Max Reinhardt)என்பவர் இம்மாறுதல்களை வழக்கத்திற்குக் கொண்டு வந்தார். இதே சமயத்தில் ரஷ்ய நாட்டிய நாடக அரங்கில் நிகழ்ந்த மாறுதல்களும் இவற்றிற்கு வழிகாட்டிகளாக அமைந்தன. குறிப்புக்களால் காட்சிப்பொருள்களைக் காட்டும் முறை ஜப்பானியருக்குப் புதிதன்று. அவர்களுடைய நாடக முறையொன்றில் ஒருசிறு பூ, பூந்தோட்டத்தையும், நீண்ட மூங்கிற்கழி பாலத்தையும் குறிக்கும். மேனாடுகளில் நிகழ்ந்த இம்மாறுதல்கள் ஜப்பானிய முறையை அடிப்படையாகக் கொண்டவை எனலாம். தற்கால ஓவியச் சிற்பக் கலைகளில் தோன்றியுள்ள மரபுகள் அனைத்தும் நாடக அரங்கில் கையாளப்பட்டுள்ளன.

அற்புதமான காட்சியை உள்ளது உள்ளபடி காட்ட

வல்ல சினிமா தோன்றியபின், நாடக அரங்கில் ஏராளமான பொருட் செலவு செய்து, எத்தகைய காட்சியை அமைத்தாலும், அது பெரிதாகத் தோன்றாது. ஆகையால், கற்பனைக்கு இடந்தரும் எளிய காட்சி அமைப்புக்களே தற்காலத்தில் சிறப்பாக மதிக்கப்படுகின்றன. ஆகையால், இதற்கேற்றவாறு தற்கால அரங்கு குறுகலாய்விட்டது. அதன் முகப்பில் பழங்காலத்திலிருந்த அலங்காரங்கள் மறைந்துவிட்டன. காண்போர் உள்ள இடத்துடன் அரங்கு ஒன்றாக இணையும் காலமே வந்துவிட்டது.

குறைவிட நாடகக் காட்சியின் ஒளித் தோற்றமே காண்போரது உணர்ச்சிகளை விரைவாகவும் அதிகமாகவும் கட்டுப்படுத்துகிறது. ஒரு காட்சியின் உட்பொருளை விளக்க அதற்கேற்ற ஒளி இன்றியமையாதது. அரங்கில் எவ்வகை மாறுதலும் இன்றி, ஒளிமாற்றங்களாலேயே ஒரு நாடகத்தின் பல அங்கங்களையும் நிகழ்த்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒளி அமைப்பின் சிறு மாறுதல்களும் நாடகத்தின் பாவத்தை அறவே மாற்றலாம்.

ஒளி அமைப்பு: பழங்காலத்தில் நாடக அரங்கைப்




அண்ணாமலை மன்றம், சென்னை.
உட்புறத் தோற்றம்
உதவி: தமிழ் இசைச் சங்கம், சென்னை.

பல வடிவங்களிலும் விசேஷமான பல பயன்களுக்கு ஏற்றவாறும் மின்சார விளக்குக்களைப் பெற முடிகிறது. ஆகையால் அரங்கமைப்பில் நிகழ்ந்திருக்கும் பல மாறுதல்களுக்கு மின்சார விளக்குக்கள் அடிப்படையாக உள்ளன என்பதில் வியப்பில்லை. தற்கால அரங்கின் காட்சித் திரையைத் தீட்டும் ஓவியக்காரர் ஒளி அமைப்பாளரே யாவர். இவர் கையாளும் முறைகளால் காட்சி நம்முன் தோன்றுகிறது. இரண்டடித் தொலைவிலுள்ள மலையை இரண்டாயிரம் அடித் தொலைவிலுள்ளதுபோலவோ, அட்டையாலான உருவத்தைப் பெரும் பாலமாகவோ, வானளாவிய கட்டடமாகவோ, சுவருக்குப் பின்னாலுள்ள வானம் எல்லையற்றது போலவோ ஒளி அமைப்பினால் காட்ட முடிகிறது. நடிகளின்

பந்தங்களால் ஒளி பெறச் செய்தனர்; இதன் பின்னர் மெழுகுவர்த்திகளைப் பயன்படுத்தும் வழக்கம் தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டுவரை இம்முறையே அதிகமாக வழங்கியது. இதன் பின்னர் எண்ணெய் விளக்குக்கள் வழக்கத்திற்கு வந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எரிவாயுவைக் கொண்டு நாடகக் கொட்டகைகளில் விளக்கெரிக்கும் முறை தோன்றியது. இந்த விளக்குக்களில் மாண்டில்களைப் பயன்படுத்தும் முறை தெரிந்தபின் இவற்றின் பயன் அதிகமாயிற்று. எரிவாயு விளக்குக்களைத் தேவையானவாறு கட்டுப்படுத்த முடிந்ததால், அரங்கின் ஒளி அமைப்பைக் கட்டுப்படுத்தி, விசேஷ விளைவுகளைக் காட்ட முடிந்தது. இதன் பின்னரே நாடகத்

தின்போது காண்போர் உள்ள இடத்தின் ஒளியைக் குறைத்து, அனைவரது கருத்தையும் அரங்கில் நிலை பெறச் செய்ய முடிந்தது.

ஆனால் 1879-ல் எடிசன் என்னும் அறிஞர் மின்சார விளக்கைக் கண்டுபிடித்த பின்னரே பலதிறப்பட்ட




சுழலும் அரங்கைக்கொண்ட கொட்டகை

அ—அரங்குகள் ஆ—ஆசனங்கள்

விளக்குக்களின் ஒளியினால் அரங்கிற்கு ஒளி தரும் நவீன முறை வழக்கத்திற்கு வந்தது. பல ஆயிரம் மெழுகுவர்த்திகளின் ஒளியைத்தரும் சக்தி வாய்ந்த மின்சார விளக்கும், பரவளைவு வடிவான ஆடிகளும் கண்டுபிடிக்கப்பட்டபின், அரங்கில் ஏதாவது ஓர் இடத்தில் மட்டும் ஒளிதரும் விளக்குக்களை அமைக்க முடிந்தது. வெள்ள ஒளி (Flood light) விளக்குக்களைக் கொண்டு அரங்கின் சில பகுதிகளை மட்டும் பிரகாசமாக ஒளிரச் செய்கிறார்கள். வான வில்லையும், மேகங்களையும், கடலலைகளையும், வாண வேடிக்கைகளையும் அரங்கின்மேல் காண்பிப்பதற்கேற்ற சுழலும் விளக்குக்கள் பயனாகின்றன. பழங்காலத்திலிருந்து வழங்கும் கருவியான படவிளக்கினைத் தக்கபடி மாற்றியமைத்து, வெள்ளைத் திரையின்மேல் பலதிறப்பட்ட படங்கள் விழும்படி செய்து, சிக்கலான காட்சி அமைப்புக்களையும் காட்ட முடிகிறது. நிழற் படங்களையும், வானவெளியையும், தொலைவிலுள்ள காட்சிகளையும் காட்ட இம்முறை இணையற்றது. அரங்கிலும் கொட்டகையிலும் உள்ள விளக்குக்களைத் தேவையானவாறு கட்டுப்படுத்த, முன்னர் நெம்பு கோல்களும் வேறு எந்திரங்களும் பயனாயின. ஆனால் இப்போதோ ரேடியோக் குழல்களின் உதவியால் ஒரு பலகையிலுள்ள சில விசைகளைத் திருப்பி, இவ்வேலையை மிக எளிதாகவும் திருத்தமாகவும் செய்ய முடிகிறது. இத்தகைய சாதனங்களால் அரங்கின் ஒளியைக் கட்டுப் படுத்தும் முறை மேலும் வளர்ந்துள்ளது.

**நூல்கள் :** சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரை; வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் நாடகவியல்; S. Cheney, *The Theatre, 3000 years of Drama, Acting & Stagecraft*; E. Reynolds, *Modern English Drama*; R. D. Mankad, *Ancient Indian Theatre*; Yajnik, *Indian Theatre*.

**அரசகேசரி** கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவர்; அரச மரபினர்; யாழ்ப்பாணத்து நல்லூரினர்; ஆழ்வார்திருநகரி அட்டாவதானி இராமாநுச கவிராயரிடம் கல்வி பயின்றவர்; வடநூல் இரகுவமிசத்தைத் தமிழில் செய்யுட்களாக இயற்றியவர்.

**அரச மரம்** அத்திச் சாதியைச் சேர்ந்த மிகப் பெரிதாக வளரும் மரம். பாலுள்ளது. இலை 4–7 அங்குல நீளம், 3–4 அங்குல அகலமிருக்கலாம். அதன் மேற்பரப்பு மயிர் முதலிய வளர்ச்சி ஏதுமின்றி வழுவழுப்பாகவும் பளபளப்பாகவும் இருக்கும். நுனி மிகவும் நீண்டு குறுகிக்கொண்டே போய் முடியும். இலையின் பரப்பும் நுனியும் இவ்வாறிருப்பதால் இதன்மேல் விழும் மழைநீர் மிக விரைவில் வழிந்தோடிவிடும். அரசின் பூங்கொத்தைத்தான் காய் என்றும் கனி என்றும் கூறுகிறோம். இதனுள் நுண்ணிய விதைபோன்றிருப்பவையே உண்மையான அரசங்கனிகளாகும். இது அத்தி மஞ்சரிபோன்றதே. உருண்டையாக அரையங்குல விட்டமுள்ளது. சாதாரணமாக இலைக் கக்கத்திற்கு இரண்டு வீதம் இருக்கும். பழுத்தால் கருமை கலந்த ஊதா நிறமாக இருக்கும். ஆண் பூக்கள் சிலவே; ஒவ்வொரு பூவிலும் 3 இதழ்களும் ஒரு கேசரமும் உண்டு. பெண் பூவில் 5 இதழ்கள் உண்டு. பூச்சி முட்டையிடும் மலட்டுப் பூக்களே மிகுதியாக இருக்கும். பழத்தைப் பறவைகளும் வௌவால், அணில் முதலியவைகளும் தின்னும். மக்களும் உண்பதுண்டு. பறவை முதலியவை எச்சமிடும்போது அரசங்கனிகள் (அக்கீன்கள்), பனை முதலிய மரங்கள்மீதும் கோயில், வீடு முதலியவற்றின் சுவர்மீதும் விழுந்து முளைப்பதுண்டு. சிறிதாக இருக்கும்போது மரம் தொற்றுச் செடிபோல வளரும். அரச மரம் வேலைக்குதவாது. இதன் பட்டை மருந்தாகப் பயனாகும். இம் மரத்தைப் புண்ணிய மரமாக இந்துக்களும் பௌத்தரும் கருதி வழிபடுகிறார்கள்.



அரச மரம்

(சிறு கிளை)

சொட்டு நுனியுள்ள இலைகள்

கணுச் சந்தில் அத்தி மஞ்சரி

இலையடிச் செதில் மூடிய நுனிக்குருத்து

**அரசன் சூளாமணிச் சோழன்** திருச்சிராமலையைத் தரிசித்து நீங்கும்போது ஒரு கோழி பறந்து வந்து தடுக்க, அவ்விடம் பெருமையுடையது என்று அங்குக் கோழி என்னும் பட்டணம் அமைத்தான். அதனால் கோழிவேந்தன் என்னும் பெயர் பெற்றான் (செவ்வந்தி புராணம்).

**அரசாங்க அமைப்பு:** ஒவ்வொரு அரசாங்கத்திலும் நிருவாகப் பகுதி, சட்டமியற்றும் பகுதி, நீதிப் பகுதி ஆகிய மூன்று பகுதிகளும் உண்டு. இந்தப் பகுதிகளும், அவற்றின் அமைப்பும், அதிகாரங்களும், ஒன்றற்கொன்று உள்ள தொடர்பும், இங்கிலாந்தைத் தவிர ஏனைய நாடுகளிலெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்திலும் அரசாங்கத்தின் சில அமிசங்கள் சட்ட வாயிலாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நிருவாகப்பகுதி என்பது நிரந்தர நிருவாக ஆட்சி, பார்லிமென்டுப் பொறுப்பாட்சி என்று இரண்டு வகைப்படும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைமுறையில் உள்ளது நிரந்தர நிருவாக ஆட்சி; இங்கிலாந்தில் பழக்கத்திலிருப்பது பார்லிமென்டுப் பொறுப்பாட்சி. ஜனநாயக முறையைப் பின்பற்றும் நாடுகளில் பெரும்பாலானவை பார்லிமென்டுப் பொறுப்பாட்சி முறையையே மேற்கொண்டுள்ளன. இந்திய அரசியற் சட்டம் இம்முறையையே ஏற்றுக்கொண்டுள்ளது.

இம்மூன்று பகுதிகளைத் தவிர, இராச்சிய அலுவல்களை நிருவகிக்கும் அதிகாரப்பகுதி என்பதொன்று உண்டு. முற்காலங்களில் இவ்வதிகாரப் பகுதியை அரசாங்கத்தின் ஒரு பகுதியாகக் கருதவில்லை. நிரந்தர அதிகாரப்பகுதியினரே அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களைப் பார்ப்பவர்களாகையாலும், அரசாங்க அலுவல்கள் இக்காலத்தில் மிகவும் வளர்ந்துவிட்டமையாலும், அதிகாரப் பகுதி அரசாங்கத்தின் நான்காம் பகுதி என்று இப்போது கருதப்படுகிறது.

அமெரிக்க நிருவாகப் பகுதியின் தலைவரான ஜனாதிபதியே உலகத்தில் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் மிகுந்தவர்; இவர் பெரும்பான்மைக் கட்சித் தலைவர். துரோகக் குற்றச் சாட்டின்றி, வேறுவிதமாக இவரைப் பதவியினின்றும் நீக்க முடியாது. தரைப்படை, கடற்படை விமானப்படைகளுக்கெல்லாம் இவரே தலைமைச் சேனாதிபதி. இவருக்குச் சட்டசபையில் இடமில்லை. இவர் சட்டசபைக்குப் பொறுப்பாளி இல்லை. இங்கிலாந்திலுள்ள அரசாங்கம் அரசியல் அமைப்பிற்கு உட்பட்ட முடியாட்சி; மன்னரே அரசாங்கத்தின் தலைவர். ஆயினும், அவருடைய அதிகாரம் மந்திரிசபையின் மூலமே செலுத்தப்படுகிறது. அவருக்குத் தனியுரிமைகளும் சலுகைகளும் பல உளவாயினும், சம்பிரதாயங்களால் அவரது அதிகாரத்திற்குப் பல கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வால்ட்டர் பேஜாட் (Walter Bagehot) என்னும் ஆங்கில ஆசிரியர் இங்கிலாந்து மன்னருக்கு மூன்று தனி உரிமைகள் உண்டு என்று கூறுகின்றார். அவை முக்கியமான விஷயங்களில் 1. மந்திரிகள் மன்னரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்; 2. மந்திரிகளுடைய நிருவாக அலுவலில் தேவை யிருப்பின், அவர்களுக்கு மன்னர் ஊக்கமளித்து ஈடுபாடு உண்டாக்கவேண்டும்; 3. அவர்கள் தவறான முறையில் நடந்துகொண்டால், அவர்களை எச்சரிக்கவேண்டும் என்பவையே. பார்லிமென்டில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை ஒரு மந்திரிசபை அமைக்கும்படி கேட்பது மன்னருடைய உரிமை. அக்கட்சித் தலைவரே பிரதம மந்திரி. அரசியல் அதிகாரம் அவருக்கே மிகுதியாக உண்டு.

பொதுவாக அரசியல் அமைப்புக்கள் இருவகைப்படும். எளிதில் மாற்ற முடியா அமைப்புக்கள் என்றும், எளிதில் மாற்றக்கூடிய அமைப்புக்கள் என்றும் அவற்றைப் பாகுபாடு செய்யலாம். அன்றியும் எழுதியிட்ட அமைப்புக்கள் என்றும், எழுதா அமைப்புக்கள் என்றும் அவற்றைப் பிரிக்கலாம். அவற்றுள், எளிதில் மாற்ற முடியாதவை அமெரிக்க, இந்திய அரசியலமைப்புக்களைப் போன்றவை. எளிதில் மாற்றக்கூடிய அமைப்பிற்கு உதாரணம் இங்கிலாந்து அரசியல் அமைப்பு. இதுவே முக்கியமான பாகுபாடு. ஆயினும், எழுதியிட்ட அமைப்புக்கள் என்றும், எழுதா அமைப்புக்கள் என்றும் செய்யப்படும் பாகுபாடு அத்துணை ஒழுங்கான பாகுபாடன்று. ஏனெனில், எழுதா அமைப்பாகிய இங்கிலாந்து அரசியல் அமைப்பிலும் இயற்றிய சட்டங்கள் சில உண்டு. எழுதியிட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் சில சம்பிரதாயங்கள் உண்டு. ஆகையால், இப்பாகுபாடு பயன்படுவதன்று. மேலும் ஒற்றையாட்சி அரசாங்கங்கள் என்றும், கூட்டாட்சி அரசாங்கங்கள் என்றும் பாகுபாடு உண்டு. இங்கிலாந்து, ஸ்வீடன், கிரீசு முதலிய முடியாட்சி நாடுகளில் நடைபெறுவது ஒற்றையாட்சி. அமெரிக்கா, கானடா முதலிய நாடுகளின் அரசியல் அமைப்புக்கள் கூட்டாட்சி அமைப்புக்கள். இந்திய அரசியல் சட்டமும் சோவியத் அரசியல் சட்டமும் கூட்டாட்சி முறையைப் பின்பற்றியவை என்று கூறப்படுகின்றன.

பொதுவாக ஜனநாயக ஆட்சிமுறையில் நாம் காணக்கூடிய அமிசங்கள் சில உண்டு. அவை: குடியொப்பம், குடிகளே சட்டமியற்றல், பிரதிநிதித்துவம் நீக்கல் முதலியனவாம். இவற்றில் குடியொப்பம் முதலிய அமிசங்கள் சுவிட்சர்லாந்து அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. அரசாங்க அதிகாரப் பிரிவினை எதேச்சாதிகாரத்திற்கு ஒரு முக்கியமான தடை என்றும் கருதப்படுகிறது. இவ்வதிகாரப் பிரிவினை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முழுவதும் நடைமுறையில் இருந்து வருகிறது. இங்கிலாந்திலும் இம்முறை நடைபெறுவதாக மான்டெஸ்க்யூ கருதினாராயினும், பார்லிமென்டு அங்கத்தினர்களிற் சிலரே மந்திரிசபையை அமைத்து, அரசாங்க நிருவாகத்தையும் மேற்கொள்ளுவதால் அதிகாரப் பிரிவினை இங்கிலாந்து முழுவதிலும் பழக்கத்திலிருப்பதாகக் கொள்ள முடியாது.

இந்திய அரசியல் சட்டம் போன்றவற்றில் ஜனாதிபதிக்கு ஏராளமான அதிகாரங்கள் இருப்பதாகக் காணப்படினும், உண்மையில் அவருடைய அதிகாரத்தையெல்லாம் செலுத்துபவர் பெரும்பான்மைக் கட்சித் தலைவரான பிரதம மந்திரியே. இந்தியாவிலும், அ. ஐ. நாடுகளிலும் உதவி ஜனாதிபதி மேல்சபை அக்கிராசனராக இருப்பதோடு, ஜனாதிபதி இல்லாத காலத்தில் அவருக்குப் பதிலாகச் சில அலுவல்களைக் கவனிப்பார். இந்திய அரசியல் சட்டம் அமெரிக்க முறையைப் பின்பற்றி எழுதிய சட்டமாயினும், பிரிட்டிஷ் பார்லிமென்டு ஆட்சி முறையையும் மேற்கொண்டுள்ளது. ஜனநாயக நாடுகளிலேயே அரசியல் அமைப்புச் சட்டங்கள் மூலம் ஆட்சி நடைபெறுவதாகக் கூறுவது மரபு; ஏனெனில், இச்சட்டங்களில் எதேச்சாதிகாரத்திற்கு வரம்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது; தனியாள் ஆட்சிக்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆகையால், பூரண ஆதிக்க ஆட்சி நாடுகளில் நடைபெறும் ஆட்சி அரசியல் அமைப்பாட்சியாகக் கருதப்படுவதில்லை.

குடிகளுக்கு அரசியலில் ஒரு செல்வாக்கு இருப்பதாக அவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குரிமை, அவர்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஆட்சி,

அரசாங்கத்தில் மூன்று பிரிவுகளாகிய நீதி, நிருவாகம், சட்டசபை ஆகிய மூன்றும் ஒன்றற்கு ஒன்று கொண்டுள்ள தொடர்பு என்பவை ஜனநாயக அரசாங்க அமைப்புக்களில் காணப்படும் முக்கியமான அமிசங்கள். தவிர, சுதந்திரத்தோடு இயங்கும் அரசியற் கட்சிகள் ஜனநாயக அமைப்பில் உள்ள ஒரு முக்கிய அமிசம். இது பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசியல் அமைப்புக்களில் காணப்படுவது. பல கட்சிகளும் சுதந்திரத்தோடு இயங்காத நாடுகளில் பூரண ஜனநாயகம் இருப்பதாகக் கருத முடியாது.

எழுதாச் சட்டம் என்று சொல்லக்கூடிய பொதுச் சட்டம் (Common Law) இங்கிலாந்தில் நடைமுறையிலிருக்கிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இம்முறையைப் பின்பற்றவேண்டிய பல விஷயங்களைப்பற்றி வெளிப்படையாக அரசியல் அமைப்பில் கூறவில்லை. சில அமிசங்கள் நிலைமைக்குத் தகுந்தபடி சம்பிரதாயங்கள் மூலமாக வளரவேண்டும் என்பது இந்திய அரசியல் சட்டத்தை அமைத்தவர்களுடைய கருத்து. ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் கூட நிருவாகச் சட்டம் என்று ஒருவகைச் சட்டம் ஏற்பட்டுள்ளது. இது நிருவாக சம்பந்தமான விஷயங்களில் ஏற்படக்கூடிய சில பிரச்சினைகளை ஆலோசித்து முடிவு செய்ய ஏற்பட்டுள்ள மன்றங்கள் வாயிலாக நடத்தப்படும்.

ஜனநாயக அரசியல் அமைப்பில் மந்திரிசபை மிகவும் முக்கியமான உறுப்பு. இம் மந்திரிசபை பெரும்பாலும் கீழ்ச்சபையின் பெரும்பான்மைக் கட்சியோர் கருத்துப் படியே அமையும். இல்லாவிடில் மந்திரிசபை அரசாங்கம் நடத்த முடியாது. மந்திரிசபைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. ஒவ்வொரு மந்திரியின் செயலுக்கும் மந்திரிசபை முழுவதும் பொறுப்பேற்றுக் கொள்ளும். கூட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாத மந்திரிகள் ராஜினாமா செய்துவிட வேண்டும். மந்திரிசபையால் கொண்டுவரப்படும் மசோதாக்களைப் பார்லிமென்டு பெரும்பாலும் நிராகரிப்பதில்லை. மந்திரிசபை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதால் அவர்களுக்குப் பார்லிமென்டின் நம்பிக்கை யிருக்கவேண்டும். ஆயினும் மந்திரிசபையைப் பார்லிமென்டிற்கு அடங்கிய ஓர் உறுப்பாகக் கருத முடியாது.

ஜனநாயக ஆட்சி வெற்றிகரமாக நடைபெறுவதற்குப் பொறுப்புள்ள எதிர்க்கட்சி இருப்பது நல்லது. இங்கிலாந்தில் இக்கொள்கை முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அன்றியும் அங்கு எதிர்க்கட்சித் தலைவருக்குச் சம்பளமும் உண்டு. பிரான்சிலும் பார்லிமென்டு ஆட்சியே நடைபெறுகிறதாயினும், இங்கிலாந்திலுள்ள சில சம்பிரதாயங்கள் அங்கில்லை. பிரான்சின் ஜனாதிபதிகள் ஏழாண்டு காலம் பதவி வகிப்பர். அவரை இரு சபை அங்கத்தினர்களும் ஒருங்கு சேர்ந்து தேர்ந்தெடுப்பர். பல கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்தே பிரான்சில் மந்திரி சபை அமைக்க முடியும். ஏனெனில், இங்கிலாந்திலிருப்பது போல இருபெருங் கட்சிகள் அங்கு இல்லை. அங்கு ஏறத்தாழச் சம பலமுள்ள பல கட்சிகள் இருக்கின்றன. ஆகவே, கூட்டு மந்திரி சபைகளே அமைகின்றன. சில கட்சிகள் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் மந்திரி சபை கவிழ்ந்துவிடும். ஆயினும், அதை நல்ல ஜனநாயக முறை என்று கருதலாம். அடிக்கடி அரசாங்கம் மாறுவதால் பிரதம மந்திரிக்கு மந்திரிசபை மீதும், மந்திரிசபைக்குப் பார்லிமென்டுமீதும் மிகுந்த ஆதிக்கம் ஏற்பட்டுவிடாது. பார்லிமென்டே வலு மிகுந்த அரசியல் உறுப்பாக இருக்கும். நிலையான அரசாங்கம் நீடித்து இருக்க இயலாது என்று சிலர் காரணங் கண்டு, பிரெஞ்சு முறையை இழித்து உரைப்பர். உறுதியான ஒரு திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்ற முடியாது என்பதும் அதன் குறைபாடுகளில் ஒன்று என்பர். ஆயினும், மந்திரிசபை அடிக்கடி மாறுவதால், வெளிநாட்டு உள்நாட்டுக் கொள்கைகள் கூடவே மாறுகின்றன என்று கருத முடியாது. பிரெஞ்சு மக்கள் இம்மாறுதல்களால் பாதிக்கப்படுவதாகக் கருத இடமில்லை. 1946-ல் இயற்றியமைக்கப்பட்ட புதுப் பிரெஞ்சு அரசியல் சட்டத்தில் நிலையான மந்திரிசபை அமைப்பதற்கும், சட்டசபை பொறுப்போடு தன் அலுவல்களைச் செய்ய இயலுமாறும் சில சிறப்பான ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிரெஞ்சு அரசியல் சட்டப்படி நிருவாகப் பகுதியால் கொண்டுவரப்படும் மசோதாக்கள் சட்டசபையால் நிராகரிக்கப்படினும், மந்திரிசபை ராஜினாமா செய்யவேண்டியதில்லை. மந்திரிசபை அங்கத்தினர்களிடையே கூட்டுப் பொறுப்பு இல்லை. மந்திரிசபை அங்கத்தினர்களில் ஒருவர் மற்றொருவருடைய மசோதாக்களை எதிர்க்கலாம்.

சில தீவிரமான மசோதாக்கள் சட்டமாகாமல் இருக்கச் சில காலம் ஒத்திப் போடுவதே மேல்சபைகளின் பொதுவான அலுவல். கூட்டாட்சி நாடுகளில் தனிப்பட்ட நிலையங்களுக்கும் ஆட்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு இவை வேண்டியிருக்கின்றன. கீழ்ச்சபைக்கும் மேல்சபைக்கும் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தீர்க்க, ஏறத்தாழ எல்லா அரசியல் சட்டங்களிலும் முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் மூன்றாவது பகுதியான நீதி இலாகாவின் கடமைகள், சட்டசபை இயற்றும் சட்டங்களுக்கு விளக்கம் கூறுவதும், தங்கள் முன்வரும் வழக்குக்களுக்குச் சட்டப்படித் தீர்ப்புச் செய்வதுமேயாம். கூட்டாட்சி நாடுகளில் உள்ள உச்ச நீதிமன்றங்களுக்குக் கூட்டாட்சிக்குட்பட்ட உறுப்புராச்சியங்களுக்கிடையே ஏற்படும் விவகாரங்களைத் தீர்த்துவைக்கும் பொறுப்பும் உண்டு. இவ்வுயர்ந்த பொறுப்புக்களையுடைய நீதிப்பகுதி பூரண சுதந்திரமுடையதாக இருக்கவேண்டும். ஆகையால், நீதிபதிகள் நிருவாகப்பகுதியால் நியமிக்கப்படுபவர்களாயினும், நியமனம் ஆன பிறகு அவர்களை எளிதில் நீக்க முடியாதவாறு பல விதிகள் ஏற்பட்டுள்ளன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி அடிப்படை உரிமைகளை நிருவாகப்பகுதி, சட்டசபை ஆகியவற்றின் ஆக்கிரமிப்பினின்றும் பாதுகாக்கும் பொறுப்பு நீதி இலாகாவைச் சேர்ந்தது. அ. ஐ. நாடுகளிலும் இந்தியாவிலும் சட்டசபைகள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாகாமல் இருக்கின்றனவா என்று தீர்மானிக்கும் பொறுப்பும் நீதிப் பகுதிக்கு உண்டு.

அரசாங்கத்தின் அமைப்பும் அதன் பகுதிகளும் அவற்றின் கடமைகளும் பொறுப்புகளும் உரிமைகளும் ஆட்சி முறையைப் பொறுத்து நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. வீ. வெ.

**அரசாங்கம்:** ஒரு சமூகத்தில் ஒருவனோ அல்லது ஒரு ஸ்தாபனமோ கட்டளையிட, அக்கட்டளைக்கு அடங்கி அச்சமூகத்தைச் சார்ந்த மற்றவர்கள் நடந்து வந்தால், அந்த மனிதனை அல்லது ஸ்தாபனத்தை அரசாங்கம் என்று சொல்வார்கள். அரசாங்கம் இல்லாத சமூகம் கிடையாது; எந்தச் சமூகமும் அரசாங்கமில்லாமல் நிலைக்க முடியாது.

ஆதியிலே, வரலாற்றுக் காலத்துக்கு முன்னே, மக்கள் தனித்தும் தனிக் குடும்பங்களாகவும், சிற்சில குடும்பங்கள் ஒருங்கு சேர்ந்தும் வாழ்ந்துவந்தபோது

அரசாங்கம் என்பது இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாகரிக வளர்ச்சி பெற்று வரும்போது அவர்கள் தனித்து வாழ்வதை விட்டுக் கூட்டங்களாக வாழலாயினர். அப்போது கூட்டத்தைச் சரிவர நடத்தவும் பாதுகாக்கவும் ஒரு தலைவன் தேவையாயினன். மக்களுள் சிலர் பலசாலிகளாகவும், சிலர் அறிவாளிகளாகவும், சிலர் திறமை மிக்கவராகவும், பலர் பலமோ அறிவோ திறமையோ குறைந்தவர்களாகவும் இருப்பது இயற்கை. ஆகவே பலமும் அறிவும் திறமையும் மிகுந்தவர்கள் சமூகத்தின் தலைவர்களாக, காவலராக, அரசராக ஆயினர்; மற்றவர்கள் குடிகள் ஆனார்கள். நாளடைவில் தலைமை வகிப்பதும் தலைவர்க்குப் பணிந்து நடப்பதும் பரம்பரை முறையாக வரலாயிற்று.

தொடக்கத்தில் பலசாலிகளாக இருந்த வீரர்களே அரசரானார்கள். அவர்கள் சமூகத்தில் உள்ள மக்களிடையே சச்சரவு ஏற்படாமலும் அவர்களைப் பிற சமூகத்தார் தாக்காமலும் பாதுகாத்து வந்தனர். அவர்கள் இதற்கு வேண்டிய திறமையுடையவர்களாக இருந்தபடியால் இத்திறமை இறைவனால் அருளப்பட்டது என்றும், அதனால் அரசர்கள் தெய்வாமிசமுடையவர்கள் என்றும் கருதினர்கள்.

ஆயினும் பல நாடுகளில் அரசர்கள் மக்கள் விருப்பத்தை அறிந்து, அதற்கேற்றவாறு நடந்து வந்துள்ளார்கள். இம்முறை நாளடைவில் வளர்ந்து வந்து, இப்பொழுதுள்ள ஜனநாயக முறையாகப் பரிணமித்திருக்கின்றது.

அரசாங்கங்களை அவற்றின் குறிக்கோளை வைத்துப் பலவகையாகப் பிரிப்பதுண்டு. அவற்றுள், காவல் அரசாங்கம் (Police Government), மக்கள் நலன் அரசாங்கம் (Welfare State) என்ற பாகுபாடுகளே இன்று மிகவும் முக்கியமானவை. அண்மைவரை அரசாங்கங்கள் பெரும்பாலும் காவல் அரசாங்கங்களாகவே இருந்துவந்திருக்கின்றன. அதாவது குடிகளுக்குச் சமூகத்திலுள்ள மற்றக் குடிகளாலும் அன்னியராலும் கேடு வராமலும், உள்நாட்டுக் குழப்பம் தோன்றாமலும் பாதுகாப்பதற்கே அரசாங்கம் உள்ளது என்று எண்ணி வந்தனர். ஆனால் இப்போது அரசாங்கம் அந்த இரண்டு வேலைகளுடன், மக்கள் நலனுக்கு வேண்டிய கல்வி, தொழில் முதலிய பல காரியங்களையும் கவனிக்க வேண்டும் என்ற எண்ணமே சிறந்து தலைதூக்கி நிற்கின்றது.

அரசாங்கங்களை அவற்றை நடத்துபவரது எண்ணிக்கையை யொட்டிப் பிரிப்பதுண்டு. ஒரு மனிதன் நடத்தும் ஆட்சியை முடியரசு என்று கூறுவர். இப்போது உலகில் குறைவற்ற தனி முடியரசைக் காண இயலாது. முடியரசு நாடுகளில் எல்லாம் அரசன் பலவிதக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கியே நடந்து வருகிறான். அத்தகைய முடியரசை வரம்புடை முடியரசு (Limited Monarchy) என்று கூறுவர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு பிரிட்டிஷ் அரசாங்கம். பிரபுக்கள் சிலர் ஆட்சி நடத்துவார்களானால், அதைப் பிரபுக்கள் ஆட்சி என்று கூறுவர். இத்தகைய அரசாங்கம் எங்கும் தனித்துக் காணப்படுவதில்லை. இதுபோன்ற ஒரு சிலர் ஆட்சி சுயநலம் கோரி நிற்குமானால், அது ஆலிகார்க்கி (Oligarchy) எனப்படும். குடிகளுக்குப் பொறுப்புள்ளதான அரசாங்கத்தை ஜனநாயக அரசாங்கம் என்று கூறுவர். மக்கள் அனைவருமே கூடிச் சட்டங்களை இயற்றி அமல் நடத்தினால் அது தூய ஜனநாயகம்; ஆனால் அதை இப்போது எங்கும் காண முடியாது. அதற்குப் பதிலாக மக்கள் வோட்டுப் போட்டுப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பர். அவர்கள் மக்களின் சார்பாக அரசாங்கத்தை நடத்துவர். இது பார்லிமென்டு முறை ஜனநாயகம் எனப்படும்.

அரசாங்கம் நடப்பதற்கு மூன்று பிரிவுகள் தேவை. அவையாவன: சட்டசபை, நிருவாகம், நீதிமன்றம். அமெரிக்காவில் மக்களே சட்டசபையையும் நிருவாகத் தலைவரான ஜனாதிபதியையும் நேரிடையாகத் தெரிந்தெடுக்கிறார்கள். ஆனால் பிரிட்டனில் மக்கள் சட்டசபையைத் தெரிந்தெடுக்கின்றனர். சட்டசபை மந்திரிசபையை நியமிக்கிறது. அமெரிக்க முறையை ஜனாதிபதி முறை என்றும், பிரிட்டிஷ் முறையை மந்திரிசபை முறை என்றும் கூறுவர். இந்திய முறை பெரும்பாலும் பிரிட்டிஷ் முறையைத் தழுவியதாகும். அமெரிக்க முறையில் காரியங்கள் மெதுவாக நடைபெறும்; திறமையும் குறைவாயிருக்கும். ஆனால், அரசாங்கக் கொடுங்கோன்மை அபாயம் குறையும் என்று கூறுவர்.

அரசாங்கங்களை அவை அதிகாரம் செலுத்தும் முறையையொட்டிக் குவியர்ச்சிமுறை (Centralised) என்றும், கூட்டாட்சிமுறை (Federal) என்றும் பிரிக்கலாம். முந்திய முறையில் அதிகாரம் முழுவதும் மத்திய அரசாங்கத்திடமே குவிந்திருக்கும். பிந்திய முறையில் மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் என்னும் இவற்றின் அதிகாரங்களை அரசியலமைப்பு வரையறை செய்யும். முந்திய முறை அரசாங்கம் விரைவாகவும் திறமையாகவும் செயலாற்ற உதவும். ஆனால் பிந்திய முறை அரசாங்கம் மக்கள் தம் கருத்தைக் கூற இடமளிக்கும். இரண்டு முறைகளிலும் நன்மையுண்டு. இந்திய அரசாங்கம் ஓரளவுக்குக் கூட்டாட்சி முறையைத் தழுவியதாகும்.

இவை தவிர, கம்யூனிஸ்ட் அரசாங்கம், பாசிச அரசாங்கம் என இரண்டு வகைகள் உள்ளன. இவற்றுள் பாசிச முறை இரண்டாவது உலக யுத்த சமயத்தில் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் பிரபலமாக நடந்து வந்தது. இப்போது அது அங்கே மறைந்துபோய் விட்டது. கம்யூனிஸ்ட் முறை சோவியத் நாட்டிலும் சீனாவிலும் சோவியத்துக்குட்பட்ட சில ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெறுகிறது.

பாசிச முறையில் ஜனநாயகம் கிடையாது. அதிகாரம் முழுவதும் ஒரு தலைவன் கையில் தரப்படும். அவனுடைய அதிகாரத்திற்குத் தடை எதுவும் கிடையாது. அவன் விரும்பிய வண்ணம் சட்டம் இயற்றுவான். தனிச் சொத்துரிமை உண்டு. ஆனால் வாணிபமும் கைத்தொழிலும் அரசாங்கத்தின் ஆணைவழியே நடைபெற வேண்டும்.

கம்யூனிஸ்ட் முறையில் பொருள் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் கையிலிருக்கும். அதற்காக முதலாளித்துவத்தை ஒழிப்பது அவசியம். இதற்கு முதலில் தொழிலாளர் சர்வாதிகாரம் தோன்ற வேண்டும். முதலாளித்துவம் முழுவதும் ஒழிந்து, வருக்கமற்ற சமூகம் அமைந்த பின்னர், நாளடைவில் அரசாங்கமே மறைந்துவிடும் என்று கூறுவர். இப்போது பல ஜனநாயக அரசாங்கங்கள் அநேக பொருளாதாரத் துறைகளில் பொது நலனை வேண்டித் தாமே புகுந்து செயலாற்றத் துவங்கியிருக்கின்றன.

**அரசாங்கக் கட்டடச் சிற்பம்:** பார்க்க: கட்டடச் சிற்பம்.

**அரசிக்கெரே** மைசூர் இராச்சியத்தில் ஹாசன் மாவட்டத்திலுள்ள நகரம். இந்தப் பெயருள்ள தாலுகாவின் தலைநகர். இது ஒரு முக்கியமான ரெயில்வே நிலையம். இங்குப் பயிராகும் கொப்பரை வேறு ஊர்களுக்கு அனுப்பப்பெறுகிறது. தாலுகாவின் பரப்பு: 487·4

ச. மைல். தாலூகாவின் மக்: 1,07,841 (1931). நகரத்தின் மக்: 6,611 (1931).

**அரசி பேரறிக்கை:** 1857-ல் தோன்றிய சிப்பாய்ப் போரை அடக்கியபின், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசாங்கத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து தாமே மேற்கொள்ள முடிவு செய்தனர். கம்பெனியின் டைரக்டர்கள் அத்திட்டத்தை எதிர்த்து வாதித்தபோதிலும், இறுதியாக அரசாங்கத்தாரின் நோக்கந்தான் நிறைவேறியது. புதிய சட்டம் 1858 ஆகஸ்டு மாதம் பார்லிமென்டு சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நவம்பர் 1ஆம் தேதி அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. அவ்வேளையில் விக்டோரியா அரசியின் பேரறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. வைசிராய் கானிங் பிரபு அலகாபாத்தில் பெருங் கூட்டமொன்றைக் கூட்டுவித்து இப்பேரறிக்கையைப் பிரசுரித்தார்.

அவ்வறிக்கையில் இந்திய மக்களுக்குக் கீழ்வரும் உறுதிமொழிகள் கூறப்பட்டன: நீதிவழுவாது அரசாங்கத்தை ஒழுங்குபட நடத்துவது, மத விஷயத்தில் நடுநிலைமையை மேற்கொள்ளுவது, மேலும் போர் புரியவோ, இராச்சியத்தின் பரப்பைப் பெருக்கவோ நோக்கமின்றி, அரசாங்கத்தார் நாட்டு அரசர்களின் நிலையைச் சீர்குலைக்காமல் ஆதரிப்பது, அவர்களுக்குக் கம்பெனியார் அளித்திருக்கும் வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் காப்பாற்றுவது, இந்தியக் குடிகளுக்கு மதம், வகுப்பு, இனம் இவ்வித வேற்றுமைகளைக் கருதாமல், அவர்களுடைய கல்வி, திறமை, உண்மையான நடத்தை முதலியவற்றை மட்டிலும் சீர்தூக்கி நாட்டு அலுவல்களில் நியமிப்பது, குடிகளின் நன்மையை நாடி இந்திய நாட்டின் கைத்தொழில்களைப் பெருக்குவது, பொது நன்மைக்கான பல நற்காரியங்களில் ஈடுபடுவது ஆகியவைகளாம். கே. க.

**அரசியல்:** மனிதர்கள் எல்லோரும் சமூக வாழ்க்கையினர். பலர் ஒன்றாகக் கூடிவாழும் பண்பு அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதன் நல்வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்தவே இராச்சியம் தோன்றி வளர்ந்து வந்துள்ளது என்று கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். இவ்வாறு மனிதனுடைய செயல்களையெல்லாம் சமூக முறையில் ஆராயும் இயல்கள் பலவற்றில் அரசியலும் ஒன்று. அரசியலானது இராச்சியத்தின் தன்மை, அரசாங்கத்தின் இயல்பு முதலியவற்றின் உண்மையைக் கண்டு கூறும். ஒரு சமூகம் நிலைபெற்றிருப்பது, அதன் இராச்சியத்தையும் அரசாங்கத்தையும் பொறுத்திருப்பதால், அரிஸ்டாட்டில் அரசியலைத் தலைசிறந்த அறிவுப் பகுதி (Master Science) என்றார். இவ்வியல் ஒரு சமூகத்துள் வாழும் மனிதனுடைய செயல்களின் வரம்பையும் தன்மையையும் அளந்து காட்டும். மனிதன் செயல்களில் பிறரால் கட்டுப்படுத்த முடியாதவை அவன் எண்ணங்களும் கற்பனைகளுமே; ஆதலால் அவற்றை நீக்கி, மனித சமூகத்தின் ஏனைய செயல்களை யெல்லாம் அரசியல் ஆராய்வதோடு, அரசாங்கத்தின் பலவேறு அமைப்புக்களையும் ஒப்பிட்டு ஆராய்கின்றது. அன்றியும் மனிதர்கள் அமைக்கும் எவ்வகைப்பட்ட குழுக்களையும் பற்றி அது ஆராய்கின்றது.

இவ்வரசியலைச் சமூகக்கலை என்று கூறுவதுண்டு. மக்கள் கூடிவாழும் சமூகத்தில் அவர்கள் மேற்கொள்ளும் பொதுச் செயல்களைப்பற்றி யாராயும் கலைகளைச் சமூகவியல் (Sociology) என்று பொதுப்பட ஒரு தொகைப் பெயரால் இக்காலத்தில் குறிக்கின்றனர். இச்சமூகவியல் பொருளாதாரம், அறநூல், தருக்கநூல், மானிடவியல், சட்டம், வரலாறு முதலிய பல தனி இயல்களின் தொகையாகும். இவ்வகை இயல்கள் பௌதிகம், ரசாயனம், கணிதம் முதலிய இயல்களின் தன்மையினின்றும் வேறுபட்டவை. பௌதிகம் முதலிய இயல்கள் உயிரில்லாப் பொருள்களைப்பற்றி யாராய்கின்றன; அவ்வாராய்ச்சியை ஆய்வுக்களங்களில் நாம் திட்டமிட்ட கட்டுப்பாடுகளுடன் நடத்தலாம். சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் மனிதனது செயலைப்பற்றி ஆராய்பவர்களாதலால் ஓர் ஆய்வுக் களத்தில் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்த முடியாது. அன்றியும் எப்பொருளைப்பற்றி அவர்கள் ஆராய்கிறார்களோ, அப்பொருள் எக்காலத்திலும் ஒரு தன்மையாக மாறாமல் நிற்பதன்று.

சமூக இயலைச் சார்ந்த இயல்களுள் அரசியல் பொருளாதாரத்தையே மிகவும் ஒத்தும் சார்ந்தும் இருக்கிறது. அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் தற்காலத்தில் நெருங்கின தொடர்பும் ஏற்பட்டுள்ளது என்பது வெளிப்படை. இக்காலத்தில் தேசியத்திட்டமிடல் (National planning) எங்கும் காணும் பொதுப் பழக்கமாயிருப்பதால் பொருளாதாரத்துறையும், அரசியல் துறையும் ஒன்றற்கு ஒன்று நெருங்கிய உறவு கொண்டுள்ளன. பொருளாதாரம் தன் முடிபுகளை அறநூல் வாயிலாகவே நிறுவுகின்றது. இல்லையேல், அம்முடிபுகள் பயனற்றவையாயும் குற்றமுடையவையாயும் முடியும். அறத்தின் காரணமாக உண்டாகும் பொருளையே பொருள் என்று கூறுவது தமிழிலும் மரபு என்பது இங்குக் கருதத்தக்கது. அறநூல் தனியொருவரின் ஒழுக்கங்களைப்பற்றிக் கூறுகின்றது. அரசியல் சமூகத்தின் ஒழுகலாற்றை ஆராய்கின்றது. ஆதலால் அரசியலுக்கும் அறநூலுக்கும் உள்ள தொடர்பும் விளங்கும். எவ்வகையாராய்ச்சிக்கும் தருக்க நூற் பயிற்சியின்றியமையாததாதலால் அரசியல் ஆராய்ச்சியும் தருக்கநூல் முறைகளைப் பின்பற்றியே அமையும் என்பதும் விளங்கும்.

அரசியல் துறையில் ஆராய்ச்சிக்குக் கிடைக்கக் கூடிய விவரங்கள் எல்லாம் வரலாற்றிலிருந்தே பெறப்படுபவை. வரலாற்றில் நாம் கண்கூடாகக் கண்ட விவரங்களையும், பிறர்கண்டு தொகுத்துவைத்த விவரங்களையும் ஆதாரமாகக் கொண்டு செய்யப்படும் ஆராய்ச்சியே அரசியல் துறையில் நடைபெறும் ஆராய்ச்சியாம். ஆகையால் அரசியல் ஆராய்ச்சிக்கு நமக்குக் கிடைக்கும் பெரும்பாலான விவரங்கள் பண்டைய வரலாற்றில் பொதிந்து கிடப்பவை என்பது பெறப்படும்; ஆயினும் சிலர் கூறுவதுபோல வரலாறு எல்லாம் பண்டைய அரசியல் என்றோ, அரசியல் எல்லாம் தற்கால வரலாறு என்றோ நிச்சயமாகக் கூற இயலாது. ஆக்டன் பிரபு கூறியுள்ளபடி, வரலாறு என்னும் ஆற்றுப் பெருக்கு, ஆற்றுப்படுகையில் விட்டுச் செல்லும் பொன் துகள்களே அரசியல் ஆராய்ச்சி என்னும் கலையாம். வரலாற்றின் விவரங்களை ஒப்புநோக்கி ஆராய்ந்து நாம் காணும் உண்மைகளே அரசியல் ஆராய்ச்சிக்கு உதவுவனவாம்.

மனிதனுடைய வாழ்க்கை முறைகளையும், அவன் சமுதாய வாழ்வில் செய்துவந்துள்ள ஆய்வுகளின் முறைகளையும், அவனது நாகரிக வளர்ச்சியையும் தொகுத்து ஆராயும் இயலுக்கு மானிடவியல் (Anthropology) என்னும் பெயர் வழங்குகின்றது. மானிடவியல், மனிதன் சமூகத்தின் உறுப்பாயிருந்து ஆற்றும் செயல்களையெல்லாம் ஆராய்ந்து காணும் உண்மைகளில் பல அரசியல் வரம்புக்குட்பட்டவை யாதலால் அரசியலுக்கும்

மானிடவியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பும் விளங்கும்.

பிளேட்டோ என்னும் கிரேக்க அறிஞர் அரசியலைத் தத்துவசாஸ்திர அடிப்படையில் அமைக்க முயன்றுள்ளார். ஆதலால் அவருடைய அரசியற் கருத்துக்கள் பெரும்பாலும் சிந்தனை முறையில் அமைந்துள்ளவை. பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டில் உயிரியல் (Biology) அடிப்படையில் அரசியலை விளக்குகின்றார். மனிதன் உயிர் வாழ்வதற்கே அரசியல் வாழ்க்கை தேவையாயிருக்கிறது என்னும் கொள்கையைப் பின்பற்றி அரிஸ்டாட்டில் கூறுவதால், அவர் முறையை உயிரியல் முறை என்று கூறலாம். ஐரோப்பாவில் இடைக்காலத்திலும் ஏனைய நாடுகளில் நெடுங்காலமாகவும் அரசியல் நிலையங்களுக்கு இறையியலையே (Theology) ஆதாரமாக அறிஞர்கள் கூறிவந்துள்ளனர். கிறிஸ்தவ அறிஞர்களுடைய கொள்கைகள் இம்முறையையே பின்பற்றி வந்துள்ளன. இவ்வுலகப் பொருள்களுக்கும் அவ்வுலக அருளுக்கும் திருவள்ளுவர் தொடர்பு கூறியிருப்பதுபோல, மக்களுக்கும் இறைவனுக்கும் தொடர்பு கூறியவர் செயின்ட் அகஸ்டின் என்னும் கிறிஸ்தவ அறிஞர். 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வந்த சில அறிஞர்கள் இராச்சியத்தின் தோற்றம் சமூக ஒப்பந்தத்தின்மூலம் ஏற்படுவது என்று கூறத்தொடங்கியபோது, அரசியலுக்குச் சட்ட முறையில் ஓர் ஆதாரம் கற்பிக்கப்பட்டது. அரசியல் உரிமைகள், கடமைகள் முதலியவற்றைப் பற்றிய பிற்கால ஆராய்ச்சி முழுவதும் சட்டத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்புபற்றி யெழுந்ததாகும்.

சென்ற சில நூற்றாண்டுகளாக விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிபுகள் அரசியல் ஆராய்ச்சியையும் பாதித்திருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்த டார்வின் என்னும் உயிரியல் அறிஞர் இயற்கைத் தத்துவத்தைப் பரிணாம முறையில் விளக்க முயன்றார். இப்பரிணாமக் கொள்கை விஞ்ஞான ஆராய்ச்சியில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்ததால், அது எல்லாக் கலைகளுக்கும் பரவத் தொடங்கிற்று. அரசியல் ஆராய்ச்சியாளரும் மானிடவியல் முடிபுகளை மேற்கொண்டு, பரிணாம முறையில் மனித சமூகத்தின் அரசியல் வளர்ச்சியை விளக்க முற்பட்டனர். அவ்வாறே தற்காலத்தில் உள்ள ஐரோப்பியப் பேரறிஞரான ஐன்ஸ்டைன் என்பவரது சார்புக்கொள்கை (Relativity) எல்லாக் கலைகளையும் பாதித்துள்ளது. இதற்கு அரசியல் ஒரு விலக்கன்று. சார்புமுறையில் அரசியல் கோட்பாடுகளை நிருணயிப்பதும், பிரச்சினைகளை விளக்க முயலுவதும் தற்காலத்தில் அரசியல் ஆராய்ச்சியின் முயற்சியாயிருப்பது கவனிக்கத்தக்கது. மனிதன் செயல்களும் எண்ணங்களும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதை எல்லோரும் அறிவர். மனித உள்ளத்தின் பல தளங்களையும் ஆராயும் உளவியல் (Psychology) இன்று பிராய்டு விளக்கிய புதுக்கருத்துக்களைப் பின்பற்றி மிக முன்னேறியிருப்பதால், குடும்பம் இராச்சியம் வரையுள்ள பல குழுக்களில் செயலாற்றும் மனிதன் அடிப்படை எண்ணங்களையும் கற்பனைகளையும், அவனறியாமலே அவனை இயக்கும் மனோ சக்திகளையும் நாம் அறிந்து, சோதனை வாயிலாகத் தெளிவாக்க முடிகிறது. இந்நிலையில் அடிப்படையான மனித குணம், சமூகப்பண்பாடு ஆகிய இவற்றை உணரவேண்டிய அரசியலாராய்ச்சியாளருக்குத் தற்கால உளவியல் மற்றெல்லா வியல்களுக்கும் மேலான வழிகாட்டியாய் உதவுகிறது. அவ்வக் காலங்களில் மனிதனது கருத்துக்களைப் பெரும்பான்மை பாதித்துவரும் கோட்பாடுகள் அவ்வக்கால அரசியற் கொள்கைகளையும் பாதித்து வந்திருப்பது மேற்கூறியவற்றால் புலனாகும். ரா. பா.

**அரசியல்-கட்டுரைகள் :** பார்க்க: அடிப்படை உரிமைகள், அதிகாரப் பிரிவினை, அமைப்பிற்குட்பட்ட அரசாங்கம், அரசாங்க அமைப்பு, அரசாங்கம், அரசியல் அமைப்புத் திட்டங்கள், அரசியற் கருத்துக்கள், ஆதிபத்தியக் கோட்பாடு, ஆட்சிவேண்டாக் கொள்கை, இராச்சியத்தின் தன்மை, ஏகாதிபத்தியம், ஒற்றாடல், கம்யூனிசம், குடியரசு, குடியுரிமை, கூட்டாட்சி, சர்வாதிகாரத்துவம், சிண்டிகலிசம், சோவியத் அமைப்பு, சோஷலிசம், தல ஆட்சி, பாசிசம், பார்லிமெண்டு நடைமுறை, மார்க்சிசம், வரவுசெலவுத் திட்டம், வாக்குரிமை, விகிதப் பிரதிநிதித்துவம், ஜனநாயகம் முதலியன.

**அரசியலமைப்புத் திட்டங்கள் :** அரிஸ்டாட்டில் என்னும் கிரேக்க அறிஞர் அரசியல் அமைப்பே இராச்சியத்தின் உயிர் என்று கூறியுள்ளார். அரசாங்கம் எந்த நாட்டிற்கும் இன்றியமையாததாகையால், அரசியலமைப்பும் இன்றியமையாதது என்பதை முற்காலத்தவர்களும் அறிந்திருந்தனர். அரசியலமைப்பின் முக்கியமான அமிசங்களை அந்தந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இச்சட்டங்கள் பொதுமக்களின் பிரதிநிதிகளடங்கிய அரசியல் நிர்ணய சபைகளால் இயற்றப்பட்டவை. அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்சு ஆகிய நாடுகளின் அரசியலமைப்பு, ஜெர்மனியின் 1919ஆம் ஆண்டின் வைமார் அரசியலமைப்பு, ஆஸ்திரேலியக் கூட்டாட்சி அரசியலமைப்பு, இந்திய அரசியலமைப்பு, இவற்றையெல்லாம் உதாரணங்களாக எடுத்துக்காட்டலாம். இங்கிலாந்தைத் தவிர மற்ற எல்லா நாடுகளிலும் அரசியலமைப்பின் விவரங்கள் ஒரு பத்திரத்திலோ பல பத்திரங்களிலோ எழுதப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்தின் அரசியலில் முக்கியமான அமிசங்களுக்குப் பத்திரங்கள் அல்லது இயற்றிய சட்டங்கள் ஆதாரங்களாக இல்லை. இந்த வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு, அரசியலமைப்புக்களைப் பத்திரம் கண்ட அரசியலமைப்புக்களென்றும், பத்திரம் காணாத அரசியலமைப்புக்களென்றும் ஒரு பாகுபாடு வழங்குகிறது. ஆனால் இது ஒழுங்கான பாகுபாடன்று. இங்கிலாந்தின் அரசியலுக்குப் பெரும்பாலும் சம்பிரதாயங்களும் வழக்கங்களும் முக்கியமான ஆதாரங்களாயிருந்தபோதிலும், அரசியலின் சில அமிசங்கள் பார்லிமென்டால் இயற்றப்பட்ட சட்டங்களில்தான் காணப்படும். பார்லிமெண்டு மந்திரிசபை முறை, மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்பு, மன்னர் வீட்டோ (Veto) சலுகையை உபயோகப்படுத்தாமை, மசோதா சட்டமாயியற்றப்படுவதற்கு முன் மூன்று முறை ஒவ்வொரு சபையிலும் படிக்கப்பட வேண்டுமென்பது முதலானவையெல்லாம் சம்பிரதாயங்கள். பார்லிமெண்டுச் சீர்திருத்த முறைகள், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஐக்கியம் முதலியவைகளுக்கெல்லாம் ஆதாரங்கள் பார்லிமெண்டுச் சட்டங்களேயாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியலமைப்பு 1789-ல் கூடிய பிலடெல்பியா அரசியல் நிர்ணய சபையில் இயற்றப்பட்ட சட்டத்தில்தான் அடங்கியிருக்கிறது. அப்படியிருந்தும் சம்பிரதாயங்களாலும் வழக்கங்களினாலும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களாலும் அச்சட்டத்தில் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல் திட்டப்படி மாகாணங்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்காளர் மன்றத்தின் மூலமாய் நிருவாகத் தலைவர் மறைமுகமாக நியமிக்கப்படவேண்டும் என்பது

முறை. ஆனால் வழக்கத்தில் இப்பொழுது பொது மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இரண்டு தடவைக்கு மேல் அதாவது மொத்தம் எட்டாண்டுகளுக்குமேல் அவர் பதவி வகிக்கக்கூடாது என்பது சம்பிரதாயமாயிருக்கிறது.

ஒரு நாட்டின் அரசியலமைப்பின் அமிசங்களைப் பரிசீலனை செய்யும்பொழுது தஸ்தாவேஜுகள், சம்பிரதாயங்கள், வழக்கங்கள், நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் இவைகளெல்லாவற்றையும் நோக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அரசியலமைப்புக்களை எளிதில் மாற்றக்கூடியவை என்றும், எளிதில் மாற்றக்கூடாதவை என்றும் பிரிப்பதுண்டு. இங்கிலாந்தும் நியூஜீலாந்தும் எளிதில் மாற்றக்கூடிய அமைப்புக்கள் ; மற்றத் தேசங்களின் அமைப்புக்கள் எளிதில் மாற்றக்கூடாதவை. நாட்டு மக்களின் பிரதிநிதிகளடங்கிய சட்டசபைக்கு அரசியல் முறைகளைச் சீர்திருத்தம் செய்ய அதிகாரமிருந்தால், அந்த அரசியலமைப்பை எளிதில் மாற்றக்கூடியது என்று சொல்லுகிறார்கள். ஆனால், சாதாரணச் சட்டங்களியற்றும் அதிகாரமும், அரசியல் சட்டச் சீர்திருத்தம் செய்கிற அதிகாரமும், தனித்தனி உறுப்புக்களுக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அல்லது அவ்வாறு செய்வதற்குத் தனி முறைகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த அமைப்புக்கள் எளிதில் மாற்றக்கூடாதவை என்று சொல்லுகிறார்கள். வளைந்து கொடுக்காத அரசியலமைப்புக்களிலும் சில அதிகக் கஷ்டமில்லாமல் மாற்றப்படலாம். அமெரிக்க ஐக்கிய நாடு, சுவிட்ஸர்லாந்து, பிரான்சு இவற்றின் அரசியல் சீர்திருத்தத்திற்குத் தனியான முறைகள் அமைப்புக்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இரண்டு நாடுகளின் முறைகளைவிடப் பிரான்சு தேசத்து முறை மேல்தோற்றத்திற்குச் சுலபமான முறையாகக் காணப்பட்டாலும், சுவிட்ஸர்லாந்து அரசியலமைப்பு, பிரான்சு அரசியலமைப்பை விடப் பல தடவைகளில் சீர்திருத்தப்பட்டிருக்கிறது.

சில அரசியல் திட்டங்கள் நீளமாகவும் விரிவாகவும், மற்றும் சில சுருக்கமாகவும் இருக்கின்றன. நார்வே தேசத்து மக்கள் தங்களுடைய அரசியல் இலட்சியங்களையெல்லாம் 25 பக்கங்களில் அடக்கிவிட்டார்கள். இந்திய அரசியல் திட்டம் 395 பிரிவுகளும் 8 அட்டவணைகளும் கொண்ட 300 பக்கங்களுக்கு மேலடங்கிய தஸ்தாவேஜாக இருக்கிறது. அரசாங்க அமைப்புச் சட்டத்தில் என்னவெல்லாம் சொல்லப்பட வேண்டும் என்பது மக்களின் மனப்பான்மை, பொருளாதாரக் கொள்கைகள், கல்வி முன்னேற்றம், பழக்க வழக்கங்கள் இவற்றைப் பொறுத்திருக்கும். சாதாரணமாக எல்லாத் திட்டங்களும் அரசாங்கத்தின் முக்கியமான அங்கங்களையும், அதிகார உறைவிடங்களையும், அவைகளின் அமைப்பையும், அலுவல்களையும் தெளிவாக விவரிக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்சு, சுதந்திர அயர்லாந்து, இந்தியா, சோவியத் ரஷ்யா, பால்டிக் சமுத்திரப் பிரதேசங்களாகிய நார்வே, ஸ்வீடன் நாடுகள், இவைகளின் அரசியலமைப்புச் சட்டங்களில் குடிமை, அடிப்படை உரிமைகள், தேர்தல்கள், சிறுபான்மையோரின் நிலைமை என்ற விஷயங்களும் இடம் பெற்றிருக்கின்றன. அமெரிக்க ஐக்கியநாடு, சுதந்திர அயர்லாந்து, இந்தியா ஆகிய இவைகளின் குடியரசுச் சட்டங்களின் பீடிகைகள் இந்தச் சட்டங்களியற்றிய மக்களின் பொது இலட்சியங்களைச் சுட்டிக் காட்டுகின்றன. இந்திய அரசியலமைப்பிலும், சுதந்திர அயர்லாந்து அரசியலமைப்பிலும் அரசாங்க வேலை முறையில் அனுசரிக்க வேண்டிய கொள்கை யென்ற ஒரு பகுதி விசேஷமாக விருக்கிறது.

கூட்டாட்சி முறையை அமெரிக்க ஐக்கிய நாடு, இந்தியா, கானடா, ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகள் பின்பற்றுகின்றன. இம்முறைக்கு வழிகாட்டி அமெரிக்க ஐக்கிய நாடு. இது அரசியலில் ஒரு முக்கியமான முறை. இந்தக் கூட்டாட்சி அமைப்பு நாடுகளில் இரண்டு சர்க்கார்கள் இருக்கின்றன. இரண்டும் ஆதிபத்திய அதிகாரத்தை மக்களிடமிருந்து நேரில் பெற்றிருக்கின்றன. அமைப்பில் சொல்லிய வரம்புப்படி வரி விதிக்கவோ, சட்டங்களியற்றவோ அவற்றிற்கு அதிகாரமுண்டு. ஒரு பகுதி அதிகாரங்கள் கூட்டாட்சி சர்க்காருக்கும், மற்றொரு பகுதி அதிகாரங்கள் இராச்சிய சர்க்காருக்கும், சில அதிகாரங்கள் இரண்டு சர்க்காருக்கும் கூட்டாகவும் பங்கிடப்பட்டிருக்கின்றன. இவ்விதமான மூன்று ஜாபிதாப் பங்கீடு இந்திய அரசியலமைப்பில் தவிர வேறு எந்த அரசியலமைப்பிலும் வழக்கிலில்லை. கூட்டாட்சி முறை நாடுகளில் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருக்கும். பிரத்தியேகமாகக் கூட்டாட்சி அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படாத அதிகாரங்களெல்லாம் இராச்சியங்களைச் சேர்ந்தவை. இந்த முறையை ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய நாடு, சுவிட்ஸர்லாந்து ஆகியவை பின்பற்றுகின்றன. கானடாவில் அரசாங்கங்களின் அதிகாரங்கள் சட்டமூலமாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், இங்குக் கூட்டாட்சி சர்க்கார்தான் மற்ற அதிகாரங்களுக்கு வாரிசு. 1867ஆம் ஆண்டுச் சட்டத்தில் இச்சர்க்காரின் அதிகாரங்களின் ஜாபிதா ஒன்றிருந்தாலும் அதிகத் தெளிவுக்காக ஏற்பட்ட அந்த ஜாபிதாவால் கூட்டாட்சிச் சர்க்காரின் அதிகாரம் குறைவில்லை. பொது அதிகார ஜாபிதா எப்படிப் பின்பற்றப்படுகிறது என்பது கூட்டாட்சி அரசியல் முறையில் ஒரு முக்கிய பிரச்சினை ; பொது ஜாபிதாவில் கண்ட ஏதேனும் ஒரு பொருள்பற்றி யியற்றும் சட்டம் முரண்பாடில்லாம லிருக்கவேண்டும். முரண்பாடிருந்தால் இராச்சியச் சட்டம் ரத்தாய்விடும்.

கூட்டாட்சி முறைக்கு எதிராக உள்ளது ஒற்றையாட்சி என்பது. பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், ஹாலந்து, நியூஜீலாந்து, நார்வே, சுவீடன், ஸ்பெயின் ஆகியவை இவ்வகுப்பைச் சேர்ந்தவை. ஒற்றைச் சர்க்கார் முறையில் அதிகாரப் பங்கீடு கிடையாது. எல்லா அதிகாரங்களும் அரசியல் அமைப்பின் ஒரே சர்க்காரில் குவிந்திருக்கும். சர்க்கார் அலுவல்கள் எளிதில் நடைபெறும்பொருட்டுச் சில அதிகாரங்கள் மாகாணங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. மாகாணங்கள் அதிகாரங்களைச் சரிவரச் செலுத்துகின்றனவா என்று தலைமைச் சர்க்கார் மேற்பார்வையிடலாம். மாகாண அரசாங்க முறைகளில் தலைமைச் சர்க்கார் தலையிடுவதற்கு வரம்பே கிடையாது. அவசியமிருந்தால் தலைமைச் சர்க்கார் எல்லா விஷயங்களிலும் சட்ட மியற்ற முடியும்; நிருவாகமும் வகிக்க முடியும். கூட்டாட்சி அரசியல் முறைகளைப் பின்பற்றும் நாடுகளில் அரசியலமைப்புத் திட்டந்தான் உயர்வு ; அந்த அரசியலமைப்புத் திட்டத்தில் கண்ட நிபந்தனைக்குட்பட்டுக் கூட்டாட்சி அரசாங்கமும், இராச்சிய அரசாங்கங்களும் நடந்து கொள்ளுகின்றனவா என்பதைக் கவனித்து, அத்திட்டத்தை மற்ற அங்கங்கள் ஆக்கிரமிக்காதவாறு பாதுகாப்பது நீதிமன்றத்தின் கடமையாகும். ஆகவே அமெரிக்க ஐக்கிய நாடு, இந்திய யூனியன் இவைகளில் உச்ச நீதிமன்றம் முக்கியமான அங்கமாக விளங்குகிறது. அமெரிக்க உச்ச நீதிமன்றம் அநேக இராச்சியச் சட்டங்களையும், கூட்டாட்சி அரசாங்கச் சட்டங்களையும் அரசியல் திட்ட அமைப்பில் கண்ட ஷரத்துக்களுக்கு முரண்பாடாயிருந்

தன என்று தீர்ப்புக்கள் அளித்து அச்சட்டங்களை ரத்து செய்திருக்கிறது. ஓர் அரசியலமைப்புத் திட்டத்தின் தன்மை, அது இயற்றப்பட்ட காலத்தையும், மக்களின் மனோபாவத்தையும் பொறுத்திருக்கிறது. கால நிலைமையும் மக்களின் மனோபாவமும் மாறலாம். அப்பொழுது அரசியலமைப்பும் தக்கவாறு மாறவேண்டும். ஓர் அரசியலமைப்பின் மாறுதல்களின் முக்கியமான நோக்கங்கள் நால்வகையாகும். முதலாவது, அத்திட்டம் எளிதிலும் மனப் போக்குப் போனபடியும் மாற்ற முடியாதபடி யிருக்கவேண்டும். இரண்டாவது, மாறுதலுக்கு முன் பொதுமக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு அவகாசம் கொடுக்கப்படவேண்டும். மூன்றாவது, கூட்டாட்சியின் அதிகாரம் எதுவும் ஓர் அரசாங்கத்தினால் மாத்திரம் தனியாக மாற்ற முடியாதபடி யிருக்கவேண்டும். நான்காவது, மக்களின் தனி உரிமைகளோ, அல்லது அடிப்படை உரிமைகளோ, அல்லது சிறுபான்மையோரின் உரிமைகளோ போதுமான அளவு பாதுகாக்கப்படவேண்டும். இந்த நான்கு நோக்கங்களையும் தனியாகவோ அல்லது சேர்த்தோ அடிப்படையாகக் கொண்டு, அரசியலமைப்புத் திட்டச் சீர்திருத்த முறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. அரசியலமைப்புச் சட்டமென்பதுதான் அரசாங்கத்துக்கு அடிப்படை. ஆகையால் அத்திட்டம் மிக்க மதிப்புடன் பாராட்டப்படவேண்டும். அது மிகவும் புனிதமானது என்கிற உணர்ச்சி யிருந்தால்தான் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் வலுவும் உறுதியும் ஏற்படும். வீ. வெ.

**அரசியலமைப்புப் பற்றிய சட்டம்** (Constitutional Law) சட்டங்கள் இல்லாமல் எந்தச் சமூகமும் வாழ முடியாது. குடிகள் ஒழுங்காக நடந்துகொள்வதற்காகவும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மக்கள் சாதாரணமாக எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை ஊகிப்பதற்காகவும், தனிப்பட்டவர்களிடையே தோன்றும் தவிர்க்கமுடியாத வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காகவும் சட்டங்கள் தேவை. சட்டங்களைச் செய்து அமல் நடத்தவும், சமூகத்தை ஒருமைப்படுத்திக் காக்கவும் அரசாங்கம் அவசியமாகிறது. இத்தகைய அரசாங்கம் மக்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் ஒன்று சேர்க்கவும், அதற்கு முரண்படாமல் தடுக்கவும், பணிவிக்கவும் பூரண ஆதிபத்தியம் உடையதாக இருக்க வேண்டும்.

அரசாங்கத்துக்கு இருக்கவேண்டிய இந்த ஆதிபத்திய அதிகாரத்தின் மூலத்தைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் இருந்துவந்துள்ளன. இந்த அதிகாரம் அனைத்தும் கடவுளால் அளிக்கப்பட்டதென்று ஒரு கொள்கை இருந்தது. அரசனும் குடிகளும் செய்துகொண்ட உடன்படிக்கையின் விளைவே இந்த அதிகாரம் என்று சில அரசியல் அறிஞர்கள் கூறியதுண்டு. இந்த அதிகாரம் முழுவதும் குடிகளுக்கே சொந்தம்; குடிகளிடமிருந்தே அரசாங்கம் இவ்வதிகாரத்தைப் பெறுகின்றது என்னும் கொள்கை இக்காலத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றது. "இந்திய மக்களாகிய நாம் இந்த அமைப்புச் சட்டமூலமாக இந்த அரசியல் அமைப்பை ஏற்றுச் சட்டமாக ஆக்கி நமதாகச் செய்து கொள்கின்றோம்" என்பது இந்திய அரசியல் அமைப்பின் முன்னுரையாகும்.

ஆயினும் அரசியல் அதிகாரம் மக்களால் அளிக்கப்பட்டது என்று கூறுவதற்கும், மக்களே ஆளுகின்றனர் என்று கூறுவதற்கும் வேறுபாடு உண்டு. உண்மையில் அரசாங்கத்தை ஒரு சிலரே நடத்த இயலும். எல்லோரும் சேர்ந்து ஒருங்கே ஆள முடியாது. ஆகையால் அரசாங்கத்தை நடத்தும் பல உறுப்புக்கள் எந்த எல்லைக்குள் இயங்கவேண்டும் என்று பொதுமக்கள் எண்ணப்படி வரையறுத்துக் கூறும் அடிப்படைச் சட்டமாகிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்று வேண்டியிருக்கிறது.

அரசியலமைப்புப் பற்றிய சட்டம் என்பது, அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புக்களின் அமைப்பையும், வேலைகளையும், அவ்வுறுப்புக்களிடையே இருக்க வேண்டிய தொடர்பையும், அவ்வுறுப்புக்களுக்கும் மக்களுக்கும் இடையே இருக்கவேண்டிய தொடர்பையும் நிருணயிக்கவும், ஒழுங்கு செய்யவும் தேவையான விதிகள் அடங்கிய சட்டம் எனலாம். அரசாங்கத்தின் அதிகாரங்கள் சட்டங்களைச் செய்தல், அரசியல் நிருவாகம் நடத்துதல், நீதி வழங்குதல் என மூன்று வகைப்படும்.

அரசியலமைப்புச் சட்டமானது 1. சட்டங்கள் இயற்றுவதற்கு வேண்டிய ஸ்தாபனங்கள், சட்டசபை உறுப்பினர் தேர்தல் நடத்தவேண்டிய முறை, சட்டங்கள் இயற்ற வேண்டிய முறை, சட்டங்கள் இயற்ற வேண்டிய விஷயங்கள். 2. இராணுவ, போலீஸ் படைகளின் அமைப்பும், தொகையும், அரசியல் நிருவாகத்தின் அமைப்பு, அதன் பொறுப்பு, அது சட்டங்களை அமல் நடத்த வேண்டிய முறை. 3. நீதிக்குலத்தின் தரங்கள், வழக்குக்களைத் தீர்த்து வைக்க அதற்குள்ள அதிகாரம், அதன் தீர்ப்புக்களுக்குள்ள ஆணை, மரியாதை ஆகியவற்றைப் பற்றியது.

மேலும் அது இராச்சியத்தின் ஆதிபத்திய அதிகாரம் செல்லும் பிரதேசம், அப்பிரதேசத்தின் எல்லைகள், அத்துடன் சேர்த்தல் அல்லது நீக்குதல், அதன் குடிகளாவதற்குரிய தகுதிகள் ஆகியவற்றையும் வகுக்கும். இங்கிலாந்தில் அது அரச பரம்பரையையும் கூட வரையறுக்கின்றது. இந்தியாவில் அது அரசாங்க மொழி இதுவென்றும் வகுத்துள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா போன்ற சில நாடுகளில் அரசியல் அமைப்புப் பெரும்பாலும் எழுத்து மூலமாக அமைந்துளது. இங்கிலாந்து போன்ற சில நாடுகளில் பண்டைய பழக்கத்தை ஒட்டிப் பல பாகங்கள் எழுதாமலே இருந்துவருகின்றன. எழுதப்படாத அரசியல் அமைப்புள்ள நாடுகளில் சட்டசபைகள் சாதாரண முறையிற் சட்ட மியற்றி அரசியல் அமைப்பை மாற்ற முடியும். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளில் அதற்கென்று வகுக்கப்பட்டுள்ள விசேடமானதும் சிக்கலானதுமான முறையைத் தழுவியே அரசியல் அமைப்பை மாற்ற முடியும். முந்திய வகை அரசியலமைப்புக்கள் நெகிழ்வுடையவை என்றும், பிந்திய வகை அரசியலமைப்புக்கள் நெகிழ்வற்றவை என்றும் கூறுவர்.

சில பழைய அரசியலமைப்புக்கள் தம் பழைய முறைகளையும் குறிக்கோள்களையும் விடாது தாங்குவதுபோல் புறத்தே தோன்றினும், தமது அகத்தே பெரிய, புதிய மாறுதல்களை ஏற்றுக்கொண்டிருக்கலாம். அண்மையில் தோன்றிய சில அரசியல் அமைப்புக்களில் தற்கால அரசியல் கருத்துக்கள் திட்டமான இடம் பெற்றுள்ளன. சில அரசியல் அமைப்புக்கள் ஒவ்வொரு விஷயத்தையும் விவரமாகக் கூறும்; மற்றுஞ் சில அமைப்புக்கள் பொதுவான தத்துவங்களை மட்டுமே கூறும். உதாரணமாக, இந்திய அரசியலமைப்பு 395 விதிகளும் பல சேர்க்கைகளும் கொண்ட நீண்ட சாசனம். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பில் 21 விதிகளும், சென்ற 175 ஆண்டுகளில் செய்யப்பட்ட

மிகச் சில திருத்தங்களும் மட்டுமே காணப்படு கின்றன.

அரசியலமைப்புக்களை வேறு பலவகையாகவும் பகுக்க லாம். இப்போது எங்கும் சமூகங்கள் ஜனநாயகத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு விட்டதால், முடியரசு, பிரபுத்துவம், ஜனநாயகம் என்று இதுவரை கூறிவந்த பாகுபாடுகள் இன்று நடைமுறையில் பொருளற்றுப் போயின.

ஜனநாயக அரசாங்கங்கள் இக்காலத்தில் சட்டசபை வகை என்றும், ஜனாதிபதி வகை என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. முந்திய வகையில், தேர்ந்தெடுக்கப் பெற்ற சட்டசபைக்குப் பொறுப்புள்ள மந்திரிசபை யால் அரசாங்கம் நடத்தப்படுகிறது. பிந்திய வகையில், அரசாங்க அதிகாரம் சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்ததாக இல்லாத நிருவாகத்தின் கையில் உள்ளது. இங்கிலாந்தும் இந்தியாவும் முந்தியதற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிந்தியதற்கும் எடுத்துக்காட்டுக்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பை வகுத்தவர்கள் முற்கூறிய மூன்று அரசாங்க அதிகாரங் களைப் பிரிக்கவேண்டும் என்ற கொள்கையுடையவர்களா யிருந்தபடியால், அரசியலை ஜனாதிபதி வகையில் அமைத் தார்கள். ஆனால், அரசாங்க அதிகாரங்களை முற்றிலும் தனியாகப் பிரித்துவிட முடியாது என்பது அனுபவத்தி லிருந்து தெரியவருகிறது. அதிகாரப் பிரிவினைக் கொள்கை என்பது, அரசியல் நிருவாகம் நடத்துவோர், சட்டம் செய்வோர், நீதிவழங்குவோர் ஆகிய இவர்கள் தமது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தாதிருக்கும் படி அதற்கு வேண்டிய தடைகளை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட உபாயம். இதுவே இதன் முக்கியத்துவமாகும்.

அரசியலமைப்புக்களை ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary constitution) என்றும், கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal c.) என்றும் பகுப்பதுண்டு. முந்தியதில், அரசாங்க அதிகாரம் அதா வது சட்டம் செய்யும் அதிகாரமும், அரசியல் நிருவாக மும் ஓரிடத்தில் இருக்கும். பிந்தியதில் சில அதிகாரங் கள் இராச்சிய அரசாங்கத்திடமும், மற்றவை மத்திய அரசாங்கத்திடமும் இருக்கும். இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சியாகும்.

அரசியலமைப்பு எழுதப்பட்டதாக இருக்கும் நாடு களில்கூட அரசாங்கம் நடைபெற வேண்டிய முறையை வகுக்கும் விதிகள் அனைத்தும் எழுதப்பட்டிரா. எழுதப்படும் விதிகளுடன், அவற்றை அமல் நடத்த வேண்டிய முறைகளைப் பற்றி எழுதப்படாத வழக்கங்கள் பல நாளடைவில் தோன்றி நிலைத்துச் சட்டத்துக்கு நிகரான வலுப்பெற்றிருக்கும். இத்தகைய வழக்கங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இங்கிலாந் தில் அரசருக்குள்ள வீட்டோ (Veto) அதிகாரமாகும். சட்டசபை இயற்றும் எந்தச் சட்டத்தையும் வேண் டாம் என்று நிராகரிக்கும் அதிகாரம் சட்டபூர்வமாக அரசர்க்கு இருப்பினும், 1704 முதல் இங்கிலாந்து மன் னர் யாரும் அதைச் செலுத்தியதில்லை.

இராச்சியம் இருப்பது குடிகளுடைய பொது நலனைப் பெருக்குவதற்காகவே என்றாலும், 'பொதுநலன்' என்னவென்பது பற்றி நாட்டுக்கு நாடு வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அரசாங்கத்தின் வேலைகளும் கடமைகளும் நாளடைவில் மாறிவருகின்றன. இவ் வுண்மையை அந்தந்த நாட்டின் அடிப்படை நோக்கங் களை உருவாக்கும் அரசியலமைப்பில் காணலாம். மேலும் அரசியலமைப்பு, பொதுச் சமூகத்தின் பொருளா தார அமைப்பையும், மக்களின் சொத்து நிலைமையை யும், மக்கள் கூட்டத்தின் உறுப்புக்களின் அமைப்பை யும், கல்வி நிலையையும், பண்பாட்டு வகையையும், பெரும்பான்மையான மக்களின் சாதி பேதங்களையும், மதத்தையும், அவர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வகையையும், அவர்களிடையிருக்கும் ஒருமை யுணர்ச்சியையும் பொறுத்ததாக இருக்கிறது. இத்த கைய காரணங்களால் அரசியலமைப்புக்கள் நாட்டுக்கு நாடும், காலத்துக்குக் காலமும் மாறுபடக் கூடும். ஒரு நாட்டின் அரசியலமைப்பு, குறிப்பிட்டகாலத்தில் அதன் நலத்தையும் முன்னேற்றத்தையும் வளர்ப்பதாக இருந் தால் மட்டும் போதாது. வருங்காலத்தின் புதுத் தேவை களுக்கேற்பப் புரட்சியின்றி எளிதில் மாற்றி அமைத் துக் கொள்ளும்படியும் இருப்பது நன்று. ஆர். வீ. கி.

**அரசியற் கட்சிகள்:** பண்டை நாட்களி லிருந்து ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் கட்சிகள் இருந்துவந்திருக்கின்றன; எனினும், அவற்றைத் தற் கால அரசியல் கட்சிகளுடன் ஒப்பிட முடியாது. அவை தலைமை ஸ்தானத்திற்காகப் போட்டியிட்ட சில குடும் பங்களையும் தலைவர்களையும் ஆதரித்துவந்த கூட்டங் களே. தற்கால அரசியல் கட்சிகள், கொள்கை வேறு பாட்டால் எழுபவை. பிரதிநிதித்துவ அரசியல் தோன் றிய பின்னரே அவை ஏற்பட்டன. சட்டசபைகளில் ஒரேவிதமான கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்ட அங்கத்தினர்கள் ஒத்துழைக்கத் தொடங்கின போது கட்சிகள் தோன்றின எனலாம். பொதுமக்கள் வாக்குரிமையைப் பெற்றதும்; அவர்களிடையும் கட்சி கள் அமைக்கப்பட்டன. அரசியல் கட்சிகள் 19-20 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ந்தவையே எனலாம்.

அரசியல், மத வேறுபாடுகளால் காவலியர்ஸ் (Cavaliers), ரவுண்ட் ஹெட்ஸ் (Round Heads) என இரு கட்சிகள் 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன் றின. 1688-ல் நிகழ்ந்த அரசியல் புரட்சிக்குப்பின் அவை டோரி (Tory), விக் (Whig) என்ற புதுப் பெயர்களைப் பெற்றன. 19ஆம் நூற்றாண்டில் அவை கன்சர்வேட்டிவ், லிபரல் கட்சிகளாக மாறின. தொடக்கத்தில் இரு கட்சி களும் பார்லிமென்டு அங்கத்தினர்களை மட்டும் கொண் டிருந்தன. 19ஆம் நூற்றாண்டில் பொதுமக்கள் வாக் குரிமை பெற்றபின் அவை தேசம் முழுவதிலும் பரவின. வார்டுகளிலும், தேர்தல் தொகுதிகளிலும், முக்கிய நகரங்களிலும், ஜில்லாக்களிலும் ஒவ்வொரு கட்சியும் சிறு கமிட்டிகளை நிறுவி, வாக்காளர்களின் ஆதரவைத் தேட ஆரம்பித்தது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் ஆரம்பம் வேறு வகையானது. பார்லிமென்டுத் தேர்தல்களில் தொழிற் கட்சி தனிக்கட்சியாகப் போட்டியிட ஆரம்பித்தது. சென்ற ஐம்பது ஆண்டுகளில் இக்கட்சியின் பலம் அதிகரித்து, இன்று தேசத்தின் முதலிரண்டு கட்சிகளில் ஒன்றாய் விளங்குகின்றது.

பிரிட்டிஷ் வரலாற்றில் இருகட்சி முறையே பெரும் பாலும் வழங்கி வருகின்றதெனினும், அப்போதைக்கப் போது மூன்றும் கட்சிகளும் இருந்திருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஆரம்பத்திலிருந்து இருகட்சி முறையே வழங்கி வந்துள்ளது. அவை ரிப்பப்ளிக்கன், டெமகிராடிக் கட்சிகள். மூன்றும் கட்சிகள் அமெரிக்கச் சரித்திரத்தில், அப்போதைக்கப் போது தோன்றி மறைந்துள்ளன. எனினும் இரு கட்சி முறை நிலைபெற்றிருக்கிறது. கானடா, ஆஸ்தி ரேலியா, நியூஜீலாந்து, தென் ஆப்பிரிக்கா முதலிய ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளும் இருகட்சி முறை யையே அனுசரித்து வருகின்றன.

இருகட்சி முறை வழங்கிவரும் நாடுகளில் பிரதிநிதித்துவ அரசியல் பலம் பொருந்தி, நீண்ட காலமாக ஒழுங்காய் நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் குறைபாடுகளை எடுத்துக்காட்டுவதற்குச் சமபலம் பொருந்திய கட்டுப்பாடுடைய கட்சி இருப்பதால், அரசாங்கம் திறமையோடு நடைபெறும் நாட்டில் யதேச்சாதிகாரம் தோன்ற முடியாது. பொறுப்புள்ள ஆட்சி இயலுகிறது. பார்லிமென்டுத் தேர்தல்களில் அதிக வாக்குக்களையும் ஸ்தானங்களையும் பெறும் கட்சியே அரசாங்கத்தை நடத்துமாகையால் மக்களே நேராக அரசாங்கத்தை ஏற்படுத்துகிறார்கள் எனலாம். அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை அறிந்து, அதை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. தேர்தல் காலத்தில் வாக்களித்த காரியங்களை அரசாங்கம் நிறைவேற்றத்தவறினால் அதற்குப் பொறுப்பாளி யார் என்பதை எளிதில் தெரிந்துகொள்ள முடியும்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் 1850க்குப் பின்னரே அரசியல் கட்சிகள் தோன்றின. முதலில் பொது மக்களிடையே அமைக்கப்பெற்றுப் பின்னர்ச் சட்டசபைகளில் புகுந்த கட்சிகளும் உள்ளன. தொழிலாளர் கட்சிகள் எல்லாம் இவ்வாறு எழுந்தவையே.

சென்ற முப்பதாண்டுகளில் சில நாடுகளில் ஒரே கட்சியின் ஆதிக்கம் தோன்றியது. இவற்றுள் முக்கியமானவை ஜெர்மனி (1932–1945), இத்தாலி (1922–1945), துருக்கி (1921–1949), போர்ச்சுகல், ஸ்பெயின், சோவியத் சோஷலிஸ்டு ஐக்கிய நாடுகள் என்பவை. இறுதியில் குறிப்பிட்ட மூன்று நாடுகளில் மட்டும் தனிக்கட்சி ஆதிக்கம் இன்னும் நிலைத்திருக்கிறது. தனிக் கட்சிகள் பாசிஸ்டு, கம்யூனிஸ்டு என்று இரு வகையின.

பாசிசம் (Fascism) முதல் உலக யுத்தத்தின் பின் இத்தாலியில் தோன்றியது. அதன் உதவியால் 1922-ல் முசோலினி அரசாங்கத்தைக் கைப்பற்றினர்; பின்னர் பிற கட்சிகளை எல்லாம் ஒழித்து நாட்டின் சர்வாதிகாரியானார்.

ஜெர்மனியில் நாஜிக் கட்சி என்னும் தேசிய சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியும் இவ்வாறே எழுந்தது. இக்கட்சியின் வளர்ச்சிக்கு ஜெர்மனியின் அப்போதைய சீர்கேடான நிலைமையே காரணம். பொருளாதார நிலை கெட்டு, நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருந்தது. 1932-ல் பார்லிமென்டுத் தேர்தல்களில் நாஜிக் கட்சிக்கே பெரும்பாலான வாக்குக்கள் கிடைத்தன. ஹிட்லர், இராச்சியத்தின் முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவர் பார்லிமென்டையும் இதர கட்சிகளையும் ஒழித்து, 1933-ல் தம் சர்வாதிகாரத்தை நிறுவினர்.

மற்ற நாடுகளிலும் ஒருகட்சி ஆதிக்கம் இவ்வாறுதான் எழுந்தது.

அரசியல் கட்சிகளைப் பலவகையாகப் பிரிக்கலாம். அவற்றிற்கு ஆதரவளிப்போர்களைக்கொண்டு, நடுத்தர வகுப்பினர் கட்சிகள் (Bourgeois), தொழிலாளர் கட்சிகள் எனவும், அமைப்பு வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு, ஒருமுகப்படுத்திய கட்சிகள் (Centralised parties), பன்முகப்படுத்திய கட்சிகள் (Decentralised p.), தனி அங்கத்தினர் கட்சிகள் (Direct p.), கூட்டு அங்கத்தினர் கட்சிகள் (Indirect p.), வடிவ அமைப்புக் கட்சிகள் (Cadre p.), பொதுமக்கட் கட்சிகள் (Mass p.) எனப் பல வழிகளில் வேறுபாடு செய்யலாம். கொள்கைகளை அனுசரித்து முதலாளித்துவ, சோஷலிஸ்டு, பாசிஸ்டு, கம்யூனிஸ்டுக் கட்சிகள் எனவும் கட்சிகளைப் பாகுபாடு செய்யலாம். அவை ஈடுபட்டுள்ள வேலைகளை அனுசரித்துப் பூரண ஆதிக்கக் கட்சிகள் (Totalitarian p.) எனச் சிலவற்றைத் தனிப்படுத்தலாம்.

கட்சிகள் அமைப்பின் சில முக்கியக் கூறுகளையே இங்குக் குறிப்பிடமுடியும். அரசியல் கட்சிகள், கமிட்டி, செக்ஷன், ஸெல்(Cell), குடிப்படை(Militia)என்னும் நான்கு வகையான அமைப்பைக் கொண்டுள்ளன. முதன் முதலில் தோன்றிய கட்சிகள் கமிட்டிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. தேர்தல் காலத்தில் மட்டும் அவை தீவிரமாக வேலைசெய்கின்றன. ஒருசில தலைவர்களே கட்சியை நிருவாகம் செய்கிறார்கள். கட்சி வேலைக்கு அவசியமான நிதி உதவியை ஒருசில பணக்காரர்களிடமிருந்து இக்கட்சிகள் பெறுகின்றன. அரசியல் துறையில் மட்டும் இவை வேலைசெய்கின்றன. இங்கிலாந்தில் கன்சர்வேடிவ், லிபரல் கட்சிகள், அமெரிக்காவில் ரிப்பப்ளிக்கன், டெமகிராடிக் கட்சிகள், பிரான்சில் ராடிகல் சோஷலிஸ்டுக் கட்சி, இந்திய நாட்டில் காங்கிரசு, முஸ்லிம் லீக், லிபரல் கட்சிகள் இவ்வகுப்பினைச் சேர்ந்தவையே.

ஐரோப்பிய நாடுகளில் சோஷலிஸ்டுக் கட்சிகள் செக்ஷன்கள் என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளன. செக்ஷன்கள் ஆயிரக்கணக்கான அங்கத்தினர்களை உடையவை. தேசத்தின் பல பாகங்களிலும், ரெயில்வே முதலிய முக்கியத் தொழில்களிலும் செக்ஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஸெல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஸெல் மூன்று முதல் பத்துப் பதினைந்து அங்கத்தினர்களைக் கொண்டது; ஒரே தொழிற்சாலை அல்லது காரியாலயத்தில் வேலைசெய்வோரையே அங்கத்தினர்களாகக் கொண்டது. ஸெல்கள் தம்முள் தொடர்பில்லாமல் நேர் மேலுள்ள ஸ்தாபனங்களுடன் மட்டிலும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

பாசிஸ்டுக் கட்சிகள் படை அமைப்பைக் கொண்டிருக்கின்றன. பொறுக்கி எடுத்த சிலரே கட்சியில் அங்கம் பெறுகிறார்கள். இக்கட்சிகளுக்கு ஒருநிற உடுப்பு, கொடி முதலிய படைச் சின்னங்கள் உண்டு. கட்சிக்கு ஒரே தனித் தலைவர்.

பலாத்கார முறைகளால் அரசியலைக் கைப்பற்றுவது பாசிஸ்டுக் கட்சியின் நோக்கம். தேர்தல்களில் கலந்து கொள்வதுகூடப் பிரதிநிதித்துவ அரசியலை ஒழிக்கும் பொருட்டே. 1932 பார்லிமென்டுத் தேர்தல்களில் நாஜிக் கட்சி, பார்லிமென்டில் அதிக ஸ்தானங்களைப் பெற்றதும், ஹிட்லர் அதை ஒழித்துத் தம் யதேச்சாதிகாரத்தை ஸ்தாபித்தார்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளும் பாசிஸ்டுக் கட்சிகளும் பல பொது அமிசங்களை உடையன. இரண்டும் பூரண ஆதிக்கக் கட்சிகள், மக்களின் வாழ்க்கை முழுவதையும் கட்டுப்பாடு செய்கின்றன; அவர்கள் வாழ்க்கையையும் கருத்தையும் அடிமைப்படுத்துகின்றன. பார்லிமென்டு முறையில் அவற்றிற்கு நம்பிக்கை இல்லை.

எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவான ஓர் அமிசத்தை இங்கே குறிப்பிடலாம். வெளிப்படைக்குக் கட்சிகள் எல்லாம் ஜனநாயக முறையில் அமைந்தவையாகக் காணப்படுகின்றன. ஆனால், உண்மையில் கட்சிகளை நிருவகிப்போர் தம்மைத்தாமே தேர்ந்துகொள்ளும் ஒருசிலரே (Oligarchy). ராபர்ட் மிஷெல்ஸ் என்ற பேரறிஞர் எடுத்துக் காட்டியதுபோல ஜனநாயகக் கட்சிகளிலும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஒருசிலரே கட்சி நிருவாகத்தைச் செய்கிறார்கள்.

முன் கூறியவற்றிலிருந்து பிரதிநிதித்துவ அரசியலை நடத்தக் கட்சிகள் இன்றியமையாதன என்பதும், பல கட்சிகள் இல்லாவிடில் ஜனநாயக அரசியல் உலகில் இருக்க முடியாதென்பதும் விளங்கும். நா. ஸ்ரீ.

**இந்திய அரசியற் கட்சிகள்:** 19 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே இந்தியாவில் அரசியற் கட்சிகள் தோன்றத் தொடங்கின. 1885-ல் பம்பாயில் முதல் காங்கிரசு கூடியபோது, மேனுட்டுக் கல்வி கற்றுத் தேசியக் கொள்கைகளை மேற்கொண்டு, நாட்டு நன்மையைக் கருதிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் வேண்டுகோள் விடுக்கும் அறிஞர்கள் குழுவாகவே அக்காங்கிரசு இருந்தது. திலகர் முதலிய தீவிரவாதிகள் காங்கிரசிற் புகும்வரையில் அது மிதவாத சபையாகவே இருந்தது. கோகலே முதலியவர்களே அக்காலத்தில் காங்கிரசின் பிரதிநிதிகளாயிருந்தனர். அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் சிறைக்குச் செல்லும் வழக்கம் அன்னி பெசன்ட் அம்மை ஆரம்பித்த 'ஹோம் ரூல்' இயக்கத்தின்போது ஏற்பட்டது. 1920-ல் காந்திஜி காங்கிரசைப் பலாத்காரமற்ற சத்தியாக்கிரக முறைகளை மேற்கொள்ளச் செய்து, அரசியலில் ஒத்துழையாமையைப் புகுத்தினர். அக்காலத்தில் காங்கிரசு தன்னை ஒரு தேசியப் பிரதிநிதித்துவ சபை என்று கூறிக்கொண்டது; ஓர் அரசியல் கட்சி என்னும் கருத்தை அது ஏற்றுக்கொள்ளவில்லை. பிறநாட்டு அரசாங்கம் அரசு செலுத்தி வந்ததாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அரசாங்கத்தில் கலந்துகொள்ள இடமில்லாதிருந்ததாலும், அரசாங்கத்தில் கலந்துகொள்ளும் ஜனநாயக அரசியல் கட்சிகள் அக்காலத்தில் இந்தியாவில் தோன்றவில்லை. முஸ்லிம் லீகும், தீவிரக் கட்சியும், லிபரல் கட்சியும் 1920க்கு முன்பே ஏற்பட்ட அரசியல் கட்சிகள். வெளிநாட்டார் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் கட்சிகளாகவே இவை இருந்தன. போராடும் முறையில் கருத்து வேறுபாடுகள் சில இருந்தமையால் அவை வெவ்வேறு கட்சிகளாகப் பிரிந்திருந்தன. 1935-ல் இந்திய அரசியல் சட்டம் வந்தபிறகு, காங்கிரசு சட்டசபைத் தேர்தல்களில் கலந்துகொண்டபோது அது அரசியல் கட்சியின் அலுவல்களைச் செய்யத் தொடங்கிற்று.

அரசியல் துறையில் சுயராச்சிய உரிமை பெறுவதில் எல்லாக் கட்சிகளுக்கும் கருத்து ஒன்றுயிருந்தபோதிலும், பொருளாதார, சமூகத் துறைகளில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிய கருத்து வேறுபாடுகள் தோன்றின. தொழிற்சாலைகளும் தொழிலாளிகளும் மிகுந்துள்ள இடங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி தோன்றி, அதன் கோட்பாடுகள் வேரூன்றலாயின. இவர்கள் கம்யூனிஸ்டு முறையில் இந்தியப் பொருளாதார அமைப்பையும் அதற்குத் தேவையான அளவு அரசியல் அமைப்பையும் மாற்றவேண்டும் என்று கருதுகின்றனர். இவர்களினின்றும் சிறிது வேறுபட்ட சோஷலிஸ்டுகள் காங்கிரசினின்றும் பிரிந்து வந்தவர்கள். எம். என். ராய் ஆரம்பித்த தீவிர ஜனநாயகக் கட்சியும், சுபாஷ் சந்திர போசின் முன்னேற்றக் கட்சியும் (Forward Bloc) பெரிய இலட்சியத்தோடு தொடங்கினவாயினும் விரைவிலேயே பலம் குன்றின. 1951-ல் ஆச்சாரிய கிருபளானி காங்கிரசிலிருந்து விலகிப் 'பிரஜாக் கட்சி' என்ற புது அரசியல் கட்சியை நிறுவினர். 1952-ல் இக் கட்சியும் சோஷலிஸ்டுக் கட்சியும் இணைந்து பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சி தோன்றியது. 1953-ல் இக்கட்சியுடன் சுபாஷ் போசின் முன்னேற்றக் கட்சியும் இணைந்தது.

இந்தியாவில் மக்கள் தொகையில் முஸ்லிம்களைவிட இந்துக்கள் மிகுதியாயிருப்பதால் சிறுபான்மையோரான முஸ்லிம்களின் நலன்களைக் காக்கும் எண்ணத்தோடு முஸ்லிம் லீகு தோன்றியது. காங்கிரசிடம் இக்கட்சிக்கு ஏற்பட்ட அவநம்பிக்கை 1947-ல் இந்தியப் பிரிவினைக்குக் காரணமாயிற்று. இக்கட்சிக்கு ஆதாரமாயிருந்தவர் ஜனுப் ஜின்னு. பெருவாரியான முஸ்லிம்கள் இக்கட்சியை யாதரித்தனர். முஸ்லிம் லீகின் கொள்கைகளை நேரடியாக எதிர்க்கும் அரசியற் கட்சி இந்துமகா சபையேயாகும். சவார்க்கரும், சியாம பிரசாத் முக்கர்ஜியும் இக்கட்சியின் முக்கியத் தலைவர்கள்.

இந்தியா அரசியல் சுதந்திரம் எய்திய பிறகு, பார்லிமென்டு ஜனநாயகக் கட்சி அரசாங்க முறையை (Parliamentary Democratic Party Government) ஏற்றுக்கொண்டது. தற்போது டெல்லியிலும், இராச்சியங்களிலும் சட்டசபைகளில் கட்சிமுறை அரசாங்கம் நடைபெறுகிறது. பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே பிரதம மந்திரி. இந்திய அரசியலில் இரு பெருங்கட்சிகள் இல்லாமை பூரண ஜனநாயகத்திற்குத் தடையாக இருக்கிறது. தான் விழிப்போடு இல்லாவிடில் எதிர்க் கட்சி தன்னைக் கவிழ்த்துவிடும் என்னும் அச்சம் இல்லாத அளவிற்குப் பலமுள்ள ஒரு பெரும்பான்மைக் கட்சி ஆளும்போது பிரிட்டிஷ் முறையில் பார்லிமென்டு ஜனநாயக மரபு ஏற்படுவது கடினம்.

பெரிய கட்சிகளைத் தவிரத் தேர்தல்களை முன்னிட்டு ஆங்காங்குத் தோன்றுகிற சிறிய தலக் கட்சிகளுக்கு அரசியல் தேசிய முக்கியத்துவம் மிகுதியாக இல்லையெனினும், வருங்காலத்தில் நாட்டில் பல அரசியல் கட்சிகள் நிலைக்கக்கூடும் என்பதற்கு அறிகுறிகள் போல் இவை தோன்றுகின்றன.

## அரசியற் கருத்துக்கள்:

**கிரேக்க அரசியற் கருத்துக்கள்:** முற்காலத்தில் கிரேக்கர்கள் சிறு நகர இராச்சியங்களில் வசித்து வந்தனர். அவர்களுடைய அரசியல் மலர்ச்சி ஹோமருடைய பெருங்காப்பியக் காலங்களில் தோன்றியதாகக் கொள்ளலாம். நாளடைவில், அங்கிருந்த 'முடியாட்சிகள்' மறைந்து, ஆலிகார்க்கி என்னும் 'சிலராட்சிகள்' தோன்றிப் பொது மக்களைப் பகைத்துக் கொண்டன. கி. மு. 7-ஆம், 6-ஆம் நூற்றுண்டுகளில் பொதுமக்களின் சார்பாகச் சிலர் கிளம்பிச் 'சிலராட்சிக்'காரர்களை நீக்கிவிட்டுத் தாங்களே அதிகாரத்தைக் கைப்பற்றினர். இவர்களை 'இராச்சிய அபகாரிகள்' (Tyrants) என்பர். இவர்களில் சிலர் நல்ல முறையில் ஆட்சி புரிந்தனராயினும், படைப் பலத்தையே நம்பி ஆண்டு வந்ததால், இவர்களும் மக்களுடைய வெறுப்பிற்கு ஆளாயினர். பிறகு வந்த ஆட்சி கிரேக்க ஜனநாயக ஆட்சி; அதில் கி. மு. 5-ஆம் நூற்றுண்டில் நடைமுறையில் இருந்த பெரிக்ளீசின் நிருவாகம் மிக்க புகழ்பெற்றது. கிரீசின் தென்பகுதியில் இருந்த ஸ்பார்ட்டர்கள் தமக்கு ஒருவகைக் கம்யூனிசச் சமத்துவத்தையும், அச்சமூகத்திலிருந்த தாழ்த்தப்பட்டோரிடம் அடக்குமுறையையும் கையாண்ட இருவகைப் போக்குக்கள் காணப்பட்டன.

கிரேக்க அரசியல் அறிஞர்களுடைய பொதுவான கருத்துக்களாவன: 1. மனிதனுடைய வாழ்க்கை இயற்கைக்கும் அறிவுக்கும் பொருத்தமானதா யிருக்க வேண்டும். 2. எல்லா மனிதருக்கும் அறிவு உண்டாகையால், அறிவுக்குட்பட்ட மிக உயர்ந்த முறையில் வாழ்க்கை அமையவேண்டும். 3. இல்வாழ்க்கை சாத்தியமாவதற்கு மனிதர்கள் ஒன்றுக வாழ்ந்து ஒன்றுகப் பொது அலுவல்களில் ஈடுபடவேண்டும். 4. ஆதலால் தனி மனிதனின் நலன்கள் இராச்சியத்தோடு இணைந்து நிற்கின்றன. 5. இவ்விணைப்பு இயலுமாறு தனி மனி

தர்கள் தங்கள் தனித்துவத்தை இராச்சியத்தின் தன்மைக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வித ஐக்கியம் முற்காலத்தில் கிரீசில் இருந்த நகர இராச்சியங்களில்தான் இயலும்; அந்நகர இராச்சியங்களின் அரசாங்கத்தில் மகளிரும், அடிமைகளும் நீங்கலாக ஏனைய குடிமக்கள் யாவரும் கலந்து கொள்ள முடியும். இவ்வித ஜனநாயகத்தை நேர்முக ஜனநாயகம் என்று இப்போது கூறுகிறார்கள். கிரேக்கர்களுடைய கருத்துப்படி தனி மனிதர்கள்மீது இராச்சியம் செலுத்தக்கூடிய ஆதிக்கத்திற்கு அளவில்லை. அக்கால அரசாங்கங்களுடைய அலுவல் சட்டத்தை அமல் செய்வதேயன்றித் தற்கால இராச்சியங்களைப் போலச் சட்டத்தை உண்டாக்குவது அன்று.

கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் பொதுமக்களின் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டித் தங்கள் விருப்பம்போல் அரசியலில் ஆதிக்கம்பெறச் சில தலைவர்கள் தோன்றினார்கள். தனி மனிதர்கள் தங்கள் நலங்களைத் தாங்களே ஆராய்ந்து அறியவேண்டும் என்றும், இயல்பில் மனிதன் சுயநலமுடையவன், இராச்சியத்தின் சட்டங்கள் மனிதனுடைய அறிவின் போக்கிற்கு முரணாகக் கூடும். ஆயினும் அறிவே உண்மைக்கு வழிகாட்டி என்றும் இவர்கள் கூறினர். இவர்கள் சோபிஸ்டுகள் (Sophists) என்றழைக்கப்பட்டனர்.

சோபிஸ்டுக் கொள்கைகளைப் பின்பற்றிய பெரிய அறிஞர் சாக்ரட்டீஸ் (கி. மு. 469–399) என்பவர். ஐயம், வினா, விடை, அறிவுரை என்னும் முறையைப் பின்பற்றி, அதீனிய இளைஞர்கட்கு அறிவு புகட்டி வந்த சாக்ரட்டீஸ் அரசியல் கருத்துக்களுக்கு அற அடிப்படை ஒன்றைக் கற்பித்தார். ''ஜனநாயகம் மக்களிடையே பொய்ம்மையான சமத்துவத்தையே நாட்டுகின்றது; திருவுளச்சீட்டு முறையில் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது நல்ல முறையன்று; திறமைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் இராச்சிய நிருவாகம் நடத்தப்பெறுவதே நல்லது'' என்பவை அவருடைய கருத்துக்கள்.

டயஜினஸ் என்பவரைப் போன்ற சினிக்குகள் (Cynics) ''வாழ்க்கையின் மேற்போக்குக்களையும் அரசியல் பிணக்குக்களையும் மறக்கவேண்டும்'' என்றனர். டயஜினஸ் தம்மை 'உலகக்குடி' என்று கூறிக்கொண்டார்.

சாக்ரட்டீசின் மாணவரான பிளேட்டோ (கி. மு. 427–347) பொதுவாகச் சாக்ரட்டீசைப் பின்பற்றுபவராயினும், மிகுந்த திறமைசாலிகளே உண்மையையறியமுடியும் என்று கருதினார். அவருடைய குடியரசு என்னும் நூலில் மிகுந்த அறிவும் திறமையும் படைத்த தத்துவ சாஸ்திரிகள் அரசாங்கத்தை நடத்துபவர்களாயிருக்கவேண்டும் என்றார். அறிவின் எல்லையைக் கண்ட அவ்வறிஞர்களே அரசியலறிஞர்களாகவும் இருத்தல் வேண்டும் என்றார்.

ஜனநாயகம் என்பது பாமரர் ஆட்சி என்று பிளேட்டோ கருதினார்; சிலராட்சியும், இராச்சிய அபகாரிகளின் ஆட்சியும்கூட நேர்முறைக்குப் புறம்பானவை என்பது அவர் கருத்து. அவர் பிற்காலத்தில் இயற்றிய பிறநூல்களில் குடியாட்சி, பிரபுக்களாட்சி, மித ஜனநாயகம் ஆகிய ஆட்சிமுறைகளை ஓரளவு அங்கீகரித்தார். நேர்முக ஜனநாயகம் அவரால் ஒதுக்கப்பட்டது. இராச்சியத்தின் அடிப்படை நீதியாதல் வேண்டும் என்பதே பிளேட்டோவின் முக்கியமான கருத்து.

பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டில் (கி. மு. 384–322) ஆசிரியரைப் போல அவ்வளவு இலட்சியவாதியல்லர்; அரசியல் ஸ்தாபனங்களின் வளர்ச்சியையே அவர் முக்கியமாகக் கருதினார்; அரசியல் அமைப்புக்களின் ஒப்பு-ஆராய்ச்சி வேண்டும் என்றார். அவருடைய அரசியல் என்னும் நூல் இம்முறையையே கூறுகிறது. '' சமுதாயம் என்பது குடும்பம், கூட்டம் என வளர்ந்து வரும் ஒரு ஸ்தாபனம்; மனிதன் சமூகமாகக் கூடி வாழ்பவன்; தனி மனிதன் தன்னுடைய விருப்பங்களையும்இலட்சியங்களையும் எய்தி, நல்வாழ்வை அடைவதற்கு உதவவேண்டியதே இராச்சியத்தின் கடமை; அந்நல்வாழ்க்கையை அடைய மனிதர்கள் கல்வி பயின்றிருக்க வேண்டும்; அதற்குப் போதிய ஓழிவு வேண்டும்; அடிமைகள் ஏனைய அலுவல்களைக் கவனித்தால் குடிகளுக்கு ஒழிவு கிடைக்கும்; ஆகவே அடிமைகள் என்போர் இருக்கவேண்டும்'' என்பவை அவருடைய கருத்துக்கள். அவர் அரசாங்க அமைப்புச் சமநிலையுடையதாயும், புரட்சிக்கு இடம் கொடாததாயும் இருக்கவேண்டும் என்று கருதினர்; அதற்குத் திருப்தியோடு வாழ்க்கை நடத்தும் நடுத்தர வகுப்பினர் வேண்டும் என்றும் கூறினர். தனி மனிதர்களின் முன்னேற்றம் பெரிதேயன்றி, மன்பதையின் மொத்த முன்னேற்றத்தைப் பண்பளவில் கூறுவது வேண்டுவதன்று என்றார். அவருடைய கருத்துக்கள் தற்காலம் வரையில் அறிஞர்களுடைய கருத்துக்களை ஊக்கியிருக்கின்றன என்பதே அவருடைய பெருமைக்குச் சான்றாகும். இராச்சியம் நிலைபெற்றிருப்பதும், மிதக் கொள்கைகளை மேற்கொள்வதும், இராச்சியத்தின் இரு நோக்கங்களாயிருக்கவேண்டும் என்று கூறினர். இவருடைய கருத்துக்களின் பெருமையால் இவரை 'அரசியல் நூலின் தந்தை' என்று உலகம் புகழும். நகரச் சுயாட்சியும், நல்வாழ்க்கை அமைவும், தனி மனிதரின் சுதந்திரமும் முக்கியமானவை என்று கிரேக்கர்கள் பொதுப்படக் கருதினர் என்று கூறலாம்.

எபிக்யூரஸ் (கி. மு. 312–270) என்பவர் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் எந்த ஆட்சியையும் ஏற்றுக்கொள்ளலாம் என்றும், திறமை வாய்ந்த யதேச்சாதிகாரமும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே என்றும் கூறினர். அறிஞர்கள் அரசியலில் தலையிடக் கூடாதென்றும், அநீதியைத் தடுப்பதற்கு மக்கள் தமக்குள்ளே செய்துகொள்ளும் ஏற்பாடு சட்டம் என்றும் அவர் கூறினர். அவர் தத்தம் தேவைகளை ஒவ்வொருவரும் பூர்த்தி செய்துகொள்ள முயலவேண்டும் என்றார். எபிக்யூரியர்களுக்குப் பிறகு வந்தவர்கள் ஸ்டோயிக்குகள். ஜீனோ (சு. கி. மு. 336–சு. 264) என்பவர் இவர்களின் தலைவர். எல்லா மனிதர்களையும் எல்லாக் காலத்திலும் உட்படுத்தும் இயற்கைச் சட்டம் ஒன்று உண்டு என்பது அவர் கருத்து. பின்னர் இத்தகைய அரசியற் கருத்துக்கள் ரோமானிய அறிஞர்களிடையே பரவலாயின.

**ரோமானிய அரசியற் கருத்துக்கள்:** தொடக்கத்தில் ஒரு நகரராச்சியமாக இருந்த ரோம் முதலில் இத்தாலி மீதும், பிறகு நாளடைவில் கடல்கடந்தும் படையெடுத்துப் பெரிய சாம்ராச்சியம் ஒன்றை கி. மு. முதல் நூற்றாண்டில் நிறுவிக்கொண்டது. சாம்ராச்சியப் பளுவினால் நகரராச்சியம் மறைந்துபோய் ஜூலியஸ் சீசரின் ராணுவ பலத்தை அடிப்படையாகக்கொண்ட ஆட்சி ஓங்கிற்று. இதன் விளைவாக ரோமானியக் குடிமை சாம்ராச்சிய மக்கள் அனைவருக்கும் அளிக்கப்பட்டது. சாம்ராச்சிய ஐக்கியத்தின் சின்னமாக விளங்கியவர்கள் ரோமானியச் சக்கரவர்த்திகள்; இவர்கள் தங்கட்கு ஒரு தெய்விக ஆட்சி உரிமை யுண்டென்று கருதலாயினர். இக்கருத்து நீண்ட நாள் நிலவி வந்தது. ரோமானியச் சாம்ராச்சியக் காலத்தில் அரசியல் ஒற்

றுமை, அமைதி, உலகக் குடிமை, வாழ்க்கையின் எல்லாவற்றையும் உளப்படுத்திய சட்டம் முதலிய கருத்துக்கள் தோன்றின. கிரேக்கர்களுடைய ஜனநாயக அரசியல் சுதந்திரக் கருத்துக்கள் சிறிது பின்னடைந்தன. ரோமானியர்கள் அரசியலையும் அறநிலையையும் வேறுபடுத்தினர். சமுதாயம் வேறு, இராச்சியம் வேறு என்னும் கருத்தும் அவர்களால் உருவாயிற்று. இராச்சியத்தினுள் அடங்கிய தனி மனிதர்கள் வேறு, இராச்சியம் வேறு என்பதும் அவர்களுடைய கருத்து. தனி மனிதனின் உரிமைகளைக் காப்பது இராச்சியத்தின் கடமையேயன்றி, அவ்வுரிமையில் தலையிடுவதன்று என்று அவர்கள் கண்ட முடிவிலிருந்து ரோமானிய தனிநபர்ச் சட்டம் தோன்றிற்று.

ஸ்டோயிக்குகளுடைய கருத்தான இயற்கைச் சட்டமும் இவர்கள் கருத்துக்களில் தோன்றிற்று. மனிதர்களிடையே சமத்துவத்தைப்பற்றிய கொள்கை ரோமானியர்களால் உருவாக்கப்பட்டதேயாம்.

ரோமானிய அரசியல் அறிஞர்களில் சிசரோ (கி. மு. 106-43) குறிப்பிடத்தக்கவர். இவர் பெரிய நாவலர்; சட்ட அறிஞர்; குடியரசு ஸ்தாபனங்களை நிலைபெறச் செய்வதில் ஊக்கம் கொண்டவர். அரிஸ்டாட்டில் கருதியது போலவே இவரும் மனிதனுடைய சமுதாய இயல்பூக்கமே இராச்சியம் அமைவதற்குக் காரணமாயிருக்கிறது என்று கூறினர். இராச்சியத்தின் கருத்துக்களை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் அலுவல் என்றார். இயற்கையறிவையும் அற நெறியையும் ஒட்டியே அரசியல் செயல்களும் சட்டங்களும் அமைய வேண்டும் என்றார். இவர் வற்புறுத்திய உலக ஐக்கியக் கொள்கையும், உலகப் பொதுச்சட்டக் கொள்கையும் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பாலிபியஸ் (சு. கி. மு. 205–சு. 122) என்னும் கிரேக்க அறிஞர் இத்தாலியில் வாழ்ந்து வந்தவர். கிரேக்கக் கருத்துக்களாகிய அரசாட்சிப் பாகுபாட்டு முறைகளையும், அரசியல் ஸ்தாபனங்கள் நிலைத்து இருக்கவேண்டியதன் அவசியத்தையும் இவர் வற்புறுத்தினர். கிரேக்க இராச்சியத்தை ரோமானியர் வென்று ஆண்டது நியாயம் என்று காட்டுவதே அவர் இயற்றிய வரலாறு என்னும் நூலின் நோக்கம்.

உலகப் பொதுமையுணர்ச்சியே (Cosmopolitanism) ரோமானியர்களால் உருவாக்கப்பட்ட முக்கியமான அரசியல் கருத்தாகும். ஸ்டோயிக்குகளின் கருத்துக்களையும் ரோமானியர்கள் ஏற்றுக்கொண்டு மேலும் வளர்த்தனர். முழுப்பலம் பொருந்திய சாம்ராச்சியக் கோட்பாடுகளும், அரசுத் தலைமைக் கோட்பாடும், சட்டத்தலைமைக் கோட்பாடும் ரோமானியர்களால் உருவாக்கப்பட்ட முக்கியமான அரசியல் கோட்பாடுகளாம். சி. எஸ். ஸ்ரீ.

**ஐரோப்பிய அரசியற் கருத்துக்கள்:** கி. பி. 1 ஆம் நூற்றுண்டு-கி. பி. 15 ஆம் நூற்றுண்டு: ரோமானியச் சாம்ராச்சியம் சிதைந்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவ மதம் பரவிற்று. கிறிஸ்தவ அறிஞர்களுடைய அரசியல் கருத்துக்கள் செனிக்கா (Seneca சு. கி. மு. 4-கி. பி. 65) என்னும் ரோமானிய அறிஞர் ஸ்டோயிக்குகளுடைய அரசியற் கருத்துக்களை மாற்றி வகுத்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அரசாங்கமும் சட்டமும் வேண்டப்படுவதற்குக் காரணம் மனிதனுடைய தீக்குணமே என்றும், இயற்கைச் சட்டம் என்று ஒன்று உண்டு என்றும், மனிதனுடைய அறிவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இச்சட்டமே அரசாங்கச் சட்டத்துக்கு அளவுகோலாகக் கொள்ளத்தக்கது என்றும் இவர் கூறினர்.

ஆயினும், கிறிஸ்தவ அறிஞர்கள் வேறொரு முக்கியமான கருத்தையும் கூறினர். அதாவது, இயற்கைச் சட்டமும் இறைவன் சட்டமும் ஒன்று; அச்சட்டத்தை மனிதனுடைய அறிவு ஒன்றைமட்டும்கொண்டு தெரிந்து கொள்ள முடியாது; அது இறைவனால் வெளிப்படுத்தப் படுவது; அவ்வெளிப்பாட்டினை ஆகமங்கள் வாயிலாக மக்கள் உணர்வர் என்பதாம். இடைக்காலம் முழுவதிலும் இயற்கைச் சட்டமும் தெய்விகச் சட்டமும் ஒரு பொருளின் இரு முகங்களாகக் கருதப்பட்டன. கிறிஸ்தவ மதக்கோட்பாட்டின்படி மனிதன் ஆதியில் குற்றமறியாத நிலையிலிருந்து இழிந்து பாவியானன். அவ்விழிவும், அவன் பாவங்களும் அரசாங்கம் தோன்றுவதற்கும் அதன் இன்றியமையாமைக்கும் காரணங்களாயின. குற்றமில்லாத மனிதனுக்கு இலௌகிக அரசாங்கம் வேண்டுவதில்லை. மனிதன் இழிந்துவிட்டதால் அரசாங்கம் தேவையாயிற்று. இது உலகியற் சட்ட அடிப்படையில் தோன்றிய பல ஸ்தாபனங்கள் ஏற்பட்டதற்குத் தக்க காரணமாயிற்று. இவ்வீழ்ச்சிக் கொள்கையைக்கொண்டு இவர்கள், இறைவன் திருமுன்பில் எல்லா மக்களும் சமம் என்னும் மதக் கோட்பாடும், உலகில் நாம் கண்ணுற் காணும் பல வேறுபாடுகளும் ஒன்றோடொன்று முரண்படாதவாறு, தம் சித்தாந்தத்தை அமைத்துக்கொண்டனர்.

கிறிஸ்தவ சமயக் கருத்துக்கள் மனிதனது இயல்பிலுள்ள இருமையை எடுத்துக் கூறின; இவ்விருமையானது மனிதனுடைய ஆன்மாவிற்கும் உடலிற்கும் உள்ள வேறுபாடு. இவ்வேறுபாடு அரசியல் துறையிலும் புகுந்தது. தெய்விகப் பொருள்களுக்கும் இலௌகிகப் பொருள்களுக்கும் வேறுபாடு காணப்பட்டது; தெய்விகத்துறையில் திருச்சபை தன்னைப் பிரதிநிதி என்று கருதிற்று. இலௌகிகத்துறையில் புனித ரோமானிய சாம்ராச்சியம் தன்னைப் பிரதிநிதியென்று கருதிற்று. திருச்சபைத் தலைவர்கள் தெய்விக விஷயங்களில் தங்களைவிட உயர்ந்த அதிகாரிகள் இல்லை என்று கருதினர். ஆயினும் சாம்ராச்சியத்தின்மீதும் திருச்சபைக்கு அதிகாரம் உண்டு என்று யாரும் கருதவில்லை.

கிறிஸ்தவ மதக்கோட்பாடு இங்கிலையில் இருக்கும் போது செயின்ட் அகஸ்டினுடைய இறை நகர் (Civitas Dei) என்னும் நூல் வெளியாயிற்று. அவர் மண்ணகருக்கும் விண்ணகருக்கும் வேறுபாடு கண்டார். ஆயினும் அவர் கூறிய மண்ணகரும் விண்ணகரும் முறையே சாம்ராச்சியத்தையும் திருச்சபையையும் குறிப்பதாகக் கொள்ளமுடியாது. அவர் அவ்விரு நகர்களுக்குமிடையே எடுத்துக்காட்டிய வேறுபாடு ஸ்தாபன முறையையோ சமுதாய வாழ்க்கையையோ பின்பற்றியதன்று; அது தனியொருவருடைய அறக்கோட்பாடுகளையும் சமயக்கோட்பாடுகளையும் பற்றியது. ஆயினும் செயின்ட் அகஸ்டினுடைய கோட்பாடுகள் பிற்காலத் திருச்சபையின் கருத்துக்களை யுருவாக்கப் பெரிதும் வழிகோலின. திருச்சபை இலௌகிகர்களைவிட உயர்ந்தது என்றும், சக்கரவர்த்தி திருச்சபைக்குக் கீழ்ப்படிந்து தனது அதிகாரத்தைச் செலுத்தவேண்டும் என்றும் அக்காலத்திற் கூறப்பட்டதேயன்றி, இலௌகிக வைதிக அதிகாரங்கள் இரண்டும் இறைவனிடமிருந்தே பெறப்படுவன என்பதை ஒருவரும் மறுக்கவில்லை.

இடைக்காலம் முழுவதிலும் இவ்விவாதம் தொடர்ந்து நடந்து வந்தது. இதனின்றும் போப்பின் அதிகாரமே உயர்ந்தது என்பாரும், சக்கரவர்த்தியின் அதிகாரமே உயர்ந்தது என்பாரும், இவ்விருவகைப்

பட்ட அதிகாரங்களுக்கும் அடங்கியே மக்கள் வாழ வேண்டும் என்பாரும் ஆக மூவகையினர் கருத்துக்களுக்கும் இடமேற்பட்டது.

பாடுவாவைச் சார்ந்த மார்சிலியஸ் (1270–1342) என்பவர் 1324-ல் டிபென்சார் பாசிஸ் (Defensor pacis) என்னும் நூல் ஒன்றை இயற்றினர். இந்நூலில் மார்சிலியஸ் திருச்சபைக்கு முழு அதிகாரம் உண்டு என்னும் கொள்கையை மறுத்து, இலௌகிக அதிகார எல்லையைக் குறுக்கி நிருணயிப்பதையே கருதினர். அச்சபைக்கு அதிகாரமே இல்லை என்று கூற ஒருவரும் துணியவில்லை. டான்டே (1265–1361) என்னும் இத்தாலிய அறிஞர் இயற்றிய டி மானர்க்கியா (De Monarchia) என்னும் நூலிலும், இலௌகிக விஷயங்களில் சாம்ராச்சியத்திற்கு முழு அதிகாரம் உண்டு என்று கூறப்பட்டுள்ளதாயினும், அவ்வதிகாரம் இறைவனிடமிருந்தே நேரடியாகப் பெறப்படுவது என்றும், இந்த இலௌகிக அதிகாரத்திற்கு இணையாகப் போப்பாட்சிக்கு வைதிக விஷயங்களில் பூரண அதிகாரம் உண்டு என்றும் கூறப்பட்டுள்ளன.

இலௌகிக அதிகாரத்திற்கு ஒரு சின்னமாக விளங்கிய புனித ரோமானிய சாம்ராச்சியம் அழிவுற்ற பிறகு, ஒரு புதுப்பிரச்சினை பிறந்தது. போப்பாட்சிக்கும் சாம்ராச்சியத்திற்கும் இடையே தோன்றிய முரண்பாடு, போப்பாட்சிக்கும் பல சிறு தேசிய இராச்சியங்களுக்கும் இடையே உள்ள முரண்பாடாக மாறிற்று. அன்றியும் போப்பாட்சிக்கும் ஒவ்வொரு தேசிய ராச்சியத்திலுமிருந்த தனித்தனித் திருச்சபைகளுக்கும் இடையேயும் ஒரு முரண்பாடு தோன்றலாயிற்று. பல நாடுகளில் இருந்த திருச்சபைகளும் போப்பின் தனியதிகாரத்திற்குட்பட்டே இருந்தன. மதத்தினின்றுந் தள்ளுகை, அரசுரிமை நீக்கம் முதலிய முறைகளைக் கையாண்டு, போப் மன்னர்களை மருட்டி வந்தார். தேசிய இராச்சியங்கள் தோன்றிய பிறகு திருச்சபைக்கு இவ்வளவு அதிகாரங்கள் உண்டு என்பது மறுக்கப்பட்டது ; மன்னர்கள் தங்கள் அதிகாரத்தை இறைவனிடமிருந்து நேரடியாகப் பெற்றுர்கள் என்னும் தெய்விக உரிமைக் கோட்பாடும் (Divine Right of Kings) உடன் தோன்றிற்று. அன்றியும், போப்பின் அதிகாரத்திற்குப் புறம்பான தேசியத் திருச்சபைகளும் இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. அதாவது அரசியல் துறையில் தேசியம் ஒரு கோட்பாடாக உருக்கொள்ளத் தொடங்கிற்று.

இடைக்கால அரசியற் கருத்துக்கள் பெரும்பாலும் சமயச்சார்பாகவே இருந்தன. சிசரோ, செனிக்கா என்னும் இரு அறிஞர்களுடைய கருத்துக்கள் இடைக்காலக் கருத்துக்களை யுருவாக்கப் பெரிதும் காரணமாயிருந்தன. சாலிஸ்பரியைச் சார்ந்த ஜான் என்பவர் 1159-ல் பாலிக்கிராட்டிகஸ் (Polycraticus) என்னும் நூல் ஒன்றை இயற்றினர். போப்பாட்சி கொண்டாடிய உரிமைகளின் சார்பாகக் கூறப்பட்ட கூற்றுக்களையெல்லாம் தொகுத்து இந்நூலில் அவர் கூறினர்.

1260-ல் இடைக்கால அரசியற் கருத்துத்துறையில் முக்கியமான நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது ; அதாவது அவ்வாண்டில் அரிஸ்டாட்டிலின் அரசியல் (Politics) என்னும் நூல் லத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டது. அச்சிறந்த நூல் அக்வைனஸ் (1227–1274) என்னும் அறிஞரின் நூலுக்குக் கருத்தூட்டியது. அரிஸ்டாட்டிலை நன்கு கற்ற அக்வைனஸ் இறையியற் களஞ்சியம் (Summa Theologica) என்னும் நூலை இயற்றினர். அந்நூலில் ஒழுங்கான ஆட்சிக்கும் கொடுங்கோலுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டிச் சட்டம் ஆள்பவனினும் உயர்ந்தது என்று கூறினர். ஆயினும் மனிதர்களால் இயற்றப்படும் சட்டங்கள் தெய்விகச் சட்டங்களினின்றும் தோன்றுபவை என்றும் அவர் கூறினர். அவர் கருத்துப்படி, எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவான ஓர் இயற்கைச் சட்டம் உண்டு. ஆதிபத்தியம் இறுதியில் மக்களிடம் காணப்படுவதே யன்றி, ஆள்வோரிடமில்லை என்னும் கருத்தும் ஓரளவுக்கு அவருக்கு உண்டு என்றே காண்கிறது. ஆயினும் இக்காரணத்தைக் கொண்டு, சாலிஸ்பரி ஜான் கூறியது போல் கொடுங்கோலனைக் கொல்லுவதில் குற்றமில்லை என்று அவர் கருதவில்லை. அரிஸ்டாட்டிலின் நூலைக் கற்றிருந்ததால் போப்பின் தனியாட்சியை அவரால் ஆதரிக்க முடியவில்லை ; ஆயினும் இராச்சியம் இலௌகிக நிலையிலேயே அமையும் ஒரு ஸ்தாபனம் என்னும் கருத்தையும் அவரால் முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இடைக்கால அரசியற் கோட்பாடுகளுக்கும் தற்கால அரசியற் கோட்பாடுகளுக்கும் இடையில் நிக்கோலா மாக்கியவெலி (1469–1527) என்னும் இத்தாலிய அறிஞருடைய கருத்துக்கள் இலங்குகின்றன. இவர் இயற்றிய முக்கியமான நூல் அரசன் (The Prince) என்பது. இந்நூலைக் கொடுங்கோலர்களின் வேதம் என்று சிலர் பழித்தனர். ஆயினும் தற்காலத்தில் இராச்சியத்திற்குப் பூரணமான இலௌகிகப் பண்புகளை ஏற்றிக் கூறியவர்களில் இவரே முதல்வர். இவர் கருத்துக்கள் அரசியல் துறையில் தேசியம் என்னும் கருத்து வளர்வதற்கு மிகவும் துணைபுரிந்தன. டைட்டஸ் லிவியசின் முதற்பத்துப் பகுதிகளைப்பற்றிய ஆராய்ச்சி (Discourses on the First Ten Books of Titus Livius) என்னும் நூலில், குடியரசு ஸ்தாபனங்களை மாக்கியவெலி பெரிதும் போற்றினர். ஆயினும் அவர் பூரண அதிகார இலௌகிக - அரசாங்கத்தால்தான் தேசிய ஐக்கியத்தை நிறுவ முடியும் என்று கருதினர். இக்கருத்தைக் கொண்டவர் போப்பாட்சியை எதிர்த்ததில் வியப்பில்லை. பயன்களை எய்த வழிகளை எவ்வாறு கையாளவேண்டும் என்று மாக்கியவெலி கூறும்போது, அறநெறியென்றும் மறநெறியென்றும் உள்ள வேறுபாட்டினை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இதனுல் அவர் அறநிலையே தேவையில்லாதது என்று கருதியதாகக் கூறமுடியாது. அவர் கூற்று அறத்தை மறுத்ததன்று ; அறத்தினின்றும் வேறுபட்டதேயாம். தனியொருவரின் ஒழுக்கங்கள் அறநிலைக்கு ஒத்திருக்க வேண்டும் என்பதே அவருடைய கருத்தும். அவர் கூற்றுக்கள் இராச்சியத்திற்குப் பொருந்துவனவே யன்றித் தனி வாழ்க்கையைக் கருதிக் கூறப்பட்டவையல்ல. "அரசனுடைய கடமை, வலிமை பொருந்திய இராச்சியத்தை நிறுவுவதேயன்றி, நல்ல இராச்சியத்தை நிறுவுவதன்று" என்பது அவர் கோட்பாடு. பிரபுக்கள் ஆட்சியும், கூலிப்படைகளும் விரும்பத்தகாதவை என்று அவர் கருதினர். தேசிய நன்மைக்கு விரோதமாகக் கூறப்படும் எந்தப் பற்றுக்களும், அறக்கோட்பாடுகளும் பயனற்றவை என்பது அவர் எண்ணம்.

மாக்கியவெலி சமயச் சீர்திருத்தக் கொள்கைகள் உருவாவதற்கு முன்பே தமது நூல்களை இயற்றிவிட்டார். அவரது கருத்துக்கள் முழுவதும் இலௌகிக முறையில் அமைந்தவை. சமயச் சீர்திருத்தம் ஏற்பட்டதும், தேசிய இராச்சியத்தைப்பற்றிச் சமயக் கருத்துக்களும் தோன்றலாயின.

ஆக்காமைச் சார்ந்த வில்லியம் (சு. 1300–1349), கியூசாவைச் சார்ந்த நிக்கலஸ் (1401–1464) என்பவர்கள் போப்பின் அதிகாரத்தை மிக உயர்ந்ததாக ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, எல்லாக் கிறிஸ்தவர்க

ளுடைய மொத்தக் கருத்துக்களையும் அறிந்து தேர வேண்டும் என்றனர். இடைக்காலப் போப்பாட்சியிற் புகுந்த பிளவு (Schism) 15 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் தீர்ந்ததும் இக்கருத்துக்களும் வலிவிழந்தன. 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய அறிஞர்கள், "கருத்து வேறுபாடுகளுக்கு முடிவுகாணப் போப்பின் அதி காரத்தைவிட உயர்ந்த கிறிஸ்தவப் பொது மக்க ளுடைய கருத்தை நாட வேண்டியதில்லை. சீர்திருத்த வாதிகளின் ஆன்மார்த்தக் கருத்துக்களே உண்மைக்கு வழிகாட்டி" என்று கருதினர்.

16 ஆம் நூற்றாண்டு: 16ஆம் நூற்றாண்டின் அரசி யற் கொள்கை அந்நாளில் ஐரோப்பாவில் தோன்றிய சமயச் சீர்திருத்தத்தை ஒட்டியதே ஆகும். இவ்வியக் கத்தைத் துவக்கிய மார்ட்டின் லூதர் (1483-1546) மன்னர்களின் ஆதரவை நாடினதால், யாவரும் அர சாங்கத்திற்கு அடிபணிந்து நடக்கவேண்டியது அவசிய மென்று வற்புறுத்தினர். அத்துடன் நாட்டரசாங் கங்கள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட முறையில் அரசியல் நடத்துவதுதான் முறையென்று கருதினர். பற்பல நாடுகளை இணைத்து, ஒரு சக்கரவர்த்தியின் ஆட்சியோ, போப்பின் அதிகாரமோ ஏற்படுத்துவது நல்லதன்று என்பது அவர் நோக்கம். மேலும், ஒவ்வொரு நாட்டி லும் திருச்சபையின் அதிகாரமும், அரசியல் ஆட்சியும் தனிப்பட்ட முறையிலே வேறுபட்டிருக்க வேண்டு மென்று வற்புறுத்தினர். இவ்விதம் சில ஆழ்ந்த கருத் துக்களை வெளியிட்டிருந்தபோதிலும், மார்ட்டின் லூத ருக்கு அரசியலில் ஈடுபாடு மிகுதி எனக் கூறமுடியாது. மதச் சீர்திருத்தமே அவரது முக்கிய நோக்கம். மேலும் அவர் கொள்கைகள் சில ஒன்றுக்கொன்று முரண் பட்டவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட் டாக, மக்கள் அரசாங்கத்திற்கு எக்காலத்திலும் அடி பணிந்து நடக்கவேண்டுமென்று முதலில் வற்புறுத்தி னர். ஆனால் பின், கொடுங்கோல் மன்னனை எதிர்க் கலாமென்று கூறினர்.

லூதரின் மாணாக்கர் மெலாங்தான் என்பவர் அரசியல் கொள்கையில் தலைசிறந்த ஒரு இடம்பெற உரிமை யுள்ளவர்; புகழ்பெற்ற பேரறிஞர். அரிஸ்டாட்டிலின் கொள்கையில் பற்றுடையவர். முக்கியமாக இயற் கைச் சட்டத்தைத் தழுவியே அரசியலையும், மத ஸ்தாபனங்களையும் நடத்த விரும்பினர். லூதரைப் போல் மன்னனாட்சியையும் தனிநாட்டு உரிமையையும் ஆதரித்தார். ஆனால் இறுதியில் பிரபுக்களாட்சியை யும் போற்றினர்.

சமயச் சீர்திருத்தக் காலத்தில் ஐரோப்பாவில் பல தலைவர்கள் தோன்றினர். ஸ்விங்லி, கால்வின் என்ப வர்கள் இவர்களுள் தலைசிறந்தவர்கள். ஸ்விங்லி (1484-1531), "அரசியலும் சமயமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; இரண்டும் ஒன்றாக இணைக்கப் பட்டு ஒரே அமைப்பில் இருக்கவேண்டுபவை" என்று கருதினர். சுவிட்சர்லாந்தில் நடப்பிலிருந்த குடியரசு அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அதுபோன்ற குடி யரசைப் பரவச் செய்வதே அவர் குறிக்கோளாயிற்று.

சமயச் சீர்திருத்தத்தில் மிகவும் ஈடுபட்டவர் கால் வின் (1509-64). இவரது போதனைகள் அரசியல் கொள்கைகளை மிகவும் பாதித்தன. நுண்ணிய வழக் கறிஞராகிய இப்பிரெஞ்சுத் தலைவர் திருச்சபைக்குப் புதிய அமைப்பு வகுத்தார். சட்டத்திற்கு அடிபணிந்து மக்கள் வாழவேண்டுமென்பதை நன்கு வற்புறுத்தினர். சமய வழியிலும் அரசியல் துறையிலும் நிபந்தனைக்குட் பட்ட வாழ்வின் பெருமையை எடுத்துக் காட்டினர். இவர் மதமும் அரசியலும் ஐக்கியப்பட்டு ஒன்றாக இருக்கவேண்டுமென்ற கருத்துடையவரல்லர்; இரண் டும் தனித்தனியாக அவ்வவற்றின் நிபந்தனைக்குள் அமையவேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றினர். இவர் தாமே ஜெனீவாவில் ஒரு தேவப் பேராட்சியை அமைத்து, அந்நகர மக்களை அவ்வாட்சிக்குட்படச் செய்து, சிலகாலம் அங்கு வசித்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும். அரசியலமைப்புப் பற்றித் தனிப்பட்ட கருத்துக்களொன்றும் வற்புறுத்தவில்லையாயினும், பிர புக்களாட்சிதான் அவருக்குப் பிடித்திருந்ததாகத் தெரி கிறது. அரசாங்கம் கொடுங்கோல் நடத்தத் துணிந் தால், அதைக் கண்டித்து அகற்ற மக்களுக்கு உரிமை யுண்டென அவர் வாதாடினர். கால்வினின் கொள்கை கள் ஐரோப்பாவில் பல நாடுகளில் பின்பற்றப்பட்டன. சுதந்திர வளர்ச்சிக்கும் இவர் கொள்கைகள் மிகவும் ஊக்கமளித்தன. ஒடுக்கப்பட்ட சிறுபான்மையோர் பல நாடுகளிலும் இவரது கருத்துக்களை மேற்கொண்டதால் அவர்களுடைய விடுதலைக் கிணங்க, இவர் கொள்கை களை அமைத்துக் கொண்டார். மேலும் கால்வின் திருச் சபையில் மக்களாட்சியை ஆதரித்தார். இக்கருத்து அரசாங்கத் துறையிலும் பரவியது.

16ஆம் நூற்றாண்டில் பொதுவுடைமைக் கருத்துக் கள் ஐரோப்பாவில் தலைதூக்கின. 'ஆனபாப்டிஸ்டுக் கள்' எனும் வகையினர், ஜெர்மனி, நெதர்லாந்து முத லிய நாடுகளில் இக்கொள்கையைக் கையாண்டு வந்த னர். அரசாங்கம் இவர்களை அடக்கிவிட்டமையால் மொரேவியாவில் குடிபுகுந்து, ஒரு நூற்றாண்டு வரையில் இவர்கள் தம் கருத்துப்படிப் பொதுவுடைமை அமைத்து ஆண்டு வந்தனர். மக்களின் பிரதிநிதிகளாக, முதியோர்களடங்கிய குழு ஒன்று ஆட்சி நடத்தியது. ஆங்கிலேயரான மோர் என்பவர் (1480-1535), பொது வுடைமையை மேற்கொண்ட ஒரு புதுநாடு எவ்விதம் நடக்கலாமென்று தம் நூலில் எழுதினர்.

16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மன்னனின் அதி காரத்தைக் குறைக்கும் பொருட்டுச் சில கொள்கைகள் தோன்றின. இதற்கு டச்சு மக்களின் கிளர்ச்சி ஆதரவா யிருந்தது. இதன் பயனாகத் தேசிய சுதந்திரம், மதச் சுதந்திரம், தனி மனிதன் சுதந்திரம், இவைபற்றிய கொள்கைகள் தலையெடுத்தன. அரசாங்கத் துறை யில் கூட்டுறவுக் கொள்கையை டச்சுக்காரர்கள் ஆத ரித்தனர். ஆகவே, ஒடுக்கப்பட்ட சிறுபான்மை யோருக்கு ஒரு அடைக்கலமாக ஹாலந்து விளங்கியது.

மன்னனின் ஆதிக்கத்தைக் குறைக்கக் கருதி வாதா டியவருள் இராஸ்மசு என்பவர் (1466-1536) ஒரு பேரறிஞர். தலைமுறையாய் வரும் மன்னனாட்சியால் நிகழும் தீங்கையும், மக்களின் பிரதிநிதிச் சமூகங்களால் கிட்டும் நன்மைகளையும்பற்றி இவர் எடுத்து விளக்கினர்.

மேலும், அரசியல் ஒப்பந்தக் கொள்கைகள் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரவின. ஹாட்மென் (1524-90) போன்றவர் இக்கொள்கையைக் கையாண்டு வந்தனர். மன்னனாட்சியைக் கண்டித்து எழுதிய அறிஞர்களில் புகழ் பெற்றவர் ஆல்தூசியசு (1557-1638) என்பவர். அவர் அரசியல் ஒப்பந்தக் கொள் கையை நன்கு விளக்கினர். "மக்களுக்கும் மன்னனுக் கும் ஒப்பந்தம் உண்டு. அன்றியும் நாட்டின் ஒவ்வொரு பகுதியும் ஒப்பந்தத்தின்மேல்தான் அமையவேண்டி யது" என்று கருதினர். இது கூட்டுமுறைக் கொள் கையை வலுப்படுத்தியது. மேலும், மன்னனின் அதி காரம் மக்களிடமிருந்து வருவதேயன்றிக் கடவுளிட மிருந்தன்று என்று ஊக்கமாய் வற்புறுத்தினர்.

மன்னன் நிலைக்குப் பாதகமாக 16ஆம் நூற்றாண்டில் தோன்றியவர்களுள் மிக்க ஊக்கமுடையவர்கள் சமயச்

சீர்திருத்த எதிரியக்கக்காரர்கள் என்ற ரோமன் கத்தோலிக்கர்களாவர். இவர்கள் மதஸ்தாபனங்களின் ஊழல்களையும் பூசல்களையும் அகற்ற முயன்றதோடு, மன்னனின் ஆட்சி நிபந்தனைக்குட்பட்டிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இயேசு சங்கம் அமைத்து ஊழியஞ் செய்த இக்னேஷியஸ் லயோலா (1491-1556) அரசாங்கம் மனித அமைப்பென்றும், இலௌகிக நன்மையைக் கருதியே தோன்றியுள்ளதென்றும் கூறினர். ஆனால், மத விஷயத்தில் கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்தவரென்றும், ஒவ்வொரு நாட்டுச் சட்டத்தைவிட உயர்வுற்றது இயற்கைச் சட்டந்தானென்றும், இது ஈசன் உள்ளத்தில் தோன்றியதென்றும் இவர் விளக்கினர்.

இந்த இயக்கத்தலைவர்களிடையே சில நுண்ணிய அரசியல் அறிஞர்கள் தோன்றினர். அவர்களுள் ஜுவான் மரியானா (Juan Mariana 1536-1624), சுவாரஸ் (Suaraz 1548-1617), ராபர்ட் பெல்லார்மின் (Robert Bellarmin 1542-1621) ஆகியோர் முக்கியமானவர்கள். சில கருத்துக்களில் வேற்றுமை இருந்தபோதிலும் இயற்கைச் சட்டம், அரசியல் ஒப்பந்தம், மன்னனின் அதிகாரத்தைக் குறைப்பது முதலான விஷயங்களில் இவர்கள் யாவரும் ஒரே கொள்கையைத் தான் கையாண்டனர். கே. க.

17 ஆம் நூற்றாண்டு: 17ஆம் நூற்றாண்டில் பல்வேறு துறைகளிலும் ஒப்பற்ற அறிவு வளர்ச்சி தோன்றிற்று. முதன் முதலாக மக்கள் எதையும் தீர ஆலோசித்து முடிவுக்குவரும் விஞ்ஞான ஆராய்ச்சி முறையை மேற்கொண்டனர். ஹாப்ஸ், லாக், மில்ட்டன் போன்ற புகழ் பெற்ற அரசியல் அறிஞர்கள் மனித வருக்கத்தின் அரசியல் அறிவு வளர்ச்சிக்கு உதவி செய்திருந்தபோதிலும், அவர்களும் சிறிது ஒருசார்பானவர்களே. ஸ்பினோசா (Spinoza 1632-77) என்னும் அறிஞர் ஒரு தனி முறையில் அரசியல் கொள்கைகளை ஆராய்ந்தார். ஸ்பினோசா எழுதிய அரசியற் கட்டுரைகள் என்னும் நூலில் அரசியற் கலையைச் சமநோக்குடன் ஆராயவேண்டுமென்று கூறியுள்ளார். 17ஆம் நூற்றாண்டில் அரசியல் துறையில் இம்மாதிரியான கொள்கையைக் கையாண்டவர்கள் ஹாரிங்டன், ஸ்பினோசா, பூபண்டார்ப் (Pufendorf) என்னும் மூவர்.

இங்கிலாந்தில் 17 ஆம் நூற்றாண்டில் அரசியல் நிலையில் போர் நீடித்து நடந்தது ஸ்டூவர்ட் மன்னர்களின் வரம்பிலா ஆட்சியைத் திருச்சபைகளும், பார்லிமென்டும் எதிர்த்தன. ஐரோப்பாவிலிருந்ததுபோல் இங்கிலாந்திலும் இதன் விளைவாக மதச்சிறுபான்மையோர், பொது மக்களுக்கே ஆதிக்கமும், உரிமைகளும் இருக்க வேண்டுமென்று வாதாடினர். இதற்கு நேர்மாறாக I-ம் ஜேம்ஸ், '' மன்னனே வரம்பிலா அதிகாரி; எவருக்கும் அவனை எதிர்க்க உரிமை இல்லை '' யென்று கூறினான். மன்னன் கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் மட்டுமே கட்டுப்பட்டவனென்றும், மக்களுக்கும் நீதிக்கும் புறம்பானவன் என்றும் கருதினான். மற்றும் மன்னனுக்கும் மக்களுக்குமிடையே ஒருவித ஒப்பந்தமும் இல்லையென்றும், மக்களுக்குக் கடமைகள் உண்டேயன்றி உரிமைகள் இல்லையென்றும் கூறினான். அரசன் தனது முடிசூட்டு வாக்குறுதிக்கு மட்டுமே கட்டுப்பட்டவன். இதற்குத்தான் தெய்விக உரிமைக்கொள்கை (Divine Right Theory) என்று பெயர். இக்கொள்கைகளை ஆங்கிலிகத் திருச்சபை (Anglican Church) முழு மனத்துடன் ஆதரித்தது.

பேக்கன் (1561-1626) டியூடர் (Tudor) அரசாட்சியைப் போற்றியுள்ளார். ஹாப்ஸ் (1588-1679) எழுதிய லெவையதன் (Leviathan) என்னும் நூல் இங்கிலாந்தில் ஒரு பெருங்கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று. திருச்சபை அரசாங்கத்தின் ஒரு பகுதி. அரசாங்கமே சமூக ஒப்பந்தத்தினால் உண்டாயிற்று. சமூகமும், அரசாங்கமும் உண்டாவதற்கு முன்னால் மனிதன் இயற்கை நிலையில் இருந்தான். இந்நிலையை ஹாப்ஸ் எல்லோரும் எல்லோரோடும் செய்யும் போர்நிலை (State of war of all against all) என்றும், அந்நிலையில் நீதிமுறையின்மையால் மனிதனுடைய வாழ்க்கையே தனிமையாகவும், கேவலமாகவும் இருந்ததென்றும் கூறுகிறார். இக்கொடுமையான நிலையிலிருந்து விடுபட மக்கள் ஒன்றுகூடித் தங்கள் இயற்கை உரிமைகளை நாடாளும் அதிபதியிடம் கொடுத்து அரசியல் ஆட்சிக்குட்பட்டனர். இப்வொப்பந்தத்தைத் தனிமனிதன் மீறினால், முன்போல் அராஜகமும் அதன் தீய விளைவுகளுமே உண்டாகும் என்று விளக்கினர். பலமான ஆட்சிமுறைக்கு ஹாப்ஸின் கொள்கை ஊன்றுகோலாயிற்று.

இச்சமயத்தில் ஜனநாயகக் கொள்கைகளை ஆதரித்தவர்களில் மில்ட்டனும் (1608-74), லாக்கும் (1632-1704) தலைசிறந்தவர்கள். இவர்களின் தத்துவங்கள் மக்களிடையே மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தன. மதத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையே தொடர்பு இருத்தல் கூடாது. சுதந்திரம் மக்களின் பிறப்புரிமையாதலால், மில்ட்டன் பொதுமக்கள் ஆதிக்கத்தை ஆதரித்தார். மில்ட்டனுக்குப் பொதுமக்கள் சபைகளின் உபயோகத்தில் நம்பிக்கையில்லை. அவர் பிரதிநிதி ஆட்சியைவிட ஜனநாயக ஆட்சியே மேன்மையானதென்று கருதினர். பொதுமக்கட்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்பதும், தகுதியுடையவர்களுக்கே அதிகாரம் இருக்க வேண்டும் என்பதும் அவர் கொள்கைகள். லாக் எழுதிய முக்கிய நூல் சிவில் அரசாங்கத்தைப் பற்றிய கட்டுரை (Essay on Civil Government) என்பது. சமூக ஒப்பந்தம், இயற்கைச் சட்டம், இயற்கைநிலை, அரசாங்கத்தைச் சில சமயங்களில் எதிர்க்கும் உரிமை போன்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது அவர் அரசியல் இலட்சியம். இயற்கை நிலையில் மக்கள் சமாதான உள்ளமும், பரோபகார எண்ணமும் கொண்டவர்களாக இருந்தனர். ஆனால் அந்த நிலையில் எது இயற்கைப்படி நியாயம் என்பதில் ஐயம் தோன்றியபோது, அதைத் தீர்க்க ஒரு பொது அமைப்பு இல்லாமையால், மக்கள் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி நேர்ந்தது. இவ்வொப்பந்தத்தினால் மக்கள் தங்கள் இயற்கை உரிமைகளை நிலைநாட்டிக்கொண்டனர். அவ்வரசாங்கம் நீதி தவறி, மக்கள் உரிமைகளைச் சிதைக்குமாயின், மக்களுக்கு அதை எதிர்க்க உரிமையுண்டு என்று லாக் நம்பினர். லாக் அரசியல் இலாகாக்களின் அமைப்பைப் பற்றியும், அவைகளின் பிரிவினை, அதிகாரம் முதலியவற்றைப் பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மன்னர்களின் வரம்பிலா ஆட்சிக்கு ஏற்றதாக இருந்தது. இந்தச் சூழ்நிலை பொதுவாக அரசியல் கருத்துக்கள் உருப்பெற உதவாதபோதிலும் ஸ்பினோசா, பூபண்டார்ப் போன்ற அறிஞர்கள் இக்காலத்தில் சிறந்த நூல்களை இயற்றினர்.

ஸ்பினோசா ஒரு போர்ச்சுகேசிய யூதர். தாய்நாட்டில் மதக் கொடுமையும், அரசாங்கக் கொடுமையும் தாங்காமல் ஹாலந்தில் குடிபுகுந்தார். தம் தாய்நாட்டில் அனுபவித்த கொடுமைகள் ஸ்பினோசாவின் கொள்கைகளை உருவாக்கின. சமய விஷயத்தில் அறநோக்கத்தையும், அரசியலில் பிரபுக்கள் ஆட்சியையும் இவர் ஆதரித்தார். சமூக ஒப்பந்தம், அரசியல் ஆதிக்கம், தனி மனிதனின் சுதந்திரம் போன்ற விஷயங்களில் ஹாப்ஸுக்

கும் இவருக்கும் சில ஒற்றுமைகள் இருப்பினும், பல வேற்றுமைகள் இருந்தன.

பூபண்டார்ப் (1632–94) ஒரு ஜெர்மானிய அறிஞர். அவர் இயற்கை நிலையைப் பற்றியும், சமூக ஒப்பந்தத்தைப் பற்றியும், ஹாப்ஸ் போலவே கருத்துக் கொண்டவர். அவர் அரசியல் ஆதிக்கம், சர்வதேசத் தொடர்பு, இவற்றைப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சிகள் செய்தார்.

18ஆம் நூற்றுண்டு: இந்நூற்றுண்டின் முற்பகுதியில் தலைசிறந்த அரசியல் நூல் எதுவும் இயற்றப்படவில்லை. ஐரோப்பாவில் சர்வதேசச் சட்டத்திலும், இங்கிலாந்தில் சமூக ஒப்பந்தக் கொள்கையை எதிர்ப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. பொதுவாக மன்னனும் அரசாங்கமும் ஒன்ருக எண்ணப்பட்டதால் ஆதிபத்தியத்தின் தன்மையும் அதன் இருப்பிடமும் இந்நூற்றுண்டின் முற்பகுதியில் ஆராயப்படவில்லை. ஆனல் இந்நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்றிய புரட்சிகரமான கொள்கைகள் இப்பொழுதே விதைக்கப்பட்டன. 18ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் திருச்சபையையும், பிற்பகுதியில் அரசாங்கத்தையும் பிரெஞ்சு ஆசிரியர்கள் எதிர்த்தெழுதினர். பிற்பகுதியில் ஆங்கிலேய அரசியல் முறைகளும் கொள்கைகளும் ஐரோப்பாவில் செல்வாக்குப் பெற்றன.

18 ஆம் நூற்றுண்டில் இயற்கைச் சட்டத்திற்குத் தனிப்பெருமை ஏற்பட்டது. இக்காலத்து அரசியல் வாதிகளுக்கு வரலாற்று உணர்ச்சி இல்லை. புராதனப் பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஓங்கியதால், ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல அரசியல் சட்டங்களைவிடப் பொதுவான இயற்கைச் சட்டமே மேல் எனப் பலர் வற்புறுத்தினர். அரசாங்கம் தனி மனிதனின் சுதந்திரத்தில் தலையிடுதல் தவறென்றும், மக்களின் இயற்கை உரிமைகள் பராதீனப்படுத்தப்படாதவை என்றும் கூறினர்.

இந்நூற்றுண்டில் கிறிஸ்தியன் தாமசியஸ் (Christian Thomasius 1655–1728), கிறிஸ்தியன் வால்ப் (Christian Wolff 1679–1754) என்னும் இரண்டு ஜெர்மானிய ஆசிரியர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் சர்வதேசச் சட்டத்தின் வளர்ச்சிக்கு உதவினர். இத்தாலிய சட்ட நிபுணராயிருந்த வீக்கோ (Vico 1668–1744) என்பவர் இயற்கைச் சட்டங்கள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் ஏற்றவை என்பதையும், பகுத்தறிவுக்கேற்றவை என்பதையும் ஒப்பவில்லை. இதற்கு மாருக அரசியல் கருத்துக்களும் ஸ்தாபனங்களும் ஒரு நாட்டு மக்களின் பண்புகளுக்கு ஏற்பவும், தேவைகளுக்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் மாறுதலடையுமெனக் கருதினர். வீக்கோவின் கருத்துக்களைப் பிறகு மான்டெஸ்க்யூ(1689–1755)ஏற்றுக்கொண்டார். வரலாற்று வாயிலாகச் சமூகப் பிரச்சினைகளைக் கருதும் பழக்கம் முதன்முதலில் வீக்கோவால் துவக்கப்பெற்றது.

இங்கிலாந்தில் போலிங்புரோக் பிரபு (Viscount Bolinghroke 1678–1751) என்பவரும் டேவிட் ஹியூம் (David Hume 1711-1776) என்பவரும் அரசியல் துறையில் நூல்கள் செய்தனர். போலிங்புரோக்கின் கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக இருந்தன. மேலும் அவர் தாம் கூறிய கொள்கைகளை நடைமுறையில் கையாளவில்லை. அவர் ஜனநாயகக் கொள்கைகளை ஆதரித்ததுமல்லாமல், மக்களுக்கும் மன்னனுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் இருப்பதாகவும் நம்பினுர்.

ஹியூம் ஒரு சிறந்த அறிஞர்; அன்றியும் அக்காலத்து அரசியற் கொள்கைகளில் பெருங்கிளர்ச்சியையும் உண்டாக்கினவர். அவர் சமூக ஒப்பந்தக் கொள்கையையும், மதமே அரசியலைவிடச் சிறந்ததென்ற கொள்கையையும் மறுத்து, அரசியற் கொள்கைகள் வரலாற்றையும், உளவியலையும் அடிப்படையாகக்கொண்டிருக்க வேண்டுமென்று கூறினர். மக்கள் இயற்கையாகத் தந்நலமும் பொருமைக்குணமு முடையவர்களாதலால் அவர்களுக்குக் கட்டுப்பாடு தேவையாக இருக்கிறது. இக்கட்டுப்பாடு, சட்டங்கள் மூலமாகவும் நீதிபதிகள் மூலமாகவும் நிறைவேற்றப்படுமாதலால், இவற்றிற்கெல்லாம் அரசாங்கம் இன்றியமையாதது. எனவே அரசாங்கம் மக்கள் நன்மைக்குப் பயன்படுவதால் அவசியமானதேயன்றி, ஒப்பந்தத்தினுல் ஏற்பட்டதில்லை என்றும், அரசாங்க அதிகாரம் நாட்டின் செல்வப் பங்கீட்டைப் பொறுத்தது என்றும் ஹியூம் கூறினர். இங்கிலாந்தில் காமன்ஸ் சபையின் அதிகாரம் பெருகுவதைக் கண்டு, அரசியல் சங்கங்களின் அவசியத்தையும், பத்திரிகைச் சுதந்திரத்தின் அவசியத்தையும் பற்றி அவர் விளக்கினுர்.

இச்சமயம் ஆங்கிலேயர்களிடையே ஜனநாயகக்கொள்கைகள் பரவி, அவர்கள் தங்கள் சட்டசபைப் பிரதிநிதிகளை அடக்கவும் ஆரம்பித்தனர். தனித்துவம் (த. க.) என்றும், பயன் முதற்கொள்கை (த. க.) என்றும் இரண்டு முறைகளில் இயற்கை உரிமைகள் பற்றிய கருத்து இங்கிலாந்தில் கையாளப்பட்டது.

இவ்விரண்டாவது முறையை மேற்கொண்டவர்களில் பெந்தாம் (1748–1832), ஆஸ்ட்டின் (1790–1859), ஜான் ஸ்டூவர்ட் மில் (1806–73) என்பவர்கள் சிறந்தவர்கள். இவர்கள் இயற்கை நிலை, சமூக ஒப்பந்தம், இயற்கைச் சட்டம், இயற்கை உரிமைகள் என்பவற்றைப் பற்றிக் கூறினுர்கள்; அரசாங்கம் சமூக நலத்திற்காக ஏற்பட்டதால் அதற்கு முழு அதிகாரமும் இருக்கவேண்டும் என்றும், அதை எதிர்ப்பது சட்டப்படி முறையன்று என்றும் சொன்னுர்கள். பெந்தாம் அரசியலையும் சட்டங்களையும் சீர்திருத்தும் வழிகளைத் தாம் இயற்றிய பல நூல்களில் விரிவாகக் கூறுகிறுர். அவருக்குப் புராதனப் பழக்க வழக்கங்களிலும் தனி இனப் பண்பாடுகளிலும் பற்றில்லை. அரசாங்கத்திற்கு அளவிறந்த அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும், அரசியல் அமைப்பு எழுதப்பட வேண்டியது அவசியமாயினும் அதைத் திருத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும் என்றும் நம்பினுர். தனி மனிதனின் உரிமைகளைக் காப்பது அரசாங்கத்தின் கடமையன்று. ஒவ்வோர் உரிமைக்கும் ஏற்ற கடமை இருக்கின்றது. அக்கடமையின் அளவை அதனுடைய பயனேயன்றி வேறெதுவுமில்லை. தனி மனிதனின் உரிமைகள் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டவை. அவை சட்ட உரிமைகள், அற உரிமைகள் என இரண்டு வகை. தனி மனிதனுக்கு மூன்று வகைக் கடமைகள் உள்ளன. அவை அரசியல், சமய, அறக்கடமைகளாம். அவனுக்குச் சட்டப்படி அரசாங்கத்தை எதிர்க்க உரிமையில்லை; சட்டப்படி அரசியலுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவே கடமைப்பட்டவன் என்று பெந்தாம் கூறினர். மேலும் ஜனநாயக ஆட்சியை மிகவும் போற்றி, அதற்குத் தேவையான ஆண்டுப் பிரதிநிதி சபை, வாக்குச் சீட்டு முறையில் தேர்தல், வயதுவந்தோர் வாக்குரிமை என்பவைகளை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறினுர். பெந்தாம் கொள்கைகள் பலவற்றை அனுசரித்த ஆஸ்ட்டின் சட்டத்தைத் தெய்விகச் சட்டம், மானிடச் சட்டம் என்று இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளார். ஆதிபத்தியத்தைப் பற்றி இவர் வகுத்த முடிவுகள் அரசியல்

கலைக்கே அடிப்படையாக அமைந்துள்ளன. பெந்தாமும், ஜேம்ஸ் மில், ஜான் ஸ்டுவர்ட் மில் போன்ற அவர் சீடர்களும் இங்கிலாந்தில் நிகழ்ந்த பிரதிநிதிச் சபைச் சீர்திருத்தங்களுக்கும் ஆங்கிலேயப் பேரரசின் பல பகுதிகளிலும் தோன்றிய பல நிருவாகச் சீர்திருத்தங்களுக்கும் காரணமாவர்.

18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு அரசாங்கத்தின் தனி ஆட்சியைப் பலமாக எதிர்த்தவர்களில் வால்ட்டேர் (Voltaire 1694-1778) சிறந்தவர். அவர் மதாதிபத்தியத்தை எதிர்த்தார். சட்டசபை, தேர்தல்கள், பத்திரிகைகள் முதலியவைகட்குச் சுதந்திரமும் இடைத்தர வகுப்பினருக்கு அரசியல் உரிமைகளும் கொடுக்கப்படவேண்டுமென்று வால்ட்டேர் வாதாடினார். "ஏழைகளின் குடியரசைவிடக் காருணிய முடியரசே மேல்; ஆனால் மன்னர் பொறுப்பின்றி ஆளக்கூடுமாதலால் ஜனநாயகமே விரும்பத் தக்கது" என்பவை அவர் கொள்கைகள்.

18ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வெளியான அரசியல் நூல்களில் மான்டெஸ்க்யூ (1689-1755) இயற்றிய சட்டங்களின் சாரம் (Spirit of the Laws) என்னும் நூலே பலநாட்டு மக்களின் அரசியற் கொள்கைகளைப் பாகுபாடு செய்யவும், அரசியல் சீர்திருத்தங்களைத் தூண்டவும் உதவிற்று. மான்டெஸ்க்யூ வரலாற்றுக் கொள்கையினரைச் (Historical School) சார்ந்தவர். அவர் பலநாட்டு அரசாங்கங்களையும் ஆராய்ந்து, ஒப்பிட்டுப் பார்த்துப் பிறகே தம் கருத்துக்களை வெளியிட்டார். மான்டெஸ்க்யூவின் கொள்கைகளில் மிகச் சிறந்தது அதிகாரப் பிரிவினைக் கொள்கை. அரசாங்க அதிகாரம் நிருவாகப் பகுதி, சட்ட மியற்றும் பகுதி, நீதிப்பகுதி என மூன்றாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும், அவை வெவ்வேறு இலாகாக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறு பிரிக்கப்படாமலிருந்தால் அரசாங்கம் தனி ஆட்சிக்கு உள்ளாகும் என்றும் அவர் கருதினார். மான்டெஸ்க்யூ சுதந்திரத்தின் தன்மை, வகைகள் முதலியன வற்றைப் பற்றித் தீர ஆராய்ந்தார். அரசியல் சுதந்திரம் கட்டுப்பாடுள்ள அரசாங்கத்திலேதான் இயலுமென்று அவர் நம்பினார்.

பிரெஞ்சு ஆசிரியரான ரூசோவை (1844-1910) 18 ஆம் நூற்றாண்டிலேயே மிகவும் சிறந்த அரசியல் அறிஞர் எனக் கூறலாம். அவர் இயற்றிய சமூக ஒப்பந்தம்(Social Contract) என்னும் நூலில் சமூக ஒப்பந்தம், இயற்கைநிலை முதலிய கருத்துக்கட்குப் புத்துயிர் அளித்துப் புதிய முறையில் ஆராய்ந்ததின் மூலம் குடியரசே மேன்மையான அரசியல் முறையென விளக்கியுள்ளார். ஹாப்ஸ், லாக் ஆகியோரைப் போலல்லாமல் ரூசோ இயற்கை நிலையை மிகவும் புகழ்ந்துள்ளார். சமூக—அரசியல் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதால் மக்கள் தங்கள் பூரண சுதந்திரத்தை இழந்து, தாங்களே தங்களுக்கு விலங்குகளை மாட்டிக்கொண்டனராம். ரூசோ, கிரேக்க, ரோமானிய ஜனநாயக நகரராச்சியங்களை (Democratic City States) மிகவும் விரும்பினர். ரூசோவின் கொள்கைகள் பிரான்சில் நேர்ந்த புரட்சிக்கு மூலம் என்பர்.

பிரெஞ்சுப் புரட்சி நடந்த சமயம் ஜெர்மனியில் இமான்யுவல் கான்ட் (1724-1804) என்னும் புகழ் பெற்ற அரசியல் அறிஞர் இருந்தார். அவர் கருத்துக் கொள்கையை (Idealism) நிறுவியவர். இது லாக், ஹியூம் போன்றவர்கள் போதித்த கொள்கைகட்கு எதிரிடையான கொள்கைகளைக் கொண்டது. இவருடைய முக்கியக் கொள்கை, அரசியற்கலை நீதிநெறியைத் தழுவியது என்பதுதான். இவர் உரிமை, சொத்து, சட்டம், இராச்சியம் முதலிய கருத்துக்கட்குப் புதுப் பொருள் கற்பித்தனர். இராச்சியம் மக்களின் ஒப்பந்தத்தினால் ஏற்பட்டதென நம்பினர். அரசியல் விஷயங்களில் ரூசோவையும் அதிகாரப் பிரிவினையில் மான்டெஸ்க்யூவையும் கான்ட் பின்பற்றினர். கான்டின் கருத்துக்கொள்கைகளை 19 ஆம் நூற்றாண்டில் பிக்டே (Fichte), ஹேகல், கிரீன், போசன்கிட் (Bosanquet) என்பவர்கள் வளர்த்துப் பரப்பினர். ஏ. கே. வ.

தற்காலம்: பிரெஞ்சுப் புரட்சி, 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற முழக்கங்களோடு தொடங்கியது. பிரத்தியேக உரிமையைக் கொண்டாடியவர்களுக்கு எதிராகச் சட்டப்படி நாட்டு மக்கள் யாவருக்கும் சம உரிமை உண்டு என்னும் கருத்துப் பரவிற்று. பிரெஞ்சுப் புரட்சியை அடக்க அயல் நாடுகள் முயன்றபோது, சகோதரத்துவம் தேசியமாக மாறிற்று. நெப்போலியன் ஐரோப்பிய யுத்தங்களில் வெற்றிபெறவே, ரூசோ கூறிய பொதுமக்கள் கருத்து (General will) தேசத்தலைவரிடம் விளங்குவதாகக் கொள்ளப்பட்டது. இராச்சியத்தை மதத்துக்கு மேலாக மதிக்கும் முறை தோன்றியது.

இராச்சியத்திற்குப் பூரண அதிகாரம் உண்டு என்னும் கொள்கையை இக்காலத்தில் ஆதரித்தவர் ஹேகல் (1770-1831). "பல நாடுகள் ஒன்றோடொன்று சண்டையிடுவது உலக வரலாற்றின் போக்கு; இது இயற்கை முறை; போர் புரிய வலிமை வேண்டும்; வலிமை நாட்டிற்கு இலட்சணம். போரில் வெற்றி பெறும் இராச்சியமே கடவுள்தன்மை கொண்டது. அவ்வித இராச்சியத்திற்குப் பணிவது உண்மையான சுதந்திரமாகும். அவ்விராச்சியம் செய்வது அனைத்தும் நியாயமாகும்" என்று அவர் கருதினர். அவருடைய கொள்கையைப் பின்பற்றிய பிஸ்மார்க் ஜெர்மானிய ஏகாதிபத்தியத்தை அமைத்தார். இரண்டு உலக யுத்தங்களுக்கும் ஹேகலின் கொள்கைகள் ஒரு முக்கியமான காரணம் என்று கருதலாம்.

ஹேகலின் கொள்கையை ஆங்கில நாட்டில் பின்பற்றியவர்களில் முக்கியமானவர்கள் கிரீன் (1836-1882), போசன்கிட் (1848-1923) ஆகிய இருவர். கிரீன் பூரண அதிகார இராச்சியத்திற்குப் பதிலாகப் பூரண அதிகார சமூகத்தை ஏற்றுக்கொண்டார்; அவர் கொள்கைப்படி, இராச்சியம் சமூகத்திற்கு உட்பட்டது; தனி மனிதருடைய உரிமை சமூகத்திலிருந்து பெறப்படுவது; அதுவே உண்மையான இயற்கை உரிமை; அவ்வுரிமையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அது சட்டப்படியுள்ள உரிமையாகும். சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் வேறுபாடு உண்டாயின் சமூகம் அரசாங்கத்தை மாற்றலாம். தனி மனிதன் சமூகத்தின் ஒரு பகுதியாகையால் சமூகத்திற்கு முரணான எதையும் அவன் செய்யலாகாது.

போசன்கிட் ஹேகலை அதிகமாகப் பின்பற்றினர். "அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய அறநெறி ஒன்றுமில்லை. அரசாங்கம் குற்றம் செய்ய முடியாது. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி யிருப்பதால், அரசாங்கத்திற்கு எதிராகவோ, புறம்பாகவோ எதுவும் இருக்க முடியாது" என்பது அவர் கருத்து.

பிரெஞ்சுப் புரட்சியின் பயனாகத் தேசியம் அரசியல் துறையில் தோன்றிற்று. தொழிற்புரட்சியின் பயனாகத் தேசியம் பொருளாதாரத் துறையிலும் புகுந்தது. கச்சாப்பொருள்களைச் சேகரிப்பதிலும், விற்பனைப் பொருள்களாக மாற்றுவதிலும், விற்பனை செய்வதிலும்

நாடுகள் ஒன்றோடொன்று போட்டி யிட்டுக்கொண்டு புதுப் பிரச்சினைகளை எழுப்பின. பொருளாதார விஷயங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்னும் தலையிடாமைக் (Laissez faire) கொள்கையை ஆதம் ஸ்மித் தமது பொருளாதார நூலிற் கூறினார். இவைகளை எதிர்த்து முக்கியமான கொள்கைகளை வெளியிட்டவர் மார்க்ஸ் (1818-83). 'மனித வரலாறு பரிணாம முறையில் சமூகம் வளர்வதைக் காட்டும்' என்ற கொள்கையுடையவர் மார்க்ஸ். இயற்கையை மனிதன் எந்திர சக்தியால் ஆட்கொள்வதால் இம்முன்னேற்றம் இயலும் என்று அவர் கருதினார். தொழிலாளிகளின் ஆட்சி நிறுவப்பட்ட பிறகு இராச்சியம் என்னும் ஸ்தாபனமே மறைந்துவிடும், அதற்குத் தேவையிராது என்பது அவர் கொள்கை. "வருக்கமில்லாத சமூகத்தில் இராச்சியம் மறைந்துவிடும்; வரலாற்றுமுன் காலம் முடிந்து வரலாறு தொடங்கும்" என்றார் மார்க்ஸ். இவரும் எங்கெல்சும் (1820-95) சேர்ந்து இயற்றிய கம்யூனிசப் பிரகடனம் (Communist Manifesto) என்னும் நூலுள் இக்கொள்கை முதன் முதல் விரித்துரைக்கப்பட்டது. கம்யூனிஸ்டு ரஷ்ய ஆட்சியை நிறுவிய லெனின் இக்கொள்கைகளை முழுவதும் ஏற்றுக்கொண்டார்; ஆயினும் ஸ்டாலின் உலக நிலையை ஒட்டி முதலாளித்துவமும் கம்யூனிசமும் அடுத்தடுத்து வாழ முடியும் என்று தம் கொள்கையை மாற்றிக்கொண்டார்.

செயின்ட் சைமன் (1760-1825) என்பவர் விஞ்ஞான முன்னேற்றத்தால் அரசியலைவிடப் பொருளாதாரமே அதிக முதன்மை பெறுவதாகக் கூறினார். "சொத்தைத் தனியுரிமையாகக் கொள்ளாமல் ஒப்படைத்த பொருள் போலக் காத்துப் பயன்படுத்தவேண்டும்" என்று அவர் கருதினார். ஒகஸ்ட் காம்ட் (Auguste Comte 1798-1857) என்னும் பிரெஞ்சு ஆசிரியர் செயின்ட் சைமனால் கருத்தூட்டம் பெற்றவர். இயற்கையை ஆராயும் விஞ்ஞானக் கலைகளைப்போலச் சமூகவியலொன்றை ஏற்படுத்தி, விஞ்ஞான முறையில் சமூகப் பிரச்சினைகளை யாராய வேண்டுமென்றார். இவருடைய கருத்துக்களால் பாதிக்கப்பட்டவர் ஜான் ஸ்டுவர்ட் மில் என்ற ஆங்கில அறிஞர். இவர் பெந்தாமின் பயன்முதற் கொள்கையைப் புது முறையில் அமைக்க முயன்றார். எல்லா மனிதர்களும் சமம் என்னும் தீவிர ஜனநாயகத்திற்கும், மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தலையிட இராச்சியத்திற்கு உரிமையுண்டு என்னும் கொள்கைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் தனிமனிதன் சுதந்திரத்தையும், பிரதிநிதி சபை மூலம் இயங்கும் ஜனநாயகத்தையும் தகுந்த காரணங்களோடு ஆதரித்துப் பல நூல்கள் எழுதினார். பொருளாதார நூல் ஒன்றும் இயற்றினார். அங்கும் முதலாளித்துவத்திற்கும் பொது உடைமைக்கும் இடையே நடுநிலை கண்டு கூறியிருக்கிறார்.

கடவுளால் நியமிக்கப்பட்டு, அந்த நியமனப்படி உலகு இயங்குகிறது என்னும் கொள்கைக்குப் பதிலாக, இயற்கையின் செயலாக யாவும் நடைபெறுகின்றன என்னும் கொள்கை இன்று மேலிட்டு வருகிறது. டார்வின் இனங்களின் தோற்றம் (Origin of Species) என்னும் நூலில் பரிணாமக் கொள்கையைக் கூறியதிலிருந்து மானிட இயல் அறிஞர்களும் அப் பரிணாம முறையையொட்டித் தங்கள் கருத்துக்களையும் கூறிவந்தனர். தனி மனிதரேயன்றி, சமூகங்களும் பரிணாம முறையில் வளர்கின்றன என்று ஹெர்பர்ட் ஸ்பென்சர் (1820-1903) கூறினர். உயிரியல் முறையில் தனிமனிதனைப்போல உறுப்புக்களோடு இயங்குவது சமூகம் என்று அவர் கூறினார். அங்கங்கள் மறையினும் முக்கியமான உடல் இருப்பதுபோலத் தனிமனிதர் தோன்றி வளர்ந்து மறையினும், இராச்சியம் நிலைபெறுக இருக்கும் என்பது அவர் கருத்து. இதனை உறுப்புக் கொள்கை (Organic Theory) என்பர். இதை ஓர் உவமையளவிலேயே கருதுவது நல்லது என்பர் பலர்.

பாஜட் (Bagehot) என்பவரும் பரிணாமத்தைத் தழுவியே மானிடவியலை வருணித்தார். சமூகத்தில் கூடி வாழ்வதும் போரிட்டுக்கொள்வதும் மனிதனுடைய இயற்கைப் பண்புகள் என்று இவர் சொன்னார். கம்ப்ளோவிக்ஸ் (Gumplowicz) என்னும் மற்றொரு மானிடவியல் அறிஞர், "மனிதன் கூடிவாழும் இயல்பின னாதலின் சமூகம் ஏற்பட்டது; ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தை ஆக்கிரமிப்பதிலிருந்து அரசாங்கம் ஏற்படுகிறது. வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்கள்மீது செலுத்தும் ஆதிக்கமே சட்டமாகும்" என்று கூறினர்.

மானிடவியலின் பகுதியாக இனத்துவம் (Racism) என்னும் கொள்கை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சியுற்றது. இந்தக் கொள்கையை நிறுவினவர் கோபினோ (Gobineau). சேம்பர்லேன், "யூதர்கள் இனத்தூய்மைக்கு இடையூறாக இருத்தலால், அவர்களை நாட்டினின்றும் வெளிப்படுத்தல் வேண்டும்" என்னும் கொள்கையை வெளியிட்டார்.

புறவழி யுண்மைக் கொள்கையை (Pragmatism) ஏற்படுத்திய வில்லியம் ஜேம்ஸ் என்பவர் அனுபவத்தில் கண்டறிந்ததே உண்மை என்றார். இதைப் பின்பற்றிய ஆன்ரீ பெர்க்சன் (Henri Bergson 1859-1941) "அறிவைக் காட்டிலும் இயற்கை உணர்ச்சியே மேலானது" என்று கூறினர். மனிதன் பெரும்பாலும் உணர்ச்சியால் தூண்டப்படுகிறானேயன்றி அறிவால் தூண்டப்படுவதில்லை என்று கூறிய மக்டுகல் (Mc-Dougall 1881-1938) மனிதனுடைய அடிப்படையான உணர்ச்சிகளைப் பலவகையாகப் பிரித்துக் கூறினர். "மனிதன் எண்ணமிடுவதாக நினைக்கும்போது எந்தத் தொகுதியைச் சேர்ந்தவனாயிருக்கிறானோ அந்தத் தொகுதியின் சிந்தனை வரம்பிற்குட்படுகிறான். அவன் பல தொகுதிகளைச் சேர்ந்தவனாக இருப்பினும், எல்லாத் தொகுதிகளுக்கும் மேலான அரசாங்கத்தின் பகுதியாக உயர்ந்த எண்ணங்கள் பூர்த்தியாகின்றன" என்பவை அவர் கருத்துக்கள். நீச்செ (Nietsche 1844-1900) என்பவர், "மேன்மக்களே ஆளப்பிறந்தவர்; நன்மையும் உண்மையும் பிறரை மேற்கொள்வதில் அடங்கியிருக்கின்றன" என்றார். இவர் யுத்தங்களைத் தீமையாகக் கருதவில்லை.

அரசாங்கம் இன்றியமையாத ஒரு ஸ்தாபனம் அன்று என்றும், அதை முற்றிலும் நீக்கிவிடலாம் என்றும் கூறுவது ஆட்சிவேண்டாக் கொள்கை (Anarchism). அரசாங்கத்திற்குத் தனிப்பண்பு இல்லை என்றும், அது மற்ற ஸ்தாபனங்களைப்போல் ஒரு சாதாரண ஸ்தாபனந்தான் என்றும் கூறும் பன்மைவாதம் (Pluralism) ஆஸ்ட்டினுடைய (1790-1859) ஆதிபத்தியக் கோட்பாட்டிற்கு எதிராகத் தோன்றியது. ஆஸ்ட்டின் சட்ட முறைப்படி (Juristic method) ஆதிபத்தியத்தை விவரித்தார். "ஒருவனுடைய கட்டளைக்கு ஏனையவர்களில் பெரும்பான்மையோர் வழக்கமாகப் பணிந்து நடந்தால், அந்தக் கட்டளை சட்டமாகும்; கட்டளையிடுபவன் அதிபதியாவான்; அவனது அதிகாரம் ஆதிபத்தியமாகும்" என்று ஆஸ்ட்டின் கூறினர். பன்மைவாதியாகிய துகுயி (Duguit), "சட்டம் அரசாங்கத்தினால் ஏற்படுவதில்லை; மக்களின் பொதுத்

தேவையினால் ஏற்படுகிறது'' என்று கூறினர். அவர், ''சட்டத்திற்கு உறுதி அளிப்பது அதன் உற்பத்தி யன்று, அதன் நோக்கமே'' என்றார். அரசாங்கத்தை வேறு எந்தத் தொகுதியும் கட்டுப்படுத்த முடியாது என்று கருதுபவர்கள் சர்வதேசிய வாதிகள். அக ஆதி பத்தியம் (Internal Sovereignty), புற ஆதிபத்தி யம் (External S.) என்று இருவகையாக ஆதிபத்தியத் தைப் பிரித்துக் கூறிச் சர்வதேசிய வாதிகளுக்கும் தேசிய வாதிகளுக்கும் உள்ள வேறுபாடு குறைக்கப்பட்டது.

18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் சில அமெரிக்க அறிஞர்கள் கூறியவை சுதந்திரப் போருக்கு வழிகாட் டின. ஜேம்ஸ் ஓட்டிஸ் (James Otis), ''மக்கள் சம்மதமின்றி வரி வசூலிக்கக்கூடாது; அவ்விதம் வரி வசூலிக்கும் ஆட்சி நேர்மையற்றது'' என்று கூறினர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பை நிறுவிய ஜெபர்சன், ஆதம்ஸ் முதலானோர் கூட்டாட்சி முறையைப் பற்றிய பல கருத்துக்களை வெளியிட்டனர். மேற்கூறிய இரு அறிஞர்களும், ஒப்பந்தம் செய்து கொள்ளும் மாகாணங்கள் ஒன்றுக்கொன்று சமமாக இருப்பதுமன்றி, அவை எவ்வளவு சுதந்திரம் பெறக் கூடுமோ அவ்வளவும் அவற்றிற்கு அளிக்கப்பட வேண் டும் என்றும் கருதினர். மற்றும், மக்கள் ஆட்சியின் குறைபாடுகள் நீங்க, இன்னும் அதிக மக்கள் ஆட்சியே வழி என்றார்கள். ஹாமில்ட்டன், மாடிசன் முதலிய வர்கள், இராச்சியங்களின் சுதந்திரம் கூட்டாட்சி நாட் டின் ஐக்கியத்திற்கு முரண்படாதவாறு இருக்கவேண் டும் என்றும் வாதாடினர். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் அமைப்பை நிறுவிய அறிஞர்கள் பிரெஞ்சு அறிஞரான மான்டெஸ்க்யூ என்பவரிடமிருந்து அதிகா ரப் பிரிவினை என்னும் கொள்கையை மேற்கொண்ட னர். இதன்படி நிருவாகத் தலைவரான ஜனாதிபதிக்கும், சட்டசபைப் பகுதியான காங்கிரசுக்கும், நீதிப்பகுதி யான உச்ச நீதிமன்றத்திற்கும் ஒன்றையொன்று கட் டுப்படுத்தாத முறையில் தனி அதிகாரம் உண்டு. இக் கொள்கையை அ. ஐ. நா. அரசியலமைப்பில் காண லாம். ''நியாயத்திற்குக் கட்டுப்பட்டுப் பொதுமக்கள் கருத்திற் கிசைந்து நடக்கக்கூடிய பெரும்பான்மையோர் ஆட்சியே சுதந்திர மக்களின் உண்மையான ஆதிபத்திய மாம்'' என்று அமெரிக்க ஜனாதிபதியான லின்கன் கூறினர்.

கம்யூனிசத்திற்கும் முதலாளித்துவ ஜனநாயகத்திற் கும் கொள்கை வேறுபாடு ஒரு புறமிருக்க, இவ்விரண் டிற்கும் எதிராக இத்தாலியிலும் ஜெர்மனியிலும் பாசிச, நாசிசக் கொள்கைகள் உருவாயின. முசொலீனியால் விளக்கப்பட்ட பாசிசக்கொள்கை மாக்கியவெலியைப் பின்பற்றி நாட்டுத் தற்பெருமையை அடிப்படையாகக் கொண்டது. ஹேகலின் பூரண அதிகார இராச்சியக் கொள்கையும், சிண்டிகலிசக் கருத்துக்களும் கலந்து, முசொலீனியின் கார்ப்பரேடிவ்இராச்சியம்தோன்றிற்று. ஜெர்மானிய நாசிசத்தில் கார்ப்பரேடிவ் கருத்தில்லை; ஆனல் தலைமைக் (Leadership) கொள்கை பாசிசத்தை விடஅதிகமாக நாசிசக்கொள்கையில் காணப்படும். இங்கு நாட்டுப் பெருமையைவிட இனப்பெருமை பெரிதாகக் கொண்டாடப்பட்டது. இவ்விரண்டு அரசியல் வாதங் களும் ஒரு கட்சிச் சர்வாதிகாரமே யாம். அரசியல் அதிகாரத்தை ஒரு கட்சியிடம் குவிப்பது என்னும் முறையில் இவ்விரு கொள்கைகளும் கம்யூனிசத்துக்கு ஒப்பாயினும், கம்யூனிசத்தில் மக்களிடம் பொருளாதார சக்தி ஒப்படைக்கப்படும் என்பதும், பாசிச, நாசிசக் கொள்கைகளில் கட்சியும் தலைவருமே முக்கியம் என் பதும் இவற்றுள் வேறுபாடாம்.

பார்லிமென்டு ஆட்சி, கம்யூனிசம், பாசிசம் ஆகிய மூவகைக் கோட்பாடுகளையும் எதிர்ப்பது ஆட்சிவேண் டாக் கொள்கையாம். ஆதிபத்தியக் கோட்பாட்டை எதிர்த்துப் பன்மைவாதத்தை மிகுதியும் வளர்த்து, இராச்சியமே வேண்டாம் என்னும் கொள்கைக ளுடையவர்களே ஆட்சிவேண்டாக் கோட்பாடுடைய வர்கள். ஜோ. அ.

**இந்திய அரசியற் கருத்துக்கள்:** பண்டைக் கால, இடைக்கால: ராஜ்ய, ராஷ்டிர, க்ஷத்ர முதலிய சொற்கள் ரிக்வேதத்தில் மிகப் பழமைவாய்ந்த பகுதி களில் காணப்படுகின்றன; ஆனல் அதில் அரசியலைச் சார்ந்த தொடர்பான கருத்துக்கள் ஒன்றும் இல்லை. பிராமணங்களில் இக்கருத்துக்கள் மிகுதியாக இருக்கின் றன. உதாரணமாக, ஐதரேயப் பிராமணம் பகைவர் களைப் போரில் வென்று, நாட்டின் அமைதியைக் காப்ப தற்காக அரசன் ஏற்பட்டானென்று கூறுகிறது; அதில் பல அரசரை வென்று, சாம்ராச்சியம் பெற்றுச் சிறப் பாக மகாபிஷேகம் நடத்திக்கொண்ட மன்னர்கள் பல ருடைய பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

முதன் முதல் அரசியல் கருத்துக்கள் ஆராயப்பட் டது கி. மு. 600-300-ல் எழுதப்பெற்ற பௌதாயன, கௌதம, ஆபஸ்தம்ப தரும சூத்திரங்களில் என்று சொல்லலாம். இந்நூல்களில் க்ஷத்திரியர்களுடைய தரு மங்களைக் கூறுமிடத்து, அரசர்களுடைய கடமைகளும், அவர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் இருக்க வேண்டிய உறவுமுறைகளும் தனியே எடுத்துக் கூறப் படுகின்றன. அறிவு, கல்வி, நன்னடக்கை முதலிய நற்குணங்கள் வாய்ந்த ஓர் அந்தணனைப் புரோகிதனைத் தேர்ந்தெடுத்துப் பிறகு அவன் வழிப்படி நடக்கவேண் டியது அரசன் கடமை என்பது இந்நூல்களின் முக்கியக் கருத்துக்களில் ஒன்று; இது பிராமணங்களில் குறிக்கப் பட்டுள்ள பிராமம், க்ஷத்ரம் என்ற இரண்டு பகுதி களும் ஒன்றேடொன்று ஒத்து அரசியல் நடத்த வேண்டுமென்ற கொள்கையை மேற்கொண்டு வரையப் பெற்ற ஏற்பாடாகும். ஆபஸ்தம்ப தரும சூத்திரம், ஓர் அரசன் தன் நாட்டில் தட்ப வெப்பத்தின் கொடுமை யாலோ, பசி பிணி முதலிய துன்பங்களாலோ, ஒருவரா வது வருந்த நேரிடாமல் காக்கவேண்டுமென்று கூறு கிறது. பூமியின் விளைவில் ஆறிலொரு பங்கு அரசனைச் சார்ந்ததென்றும், மற்ற வரிகள் குடிகளுக்குக் கேடின்றி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் தரும நூல்களில் காண்கிறோம்.

இராமாயணத்தில் இராம ராச்சியத்தின் செம்மையும் அராஜகத்தின் கொடுமைகளும் விவரமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. மகாபாரதத்தில், அதிலும் முக்கியமாக சாந்தி பருவத்தில், அரசநீதி மிகவும் விரி வாக நூற்றுக்கணக்கான அத்தியாயங்களில் பீஷ்மரால் யுதிஷ்டிரனுக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஏறத் தாழ அதேகாலத்தில் எழுதப்பெற்ற மனுஸ்மிருதி, கௌடிலிய அர்த்த சாஸ்திரம் ஆகிய நூல்களிலும் அத் தகைய கொள்கைகள் காணப்படுகின்றன. கௌடிலியனு டைய நூலில் சிற்சில விசேஷப் பகுதிகளுண்டு. இராச நீதி அல்லது தண்ட நீதி பிரமனால் செய்யப்பட்ட ஒரு பெரு நூலாயிருந்து, பிறகு பல கடவுளராலும் முனிவ ராலும் பலமுறை சுருக்கப்பெற்று, மானிட உலகத்தில் வழங்கப்பட்டு வருவதாகப் பாரதம் கூறும். ''முற்காலங் களில் அரசே ஏற்படவில்லை; தாமாகவே மனிதர் நன்னடக்கையில் ஈடுபட்டிருந்தனர். நாளடைவில் காமமும் வெகுளியும் தோன்றிச் சண்டை சச்சரவுகள் ஏற்படவே, எல்லோரும் ஒருங்கு கூடித் தங்கள் வாழ்க் கையை நியாயமாக நடத்தித் தரவேண்டி அரசன்

ஒருவனை ஏற்படுத்தி, அவனுக்குக் கூலியாக நிலவரியும் வேறு வரிகளும் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். அப்பொழுதே அரசனுடைய உதவிக்காகப் பிரமன் தன் ஒளியினின்று தண்டம் (செங்கோல்) ஒன்றைப் படைத்து, அதை நடத்தும் முறையை விளக்கும் தண்டநீதி என்னும் நூலையும் இயற்றினன். இந்தத் தண்டம் தருமத்தின் உரு; உபநிஷத்துக்களில் எங்கும் நிறைந்ததாகக் கூறப்பட்ட பிரமத்தின் அமிசம்; இதன் வலியே அரசன் வலி; இதற்கிணங்கியே குடிகள் சமாதானமாக வாழ்கிறார்கள். ஆனால், அரசன் முறை தவறினால், தண்டம் அவனுக்கு உதவாமல் போவதன்றி, அவனைக் குடும்பத்துடனே நாசமாக்கிவிடும்; வேனன் என்னும் கொடிய அரசன் பிராமணர் மந்திரங்களால் ஏவப்பட்ட புல் ஆயுதங்களால் இறந்துபட்ட கதையும் இக்கருத்தையே வற்புறுத்துவதாகும்.''

பொதுவாக இராச்சியங்கள் அரசராலேயே ஆளப்பட்டுவந்தபோதிலும், சில காலங்களிலும் சில நாடுகளிலும் அரசனில்லாத குடியரசு நிலவியிருந்தது. இவைகளைச் சங்கம், கணம், அரட்டம் என்னும் பெயர்களால் குறிப்பிடுவர். இவை முக்கியமாக வட இந்தியாவில் இமயமலைச் சாரல்களிலும், கோசல நாடு, மிதிலை நாடு, பஞ்சாப், சிந்து முதலிய பகுதிகளிலும் நிறைந்திருந்தன. இவைகளைக் குறித்து ஒரு தனி அத்தியாயம் சாந்தி பருவத்தில் உண்டு. இவைகளின் முக்கியக் குறைகள் ஒற்றுமைக் குறைவும், முக்கியமான ஆலோசனைகளையும் உபாயங்களையும் இரகசியமாக வைத்துக்கொண்டு நிறைவேற்ற இயலாததுமே என்று இந்த அத்தியாயம் குறிக்கும். கௌடிலியன் தனது நூலில் அரசர்கள் இந்தக் கணராச்சியங்களைச் சீர்குலைத்துத் தம் வசப்படுத்திக்கொள்வதற்கான பல சூழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கிறான்.

அரசன் தனது பட்டாபிஷேக சமயத்தில் எல்லோரையும் சமமாகக் காப்பாற்றுவதாகவும், வருணச்சிரம தருமங்களையும், சாதி, குலம், தொழில், ஊர் முதலியவற்றின் பரம்பரை வழக்கங்களையும் காப்பாற்றுவதாகவும் வாக்களிப்பதுண்டு. இதற்கேற்பத் தமிழ்நாட்டுச் சாசனங்கள் பலவற்றில் அரசன் தரும மகாராஜன் எனப்படுகிறான். மனு முதலிய பண்டையோர் வகுத்த தருமத்திற்கு முரண்பட்ட சட்டம் யாதொன்றும் அரசன் இயற்றக்கூடாது; அப்படித் தவறாக இயற்றினால் குடிகள் அந்தச் சட்டங்களை அவமதிக்கலாம். ஆனால், கௌடிலியனுடைய நூலில் மட்டும் அவசியமானபோது அரசனுடைய ஆணை பழைய வழக்கங்களையும் மாற்றலாம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது; இதற்குக் காரணங்கள் மௌரிய சாம்ராச்சியத்தின் புதுமையும், அதன் விசேஷ ஆட்சித்திறனும், அக்காலத்தில் சிரியா, எகிப்து முதலிய நாடுகளில் கிரேக்க அரசர்கள் நடத்திவந்த ஆட்சிமுறைகளுமே என்பது ஊகிக்கப்படுகிறது. கௌடிலியன் பழைய இந்திய சாஸ்திரங்களையும் தன் காலத்து வேற்றுநாட்டுப் பழக்கங்களையும் சேர்த்து ஆராய்ந்து தன் நூலை யியற்றியதாகக் கூறி யிருப்பதும் இதையே வற்புறுத்தும்.

இராச்சியமென்பது ஏழு உறுப்புக்கள் அடங்கியது. அவையாவன: அரசு, அமைச்சு, நட்பு, பொக்கிஷம், நாடு, அரண், படை என்பன. ''படைகுடி கூழமைச்சு நட்பரணாறு முடையா னரசரு ளேறு'' என்பது திருக்குறள் (381). அரசன் சிறுவயதில் கல்வி பயின்று, நன்னடை வாய்ந்து, பெரியோரையும் கற்றாரையும் மதித்து, நீதிமுறை தவறாது அரசியல் நடத்தவேண்டும். தன் உதவிக்காகத் தகுந்த அமைச்சரை வேண்டிய அளவில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அமைச்சரில் அக்காலத்திலும் இரு திறத்தாருண்டு. முதலாவது மந்திரிசபையின் அங்கத்தினர், தற்காலம் காபினெட் (Cabinet) மந்திரிகளெனப்படுவர். முக்கியக் காரியங்களில் அவர்கள் யோசனைப்படியே அரசன் நடப்பது நல்லது; ஊரில் இல்லாமல் வெளி வேலையில் அமர்ந்திருக்கும் மந்திரிகளின் கருத்தைக் கடித மூலம் அறிய வேண்டுவது அரசன் கடமை என்பது கௌடிலியன் கருத்து. மற்றொருவகை அமைச்சர் மந்திரிசபையின் தீர்மானங்களை நிறைவேற்றுபவர். இவ்விருதிறத்தாரையே மந்திரி சசிவர், கரும சசிவர் என்று முறையே கி. பி. 150-ல் ஒரு சாசனம் குறிப்பிடுகிறது. பொதுவாக அரசனுக்கு அண்டைநாட்டரசன் பகைவனாகவும், அவனுக்கு அடுத்த அரசன் நட்புப் பூண்டவனாகவும் இருப்பானென்பது நீதிநூற் புலவரின் கருத்து. இதற்கிணங்கவே, அயல்நாட்டரசனுடன் உறவு முறைகள் பொதுவாக நடத்தப்பட்டு வந்தன. ஓர் இராச்சியமும் அதைச் சூழ்ந்து அதனுடன் இவ்வாறு உறவாடிக் கொண்டிருக்கும் நாடுகளும் சேர்ந்தது ஒரு மண்டலமெனப்படும். மேலும் ஓரரசன் எப்பொழுதும் பிற நாடுகளை வெல்லும் நோக்கத்துடனே இருத்தல் நலமெனக் கருதப்பட்டது. இதனால் விளைந்த போர்கள் பல. எப்போதும் குறையாத பொக்கிஷமே அரசனுக்கு முக்கிய வலி; குடிகளுக்குத் துன்பமின்றி எளிதாக வரி வசூலிப்பது சிறந்தது. கௌடிலியன் காலத்தில் அரசாங்கமே வரி வசூலிப்பதைத் தவிரப் பல தொழில்களையும் வர்த்தகத்தையும் நடத்தி லாபமடைந்ததாகக் கூறலாம். வரி ஏற்படுத்தி வசூலிக்கும் அதிகாரம் அரசனுக்கு மட்டுமல்லாமல், ஊர்ச்சபைகள், தொழிற் சங்கங்கள் முதலிய ஸ்தாபனங்களுக்கும் உரித்தாகும். நாட்டின் வளமும், குடிகளின் செல்வமுமே அரசனுடைய மேன்மைக்கும் செல்வாக்குக்கும் அடிப்படையாம். ஆகையால், நீர்வளம், நிலவளம் முதலியவற்றைப் பெருக்கும் வழிகளை அரசன் கையாளவேண்டும்; தொழில்களும் வாணிபமும் ஓங்கி வளரவேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். உள் நாட்டின் அமைதிக்கும், வெளிப்பகை தன்னை மிஞ்சாதிருப்பதற்கும் வேண்டிக் கோட்டை கொத்தளங்களை அமைத்து, அவைகளைக் காத்து, வேண்டியபொழுது போர் புரியவும் வேண்டிய படைகளை ஏற்படுத்திக் கொள்ளுவதும் அரசனுடைய முக்கியக் கடமை. கோட்டைகளின் வகைகள், படைகளின் விதங்கள், படைக்கலங்கள், படைவகுக்கும் வழிகள் முதலிய பல பொருள்களைப்பற்றி நீதிநூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

முற்கூறப்பட்ட பழைய நூல்களைத் தவிர, பிற்காலத்தில் ஏற்பட்ட நூல்கள் பல உண்டு. புராணங்களில் நீதி விஷயங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. சிறப்பாக அக்கினி புராணத்தில் இவற்றைக் காணலாம். பஞ்ச தந்திரமும் இதோபதேசமும் நீதிகளைக் கதைகள் வழியாக எளிதில் விளக்கிச் செல்கின்றன. காமந்தகீய நீதிசாரம் பொதுவாகக் கௌடிலீய அர்த்த சாஸ்திர முறையைத் தழுவிய நூல். சோமதேவ சூரி கி. பி. 10ஆம் நூற்றாண்டில் இயற்றிய 'நீதி வாக்கியாமிருதம்' என்ற நூல் சமண முறையில் அரசியல் வழிகளை விவரிக்கும். பிற்கால நீதி நூல்களில் மிக்க பேர் பெற்றுள்ளது சுக்கிர நீதி சாரம்.

சங்க காலந்தொட்டு உள்ள தமிழ் நூல்கள் பலவும் இதேமாதிரியான கருத்துக்களையே பலவாறாக எடுத்துக் கூறுகின்றன.

தமிழ்நாட்டின் சிறப்புக்களில் ஒன்று ஆதிகால முதலே இங்கு நன்றாக நிலைபெற்றிருந்த கிராம ஆட்சி. மன்றமும் பொதியிலும் புறநானூறு முதலான நூல்

களில் பலவாறுகச் சிறப்பிக்கப்பெற்றிருக்கின்றன. அக் காலத்திலும் பார்ப்பாருக்கு அரசியல் துறைகளில் ஏற் பட்டிருந்த அனுபவமும் பெருமையும், '' பார்ப்பார்த் தப்பிய கொடுமை '' (புறம் 34), '' நின் முன்னேரெல் லாம் பார்ப்பார் நோவன செய்யலர் '' (புறம் 43) என் பன போன்ற பல அரிய சொற்களா லறியக்கிடக்கின் றன. இனி அரசனைச் சார்ந்துள்ள ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் அரசியலங்கங்கள் என்பது சிலர் கருத்து. ஆனல், அவை அரசனுடைய பதவியைக் குறிக்கும் பரிவாரங்களைத் தவிர வேறல்ல என்பர் மற் ருெரு சாரார். திருக்குறளில் பொருட்பால் என்னும் பகுதியின் அரசியல் அங்கவியல் என்னும் இருபிரிவுகளி லும் நீதிமுறைகளைத் திருவள்ளுவர் விளக்கிச் செல் கிருர். சிறு நீதி நூல்கள் பல தமிழில் உண்டு. தவிர வும், சங்க நூல்களிலும், கம்பராமாயணம்போன்ற பேரிலக்கிய நூல்களிலும், அரசியல் துறைகளைக் குறித்த பல கருத்துக்களை ஆங்காங்கு நுணுகி ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டும். உதாரணமாகப் புற நானூற்றில் காணப்படும் ஒரு சிறு பாடல் பின்வரு மாறு: '' நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே— மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்—அதனுல், யானுயி ரென்ப தறிகை—வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே '' (புறம். 186).

இந்தியாவில் முகம்மதியர் அரசாட்சி யேற்பட்டபின் அரசருக்கும் குடிகளுக்குமுள்ள தொடர்பு பல இடங் களில் அற்றுப்போயிற்று. இஸ்லாமிய அரசியல் கொள்கை, '' இராச்சியம் முஸ்லிம்களுக்கே உரியது ; ஏனையோர் ஜசியா என்னும் தனி வரியைச் செலுத்தித் தாழ்மையுடன் நடக்கவேண்டும் '' என்பது. அத னுலேதான் விஜயநகர அரசர்கள் தலைமுறை தலைமுறை யாக அவர்களுடன் போராடித் தென்னுட்டில் இந்து தருமம் தலைசாயாமல் காத்து வந்தனர். இத் தொழி லில் ஈடுபட்ட மன்னருள் பேர்பெற்ற கிருஷ்ணதேவ ராயர் தம்முடைய ஆமுக்தமால்யத என்னும் நூலில் ஸ்ரீ ஆண்டாள் கதையை விரித்துக் கூறுவதோடு தமது அரசியல் முறைகளையும் விவரமாக எடுத்துக் கூறியிருக்கிருர். மொகலாய சக்கரவர்த்தி அக்பர் மட் டுமே முஸ்லிம் கொள்கையை மாற்றி, இந்துக்களும் முஸ்லிம்களும் இராச்சியத்தில் சம உரிமைகளைப் பெற வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டார். ஆனல், அவ ருடைய எண்ணம் நிறைவேறவில்லை. கே. ஏ. நீ.

13ஆம் நூ. முதல் 18ஆம் நூ. வரை: கி. பி. 13 ஆம் நூற்ருண்டில் முகம்மதியரது படையெடுப்பால் வட இந்தியாவில் நிறுவப்பட்ட ஆட்சிக் காலத்தில் தனிச்சிறப்புள்ள அரசியல் கோட்பாடுகள் ஒன்றும் வளரவில்லை. குழப்பமான அரசியல் நிலையொன்று இருந்தமையால், பிற நாட்டவர்கள் இந்தியாமீது படை யெடுப்பது எளிதாயிருந்தது. வெளிநாட்டாருடைய ஆக்கிரமிப்பினுல் தங்களுடைய நலன்கள் கெடக்கூடுமே என்று அஞ்சிய ஆட்சியாளர்களே வெளிநாட்டுப் படை யெடுப்புக்களை எதிர்த்தவர்கள். இப்போர்களில் பொது மக்களுக்கு எவ்விதமான அக்கறையும் இருந்ததாகக் கருத இடமில்லை.

முகம்மதியர் ஆட்சியில் சமய அடிப்படையில் மக்கள் பாகுபாடு செய்யப்பட்டுப் பிரித்தாளப்பட்டனர் என் பதற்கு ஜசியா என்னும் வரி ஓர் எடுத்துக்காட்டாகும். அக்பர் ஒருவர்தாம் இலௌகிக முறையில் ஆட்சி நடத்தியவர். அவருடைய பேரன் மகனுை ஔரங்க சீப் மறுபடியும் சமயச் சார்பான ஆட்சியை நிறுவி, இந்துக்களின் பகைமையைத் தேடிக்கொண்டார். அலா வுதீன் கில்ஜி (1296–1316) தாம் செய்ததெல்லாம் மக்க ளுடைய நன்மையைக் கருதியே என்று கூறிக்கொண் டார். ஆனல் அவர் தமது அரசியல் அதிகாரத்திற்கு எல்லைவிதிக்கக் கூடியவர்கள் உண்டு என்று ஒப்புக் கொள்ளவில்லை. தாம் II-ம் அலெக்சாந்தர் என்றும், முகம்மது நபியென்றும் கூறிக்கொண்ட அலாவுதீன் தம் நண்பர்களுடைய அறிவுரைக் கிணங்கியே அப் பட்டங்களை நீக்கினுர். முகம்மது பின் துக்ளக் (1325–51) முதலிய எதேச்சாதிகாரிகளுடைய ஆட்சியினுல் மக்கள் வருந்தி மடிந்தனரேயன்றிக் கொடுங்கோலுக்குப் பரிகாரம் காணவேண்டும் என்னும் விருப்பமோ, வலி மையோ, கொள்கையோ இல்லாமலே இருந்தனர்.

மொகலாயர் ஆட்சியில் அரசனுடைய அதிகாரங் களைப் பற்றியும் இராச்சியத்தின் கொள்கைகளைப் பற்றி யும் புதுக்கருத்துக்கள் அக்பருடைய ஆட்சிக் காலத்தில் தான் தோன்றின (1556–1605). அக்பர் சமய அடிப் படையில் மக்களைப் பிரிக்காமல், இந்துக்களையும் முஸ்லிம் களையும் ஐக்கியப்படுத்துவதில் ஈடுபட்டார். ஆசியர் களையும் ஐரோப்பியர்களையும் ஐக்கியப்படுத்த விரும்பிய அலெக்சாந்தரைப்போல அக்பர் இந்துக்களையும் முஸ் லிம்களையும் ஐக்கியப்படுத்த விரும்பி, மான்சிங், டோடர் மால் முதலிய இந்துக்களைப் பெரிய பதவிகளில் அமர்த் தினுர் ; இந்துக்களுடைய பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டார் ; எக்காரணத்தால் அவர் இக்கொள் கைகளைக் கையாண்டபோதிலும், இந்து–முஸ்லிம் ஐக் கியம் பெரியதோர் அளவில் அவர் காலத்தில் ஏற்பட் டது என்பதில் ஐயமில்லை. தாமே கடவுளின் பிரதிநிதி என்று அக்பர் கூறிக்கொண்டது இந்து முஸ்லிம் கொள் கைகள் இரண்டிற்கும் பொருத்தமாயிருந்தமையால் அக் கூற்றில் மறுக்கத்தக்கதாக அக்காலத்தவர்களுக்கு ஒன் றும் தோன்றவில்லை.

வட இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவி வந்த காலத் தில் இஸ்லாமின் ஆதிக்கம் மாலிக்காபூரின் படையெடுப் புக்குப்பின் தென்னுட்டிலும் புகுந்து, இந்துக்களுக்குத் தாங்க முடியாத ஒரு நிலைமையை உண்டாக்கவே, இந்துக்களில் சிலர் விஜயநகர இராச்சியத்தை அமைத் தனர். விஜயநகர மன்னர்கள் இஸ்லாமிற்கு எதிரா கவோ, அவ்விராச்சியத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் களுக்கு விரோதமாகவோ ஆட்சி நடத்தவில்லை என்று கூறப்படுமாயினும், அகமத்நகர், பாமினி முதலிய முஸ்லிம் இராச்சியங்களை அவர்கள் எக்காலத்திலும் எதிர்த்துக்கொண்டே வந்தனர் என்பதும், சுற்றியிருந்த முகம்மதிய இராச்சியங்களைத் தங்களுடைய இயற்கை எதிரிகள் என்று கருதினர் என்பதும் வரலாற்று உண்மையாம். விஜயநகர மன்னர்களில் தலைசிறந்தவ ரான கிருஷ்ணதேவ ராயர் தாம் இயற்றிய ஆமுக்த மால்யத என்னும் நூலில் பல அரசியல் கருத்துக்களை யும் கூறியுள்ளார். இயற்கையாகவே ஒன்றற்கொன்று பகைமை கொண்டாடி வந்த இந்து-முஸ்லிம் இராச் சியங்களுக்கிடையே தலைக்கோட்டையில் நிகழ்ந்த போர் (1565) முஸ்லிம்களின் போர்க்கள வெற்றியை நிலைநாட்டிற்று.

அக்பருடைய அரசியல் நன்னேக்கம் அவருடைய பின் தோன்றல்களிடம் காணப்படவில்லை. ஔரங்கசீப் தமது ஆட்சியில் சமயப் பிரச்சினையை அளவிற்கு மிஞ் சிப் புகுத்தியது மொகலாய இராச்சியமே அழிவடையக் காரணமாயிற்று. நாட்டின் பல பகுதியினரும் முஸ்லிம் களுடைய ஒருதலைச் சார்பான ஆட்சியை எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வாறு மொகலாய ஆட்சியை எதிர்த் தவர்களில் மகாராஷ்டிரர்கள் முக்கியமானவர்கள்.

சிவாஜியின் (1664–80) தலைமையின் கீழ் மகா ராஷ்டிரர்கள் அரசியல் நோக்கத்தால் மொகலாய

இராச்சியத்தை எதிர்த்தார்கள் என்று கருத இடமில்லை. சிவாஜி இந்து மதத்தில் தீவிரமான பற்றுடையவர். இராமதாஸ் என்னும் அவருடைய குரு இந்து மதத்தைக் காப்பாற்றும் நோக்கத்தோடு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டியதன் அவசியத்தை விளக்கித் தம் நூல்களிற் கூறியுள்ளார். சிவாஜியின் சமயப்பற்றே அவரது அரசியல், போர்க்கள வெற்றிகளுக்கு அடிப் படை என்பது தெளிவு. சீக்கியர்கள் அரசியல் உலகில் முன்னேறியதும் அவர்களுடைய சமய அடிப்படையி ஞலேயாம்.

இந்தியப் பேரரசர்களில் தலைசிறந்தவர்கள் என்று கருதப்படுபவர்களில் அக்பர் நீங்கலாக அசோகர், ஔரங்கசீப், கிருஷ்ணதேவராயர், சிவாஜி ஆகிய பலரும் ஓரளவேனும் சமயச் சார்புடையவர்களாகவே இருந் திருக்கின்றனர். அரசி பேரறிக்கையோடு (1858) அம்மரபு மறைந்து, புதியதொரு இலௌகிக மரபு தோன்றிற்று.

தற்காலம்: அரசியற் கருத்துக்களை ஆராயுங்கால் தற் கால இந்தியா என்பது 1800 லிருந்து 1950 வரையுள்ள ஒன்றரை நூற்றுண்டுகளைக் குறிக்கும் என்று கொள் வோம். இக்காலத்தில் இந்தியாவில் நிகழ்ந்த முக்கிய மான அரசியல் நிகழ்ச்சி ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் தங்கள் ஆட்சியை நன்கு நிலைப்படுத்திக் கொண்டதே யாகும். இந்த ஆட்சி தொடங்குவதற்கு முன்பு மொகலா யர் ஆட்சியும், அவர்கட்கும் முன்பு முகம்மதியர்கள் ஆட்சியும், அதற்கும் முன்பு இந்துக்களில் பலவகை உட்பிரிவுகளைச் சார்ந்தவர்கள் ஆட்சியும் இந்தியாவில் நடைபெற்று வந்திருக்கின்றன. இவ்வாட்சி வேறுபாடு கள் எல்லாம் அரசாங்க நிலையில் மட்டும் நிகழ்ந்து வந்தனவேயன்றி மக்களுடைய வாழ்க்கை முறை ஏறத் தாழ ஒரே வகையாக இருந்து வந்திருக்கிறது. இந்தி யாவில் சமூக வாழ்க்கையும், மக்களுக்கு அரசாங்கத் தைப்பற்றிய கொள்கைகளும் ஆட்சிமுறை வேறுபாடு களால் சிறிதும் மாறுபடவில்லை. ஆங்கிலேயர்கள் ஆட்சி தொடங்கிய பிறகும் இந்தச் சமூக வாழ்க்கைமுறை மாறுபடாமல் இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மக்களுடைய சமூக சமயக் கோட்பாடுகளிலோ, பயிற்சி களிலோ தலையிடுவதில்லை என்று 1858-ல் விக்டோரியா அரசியின் பேரறிக்கை கூறிற்று. அதனால் அரசாங்கம் தலையிடாமலே மக்கள் தங்கள் நாட்டுப் பழக்க வழக்கங்களினின்றும் வழுவாது வாழ்ந்துவர இயன்றது.

ஆயினும் ஆங்கில ஆட்சிக்கும் அவர்கட்கு முன்பு இந்தியாவில் நடந்த ஆட்சிக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. அதாவது 19 ஆம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவு கள் ஆங்கிலேயர்களோடு இந்தியாவில் வந்தடைந்தன. தொழிற் புரட்சியினல், பொருளாதார நிலைமையும், கைத்தொழில் முன்னேற்றமும், வாழ்க்கைத் தரமும், ஒன்றை யொன்று ஒட்டி மாறுபடுவனவாகையால், இந்திய சமூக சமய வாழ்க்கைகளில் மாறுபாடுகள் ஏற்படவில்லையாயினும் பொருளாதார அரசியல் நோக் கங்களும் கோட்பாடுகளும் இந்தியர்கள் அதுவரை யறிந்திராத புதுமுறையில் ஏற்படத் தொடங்கின. தங்களுடைய நன்மைக்காகத் துபாஷிகளைப் பயிற்சி செய்யும் நோக்கத்தோடு ஆங்கிலக் கல்வியை மேனுட்டு முறைகளில் இந்தியாவிற் புகுத்தத் தலைப்பட்ட ஆங்கி லேயர்கள் தாங்கள் எதிர்பாராத சில விளைவுகள் அக் கல்வியால் ஏற்படக்கூடும் என்று அறியவில்லைபோலும். இந்தியர் மேனட்டு முறையில் குடிமை உரிமை களையும் கடமைகளையும் ஆட்சித் தத்துவத்தையும் பற்றி ஆராயத் தலைப்பட்டனர். மேனுட்டுச் சமூக அமைப்பும், ஜனநாயகக் கருத்துக்களும், சமத்துவம், சுதந்திரம் முதலிய சொற்களின் உட்கோளும் இந்திய நாட்டு மக்களின் மனத்தில் பதியலாயின. இந்திய சமூக அமைப்பு, அதிலும் இந்து சமூக அமைப்பு, பிறப்பை யொட்டிய நால்வகைப் பாகுபாடாக இயங்குகின்றது. இவ்வமைப்பிற்கும் சமத்துவக் கொள்கைக்கும் தொடர் பில்லை. உண்மையில் ஆங்கில ஆட்சியுள்ளும் சமத் துவம் என்பது கொள்கையளவிற்கே யிருந்ததாயினும், பொதுமக்களுக்கு அக்கொள்கையே வாழ்க்கையின் விரும்பத்தகாத சில அமிசங்களை எதிர்க்கப் போதுமான கருவியாயிருந்தது. அரசியல் துறையில் ஆளுவோருக் கும் ஆளப்படுவோருக்கும் பெரிய அளவில் வேற்றுமை யிருந்தது; சமத்துவத்திற்கு இடமில்லை; சுதந்திரம் அன்னியர் ஆட்சியில் இருக்க முடியாது. இக்கருத்துக் கள் மக்கள் மனத்தில் கிளர்ச்சியுண்டாக்கின.

மேனுட்டுக் கல்வியின் விளைவாக இந்தியாவில் பலர் சமூகச் சீர்திருத்தங்களை வேண்டுவராயினர். ராஜா ராம் மோகன்ராய் போன்றவர்கள் இந்தியர்களுடைய முன் னேற்றம் ஆங்கிலக் கல்வியை ஏற்பதிஞலேயே உண்டா கக்கூடும் என்று கருதினர். ''வடமொழிக் கல்வியால் இந்தியர்களுக்கு அறியாமையும் குறுகிய நோக்கங்களும் வளரும்'' என்று ராம்மோகன்ராய் போன்றவர்கள் கூறினர். இவர்கள் மேனுட்டார்களைக் காட்டிலும் ஒருபடி முன்னேறிச் சென்று, மேனுட்டுப் பழக்கவழக் கங்களையும் கருத்து முறைகளையும் போற்றினர். இவர் களுக்கு நாட்டுப்பற்று இல்லை என்பது இதன் பொரு ளன்று. ஆரிய சமாஜம், பிரம சமாஜம் முதலியவற்றை நிறுவியவர்கள் இக்கருத்தால் ஊக்கப்பட்டவர்களே. ஆங்கிலேயர்களும் தாங்கள் அறிந்த அரசியற் கருத்துக் களும் வாழ்க்கை முறைகளும் ஏனையவற்றைக் காட்டி லும் சிறந்தவை என்று கருதுமியல்பினர். தாமஸ் மன்ரோ என்பவர், ''முஸ்லிம்கள் மத விஷயங்களில் எவ்வளவு பிடிவாதமுள்ளவர்களோ அவ்வளவு ஆங்லே யர்கள் அரசியல் விஷயத்தில் பிடிவாதமுள்ளவர்கள்'' என்று கூறினர். இது பெரும்பாலும் உண்மையே. ஆங்கிலக் கல்வியும் ஆங்கில மரபும் புகுந்துதான் இந்தியாவை நன்னெறியில் செலுத்த முடியும் என்று அவர்கள் கருதினர். சமூகச் சீர்திருத்தம் என்பது இந்தியச் சமூக அமைப்பில் இருப்பதாக அவர்கள் கண்ட சில குறைபாடுகளை யகற்றுவதற்காகச் சிலர் மேற்கொண்ட முயற்சியே. ஆனல் விரைவில் இத னினும் பெரியதொரு இயக்கம் தோன்றலாயிற்று. அதுவே தேசிய இயக்கம்.

1857-ல் உண்டான சிப்பாய்க் கிளர்ச்சி யாதொரு பெரிய அரசியல் கோட்பாட்டினின்றும் எழுந்ததில்லை யாயினும் நாட்டிற் சில பகுதியினர்க்கு ஆங்கிலேயர் மீது வெறுப்பு ஏற்படுவதற்கு அது வழிகாட்டிற்று. ஆயினும் 1858ஆம் ஆண்டுப் பேரறிக்கை, பொதுமக்க ளுக்கு ஆங்கில ஆட்சியில் நம்பிக்கை ஏற்படுத்திற்று. ஏராளமான மக்கள் வாழ்ந்துவரும் பெரிய நாட்டைச் சிலரைக் கொண்டு ஆளவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதால், போக்குவரத்துச் சாதனங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு சாலை, ரெயில், தபால், தந்தி முதலியனவெல்லாம் ஏற்பட்டது இந்நாட்டு மக்களுக்கும் நன்மைசெய்வதாயிற்று. ஆதலால் 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி மக்க ளால் பொதுவாக விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளப் பட்டதென்றே கூறலாம்.

ஆயினும் சிறிய அளவில் தோன்ற ஆரம்பித்த தேசிய உணர்ச்சி விரைவில் பரவலாயிற்று. ஆட்சியில் நாட்டு மக்களையும் கலந்து ஆலோசிக்கவேண்டும் என்றும்,

ஆணையாளர்கள் எதேச்சாதிகாரம் செலுத்துவதைச் சிறிது தளர்த்திக்கொள்ள வேண்டும் என்றும் முறையிட்டுக் கொள்வதற்குக் காங்கிரசு ஸ்தாபனம் முதன் முதலில் ஏற்பட்டது. இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கு ஹியூம், வெடர்பர்ன் முதலிய மேனாட்டார் சிலர் பெருமுயற்சி மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் தேசிய காங்கிரசு கமிட்டி நாட்டாருடைய கருத்துக்களை எடுத்துப் பல ரறியக் கூறி, ஆட்சியாளருடைய குறைபாடுகளை அம்பலப்படுத்தும் தொழிலாற்றி வந்தது. அன்றியும் தாதாபாய் நௌரோஜி போன்ற சிலர் இங்கிலாந்திலேயே இருந்துகொண்டு, அங்குப் பார்லிமெண்டு அங்கத்தினர் பதவியையும் பெற்று, இந்தியாவின் சார்பில் மிதமான கிளர்ச்சிகள் செய்து வந்தனர்.

இந்திய தேசிய காங்கிரசு முதல் உலக் யுத்தம் தொடங்கும் வரையில் பெரும்பாலும் ஒரே கருத்துடைய மக்களது ஸ்தாபனமாக இருந்துவந்தது. சூரத் காங்கிரசில் ஏற்பட்ட பிளவுகள் பிற்காலத்தில் அந்த ஸ்தாபனத்தில் ஏற்படவிருந்த பிளவுகளுக்கு ஒரு முன்னோடியாக அமைந்தன. அந்த ஸ்தாபனம் அழியாமல் அன்னியர் ஆட்சியை எதிர்த்து வந்தது பல திறப்பட்ட அரசியற் கருத்துக்களை யுடையவர்களுக்கும் காங்கிரசு இடங்கொடுத்தது என்பதைக் காட்டுகிறது.

கர்சன் பிரபு வைசிராயாக இருந்த காலத்தில் அவர் எதிர்பாராத விதத்தில் இந்தியாவில் தேசிய உணர்ச்சி வளர்வதற்கு உதவி புரிந்தார். அவருடைய சொற்பொழிவுகளும் அரசியற் செயல்களும் மக்களின் மனத்தை வருத்தும் முறையில் அமைந்தன. அவர் செய்துவைத்த வங்காளப் பிரிவினை வருந்தத்தக்க விளைவுகளை உண்டாக்கிற்று. ஆங்கிலேயர்கள் எல்லோரையும் கர்சன்களாகவே இந்தியர்கள் கருதும் நிலைமை வந்தது. வங்காளப் பிரிவினையால் ஏற்பட்ட மனக் கசப்பே ஆங்கில ஆட்சிக்கு முதற்பகை என்று கூறலாம். மேனாட்டார்களுடைய முறைகளில் நம்பிக்கை மறைந்து, தேசியம் தலையெடுக்கத் தொடங்கிய தருணத்தில் ஏற்பட்ட ரஷ்யா-ஜப்பான் யுத்தம் ஜப்பானுக்கு வெற்றியாக முடியவே, அந்நிகழ்ச்சி மேனாட்டார்கள் தோல்வியறியாதவர்கள் என்னும் ஐதிகத்தை மாற்றிவிட்டது. மேனாட்டாரை அவர்களுடைய ஆயுதங்களைக் கொண்டே வெல்ல முடியும் என்பது தெளிவானவுடன் பொதுவாகக் கீழ்நாட்டுப்பற்று மிகலாயிற்று.

அக்காலத்தில் அரவிந்தர் போன்ற அமிதவாதிகளுடைய, அதாவது புரட்சிக்காரர்களுடைய இயக்கங்களும், கோகலே போன்றவர்களுடைய மிதவாதச் சொற்பொழிவுகளுமே அரசியல் அரங்கில் தென்பட்டன. வங்காளத்தில் புரட்சி இயக்கம் ஓரளவு பரவியிருந்தது; ஹார்டிஞ்சு பிரபுவைக் கொல்ல எத்தனித்தது (1910) இவ்வியக்கத்தின் வேகத்தைக் காட்டும். 1916-ல் அன்னிபெசன்டம்மை ஆரம்பித்து நடத்திய ஹோம் ரூல் இயக்கம் சிறிது ஊக்கமாக நடந்ததாயினும் மக்களின் உள்ளத்தைப் பிணிக்காமல் விரைவில் தளர்ந்தது. பெரும்பான்மை மக்களுடைய ஆதரவின்மையால் அவ்வியக்கங்களும் கருத்துக்களும் எளிதில் அரசாங்கத்தால் அடக்கப்பட்டன.

யுத்தம் முடிந்த பிறகு அரசியல் துறையில் பல நன்மைகள் உண்டாகும் என்று கருதிய மக்கள் 1919 ஆம் ஆண்டு மான்டெகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களால் ஏமாற்றமடைந்தனர். அப்போது ஏற்பட்ட கிலாபத் இயக்கமும் காந்திஜியின் புது அரசியல் கொள்கையைப் பரப்புவதற்கு வசதியளித்தது.

காந்திஜியின் அரசியல் கோட்பாடுகளுக்கும், அவருக்கு முன் அரசியல் துறையில் இந்தியாவில் இருந்தவர்களுடைய கோட்பாடுகளுக்கும் வேறுபாடு அடிப்படையானது. இந்திய அரசியலில் காந்திஜியின் கோட்பாடுகளுக்கு இருந்த ஆதரவு வேறு எந்தக் கோட்பாடுகளுக்கும் எப்போதும் இருந்ததில்லை. ஏனெனில் காந்திஜி எடுத்து விளக்கிய சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை என்னும் எதிர்மறை இயக்கம் முதலியவையும், அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அவர் கையாண்ட நெறிகளும், அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை யாவும் இந்தியப் பண்பாட்டிற்கும், இந்தியப் பொதுமக்களின் மனநிலைக்கும் ஏற்ப அமைந்திருந்தன. ஆகையால், பெரும்பான்மைப் பொது மக்களுடைய ஆதரவு அவருடைய இயக்கத்திற்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பரவியிருந்த லிபரல் கொள்கையை அந்நாட்டு நூல்களைப் படித்துக் கொள்கையளவில் ஆதரித்து வந்தவர்கள் ஆங்கிலப் படிப்புப் படித்த சிலர் மட்டுமே. ஆங்கில மொழியும், ஆணையாளர்களுடைய அரசியல் சமூகக் கோட்பாடுகளும் பொதுமக்கள் வாழ்க்கையில் கலக்கவில்லையாதலின் ஆங்கிலக் கல்வி கற்று, நாட்டுப் பண்பாட்டை மறந்தவர்களுக்கும் பெரும்பான்மை மக்களுக்கும் தொடர்பற்றுப் போயிற்று. இது இவ்வாறாக, காந்திஜி நாட்டு மக்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இந்நிலையில் மற்றக் கோட்பாடுகள் எல்லாம் மறைந்து, காந்திஜியின் செல்வாக்கு அரசியலில் ஓங்கியது இயற்கையே. எளிய வாழ்க்கை, கதர்த்திட்டம், கிராம முன்னேற்ற இயக்கம், வார்தாக் கல்வி முறை, அஹிம்சை முதலியவை இந்தியாவிற்கு உகந்த திட்டங்கள்; வரி கொடாமை, ஒத்துழையாமை, சட்ட மறுப்பு முதலிய இயக்கங்களிலும் மக்கள் சிறிதும் சலியாமல் அவரைப் பின்பற்றியது அவரிடம் மக்களுக்கு இருந்த நம்பிக்கையினாலேயே. அவர் மேனாட்டுப் பிரசார முறையையும் இயக்க முறைகளையும் ஸ்தாபன முறைகளையும் கையாண்டு, ஜனநாயகம், சமத்துவம், அரசியற் சுதந்திரம், தீண்டாமை யொழிப்பு குழந்தை மண ஒழிப்பு, கைம்பெண் மறுமணம் முதலிய பிற கருத்துக்களையும் மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும்படி செய்தது அவரது வெற்றியின் காரணத்தை விளக்கும். சுருங்கக் கூறின், காந்திஜியின் இயக்கங்கள் மேனாட்டு முறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்ட உண்மையான இந்திய இயக்கங்களாக அமைந்தன; சமூகத்தின் மேற்புறணியை மட்டும் கீறிவிடாமல், சமூகம் முழுவதிலும் அவர் கருத்துக்கள் பரவலாயின.

ஆயினும் இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் காந்திஜியின் கருத்துக்களேயன்றி வேறு சில அரசியற் கோட்பாடுகளும் இந்திய அரசியலில் தோன்றின. ஆஸ்திரியா, ஜெர்மனி முதலிய நாடுகளில் பன்னாள் தங்கி, மார்க்ஸ் முதலிய ஆசிரியர்களுடைய தத்துவங்களில் ஈடுபட்டு நின்ற சுபாஷ் சந்திர போஸ் போன்றவர்களுடைய மார்க்சிசக் கொள்கைகளும், ரஷ்யாவில் பன்னாள் வாழ்ந்துவந்த எம். என். ராயின் மார்க்சிசக் கொள்கைகளும் இந்திய அரசியலிற் புகுந்த காலம் அதுவே. வகுப்புவாதத்தின் மூலம் அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் மரபு முஸ்லிம் லீக், இந்து மகாசபை முதலியவற்றின் தலைவர்களால் வலுப்பெற்றது. தென்னாட்டில் தோன்றித் தழைத்த பார்ப்பனரல்லாதார் இயக்கம் சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு, சமூகச் சீர்திருத்தம் என்னும் நிலையில் இயங்கிற்றாயினும் அதுவும் வகுப்புவாதத்தை முக்கியக் கருவியாகக் கொள்ளவேண்டி

யிருந்தது. ஆயினும் பெரும்பான்மை மக்களுடைய ஆதரவு காந்தியத்திற்கே இருந்தது குறிப்பிடத் தக்கது.

1930க்குப் பிறகு இந்திய அரசியலில் தோன்றிய முக்கியமான கருத்துக்கள் சோஷலிசமும் கம்யூனிசமும் ஆம். இவற்றினிடையே கொள்கையளவில் வேறுபாடு இருக்க முடியாதாயினும் செயல் முறையில் வேறுபாடு உண்டு. உலகயுத்த காலத்தில், ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் பரவியிருந்த பாசிசம், ரஷ்யக்கம்யூனிசம், அமெரிக்க முதலாளித்துவ ஜனநாயகம், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்தியக் கொள்கை, அக்கொள்கையை எதிர்த்துக் கீழ்நாடுகளில் எங்கும் தோன்றிய தேசியக் கிளர்ச்சி முதலிய கருத்துக்கள் எல்லாம் இந்திய அரசியல் வாதிகளின் மன நிலையை ஊக்கின. யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதார நிலைமையும் சோஷலிசக் கருத்துக்களுக்கு ஓரளவு ஆதரவு தேடிற்று. 1947-ல் ஆங்கில ஆட்சி நீங்கியபிறகு காங்கிரசின் மூக்கியத் திட்டமாகிய அன்னிய ராட்சி ஒழிப்புக்கு அவசியமும் நீங்கிற்று; சமூக, பொருளாதாரத் துறைகளில் அரசியல் கட்சிகளின் நாட்டம் சென்றமையின், பொருளாதாரத் திறமையை வற்புறுத்திக் கூறும் சோஷலிசக் கருத்துக்கள் அதிகமாக நிலவத் தொடங்கின.

1948-லிருந்து 1950 வரையில் இந்திய அரசியலமைப்பை நிருணயிக்கப் பணி செய்துவந்த அரசியல் நிருணய சபையார் பிரிட்டிஷ் பார்லிமென்டின் ஜனநாயக முறையைப் பின்பற்றி இந்திய அரசியல் நிருவாகத்தை அமைக்க முற்பட்டமை, பார்லிமென்டு முறையில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்திற்று. இவ்வரசியலமைப்புச் சட்டத்தில் சமூக, பொருளாதார அடிப்படை உரிமைகளைப்பற்றிக் கூறியிருப்பது சென்ற ஒரு நூற்றாண்டாகவே இந்தியாவில் ஏற்பட்டு வந்த அரசியற் கோட்பாட்டு வரலாற்றின் பரிணாம முடிவு என்று கூறலாம்.

அரசாங்க நிலையில் பார்லிமென்டு ஜனநாயக முறை நடைமுறையில் இருந்து வருகிறதென்பது உண்மையேயாயினும், இட சாரிக் கருத்துக்கள், வல சாரிக் கருத்துக்கள் என இருவகை அரசியற் கருத்துக்கள் நிலவத் தொடங்கியுள்ளன. பெரிய அளவில் இப்பிளவு உருக்கொள்ளவில்லையாயினும், 1952 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலை ஓர் அளவையாகக் கொண்டு காண்போமாயின் இப்பிளவு நன்கு ஊன்றியிருப்பது தெரிய வரும். வே. தி.

**தமிழ் அரசியற் கருத்துக்கள்:** தமிழ் நாட்டில் முற்காலத்தில் நடைபெற்றது முடியரசு. நாட்டில் வாழும் குடிகளுக்கு அரசனே உயிர் என்னும் கருத்தைப் பழைய தமிழ் நூல்களிற் காணலாம். பசியும் பிணியும் பகையும் நீக்கிக் குடிகளைப் பாதுகாக்கும் பொறுப்புடையவன் அரசன். குடிகளைத் துன்புறுத்தும் பகைவர் நாட்டின் உள்ளேயும் இருப்பர்; வெளியேயும் இருப்பர். நாட்டின் உள்ளேயிருந்துகொண்டு, கொலையுங் கொள்ளையுங் கொடுமையும் புரிவோரை அடியோடு அழித்தல் அரசன் கடமை. பசும்பயிர் செழித்து வளர்வதற்காக அதனிடையே முளைக்கும் களையைப் பறித்தெறிதல் போன்று, நாட்டிலே குடிகள் நலமுற்று வாழ்வதற்காக அரசன் கொடியவர்களைக் கொன்று ஒழித்தல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து (திருக்குறள் 550). கள்வர்க்குக் கொலைத்தண்டனை விதித்தல் முறையாகக் கருதப்பட்டது.

இவ்விதம் பகைவரது கொடுமையாலும் பசிநோய் முதலியவற்றாலும் குடிகள் வருந்தாமற் பாதுகாப்பவன் அரசனே யாதலால் காவலன் என்னும் பெயர் அவனுக்கு அமைவதாயிற்று. காவலன் என்பவன், தன்னாலும் தன் பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் பிறவுயிர்களாலும் உண்டாகும் அச்சத்தை நீக்கி, அறத்தைக் காப்பவன் என்று சேக்கிழார் கூறுகின்றார். (பெரிய. திருநகரச் சிறப்பு: 36). எனவே, மற்றப் பகையைப் போக்கி, அறப்பயனை நாட்டில் விளைப்பவனே காவலன் ஆவான். 'அரசன் அன்று கேட்பான்; தெய்வம் நின்று கேட்கும்' என்பது பழமொழி. மன்னன் அறநெறி தவறாமல் ஆண்டால் மழை தப்பாமல் பெய்யும் என்பது தமிழ் நாட்டார் கொள்கை. மழை பொய்த்தாலும், விளைவுகுறைந்தாலும், அரசனை உலகம் பழிக்கும் என்று புறநானூறு (35) கூறும்.

நீதி செலுத்தும்பொழுது இன்னான் இனியான் என்று அரசன் பார்ப்பதில்லை; குலத்தையும் குடிப்பிறப்பையும் கருதுவதில்லை. சோழ நாட்டை ஆண்ட மனுச் சோழன் ஒரு பசுவின் கன்றைக் கொன்ற அரசிளங் குமரனைத் தன் அருமை மைந்தன் என்றும் பாராமற் கொன்று நீதியின் செம்மையை நிலைநிறுத்தினான். இச் சோழனைப்போலவே பாண்டியன் நெடுஞ்செழியனும் தான் ஆராயாமற் கோவலனைக் கொன்றதற்காகத் தன் னுயிரை விட்டான். பாண்டி நாட்டில் "வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது" என்று புகழ்ந்தான் சேரன் செங்குட்டுவன்.

இத்தகைய மன்னருக்கு நன்னெறி காட்டும் பொறுப்புடையவர்கள் அமைச்சர்களே யாவர். அமைச்சரை உள்ளிட்ட ஐம்பெருங்குழுவினர் அரசாங்கத்தில் பணி செய்தனர். மன்னரே தமக்கேற்ற அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். நாட்டில் வாழும் குடிகளுள் நல்லறிவும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர்களே பெரும்பான்மையாக அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள் என்பது தெரிகிறது. "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்று பாண்டியன் நெடுஞ்செழியன் (புறம். 183) கூறுகிறான். இவ்வாறு அரசன் ஆராய்ந்தெடுத்த அமைச்சர்கள், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளை ஆராய்ந்து, தெளிந்து, நேர்மையாக மன்னனிடம் எடுத்துரைப்பார்கள்; அரசன் தம் கொள்கையைக் கொள்ளுவானோ அன்றித் தள்ளுவானோ என்று ஐயுற்று நெஞ்சம் குலைய மாட்டார்கள். இவ்வாறு இடித்துரைக்கும் அமைச்சரைத் துணைக்கொண்ட மன்னனை எவரும் கெடுக்க முடியாது என்றும், அன்னாரைத் துணைக்கொள்ளாத அரசன் நெறியல்லா நெறிச் சென்று கெடுவான் என்றும் வள்ளுவர் கூறுகிறார் (447, 448). அறத்தை அடிப்படையாகக்கொண்ட அரசு நல்லமைச்சரை நாடும்; மறத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு போலி அமைச்சரைப் பொறுக்கிக் கொள்ளும்.

குடிகளைக் காப்பாற்றும் மன்னனைக் கடவுளுக்கு ஒப்பாகக் கருதினர் தமிழ் நாட்டார். இறைவன் என்ற சொல் கடவுளையும் குறிக்கும், அரசனையும் குறிக்கும். "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்" என்றார் வள்ளுவர். எல்லோருக்கும் அரசனே தெய்வம் என்றார் குமரகுருபர அடிகள். "நாடாளும் அரசனிடம் தெய்வ ஒளி உண்டு; உலகத்தைக் காப்பது அவ்வொளியே" என்பது தமிழ் நாட்டார் கொள்கை. நம்மாழ்வாரும் "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்றுரைத்தனர். ஆகவே, "அரசனே அச்சந் தீர்ப்பவன்; அறங்காப்பவன்; முறை செய்பவன்; குறைதீர்ப்பவன்; அவனே இறைவனாகும்" என்பவை பண்டைத் தமிழர் அரசியற் கொள்கைகள்.

தமிழ் நாட்டு அரசியலை அடைவுபடக் கூறும் நூல் திருக்குறளாகும். பொருட்பால் என்னும் பகுதியில் அரசியல், அமைச்சியல், குடியியல் ஆகிய மூன்றும் கூறப் படுகின்றன. முற்காலப் போர் முறைகள் தொல்காப் பியப் புறத்திணை இயலானும் புறப்பொருள் வெண்பா மாலையானும் புலனாகும். சங்க இலக்கியங்களிலும், காவியங்களிலும் அரசியற் கருத்துக்களைப் பரக்கக் காணலாம். ரா. பி. சே.

**சீன அரசியற் கருத்துக்கள் :** சீனர்களுடைய அரசியற் கருத்துக்கள் அந்நாட்டு அறிஞர் இயற்றிய நீதி நூல்களில் ஆங்காங்கு அடங்கியுள்ளவையே. மேனாட்டு அரசியல் தத்துவத்தைப்போல நன்கு உரு வாக்கப்பட்ட ஒரு அறிவுத் துறையாக அக்கருத்துக்கள் அந்நாட்டில் வளரவில்லை. சீனாவில் தோன்றிய கன்பூஷி யஸ் (கி. மு. 551-478) சில அறநெறிகளை உறுதி செய்துகொண்டு, அவற்றை அடிப்படையாக வைத்துச் சமூக ஸ்தாபனங்களை நிலை நிறுத்துவது நேரிது என்று கருதினார்; ஆனால் அவர் அரசியற் கோட்பாடுகள் என்று வரையறுத்துக் கூறக்கூடிய கொள்கைகள் ஒன்றையும் வெளியிடவில்லை. இது ஓரளவிற்கு உண்மையே யாயி னும், சூத்திரம்போற் செய்யப்பட்ட சிறு வாக்கியங் களில் பொதிந்து கிடக்கும் சீன அறிஞர்களுடைய கருத் துக்கள் முன்பே பாகுபாடு செய்து வகைப்படுத்தப் பட்ட ஒரு தத்துவத்துடன் ஒன்றி இணைந்து நிற்பது தெளிவு. சமூகப் பிரச்சினைகளைத் திருப்திகரமாகவும், அறிவோடும் தீர்த்துவைப்பதே அரசியல் என்று கொள் வோமாயின், சீனாவில் அரசியல் தத்துவத்தைப்பற்றிய கருத்துக்கள் பல காணக்கிடைக்கின்றன.

கி. பி. 1898க்கு முன்பு, லௌட்ஸு (Lao-tse), கன்பூஷியஸ் முதலியவர்கள் சட்டம், அரசாங்கம் என்ப வற்றைப்பற்றிக் கூறியுள்ளவையே சீன அரசியல் கருத் துக்கள் எனத்தக்கவையாம். லௌட்ஸுவின் முக்கிய மான கொள்கைகளைத் திரட்டித் தாவோக் கொள்கை (Taoism) என்பர். அவர் கொள்கைப்படி இராச்சியம் குடிகளுடைய விவகாரங்களில் தலையிடக் கூடாது; பலாத்காரத்திற்கு அடிப்படையான போர்ப்படைகளை அமைக்கக்கூடாது. "பெரிய யுத்தங்களுக்குப் பிறகு பஞ்சங்கள் ஏற்படுகின்றன; நல்ல மனிதன் உறுதியாகச் செயலாற்றுவானே யன்றிப் பலாத்காரத்தால் எக்காரி யத்தையும் சாதித்துக்கொள்ள முற்படமாட்டான்" என்னும்கருத்துக்களைஅறிவு,ஒழுக்கவிதிகள் (Canons of Reason and Virtue) என்னும் தமது நூலில் அவர் கூறியுள்ளார். ஆயினும் அவர் அடிமைத்தனமோ அன்றி அடக்கமான பழக்கமோ உள்ளவரல்லர். சாத்து விக எதிர்ப்பு முறையை அவர் ஆதரித்தார். போரிட மறுப்பவனைத் தோற்கடிக்க முடியாதன்றோ? ஆதலால், படைக்கலங்களைக் கொண்டு போரிடாமலிருப்பதே வெற்றிக்கு வழி. மனிதன் இயற்கையிலேயே நற்பண் புடையவன்; நன்மை மேலோங்கி விளங்கும் ஆட்சி மூலமாகச் சமூக, அரசியல் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் அவர் கூற்றுக்களில் காணப்படுகின்றது. இதே கருத்தை கன்பூஷியசின் கூற்றுக்களிலும் காணலாம். அரசாங்கம் மக்களை அடக்கி ஒரு வழியில் செலுத்துவதை இவரும் விரும்ப வில்லை. சட்டங்களால் ஆட்சி புரிவதிலும் ஒழுக்கத் தால் சீர்திருத்துவதே சிறந்தது; 'நல்லொழுக்கமுள்ள மந்திரிகள் சொற்கேட்டு ஆளும் நல்லரசனுடைய குடி கள் உதாரணத்தால் சீர்திருந்துவர்' என்றார். லௌட் ஸுவின் கொள்கைகளை மேற்கொண்ட தை-சுங் (Tai-sung 627-50) என்னும் அரசர் கொள்ளைகளைத் தடுப்பதற்கான சட்டங்களை இயற்ற மறுத்தார். வரி களையும் செலவையும் குறைத்து, யோக்கியமான உத்தி யோகஸ்தர்களை நியமித்தால் மக்களுக்கு உணவும் உடை யும் குறைவின்றிக் கிடைக்கும்; கொள்ளைக் குற்றத்தை அகற்றுவதற்குத் தண்டனைகளைவிட இம்முறையே சிறந் தது என்று அவர் கருதினார். மக்கள் வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடலாகாது என்ற கருத்து கன்பூஷி யஸ் கூற்றுக்களில் காணப்படுகிறது. சமூகக் குறை பாடுகளை நீக்கத் தற்காலத்திலும் இவற்றினும் வேறு சிறந்த வழிகளைக் காண்டல் அரிது.

சீனர்கள் தனித்துவத்தில் நம்பிக்கை கொண்டவர் கள். அரசாங்கம் என்னும் ஸ்தாபனத்தில் அவர்களுக் குச் சிரத்தை இல்லை; தேசிய அரசாங்கம் என்னும் கோட்பாட்டை அவர்கள் முற்றிலும் புறக்கணித்தனர். பொது மக்களின் கருத்து (Public Opinion) என்பது 1912-ல் நடந்த புரட்சிக் காலத்தில் சீனா அதுவரை கேட்டிராத ஒரு கூற்று. அவர்களுடைய தனித்துவத்தில் தனி மனிதனுடைய முயற்சியைப் பற்றிய கருத்து இல்லை; அவர்கள் அரசாங்கத்தின் தலையீட்டையும் மேற் பார்வையையும் வெறுத்தனரேயன்றித் தனி மனிதர் களின் முயற்சியைத் தனி வழிகளில் புதுமுறைகளில் செலுத்த எண்ணவில்லை. குடும்ப நிலையும், மரபும் முக்கியமாகக் கருதப்படும் நாடுகளில் ஆட்சியாளர் களின் மேற்பார்வையில் வெறுப் பேற்படுவது இயல்பு.

சீர்திருத்தக் காலத்திற்கு முன்பு அரசாங்கத்தின் வேலைகளைக் குடும்பம்போன்ற சமூக ஸ்தாபனங்களே செய்தன. குடும்பமும் பல குடும்பங்கள் சேர்ந்த குழுக் களும் சீன சமூகத்தின் அடிப்படையாயிருந்தன. குடும் பத் தலைவர்களும், குழுத் தலைவர்களும் நீதி, பாது காப்பு முதலிய அலுவல்களைச் செய்துவந்தனர். குடும் பம், குழு முதலியவற்றின் நன்மைக்காகத் தியாகம் செய்யும் குணம் தனி மனிதர்களிடையே மிகுந்து இருந் ததால் இவ்வித ஆட்சி சாத்தியமாயிற்று. பேச்சு, தொழில் முதலிய சுதந்திரங்கள் அவர்களுக்குமிருந்தன. ஆயினும் அவை அரசியல் அமைப்பின் மூலம் நிறுவப் படவில்லை.

1898-க்குப் பிறகு சீன அரசியற் கருத்துக்களில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. காங்-யூ-வேயூ (Kang-Yu-Wei 1858-1927) என்பவர் சட்டங்கள் தேவையில்லை என்னும் பண்டைய கருத்தை மாற்றி, இலவசக் கட்டா யக் கல்வி, 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் வேலை தருதல், நிலம், ரெயில்வே, தொழிற்சாலை முதலிய வற்றைத் தேசிய மயமாக்குதல் முதலிய சோஷலிசக் கருத்துக்களைக் கூறினார். அடுத்தபடியாக அரசியற் கருத்துலகில் முக்கியமானவர் சுன் யாட் சென் (Sun Yat Sen 1867-1925). சீர்திருத்தக்காரரா யிருந்த இவர் அரசன் சீர்திருத்தம் செய்ய மறுத்ததால் புரட்சி வாதியாக மாறினார். இவர் இயற்றிய முக்கியமான அரசியல் நூல்கள் மூன்று ஜனநாயகக் கருத்துக்கள், நாற்பகுதியாட்சி முறை என்பவையாம். பிறர் ஆதிக் கத்தினின்றும் பூரண விடுதலையடைவதும், திபெத்து மக்கள், மங்கோலியர்கள் போன்ற சிறுபான்மையோரின் நலன்களை யுணர்வதும் முதல் ஜனநாயகக் கொள்கை யாம். இந்த இன ஜனநாயகம் (Racial Democracy) ஏகாதிபத்தியத்தையோ (Imperialism), குடியேற்ற முறையையோ (Colonialism) பின்பற்றியதன்று; மக்களுடைய சம்மதத்தைப் பொறுத்தது. அரசியல் ஜனநாயகம் இரண்டாவது கோட்பாடாம்; இது குடி யொப்பம், பிரதிநிதி மீட்டல் முதலிய நேர்முகமாகவு மிருக்கலாம், வாக்களிக்கும் உரிமையான மறைமுக மாகவு மிருக்கலாம். அரசியல் ஜனநாயகம் மக்க ளுடைய சுதந்திரத்தைப் பிற நாட்டாரோ அல்லது

நாட்டுமக்களிற் சிலரோ ஆக்கிரமிப்பதிலிருந்து காப்பாற்ற முயலவேண்டும். மூன்றாவது பொருளாதார ஜனநாயகக் கொள்கை. எல்லாருக்கும் நிலத்திற்கு உரிமையுண்டு என்பதும், அரசாங்கம் பல பொருளாதாரச் செயல்களை மேற்கொள்வதன் மூலம் மூலதனத்தை நேர்முறையில் வினியோகிக்கும் என்பதும் இக்கொள்கையாம். நிலங்களைப் பற்றியும் நிலவரியைப் பற்றியும் அரசாங்கம் சட்டங்கள் இயற்றவேண்டும். நிலத்தின் தரத்தை நிருணயித்த பிறகு அதன் மதிப்பை ஒவ்வொரு நிலச்சுவான்தாரும் அரசாங்கத்திற்கு அறிவிக்கவேண்டும். பிறகு அரசாங்கம் விதித முறையில் வரி விதிக்கும். ஏக உரிமையான (Monopoly) தொழில்களை யெல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டும். திறமையுள்ளவன் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தவேண்டுமாயினும் புரட்சிக்குப்பின், சட்ட அடிப்படையிலே ஆட்சி அமையவேண்டும். அவருடைய நாற்பகுதி ஆட்சி முறைப்படி மற்ற அரசாங்க முறைகளில் உள்ளவாறு நிருவாகப் பகுதி, சட்டசபைப் பகுதி, நீதிப் பகுதி என்று மூவகைப் பாகுபாடு இல்லாமல் நிருவாகப் பகுதி, சட்டசபைப் பகுதி, விசாரணை நீதிப் பகுதி, மேற்பார்வை நீதிப் பகுதி என நால்வகைப் பாகுபாடு இருக்கும். 1920க்குப் பிறகு சீனவில் கன்பூஷியக் கொள்கைக்குப் பதிலாகச் சுன்யாட்சென் கொள்கை நிலைபெறலாயிற்று. சுன்யாட்செனைச் சீனக் கம்யூனிசத்தின் தந்தை என்று கூறலாம். நவ சீனத் தலைவரான மௌ ட்சு-துங் (MaoTse-Tung) 1940-ல் தாம் வெளியிட்ட புது ஜனநாயகம் என்னும் நூலில் சீனக் கம்யூனிசக் கொள்கைகளை விளக்கிக் கூறியுள்ளார். அவர் கருத்துப்படி சீனக் கம்யூனிசம் புது ஜனநாயகம், சோஷலிசம் என்னும் இரு நிலைகளைக் கடந்து வந்துள்ளது. முதற்படி ஏகாதிபத்தியம், படைமானியம், அதிகாரி ஆட்சி ஆகியவற்றை எதிர்த்துத் தொழிலாளிகளும் விவசாயிகளும் நடத்திய போராட்டம். அரசாங்கம் சாமானிய மக்களுடைய சர்வாதிகாரமன்று; மேற்கூறிய வகுப்பினருடைய ஆட்சியேயாகும். பெரிய பாங்குகளும், கைத்தொழில்களும் இராச்சியத்தின் உடைமையாயிருக்கும். ஏனையவை தனிமனிதர்கள் உடைமையாயிருக்கும். உழுபவர்களுக்கு நிலம் உடைமையாகும் வகையில் நில உரிமை மாற்றியமைக்கப்படும். சீனவின் நிலைமைக் கேற்ப, மார்க்சிசம் சில மாறுதல்களோடு ஏற்றுக்கொள்ளப்படும். குடும்பம், கல்வி முதலியவற்றின் பெருமையைக் கூறிய கன்பூஷியசின் கொள்கைக்கு மறுதலையாக தொழிலாளி–விவசாயிச் சர்வாதிகாரத்தை மேலாக்கும் கம்யூனிசம் நிலைபெற்று வருகிறது. பண்டைய கொள்கைகளில் நம்பிக்கை வைத்திருந்த மௌ ட்சு-துங் நாட்டில் ஏற்பட்டுவிட்ட, தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களையொட்டித் தமது கொள்கைகளை அமைத்துக் கொண்டுள்ளார். வீ. வெ.

**முஸ்லிம் அரசியற் கருத்துக்கள்:** இஸ்லாம் மார்க்கத்தில் காணப்படும் ஆட்சித் தத்துவத்தில் லௌகிகக் கொள்கை, வைதிகக் கொள்கை என்கிற வேறுபாடு இல்லை. இஸ்லாமிய மனித வாழ்க்கையில் எல்லாப் பகுதிகளும் ஒரே துறையாகக் கருதப்படுகின்றன. ஆதலால், இஸ்லாமிய நெறி சமய, அரசியல், சமூக, குடும்ப நிலைகளையெல்லாம் ஒருவழிப்படுத்துவதற்கான விதிகளைக் கூறியுள்ளது. இந்நெறிக்கு 'ஷரியத்' என்று பெயர். அச்சொல் வழி அல்லது நெறி என்று பொருள்படும். ஷரியத் என்னும் சொல் குர்ஆனிலேயே கூறப்பட்டிருக்கிறது. ''உங்கள் ஒவ்வொருவருக்கும் நாம் ஒரே தெளிவான வழிகாட்டியுள்ளோம்'' என்று குர்ஆன் கூறுகிறது. ஆதலால், ஷரியத் என்பது உலகத்தில் மனிதன் தன் உரிமைகள் என்ன, கடமைகள் என்ன என்று அறிந்து, அதன்படி ஒழுகுவதால் மறுமைக்கான உணர்வைப் பெறுவதற்கு உதவும் மார்க்கம் என்று ஆகிறது. ஷரியத்தின் விவரங்கள் குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அதன்படி இறைவனே உண்மையான அதிபதி; மனிதன் இறைவனுடைய பிரதிநிதியாகப் பூவுலகத்தில் இருப்பவன். கடவுள் கூறும் ஒழுக்கங்கள் உலகத்திலுள்ள ஜீவராசிகளின் நன்மைகளைக் கருதியவை. அந்த நோக்கங்களை நிறைவேற்றிவைக்கும் தருமகர்த்தாவே மனிதன். ஆகவே, தன் கடமையை நிறைவேற்றுவதுதான் முக்கிய நோக்கமே ஒழியத் தன் உரிமைகளைக் கொண்டாடுவது முக்கிய நோக்கமன்று. ''இறைவனே உங்களைத் தன்னுடைய பிரதிநிதியாகப் பூவுலகில் நியமித்துள்ளான்; உங்களில் சிலர் உயர்வாகவும், சிலர் தாழ்வாகவும் இருப்பது அவன் உங்களைப் பரிசோதிப்பதற்காகவே. அவன் உங்கள் தகுதியை விரைவாகக் கணக்கிட்டுக் கொண்டேயிருப்பான்'' என்னும் குர்ஆன் வசனம் மேற்கூறிய கருத்தைத் தெளிவாக்குகின்றது.

இஸ்லாமிய அரசியற் கொள்கைப்படி நிருவாகத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அத்தேர்தல் வழியாகத்தான் அவர் தமது அரசுரிமையைப் பெறுகிறார். இவரைக் 'கலிபா' என்பர். சிலர் சமுதாயத்திலுள்ள குறிப்பான ஒருசில முக்கியஸ்தர்களால் நியமிக்கப்பட்டுப் பிறகு பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இஸ்லாமிய அரசியற் கொள்கைப்படி ஒவ்வொரு முஸ்லிமும் கலிபா ஆதற்கு உரியர். கலிபா சட்டப்படியும், நீதி தவறாமலும் அரசாளும்வரையில் குடிமக்களின் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கலாம். ஆயினும் அவர் கொடுங்கோலராய்விட்டால், அவரை நீக்கிவிடும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு.

இஸ்லாமியக் கொள்கைப்படி, குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஷரியத் விதிகளுக்கு விரோதமாக நடந்துகொள்ள நபிநாயகம் உட்பட யாருக்கும் அதிகாரமில்லை. நிருவாக முறையில் எழும் சில சிறு விவரங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் ஷரியத்தில் விளக்கம் இல்லாமலிருக்கலாம்; இவற்றை இஸ்லாமிய மார்க்க நிபுணர்கள் ஆராய்ந்து முடிவுசெய்வர். இஸ்லாமிய விதிகளுக்குப் பொருள் கூறுவதற்கும், அவற்றை நிருணயிப்பதற்கும் இஸ்லாமியநெறியில் தேர்ந்த ஒவ்வொரு முஸ்லிமிற்கும் உரிமை உண்டு.

ஆகையால், இஸ்லாமிய அமைப்பு ஒரு ஜனநாயகமாக ஆயிற்று எனலாம். அதில் சாதி, மதம், இனம், இடம், மொழி முதலிய வேறுபாடுகள் இல்லை. ஆதலால் இஸ்லாமிய அரசியல் நிலைமை ஒரு தீர்க்கமான நிலைமையாய் இருப்பதுடன் இதற்கு மாறான விஷயங்களுக்கு இடம் கொடுக்காது. இவ்வித சமத்துவ ஜனநாயகமாய் இருப்பதனால் ஒருவரை ஒருவர் மோசம் செய்வதைத் தடுப்பதோடுகூட நீதியையும், அறநிலையையும், ஒழுக்க நெறியையும் அது கற்பிக்கிறது. இவ்வித அரசியல் நிலை உலகமெங்கும் பரவ இடம் இருக்கிறது. ஆனால், அது பலவந்தமாகச் சர்வாதிகார ஆதிக்கத்தைப்போல இருக்க முடியாது. ஏனெனில், மனித வாழ்க்கையில் எல்லாப் பகுதியையும் அது சீர்திருத்தம் செய்ய முயல்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் அவனுடைய உரிமையைப் பூரணமாக அளிக்கும்படி செய்கிறது. கருத்து வேறுபாடுகளையும் தாராளமாகத் தெரிவிக்க இடம் கொடுக்கிறதினால் சர்வாதிகாரத்திற்கு அறவே இடம் கொடுப்பதில்லை. மேலே சொன்ன கருத்துக்களை முதற் கலிபாவான அபூபக்கர் கீழ்க்கண்டவாறு நன்கு விளக்குகிறார்:

"மக்களே, நான் உங்கள் எல்லோரையும் விட மேலானவனுக இல்லாவிட்டாலும், எனக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் நல்லவனுக நடந்து கொண்டால் எனக்கு உதவி செய்யுங்கள். நான் தவருகச் செய்வேன் என்று தெரிந்தால், நல்ல வழியைக் காட்டுங்கள். உங்களிடையே தளர்ச்சியுள்ளவன் என் கண்முன் பலசாலியாகத் தெரிகிறுன்; கடவுளின் சம்மதம் இருக்குமேயானுல் அவனுடைய உரிமையை அவனுக்குச் செலுத்துவேன். உங்களிடையே பலசாலியாகவுள்ளவன் என் கண்முன் தளர்ச்சியுள்ளவனுகத் தெரிகிறுன். கடவுளின் சம்மதம் இருக்குமானுல் அவனிடமிருந்து கிடைக்கவேண்டியதை நான் கட்டாயமாக எடுத்துக்கொள்ளுவேன். நான் இறைவனுடைய கட்டளைகளுக்கும், நபி அவர்களின் உபதேசங்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும் காலம்வரை எனக்கும் நீங்கள் கீழ்ப்படியுங்கள். நான் இவற்றிற்கு விரோதமாக நடந்தேனேயானுல் எனக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் இல்லை" (ஆமீர் அலியின் சாரசன் வரலாற்றுச் சுருக்கம் பக். 21-29). சை. அ. வா. பு.

**அரசிலி** தென்னுர்க்காடு ஜில்லாவில் புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் 5 மைலில் இருக்கும் இரும்பை மாகாளம் சென்று, அங்கிருந்து ஒட்டன்பாளயம் வழியாகப் போனுல் வடகிழக்கே 3 மைலில் இருக்கிறது. வாமதேவ முனிவர் பூசித்த தலம். சுவாமி அரசிலிநாதர். அம்மன் பெரிய நாயகி. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இவ்வூர் இப்போது ஒழுந்தியாப்பட்டு என வழங்குகிறது.

**அரணிடுதலும் முற்றுகையும்** (Fortification and Siegecraft): "அரணிடுதல் என்பது எந்திரவியற் சாதனங்களால் ஓரிடத்தில் உள்ள துருப்புக்கள் தமது போர்த்திறனைப் பெருக்கிக் கொள்ளுதல்" என்று மேனுட்டு இராணுவ நூலொன்று வரையறுக்கிறது. இவ்வாறு செய்வதால் அந்த இடத்தைப் பாதுகாக்கத் தேவையாகும் துருப்புக்களின் எண்ணிக்கை குறைகிறது. இதுமட்டுமன்றி எதிரிகளின் முன்னேற்றத்திற்கு அது தடையாகவும் அமைகிறது. ஆகையால் தற்காப்பும், தடையும் அரணிடுதலின் முக்கிய நோக்கங்களாக இருந்து வந்துள்ளன. அரண்கள் இருவகைப்படும். ஒரு நாட்டின் எல்லைகளையும், தலைநகரையும், போருக்கு இன்றியமையாத தொழிற்சாலைகள் முதலியன உள்ள பகுதிகளையும் நிலையான அரணிட்டுப் பாதுகாப்பதுண்டு. போரை மேற்கொண்டு நடத்தத் தேவையான அரண்களையும், மற்றத் தற்காப்புச் சாதனங்களையும் அவ்வப்போது அமைத்துக்கொள்வது தாற்காலிக அரண் எனப்படும். போர்க்களத்தின் அருகில் இத்தகைய அரண்கள் அமைக்கப்படலாம். அல்லது ஆயுதக் கிடங்குகளையும், போக்குவரத்து வழிகளையும், துருப்புக்கள் பின்வாங்கும்போது அவைகள் செல்லும் வழிகளையும் இவ்வாறு பாதுகாக்கலாம்.

அரணிடுதலின் வரலாறு போரின் வரலாறே ஆகும். பழங்காலத்திலிருந்தே மானிடன் தனக்குச் சாதகமாகவும், எதிரிக்குப் பாதகமாகவும் உள்ளவாறு ஓர் இடத்தின் இயற்கை அமைப்பைச் செயற்கை முறைகளால் மாற்றி யமைக்கும் உபாயங்களைக் கையாண்டு வந்திருக்கிறுன். பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, மானிடன் இவ்வாறு அரண்களை அமைத்தனன் என்பது போர்க்கலையின் வரலாற்றிலிருந்து தெளிவாகிறது. பழங்கால மத்திய ஆசிய நாகரிகங்கள் தழைத்திருந்த காலத்தில் ஓரிடத்தில் வாழ்ந்த மக்களிற் பெரும்பான்மையானவர்களைப் பாதுகாக்க அந்நகரங்கள் வலிமைவாய்ந்த மதில்களால் சூழப்பட்டன. இடைக்கால ஐரோப்பாவில் வாழ்ந்த படைமானியப் பிரபுக்கள் (Feudal Lords) தாம் கப்பம் வசூலித்த நகரங்களைப் பாதுகாக்க இவ்வகை அரண்களை அமைத்தார்கள். பிற்காலத்தில் கட்டப்பட்ட தடைக் கோட்டைகள் எதிரியின் படைகள் நாட்டில் நுழைவதைத் தாமதப்படுத்தவும் தடுக்கவும் பயன்பட்டன. தற்காலத்தில் எதிரிகளின் படையெடுப்புக்கு ஆளாகத்தக்க எல்லைகளைக்கொண்ட நாடுகள் இந்த எல்லைகளில் அரணிட்டுத் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முயல்கின்றன.

**பண்டை இந்திய அரண்கள்:** பகைவரால் துன்பம் நேரும்போது பாதுகாத்துக் கொள்ள அரணை அமைக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் ஆதியிலிருந்தே இருந்துவந்துள்ளது. தொல்காப்பிய உரையில் இத்தகைய அரணின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அது பகைவர் அணுக அரியதாய், வஞ்சனை மிக்க உபாயங்களையும், ஆழமான அகழியையும், அதைச் சுற்றிலுமுள்ள காவற்காடு என்ற அடர்ந்த காட்டையும், தோட்டி முள் போன்ற தடைகளையும், பகைவருக்குத் தொல்லை விளைவிக்கும் பல பொறிகளையும், படைக்கலங்களையும் உணவுப்பொருள்களையும் பிறபொருள்களையும் சேமித்து வைக்கும் கிடங்குகளையும் கொண்டிருக்கும். இதில் அம்புகளை எய்யும் இடமும், எந்திரப் பொறிகளை அமைக்கும் இடமும், காவற் கோபுரங்களும் இருக்கும் என்பது கூறப்பட்டிருக்கிறது. பகைவர் ஏறி நின்று போர்செய்ய ஏற்றவாறு அகலமாகவும், பகைவர் அணுகுவதற்கு அருமையானதாகவும் உள்ளதே அரண் எனப்படுவது என்றும், ஏராளமான நீரும், பெருமலைகளும் நிழல் தரும் அடர்ந்த காடும் உடையதே அரண் என்றும், அரணுக்குள் இருப்பவர்கள் நெடுநாளைய முற்றுகையும் தாங்குவதற்கு ஏற்றவாறு, அது எல்லா வகையான போர்த் தளவாடங்களையும், உணவுப் பொருள்களையும், குடி தண்ணீரையும் தன்னிடத்தே கொண்டிருக்க வேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறுகிறுர். வேறு எத்தகைய பெருமை கொண்டிருந்தாலும், அரணிட்டுப் பாதுகாத்துக் கொள்ளாத அரசன் எப்பெருமையும் அடையமாட்டான் என்பதும் அவர் கருத்து.

சுக்கிரநீதி என்ற வடமொழி நூலில் ஒன்பதுவகை அரண்கள் விவரிக்கப்பட்டுள: (1) எதிரியின் முன்னேற்றத்தைத் தடை செய்யும் களர்நிலவரண் பள்ளம், முள், கல் ஆகியவற்றுல் ஆனது. (2) கோட்டையைச் சுற்றியுள்ள அகழி ஆழமான நீரையும், முள்ளையும், நச்சுச் செடிகளையும் கொண்டது. (3) கனத்த சுவர்களால் ஆன மதில் உயரமானது. (4) கோட்டைக்கு அப்பாலுள்ள காட்டரண் மனிதர் நுழைய இயலாதவாறு அடர்ந்தது. (5) பகைவர் முன்னேற உதவும் நீரும் நிழலும் இல்லாத பாழிடம் நிலவரண் எனப்படும். (6) கடல், ஏரி, ஆறுபோன்ற நீர்ப்பரப்பினுல் ஓரிடத்தைச் சூழ்ந்திருக்கச் செய்வது நீர் அரண். (7) செங்குத்தான மலைகளால் பாதுகாப்புடையது மலையரண். (8) திறமை வாய்ந்த படைவீரரால் பாதுகாப்புடையது படையரண். (9) ஓர் அரசன் தனது சுற்றத்தாரால் பாதுகாக்கப்படுவது துணையரண்.

இருக்கு வேத காலத்திலேயே வடநாட்டில் அரணிடும் வழக்கம் இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மண்ணினுல் ஆன மதிலையுடைய ஊரே புரம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கௌடிலியர் தமது அர்த்தசாஸ்திரத்தில் அரணின் இலக்கணத்தை மிக விரிவாகக் கூறுகிறுர். சந்திரகுப்த அரசரது காலத்தில் இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ் பாடலி

புத்திர நகரத்தின் அரண் 600 அடி அகலமும், 50 அடி ஆழமும் கொண்ட அகழியையும், 572 கோபுரங்களையும், 64 வாயில்களையும் கொண்ட பெரிய மதிற்சுவரையும் உடையது என்று கூறுகிறார்.

இடைக்காலத்தில் எழுதப்பட்ட கட்டடச் சிற்ப நூல்களிலும் கோட்டைகளின் அமைப்பு விவரிக்கப் பட்டுள்ளது. பத்மகக் கோட்டை என்பது வட்டமாகவோ, சதுரமாகவோ அமைக்கப்பட்டு, எட்டு அல்லது பதினாறு வாயில்களையும், ஒவ்வொரு வாயிலுக்கும் கனமான இரட்டைக் கதவுகளையும், சுற்றிலும் ஆழமான அகழியையும் உடையது. போஜ அரசர் எழுதிய கட்டடச் சிற்ப நூலில் தமிழ் நூல்களில் காணப்படுவதை யொத்த நால்வகை அரண்கள் விவரிக்கப்படுகின்றன.

முற்றுகையை நடத்தும் வகையையும் அர்த்த சாஸ்திரம் விளக்குகிறது. பின் வாங்குவதுபோல் பாசாங்கு செய்தும், உள்ளிருக்கும் மக்களைச் சாகசத்தினால் தம் பக்கம் சேர்த்துக்கொண்டும், நீண்ட முற்றுகைக்குப் பின்னரும் எதிர்பாராது தாக்கியும் ஒரு கோட்டையைக் கைப்பற்றலாம். வஞ்சகத்தால் கோட்டைக்குள் புகும் முறைகளையும், கோட்டையிலுள்ளோருக்கு உணவும் நீரும் கிடைக்காமல் தடுத்து, அவர்களை அடிமைப்படுத்தும் வகைகளையும், கோட்டைக்குத் தீ வைத்து அதைக் கைப்பற்றும் முறையையும், யானைகளையும் கனமான எந்திரங்களையும் கொண்டு கோட்டை வாயில்களைத் தகர்க்கும் வழிகளையும் கௌடிலியர் விவரிக்கிறார்.

**பழங்கால ஐரோப்பா :** ஆப்பிரிக்காவை யொத்த நாடுகளில் வாழும் காட்டுமிராண்டி மக்கள் இக் காலத்திலும் முள்வேலியை அரணாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகையால் முதன்முதல் பயன்பட்ட அரண் இதுவே என ஊகிக்கலாம். இதற்கடுத்தபடியாகச் செங்குத்தான மண் சுவர்களை எழுப்பிப் பகைவரது படையெடுப்பைத் தடை செய்யும் பழக்கம் தோன்றியது. முற்றுகையிடும் படைவீரர்கள் சுவரை அணுகும்போது உள்ளிருப்பவர்கள் அதன்மேல் ஏறி நின்று, அவர்கள்மேல் அம்புகளை எய்து, அவர்களைத் துரத்த ஏற்றவாறு இது அமைந்திருந்தது. இச் சுவர்களைக் கல்லையும் மண்ணையும் மரத்தையும் கொண்டு அமைப்பது வழக்கம்.

செங்கற்களைக் கொண்டு பெருஞ் சுவர்களை அமைக்கும் வழக்கம் கி. மு. 2000-ல் தோன்றியது. அக்காலத்தில் கட்டப்பட்ட மதில்களுள் அசீரியத் தலைநகரான நினவாவில் அமைக்கப்பட்ட கோட்டை புகழ் வாய்ந்தது. இதன் சுவர்கள் 120 அடி உயரமும், 30 அடி அகலமும், 50 மைல் நீளமும் கொண்டிருந்தன. பிரமாண்டமான இந்த மதிற் சுவரில் 1,500 வாயில்கள் இருந்தன. பாறைகளையும், தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் எரியும் பொறிகளைக் கண்டுபிடிப்பதற்குமுன் இத்தகைய பெருமதில்களைக் கடப்பது இயலாத செயலாகவே இருந்தது. ஆகையால் நீண்ட ஏணிகளையும், கயிறுகளையும் கொண்டு சுவரின்மேல் ஏறும் பழக்கமே அக் காலத்தில் இருந்தது. சுவரைத்தாண்டி உள்ளே நுழைவதைவிட அதில் குடைந்து நுழைய முயல்வதும், சுவரின் அடிநிலையை இடித்து அதைத் தகர்க்க முயல்வதும் உண்டு. ஓர் உடும்பிற்குக் கயிற்றைக் கட்டி, அதை மதிற்சுவரின்மேல் வீசி எறிந்து, கயிற்றைப் பற்றிக் கொண்டு மதிலேறும் வழக்கம் சிவாஜியின் காலத்திலும் இந்தியாவில் இருந்தது என்பார்கள்.


ரோமானிய சாம்ராச்சியம் தழைத்திருந்த காலத்தில் பலவகையான எறி பொறிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பெரும்பாறைகளையும் தீப்பந்தங்களையும் தீக் கோளங்களையும் கோட்டைக்குள் எறிந்து நாசம் விளைவித்தன. இடிக்கும் கட்டை (Battering Ram) என்ற பெரிய கட்டையின் உதவியால் மதிற்சுவரைத் தகர்க்கும் பழக்கமும் இப்போது தோன்றியது. மிக உயரமான மதிற்சுவர்களைக் கடக்க, அவர்கள் மரக் கட்டைகளால் பெரிய கோபுரங்களை அமைத்து, அவற்றை வண்டிகளில் பொருத்தி, மதிற்சுவரின் அருகே கொண்டுவந்து கோட்டைக்குள் நுழைய முயன்றனர். இந்தக் கோபுரங்கள் 150 அடி உயரம்வரை இருந்ததுண்டு. இக்கோபுரங்களையும், ஏணிகளையும் பகைவர்கள் சுவரின் அருகே கொண்டுவரும்போது உள்ளிருப்பவர்கள் பாறைகளை எறிந்தும், எரியும் பிசினையும், கொதிக்கும் எண்ணெயையும், உருகிய ஈயத்தையும் கொட்டியும் தடுக்க முயல்வார்கள். தமது தாய் நாட்டில் பகைவர்கள் படையெடுத்துச் சைரக்யூஸ் நகரை முற்றுகையிட்டபோது ஆர்க்கிமிடிஸ் என்ற கிரேக்க விஞ்ஞானி பல பொறிகளை அமைத்துப் பகைவர்களுக்கு இடர் விளைவித்தார். பகைவர்களது கோபுரங்களும் ஏணிகளும் மதிலை அணுகும்போது நெம்புகோல்களால் இயங்கிய பெரிய தூக்கிகளால் அவற்றைத் தள்ளியும், கொக்கிகளால் அவற்றைப் பிடித்துக்கொண்டு தகர்த்தும் அவர் நாசம் விளைவித்தார்.

ரோமானிய சாம்ராச்சியத்தின் அழிவிற்குப்பின் அரண் கலையும் முற்றுகைக் கலையும்முன்னேற்றமடையவில்லை. பழங்காலக் கோட்டைகளை முற்றுகையிடும் போது உள்ளிருப்பவர்கள் வெளியேறாது தடுத்து, அவர்கள் உணவின்றித் தவித்து அடிபணியுமாறு செய்யும் முறையே வழக்கத்தில் இருந்தது. ஆனால் இதற்கு நெடுநாளைய முற்றுகை தேவையாக இருந்ததால் இம் முறை அவ்வளவாகப் பயன்தரவில்லை. இடைக்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளில் மிக உயரமான கோபுரங்களும், கோபுரத்திலிருந்து பல திசைகளில் அம்பு எய்யும் இடங்களும், படிப்படியான தற்காப்பு அமைப்புக்களும் இருந்தன.

துறைமுகங்களைப் பாதுகாக்கும் அரண்களும் கோட்டைகளின் அமைப்பையே கொண்டிருந்தன. துறைமுக வாயிலில் மதிற்சுவர்களை எழுப்பிப் பாதுகாத்தார்கள். நீருக்குள் தெரியாதபடி மறைந்திருந்த சங்கிலிகள் பகைவரது கப்பல்கள் முன்னேறாதபடி தடுத்தன. ஆனால் நிலத்தில் பயனாக்கியதைப் போன்ற கனமான பொறிகளைப் பயன்படுத்த இயலாததால் கடல் முற்றுகை மிகவும் கடினமானதாக இருந்தது.

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டு வெகுநாட்கள் வரை அரணிடுதலிலும், முற்றுகையிலும் மாறுதல் எதுவும் நிகழவில்லை. முதன்முதற் பயன்பட்ட பீரங்கிகள் சிறுகுண்டுகளைச் சிறிது தூரம் வரையிலுமே எறிந்தன. ஆனால் 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கோட்டைச் சுவர்களைத் தகர்க்க வலிவான பீரங்கிகள் தோன்றியபின் பழங்காலக் கோட்டைகளின் அமைப்பை மாற்றியமைக்க நேர்ந்தது. தரைமட்டத்திலிருந்து அதிகமான உயரம் இருந்த நெடுஞ்சுவர்கள் பீரங்கிகளுக்குத் தக்க இலக்குக்களாக அமைந்ததால், அவற்றைத் தரைக்குக் கீழுள்ள குழியொன்றில் அமைக்கத் தொடங்கினார்கள். இதிலிருந்து கொத்தளங்கள் (Bastion) கொண்ட அரண்கள் தோன்றின. கோட்டைச் சுவருக்குப்பின் பல உதைசுவர்களைக் (Buttresses) கட்டி, அதை வலிவாக்கியதோடு சுவருக்குப்பின் ஒரு மணல் மேட்டை அமைத்து அதன்மேல் பீரங்கிகளை வைத்தார்கள். இந்த மேடு ராம்பர்ட் (Rampart) எனப்படும். இதற்கடுத்தபடியாக வெளிப்புறத்தில் இருந்த குழி கோட்டைச் சுவரைப் பாதுகாத்ததோடு, எதிரிகளின் முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகவும் அமைந்தது. சுவருக்கு எதிர்ப்புறத்தில்

இன்னொரு நேர் குத்தான சுவர் எழுப்பப்பட்டது. இது எதிர்ச்சுவர் எனப்படும். குழியினால் விளையும் தடை இதனால் இன்னும் அதிகமாகியது. குழியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண்ணை மறுபுறத்தில் கொட்டிச் சரிவு குறைவான மேடொன்றை அமைத்தார்கள்.




**கொத்தளங்கள் கொண்ட அரண்**

ரா : ராம்பர்ட்
சு : சுவர்
எ : எதிர்ச் சுவர்
கு : குழி
மு : மூடிய வழி
ச : சரிவு மேடு

இது சரிவு மேடு (Glacis) எனப்படும். முற்றுகையிடும் படையினர் இதன்மேல் வரும்போது கோட்டைக்குள்ளிருப்போர் அவர்களை நோக்கி எளிதில் சுட ஏற்றவாறு இம்மேடு அமைந்திருந்தது. இச்சரிவு மேட்டிற்குப் பின்னால் சிறுவழி யொன்றைத் தரை மட்டத்தில் அமைத்து முற்றுகையிடப்படும் படைகள் குழியைத் தாண்டிவந்து எதிரிகளைத் தாக்க ஏற்றவாறு அமைக்கப்பட்டது. எதிரிகள் இதைத் தாக்காதவாறு மூடப்பட்டிருந்ததால் இது மூடிய வழி (Covered Way) எனப்படும். இம்முறை ஐரோப்பிய நாடுகளில் சுமார் மூன்று நூற்றாண்டுகள்வரை வழக்கத்தில் இருந்தது. காலஞ் செல்லச் செல்ல இதன் அமைப்புப் பெரிதும் சிக்கலானதாயிற்று.

அரணிடும் முறையிலும், முற்றுகைக் கலையிலும் தேர்ச்சியும் அனுபவமும் மிக்க அறிஞர்கள் இக்காலத்தில் வாழ்ந்தார்கள். அவர்களுள் வாபன் (Vauban 1633-1707) என்ற பிரெஞ்சுப் பொறியிய லறிஞர் குறிப்பிடத் தக்கவர். இவர் தமது அரசரான XIV-ஆம் லூயிக்குப் பல கோட்டை அரண்களை அமைத்ததோடு 48 முற்றுகைகளை வெற்றிகரமாக நடத்தினார். இவர் அமைத்த கோட்டைகளில் 1700-ல் அமைக்கப்பட்ட லில்லி கோட்டை புகழ்பெற்றது. இது கொத்தளங்கள் கொண்ட வெளிச்சுவர்களையும், குழிக்கு வெளியே உள்ள முக்கோண வடிவமான மதில்களையும், பக்கங்களிலிருந்து வெளியே சுட ஏற்ற நிலவறைகளையும் படிக்கட்டுக்களையும் கொண்டது.

துப்பாக்கிகளும் பீரங்கிகளும் சீர்திருத்த மடைந்த பின், இன்னும் அதிகத் தொலைவுகளுக்கும், அதிக வேகமாகவும் சுட முடிந்தது. ஆகையால் ஓரிடத்தைப் பாதுகாக்க எதிரிகளை இன்னும் தொலைவிலேயே தடுத்து நிறுத்தும் அவசியம் ஏற்பட்டது. இதற்காகப் பிரதம கோட்டையைச் சுற்றிலும் ஆங்காங்குத் தனித் தனியே சிறு கோட்டைகளை அமைத்துப் பகைவர்களை முதலில் எதிர்க்க ஏற்றவாறு அவற்றைச் செய்யும் முறை தோன்றியது. இந்த முறைக்கு வாபன் காரணமானர் எனலாம். சுமார் 10 கோடி ரூபாய் செலவில் பாரிஸ் நகர அரண்களும் கோட்டைகளும் இம்முறையை யொட்டி மாற்றி யமைக்கப்பட்டன. இங்கிலாந்து போன்ற மற்ற நாடுகளும் இம்முறையைக் கையாளத் தொடங்கின.

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டபின் முதன்முதலில் கிடங்குகளையும், துருப்புக்களின் இருப்பிடங்களையும் அழிக்கக் குண்டுகளை எறிவது வழக்கமாக இருந்தது. ஆனால் பீரங்கிகளின் திறமை அதிகமானபின் கோட்டைகளைத் தகர்க்கவும் அவை பயன்பட்டன. முற்றுகையிடப்பட்டவர்களின் பீரங்கிகளை முதலில் அழித்துப் பின்னர் மதிற்சுவர்களைத் தகர்ப்பது இன்னும் சிறந்த முறை என்று தெளிவாகியது.

முற்றுகைக் கலையிலும் வாபன் பெரு மாறுதல்களைச் செய்தார். அரணைத் தகர்க்கும் பீரங்கிகளைச் சரிவு மேட்டின்மேல் அமைத்துக் கோட்டைக் குழியில் பல பதுங்கு குழிகளை (Trenches) இணையாக வெட்டிப் படிப்படியாகச் சுவரை அடைந்து தாக்கும் முறையை அவர் கையாண்டு பெருவெற்றி அடைந்தார். இத்தகைய பதுங்கு குழிகளை வெட்டுவது ஆபத்து நிறைந்த வேலையாகையால் நல்ல பயிற்சி பெற்ற வீரர்களே இந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை இந்த முறைகளே கையாளப்பட்டன. கிரிமியன் போரில் செவஸ்டபோல் முற்றுகையின்போதும் இதே முறைகள் கையாளப்பட்டபோதிலும், முற்றுகையிடப்பட்டவர்களும் இதே முறைகளைக் கையாண்டு, பகைவர்களை வெற்றியுடன் தாக்கலாம் என்ற முக்கியமான படிப்பினை இதில் தெளிவாகியது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பீரங்கிகளின் சுடுந்திறனும், வீச்சும் அதிகமாகியதோடு, வளைவான பாதைகளில் குண்டு வீசும் ஹவிட்ஸர் முதலிய புதுப்படைக் கலங்களும் தோன்றிவிட்டன. இதனால் கோட்டைகளில் பீரங்கிகளைப் பயன்படுத்துவது அவசியமா என்ற வினாவே எழுந்துவிட்டது. ஏனெனில் கோட்டைக்குள் இருக்கும் பீரங்கிகளை எதிரிகள் மிக விரைவில் கண்டறிந்து அவற்றை அழிக்க முடிந்தது. பீரங்கிகளை மறைவாக அமைத்து, ஒருமுறை அவற்றை ஓரிடத்திலிருந்து சுட்டவுடன், வேறிடத்திற்குத் தள்ளிச் சென்று அமைக்கும் முறையும், வலிவான கூண்டுகளுக்குள் அவற்றைப் பாதுகாத்துவைக்கும் முறையும் தோன்றின.

அதே சமயத்தில் தோன்றிய தற்காலத் துப்பாக்கியும் முற்றுகைக் கலையில் சில மாறுதல்களைத் தோற்றுவித்தது. திருத்தமும் வீச்சும் மிக்க இத்துப்பாக்கிகளின் உதவியால் பீரங்கிகளின் தாக்குதலையும் சமாளித்துவிடலாம் என்பதை 1877-ல் நடைபெற்ற பிளெவ்னு (Plevna) முற்றுகையின்போது துருக்கிப் படைகள் தெளிவாக்கின. 1844-ல் ஜெர்மானியர் வெடிபஞ்சைப் பயன்படுத்தி,வியக்கத்தக்க நாசம் விளைவிக்கும் குண்டுகளைத் தயாரித்து, வலிவானசுவர்களையும் எளிதில் தகர்த்தார்கள். இவர்களது வெற்றி நிலையாக அரணிடுதலில் இனிப் பயனே இராது என்ற கருத்தைத் தோற்றுவித்தது. இந்த மாறுதல்களால் கோட்டை அரண்கள் மேலும் விரிவடைந்தன. பீரங்கிகளுக்குக் கவசத்தினால் பாதுகாப்பு அளிக்கும் முறை பெருகியது. இதனால் கோட்டையே கவசந் தாங்கியதோ என்னும் அளவிற்குக் கவசத் தகடுகள் பயன்பட்டன. இம்முறைக்கு எதிராகப் பீரங்கிகளுக்குக் கவசப் பாதுகாப்பு அளிப்பதைவிடப் படைப் பாதுகாப்பு அளிப்பதே சிறந்தது என்ற கருத்து இங்கிலாந்தில் தோன்றி வளர்ந்தது. இந்த முறைகளால் அரணிடப்பட்ட ரஷ்யத் துறைமுகமான போர்ட் ஆர்தர் 1904-ல் ஜப்பானியரால் முற்றுகையிடப்பட்டபோது ஐந்து மாதங்கள் வரை வலிவான பீரங்கிகளின் தாக்குதல்களையும், ஹவிட்

ஸர்களின் நாசத்தையும் எதிர்த்து நின்றது. சுரங்க வெடிகள் அரண் அமைப்பைத் தூள்தூளாகத் தகர்க்கும் வரை ஜப்பானியர் முன்னேற முடியவில்லை. ஆகையால் தற்காலப் படைக்கலங்கள் தோன்றிய பின்னரும் அரண்கள் பயனற்றுப் போகவில்லை என்ற நம்பிக்கை வளர்ந்தது.

முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் அரணிடுதலைப் பற்றி வழங்கிய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறலாம். முக்கியமான பகுதிகளை அரணிட்டுப் பாதுகாக்க வேண்டும். சங்கிலிபோல் பிணைந்திருக்கும் இந்த அரண்கள், பகைவரது குண்டுகள் அந்த இடத்தை அடையாதவாறு, அதிலிருந்து பல மைல் தொலைவில் அமைந்திருக்கவேண்டும். பதுங்கு குழிகளோடு கூடிய காலாட்படை அணிவகுப்பு இக்கோட்டைகளை இணைக்க வேண்டும். கம்பிகளும், மற்றத் தடைகளும் அமைத்துப் பகைவரின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய வேண்டும். குண்டுகளால் சேதமடையாத பதுங்கிடங்கள் (Shelters) கட்டப்படவேண்டும். முக்கியமான சில பீரங்கிகள் கோட்டைக்குள்ளும் மற்றவை வெளியில் தக்க பாதுகாப்புடனும் மறைவாகவும் அமைக்கப்படவேண்டும். கோட்டைகளுக்கிடையே தக்க பாதைகளும், ரெயில் போக்குவரத்து வசதிகளும், தந்தி, தபால் வசதிகளும் இருக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் அதிகமான துருப்புக்களைப் பயன்படுத்தாமல் பகைவரது முன்னேற்றத்தைத் தடைசெய்ய முடியும் என்று நம்பினர்கள்.

பிரெஞ்சு-ஜெர்மானிய எல்லையில் இத்தகைய வலிவான அரண்கள் இருந்தமையால் ஜெர்மனி போரைத் தொடங்கியபோது பிரான்சை நேரடியாகத் தாக்காது பெல்ஜியத்தை ஆக்கிரமித்து, அந்நாட்டின் வழியே பிரான்சின்மேல் படையெடுக்க நேர்ந்தது. ஆனால் பெல்ஜியத்தில் இருந்த கோட்டைகள் ஜெர்மானியரது தாக்குதலினல் விரைவில் வீழ்ந்தது வியப்பையும் அச்சத்தையும் ஊட்டியது. ஆனல் அவற்றின் அமைப்பில் இருந்த குறைகளினுலேயே இவை இவ்வாறு அடிபணிய நேர்ந்ததே தவிரத் தற்காலப் போரிலும் கோட்டைகளும் அரண்களும் பயன்பட வழியுண்டு என்பது, பின்னர் வெர்டன் போரின்போது தெளிவாகியது. குறிப்பிட்டதோர் இடத்திற்கு அரணிட்டுப் பாதுகாப்பதைவிட முக்கியமான பிரதேசங்களை அரண்களால் பாதுகாக்கும் முறை எளியதும், நல்ல பயன் தருவதும் ஆகும் என்று முதல் உலகப்போர் காட்டியது. நச்சு வாயுவைப் பயன்படுத்தியும், அயக் கான்கிரீட்டினல் ஆன கட்டடங்களில் பதுங்கி இருந்தும், டாங்கிகளின் முன்னேற்றத்தையும், விமானத் தாக்குதல்களையும் சமாளிக்கலாம் என்பது தெரியவந்தது. போக்குவரத்து வசதிகளைப் பாழாக்கியும், தாமதமாக வெடிக்கும் சுரங்க வெடிகளை ஏராளமாகப் பயன்படுத்தியும் எதிரிகளின் முன்னேற்றத்திற்குப் பெருந் தாமதம் விளைவிக்கலாம் என்பதும் அறியப்பட்டது.

இப் படிப்பினைகளிலிருந்து தற்கால எல்லைப் பாதுகாப்பு அரண்கள் தோன்றின. இவற்றுள் புகழ் வாய்ந்தது பிரெஞ்சு ஜெர்மானிய எல்லையில் பிரான்சினல் அமைக்கப்பட்ட மாஜினே அரண் (Maginot line). பிரெஞ்சுத் தளபதி மார்ஷல் பெட்டெயின் (Marshal Petain) குறிப்பிட்டதுபோல் இவை "குறைவான ஆபத்தும் அதிகமான சௌகரியங்களும்" உள்ளவாறு கட்டப்பட்டன. இந்த அரணின் நீளம் சுமார் 250 மைல். இதில் பூமிக்கடியே அமைக்கப்பட்ட பல கோட்டைகள் நூற்றுக்கணக்கான மைல் நீளமுள்ள குடைவுகளால் இணைக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டையும் பல அடுக்குக்களாக அமைக்கப்பட்டது. அவற்றில் வெடிமருந்துக் கிடங்கும், உணவுக் களஞ்சியமும், படுக்கை யறைகளும், ஆஸ்பத்திரியும், போர்த் தளவாட சேமங்களும், காரியாலயங்களும், டெலிபோன் வசதிகளும், காற்றைப் பதப்படுத்தும் சாதனங்களும் இருந்தன. கனமான குண்டுகளும், விமான வெடிகுண்டுகளும் இவற்றைப் பாதிக்காதவாறு இவை பூமியின் அடியே ஆழத்தில் கட்டப்பட்டிருந்தன. இந்த அரணை அமைக்க ஒரு மைலுக்கு ஒரு கோடி ரூபாய் செலவாயிற்று என மதிப்பிட்டார்கள். கடற்கரைவரை இதை அமைக்காதது இதன் பெருங்குறையாகும். இதனல் 1940-ல் ஜெர்மானியர் இந்த அரணைச் சுற்றி வந்து நாட்டிற்குள் புகுந்துவிட்டனர். 1944-ல் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் நாட்டில் படையெடுத்த போதும் ஜெர்மானியர் இந்த அரணைத் தற்காப்புக்காகப் பயன்படுத்தவில்லை. ஆகையால் இது இரண்டாம் உலகப் போரில் பயன்படவே இல்லை.

பிரெஞ்சு எல்லையில் ஜெர்மானியர் சீக்பிரீடு அரணை (Siegfried Line) அமைத்திருந்தனர். இதில் மாஜினே அரணைப்போல் பெரிய கோட்டைகள் இல்லை. ஆனல் இது இரு வரிசைகளில் அமைக்கப்பட்டிருந்தது. ஜெர்மனியின்மேல் நேசநாடுகள் படையெடுத்துச் சென்ற போது ஜெர்மானியருக்கு இது பெரிதும் பயன்பட்டது.

நிலையான அரண்களுக்கும், அவ்வப்போது போர்க்களத்தில் அமைக்கப்படும் தாற்காலிக அரண்களுக்கும் ஒரு நூற்றுண்டிற்குமுன் இருந்த வேறுபாடு இப்போது இல்லை. ஓர் இடத்தைப் பாதுகாக்கப் பெரிய கட்டடங்கள் தேவையில்லை. மிக விரைவில் குறைவான பொருள்களைக்கொண்டு வலிவான அரண்களை அமைக்க முடிகிறது. பகைவனைத் தடை செய்வதே முதல் நோக்கமாக இருந்ததுபோய்த் தற்காலத்தில் மறைவும் பாதுகாப்புமே முக்கியமாய் விட்டன. ஓரிடத்தின் இயற்கை அமைப்பிற்கேற்றவாறு அரணிடும் முறையை மாற்றிக்கொள்வதன் தேவை தற்காலத்தில் நன்கு அறியப்பட்டுள்ளது. பதுங்கு குழிகள் முதலியன மலை அல்லது ஆற்றின் போக்கிற்கேற்றவாறு அமைக்கப்படுகின்றன. குழிகள், கம்பித்தடைகள் முதலியவை இக்காலத்திலும் ஓரளவு பயன்படுகின்றன. தற்காலத்தில் போர்க்களத்தில் அரணிடுதலின் இன்னெரு நோக்கம் பகைவர்க்குப் பதுங்கிடங்கள் இல்லாமற் செய்வது. இதனல் பகைவர்கள் வரும் வழியைக் கட்டாந்தரையாக ஆக்கிச் செல்வது தற்கால அரணிடுதலின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. விமானங்களிலிருந்து குண்டுவீசும் முறையும், தாழ்வாகப் பறந்துவந்து எந்திரத் துப்பாக்கியால் சுடும் முறையும் அரணிடுதலைப் பற்றிய பழங்காலக் கருத்துக்களை அறவே மாற்றிவிட்டன.

முதல் உலகப் போருக்குப்பின் டாங்கிகளின் அமைப்பிலும், விமானத் தாக்குதல் முறையிலும் நிகழ்ந்த பெரு முன்னேற்றங்களால் தாக்குதல் என்பது தற்காலத்தில் தற்காப்பைவிட எளிதாய்விட்டது. இதனல் அரணிடப்பட்ட போர்க்களப் பகுதிகளிலிருந்து பீரங்கிகளையும் எந்திரத் துப்பாக்கிகளையும் சுடும் இடங்களையும் மின்னற்போர் (Blitz) முறையினல் எளிதில் கைப்பற்ற முடிகிறது. மண் சுவர்களாலும் மேடுகளாலும் தற்காப்பைப் பெற முடியாது என்பது 1939-ல் போரின் தொடக்கத்திலேயே தெளிவாயிற்று. கவசப் பாதுகாப்பும், பதுங்கியிருத்தலுமே நல்ல தற்காப்புச் சாதனங்கள். தற்காலப் போர் முறையையே டாங்கிகள் மாற்றியமைத்துவிட்டன. விமானங்களும் போர் முறையில் வேறெரு புரட்சியை விளைவித்துவிட்டன.


விமானத் தாக்குதலினால் ஓரிடத்திய தற்காப்பு அமைப்பைப் பாழாக்கி, மின்னல் வேகத்தில் மோட்டார்களில் துருப்புக்களை முன்னேற்றி, அதைக் கைப்பற்றும் முறையை ஜெர்மானியர் மிக வெற்றிகரமாகக் கையாண்டார்கள். இப்போர்முறையில் வரிசையாக உள்ள அரண்களினால் பயன் அதிகம் ஏற்படுவதில்லை.

இப்போரில் வேறொரு தற்காப்பு முறையும் ரஷ்யர்களால் கையாளப்பட்டது. இது சிலந்தி வலை முறை (Web method) எனப்படும். இம் முறையில் வரிசையாக அமைந்த நீண்ட அரண்களை அமைக்காது முக்கியமான சில இடங்களில் தற்காப்பு அமைப்பைப் பெருக்கி, அதைச் சுற்றிலும் பகைவர்கள் வந்து சூழ்ந்த பின்னரும் நெடுநாள்வரை அந்த இடத்திலிருந்து போரிடுகிறார்கள். இதனால் ஜெர்மானியரது மின்னல் தாக்குதல்கள் அனைத்தும் அவ்வளவாகப் பயன்தராமற் செய்ய முடிந்தது. இம்முறையில் இலட்சக்கணக்கான சுரங்க வெடிகள் அந்த இடத்தைச் சுற்றிலும் புதைக்கப்படுகின்றன. வரிசையாக அமைந்த அரண்களை டாங்கிகள் தகர்த்துச் செல்வதைப்போல் இம்முறையில் முன்னேற முடிவதில்லை. வருங்காலத்திலும் இத்தகைய முறைகள் பயன்தரலாம்.

விமானப் போக்குவரத்து முன்னேறிவிட்ட இக்காலத்தில் வேறொரு வகையிலும் வலிவான அரண்களையும் பயனற்றவைகளாகச் செய்யலாம். எதிரி அணிகளுக்குப் பின்புறத்தில் விமானங்களிலிருந்து துருப்புக்களையும், தளவாடங்களையும் இறக்கி அவர்களைப் பின்னிருந்து தாக்கும் முறை சென்ற போரில் பயனாகியது. நிலையான தற்காப்புச் சாதனங்களுக்காக 1939க்கு முன் பிரான்சு முதலிய நாடுகள் செலவழித்ததுபோல் ஏராளமாகப் பொருட் செலவு செய்ய, வருங்காலத்தில் எந்த நாடும் முன்வராது என எதிர்பார்க்கலாம். அணு குண்டின் தோற்றத்தினால் அரணிடல் மேலும் பயனற்றதாய் விட்டது. ஆனால் இதற்கு எதிராகப் பூமியின் ஆழத்தில் அமைக்கப்படும் பதுங்கிடங்கள் வருங்காலத்தில் பெருகலாம் என்று எதிர்பார்க்கலாம். எந்திரங்களின் வளர்ச்சியினால் போர்க்களத்தில் போரிடும் படைகளும் கொரில்லா (Guerilla) முறைகளைக் கையாளும் நாள் வந்துவிட்டது. இவ்வகைப் போருக்கு அரணிடுதல் அவசியமில்லை.

நூல்கள்: V. R. R. Dikshitar, *War in Ancient India*; Col. Portway, *Military Science Today*; Gen. Hamley, *Operation of War*.
கா.வா. ரா.

**அரணை** ஊர்வன வகுப்பில் ஓணான், பல்லி முதலியவற்றைப் போன்ற ஒரு குடும்பம். இதில் சுமார் 40 சாதிகளும் 600 இனங்களும் இருக்கின்றன. அரணைகள் உலகத்தின் பல பாகங்களிலும் உண்டு. ஆயினும் பழைய உலகத்தின் வெப்பநாடுகளில் இவை மிகுதியாக வாழ்கின்றன. இவை சில அங்குல நீளமே வளரும் சிறு பிராணிகள். ஆஸ்திரேலியாவிலுள்ள ஓர் இனந்தான் இரண்டடி நீளம் வளர்கிறது. அரணையின் உடலில் செதில்கள் ஓடுபோல ஒன்றின்மேலொன்று சிறிது படியும்படி அடுக்கப்பட்டிருக்கின்றன.


அரணை

அவை சிலவற்றில் மிகப் பளபளப்பாக மழமழவென்று இருக்கும். சிலவற்றில் சொரசொரப்பாகவும் முள் போலவும் இருப்பதுண்டு. செதில்களுக்கு அடியில் தோலிலே சிறு எலும்புத் தகடுகள் உண்டு. சாதாரணமாக ஐந்து விரல்களுள்ள நான்கு கால்கள் நன்றாக வளர்ந்திருக்கும். சில இனங்களில் முன்கால்களோ, பின்கால்களோ, இரண்டு ஜதைகளுமோ வளர்ச்சி குன்றிச் சிறுத்திருக்கலாம். கால்கள் முழுவதுமே இல்லாமலும் இருக்கலாம். இந்தப் பிராணிகள் மணற்பாங்கான இடங்களிலும், வளைகளிலும், கல் இடுக்குகளிலும் வாழ்வதற்குத் தகுதியாக அமைந்திருக்கின்றன. பிராணிகள் நீரில் முழுகுவதும் நீந்துவதும் போலச் சில அரணைகள் மணலில் முழுகியும் நீந்தியும் செல்லத்தக்கன. அரணைகளில் கண்ணிமைகளின் அமைப்பும் பலவாறுள்ளது. பாலைவனத்தில் மணற் பிரதேசத்தில் சிலவற்றிற்குக் கண்ணின் கீழ் இமையில் ஒளியூடுருவத்தக்க ஓர் இடம் உண்டு. இன்னும் சிலவற்றில் முழு இமையுமே இவ்வாறு கண்ணாடிபோல இருக்கும். மற்றும் சிலவற்றில் இரண்டு இமைகளும் ஒன்றாக ஒட்டிக் கொண்டு, பல்லி அல்லது பாம்புக்கு இருப்பது போலக் கண்ணாடி மாதிரியிருக்கும். இப்படியிருப்பது மணலாற் கண்ணுக்குக் கேடு நேராமற் காக்க வுதவும்.

அரணைகள் பெரும்பாலும் குட்டிபோடும். முட்டைகள் வயிற்றிலேயே தங்கி முதிர்ந்து சிறு குட்டிகள் வெளிவரும். சிலவற்றில் உள்ளே வளரும் குட்டிக்குத் தாயின் உடலிலிருந்து உணவு வரக்கூடிய சம்பந்தமும் ஏற்படுகிறது. முட்டையிடும் அரணையினங்களும் ஒன்றிரண்டு உண்டெனத் தெரிகிறது. நமது வீடுகளிலும் தோட்டங்களிலும் ஓடும் அரணைகள் சாதாரணமாக லைகொசோமா, மபூயா என்னும் சாதிகளைச் சேர்ந்த மிகவும் அழகான பிராணிகள். அரணை கடித்தால் மரணம் என்பது உண்மையன்று. பல்லி முதலியவற்றைப் போல அரணையும் தனக்கு ஆபத்து வரும்போது தன் வாலைத்தானே முரியச் செய்துவிடும். துண்டுவால் துடித்துக் கொண்டிருக்கும். அரணையைப் பிடிக்க வந்த பிராணி அந்த வாலைப் பற்றிக்கொள்ளலாம். அரணை உயிர் தப்பிப்பிழைப்பதற்கு இது ஒரு வழி. வால் திரும்ப வளர்ந்துவிடும்.

**அரத்தை** இஞ்சிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மருந்துச் செடிச் சாதி. இந்தச் சாதியில் சுமார் 40 இனங்களுண்டு. முக்கியமானவை இரண்டு. அவற்றுள் ஒன்று பேரரத்தை. இது கிழக்கு இமயமலைப் பிரதேசத்திலும், தென்மேற்கு இந்தியாவிலும் விளைகிறது. 6-7 அடி உயரம் வளரும். பலபருவ மட்டத்தண்டு தரைக்குள் இருக்கும். அது கிச்சிலிப் பழுப்பு நிறமுள்ளது; மணமும் காரமும் சிறு கசப்பும் உள்ளது. கனி ½ அங்குல நீளம். 3-6 விதைகளுண்டு. மற்றொன்றான சிற்றரத்தை சீன தேசத்திலிருந்து இறக்குமதியாகிறது. இதன் மட்டத்தண்டு சிறிதாகவும் செம்பழுப்பு நிறமாகவும் இருக்கும். பேரரத்தையை விட மணமும் காரமும் மிக்கது. இவை குடைச்சலுக்கும், இருமல், மார்சளி, சளிப்பு முதலியவற்றிற்கும் பயனாகின்றன. இவற்றை முறையே தும்பராஷ்டிரம், சன்னராஷ்டிரம் என்றும் சொல்வார்கள். குடும்பம்: ஜிஞ்ஜிபரேசீ (Zingiberaceae); சிற்றரத்தை: ஆல்ப்பைனியா அபிஷினேரம் (Alpinia officinarum); பேரரத்தை: ஆல்ப்பைனியா காலங்கா (Alpinia galanga).

**அரதத்தாசாரியார்** சோழநாட்டில் கஞ்சபுரத்திருந்த மதுசூதனாசாரியார் மகனார். தந்தை வைணவராயினும் இவர் சிவபக்தர். இவர் வைணவரோடு வாதம் செய்து வென்றதால் தந்தையும் சிவபக்தராயினர். சதுர்வேதசாரம், தத்துவ நிரூபணம், அரியர தாரதம்மியம் முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார்.

**அரதைப் பெரும்பாழி** அரித்துவார மங்கல மென்று வழங்குகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலிய மங்கலம் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 2½ மைல் சென்று கிழக்கே திரும்பி 4 மைல் போனால் அவளிவ ணல்லூர் சேரலாம். இன்னும் 1 மைல் கிழக்கே போனால் இந்தத் தலத்தை அடையலாம். கோயிலின் பெயர் பெரும்பாழி. சுவாமி பாதாளேசுவரர். அம்மன் அலங்கார நாயகி. இத்தலம் திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**அரபக்த நாவலர்** (18ஆம் நூ.) திருப் பெருந்துறை வேளாளர்; தமிழில் பரதசாத்திரம் என்னும் இலக்கண நூல் செய்தவர்.

**அரபிக் கடல்** இந்திய சமுத்திரத்தின் வட மேற்குப் பகுதி; இந்தியாவுக்கு மேற்கேயுள்ளது; ஏடன் வளைகுடாவும் ஓமன் வளைகுடாவும் இக்கடலின் பகுதி கள். ஏடன் வளைகுடா இதைச் செங்கடலோடு பாபெல்மான்டெப் ஜலசந்தியினால் இணைக்கிறது. ஓமன் வளைகுடா இதைப் பாரசீக வளைகுடாவுடன் சேர்க்கிறது. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே நடைபெறும் கடல் வாணிபம் இக்கடலின் வழியே செல்கிறது. இலட்சத் தீவுகள் இங்குள்ள முக்கியமான தீவுகள். சொகோட்டிரா தீவு ஆப்பிரிக் காவின் வடகிழக்கே இருக்கிறது. ஏடன், கராச்சி, பம்பாய், கொச்சின், கொழும்பு என்பவை இக்கடலை நோக்கியுள்ள முக்கியத் துறைமுகங்கள்.

**அரபு சங்கம்** சவுதி-அரேபியா, எகிப்து, ஈராக், டிரான்ஸ்ஜார்டன், யெமன், சிரியா, லெபனன் என்னும் அரபு நாடுகளின் மேற்போக்கான ஓர் அரசி யல் சங்கம். 1945 மார்ச்சு 22-ல் ஏற்பட்டது. இதன் சபையில் இந்நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் அங்கத் தினர் உண்டு. பெரும்பாலும் இச்சங்கத்தின் தலைமைச் செயலகம் கைரோவிலிருந்தே அலுவல் ஆற்றி வரு கிறது. அரபு நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்ப தையும், அங்கத்தினர்களுக்கிடையே ஏற்படும் சச்சரவு களை வலுக்கட்டாயமின்றித் தீர்த்துவைக்க முயலுவ தையும் நோக்கங்களாகக்கொண்டு ஏற்பட்ட இச்சங்கம் முக்கியமாக யூதர்களை எதிர்த்து வருகிறது. புதிய இஸ்ரவேல் நாடு நிறுவப்பட்டபோது இச்சங்கம் அதை எதிர்த்தது. இச்சங்கத்திற்கு மதிப்புக் குறைவா யிருப்ப தற்கு, இதன் ராணுவ பலக்குறைவு முக்கியக் காரணம் என்று கூறலாம்.

**அரபுமொழி** என்பது அரபு நாட்டில் பிறந்து, இப்போது மத்தியக் கிழக்கு நாட்டு மக்களுடைய தாய் மொழியாக இருப்பதாகும். இது செமைட் மொழிக் குழுவில் சேர்ந்த மொழிகளுள் இறுதியில் தோன்றியது. ஆயினும் இதுவே பண்டை செமைட் மொழியியல்பு கள் கெடாமல் இருந்துவருகிறது. இதன் சொல்வளம் மிகவும் அதிகம். பெரும்பாலான சொற்களில் தாதுக் களுடன் பகுதிகளோ விகுதிகளோ அல்லது உயிரெழுத் துக்களோ சேர்த்து, ஒவ்வொரு சொல்லையும் சுமார் எழுபது சொற்களாக ஆக்கிவிடலாம்.

அரபுமொழி ஆதியில் இரண்டு பிரிவினதா யிருந்தது. தென் அரபுமொழி யெமன் என்னும் தென் அரபு நாட் டில் கி. பி. 600ஆம் ஆண்டுவரை பயிலப்பட்டு வந்தது. இஸ்லாம் தோன்றியதும் ஹெஜாஸ் பகுதியில் வழங்கிய வட அரபுமொழியில் குர்ஆன் பயிலப்பட்டபடியால், அதுவே தனி அரபுமொழியாக நிலைத்துப் பிறகு முஸ் லிம் இலக்கிய இலக்கணங்களுக்கு வரம்பாக ஆயிற்று. ஐரோப்பிய மக்கள் மத்தியக் காலத்தில் லத்தீன் மொழி யைக் கற்று வந்ததுபோல, இஸ்லாம் வெளிநாடுகளில் பரவியபின், அந்த மதத்தைத் தழுவிய முஸ்லிம்கள் அனைவரும் அரபு மொழியைக் கற்று வந்தார்கள். இஸ்லாமியப் பண்பாடு முஸ்லிம்கள் மூலமாகவும் அரா பிய யூதர் போன்ற பிறர் மூலமாகவும் ஐரோப்பாவில் பரவி, ஸ்பெயின், இங்கிலாந்து முதலிய நாடுகள் வரை எட்டிற்று. இங்கிலாந்திலிருந்த ரோஜர் பேக்கன் என் னும் அறிஞர் அரபு மொழியும் அரபு விஞ்ஞானமுமே ஆங்கில அறிவு வளர்ச்சிக்குக் காரணமா யிருந்ததாகக் கூறுகிறார்.

13ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய ஏகாதிபத்தியத் துக்கு மங்கோலியர்களால் கேடு உண்டாயிற்று. 15ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் ஸ்பெயினிலிருந்து துரத்தப்பட்டனர். இவற்றின் காரணமாக ஏகாதிபத் திய ஒருமை குலைந்துபோகவே, பல முஸ்லிம் சிற்றரசு கள் எழுந்தன. அதனால் இதுகாறும் வளர்ந்துவந்த அரபுமொழியின் இலக்கியச் சிறப்புக் குன்றத் தொடங் கியது. ஆயினும் இஸ்லாமிய வேத நூலாகிய குர்ஆன் அரபுமொழியில் இயற்றப்பட்டிருப்பதால் அரபுமொழி எழுத்து வழக்கில் இன்றும் முன்போலவே இருந்து கொண்டிருக்கிறது.

அரபு இலக்கியம்: (1) இஸ்லாம் தோன்றும் முன்: இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னுள்ள காலத்தை ஜாகில்லியா அதாவது அறியாமைக் காலம் என்று கூறுவர். அக்காலத்தில் உரைநடை இலக்கியம் எது வும் தோன்றவில்லை. செய்யுள் இலக்கியம் மட்டுமே இருந்துவந்தது.

அக்காலத்தில் அரபுக் கவிஞனே தன் இனத்திற்கு வழிகாட்டியாகவும் தீர்க்கதரிசியாகவும் ஆசிரியனாகவும் இருந்தபடியால், அவனே அவர்களுடைய வரலாற்றைப் பாடவும், அவர்களுடைய வீரச் செயல்களைப் புகழவும் உரிமையுடையவனா யிருந்தான். அவனுடைய உதவி யைச் சாதித் தலைவர்களும் பிரபுக்களும் நாடினார்கள். அவர்கள் அவனைக் கண்டு அஞ்சினர். அவனே மக்க ளுடைய கருத்தை உருவாக்கிவந்தான். அக்காலத்துச் செய்யுள் இலக்கியங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவை நீண்டநாள் வாய்மொழியாக இருந்து, பின் கி. பி. 750-900 காலப்பகுதியில் எழுத்துருப் பெற்றன.

(2) இஸ்லாம் தோன்றியதன் பின்: இஸ்லாத் துடன் தோன்றிய குர்ஆனே ஆதி அரபு இலக்கியம். குர்ஆன் மொழியைச் சிதையாமல் பாதுகாக்கவேண்டி யேற்பட்டதிலிருந்தே, அரபுமொழி யியலும், அரபு அக ராதி யியலும் தோன்றின. நபி நாயகத்தின் பொன் மொழிகளின் தொகுதியை ஹதீது என்று கூறுவர். அது வும் குர்ஆனும் சேர்ந்தே இஸ்லாமிய மதத்துக்கும் சட் டத்துக்கும் ஆதாரமாக இருக்கின்றன.

கவிதையும் இசையும் முதலில் திமிஷ்கு நகரத்திலும், பின்னர்ப் பாக்தாது நகரத்திலும் அரச அவைகளில் செழித்து வளர்ந்து வந்தன. அரபு விஞ்ஞானமானது கிரேக்க, பாரசீக, இந்திய நூல்களை அரபுமொழியில் பெயர்ப்பதின் வாயிலாக வளர்க்கப்படலாயிற்று. இப் பணியை முதலில் தனிப்பட்டவர்களே செய்துவந்தனர். பின்னர் அது கலிபாக்கள் ஆதரவில் நடந்துவந்தது. அவர்களுள் ஒருவரான அல்மாமூன் என்பவர் பாக்தா தில் தாருல் ஹிக்மத் என்னும் விஞ்ஞான நிலையம் ஒன்றை நிறுவி, அரபுப் புலவர்களை மட்டுமன்றி, யூத, கிறிஸ்தவ, இந்தியப் புலவர்களையும் அங்கே சேர்த்து வைத்து ஆதரித்துவந்தார்.

இவ்வாறு மொழிபெயர்ப்புப் பணி நீண்ட நாள் நடை பெற்ற பின்னர்ச் சொந்தமாக நூல் இயற்றும் வேலை நடைபெற்றது. இந்தியா, பாரசீகம், கிரீஸ் நாடுகளின் கலைகளில் தேர்ச்சிபெற்ற அரபுப் புலவர்கள் சொந்த

மார்க மருத்துவம், வானவியல், கணிதவியல், ரசாயனம், பூகோளமாகிய துறைகளில் மிகுந்த முன்னேற்றத்தை உண்டாக்கினர்கள்.


அரபு மொழியிலுள்ள அற நூல்கள் அடக்கம், திருப்தி, பொறுமை ஆகியவற்றையே வற்புறுத்துகின்றன. தீயொழுக்கம் என்பது ஆன்மாவின் நோய் என்றே கருதப்படுகிறது. அரபியருடைய தலை சிறந்த தத்துவ சாத்திர நூல்களைத் தாஸாவுப் (அனுபூதிக் கலை) என்று கூறுவர்.

அரபு இலக்கியம் கி. பி. 1000-ல் உச்ச நிலை அடைந்திருந்தது. இஸ்லாத்துக்குமுன் தோன்றிய கவிதைகள் சொற்சுருக்கமும் பொருட்செறிவும் ஓதற்கு எளிமையும் உடையனவாயிருந்தன. பிறகு தோன்றிய கவிதைகள் அணிகள் நிறைந்து செயற்கை அழகு நிரம்பியனவாக இருந்தன. இந்தோ-ஆரிய நூல்களை மிகுதியாகப் பயின்றதன் பயனாக எதுகையும் உவமையும் நிறைந்திருந்தன. ஆயினும் பண்பாட்டிலும் பல பொருள்களைப் பற்றியனவாயிருப்பதிலும் இஸ்லாம் தோன்றிய பின் உண்டான கவிதைகளே மிகச் சிறந்தன.

பாக்தாது 1258 ஆம் ஆண்டில் பாழ்படுத்தப்படவே, அத்துடன் அரபு விஞ்ஞான இலக்கிய முன்னேற்றம் குன்றியது. அப்படிக் குன்றிவந்த இலக்கியம் பின்னால் மேனாட்டு நாகரிகத் தொடர்ச்சி காரணமாக மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. ஆர். ஏ. ப.

**அரம்** மிகப் பொதுவாகப் பயனாகும் ஒரு தொழிற்கருவி. உலோகப் பரப்புக்களையும், மற்றக் கடினமான பரப்புக்களையும் அராவி மழமழப்பாக்க இது பயன்படுகிறது. நாகரிகமற்ற பழங்குடி மக்களிடையில் கடினமான கற்களையும், மீனின் பற்களையும் கொண்டு அராவும் வழக்கம் உள்ளது. பல தொழில்களில் அரம் முக்கியமான கருவியாக விளங்குகிறது. ஆகையால் இது தேவைக்கேற்றவாறு பல வடிவங்களிலும், அளவுகளிலும் அமைக்கப்படுகிறது. கடிகாரம் செய்பவனது அரம் $\frac{3}{4}$ அங்குல நீளமே உள்ளது. தொழிற்சாலையில் பயனாகும் பெரிய அரம் 3 அடி நீளமுள்ளது.

அரத்தின் பற்கள் அமைந்துள்ள வகையை யொட்டி அது பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. இணையாக உள்ள பல பற்களை வரிசையாகக் கொண்ட அரம் ஒற்றை வெட்டு அரம் (Single-cut File) எனப்படும். மிருதுவான உலோகங்களை அராவ இது ஏற்றது. இரட்டை வெட்டு அரத்தில் இரண்டு வரிசைப் பற்கள் ஒன்றன் குறுக்கே மற்றொன்றாகச் சாய்வாக அமைந்திருக்கும். இவ்வாறு அமைப்பதால் வரிசையாக அமைந்துள்ள நீண்ட பற்களுக்குப் பதிலாகச் சிறு பற்கள் தோன்றுகின்றன. இவ்வகை அரம் கடினமான பரப்புக்களை அராவ ஏற்றது. மூன்றாவது வகை அரம் அராவி (Rasp) என்று அழைக்கப்படும். அதில் பல கூரிய பற்கள் இடைவிட்டு அமைக்கப்பட்டிருக்கும். இது மரத்தை அராவ ஏற்றது. அரத்தின் பரப்புத் தட்டையாகவோ, வளைந்தோ இருக்கலாம்.



அர வகைகள்

இரட்டை வெட்டு அரம், ஒற்றை வெட்டு அரம், அராவி.

அரங்களைச் செய்யக் கரியின் விகிதம் அதிகமாக உள்ள உயர்ந்த ரக எஃகு பயன்படுகிறது. இதைச் செய்வதில் தேவையான வடிவிற்கு உருட்டப்பட்ட எஃகு தடி முதலில் எந்திரங்களால் குறிப்பிட்ட நீளத்திற்கு வெட்டப்படுகிறது. இத் துண்டங்களைப் பழுக்கக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்துப் பற்களை அவற்றில் வெட்ட ஏற்றவாறு செய்யவேண்டும். சாணை எந்திரங்களால் துண்டங்களைத் தேய்த்து, அவற்றின் பரப்பை மழமழப்பாக்கவேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட துண்டங்களில் பற்களை வெட்டவேண்டும். முன்பு இதைக் கைதேர்ந்த வேலையாட்கள் கையினால் செய்து வந்தார்கள். ஆனால் இக் காலத்தில் இதற்கு எந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. பற்களை வெட்டியபின் அரமானது தேவையான வெப்ப நிலைக்குச் சூடேற்றப்பட்டுக் குளிர்ந்த நீரில் அவிக்கப்படுகிறது. இதனால் பற்கள் உறுதியாகின்றன.

ஓர் அரத்தைச் சரியான முறையில் உபயோகிக்காவிட்டால் அது மிக விரைவில் தேய்ந்து பாழாய்விடும். கூரிய பற்களைக் கொண்ட அரத்தைக் கொண்டு கடினமான வார்ப்பிரும்புப் பரப்பை அராவக் கூடாது; அதிக அழுத்தத்துடன் அராவுவதாலும் அரம் தேய்ந்துவிடும். அதைப் பரப்பின்மேல் வைத்து, முன்னால் நகர்த்தி அராவியபின், அதைச் சற்று மேலே தூக்கியே பின்னுக்குக் கொண்டுவர வேண்டும். உபயோகப்படுத்திய பின் அரத்தைச் சுத்தம் செய்து வைப்பது நலம்.

**அரவங்காடு** நீலகிரி மலையில் உதகமண்டலத்துக்குப் போகும் பாதையில் குனூரிலிருந்து மூன்றாவது மைலில் உள்ள ஊர். அறுகம்புல் மிகுதியாகக் காணப்படுவதால் அறுகங்காடு என்று பெயர் பெற்று, அது மருவி அறவங்காடு, அரவங்காடு என்று ஆகியது என்பர்; ரெயில்வே நிலையம் உடையது. அரசாங்கத்தின் திரிவெடித் தொழிற்சாலை உள்ளது.

**அரவிந்தர்** அருட் புலவர்; யோகி; சிந்தனைச் சிற்பி. இவர் 15-8-1872-ல் கல்கத்தாவிற் பிறந்தார். இவரது தந்தை டாக்டர் கிருஷ்ண தன கோஷ் ஆவர். 1879 முதல் 1893 வரை பதினான்காண்டுகள் இவர் இங்கிலாந்திலேயே படித்து, கேம்பிரிட்ஜ் பட்டம் பெற்று வந்து, பரோடாக் கல்லூரித் துணைத் தலைவரானார். அப்போதே இவர் வங்கமும் ஆரியமும் கற்று இந்தியாவின் ஞானச் சுரங்கத்தில் இறங்கினார்; 1905 முதல் யோகம் பயின்றார். 1907-ல் கல்கத்தாவுக்கு வந்து, தேசியக் கல்லூரித் தலைவரானார். பிறகு வந்தே மாதரம் என்னும் வெளியீட்டின் ஆசிரியர் குழுவிற் சேர்ந்தார். அரவிந்தரின் எழுத்து, சுதேசி இயக்கத்திற்குப் புதிய உணர்ச்சியும் வேகமும் அளித்தது. அயர்லாந்தில் நடந்த இயக்கம் போலவே இந்திய சுதந்திரக் கிளர்ச்சியை நடத்த இவர் விரும்பினார். தன்னுதவி, நாட்டுத் தொழிலாக்கம், நாட்டுக் கல்வி வளர்ச்சி, ஒற்றுமை, தியாகம் என்னும் இவற்றால் விடுதலை பெறலாம் என்று இவர் விளக்கினார். அக்காலத்தில் காங்கிரசில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. ஒன்று கோகலேயின் மிதவாதக்கட்சி; மற்றொன்று திலகரின் தீவிரக் கட்சி. அரவிந்தர் திலகரின் கட்சியையே போற்றி, அச்சிலும் மேடை மேலும் கிளர்ச்சி செய்தார். அரசாங்கத்தார் அரவிந்தர் மேல் குற்றம் சாட்டி அலிபூர் சிறையில் வைத்தார்கள். சிறைவாசத்தை அரவிந்தர் தியானத்தில் கழித்து, ஆன்ம லாபம் அடைந்தார். "அரவிந்தர் பலாத்காரப் புரட்சியாளரல்லர்; தேசாவேசக்கவி; இந்திய தீர்க்கதரிசி; மானிட மரபின் அன்பன்" என்று சித்த ரஞ்சனதாசர் விளக்கினார். நீதிபதி அரவிந்தரை

விடுதலை செய்தார். அரவிந்தரும் புதிய மனிதராக வெளிவந்து, தம் சிறையனுபவங்களையும், யோகக் காட்சிகளையும் ஆவேசமாகப் பொழிந்தார். பிறகு இவர் **கர்மயோகி, தர்ம** என்ற பத்திரிகைகளால் பகவத் கீதையின் அறத்தை உபதேசித்து, நாட்டிற்கு வழியும் காட்டி, அரசியலிலிருந்து விலகிக் கொண்டார். ஒரு



ஸ்ரீ அரவிந்தர்

உதவி : அரவிந்த ஆச்ரமம்

மாதம் சந்திரநாகூரில் தவமிருந்து, பிறகு கப்பலேறி புதுச்சேரிக்கு 4-4-1910-ல் வந்தார்.

15-8-1914-ல் அரவிந்தர் ஆங்கிலத்தில் **ஆரியா** என்ற அறிவுக் களஞ்சியத்தைத் தொடங்கி ஆறரை ஆண்டுகள் நடத்தினர். அதுவே அவருடைய மெய்ஞ்ஞான பூரண யோக வேதம். அதில் வந்த அரிய கட்டுரைகளே இப்போது நூல்களாக வெளிவருகின்றன. **யோக இணைப்பு** (Synthesis of Yoga), **தெய்விக வாழ்க்கை** (Life Divine), **கீதைக் கட்டுரைகள், வேத ரகசியம்** ஆகியவை அரவிந்த சித்தாந்த விளக்கங்களே யாம்.

''இந்த உலகிலேயே விண்ணுலக ஆட்சியைக் கொண்டு வரவேண்டும்; கலி மாறிச் சத்திய யுகம் வர வேண்டும்; மானிட வாழ்க்கை அமரத் தன்மை பெற வேண்டும்; உடலிலும் தெய்வ ஒளி வீச வேண்டும்; உலகம் பொய், உடல் அநித்தியம் என்ற கொள்கை ஒழிய வேண்டும்'' என்பவை அரவிந்தரின் அடிப்படையான கோட்பாடுகள். ''இந்த உலகில் தெய்வ ஒளி வீசி, அழகும் ஆனந்தமும் வாழ்வில் நிலவக் காண்பதே எனது முயற்சி. அதற்கு மனத்திற்கு மேற்பட்ட விஞ்ஞான சக்தி இறங்கி வரவேண்டும். இந்த இறக்கத்திற்கு மனிதன் தன்னைப் புனிதனாக்கி, அடைக்கலம் புகுந்து, ஆர்வமுடன் அன்னையை உபாசிக்கவேண்டும்'' என்கிறார் அரவிந்தர். ''இன்று மனிதன் கீழியற்கையில், ஆசை யாணவ மாயத்தில், மடமை இருளில் ஆழ்ந்து வருந்துகிறான். அவன் மனத்தில் நிகழும் போராட்டத்தினின்று மேலே உயரவேண்டும். உடல், உயிர், மனம், புத்தி எல்லாம் ஆணவத்தைத் துறந்து, ஆசை வலைகளை நீத்து, மெய்ஞ்ஞானச் சக்திவடிவமான அன்னையைச் சரண் புகுந்தாலே உய்வுண்டு. பராசக்தி அன்னை அழுக்குப் பிடித்த மானிடக் குழந்தையை மாசு நீக்கித் தூய்மையாக்கி உருமாற்றுவாள்'' என்பது அவர் நம்பிக்கை. ரூபாந்தரம் அல்லது மாறிப்பிறத்தலே அரவிந்த சித்தாந்தப் பயன். ''ரூபாந்தரம் என்பது கீழியல்பை முற்றிலும் மாற்றித் தெய்வத் தன்மை பெற்று, அன்பு, அமைதி, ஆற்றல், இன்பம், அறிவு, அருட்புலமைகளுடன் மனிதரை வாழச் செய்தலேயாம். இதற்குச் சிற்சக்தி மனிதனுள் செயல்புரிதல் வேண்டும். பழைய யோகங்களின்படி நான் சந்நியாசத்தையோ, சமாதி சித்தியையோ நோக்கமாகக் கொள்ள வில்லை. மனித தத்துவம் எதையும் அசட்டை செய்யாமல் பூரணமாக்கிப் புதுக்கித் தேவமனிதனை, பூசுரனை, நர நாரணனை இந்த உலகில் உண்டாக்குதலே எனது யோகக் குறிப்பு. இது புது யோகம். பழைய யோகங்களைப்போல் உலகைத் துறந்து, சுவர்க்கம், நிருவாணம் என்று தேடித்திரியும் யோகம் அன்று என்னுடையது. தெய்வ நிறைவேற்றமும் புதிய விஞ்ஞான மாற்றமுமே எனது குறிப்பு'' என்று அரவிந்தர் சொல்லுகிறார்.

ஸ்ரீ அரவிந்தர் 1950 டிசம்பர் 4-ல் தமது பூத உடலை நீத்தார்.

சு. பா.

**அரவிந்தர் கொள்கை :** அரவிந்தருடைய தத்துவக் கொள்கையானது வெற்றுச் சிந்தனையின் விளைவு மன்று; புலன்கள் வாயிலாகப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு வகுத்ததுமன்று; வேதங்கள், உபநிடதங்கள், கீதையாகியவற்றை அவர் தமது ஆத்ம அனுபூதியைக் கொண்டு விளக்குவதாகும். ஆகவே அவருடைய கொள்கையானது அவர் மனத்துக்கு அப்பாற் சென்று கண்ட உண்மைகளை அறிவுக்கு ஏற்றவாறு பொருள் கூறுவதாகும்.

அவருடைய கொள்கையை அகண்ட விஞ்ஞான வாதம் என்றும், பூரண அத்வைத வாதம் என்றும் கூறலாம். அவர், மனத்துக்கு அதீதமான யோக முறை என்னும் பூரண யோக முறைக்கு அறிவு பூர்வமான அடிப்படை வகுத்தார். பூரண யோகம் என்பது அகண்ட வஸ்துவுடன் ஒருவன் தான்மட்டுமன்றி எல்லோரும் ஒன்றித்து வாழும் கலையாகும். தெய்விகச் சக்தி மனிதனிடம் பாயும்படி செய்யும் கலையே அது.

பிரபஞ்சத்துக்கு அடிநிலையாகவுள்ள உள்பொருளானது ஒரு பொருளுமன்று, பல பொருளுமன்று, ஒன்றும் பலவுமாயுள்ள ஒரு தத்துவமாகும். அதுவே பலதிறப்பட்ட நனவுடன் கூடிய பூரணப் பிரமமாகும். அதன் பண்பை ஊன்றி ஆராய்ந்தால், அதனிடம் தனித்துவம், அகண்டத்துவம், அகண்டாதீதத்துவம் என மூன்று நித்திய அமிசங்கள் காணப்படும். அகண்ட அதீதநிலையில் அது பராத்பர பரப்பிரமமாக உளது. அது மனத்துக்கு எட்டாதது; குறைவு படாதது; எல்லையற்றது. அதுவே ஈசுவரத்துவமும் சீவத்துவமும் உடையதாகும். அவ்விரண்டும் உள்பொருள்களே யல்லாமல் மாயா வாதிகள் கூறுவதுபோல் வெறும் தோற்றங்களல்ல. பிரமமே இருப்பு அமிசமாகிய சிவமாகவும், தோற்ற அமிசமாகிய சக்தியாகவும் இருக்கின்றது. ஆனால் சிவத்துக்கும் சக்திக்குமுள்ள உறவு இத்தகையது என்று தருக்க முறையாக வகுக்க முடியாது. பொருள் – பண்பு, காரணம் – காரியம், ஆன்மா –

யாக்கை, ஒற்றுமை - வேற்றுமை போன்ற பதார்த்த லட்சணம் கூறுதல் இதற்குப் பொருந்தாது.

அகண்டத்துவ நிலையில் பிரமம், ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று பண்புகளுடைய தத்துவ மாகும். அந்நிலையில் அதை ஈசுவரன் என்பர். ஈசுவரன் அதாவது சகுணப் பிரமம் நித்தியமானது என்று விசிஷ்டாத்வைதம் கூறுவது முற்றிலும் சரியே. ஆயினும் பூரணப் பிரமத்தின் அகண்டாதீத நிலையே அனைத்திலும் உயர்ந்த நிலை என்பதையும் கவனித்தல் வேண்டும். மொழிகளால் கூற முடியாத பிரமம் அறிவுக்கு விளங்கும் வண்ணம் தோன்றும் ஆதி அமிசமே சச்சிதானந்த மாகும். அதன் உள்பொருள் நிலையில் இருப்பு, நனவு, இன்பம் ஆகிய மூன்றும் அதன் இணைபிரியாப் பண்புகளாகும். அகண்ட உலகங்களை ஆக்குபவன் என்ற நிலையில் நித்திய சத்திய நனவாகக் காணப்படுகின்றது. அந்த நனவு, விஞ்ஞானம், பிரஞ்ஞானம், சஞ்ஞானம் என மூன்று அமிசங்களுடையது. ஈசுவரன் பல பொருள்களாகத் தோன்றுவதற்கு அடிநிலையாயிருப்பது இந்த அகண்ட நனவேயாகும்.

சீவான்மா : பிரமமானது தனித்துவ நிலையில் அறிவதும் அனுபவிப்பதும் தோன்றுவதுமான பல திறப்பட்ட அமிசங்களுடைய தத்துவமாக இருக்கின்றது. ஆன்மா என்பது லுக்ரீஷியஸ் கூறிய அணுவுமன்று ; லைப்னிட்ஸ் கூறிய 'மோனட்' என்பதுமன்று ; அல்லது ஸ்பினோசா கூறிய அகண்ட வஸ்துவின் அமிசமாத்திரமுமன்று ; அல்லது மாத்துவர் கூறிய தெய்விகச் சத்தியைச் சார்ந்த உண்மையுமன்று. அது ஒருவிதத் தோற்றமுடைய உள்பொருளேயாகும். சீவான்மாவுக்குப் பிறப்பு இறப்பு இல்லை. அது எவ்வித மாறுதலும் அடையாதது. காரண காரியச் சுழலில் அகப்படாதது. அந்த நிலையில் அது சத்துவ சொரூபம் உடைய நித்திய வஸ்துவேயாயினும் தொழிலிலும் தோற்றத்திலும் அதனின்றும் வேறுபட்டதே யாகும். அதுதான் அகண்ட, அகண்டாதீத உள்பொருளின் தொழில் நடத்தும் அமிசம். ஆதலால் ஆன்ம அனுபூதி பெறும்போது 'தான்' என்பது மட்டும் மறையுமே யன்றிச் சங்கரருடைய சீடர்கள் கூறுவதுபோல் சீவான்மாவின் 'தனித்துவம்' அழிந்து போவதன்று. சீவன் அவித்தையை நீக்கி, வினைத் தளையை அறுத்து, ஆன்ம விடுதலை பெறும்போது அகண்டாதீத மௌன நிலையாகிய மோட்சத்தையோ, அல்லது உள்பொருளுடன் கூடும் இன்ப ஐக்கிய நிலையாகிய காதலையோ, அல்லது பிரபஞ்சத்தின் பரிணாமமாகிய உள்பொருளின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக உள்பொருளுடன் ஒத்துழைப்பதையோ தேர்ந்து கொள்ளலாம். இக்காலத்தவர் மூன்றாவது கூறியதையே தேர்ந்துகொள்ள வேண்டும் என்று அரவிந்தர் கூறுகிறார். ஏனெனில் அப்பொழுதுதான் மன்பதையைத் தெய்விகம் அடையும் படி செய்ய முடியும். இவ்வாறு மனிதன் தெய்வத்துடன் ஒத்துழைத்து மனிதனைத் தெய்விகம் அடையும் படி செய்வதற்கான கலையே அரவிந்தர் வகுத்துள்ள பூரண யோக முறை என்பதாகும்.

உலகம் என்பது உள்பொருளானது படைப்புத் தொழிலிற் கொள்ளும் வெள்ளமாகும். பிரமமானது அகண்டாதீத நிலையில் மாறாத தன்மையுடையதாக இருப்பினும், தன்னுடைய எல்லையற்ற சக்திகளைத் தோற்றுவிப்பதற்காக உலகமாகப் பரிணமிக்கின்றது. இந்தப் பரிணாமம் காலம் இடம் என்னும் இரண்டு இணைபிரியா அமிசங்கள் வாயிலாகவே நடைபெறுகின்றது. உள்பொருளின் உறக்க நிலையே உலகமாகும். தன்னையே சிந்தித்து, அதன் பயனாகத் தன்னையே மறந்த நிலை என்றும் கூறலாம். சச்சிதானந்தத்திலுள்ள சத்து என்பதன் தாழ்ந்த தோற்றமே சடப் பொருளாகும். உயிர் என்பது சித்து என்பதன் தாழ்ந்த தோற்றமும், மனம் என்பது ரித சேதனம் அல்லது உண்மை அறிவு என்பதன் தாழ்ந்த தோற்றமுமாகும். ஆனந்தமே ஆத்மாவாகத் தோற்றுகிறது. ஆதலால் மனிதனுடைய அடி நிலையான குறிக்கோள்கள் வெற்றுக் கற்பனைகள் அல்ல, உள்பொருளின் குறிக்கோள்களேயாம்.

சாதாரணமான மனித அறிவுக்கு மேலாகப் பல அறிவு நிலைகள் உள. அவை ஊர்த்துவ மனம், பிரபுத்த மனம், பிரஞ்ஞை, அதிமானசம் என்பன. அதிமானசமே உள்பொருளின் பிரதிநிதியாக உலகத்துக்கு வந்து சேர்வது. அது உள்பொருளுடன் உறவு கொண்டதாயிருப்பினும், ஒன்றாயிருப்பதை விட்டுப் பலவாகத் தோன்றுவதற்காக அவித்தை நிலையையே மேற்கொள்கின்றது. அவித்தை என்பது வித்தைக்கு எதிர்மாறானதன்று, வித்தையினிடமுள்ள ஒரு சக்தியே யாகும். அது பிரமம் தன்னுடைய குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகத் தன்னையே மறந்து நிற்பதாகும். பிரபஞ்சம் பரிணாம நிலையுடையது. அதனால் விலங்கினின்றும் மனிதன் பரிணமித்ததுபோலவே மனிதனின்றும் உயர்-மனிதன் பரிணமிப்பான். அப்பொழுது கடவுளுடைய அரசு பூலோகத்தில் அமையும் ; அமைதியும் முன்னேற்றமும் ஆனந்தமும் உண்டாகும். ஹ.

**அரவிந்தாச்சிரமம் :** அரவிந்தர் புதுச்சேரியில் வந்து நிலைத்தபோது பல அரிய அன்பர்களும் அங்கு வந்து கூடினர். அரவிந்தாச்சிரமம் எழுந்தது. மற்றும் பல சாதகர் ஒருங்கு சேர்ந்தனர். அது ஒரு புது உலகமாக வளர்ந்து வந்தது. அரவிந்தரின் யோகக் கனவுகளை அன்னை யென்று ஆச்சிரம சாதகர் போற்றும் ஒரு பிரெஞ்சு மாது நனவாக்க உதவினர். அன்னையே ஆச்சிரமும் ஆச்சிரமமே அன்னையுமாயின. அரவிந்தர் பணியே அங்குத் தெய்வ வழிபாடாயிற்று. அன்னை பணியே யோகமாயிற்று. உலகத்தின் பல வேறிடங்களிலிருந்து மக்கள் ஆச்சிரமத்தைப் பார்க்கவும் அங்கு உறையவும் விரும்பி வந்தனர். அங்குச் சாதி மதப் பேச்சே கிடையாது. எல்லோரும் ஒரே குலமாக வாழ்ந்து வருவாராயினர். தூய உணவு, தூய உடை, தூய காற்று, தூய வாழ்வு அங்குண்டு. இரு பாலார்க்கும் வேண்டிய சுதந்தரம் உண்டு. அவரவர் புலமையை வளர்க்கப் பலவிதமான தொழில் துறைகளும் அங்கு அமைக்கப் பட்டுள்ளன.

**அராபிய தத்துவ சாஸ்திரம் :** அராபிய தத்துவ சாஸ்திரம் என்பதை முஸ்லிம் தத்துவ சாஸ்திரம் என்றழைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். இது கிரேக்கத் தத்துவ சாஸ்திரத் தொடர்பினால் விரைவாக வளர்ச்சியடைந்தது. இதில் நான்கு விதக் கொள்கைகள் காணப்படுகின்றன.

1. முத்தாஜல் (அறிவுக்கொள்கை - Rationalism) : முகம்மதுநபி மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்றதை ஹெஜிரா என்பர். அது 622-ல் நிகழ்ந்தது. அதிலிருந்தே முஸ்லிம் ஆண்டு தொடங்குகின்றது. அது தொடங்கி ஒரு நூற்றாண்டு ஆகும் அளவிலே இந்தக் கொள்கை ஏற்பட்டது. இதன் ஆதாரத் தத்துவங்கள் கடவுள் ஒருவரே என்பதும், அவர் நீதியுள்ளவர் என்பது மாம். அவர் நிர்க்குணர். அவர் உளராந்தன்மையே அவருடைய குணங்கள் அனைத்தும் ஆகும். அவர் எல்லா மறிந்தவர் ; எல்லா ஆற்றலும் பொருந்தியவர். இவ்விரண்டும் அவருடைய உளராந் தன்மையிலேயே அடங்கினவேயன்றி வேறான குணங்கள் அல்ல. அவர் நீதி

யுள்ளவர். ஆதலால் கொடுமை என்பதே அவரிடம் இல்லை. கடவுள் மனிதனுக்குச் செயல் புரியும் சுதந்திரத்தை அளித்துள்ளார். அதனுல் மனிதன் தன்னுடைய செயல்களுக்குத் தானே பொறுப்பாளி. புண்ணியம் செய்தால் இன்பமும், பாவம் செய்தால் தண்டனையும் பெறுவான்.

இந்தக் கொள்கையை ஏற்படுத்தியவர் வாசில் பின் அட்டா (இ. 748). இதைப் பின்னர்த் தெளிவாக விளக்கியவர் அபுல் ஹுதாயில் அல்லாப் (இ. 840). இந்த அறிவுக் கொள்கையினர் கடவுளுடைய ஒருமையையும் நீதியையும் ஏற்றுக் கொள்வதால் 'அஹல் அத்தாஹித்வால் அதல்', அதாவது கடவுள் ஒருமையையும் நீதியையும் நம்புவோர் என்று தங்களுக்குப் பெயர் வைத்துக்கொண்டார்கள். இன்னும் இவர்களுடைய மற்ற முக்கியக் கொள்கைகள் குர்ஆன் நித்தியமானது என்பதை மறுப்பதும், கடவுட் காட்சி கிடைக்க முடியாதது என்பதும் ஆகும். ஞானம் கடவுளுடைய குணம்; அது குர்ஆனில் வெளிப்படுகிறது. அதனுல் குர்ஆன் மனிதனுல் செய்யப்படாமல் கடவுளுடன் நித்தியமாக உள்ளது என்பது வைதிகர்களுடைய கொள்கை. அதை மறுத்து, முத்தாஜல் கொள்கையினர், ஞானம் கடவுளைப் போலவே நித்தியம் என்முல் அப்பொழுது இரண்டு நித்திய தத்துவங்கள் அதாவது இரண்டு கடவுள்கள் ஏற்படுமே என்று வாதிக்கின்றனர்.

சிலரேனும் கடவுளைப் பரலோகத்தில் பார்ப்பர் என்று வைதிகர்கள் கூறுவதை மறுத்து, முத்தாஜல் கொள்கையினர் கடவுளுக்கு உருவம் இல்லாதிருக்கும் பொழுது எப்படி ஓர் இடத்தில் இருக்கவும் காட்சி அளிக்கவும் முடியும் என்று கேட்கிறுர்கள்.

முத்தாஜல் கொள்கையினர் முதலில் இஸ்லாம் மதத்தை அறிவுபூர்வமாக்க மட்டுமே முயன்றனர். ஆனுல் நாளடைவில் அவர்களுடைய அறிவு வாதம், குர்ஆன் ஒருவரால் ஆக்கப்படாதது என்பது போன்ற வைதிகக் கொள்கைகளை எல்லாம் மறுக்கும்படி செய்துவிட்டது. அத்துடன் அவர்கள் முதலில் தாங்களாகவே ஆராய்ந்து வந்தார்கள்; பின்னர், கிரேக்கத் தத்துவ நூல்களின் மொழிபெயர்ப்புக்களை ஆவலுடன் படிக்கத் தொடங்கினர். அப்போது மதப்பற்று நீங்கித் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடலாயினர். முத்தாஜல் கொள்கையினருள் முக்கியமானவர்கள் நஜ்ஜாம் (இ. 845), ஜுப்பா இ ஜாஹிஜ் (இ. 868) என்போர்.

2. அஷாரிக் கொள்கை (முஸ்லிம் மதப்பற்றுக் கொள்கை): இது முத்தாஜல் கொள்கையை எதிர்ப்பதற்காக ஏற்பட்டது. இதனை ஏற்படுத்தியவர் அபுல் ஹாஸன் அல் அஷாரி. அவர் 40 வயது வரை முத்தாஜல் கொள்கையினராகவே யிருந்தார். ஆனுல் நபி நாயகம் அவர்கள் அவருடைய கனவில் வந்து, குர்ஆனையும் நபி உபதேசங்களாகிய ஹதீதையும் பின்பற்றும்படி கூறியதாகவும், பிறகு அவர் முத்தாஜல் கொள்கையை எதிர்க்கத் தலைப்பட்டதாகவும் கூறுவர். அவர் நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதினதாகச் சொல்வதுண்டு. கடவுள் அருளாலன்றி எதையும் அறியமுடியாது என்பதும், எந்த மதத்தையும் வெறும் அறிவை மட்டும் துணையாகக் கொண்டு அமைக்க முடியாது என்பதும், கடவுளுக்குக் குணமுண்டு என்பதும், ஆனுல் அவற்றை நம்முடைய குணங்களைப்போல் கொண்டு பொருள் கொள்ளலாகாது என்பதும், குர்ஆன் கடவுளுடைய நித்திய மொழி என்பதும் அவருடைய கொள்கைகள். மனிதன் எதையும் படைக்க முடியாது. கடவுள் ஒருவரே படைப்பவர்; கடவுள் மனிதனுக்குத் தான் விரும்பியவண்ணம் நடக்கும் சுதந்திரத்தையும் ஆற்றலையும் அருளுகிறுர்; அவர் அந்த இரண்டையும் முதலில் தம்மிடத்திலேயே அமைத்துக் கொண்டபடியால் மனிதனிடம் காணப்படும் அந்த இரண்டும் கடவுளிடமிருந்து பெற்றவையே என்பனவும் அவர் கூறியவையாம்.

முத்தாஜல் கொள்கையினர் கடவுள் நீதிமான் ஆதலால் கேடு செய்ய முடியாது என்றும், கடவுள் மனிதனுக்குச் செயற் சுதந்திரம் அளித்திருப்பதால் மனிதனே தான் நன்மை தீமை செய்பவன் என்றும் கூறினர். அதை மறுத்து, அஷாரிக் கொள்கையினர் கடவுளுடைய ஆற்றலுக்கு எல்லை கிடையாதாகையால் அவர் தம்முடைய படைப்புக்களுக்கு நன்மையோ தீமையோ எதையும் தம்முடைய விருப்பம்போல் செய்யமுடியும் என்று கூறினர்.

பரலோகத்தில் கடவுளை ஊனக் கண்ணுல் பார்ப்பதானுல் இடமும் திசையும் கூறவேண்டியது உண்மைதான். ஆனுல் கடவுளை ஊனக் கண்ணில்லாமலே காண முடியுமல்லவா என்றும் அவர்கள் கூறினர்.

3. சூபிக்கொள்கை (அனுபூதி மார்க்கம்): இக்கொள்கை அழியா முத்தி பெறுவதற்காக மனத்தைத் தூய்மை செய்து கொள்ளவும், அறநெறியில் நிற்கவும், அகவாழ்வு புறவாழ்வு இரண்டையும் ஒழுங்கு செய்யவும் கற்பிக்கிறது. நித்திய முத்தியே அதன் குறிக்கோள்; ஆன்மாவைத் தூய்மை செய்வதே அதற்காக அது கூறும் நெறி. குர்ஆனில் கடவுள் கூறிய கட்டளைகளும், நபிநாயகம் அவர்கள் கூறியுள்ள கடமைகளும் அறிவுள்ள மக்கள் அனைவரும் மேற்கொள்ள வேண்டியவை என்று இந்த மார்க்கம் போதிக்கின்றது. முஸ்லிம்களுடைய உள்ளும் புறம்புமான வாழ்க்கையைத் திருத்திப் புனிதமாக்கும் இஸ்லாமிய மதக் கட்டுப்பாட்டு முறையே சூபிக் கொள்கை என்பது.

ஆயினும் சூபிக் கொள்கையின் பொருள் முழுவதும் இவ்வளவேயன்று. அதற்கு மறைபொருளும் (Esoteric) உண்டு. அந்தப் பொருளில் கடவுளுக்கும் தனக்குமுள்ள உண்மையான உறவை அறிபவனே சூபி ஆவான். அதாவது மனிதன் என்பவன் கடவுளுடைய மனத்திலுள்ள கருத்தேயன்றி வேறல்லன். அவ்விதம் கருத்தாயிருப்பதால் அவன் கடவுளைப் போலவே நித்தியமானவன். கடவுள் தன்னையே மனிதனுகப் படைத்திருப்பதால் மனிதனுக்குக் கடவுளினின்றும் வேருக உளனுந்தன்மையும் அதற்கேற்பவுள்ள வாழ்வு, அறிவு, ஆற்றல் போன்ற குணங்களும் இல்லை. அவன் இருப்பதும் கடவுளாலேயே, பார்ப்பதும் கடவுளாலேயே, கேட்பதும் கடவுளாலேயே. நபிகள், "நீரே புறம், உமக்கு மேலாக ஒன்றுமில்லை; நீரே அகம், உமக்குக் கீழாக ஒன்றுமில்லை; நீரே முதல், உமக்கு முன்னர் ஒன்றுமிருக்கவில்லை; நீரே கடை, உமக்குப் பின்னர் ஒன்றுமிருக்காது" என்று கூறிய உரையையும் தங்களுக்கு ஆதாரமாகக் கொள்ளுகின்றனர்.

இத்தகைய மறைபொருட் சூபிக் கொள்கையை முதன்முதல் விளக்கியவர் எகிப்து நாட்டினரான துன்-நூன் என்பவர் என்று, சூபிக் கொள்கையைப் பற்றி எழுதியுள்ள பாரசீக ஆசிரியர்களுள் ஒருவரான ஜாமி கூறுகிறுர். ஆனுல் இஸ்லாமிய மறைபொருள் மதத்தை ஒழுங்குமுறை செய்து வகுத்தவர் பெரிய அனுபூதியினரான ஷாக் முகைதீன் இப்னுல் அராபி என்பவராவர். அவரே இருத்தல் கொள்கை (Existentialism) நிறுவியவர். இமாம் கஜாலி என்பவர் சூபிக் கொள்கைக்கு விஞ்ஞான உருவம் கொடுத்தார். அவருடைய பெருமுயற்சியால் சூபிமத வைதிகக் கொள்கையானது சுன்னிமதக் கோட்பாட்டுடன் கலந்து இன்றுவரை நிலைத்து வருகிறது. பார்க்க : சூபிக் கொள்கை.

4. தத்துவசாஸ்திரம்: இஸ்லாம் மதம் ஏற்படு முன்னர் பாரசீகத்திலுள்ள ஜுன்டிஷபூர், மெசப் பொட்டாமியாவிலுள்ள ஹரான், எகிப்திலுள்ள அலெக்சாந்திரியா என்னும் இந்நகரங்கள் கிரேக்க நாகரிகத்துக்குப் பேர்போனவையாக இருந்தன. இவற்றிலிருந்துதான் அது கீழ்நாடுகளுக்குப் பரவிற்று. உமயத் அரசாட்சிக் காலத்தில் அராபிய ஏகாதிபத்திய வாதிகள் அராபியரல்லாதவருடன் பழகுவது தங்கள் பெருமைக்கு இழுக்காகும் என்று கருதினர். அப்பாஸ் கட்சியினர் (Abbasides) ஆட்சிக்கு வந்தபொழுது ஆள்வோரும் ஆளப்படுவோரும் தங்குதடையின்றிக் கலந்து வாழ்ந்தனர். ஆல்-மாமூன் என்பவர் கிரேக்க நாகரிகக் கல்வியை முஸ்லிம் அறிஞரிடையே பரவும்படி செய்தார். அராபியர்கள் அந்த நாகரிகத்தை அப்படியே ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர். அவர்கள் அதைத் தங்கள் அராபி உலகத்தில் உலவி வந்த மதக் கருத்துக்களுக்கும் தத்துவ சாஸ்திரக் கருத்துக்களுக்கும் ஏற்ப ஒரு புதிய தத்துவ சாஸ்திர முறையாக மாற்றி அமைத்துக்கொண்டார்கள். முதன்முதல் புகழ்பெற்ற தத்துவ சாஸ்திரியாக இருந்தவர் ஆல்-கிண்டி (இ. 873). அவர் கிரேக்கத் தத்துவ சாஸ்திர நூல்கள் பலவற்றை அரபு மொழியில் பெயர்க்கவும், முன்பேயுள்ள மொழி பெயர்ப்புக்களைத் திருத்தவும் செய்தார்.

இஸ்லாமிய தத்துவ சாஸ்திரிகளில் தலையாயவரும் புதிய பிளேட்டானிக் கொள்கையினருமான பாராபி (இ. 950) என்பவரே பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியவர்களுடைய கொள்கைகளின் சிறந்த உரையாளராகக் கருதப்படுகிறார். அவர் அரிஸ்டாட்டிலுடைய கருத்துக்களின் மறைபொருள்களை மிகத் தெளிவாக விளக்கியபடியால், முஸ்லிம்கள் அரிஸ்டாட்டிலை முதல் ஆசிரியர் (குரு) எனவும், பாராபியை இரண்டாவது ஆசிரியர் எனவும் கூறுவர். அவருக்கு அரிஸ்டாட்டிலிடம் பக்தியிருந்ததுபோலவே புதிய பிளேட்டானிக்கொள்கையிடமும் மோகம் இருந்தது. அவர் உலகு கடவுளிடமிருந்தே கீழ்நோக்கும் வரிசைக் கிரமமாகத் தோன்றியது என்பதில் நம்பிக்கை உடையவராக இருந்தார்.

இபின் சீனு (இ. 1036) அறிவுக் களஞ்சியமாகவும், திறமையான மருத்துவராகவும், பெரிய தத்துவ சாஸ்திரியாகவுமிருந்தார். அவரும் அரிஸ்டாட்டிலின் கொள்கையையே உடையவர். அவர் கொள்கையில் புதிய பிளேட்டானிக் கொள்கையின் அடையாளம் ஒரு சிறிதே காணப்படும். அவர் பல நூல்கள் எழுதியிருந்த போதிலும் அவருடைய ஷீபா என்னும் நூலே மிக முக்கியமானது. அதைப் பௌதிகம், தத்துவம், கணிதம் மூன்றின் களஞ்சியம் என்று கூறலாம்.

இப்னி ருஷ்த் (அவரோஸ்) (இ. 1198) சிறந்த முஸ்லிம் தத்துவ சாஸ்திரிகளில் ஒருவர். ''அரிஸ்டாட்டிலின் நூல்களுக்கு ஆழ்ந்த உரைகள் எழுதியவர்களில் ஒருவர்'' என்று மங்க் என்பவர் இவரைப் பற்றிக் கூறுகிறார். அவர் அத்துடன் சிறந்த இஸ்லாமியச் சட்ட விளக்க உரை ஆசிரியராகவுமிருந்தார். அவருடைய நூல்கள் நீண்ட நாள்வரை ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் பயின்று வரப்பட்டன-அவருடைய தத்துவ சாஸ்திரத்துக்கு ஐரோப்பிய மொழிகளில் உரைகள் எழுதப்பட்டன.

இபின்-இ-பாஜா (இ. 1138), இபின் மிஸ்கவயா (இ. 1030), ஷேக் ஷெஹாபுதின் (இ. 1190) ஆகியவர்களும் புகழ் வாய்ந்த தத்துவ சாஸ்திரிகள்.

ஆகவே முஸ்லிம் தத்துவ சாஸ்திரிகள் கிரேக்கத் தத்துவ சாஸ்திரத்தை ஆராய்ந்து, அதிலுள்ள முரண்பாடுகளை நீக்க முயன்றனர் என்று கூறலாம். மீ. வ.

**அராவான்** (இராவான்) அருச்சுனனுக்கும் உலூபி யென்னும் நாக கன்னிகைக்கும் பிறந்தவன். பாரதப் பெரும்போரிலே களப்பலியாகப் பாண்டவருக்குதவியவன்.

**அரிக்கமேடு** என்பது புதுச்சேரிக்குத் தெற்கில் இரண்டு மைல் தொலைவில் வராக நதி யென்னும் செஞ்சியாற்றின் பழங்கிளையான அரியாங்குப்பத்தாறு என்ற காயல் பெருக்கத்தால் அறுத்தோடியும் அணையப்பட்டும் உள்ள ஒரு மேடு. ஆற்றையடுத்திருப்பது பற்றி அருகு மேடு எனப் பெயர் வந்தது போலும். அடுத்துள்ள பரதவர் குப்பமான வீராம்பட்டினம் பண்டை வணிகர் நியமங்களான வீரபட்டினங்களில் ஒன்றும். புகார் நகருள் அடங்கிய மருவூர்ப்பாக்கம் போல் இங்கும் ஆற்றின் அக்கரை மருங்கைப்பாக்கம் என்ற பழம் பெயர் திரிந்து முருங்கைப்பாக்கமா யிருக்கிறது. அரியாங்குப்பத்தில் இன்றும் ஒரு புத்தர் சிலை காணக்கிடக்கிறது. அண்மையில் முறைப்படி அகழ்ந்தாராயப்பட்ட இம்மேடு கிறிஸ்து அப்தத் தொடக்கத்தில் இக்கயவாய் மருங்கில் திகழ்ந்த சோழ மண்டலத் துறைமுகப்பட்டினங்களில் ஒன்றின் சிதை வைத் திறந்து காட்டியது. சங்க காலத்தே தமிழகம் ரோமானிய சாம்ராச்சியத்துடன் நிகழ்த்திய கடல் வாணிபத்தால் கொழித்த பட்டினங்களில் ஒன்றான இப்பழம்பதியை எஞ்சிய சங்க நூல்கள் குறிக்காது போயினும், முதல் நூற்றாண்டு யவன நூலான பெரிப்ளூஸ் (Periplus of the Erythraean Sea) இதைப் பொதுகை (Poduke) எனக் குறிக்கும். 1945–46 ஆம் ஆண்டுகளில் இங்கு அகழ்ந்து கண்ட இடம் இப்பழம் பதியின் யவனச்சேரியாம். கி. பி. 50 முதல் 200 ஆம் ஆண்டுவரை எனக் காலம் இடக்கூடியதும், சுடுமண்ணால் (செங்கல்) கட்டப்பெற்றதுமான பண்டகச் சாலைகளும், சாயச் சாலைகளின் சிதைவுகளும், மற்றும் கண்ணாடி, பளிங்கு, சூதுபவழம் (Carnelian) முதலியவைகளில் கடைந்த மணிகளும், உருவப் படங்கள் செதுக்கிய பதக்கங்களும், பொன்னின் மணிகளும், முற்றுப் பெற்றதும் பெறாததுமான நிலையில் காணப்பட்டமை பற்றி யவனத்து மணி வினைஞர்களும் பொற்கொல்லர்களும் இங்குத் தொழில் நடத்தியது விளங்கும். இந்தியரிடமிருந்து ரோமானியர் பெரிதும் விரும்பி வாங்கிய மெல்லிய மஸ்லின்கள் இங்கேயே சாயமேற்றப்பட்டன போலும். மற்றும் கண்ட பல தடையங்களில் மேனாட்டு மட்கலங்கள் பல இங்குக் கொணர்ந்து புழங்கப்பட்டமையும், அவைபோன்று இங்கேயே வனையப்பட்டமையும் தெளிவாகின்றன. இத்தாலி நாட்டின் பெயர் பெற்ற அரிஸ்ஸோ (Arezzo) நகரத்துக் குயவர்கள் இயற்றித் தம் முத்திரைகள் பதித்து விற்ற உயர்ந்தவகை அரிட்டைன் (Arretine) மட்கலங்களின் சிதைவுகளே இவ்விடத்தின் காலத்தை நுணுகியளவிடுவதற் குதவிய சிறந்த திறவுகோலாயின. புறநானூறும் (செய். 56, வரிகள் 18-20) மற்றும் பல சங்க நூல்களும் கூறுவதுபோல் அக்காலத்தே யவனர் தமிழரிடம் கொண்ட பொருள்களுக்கு விலையாகப் பொன்னுடன் உயர்ந்த மதுபான வகைகள் கொணர்ந்து இறக்கி வழங்கியதற்கு இங்குக் கண்ட இரட்டைப்பிடி மதுச்சாடிகளின் (Amphorae) சிதைவுகளும், கண்ணாடிக் கோப்பைகளுமே சான்றாகும். இவற்றுடன் கலந்து காணப்பட்ட இந்திய நாட்டுக் கல வகைகள், சங்கறுத்த வளைகள், அணிகள் முதலிய புதைபொருள்களின் கால அறுதி அவற்றுடன் கூடிக்கிடைத்ததும் காலத்தை நுணுக்கமாக அள

விடக் கூடியதுமான இம்மேனுட்டுப் பொருள் களையே ஓர் அளவுகோலாகக் கொண்டு அறிய முடி கிறது. இங்குக் கண்ட இந்திய நாட்டுத் தொல் பொருள் களுக்கு (Antiquities) இவ்வாறு கால அட்டவணை யொன்றைத் திட்டமாக வரையறுக்க இயன்றதால் இனி நிகழும் தென்னுட்டு அகழ் வாராய்ச்சிகளில் காண இருக்கும் இதுபோன்ற பொருள்களுக்கு இவற்றை ஒப்பக் காலங்களை அறுதியிட இயலும். இதுவே அரிக்கமேட்டில் நிகழ்ந்த சிறு அகழ்வாராச்சியின் சிறப்பாம். மற்றும் சங்க நூல்களின் வாயிலாகத் துறைமுகங்களையும் அங்கு நடந்த அயல் நாட்டுக் கடல் வாணிபச் சிறப்புக்களையும் பற்றிப் படித்தறிந்தோமேயன்றி, அவற்றின் சான்றுகளையும் தடையங்களையும் ஐயமறக் கண்டதில்லை. தமிழர் வேண்டி நின்ற இச் சான்றுகளையும் கையாளப்பட்ட பொருள்களையும் ஓரளவு பொதுகைப்பட்டினமே தமிழர்க்கு முதன்முதலாகக் காட்டியுள்ளது. இதுவன்றி இங்குக் கிடைத்த மட்கல வோடுகள் சிலவற்றின்மேல் கீறியெழுதியுள்ள சொற்கள் தமிழ், பிராகிருத மொழிச் சொற்களானுலும், பிராமி எழுத்துக்களாலேயே எழுதப்பட்டிருப்பது பற்றியும், இதுபோலத் தென்னுட்டு மலை முழைஞ்சுகளில் காணப் படும் அக்காலத்துத் தமிழ்மொழிக் கல்வெட்டுக்களும் பிராமி எழுத்துக்களாலேயே யிருப்பது கொண்டும், கிறிஸ்துவுக்கு முன்னும் பின்னுமான நூற்றுண்டுகளில் தமிழும் அக்காலத்துப் பாரத நாட்டு மற்ற மொழி களைப் போலப் பிராமி லிபியில் எழுதப்பட்டமை விளங்கும். கே. ஆர். ஸ்ரீ.

(தமிழ் எழுத்துக்களைப் பற்றிய கருத்துக்களுக்கு எழுத்து—தமிழ் எழுத்து என்னும் கட்டுரை பார்க்க).

**அரிச்சந்திரன்** வாய்மைக்கு இலக்கியமானவன்; அயோத்தி மன்னன்; திரிசங்குவின் மகன். வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் நேர்ந்த போட்டியால் இவனை விசுவாமித்திரர் பொய்யனுக்க முயன்ருர். முதலில் வேள்விக்காக இவனிடம் பொன்பெற்று, அப் பொன்னை இவனிடமே வைத்துச் சென்ருர். பிறகு, நாட்டைத் தானமாகப் பெற்றுத் தாம் முதலில் வாங்கி இவனிடம் வைத்த பொன்னும் நாட்டுத் தானத்தி லேயே சேர்ந்துவிட்டதால், வேறு பொன் தரவேண்டு மென வற்புறுத்தினர். இன்றேல், வாங்கி வைத்த பொன்னை இல்லை யென்று கூறவேண்டும் என்ருர். அரிச்சந்திரன் தன் மனைவி மக்களையும் தன்னையும் விற்று, விசுவாமித்திரருக்கும் அவர் அனுப்பிய தரகனுக்கும் பொன் கொடுத்தான். மேலும், விசுவாமித்திரர் செய்த சூழ்ச்சிகளால் தன் மகன் பாம்பு கடித்திறந்த போதும், தன் மனைவி காசி மன்னன் மகனைக் கொன்றதாகப் பழி சாற்றப்பட்டபோதும் கலங்காமல் இருந்தான். தன்னை அடிமை கொண்ட வீரவாகு என்னும் தோட்டியின் ஆணைப்படித் தன் மனைவியை வெட்ட ஓங்கிய வாள் அவள் கழுத்தில் மாலையாக விழுந்தது. எனவே, ‘சத்தியம் தலைகாக்கும்’ என்னும் பழமொழி எழுந்தது என்பர். இவன் மனைவி சந்திரமதி; மகன் லோகிதாசுவன். அமைச்சன் சத்தியகீர்த்தி. (பாரதம்)

இவன் வருணனைக் குறித்துத் தவம் புரிந்து, மகன் பிறந்தால் அவனை வேள்வியிலே யாகப் பசுவாகத் தருவதாக வேண்டிக் கொண்டானென்றும், பின்னர், பிறந்த மகனைப் பலியிட மனம் வராமல் மயங்கி யிருந்தானென்றும், அதனுல் வயிற்றிலே கட்டியுண்டாகி வருந்தினுன் என்றும், உண்மையுணர்ந்த மகன், அசிகிரதன் மகனை சுனச்சேபனை விலையாகப் பெற்று, வேள்விப் பசுவாக்கி, வருணனை மகிழ்வித்துத் தந்தையின் துயரை மாற்றினு னென்றுங் கூறுவர்

**அரிச்சித்திரம்** (Etching) உலோகத் தகட்டில் அமிலத்தைக்கொண்டு அரித்து உண்டாக்கப்படுவதாகும். செதுக்குச் சித்திரமும் (Engraving) உலோகத் தகட்டில் வரைவதே. ஆனுல் அது ஊசியைக் கொண்டு தகட்டைச் செதுக்குவதால் உண்டாவதாகும். அரிச்சித்திரத்தில் வரைகள் அமிலத்தினுலேயே உண்டாகின்றன.

அரிச்சித்திரத்தை உலோகத்தில் வரைவது போலவே கண்ணுடியிலும் வரையலாம். ஆனுல் சித்திரத்தைக் கொண்டு பல பிரதிகள் பெற வேண்டுமானுல், செப்புத் தகட்டைப் பயன்படுத்துவார்கள். செப்புத் தகட்டை நன்ருகத் தூய்மைசெய்து, அதன் மீது அரக்கு, மெழுகு, பிசின் முதலியவற்றைப் பூசி, ‘அரிகளம்’ (Etching ground) உண்டாக்குவார்கள். அதை மெழுகுவர்த்திச் சுடரின்மீது பிடித்து, அதற்குப் புகை ஊட்டுவார்கள். அப்படிச் செய்தால்தான் சித்திரம் நன்ருகக் கண்ணுக்குத் தெரியும். அதன்பின் ஓவியர் தாம் வரைய விரும்பும் சித்திரத்தை அந்தக் களத்தின்மீது கிராமபோன் ஊசியைப்போன்ற உறுதியான ஊசியினுல் வரைவார். இதனுல் வரைகள் உள்ள இடங்களில் மட்டும் அரிகளம் கீறப்பட்டு உலோகப் பரப்பு வெளியே தெரியும்.

ஓவியர் முதலில் கடுதாசியில் ஓவியத்தை வரைந்து விட்டுப் பின்னர் அதை அரிச்சித்திரமாக ஆக்க விரும்பினுல், அவர் ஒரு மெல்லிய கடுதாசியில் சீமைச் சுண்ணும்பைத் தடவி, அதன்மீது சித்திரத்தை வரைந்து, அந்தக் கடுதாசியை அரிகளத்தின்மீது வைத்துக்கொண்டு, அந்தச் சித்திரத்தின்மீது ஊசியால் வரைந்து, களத்தின் மீது சித்திரம் காணுமாறு செய்வார். ஊசியானது உலோகத்தின்மீது படாவண்ணமே வரைவார். அதன் பின் தகட்டை அமிலம் நிறைந்த தட்டிற்குள் வைப்பார். பலவிதமான அமிலங்கள் உபயோகிக்கலாமாயினும் முக்கியமாகப் பயன்படுத்தப்படுவன ஹைடிரோகுளோரிக அமிலமும், நைட்டிரிக அமிலமுமாகும். ஆதியில் டச்சுக்காரர்களே இத்தகைய சித்திரம் வரையத் தொடங்கியதால் ஹைடிரோகுளோரிக அமிலமும் பொட்டாசியம் குளோரேட்டும் கலந்த நீரை ‘டச்சு நீர்’ என்று கூறுவர்.


தகட்டை அமில நீரில் இட்டதும் களம் கீறப்பட்ட இடங்களில் அமிலம் இறங்கி உலோகத்தை அரிக்கும். சித்திரத்திலுள்ள மெல்லிய கோடுகள் அரிக்கப்பட்டதும், தகட்டை வெளியே எடுத்து, அந்தக் கோடுகள் உள்ள இடத்தைப் பிரன்ஸ்விக் கறுப்பு என்னும் மெருகெண்ணெயைக்கொண்டு மூடிவிட்டு, மறுபடியும் அமில நீரில் இடுவார்கள். இவ்வாறு பலமுறை இட்டும் எடுத்து மூடியும் எல்லாக் கோடுகளும் தேவையான ஆழங்களுக்கு அரிக்கப்படுமாறு செய்வார்கள். சித்திரம் திருப்திகரமாக அரிக்கப்பட்டதும் தகட்டை எடுத்துத் தண்ணீரில் கழுவிவிட்டுக் கர்ப்பூரத் தைலத்தைக் கொண்டு களப்பொருளை நீக்குவார்கள்.

செதுக்குச் சித்திரத் தகட்டைக்கொண்டு பிரதிகள் எடுப்பது போலவே, அரிச்சித்திரத் தகட்டைக்கொண்டும் பிரதிகள் எடுப்பார்கள். தகட்டின்மீது ஒட்டக் கூடிய மையைத் தடவித் துணியைக்கொண்டு துடைத்தால், மையானது அரித்த பள்ளங்களில் மட்டும் நிரம்பி நிற்கும். ஈரமான கடுதாசியைத் தகட்டின்மீது வைத்து அழுத்தினுல் மை கடுதாசியில் சிறிது மேடாகத் தோன்றும். இவ்வாறு கடுதாசியில் சித்திரத்தைப் பெற்று

விடுவார்கள். செப்புத் தகடா யிருந்தால் ஐம்பது பிரதிகள் வரை எடுக்கலாம். தகட்டின்மீது எஃகோ குரோமியமோ பூசியிருந்தால் ஐம்பதுக்கும் அதிகமான பிரதிகள் கிடைக்கும்.

பல பெரிய ஓவியர்கள் தம் ஓவியங்களை நேராக அரிச்சித்திரமாகத் தகட்டில் வரையவோ, அல்லது முதலில் கடுதாசியில் வரைந்த சித்திரத்தைத் தகட்டில் வரையவோ, அல்லது பிறர் சித்திரங்களைத் தகட்டில் வரையவோ இந்த அரிச்சித்திர முறையைக் கையாளுகிறார்கள்.

அரிச்சித்திர முறை 15ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அரிச்சித்திரக்காரருள் மிகச் சிறந்தவர் என்று கூறப்படுபவர் டச்சு ஓவியரான ரெம்பிராண்ட் (Rembrandt 1606-69) என்பவர். அவருடைய அரிச்சித்திரங்களுள், 'மூன்று குடிசைகள்' என்பதும், 'கிறிஸ்து நோயாளிகளைக் குணப்படுத்தல்' என்பதும் புகழ் வாய்ந்தவை. பிற்காலத்து அரிச்சித்திரக்காரருள் பேர் பெற்றவர் ஸ்பெயின் நாட்டினரான பிரான்சிஸ்கோ காயா (Francisco Goya 1746-1828) என்பவராவர். அவருடைய 'போரின் தீமைகள்' என்பது மிகச் சிறந்ததாம். அமெரிக்காவிலிருந்த விஸ்லர் (Whistler 1834-1903) என்பவரும் பேர் பெற்றவர். தாமஸ் டேனியல் (Thomas Daniell 1749-1840) என்ற ஆங்கிலக் கலைஞர் 1784-ல் இந்தியாவிற்கு வந்து, நாட்டின் பல பகுதிகளிலும் கண்ட காட்சிகளை அரிச்சித்திரங்களாக வரைந்தார். சாதாரண முறையில் இவர் சித்திரத்தை வரைந்து, பிரதி எடுத்து, ஒவ்வொரு பிரதிக்கும் தனியே வர்ணங்கள் தீட்டினர். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேறு சில ஆங்கிலேயரும் இந்திய நாட்டுக் காட்சிகளை அரிச்சித்திரங்களாக வரைந்தார்கள். அவற்றுள் ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது.



அரிச்சித்திரம் : சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் ஒரு பகுதி


உதவி : தொல்பொருள் இலாகா, சென்னை.

**அரிசி** உலக மக்களுள் செம்பாதியினரின் தலையாய உணவுப்பொருள். ஆண்டுதோறும் 21 கோடி ஏக்கரில் பயிராகிப் பத்தேமுக்கால் கோடி டன் அரிசி விளைகிறது. அரிசி விளையும் நிலத்தில் 95% தென் கிழக்கு ஆசியாவில் உள்ளது. எஞ்சிய நிலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், எகிப்திலும், இத்தாலியிலும், ஸ்பெயினிலும் உள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு இத்தாலி (2882 ராத்தல்), ஸ்பெயின் (2671), ஜப்பான் (2352) ஆகிய நாடுகளில் மிகுதியாகவும், எகிப்து (1890), கொரியா (1593), அமெரிக்கா (1390), ஜாவா (1034) ஆகிய நாடுகளில் நடுத்தரமாகவும், தாய்லாந்து (888), பர்மா (816), இந்தியா (772) ஆகிய நாடுகளில் குறைவாகவும் விளைகிறது.

ஆசிய நாடுகளில் மிகுந்த நிலத்தில் பயிரானபோதிலும், பர்மா, இந்தோ-சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகள் தான் வெளிநாட்டுக்கு அரிசி ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் உள்ளன. உலகத்துக்குத் தேவை மிகுதி; புதிதாகப் பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்புக் குறைவு. அதனால், இப்போது பயிராகும் நிலத்தில் விளைவைப் பெருக்கவேண்டியது இன்றியமையாததாகும். இது செறிவுமுறை வேளாண்மையைக் கையாண்டால் நடைபெறுவதாகும்.

அரிசியின் தோற்றம்: உணவுப் பயிர்களில் நெல் மிகப் பழமையானது. பண்டைக் காலமுதல் இந்தியா, சீனா, இந்தோ-சீனா ஆகியவற்றில் பயிர் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதற்குப் பழைய நூல்களில் ஆதாரங்கள் உள்ளன. தானியங்களுள் பெரும்பாலானவை போல இதுவும் புல் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். நெல்

என்னும் தானியச் சாதியில் 23 இனங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டே பயிர் செய்யப்படுவன. எஞ்சியவை காட்டுப் புற்களாகவே இருந்து வருவன. பயிர் செய்யப்படும் இனங்களுள் ஒரைசா சதைவா (Oryza sativa) என்பது நெற்பயிராகும் நாடுகளில் எல்லாம்




நெல்

1. கிளை. 2. கதிர். 3. சிறு கதிர்=ஒரு நெல்.

4. சிறு கதிரின் பாகங்கள்: அடியிலிருந்து முறையே முதல் உமி (மலடு), இரண்டாம் உமி (மலடு), மூன்றாம் உமி (பூவுள்ளது), இம் மூன்றும் பூக்காம்பிலைகள். நான்காவது, பூவின் உறுப்புக்களை மூடியிருக்கும் பதர். இதனைச் சிலர் பூக்காம்புச் சிற்றிலை யென்பர், சிலர் பூவின் புறவிதழ் என்பர். நடுவில் இரண்டு செதில்கள். இவற்றைச் சிலர் மற்றொரு பூக்காம்புச் சிற்றிலை யென்பர், சிலர் அகவிதழ்கள் என்பர். இவற்றிற்குமேல் ஆறு மகரந்தக் கேசரங்கள். உச்சியில் சூலகம். ஒரே விதையுள்ள சூலறையும் இறகு போன்ற இரண்டு சூல் முடிகளும்.

5. விதையின் பாகங்கள்: **a.** முளை வேர், **b.** முளைக் குருத்து. **c.** கேடகம் போன்ற முளையிலை, **d.** முளைசூழ் தசை. இவற்றை முற்றிலும் சூழ்ந்திருக்கும் கரிய கோடு விதையின் வெளியுறையையும் கனியின் தோலையும் குறிப்பது. அதற்குப் புறம்பே பூவின் உமியும் பதரும்; கீழே மலட்டுமிகளும் சிறு கதிரின் மஞ்சரித் தண்டும் தெரிகின்றன.

6. தானிய மணியின் நெடுக்கு வெட்டின் சிறு பகுதி. சுமார் நூறு மடங்கு பெரிதாகக் காட்டுவது. (பிளாத்து பிளாத்து, காக்ஸ் என்பவர்களது 'உணவுகள்' என்னும் நூலைத் தழுவியது). **a.** கனித்தோல், **b.** விதையின் வெளியுறையும், முளைசூழ் தசையின் ஊன் மணியடுக்கும். **a**, **b** இரண்டும் தவிட்டில் வந்துவிடும். **c.** முளைசூழ் தசையின் பெரும்பகுதியாகிய மாவணுக்கள்.

காணப்படும். ஒரைசா கிளாபெரிமா (O. glaberrima) என்னும் இனம் மேற்கு வெப்பமண்டல ஆப்பிரிக்காவில் மட்டும் பயிராகின்றது. ஒரைசா சதைவாவில் இடம், பருமன், முதிரும் பருவம் முதலியவற்றைப் பொறுத்துப் பல வகைகள் உள்ளன.

நெல் முதன் முதல் எங்கே தோன்றியது என்பதைப் பற்றி உறுதியாக உரைக்க முடியாதெனினும், ஒரைசா சதைவா முதன்முதல் தோன்றியது இந்தியாவிலும் இந்தோ சீனுவிலுந்தான் என்பதில் ஐயமில்லை. இந்தியாவிலேயே அதன் காட்டுவகை காணப்படுகிறது. அதனுடன் அதன் பலவகைகள் இந்தியாவில் காணப்படுவன போல வேறெங்கும் காணப்படவில்லை. இந்தியாவிலுள்ள காட்டுவகை அங்குள்ள பயிராகும் வகையை ஒத்திருக்கிறது. இக் காட்டுவகை காணப்படும் நிலப் பரப்பிலேயே பண்டைக்கால முதல் நெற்பயிர் செய்யப்பட்டு வருகிறது. இக்காட்டுவகையிலிருந்தே பயிர் செய்யும் வகை (ஒரைசா சதைவா) தோன்றியதாகக் கூறப்படுகிறது. இந்தியாவிலுங்கூட சென்னை இராச்சியத்திலும், ஒரிஸ்ஸா இராச்சியத்திலுமே ஏராளமான வகைகள் காணப்படுவதால் இவ்விராச்சியங்களே அரிசியின் பிறப்பிடம் என்று கூறலாம்.

ஒரைசா சதைவாவில் இந்திக்கா என்றும் ஜப்பானிக்கா என்றும் இரண்டு வகைகள் உண்டு. இந்திக்கா இந்தியா முதலிய அயன நாடுகளிலும், ஜப்பானிக்கா ஜப்பான் முதலிய உப அயன நாடுகளிலும் பயிராகின்றன. இந்திக்கா குறைந்த விளைவு தரும். ஆனால், தண்ணீர்த் தட்டு முதலிய வசதிக் குறைவுகள் ஏற்பட்டாலும் தாங்கும் ஆற்றலுடையது. ஜப்பானிக்கா மிகுந்த விளைவு தரும்; உரமிட்ட அளவுக்கு விளையும்; உமியின் நிறை குறைவாயிருக்கும். ஜப்பானிக்காவை இந்திக்கா விளையும் இடங்களில் பயிரிட்டால் தக்க பயன் தருவதில்லை.

நெற்பயிர் செய்தல்: நெல் அயனமண்டலப் பயிராதலால் அதற்கு மிகுந்த வெப்பநிலையும் நீரும் தேவை. அது வளரும்போது 70-100° பா. வெப்பம் வேண்டும். மேட்டுப் பூமியில் 25-30 அங்குல மழையுள்ள விடத்தில் புன்செய்ப் பயிராகவும், பள்ளத்தாக்கானதும் 200 அங்குலம் மழை அல்லது அதற்கு மேற்பட்ட மழையுள்ளதுமான இடத்தில் நன்செய்ப் பயிராகவும் இது விளையும். இது மணல் சேர்ந்த குறு மண், குறு மண், களி, ஆழங்குறைந்த சரளை ஆகிய மண்களிலும், அமில மண், கார மண் ஆகிய மண்களிலும் பயிர் செய்யப்படுகிறது. நிலவளம், நீர்வளத்தைப் பொறுத்து இரண்டு மூன்று ஆண்டுகட்கு ஒரு தடவையாகவோ, அல்லது ஆண்டுக்கு இரண்டு மூன்று தடவைகளாகவோ பயிராகலாம். கடல் மட்டத்திலும், கடல் மட்டத்துக்கீழும், கடல் மட்டத்துக்குமேல் 3000-5000 அடி உயரத்திலும் பயிர் செய்யலாம். சில வகைகள் கோடையிலும், சில வகைகள் குளிர்காலத்திலும் பயிராகும். சில 80 நாளிலும் சில 200 நாளிலும் விளையும். இவ்வாறு பலவகையான வேறுபாடுகள் இருப்பதனுலே ஏறக்குறைய எண்ணுயிரம் நெல் வகைகள் காணப்படுகின்றன.

**இந்தியாவில் நெற்பயிர்:** இந்தியாவில் பயிராகும் மொத்த நிலப்பரப்பில் 30% ஆகிய ஏழரைக் கோடி ஏக்கரில் நெற்பயிர் நடந்து வருகிறது. இந்தியாவிலேயே நெற்பயிராகும் நில அளவு மிகுதி. இங்குச் சராசரி ஆண்டு விளைவு 2·2 கோடி டன் அரிசி. பெரும்பாலும் கிழக்குக் கங்கைப் பள்ளத்தாக்கிலும், தென்னிந்தியாவிலும், வடகிழக்கு இந்தியாவிலும், கடற்கரைப் பகுதிகளிலுமே இது விசேஷமாகப் பயிராகின்றது. 80 அங்குல மழையுள்ள இடத்தில் இதுவே முதன்மையான பயிர். 30-80 அங்குல மழையுள்ள இடத்தில் முக்கியப் பயிர்களில் இதுவும் ஒன்று. 30 அங்குலத்துக்குக் குறைந்த மழையுள்ள இடத்தில் பாசன உதவிகொண்டும் குறைவாகவும் பயிரிடப்படுகிறது. சென்னை இராச்சியத்திலும், மேற்கு வங்காளத்திலும், அஸ்ஸாமிலும், பம்பாயிலும் சராசரி ஏக்கர் விளைவு 1000-1177

ராத்தலாகும். பீகார் முதலிய மற்ற இராச்சியங்களில் ஏறக்குறைய 800 ராத்தலாகும். (1948-51 புள்ளிகள்).

இந்திய மக்களுக்கு ஆண்டுதோறும் இரண்டரைக் கோடி டன் அரிசி தேவை. ஆனால் விளைவது இதில் ஏறக்குறைய 90% தான். எஞ்சிய 10% பிற நாடுகளிலிருந்து வரவேண்டும். ஆனால் முன்போல் இப்போது பர்மாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கில்லை. அதனால் இந்தியா நெற்பயிர் விளைவு விகிதத்தைப் பெருக்குவது இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

நெற்பயிர் செய்யும் வகைகள்: நெற்பயிரானது நன்செய்ப் பயிர், புன்செய்ப் பயிர் என இருவகைப்படும். புன்செய்ப் பயிராக விதைத்தபோதிலும் பின்னர் மழை மிகுதியாகப் பெய்தபின் நன்செய்ப் பயிராக ஆவதுமுண்டு. நெற்பயிர்க் காலம் முழுவதிலும் போதுமான நீர் கிடைக்கும் தாழ்ந்த பூமிகளில் விளைவது நன்செய்ப் பயிர். இந்தப் பயிருக்கு 140-170 நாட்களில் விளையும் நெல் வகைகளை விதைப்பர். புன்செய்ப் பயிர் எப்போதும் மழை நீர் கொண்டே விளையவேண்டியது. அதற்கு 90-120 நாளில் விளையும் நெல் வகைகளை விதைப்பர். நன்செய்ப் பயிர் நீர்வளம் பெறுவதால், புன்செய்ப் பயிரிலும் மிகுதியாக விளைவு தரும்.

நெல் விளையும் பகுதிகளில் அதை ஆண்டு முழுவதும் விதைத்தாலும், பெரும்பாலான இடங்களில் விதைப்பதற்கு மூன்று பருவங்களே ஏற்றவை. 'சம்பா' என்று தென்னாட்டிலும், 'ஆமன்' என்று வடநாட்டிலும் சொல்வது, ஜூன் ஜூலையில் விதைத்து நவம்பர் டிசம்பரில் அறுவடையாகும். கார், குறுவை என்று தமிழ்நாட்டிலும், ஆவுஸ், பியாலி என்று வடநாட்டிலும் சொல்வது மே ஜூனில் விதைத்துச் செப்டம்பர்-அக்டோபரில் அறுவடையாகும். பிசானம்,நவரை என்று தமிழ் நாட்டிலும், போரோ, தாளுவா என்று வடநாட்டிலும் சொல்வது நவம்பர் டிசம்பரில் விதைத்து, மார்ச்சு ஏப்ரலில் அறுவடையாகும்.

சம்பாப் பயிரை நாற்றுவிட்டு நடுவார்கள்; கார் காலத்தில் 90-110 நாளில் விளையும் நெல் வகைகளை விதைப்பர். இந்த இரண்டு வகை நெல்லும் விளையும் பகுதிகள் சிலவே.

பயிர்செய் முறைகள்: நெல்லுக்கு மிகுந்த நீரும் ஈரமான தட்பவெப்ப நிலையும் வேண்டும். சம்பாப் பயிரைத் தென்மேற்குப் பருவமழை தொடங்கினதும் குளிர்ந்த பகுதிகளில் விதைக்கவும், மழை மிகுந்த இடங்களில் நடவும் செய்வர். நடவு நட்டுப் பயிர் செய்வதே விதைத்துப் பயிர் செய்வதைவிட மிகுந்த விளைவு தரும். விரைவில் விளையும் வகைகளை விதைப்பர். நீண்ட நாள் சென்று விளையும் வகைகளை நடுவர். விதைப்பதானால் ஏக்கருக்கு 80-100 ராத்தலும், நடுவதானால் ஏக்கருக்கு 30-40 ராத்தலும் வித்துத் தேவையாகும்.

நாற்றங்கால்: விதைப்பதற்குமுன் நிலத்தில் சாணமும் தழையுமாக உரமிட்டுப் பண்படுத்தி, ஏக்கருக்கு 400-500 ராத்தல் வித்தை நெருக்கமாக விதைப்பர். உண்டாகும் நாற்றை 13-15 ஏக்கர் நிலத்தில் நடலாம். முப்பது நாளிலிருந்து ஐம்பது நாள் வரைக்கும், நெல்வகையின் வயதைப் பொறுத்து நாற்றைப் பிடுங்கி நடுவர். சில பகுதிகளில் நெல்லை ஒருநாள் ஊறவைத்து அதன்பின் விதைத்து நீர் பாய்ச்சுவர். இந்த முறையை மழை பெய்யக்கூடிய இடங்களிலும் பாசன வசதிகள் உள்ள இடங்களிலும் மட்டுமே கையாளலாம்.

நிலத்தைப் பண்படுத்தல்: நிலத்தில் வரப்பை உயரமாக்கி, நீர் பாய்ச்சிப் பன்முறை உழுது சேருக்கி, நாற்றை இரண்டு மூன்றாகச் சேர்த்து 6-9 அங்குல தூரத்தில் நடுவர். நீர் எப்போதும் நிலத்தில் நின்று கொண்டிருக்கவேண்டும். இடையிடையே பழைய நீரை வடித்துவிட்டுப் புது நீரைப் பாய்ச்சுவர். நட்டது முதல் அறுக்கும்வரை 60-70 அங்குல மழை தேவையாகும்.

களை எடுத்தல்: விதைத்துப் பயிராகும் பூமியில் களை மிகுந்து தோன்றும். இரண்டு மூன்று தடவை களை எடுப்பர். சில பகுதிகளில் விதைத்து இரண்டு மாதமானதும் 2-3 அங்குல நீர் நிற்கும்போது சிறு கலப்பை கொண்டு உழுவர்; பெண்கள் ஏரின்பின் சென்று நாற்றைச் சீர் செய்வர். இந்த முறையில் களையும் நீங்கும்; பயிரும் நெருக்கம் குறையும்.

அறுவடை: கதிர் முதிர்ந்ததும் தாள் பழுத்துச் சிறிதே பசுமையாயுள்ள வேளையில் அறுவடை யாகும். அறுத்த கதிர்கள் இரண்டு மூன்று நாள் வயலில் கிடந்து உலர்ந்தபின் எடுத்துக் கொண்டுபோய்ச் சூடடிப்பர். சில பகுதிகளில் காளைகளைக் கொண்டு சூடடிப்பர். சில பகுதிகளில் தாள்களைத் தரையிலோ பலகையிலோ அடிப்பர்.

அரிசியைச் சேமித்தல்: சூடடித்துத் தூய்மை செய்தபின் நெல்லை உலர்த்தி, மண், வைக்கோல், மூங்கில் பத்தை, பருத்திவளார், சோளத்தட்டை முதலியவற்றால் செய்த குதிர்களில் சேமித்து வைப்பர். ஈரத்துடன் சேமித்தால் நெல்லில் பூச்சி விழும். பூஞ்சாணம் பிடிக்கும். சிறிது காலம் சேமித்த பின்னரே உண்ணலாம். சேமித்த நெல்லில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. அந்த அரிசியே வேகும்போது மிகுந்த நீர் ஏற்று, மிகுந்த நேரம் வெந்து குழையாமலும், விரைவில் உலர்ந்து கட்டியாகாமலும் இருக்கும்.

சிறந்த நெல் வகைகள்: இந்தியாவில் சராசரி விளைவு குறைவாதலால் மிகுந்த விளைவு தரக்கூடிய நெல் வகைகள் உண்டாக்குவதற்கு ஆராய்ச்சிகள் நடைபெற்றதன் பயனாக 284 புது வகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நீர்மிகுதி, நீர்வறட்சி, நோய், பூச்சி ஆகியவற்றை எதிர்க்கக் கூடிய ஆற்றலுடையனவாயும் மிகுந்த விளைவும் ஊட்டமும் தருவனவாயுமுள்ள வகைகளை உண்டாக்க முயன்று வருகின்றனர்.

உரமிடல்: இந்தப் புது வகைகளும் உரம் நிறைய இட்டாலே மிகுந்த விளைவு தரும். 3000 ராத்தல் அரிசியும் 3000 ராத்தல் வைக்கோலும் தரும் நிலம் 48 ராத்தல் நைட்ரஜனையும், 23 ராத்தல் பாஸ்பாரிக அமிலத்தையும், 41 ராத்தல் பொட்டாஷையும் பயன் படுத்திக் கொள்கிறது. இந்தியாவிலுள்ள நிலங்களில் பொட்டாஷ் குறைவில்லை. நைட்ரஜன் மிகவும் குறைவு.

தேவையான நைட்ரஜனின் அளவு, கரிம உரங்கள், கரியற்ற உரங்கள் ஆகியவற்றின் தராதரங்கள், உரமிட வேண்டிய காலமும் முறையும், அம்மோனியம் சல்பேட்டு இடைவிடாது போடுவதால் நிலம் பெறும் வளத்தின் அளவு ஆகியவற்றைக் குறித்து ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. நட்டு ஒரு திங்கள் ஆனபின் 100-200 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டைப் போட்டால், ஏக்கருக்கு 300-500 ராத்தல் நெல் கூடுதலாகக் கிடைக்கும். கரிம உரங்களையும் கரியற்ற உரங்களையும் தக்க வண்ணம் போட்டால் நிலத்தின் வளம் கெடாமலே மிகுந்த விளைவைப் பெறலாம்.

செம்பைச் செடியையாவது சணற் செடியையாவது பயிராக்கி, நாற்று நடுமுன் உழுது புதைத்துவிட்டால், இதுவே மிகவும் குறைந்த செலவில் நல்ல பயன் தரும் உரமாகும். இந்த முறை விரைவாகப் பரவிவருகிறது.

இரண்டு முறைப் பயிர்: பொதுவாக ஒரு முறை விளைவு எடுத்ததும் பூமியைத் தரிசாகப் போட்டுவிடுவது வழக்கம். சில பகுதிகளில் நெல் அறுவடை செய்தபின்

பச்சைப் பயறு, உளுந்து, கொள்ளு, கடலை போன்ற விரைவில் உண்டாகும் அவரைக் குடும்ப வகைகளைப் பயிராக்குவர். இவ்வாறு நெல்லையும் இவ்வவரை வகைகளையும் மாறி மாறிப் பயிரிடுவது நெற்பயிருக்கு நல்லதாதலால் இந்த முறையைக் கையாள்வது நல்லது. மிகுந்த குளிர் இல்லாத பகுதிகளில் ஆண்டில் இரண்டு முறை நெற்பயிர் விளைவிக்கப்படும். சென்னை இராச்சியத்திலும், மற்றத் தென்னிந்திய இராச்சியங்களிலும், பாசனவசதியுள்ள பகுதிகளில் நெல்லையும், நிலக்கடலையையும் மாறி மாறிப் பயிரிடுதல் நன்று. இவ்வாறு சிறந்த உரங்களையும் மாறி மாறிப் பயிரிடும் முறைகளையும் பயன்படுத்தினால் நெல் விளைவைப் பெருக்கலாம்.

**சென்னையில் நெற்பயிர் :** சென்னை இராச்சியத்தில் நெற்பயிராகும் நிலம் ஒரு கோடியே மூன்று லட்சம் ஏக்கர். அதில் விளையும் அரிசி 71 இலட்சம் டன்; அதனால் சராசரி விளைவு ஏக்கருக்கு 1133 ராத்தல் அரிசியாகும். நெல் பயிராகும் நிலத்தில் 90%-ல் நடவு முறையில் பயிர் செய்யப்படுகிறது. 75% நிலத்திற்கு வாய்க்கால், குளம், கிணறு முதலியவற்றிலிருந்து நீர் பாய்ச்சப்படுகிறது.

நெற்பயிர் நடைபெறும் பகுதிகளில் (1) கோதாவரி, கிருஷ்ணா, காவேரி தீரங்கள் பாசன வசதியுடையவை. (2) கிழக்குக் கடற்கரை மாவட்டங்கள் மழையும் கிணற்று நீரும் கொண்ட விவசாயம் உடையது. (3) நடு மாவட்டங்களும், தென் மாவட்டங்களும், மழையும் குளத்துநீரும் கொண்டு விவசாயம் நடத்துபவை. (4) மேற்குக் கடற்கரையில் 100 அங்குல மழைக்கு மிகுதியாதலால் முற்றிலும் மழை நீர் கொண்டே பயிர் செய்வர்.

நீர் வசதியைப் பொறுத்து ஆண்டில் ஒரு முறையோ இரண்டு முறையோ பயிரிடுவர். சில இடங்களில் மூன்று முறை நடைபெறுவதுண்டு. சில இடங்களில் மட்டுமே நெல் அறுத்தபின் அவரை வகைகளைப் பயிரிடுகின்றனர். சில பகுதிகளில் நெல் பயிரிடுவதற்கு முன்போ அல்லது பின்போ கேழ்வரகையாவது கம்பையாவது பயிரிடுவர். கோதாவரி, கிருஷ்ணா, கோயம்புத்தூர், திருச்சி மாவட்டங்களில் மேட்டுப் பூமிகளில் நெல் பயிரிட்டபின் மஞ்சள் கரும்பு முதலியவைகளைப் பயிரிடுகிறார்கள்.

வட ஆர்க்காடு, சேலம், தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிணற்றிலிருந்து நீர் இறைத்தே நெல்லைத் தோட்டப் பயிராக உண்டாக்குகிறார்கள். கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு, காவேரி, பெரியாறு, தாமிரபரணி தீரங்களில் பாசன முறையிலேயே பயிராகிறது. நீர் பாய்ச்சிப் பயிர் செய்வது வேறு பல பகுதிகளிலும் நடைபெறுகின்றது.

சென்னை இராச்சியத்தில் நெற்பயிர் செய்யும் பருவங்கள் மூன்று: (1) தென்மேற்குப் பருவமழைக் காலம் (ஜூன்-செப்டம்பர்), (2) வடகிழக்குப் பருவமழைக் காலம் (அக்டோபர்–ஜனவரி), (3) கோடைக்காலம் (பிப்ரவரி–மே).

விசேஷ விவசாய முறைகள்: (1) ஊடு விவசாயம்: தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்று திங்கட் பயிராகிய குறுவை நெல்லை ஏழு திங்கட் பயிராகிய ஒட்டடன் நெல்லுடன் ஒன்றுக்கு நாலாகக் கலந்து, நாற்று உண்டாக்கி, 25 நாள் வயதான நாற்றை, பல நாற்றுக்களை ஒன்றாகச் சேர்த்து ஆறு அங்குலத் தொலைவில் நடுவார்கள். குறுவையைச் செப்டம்பர் அக்டோபரில் அறுத்துவிட்டு, நிலத்தைக் கிளறிவிட்டு, அதன் அரிதாளை மண்ணில் புதையச் செய்வர். ஒட்டடனைப் பிப்ரவரியில் அறுப்பர்.

(2) உப்பு நிலத்துப் பயிர், (a) மலையாளத்தில் 'கைப்பாடு' முறை: மேற்குக் கடற்கரையில் ஆறுகள் கடலில் சேருமிடங்களில் உப்புநீர் எதிர்த்து வருவதால் அங்குள்ள நீரும் உப்புடையது. மார்ச்சுத் திங்களில் மண்ணைக் குவித்துவைத்து, ஜூன் திங்களில் பருவமழை ஆரம்பித்தபின், சில குறிப்பிட்ட நெல்வகைகளை முளைக்கவைத்து விதைப்பார்கள். நாற்று 15 அங்குல உயரம் வளர்ந்ததும் மண் குவியலைச் சிறு துண்டுகளாக வெட்டி விட்டு, அவற்றில் நாற்றுக்களை நட்டு, அவை 9 அங்குலத் தொலைவில் இருக்கும்படி செய்து நீர் பாய்ச்சி வருவார்கள். நல்ல விளைவு காணும். (b) கடற்கரை உப்பு நிலங்கள்: கடல் நீர் பெருகும் நிலங்களில் அணைபோல் கட்டி, வந்த கடல் நீர் போக வழிவிட்டுப் பின் நல்ல நீர் பாய்ச்சி, உப்பைக் கரைந்து போகுமாறு செய்வர். இத்தகைய நிலங்களில் வண்டல், கரிம உரங்கள், நகரக் கலப்புரம் முதலியவற்றை நிறையப்போட்டுப் பண்படுத்துவர். இத்தகைய நிலங்களுக்குச் சிலாசத்துப் போன்ற ரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவது நல்லது. உவர் கொண்டான், களர்சம்பா, தெல்லதோக என்னும் நெல் வகைகளைப் பயிரிடுதல் பயன் தருவதாகும்.

(3) மேற்குக் கடற்கரை 'கோல்' முறை:—மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்பதுண்டு. கடல் நீர் வராதபடி அணை போட்டு, வந்த நீரை இறைத்துவிட்டுச் 'சீரா' என்னும் மூன்று திங்கட் பயிரை, விதையை முளைக்க வைத்து, ஜனவரியில் விதைத்து, இரண்டு மூன்று முறை நீர் பாய்ச்சுவர்.

(4) ஆழ்ந்த நீர் நெல் வகைகள்: மேற்குக் கடற்கரையிலுள்ள கரிங்கோரா அல்லது பெட்லா என்னும் பகுதியில் மழை நீர் மட்டம் குறையும் ஆகஸ்டுத் திங்களில் நீண்ட காலக் குட்டாடன் நெல்லைப் பயிர் செய்து ஜனவரியில் அறுப்பர்.

நெல் அரைத்தல்: நெல்லை அரைத்து அரிசியாக்கும்போது, அரிசி சேதப்படாமலும், தூயதாகவும், ஊட்டப் பொருள்கள் கெட்டுப் போகாமலும் இருத்தல் வேண்டும். அரிசியாக்குவதற்குப் பழைய முறை கை உலக்கையாலோ, ஏற்ற உலக்கையாலோ குத்துவதாகும். ஏற்றத்தை வடநாட்டார் தேங்கி என்பர். இக்காலத்தில் எந்திரங்கள் ஏற்பட்டுள்ளன. அவை குத்தும் எந்திரம் என்றும், அரைக்கும் எந்திரம் என்றும் இரண்டு வகைப்படும். அரைக்கும் எந்திரமே குத்தும் எந்திரத்தை விட மிகுந்த வேலைத்திறமையுடையது. நாட்டில் விளையும் நெல்லில் 60–70% கையால் குத்தப்படுகிறது. இந்த முறையில் கிடைக்கும் அரிசி சேதமடைவது குறைவு. அதில் ஊட்டப் பொருள் மிகுதி.

இந்தியாவின் தெற்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் புழுங்கலரிசியும், வட இந்தியாவில் பச்சரிசியும் விரும்பப்படுகின்றன. புழுங்கலரிசி செய்வது பண்டைக் காலமுதல் நடந்து வருவது. அப்படிச் செய்வதால் உமி நீக்குவது எளிது; அரிசி உடைவதில்லை; அரிசி குறைவாகவே சேதமாகும்; அரிசியில் பூச்சிகள் எளிதில் பற்றுவதில்லை. பச்சரிசி தயாரிக்கும்போது கருவும் தவிடும் பிரிந்து விடுவதால் அவற்றிலுள்ள வைட்டமின் பி, புரோட்டீன்கள், தாதுப் பொருள்கள் ஆகிய முக்கிய ஊட்டப் பொருள்கள் போய்விடுகின்றன. அரிசியைப் புழுக்கும்போது இப் பொருள்கள் அரிசியின் உட்பாகத்திற்குச் சென்றுவிடுகின்றன.

புழுங்கலரிசி செய்வதற்காக நெல்லை 12-24 மணி அளவு நீரில் ஊறவைத்துப் பின் வேகவைத்துப்பின்னர் உலர்த்திக் குத்துவார்கள். எந்திரம் வைத்திருக்கும்

சிலர் நீரில் வேகவையாமல் நீராவியில் வேகவைப்பார்கள். வேகவைக்கும் முறை வேறுபாட்டினால், சில முறைகளில் வேகவைத்துக் கிடைக்கும் அரிசி நிறம் குன்றியதாயும் நாற்றமுடையதாயு மிருக்கும். இந்தக் கெட்ட குணங்கள் உண்டாகாதவாறு புழுக்குவதற்காகச் சில புது முறைகளை வகுத்துள்ளனர். ஆயினும் ஒருமுறை நெல் ஊறிய நீரை மறுபடியும் ஊறவைக்கப் பயன்படுத்தாதிருந்தால் போதும்; இந்தக் கெட்ட குணங்கள் தோன்றா. எந்திரத்தால் அரைத்த அரிசிக்கு வைட்டமின்களும் தாதுக்களும் ஊட்டிப் போஷணை உடையதாகச் செய்யலாம்.

அரிசியை வேகவைத்துச் சோறாக்கி உண்பதுடன், அவல், அரிசிப்பொரி, நெற்பொரி முதலிய வகையாகவும் செய்து உண்பதுண்டு.

(1) அவல்: நெல்லைப் பத்து நிமிஷம் கொதிநீரில் ஊறவைத்து எடுத்து, 10 மணிநேரம் குளிர்ந்த நீரில் ஊறவைத்துப் பின் நீரை வடித்துவிட்டு மண் சட்டியில் போட்டு வறுத்தால் நெல் வெடிக்கும். அதை உரலில் போட்டு இடித்துப் புடைத்தால் அவல் கிடைக்கும். அவல் மெல்லியதாக இருந்தால் எளிதில் ஊறும்; உண்ண உதவும். அவல் செய்ய வெள்ளை அரிசியையும் சிவப்பு அரிசியையும் பயன்படுத்தலாம். அவலைப் பல விதமாக உண்ணலாம்; நல்ல சத்துள்ள உணவு.

(2) நெற்பொரி: பெருநெல்வகையில் பழைய நெல்லை நன்றாக உலர்த்தி எடுத்து, அடுப்பில் காயும் சட்டியிலுள்ள மணலில் சிறிது சிறிதாக இட்டுக் கிளறினால் நெல் வெடித்து, அரிசி பருத்து வெளியே சிதறும். அதைப் புடைத்துச் சுத்தம் செய்தால் பொரி கிடைக்கும். ஒரு படி அரிசி கிடைக்கும் நெல்லிலிருந்து 8 படி பொரி கிடைக்கும். இதைக் கொண்டு செய்யும் கஞ்சி நோயாளிகளுக்கு ஏற்றது.

(3) அரிசிப்பொரி: நன்றாகப் புழுக்கிய நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியுடன் சிறிது உப்புச் சேர்த்து நெற்பொரி செய்வதுபோல் செய்தால் அரிசிப் பொரி கிடைக்கும். இது அரிசி உருவமாகவும் உப்பிக்கொண்டு மிருதுவாகவும் இருக்கும். ஒரு படி அரிசி எட்டுப்படி பொரியாகும்.

அரிசியின் ஊட்டம்: அரிசியானது கோதுமை, சோளம் முதலிய தானியங்களைப் போலவே ஊட்டமுடையதேயாயினும், தவறான முறையில் நெல்லை அரைப்பதாலும், அரிசியை வேகவைப்பதாலும் ஊட்டச் சத்துக்களில் பெரும்பகுதி கெட்டுப்போகிறது. அரிசியைத் தீட்டும் அளவுக்கும் அதன் ஊட்டம் குறைந்துவிடுகிறது.

புழுங்கலரிசியைக் கைக்குத்தல் முறையில் தயார் செய்தால் ஊட்டங் குறைவதில்லை. அந்த அரிசியை நீரில் களையும்போதும் ஊட்டங் கெடுவதில்லை. அரிசியை வேகவைத்துக் கஞ்சியை வடித்தாலும் வைட்டமின் பி கெட்டுவிடும். பருமனும் சிவப்பாயுமுள்ள அரிசி வகைகள் மற்ற வகைகளைவிட மிகுந்த ஊட்டம் உடையன.

**நெற்பயிர் நோய்கள்** பல காளான்களால் உண்டாவன. அவற்றுள் முக்கியமானவை இரண்டு.

1. கொள்ளை நோய்: பிரிகுலேரியா (Piricularia) மிகுந்த கேடு விளைக்கும். சென்னை இராச்சிய விவசாய இலாகா ஆராய்ச்சியின் பயனாக இந்நோயை எதிர்க்கக் கூடிய இரண்டுவகை நெல் (Co. 25; Co. 26) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(2) ஹெல்மிந்தோஸ்போரியம் (Helminthosporium) நோய் விளைவைக் குறைத்துவிடும். 1% போர்டோ கலவையைத் தெளித்து நோயைத் தடுக்கலாம்.

நெற்பயிரில் பூச்சிகள் விழுந்தும் கேடு செய்கின்றன. இவற்றுள் பலவற்றை டீ. டீ. டி. (D. D. T.) மருந்தைத் தெளித்துக் கொன்று சேதத்தைக் குறைக்கலாம். இவை தவிர, எலியும் நண்டும் நெற்பயிருக்குக் கேடு விளைக்கும்.

நெல்லை வண்டும் அந்தும் கெடுத்துவிடும். அதனால் அதை அடிக்கடி உலர்த்தவும், அதைப் போட்டிருக்கும் குதிர்களில் டீ. டீ. டி. மருந்து தெளிக்கவும் வேண்டும்.

**அரிசி வியாபாரம்:** உலகத்தில் விளையும் பத்தரைக் கோடி டன் அரிசியில் ஒரு சிறு பகுதியே வியாபாரமாகின்றது. உலகத்தில் அரிசி உண்பவர்க்குப் போதுமான அரிசி வேண்டுமானால் இன்னும் ஆண்டுதோறும் 136 இலட்சம் டன் கூடுதலாக விளைவிக்கப்பட வேண்டும்.

உலகத்தில் நெல் விளையும் நாடுகளுள் இந்தியாவிலேதான் அது மிகுந்த நிலப்பரப்பில் விளைவிக்கப்படுகிறது. ஆயினும், உண்பதற்குப் போதுமான நெல் கிடையாதிருக்கும் நாடுகளுள் பெரியது இந்தியாவே. அதனால், இந்தியா வேண்டிய நெல்லை அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆனால் இறக்குமதி செய்யாமல் இந்தியாவிலேயே விளைவிப்பதே நல்லது. ஆண்டுதோறும் 32 இலட்சம் டன் அரிசி கூடுதலாக விளைவிக்கவேண்டும். அதற்காகக் கூடுதலான நிலத்திலும் பயிர் செய்யவேண்டும்; கூடுதலாக விளையும்படியும் செய்யவேண்டும். கூடுதலான நிலத்தில் விளைவிக்க விரும்பினால், பாசன வசதிகளைப் பெருக்கவும் டிராக்டர்களைக் கொண்டு தரிசுகளைப் பண்படுத்தவும் வேண்டும். கூடுதலாக விளையச் செய்ய விரும்பினால், பாசன வசதி செய்வதுடன், சிறந்த வகை நெல்லை உண்டாக்கிக் கொடுக்கவும் உரங்களை மிகுதியாகப் பயன்படுத்தவும் வேண்டும். என். பா.

## அரிசில் கிழார்

**அரிசில் கிழார்** கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர். அரிசில் என்னும் ஊர் கொள்ளிட வடபாலுள்ள அரியலூர் என்பதன் மரூஉவாக இருக்கலாம். இவர் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடி (பதிற்றுப்பத்து—எட்டாம்பத்து) ஒன்பது லட்சம் பொற்காசும் அரசாட்சியும் பரிசிலாகப் பெற்றார். எனினும் அவன் கொடுத்த அரியணையை அவனுக்கே கொடுத்து அமைச்சுரிமை பெற்றார்; வையாவிக்கோப் பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனுடன் சேர்த்தல்வேண்டி அவனைப் பாடினார். அதிகமான் தகடூர் எறிந்து வீழ்ந்த எழினியின் பிரிவாற்றாது புலம்பினர். இவர் செய்தனவாக இப்பொழுது பதினெட்டுச் செய்யுட்கள் இருக்கின்றன. (பதிற்றுப்பத்து எட்டாம்பத்து; புறம். 146, 230, 281, 285, 300, 304; குறுந்தொகை 193).

## அரிசிற்கரைப் புத்தூர்

**அரிசிற்கரைப் புத்தூர்** தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணத்துக்குத் தென் கிழக்கே $4\frac{1}{2}$ மைலில் அரிசிலாற்றங்கரையில் உள்ளது; அழகார் புத்தூர் என வழங்குகின்றது; பெரிய புராணத்தில் செருவிலி புத்தூர் என்று அழைக்கப்படுகிறது; உண்மையானந்த முனிவர் பூசித்த தலம்; புகழ்த்துணை நாயனர் தொண்டு செய்து முத்திபெற்ற இடம். பஞ்சத்தால் ஏற்பட்ட பசியினால் மிகவும் தளர்வெய்தியிருந்த அவர் சுவாமிக்குத் திருமஞ்சனமாட்டும்போது குடத்தைச் சுவாமி தலையில் போட்டுவிட்டார். அவருக்குப் பஞ்சம் தீருமளவும் நாள்தோறும் ஒரு காசு படியாகச் சுவாமி அளித்து வந்தார். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரமும் இவ்வூருக்கு உண்டு. சுவாமி படிக்காசளித்த ஈசுவரர். அம்மை அழகாம்பிகை.

**அரித்தல்:** தங்கம், வெள்ளி போன்ற ராஜ உலோகங்களைத் தவிர மற்றெல்லா உலோகங்களின் மேலும் காற்றுப்பட்டால் மேற்பரப்பு மங்கி, ரசாயன விளைவுகள் நிகழ்ந்து, அவை ஆக்ஸைடுகள் ஆகின்றன. இவ்வினையை அரித்தல் எனலாம். பொதுவாய் இதனால் உலோகத்தின் மேற்பரப்பில் ஆக்ஸைடு இலேசாகப் படிந்து, உலோகம் மேலும் கெடாமல் பாதுகாக்கிறது. செம்பில் பச்சையான களிம்பேறுவதும், அலுமினியத்தில் ஆங்காங்கு வெண்மையான புள்ளிகள் தோன்றுவதும் இதற்கு உதாரணங்களாகும். ஆனால் இரும்பில் இவ்வினைவு வேறு வகையாக நிகழ்கிறது. அதன் மேற்பரப்பில் பழுப்பு நிறமான துரு உண்டாகி, உலோகத்தின்மேற் படிந்து, அதைப் பாதுகாப்பதற்கு மாறாக இவ்வினையை விரைவுபடுத்திப் பொருள் முழுதும் கெடுமாறு செய்கிறது. பார்க்க: துரு.

ராஜ உலோகங்கள் காற்றாலும், ஈரத்தாலும் பாதிக்கப்படமாட்டா. நிக்கலும், கோபால்ட்டும் அதிகமாக மங்குவதில்லை. கந்தக வாயுக்கள் கலந்த காற்றில் வெள்ளி விரைவில் மங்குகிறது. வெப்ப நாடுகளில் அலுமினியம் விரைவில் அரிக்கப்படுகிறது. இதனால் அலுமினியப் பாத்திரங்களில் வைக்கும் தண்ணீர் ஒருவகை நாற்றத்தைப் பெறுகிறது. அலுமினியத்துடன் வேறு உலோகங்கள் கலந்திருந்தால், அது இன்னும் எளிதில் அரிக்கப்படும். தூய செம்பு அதிகமாக அரிக்கப்படாவிட்டாலும், வேறு உலோகங்களுடன் கலவையாக இருக்கும்போது அரிக்கப்படுகிறது. வெண்கலத்தை விடப் பித்தளை எளிதில் அரிக்கப்படும். வெள்ளீயம் சாதாரண நிலையில் சற்றும் அரிபடாது. நாகம் எளிதில் அரிக்கப்படுகிறது.

இரும்பைத் துருவேறாது தடுக்கும் முறைகளையே மற்ற உலோகங்கள் அரிக்கப்படாமல் தடுக்கவும் பயன்படுத்தலாம். அரிக்கப்படும் பொருள்களை நீக்கியும், மேற்பரப்பில் உலோகக் கூட்டின் பூச்சொன்று படியுமாறு செய்தும், அரித்தலைத் தடுக்கும் பொருள்களை உலோகத்துடன் கலந்தும் இவ்வினையைத் தடைசெய்யலாம்.

**அரிதாசர்** வைணவப்புலவர்; இருசமய விளக்கம் என்னும் தத்துவ நூலின் ஆசிரியர். இந்நூல் 2119 செய்யுட்களையுடையது; சைவ வைணவச் சமயக் கருத்துக்களை உரைப்பது; மதுரையினின்றும் வெளியாகிக் கொண்டிருந்த அரிசமய திவாகரம் என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியராகிய பண்டித அரங்கராமானுஜர் இந்நூலை உரைநடையாக்கி வெளியிட்டார். அரிதாசர் நாகலாபுரத்திலே கிருஷ்ணதேவராயர் காலத்திலே 16ஆம் நூற். முற்பகுதியில் வாழ்ந்தவர்.

**அரிமர்த்தன பாண்டியன்** திருவிளையாடற் புராணத்திலும் திருவாதவூரர் புராணத்திலுங் கூறப்படும் பாண்டிய மன்னன். இவனிடத்திலே மாணிக்கவாசகர் அமைச்சராயிருந்தார். பார்க்க: மாணிக்கவாசகர்.

**அரியக்குடி** இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடிக்கு இரண்டு மைல் தொலைவிலுள்ள ஒரு வைணவத்தலம்.

**அரியநாத முதலியார், தளவாய்** (?-1600) காஞ்சீபுரத்தை அடுத்த மெய்ப்பேடு என்னும் கிராமத்தில் ஓர் எளிய வேளாள குடும்பத்தில் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தக்க உடற்பயிற்சியும், கல்விப் பயிற்சியும் பெற்றார். வயது வந்ததும் அரியநாதர் விஜயநகரத்துக்குச் சென்று, அங்கே செல்வாக்குடன் விளங்கிய நாகம நாயக்கரிடம் கணக்குப்பிள்ளை வேலையில் அமர்ந்தார். நாகமருடைய மகனான விசுவநாதரின் அரிய நண்பரானார்.

பின்பு விசுவநாத நாயக்கர் மதுரைக்கு நாயக்கராக நியமிக்கப் பெற்றார். அப்பொழுது அவர் அரியநாதரைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவருக்கு மந்திரி பதவியையும் அளித்தார். விசுவநாத நாயக்கருக்கும், அவருடைய சந்ததியார்களான குமாரகிருஷ்ணப்பர், வீரப்பர் என்னும் மதுரை மன்னர்களுக்கும் அரியநாதர் தளவாயாக விளங்கினார்.

அரியநாதர் மதுரை நகரைச் சுற்றிக் கோட்டை மதிலைக் கட்டினார்; அகழிகள் அமைத்தார்; எழுபத்திரண்டு கொத்தளங்கள் கட்டினார்; இராச்சியத்திலுள்ள எழுபத்திரண்டு பாளையக்காரர்களையும் கொத்தளத்துக்கு ஒருவராகப் படையுடன் காக்க ஏற்பாடு செய்தார்; மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி முதலிய பாகங்களில் நீர்ப்பாசன வசதிகள் செய்வித்தார்; ஆலயத் திருப்பணிகள் பல செய்தார். மதுரைச் சுந்தரேசுவரர் கோயிலில் பல பாகங்களைப் புதுப்பித்தார். அங்கேயுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் குதிரை மீது வீற்றிருக்கும் இவருடைய சிலையை நாம் இன்றும் காணலாம். இவர் திருவரங்கத்திலும் பல திருப்பணிகள் செய்தார். எஸ். ஆர். பா.

**அரியலூர்** திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார் பாளையம் தாலுகாவில் உள்ளது. சௌராஷ்டிரர் நெய்யும் சேலைக்குப் பேர்போனது. தென்னிந்தியாவிலுள்ள சிறந்த சந்தைகளுள் ஒன்று. நோயைக் குணப்படுத்துவதாகக் கருதும் கோவில் ஒன்று இருக்கிறது. புகைவண்டி நிலையம் உண்டு.

**அரியாட்னி** (Ariadne) கிரேக்கப் புராணக் கதையில், கிரீட் அரசனான மைனாஸ் என்பவனுடைய மகள். தீசியஸ் என்னும் வீரன் கிரீட் நாட்டில் சிக்கலான வழிகளுள்ள ஓரிடத்தில் புக நேரிட்டபோது அவனுக்கு இவள் ஒரு நூற்கண்டைக் கொடுத்து வழியறிந்துகொள்ளச் செய்தாள். அவன் இவளை மணந்து கொண்டான்.

**அரியோபேகஸ்** (Areopagus) கிரீசின் தலைநகரான ஆதென்ஸ் நகருக்கு வடமேற்கே அக்ரபோலிசிற்கு அருகிலுள்ள ஒரு குன்றம். பண்டைக்கால அதீனிய மன்னர் காலத்திற்குப்பின் கி. மு. 7 ஆம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்த பிரபுக்கள் 'அரச சபை' ஒன்றை ஏற்படுத்தினர். அச்சபை இக்குன்றத்தில் கூடுவது வழக்கம். அதனால் அச்சபைக்கும் அரியோபேகஸ் என்பது பெயராயிற்று. அதீனிய வரலாற்றில் இக்குன்றம் முக்கியமானது.

**அரிவாள்தாய நாயனார்** பெரிய புராணங் கூறும் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். சோழ நாட்டில் கணமங்கலத்திலிருந்த வேளாளர். வறுமையால் மெலிந்த நிலைமையில் கால் இடறவே, தாம் சிவனுக்குக் கொண்டுவந்த செங்நெலமுதும் செங்கீரையும் மாவடுவும் கமரில் சிந்தியது கண்டு, கையிலிருந்த அரிவாளால் தம் கழுத்தை அரியப்புகுகையில் இறைவனது கை அந்தக் கமரினின்று எழுந்து அவரது கையைப்பற்றித் தடுத்தது. அதே சமயத்தில் கமரில் விடேல் விடேல் என்று மாவடுவைக் கடிக்கும் ஒலியும் கேட்டது.

**அரிஸ்டாட்டில்** (கி. மு. 384-322): மேல்நாட்டின் நாகரிகத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் அடிகோலிய பெருமை அரிஸ்டாட்டில் என்னும் கிரேக்க அறிஞரைச் சாரும். இவர் கிரேக்கக் குடியேற்ற நாடுகளில் ஒன்றைச் சேர்ந்த ஸ்டாகிரா என்ற ஊரில் பிறந்தார். இவர் தந்தை நிக்கொமேகஸ் என்பவர் புகழ் பெற்ற

அலெக்சாந்தரின் தந்தையான பிலிப்பின் அரண்மனை வைத்தியராக இருந்தவர். அரிஸ்டாட்டில் தம்முடைய பதினெட்டாவது வயதில் ஆதன்ஸ் நகருக்குச் சென்று, பிளேட்டோ என்ற பேரறிஞருடைய மாணவரானார். ஆதன்ஸில் கி. மு. 347ஆம் ஆண்டுவரை கல்வி பயின்று வந்தார். கி. மு. 342-ல் பிலிப்பின் வேண்டுகோளுக் கிணங்கி அலெக்சாந்தருக்கு ஆசிரியரானார். மாணவ ராகிய அலெக்சாந்தர் பல நாடுகளை வென்று தம் ஆட்சியைப் பரப்பினர். ஆசிரியரான அரிஸ் டாட்டில் அறிவு உலகத்தின் பல துறைகளில் தம் மதி நுட்பத்தைப் புலப்படுத்தி, மங்காச் சிறப்படைந் தார். கி. மு. 335-ல் அரிஸ்டாட்டில் ஆதன்ஸுக்குத் திரும்பி ஒரு பள்ளி நிறுவினார். பெரிபாட்டெட்டிக் (உலாப்பள்ளி) என்பது அதன் பெயர். இடத்தின் காரணமாக இப்பெயர் ஏற்பட்டது என்பார் சிலர். வேறு சிலர் அரிஸ்டாட்டில் உலவிக் கொண்டே பாடஞ் சொல்லுவது வழக்கமாதலால் இப்பெயர் ஏற்பட்ட தென்பர். அலெக்சாந்தர் இறந்தவுடன் அரசியல் நிலைமை மாறியதால், அரிஸ்டாட்டில் ஆதன்ஸைவிட்டு நீங்கித் தம் 62ஆம் வயதில் நோய்வாய்ப்பட்டுக் கால மானார்.

**அரிஸ்டாட்டிலின் கொள்கை :** இவருடைய கொள்கையைச் சுருக்கிக் கூறுவது எளிதல்ல. அக் கொள்கையின் தன்மையையும் போக்கையும் பற்றிய சில குறிப்புக்களை மட்டும் தத்துவம், அறம், அரசியல், அளவை, இலக்கியத்திறனாய்வு என்ற தலைப்புக்களுக்கடி யில் பார்க்கலாம். பொதுவாக இவர் உள்ளப் போக்கை அறிவதற்கு மூன்று செய்திகளைக் கருத்திலிருத்த வேண் டும். 1. இவர் ஐயோனியா என்ற பகுதியைச் சேர்ந்தவராதலால் அப்பகுதியின் ஏனைய தத்துவ ஆராய்ச்சியாளரைப்போலப் புற உலக இயற்கையின் கூறுகளை ஆராய்வதில் பற்றுக் கொண்டவர். 2. மருத்துவரின் மகனாதலால் விளைவுகளையும் அவற்றின் முதலையும் உய்த்துணரும் ஆற்றல் உடையவர். 3. அக உலக ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்ட சாக்கிரட் டீசின் மாணவரான பிளேட்டோவை ஆசிரியராகப் பெற்றவர் ; எனவே அகவுலக ஆராய்ச்சியிலும் பயிற்சி பெற்று, அவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தியவர். வானவியலிலிருந்து விலங்கியல் வரையில் இவருடைய அறிவுத்தொண்டு பரவியுள்ளது.

தத்துவம் : பிளேட்டோ பொருள்களின் உண்மை நிலையில் கருத்தைச் செலுத்தியதால் அவற்றின் தோற் றத்தைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. பொருள் களின் உண்மை நிலை ஓர் அளவிற்கே தோற்ற நிலையில் நிழலிடுகிறது என்பது அவர் கருத்து. இவ்வாறு தோற்ற நிலையைப் புறக்கணிப்பதின் குறையை அரிஸ்டாட்டில் நீக்கினார். உண்மை நிலையைக் காட்சிக்குப் புறம்பாக்கா மல் பொருள்களின் நிறைவான உருவத்திலேயே அதைக் காணவேண்டும் என்று வற்புறுத்தினார். தனிப்பட்ட பொருள்களுக்கே உண்மை உண்டு, அவற்றின் பொது மைக்கல்ல என்பது அவர் கொள்கை. ஒரு பொருளை உணர்ந்துகொள்ள, அது எதனாலானது, எந்த உருவுடை யது, எவரால் எக்கருவி கொண்டு செய்யப்பட்டது, எதற்காகச் செய்யப்பட்டது என்று இவ்வாறாக ஆராய வேண்டும்.

அறம் : அறத் துறையில் மிகைபடல், குறைபடல் ஆகிய இரண்டும் தவறு ; நடுநிலைமையாகத் தக்க அள வில் நடப்பதே நன்மை என்ற முடிவு கண்டார். எடுத் துக் காட்டு : அஞ்சாமை என்பது அச்சம் என்பதற்கும் எண்ணிப் பாராத துணிவிற்கும் இடைப்பட்ட நன்னிலை. மிகுதியாக அஞ்சுவதும், குறைவாக அஞ்சுவதும் தவறு. இவ்வாறே எண்ணாமல் துணிவதும், துணியாமலே இருப்பதும் தவறு. அச்சம், துணிவு என்ற இரண்டை யும் தக்க அளவில் கொண்ட நடுநிலைப்பட்ட ஒழுக்கமே அஞ்சாமை.

அரசியல் : மக்கள் கூடிவாழும் பண்புடையவர்கள். ஆகையால் அவர்கள் குடும்பத்தினராகவும், குறிப்பிட்ட இனத்தினராகவும், நாட்டினராகவும் வாழக் காண் கிறோம். நாட்டின் நல்லாட்சிக்குத் தேவையானவை பின் வருவன : 1. நாட்டு மக்கள் அனைவர் நலத்தையும் பற்றி ஆட்சியாளர் அக்கறை கொள்ளுவது, 2. நாட்டின் பல திறப்பட்ட தொழில், மக்கட்பண்பு இவற்றிற் கேற்ற ஆட்சி முறைத் திட்டம், 3. நிலையான ஆட்சிக் காகப் பணக்காரரும் ஏழைகளுமல்லாத நடுநிலை வகுப் பினரின் எண்ணிக்கை, செல்வாக்கு இவற்றின் பெருக் கம். ஆட்சிமுறைக்கு ஏற்ப நடப்பதுதான் உரிமை வாழ்வு.

அளவை : வேறு எத்துறையையும்விட இத்துறை யிலேயே அரிஸ்டாட்டிலின் செல்வாக்குப் பரந்து நிலைத் துள்ளது. பகுப்பு வழியளவை (Deduction) என்ற பகுதி ஏறக்குறைய அரிஸ்டாட்டில் வகுத்தபடியே இன் றும் பயிலப்பெறுகிறது. சிறப்பாக அனுமான மொழித் தொடர் (Syllogism) என்ற வழியளவை முறை அவர் அமைத்துத் தந்ததே.

இலக்கியத்திறனாய்வு : துன்பவியல் நூல்களின் நோக்கத்தைப் பற்றி அரிஸ்டாட்டில் கொண்ட கொள் கை, இலக்கியத்திறனாய்வாளர் அடிக்கடி நினைவு கூர்வ தொன்று. இத்தகைய நூல்கள், அச்சம், இரக்கம் என்ற உணர்ச்சிகளை எழுப்பி, ஏனைய உணர்ச்சிகளையும் உள்ளத்தையுமே தூய்மை செய்யும் பொருள்களாக (Catharsis) விளங்குகின்றன என்கிறார் அரிஸ்டாட்டில்.

மேல்நாட்டு ஆராய்ச்சி முறைகளும், அறிவுத் துறை களின் அடிப்படையும், கலைச் சொற்களும் பெரும் பாலும் அரிஸ்டாட்டில் அமைத்தனவே என்பதை எண் ணும்போது அவருடைய அறிவின் பெருமை புல னாகும். வ. ஆ. தே.

**அருகத்து நிலை** பௌத்த சமயத்தில் நான்கா வதும், மிகப் புனிதமானதுமான துறவுநிலை. உலக வாழ்வின் நிலையாமையையும் துன்பங்களையும் உணர்ந்து நிர்வாணத்தை நோக்கமாகக் கொண்டு முன்னேறும் போது கடைசியாக உள்ளது இந்நிலையாகும். உலக வாழ்வைத் துறந்து அனுஷ்டிக்க வேண்டிய நான்கு அதீத மார்க்கங்களையும் கடந்து வந்து, அதன் நான்கு பலன்களையும் பெற்று, இப்பிறப்பில் துன்பம் நீங்கி, மறுபிறப்பும் இல்லாத நிலையை அடைவோர் அருகத்து நிலையை அடைந்தவராவர். இவர்கள் ஆரியர் எனவும் அழைக்கப்பெறுவர். அருகத்துநிலையை அடைந்தோரது முக்கியமான சிறப்பியல்பு குறைவற்ற ஞானம். இது பிரஞ்ஞை எனப்படும். பிறவிக் கடலைக் கடக்க இப் பிரஞ்ஞை உதவுகிறது. ஆகையால் இவர்கள் பிரஞ்ஞா விமுக்தர் எனவும் அழைக்கப்பெறுவர். புத்தரது பிரதம சீடர்கள் அனைவரும் இந்நிலையை அடைந்தோர்.

ஜைன சமயத்திலும் மிக்க வுயர்நிலையடைந்த ஆன்மா, உடலோடு கூடியிருக்கும்போது சயோக கேவலி அல்லது அருகத்து நிலையை எய்தியிருப்பதாகக் கூறுவர்.

**அருங்கலச்செப்பு** சமண சமய அறநூல். குறள்வெண்பாக்களால் ஆகியது. திருவாரூருக்கருகில் தீபங்குடியில் விளங்கிய அருங்கலான்வயத்தாரால் எழுதப்பட்டது. அருங்கலான்வயம் என்பது தென்னாட் டுச் சைன சங்கங்களிற் சிறப்புற்ற நந்தி கணத்தின் ஒரு பிரிவு. இந்நூலைப் பின்பற்றியே அறநெறிச்சாரம்

எழுதப்பட்டதால், இது அறநெறிச்சாரம் எழுதப்பெற்ற கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டிற்கு முந்தியதாய் இருக்கலாம்.

**அருண்டேல், ஜார்ஜ் சிட்னி** (1878–1945) 1934–1945-ல் அடையாற்றில் பிரம ஞான சங்கத்தின் தலைவராயிருந்த ஆங்கில அறிஞர். இங்கிலாந்தில் சர்ரேயில் 1-12-1878-ல் பிறந்தார். இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் கல்வி பயின்று, எம்.ஏ., எல்.எல்.பீ. பட்டங்கள் பெற்றார். காசி சென்ட்ரல் இந்துக்கல்லூரியில் முதலில் வரலாற்று ஆசிரியராகவும் பின்னர்த் தலைவராகவுமிருந்தார். அன்னிபெசன்ட் அம்மையார் நிறுவிய ஹோம் ரூல் லீகின் காரியதரிசியாயிருந்தார். 1917-ல் அம்மையாரும் அவரும் நீலகிரியைவிட்டு வெளியேறக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருந்தது. 1917-ல் பிரமஞான சங்கம் நிறுவிய நாட்டுக் கல்வி வளர்ச்சிச் சங்கத்தின் ஆதரவில் ஏற்பட்ட நாட்டுப் பல்கலைக் கழகத்தின் தலைவராயிருந்தார். 1920-ல் இந்தூர் ஹோல்காருடைய கல்வி மந்திரியாயிருந்தார். பின்னர் பலமுறை உலக முழுவதும் பிரயாணம் செய்து, கல்வி, அரசியல், சமூக நிலைமைகளை ஆராய்ந்தார். பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் ஆதரவில் இந்தியா சுதந்திரம்பெற உழைத்தார். இந்துஸ்தான் சாரண இயக்கத்தின் சென்னை மாகாணக் கமிஷனராயிருந்தார். 1934-ல் பெசன்ட் அம்மையார் நினைவுக்காகப் பெசன்ட் பிரமஞான உயர்நிலைப் பள்ளியை அடையாற்றில் நிறுவினார். 1936-ல் அவரும் அவரது மனைவியார் ருக்மிணி தேவியும் கலாக்ஷேத்திரத்தை அமைத்தனர். 1936-ல் மான்டிசாரி அம்மையாரை அழைத்து, அவரிடம் கல்விப் பயிற்சி பெற வகுப்புக்கள் அமைத்தார். இந்தியச் சுதந்திரத்தை ஆதரிப்பதற்காக மனச்சான்று (Conscience) என்ற ஆங்கில வார இதழ் ஒன்றைத் தோற்றுவித்தார். சமயம், கல்வி, அரசியல் ஆகிய துறைகளில் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவர் 12-8-1945-ல் அடையாற்றில் இறுதி எய்தினர்.



அருண்டேல்

**அருணகிரிநாதர் :** செவ்வேட் பெருமானுக்குச் செஞ்சொற்புனைமாலை சிறக்க அணிந்தவருள் அருணகிரிநாதரும் ஒருவர். இவர் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விஜயநகரத்தைப் பிரபுடதேவ ராயர் ஆண்டுவந்த காலத்தில் திருவண்ணாமலையில் தோன்றினர். இவர் முத்தம்மை என்ற உருத்திர கணிகையின் மைந்தர் என்பர். இவரைப் பட்டினத்தடிகளின் பிள்ளை என்பாரு முளர். பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகளுக்குப் பதினைந்தாம் நூற்றாண்டினரான அருணகிரியார் மகனாதல் பொருந்தாதென்க. இவரது குலம் பற்றியும் பலர் பலவாறு கூறுகின்றனர்.

இவர் இளமையில் சங்கமருவிய இலக்கிய இலக்கணங்களிலும், சைவத் திருமுறைச் சாத்திரங்களிலும், இதிகாச புராணங்களிலும், வடமொழி நூல்களிலும் மிக்க தேர்ச்சி பெற்று விளங்கினர். செல்வர்கள்மேல் கோவை, கலம்பகம், உலா, மடல் முதலிய பிரபந்தங்கள் பாடிப் பணந்தேடிச் சிற்றின்ப வகையில் செலவிட்டு வாழ்ந்தார். அதனால் குட்டம் முதலிய நோய்களும் வர நொந்து வாடினர் என்பது இவரது பாடல்களை அப்படியே அகச்சான்றாகக் கொள்ளுவோர் கருத்து. இல்லாக் குறையைத் தமதாக ஏற்றிக் கூறும் அருங்கவி வாதவூரர் போன்றவரது அடக்கவுரைகள் போன்றவை இந்த உரைகள் எனக் கொள்ளலுமாம். பெரிய குணதரர் என்பார் அறிவுரை பல கூறி இவரைத் திருத்தினர் என்று இவருடைய திருப்புகழ் கூறுகிறது.

தமது கூடாவொழுக்கத்தை நினைந்து வருந்தும் உணர்ச்சி வந்த காலத்தில் இவர் அருணை வடகோபுரத்தருகில் ஆறுமுகனிடம் தங்குறை கூறித் தவங்கிடந்தனர். ஆண்டவன் அருள் சுரக்கவில்லை. அதனால், அண்ணலாருக்கு வாழ்க்கையில் வெறுப்பு வந்தது; உயிர்விட எண்ணிக் கோபுரத்திலேறிக் குதித்தனர். தனது பழைய அடிமையான அருணகிரியார் இறக்க முயன்றது காணத் தரியாது முருகன் தரிசனம் தந்து தண்ணளி செய்தான். ஆண்டவன் காட்சி அருணகிரியார்க்கு ஆறுதலளித்தது. முருகன் தன் அருள் நோக்கத்தால் அவரைப் புனிதராக்கி, உய்யக் கொண்டான். அதுமுதலாக நம் தெய்வப் புலவர் தவஞானக் கடல்படிந்து சிவஞானச் செல்வராயினர். தேனூறு தமிழுக்கு வாயூறும் சிவகுமரன் 'முத்தைத் தரு' என்ற முதலடி எடுத்துதவினன். நம் சந்தப் புலவர் அதனைத் தொடர்ந்து ஒரு சந்தப் பாப் பாடினர். அன்று முதல் பாடிய அளப்பருஞ் சந்தப் பாக்களின் தொகுப்பே 'திருப்புகழ்' எனப் பெயர் பெற்றது என்று கூறுவர். தமிழ் நாட்டின் வடக்கிலும் தெற்கிலுமாகப் பல தலங்களைத் தரிசித்துப்பாடும் பணியே இவர்க்குப் பணியாயிற்று. இவர் காணாதனவும் பாடாதனவுமான முருகன் தலங்கள் தமிழ் நாட்டில் இல்லை என்றே சொல்லலாம்.

அருணையிலிருந்தபோது வில்லிபுத்தூரார் என்பவர், தம்மிடம் வாதிட்டுத் தோற்ற புலவர் காதுகளைத் தோண்டியறுப்பது கேட்டு, அருணகிரியார் உளம் கவன்றார்; அவரோடு வாதம் செய்தார்; தாமியற்றிய கந்தரந்தாதியில் 'திதத்தித்த' என்ற 54ஆம் பாட்டிற்கு உரை கூறத் தெரியாமல் வில்லியார் தோற்கவும், அவர்க்குக் கர்ணதானம் செய்து (காது அறுக்காமல் விட்டு) அவரைத் திருத்தினர். வில்லியார், புலவர்கள் காதறுக்கும் செய்தியை ஒரு பழம் பாடல் கூறுவதாலும், அவர் அருணகிரியாரது சமகாலத்தவராதலாலும், இருவரும் சந்தக் கவிஞராதலாலும் அந்தச் செய்தி உண்மை எனக் கொள்ளல் இழுக்காது.

சம்பந்தாண்டான் என்ற சக்தி பக்தனொருவன் அருணகிரியாரிடம் பொறாமை கொண்டான்; அண்ணாமலைப் பகுதியை ஆண்டுவந்த பிரபுடதேவ மன்னனிடம் சென்று, தான் வழிபடுந் தேவியைச் சபையில் அனைவருக்கும் தெரிசிக்கக் காட்டுவதாயும், அருணகிரியாரையும் தமது வழிபடுந் தெய்வமான குகவேளைக் காட்டச் செய்யச் சொல்லுமாறும் தூண்டினன். அரசனும் அவரை வேண்ட அவரும் இசைந்தனர். சம்பந்தாண்டான் சொற்படி தேவி சபையில் காட்சி தரவில்லை. அருணகிரியார் 'அதலசேடனாராட' என்ற பாடல் பாடினர். குமரவேள் மயிலின்மேல் சபையினர்க்கு அருட்காட்சி கொடுத்தனன். அப்பேரொளியால் அரசர்க்குக் கண்ணொளி மழுங்கியது. சம்பந்தாண்டான் தூண்டியபடி வேண்டிய அரசர்க்காக, அருணகிரியார் கிளியுருவில் பொன்னுலகம் புகுந்து, கற்பக மலர் கொண்டுவந்து அரசன் கண்ணொளி பெற நல்கினர்; அக்கிளியுருவிலேயே ஆறுமுகன் திருத்தோளில் அமர்ந்தார் என்றும், அவனடியில் கலந்து முத்திபெற்றார் என்றும் ஆன்றோர் கூறுவர்.

இவர் அருளிய நூல்கள்: திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில்விருத்தம் முதலியன. சே. த. இ.

**அருணகிரிநாதர் தத்துவம்:** அருணகிரியார் திருப்புகழ்மூலம் உபதேசிக்கும் பொருள் யாது? அவர் வழிபடும் முருகன் யார்? கடவுளை அறியும் வழி என்ன? மும்மூர்த்திகளும் தானுகி, அவர்க்குமேலுமாகி, எல்லாமு மாகி நின்ற தத்துவமுமே முருகன் என்று அவர் கூறு கின்ருர். எல்லாத் தெய்வங்களும் முருகன் என்பதே அவர் துணிபு.

அருணகிரியார் திருமால் மருகனென முருகனைப் பல விடங்களிலும் பாடியிருத்தலின் சைவ வைணவ சமரச நோக்கமுடையவராவார். அதுபோலவே புராண இதி காசங்களையும் அவைகளில் கூறப்படும் கடவுளையும் தத்துவங்களையும் சமரசமாய்க் கையாண்டு பாடியிருக் கின்ருர். கந்தபுராணத்தில் காணப்படும் கந்தப்பெருமா னுடைய திருவிளையாடல்களை அனுபவித்த முறையில் வைத்துத் திருப்புகழில் மிகுதியாகப் பாடியிருக்கின்ருர். சிவயோகத்தையும் அதை நாடும் ஜீவனுடைய தத்து வத்தையும் நன்ருக விளக்கியிருக்கிருர். 'ஐந்து பூதமும் ஆறு சமயமும்' என்னும் திருப்புகழில் ஆன்மாவானது ஆணவம் முதலான மும்மலத்தை யொழித்துத் தெய் வத்தை யடையவேண்டிய நெறியைக் குறிப்பிட்டிருக் கிருர். ஆசைகளும் ஆணவமும் அடங்கப் பெற்ருலன்றி முருகனை அணுகமுடியாதென்கிருர். ஆசையை அகற் றினுலன்றி வினை தீராது; மூண்ட வினையே விதியாகும்; விதியைத் தாண்டுவதே கதி; அந் நற்கதியைப் பெற வேண்டுமானுல் முருகன் நாமமும் முருகன்பால் பக்தியும் இன்றியமையாத நெறி என்று கூறுகிருர்.

அவர் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம் முதலியவைகளில் குறிப்பிட்டுள்ள அரிய நுட்பங்களைத் தெரிந்து, இசைத்தமிழ்ப் பாடல்களாகப் பாடி, யாவரும் அறிந்து ஒழுகக்கூடியவாறு எளிதான அறநெறியைக் காட்டியிருக்கின்ருர். இவருடைய இத்தகைய உயர்வை எண்ணியே, தாயுமானவர்,

'ஐயா அருணகிரியப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?'

என்று அருணகிரியாரைப் பற்றி உணர்ச்சி ததும்பப் போற்றுகிருர். பார்க்க: திருப்புகழ். டி. எம். கி.

**அருணந்தி சிவாசாரியார்:** சைவசந்தானு சாரியர்களுள் இரண்டாமவராகக் கருதப்படுகின்ற அரு ணந்தி சிவாசாரியார் ஆதிசைவ மரபைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் சதாசிவாசாரியார் என்று கூறப் படுகிறது. சைவாகமங்கள் அனைத்தையும் கற்றறிந்து, அவற்றைப் பிறர்க்கு ஓதிவந்தமையால் இவருக்குச் சக லாகம பண்டிதர் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. இவர் நடு நாட்டிலே பெண்ணையாற்றின் வடகரை யிலுள்ள திருத்துறையூரில் வாழ்ந்து வந்தவர். இவர் காலம் பதின்மூன்ருவது நூற்ருண்டு என்று அறியக் கிடக்கிறது. முதலில் இவர் மெய்கண்டார்க்குக் குல குருவாயிருந்ததும், பின்பு அவருக்கு முதல் மாணவரான தும் மெய்கண்டார் வரலாற்றில் காணலாகும். அரு ணந்தி என்ற பெயர் இவருக்கு மெய்கண்டாரால் இடப் பெற்றது.

தம் ஆசிரியர் ஏவலுக்கேற்ப அருணந்தி சிவஞான போதத்தை முதல் நூலாகக் கொண்டு, அதன் வழிநூலா கத் தாமியற்றிய சிவஞான சித்தியாரில் சைவத்திறத் தினை விளக்குகிருர். சித்தியார், சித்தாந்த சாத்திரங் களுள் மிகவிரிவான நூல்; பரபக்கம், சுபக்கம் என்னும் இருபெரும் பகுதிகளைக் கொண்டது. உலகாயதன், சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன், நிகண்டவாதி, ஆசீவகன், பட்டாசாரி யன், பிரபாகரன், சத்தப் பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியன் (பரிணும மாயாவாதி), நிரீச்சுர சாங்கியன், பாஞ்சராத்திரி என்ற புறச் சமயத்தவருடைய கொள் கைகளை முதலில் கூறி, அப்புறச் சமயங்களைச் சித்தாந் தத்தால் மறுப்பது பரபக்கம். சித்தாந்த சாத்திர நூல் களுள் சித்தியார் ஒன்றில் மட்டுந்தான் அளவை கூறப் பெற்றிருக்கிறது. தத்துவ சாஸ்திரங்கள் முதலில் அளவை கூறுவது மரபு. நிறுத்த முறையில், காட்சி, கருதல், உரை போன்றவற்றுள் எவை தமக்கு உடன் பாடு என்று கூறி, அவற்றைக் கொண்டு தம் கொள்கை களை நிலை நிறுத்தல் எல்லாச் சமயங்களுக்கும் ஒப்ப முடிந்த கொள்கை. சித்தியார் சுபக்கத்தில் அளவை கூறியபின், கடவுள், உயிர், கட்டு (பதி, பசு, பாசம்) இவற்றின் உண்மை, இவற்றின் பொது இயல்பு, சிறப்பியல்பு, கட்டினின்றும் விடுபட்டுக் கடவுளை அடையவேண்டிய வழிகள், கடவுளை அடைந்தோர் தன்மை முதலியன கூறுகிருர். சமயத் துறையில் மட்டு மன்றி, இலக்கியத் துறையிலும் சித்தியார் மிக உயர்ந்த நூலாகத் தமிழ் அறிஞர்களால் பாராட்டப்பெறுகிறது.

அருணந்தி இயற்றிய மற்ருெரு நூல் இருபாவிருபஃது என்னும் பெயருடையது. இந்நூல் பத்து வெண்பாவும் பத்து அகவலுமாக இரண்டுவகைப் பாவால் அமைந் துள்ளதால் இருபாவிருபஃது என்னும் பெயர்பெற்றது. ஆசிரியரை முன்னிலைப்படுத்தி மாணவன் வினவுவதாக வும், வினவுக்கு ஆசிரியர் விடையளிப்பதாகவும் அமைந் துள்ளது இந்நூல். ஆசிரியர் கூற்ருக உள்ளனவே சித் தாந்த உண்மைகள்.

அருணந்தி இயற்றிய நூல்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் சித்தாந்த உண்மைகள் வருமாறு:

1. இறைவன் உண்டு: ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று உலகம் முத்திறப்பட்டுத் தோன்றி, நின்று, அழி வதால் அதை இயற்றியவன் ஒருவன் உண்டு. அவனே இறைவன்.

2. உயிர் உண்டு, உயிர் பல: உயிர் என்பது உட லின் வேருக, அறிவு, விழைவு, செயல் என்னும் மூன்றை உடையது. 'உயிர் ஒன்று' என மறைகள் கூற, 'உயிர் பல' எனக் கொள்ளுவது எவ்வாறு பொருந்துமெனின், மறைகள் உயிர்க்குத் தலைவன் ஒருவனே என்பதை வற் புறுத்த 'உயிர் ஒன்று' எனக் கூறுகின்றன. எழுத் துக்கள்தோறும் செல்லும் அகரம்போல உயிர்களோடு சிவனும் சேர்ந்து நிற்கிருன்.

3. கட்டு: (i) இருவினை: உயிர்கள் நுகரும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் இருவினை. இருவினை யால் உயிர்கள் பிறந்து இறந்து இவ்வுலகத்திற்கு வருவ தும் இங்கிருந்து போவதுமாகும்.

(ii) மாயை: உலகத்திற்கு முதற் காரணமாக அணுக்களைக் கொள்ள முடியாது. அவைகள் அவயவப் பகுப்புடையனவாதலால் பகுப்பின்றியுள்ள மாயையே முதற் காரணம்.

(iii) ஆணவம்: ஒன்ருயிருந்தும், அநேக சத்தி யுடையதாய்த் தொடக்கம் அற்றதாய், உயிரின் அறி வொடு தொழிலை ஆர்த்து, செம்பினிற் களிம்பு போன்று உயிரோடு இயைந்து நின்று அறியாமை காட்டுவது ஆணவம்.

இவை மூன்றும் உயிர்க்குத் தளை. நெல்லுக்கு முளை, தவிடு, உமிபோல இவை மூன்றும் உயிரின் உண்மை வடிவை மறைக்கின்றன.

4. மானுடப் பிறவியின் நோக்கமும் அருமையும்: இறைவன் பணிக்காக மானுடப் பிறவி எய்துகிறது.

உருவம் அழியக் கூடியதால் பிறவியின் நோக்கத்தை மறவாது உருவம் உள்ளபோதே இறைபணி நின்று உய்வதற்கான வழி தேடவேண்டும்.


5. இறைவன் உயிர்களை ஒறுத்தற்குக் காரணம்: தாய்தந்தையர் தம்புதல்வர்கள் நன்னெறியில் செல்லுவதற்காகச் சிற்சில வேளைகளில் அவர்களை ஒறுத்தல் போலவும், மருத்துவன் சில நோய்களை இனிய மருந்து கொண்டு போக்கினும், வேறு சிலவற்றை அறுத்துக் கீறித் தீர்த்தல் போலவும், இறைவன் உயிர்களுக்கு வினைப்பயன்களை ஊட்டி வினையறுப்பான்.

6. உயிர்களுக்கு அன்பு செய்தல்: உயிர்களுக்கு அன்பு செய்யும் முயற்சிக்கு அடிப்படை இறைவனிடத் தன்பு. இறைவனிடத் தன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்; எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார். அன்பற்ற அவர்கள் பிணத்தையொப்பர். அவர்களோடு இணங்குவதும் தவறு. வ. ஆ. தே.

**அருணமச்சிவாயதேவர்** சித்தாந்த சைவாசாரியர்களில் ஒருவர்; உமாபதி சிவாசாரியாருடைய மாணாக்கர்.

**அருணாசலக் கவிராயர்** (1712–79) சோழ நாட்டிலே தரங்கம்பாடியை யடுத்த தில்லையாடியில் வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தை நல்லதம்பிப் பிள்ளை; தாயார் வள்ளியம்மை. தந்தை இளமையில் ஜைனராக இருந்து பின்னர்ச் சைவரானவர். அருணாசலர் சிறுவயதிலேயே இசையுடன் பாடக்கூடியவராக இருந்தார். இவருக்குப் பன்னிரண்டாம் வயதில் தாய் தந்தையர் இறக்கவே, இவர் கல்வி கற்பதற்காகத் தருமபுர ஆதீனம் சென்றார். அங்கு இலக்கிய இலக்கணங்களிலும் சமய நூல்களிலும் தக்க புலமை எய்தினார். வடமொழியிலும் வடுகிலும் ஓரளவு பயிற்சி பெற்றார். இயற்றமிழ்ப் பாடல்களும் இசைத் தமிழ்ப் பாடல்களும் இயற்றும் ஆற்றல் உடையவராயிருந்தார். முப்பதாவது வயதில் திருமணம் செய்துகொண்டு, காசுக்கடை வைத்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார். ஒரு சமயம் சீகாழி சென்றபொழுது அங்கிருந்த சிதம்பரத்தம்பிரான் இவருடைய புலமையைக் கண்டு வியந்து, அவ்வூரில் வீடு கட்டிக் கொடுத்து, அங்கேயே வதியுமாறு செய்தார். அதனாலேயே இவர் சீகாழி அருணாசலக் கவிராயர் என அழைக்கப்படுவர். சீகாழிக்கு அடுத்த சட்டநாதபுரத்திலிருந்த வேங்கடராமய்யரும் கோதண்டராமய்யரும் இவரிடம் பாடம் கேட்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இவர் இராம நாடகக் கீர்த்தனை என்ற நூலைச் செய்தார். அது எளிய இனிய சொற்களால் அமைந்து, இசை நாடகங்கட்கு ஏற்ற முறையில் இயற்றப்பட்டிருத்தலால் எல்லோராலும் களிப்புடன் வரவேற்கப்பட்டது. கம்பர் தமது இராமாயணத்தை அரங்கேற்றிய திருவரங்கத்திலேயே அதை இவர் அரங்கேற்றினார். அதன்பின் பல குறுநில மன்னர்களுடைய அவையிலும் பல பிரபுக்கள் முன்னிலையிலும் விவரித்துப் பல பரிசுகள் பெற்றார். இவர் இராம நாடகக் கீர்த்தனை பாடியது தமது அறுபதாம் வயதிலாகும். அதன் பின்னர் ஏழு ஆண்டுகள் வாழ்ந்து இறைவன் திருவடி அடைந்தார். இவர் பல தனிப்பாடல்கள் பாடியிருப்பதுடன் அசோமுகி நாடகம், சீகாழித் தலபுராணம், சீகாழிக் கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் முதலிய பல நூல்களும் இயற்றியுள்ளார்.

**அருணாசலக் கவிராயர், மு. ரா.** சேற்றூர் இராமசாமிக் கவிராயர் மக்களில் ஒருவர். சிவகாசித் திருப்பதிப் பெருமான் மீது பல சிறு காப்பியங்கள் செய்துள்ளார். சிவகாசிப் புராணமும் இயற்றியிருக்கின்றார். மேலும் பல அந்தாதிகளும் பிள்ளைத் தமிழ்களும் பதிகங்களும் இயற்றியிருக்கிறார். குறுக்குத்துறைச் சிலேடைவெண்பாவும் - இவர் பாடியதே. ஆறுமுக நாவலர் வரலாற்றையும் செய்யுளில் எழுதியுள்ளார். பல உரைநடை நூல்களும் உரைகளும் செய்திருக்கிறார். திருக்குறளைத் தெளிவான உரைநடையில் எழுதியிருக்கிறார். அதற்கு ஓர் உரையும் இயற்றியிருக்கிறார். சுப்பிரமணியக் கவிராயரும் கந்தசாமிக் கவிராயரும் இவர்க்கு உடன்பிறந்தவர்கள். 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியிலும் இருந்தவர்.



மு. ரா. அருணாசலக் கவிராயர்

**அருணாசல முதலியார்** திருமயிலையில் இருந்த புலவர்; கொடியிடைமாலை, சிதம்பரம் சிவகாமியம்மை பதிகம், திருமுல்லைவாயில் மாசிலாமணியீசர் பதிகம் ஆகிய நூல்களின் ஆசிரியர்.

**அருந்ததி** வசிட்டர் மனைவி; மகாபதிவிரதை; பஞ்ச கன்னிகளில் ஒருத்தி. துருவமண்டலத்தருகில் ஏழு விண்மீன்களுக்கிடையில் வசிட்டர் என்ற மீனும், அருகில் அருந்ததிமீனும் இருப்பதாகப் புராணங்கள் கூறும். இந்துக்கள் மணம் செய்துகொள்ளும்போது கற்பிற்கு இலக்காக மணமகளுக்கு மணமகன் அருந்ததியைக் காட்டுதல் மரபு.

**அருநெல்லி** அழகான சிறிய மரம். இலையுதிர்வது. 2-3 அங்குல நீளமுள்ள தனியிலைகள் கிளைகளிலே இரண்டு வரிசையாக மாறொழுங்கில் அமைந்திருக்கும். இந்தக் கிளைகள் மெல்லியவாகப் பார்வைக்குக் கூட்டிலைகள் போலக் காணும். பூக்கள் மிகச் சிறியவை. செந்நிறமானவை; நெருக்கமாக அடர்ந்திருக்கும்; ஒரு பாலின. கனி மஞ்சள் நிறமானது. சற்று உருண்டையாக வரிவரியாக உப்பிக் கொண்டிருக்கும். சதைக் கனி. புளிப்பும் சிறிது தித்திப்பும் உள்ளது. வெயிற்காலத்தில் காய்ப்பது. பச்சையாகத் தின்பதற்கும், கறி சமைப்பதற்கும், ஊறுகாய் போடுவதற்கும் பயன்படுவது. வீட்டுத் தோட்டங்களில் சாதாரணமாக வைத்து வளர்ப்பது. குடும்பம்: யூபோர்பியேசீ (Euphorbiaceae); இனம்: பில்லாந்தஸ் டிஸ்டிக்கஸ் (Phyllanthus distichus).

**அரு மண்கள்** (Rare Earths): ஆவர்த்த அட்டவணையின் மூன்றும் தொகுதியைச் சேர்ந்த தனிமங்களின் உப்பு மூல ஆக்சைடுகள் இப் பொதுப்பெயரால் வழங்குகின்றன. இவற்றின் பொதுக் குறியீடு $R_2O_3$. ஆனால் சில அரு மண்கள் மட்டும் $RO_2$ என்ற குறியீட்டை உடையவை. ஸ்காந்தினேவியா, சைபீரியா, கிரீன்லாந்து, வட அமெரிக்கா, பிரேசில், இந்தியா ஆகிய இடங்களில் மட்டும் இவை மிகச் சிறு அளவு காணக்கிடைக்கின்றன. ஆகையால் இவற்றின் கூட்டுக்கள் மிக விலையுயர்ந்தவை. இவற்றின் பண்புகள் இன்னும் முற்றிலும் அறியப்படவில்லை. இத்தனிமங்கள் ஒன்றையொன்று மிகவும் ஒத்திருப்பதால் இவற்றை வேறாகப் பிரித்தறிவதும் கடினம். தென்னாட்டில் திருவிதாங்கூர்க் கடற்கரை மணலிலுள்ள மானசைட்டு என்னும் பொருள் அரு மண் தனிமங்களது

கனியங்களில் முக்கியமானது. சிரைட்டு (Cerite), அல்லனைட்டு (Allanite), சாமர்ஸ்கைட்டு (Samarskite), கடோலினைட்டு (Gadolinite), பெர்குசனைட்டு (Fergusonite), ஆர்தைட்டு (Orthite), கொலம்பைட்டு (Columbite) ஆகியவை மற்ற முக்கியமான அரு மண் கனியங்கள்.

ஸ்வீடனில் காணப்படும் ஒரு கருமையான கனியத்திலிருந்து கடோலின் (Gadolin) என்ற அறிஞர் 1794-ல் இட்ரியா என்ற பொருளைக் கண்டுபிடித்தார். 1804-ல் பெர்சீலியஸ், ஹைசிங்கர் (Hisinger) என்ற இரு விஞ்ஞானிகளும், கிளாப்ராத் என்பவரும் வேறொரு கனியத்திலிருந்து சீரியா என்ற பொருளைக் கண்டுபிடித்தார்கள். இதன்பின் வேறு பல அரு மண்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இக்காலத்தில் பதினறு அரு மண்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இனிக் கண்டுபிடிக்கப்படும் அரு மண் எதுவும் இல்லை என்பதை அணு அமைப்புப் பற்றிய தற்காலக் கொள்கைகள் தெளிவாக்குகின்றன.

அரு மண் தனிமங்கள் அனைத்தும் மூவலுவெண் கொண்ட தனிமங்கள். இவை வலிவான உப்புமூலத் தன்மையுள்ள கார ஆக்சைடுகளுக்கும், வலிவற்ற மூலமான அலுமினியாவிற்கும் இடையே உள்ளன. இவற்றின் உப்புக்கள் நீர் முறிவதில்லை. இவற்றின் குளோரைடுகளையும், புளோரைடுகளையும் மின்பகுத்துத் தனிமங்களைத் தனியே பிரிக்கலாம். இவ்வுலோகங்கள் மஞ்சள் வெண்மை நிறமும், பளபளப்பும் கொண்டவை. காற்றில் இவை எளிதில் மங்குவதில்லை. இவற்றின் கனியங்களிலிருந்து காரங்கள் ஹைடிராக்சைடுகளைப் படிவிக்கும். ஆக்சைடுகளைச் சுட்டு, அவற்றின்மேல் குளோரின் வாயுவைச் செலுத்தி, இவற்றின் குளோரைடுகளைப் பெறலாம்.

இத்தொகுதியிலுள்ள தனிமங்களை மூன்று உப தொகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் முதலாவது உபதொகுதியில் லாந்தனம் (La 138·9), சீரியம் (Ce 140·2), பிரசியோடிமியம் (Pr 140·9), நியோடிமியம் (Ne 144·3), இல்லினியம் (Il ?), சமாரியம் (Sa 150·4) ஆகிய தனிமங்கள் உள்ளன. இரண்டாவது உபதொகுதியில் யூரோபியம் (Eu 152·2), கடோலினியம் (Gd 157·3), டெர்பியம் (Tb 159·2) ஆகிய மூன்று தனிமங்கள் உள்ளன. மூன்றும் உபதொகுதியில் டிஸ்புரோசியம் (Dy 162·5), ஹாமியம் (Ho 163·5), இட்ரியம் (Y 89·0), எர்பியம் (Er 167·7), தூலியம் (Tu 169·4), இட்டர்பியம் (Yb 173·5), லூட்டிசியம் (Lu 175·0) ஆகிய தனிமங்கள் உள்ளன.

மேற்கூறிய தனிமங்களுள் சீரியம், லாந்தனம், நியோடிமியம் ஆகிய மூன்றும் பொதுவானவை. யூரோபியம், டெர்பியம், தூலியம் ஆகியவை மிக அரியவை.

இத்தனிமங்களுள் சிலமட்டும் தொழில்களில் சிறிதளவு பயனுகின்றன. மற்றவை ஆய்வுகளத்தில் மட்டுமுள்ள விந்தைப் பொருள்கள். சீரியத்தை இரும்புடன் கலந்து தயாரிக்கப்படும் கலவையைத் தேய்த்தால் தீப்பொறிகள் தோன்றும். இக்காரணத்தால் இது சுருட்டுப் பற்றவைக்கும் கருவியில் பயன்படுகிறது. விமான எதிர்ப்புப் பிரங்கியில் பயனுகும் குண்டு, தான் செல்லும் பாதையைக் காட்டுமாறு செய்ய, அதில் சிறிது சீரியத்தைப் பயன்படுத்துகிருர்கள்.

**அருமருந்து தேசிகர்** திருச்செந்தூரிலிருந்த புலவர். ஒரு சொல் பலபொருளுடையவாக அரும்பொருள் விளக்கம் என்னும் நிகண்டு இயற்றியவர். அது 700 செய்யுட்களுடையது. தில்லைமன்றில் அரங்கேற்றப்பெற்றது.

**அருமன்** சிறுகுடி என்னும் ஊரிலிருந்த செல்வன். வரையாது சோறு வழங்குவோன். இவனை நற்றிணையில் (367) நக்கீரர் பாடியுள்ளார்.

**அருவாநாடு** தென்னர்க்காட்டில் பெண்ணையாற்றுக்குத் தென்பாகம்.

**அருவாவடதலை** செங்கற்பட்டு மாவட்டம்.

**அருவாளர்** கொள்ளிடத்தின் வடக்கேயுள்ள அருவாநாட்டிலும் (தென்னர்க்காடு மாவட்டம்) அருவா வடதலை நாட்டிலும் (செங்கற்பட்டு மாவட்டம்) இருந்த பழங் குடிகள். இவர்களை அகத்தியர் வடநாட்டிலிருந்து கொண்டுவந்து இங்கே குடியேற்றியதாகத் தொல்காப்பியப் பாயிரம் கூறும். இவர்களைக் கரிகாலன் வென்று இங்கே சோழராச்சியத்தை அமைத்தான் என்பர்.

**அருள் யாத்திரை** (Pilgrimage of Grace) இங்கிலாந்தில் VIII-ம் ஹென்றி மன்னன் ஆட்சியில் லிங்கன்ஷயர், யார்க்ஷயர்களில் இருந்த பொதுமக்களின் ஒரு கிளர்ச்சி. இக்கிளர்ச்சி சீர்திருத்தங்களை வேண்டி எழுந்ததன்று; சமயச்சீர்திருத்தங்களை எதிர்த்துக் கிளம்பியது. இது முக்கியமாகத் தாமஸ் கிராம்வெலின் போக்கைக் கண்டித்து எழுந்த ஒரு கிளர்ச்சி. லௌத் என்னுமிடத்தில் 1536 அக்டோபர் முதல் நாள் தொடங்கிய இக்கிளர்ச்சி விரைவில் நாடு முழுவதும் பரவிற்று. சபோக் (Suffolk) பிரபுவும், VIII-ம் ஹென்றியும் சில நாட்களில் இக்கிளர்ச்சியை அடக்கிவிட்டனர். 1537 மார்ச்சில் இக்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்த தலைவர்கள் மரண தண்டனை அடைந்தனர். ராபர்ட் ஆஸ்க் என்பவர் யார்க்ஷயரில் தொடங்கிய கிளர்ச்சி சிறிது அதிக வலுப்பெற்றிருந்தது. இதைப் 'பொது நன்மை அருள் யாத்திரை' என்று அவர்கள் கூறினர். இக்கிளர்ச்சியும் விரைவில் அடக்கப்பட்டுத் தலைவர்கள் மரணதண்டனை அடைந்தனர்.

**அருளப்ப நாவலர்** (19ஆம் நூ.) யாழ்ப்பாணப் புலவர். பூலோக சிங்கமுதலியார் எனவும் பெறுவர். திருச்செல்வர் என்னும் ரோமன் கத்தோலிக்க ஞானியாரின் வரலாற்றை எழுதியவர்.

**அருளாள தாசர்:** இவருக்கு மதுரகவி வரத ராஜ ஐயங்கார் எனவும் பெயருண்டு; நெல்லி நகரில் இருந்தவர்; பாவன்மையுடையவர்; பாகவத புராணம் ஒன்று தமிழிற் பாடியிருக்கிருர்.

**அருளாளப் பெருமான்** திருமால் அடியவர். ஞானசாரம், பிரமேயசாரம் என்னும் நூல்களை இயற்றியவர். இப்பெரியார் உடையவருடைய கட்டளைப்படி திருமாலைத் திருவாராதனஞ் செய்ய உரிமை பெற்றவர். 14ஆம் நூற்றாண்டு.

**அரேபியா** தென்மேற்கு ஆசியாவிலுள்ள பெரிய தீபகற்பம். மேற்கே செங்கடலும், தெற்கே இந்திய சமுத்திரமும், கிழக்கே பாரசீக வளைகுடாவும் உள்ளன. இது இஸ்லாம் பிறந்த நாடு. முஸ்லிம்களுடைய புண்ணியத் தலமாகிய மக்கா இந்நாட்டில் உள்ளது. இந்நாட்டின் பெரும்பகுதி பாலை நிலமாயிருக்கிறது. ஆறு ஒன்றேனும் இல்லை. வெப்பநிலை மிகுந்துள்ளது. மஸ்கட் என்னுமிடத்தில் 115° பா. வரை வெப்பநிலை உயர்கிறது. சிற்சில சமயங்களில் 130° பா. வரை போவதுமுண்டு. ஆயினும் ஈராக், இராஜபுதனம் முதலிய இடங்களைவிட இங்குப் பொதுவாக வெப்பம் குறைவே.

பேரீச்சம்பழம் இங்குள்ளவர்களின் முக்கியமான உணவு. காப்பி, கோதுமை, பார்லி முதலியவை சில இடங்களில் பயிராகின்றன. நெருப்புக்கோழி, நரி